தற்கால வரலாறு

ஜி. பி. சா. (சாதாரணதரம்)

பாலாற்றுப்பாடத்திட்டம் பிரிவு 3 முழுவதும் அடங்கியது

க. நேசராசா

தற்கால வரலாறு

G.C.E. (சாதாரண தரம்)

ஆக்கியோன்

த. தியாகராசா. B.A.



வெளியிடுவோர்

இலங்கா மத்திய புத்தகசாலை

84, கொழும்பு வீதி கண்டி

தொலைபேசி, 7562

மூன்றும் பதிப்பு தை 1973

விலை ரூபா: 6.75

(COPYRIGHT RESERVED)

இப்பிரகரம் 124, கொழும்புத்துறை வீதியிருக்கும் ஆ ஸ்ரீவைகுந்தநாதன் அவர்களால் கம்பளை 81/3 மலபார் வீதியி லுள்ள ஈஸ்வரா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

முன்னுரை

க. பொ. த (சாதாரண தர) வகுப்பில் வரலாறு தரம்கற்கும் மாணவர்களின் தேவையை மனதிற் கொண்டு எழுதப்பட்ட இந்நூல் வரலாற்றுப் பாடத்திட்டத்தின் பிரிவு 3 முழுவதையும் அடக்கியதாக வெளிவரும் முதலாவது நூலாகும். வரலாற்றுப் பாடத்திற் கூடநூல்கள்போதியளவு இல்லை என்னுமளவுக்கு இன்று நிலைமை மோசமாகியிருப்பது வருந்தத்தக்கது. ஆயின் ஒரு நூலை எழுதி வெளியிடுவதில் உள்ள தொல்லைகள் ஒரு புறமும் அரசாங்க பாடநூல்களை வெளியிடுவதனால்ஏற்பட்ட பீதி இன்னொரு புறமுமாக எழுத்தாளர்களையும், பிரசுரிப்பாளர்களையும், பயமுறுத்தி வரும் இவ்வேளை 'வருவது வரட்டும்' என்ற மனப்பான்மையுடன் நூலகத்துறையில் ஈடுபடுவோர் ஒரு சிலராயிருப்பதில் ஆச்சரிய மொன்றுமில்லை. இத்தகைய ஒரு நிலைமையில் எமது புவியியல் நூல்களுக்கு ஆசிரியர்களும், மாணவர்களும் அளித்துவரும் ஆதரவே வரலாற்றுத் துறையிலும் இறங்குமாறு எம்மைத் தூண்டியது. அன்றியும் வரலாற்றுப்பாடத்திட்டத்தின் எப்பகுதியையாவது முற்றிலுமடக்கி அடக்கமான விலையில் ஒரு நூலாவது இதுவரை வெளிவராதது இந்நூலை எழுதுதற்கு இன்னொரு காரணமாம். ஆயின் இந்நூல் பூரணமான நூலன்று ஏனெனில் வரலாற்றைப்பொறுத்தவரை ஒரு பூரணமான நூலை எழுதுவது மிகக்கடினமானது என்பதை அனைவருமறிவர். இதனுள் கூடியவரை வரலாற்றின் பிரதான ஒட்டங்களை மட்டும் பாடத்திட்டத்திற்கேறப வரன் முறையாகத் தொகுத்து எழுதியுள்ளேன். எனவே இந்நூலைப் பயன்படுத்தும் ஆசிரியர்கள வேண்டியவிடத்து வேறுநூல்களிலும், சஞ்சிகைகள், செய்தித் தாழ்களிலும் காணப்படும் வரலாறு பற்றிய தகவல்களையும் சேகரித்தும் புகட்டி மாணவர்களின் வரலாற்றறிவை நிறைவு செய்வார்களாக.

இறுதியாக இந்நூலாக்கத்தின்போது தமது சிரமத்தைப் பாராது பலவழிகளில் உதவியவர்களுக்கும் இந்நூலை எழுத ஊக்கமளித்ததோடு இதை வெளியிடுவதற்கு முன்வந்த இலங்காமதிய புத்தகசாலையாளருக்கும் எனது நன்றியையும், கட்டுப்பாட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலில் குறைபாடுகளை எழுத்துக்களைக் காணும் அறிஞர்கள் அவற்றை அறியத்தரின் அடுத்த பதிப்பில் திருத்தங்களைச் செய்ய உதவியாயிருக்கும், எமது ஏனைய நூல்களை உவந்தேற்ற ஆசிரிய மாணவ உலகு இதையும் ஏற்கும் என்பது எனது நம்பிக்கை.

த. தியாகராசா

கல்முனை.

2.7.71

பொருளடக்கம்

பகுதி : அ. இலங்கை வரலாறு

அத்தியாயம்		பக்கம்
1.	பிரித்தானியர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றல்	1
2.	வர்த்தக சங்கத்தின் ஆட்சி	9
3.	முதல் ஆள்பதியும் இரட்டை ஆட்சியும்	14
4.	மெயிற்லந்தின் ஆட்சி	32
5.	கண்டிகைப்பற்றப்படலும், கண்டிக் கலகமும்	35
6.	ஆள்பதி பாண்சின் ஆட்சியும் ஆரம்பவிருத்தியும்	51
7.	கோல்புறூக் சீர்திருத்தங்கள்	57
8.	பிரித்தானியர் ஆட்சி பலப்படுதல்	65
9.	1848ம் ஆண்டுப் பின்னிடைவு (கலகம்)	73
10.	அமைதியும் முன்னேற்றமும்	83
11.	பெருந்தோட்டங்களின் விரிவும்அதன்விளைவுகளும்	97
12.	பாலன விருத்தியும் அரசியற்றிட்டமாற்றங்களும்	125
13.	விடுதலைப் பாதையில்	144

பகுதி ஆ : உலக வரலாறு

14.	அமெரிக்க விடுதலைப்போர்	165
15.	பிரெஞ்சுப் புரட்சி	179
16.	நெப்போலியனின் எழுச்சியும் வீழ்ச்சியும்	200
17.	தொழிற் புரட்சியும் மனிதாபிமான இயக்கங்களும்	218
18.	ஐரோப்பாவில் தேசியக்குமுறலும் ஒற்றுமை இயக்கங்களும்	229
19.	இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் சனநாயக ஆட்சி பலப்படுதல்	246
20.	இந்தியாவில் பிரித்தானியரின் ஆட்சி பரவுதல்	257
21.	பிரித்தானியப்பேரரசின் படர்ச்சியும் குடியேற்றப்போட்டியும்	269
22.	கீழ்த்திசைப் பிரச்சனை	289
23.	முதலாம் உலகப் போர் : சர்வதேசசங்கம்	297
24.	ஈருலகப் போர்களின் இடைக்காலம்	314
25.	இரண்டாம் உலகப்போர்	333
26.	அண்மைக்கால வரலாறு (1945–1967)	346
	பிற்சேர்க்கை	
	வரலாற்றுக் குறிப்புகள்	367

தற்கால வரலாறு

பகுதி அ: இலங்கை

அத்தியாயம் 1

பிரித்தானியர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றல்

பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மேற்கு ஐரோப்பிய அரசுகள் குடியேற்ற நாடுகளைத் தாபிப்பதிலும், தென்கிழக்காசிய நாடுகளின் வாசனைப்பொருள் வர்த்தகத்தைக் கைப்பற்றுவதிலும் போட்டியிட்டுக்கொண்டன. இப்போட்டியும், ஐரோப்பிய அரசியலின் போக்கும் ஒருங்கிணைந்து பிரித்தானியர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றுதற்கு அடிகோலின.

பிரித்தானியரின் முதல் முயற்சி

பிரித்தானியர் கண்டி இராச்சியத்துடன் முதன் முதல் 1761 ல் தான் உத்தியோக பூர்வமாகத் தொடர்பு கொண்டனர். அப்பொழுது கண்டியை ஆண்ட நாயக்க மன்னனாகிய கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஒல்லாந்தரை நாட்டை விட்டுத்துரத்துவதற்கு உதவி புரியுமாறு சென்னையிலிருந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தான் ஆனால் அக்காலத்தில் பிரித்தானியாவும், ஒல்லாந்தும் நேச நாடுகளாயிருந்தபடியால் மன்னரின் கோரிக்கைக்கு அவர்கள் இணங்கவில்லை. எனினும், இலங்கையின் கறுவா வியாபாரத்தில்ஒரு பகுதியைக்கைப்பற்றலாம் என்ற நம்பிக்கையில் அவர்கள் பைபஸ் என்பவனைக் கண்டிக்குத் தூதனுப்பினர். பைபஸ் கண்டிக்குச் சென்று மன்னனைச் சந்தித்தானெனினும்ஒல்லாந்தரை இலங்கையினின்று அகற்றுவதற்கு உதவி செய்வதாகத் திடமான வாக்குறுதியளிக்க முடியாமையினால் அவன் தூது தோல்வியடைந்தது.

ஆனல் அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்பட்ட சமயம் பிரித்தானியருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே நேச நிலைமை நீங்கிப் பகைமை உண்டாக்கியபோது பிரித்தானியர் இலங்கையில் மீண்டும் நாட்டஞ்செலுத்த வாய்ப்பு ஏற்பட்டது அப்போரின் போது ஒல்லாந்து 'படையுடைநடுநிலை' வகித்தபோதும் அந்நாட்டுக் கப்பல்களையும் பிரித்தானியா சோதனையிடமுற்பட்டமையால் இருநாடுகளுக்குமிடையே போர் ஏற்பட்டது. இந்நிலையில் இந்தியாவின் கீழ்கரையிலிருந்த ஒல்லாந்தக் குடியேற்றமாகிய நாகப்பட்டினத்தைப் பிரித்தானியர் கைப்பற்றிய தோடு அதுவே இலங்கையிலும் கால்வைத்தற்கு நல்ல தருணமென எண்ணித் திருகோணமலையைக் கைப்பற்றுமாறுசேர் எட் வேட் கியூ என்பவனை அனுப்பினர்.

பிரித்தானியர் இலங்கையையும்,அதிலும்மேலாகத் திருகோணமலையையும் கைப்பற்ற விரும்பியதற்குப் புவியியல், அரசியல் அடிப்படைகளில் விளக்கம் கொடுக்கலாம். இலங்கையின் புவியியல் நிலையம் தனிச்சிறப்புடையது இந்துசமுத்திரத்தில் மையமெனத் தக்க ஒரு நிலையத்தில்,இந்தியத்துணைக்கண்டத்தின் அயலில்: ஐரோப்பிய–தூரகிழக்கு-அவுத்திரேலிய வர்த்தகப்பாதைகள் சந்திக்கக்கூடிய கேந்திர நிலையத்தில் அமைந்திருப்பதே அதன் சிறப்பாகும் எனவே இந்து சமுத்திரப்பகுதியில் வர்த்தகத்தை விருத்தி செய்ய விழையும் ஒரு அரசுக்கு இலங்கை எத்துணை வாய்ப்பான ஒரு குடியேற்றம் என்பதைவிளங்கிக்கொள்ளலாம். மேலும் இக்காலத்தில் இந்தியாவின் கிழக்குக் கரையில் பிரான்சியருடன் போர்புரிந்துகொண்டிருந்த பிரித்தானியர் பழுதடைந்த தமது கப்பல்களைத் திருத்தவும், பாவனைப் பொருட்களைப் பெறவும் பம்பாய்க்குச்செல்லவேண்டியிருந்தது. அன்றியும் வடகீழ் பருவக் காற்றுக்காலத்திலும், வங்கான விரிகுடாவில் சூறுவளிகள் ஏற்படும் பொழுதும் கப்பல்களைக் கிழக்குக்கரையில் பாதுகாப்பாக வைத்திருத்தல் சிரமமானதாயிருந்தது. திருகோணமலை கிழக்குக்கரையிலமைந்தது இயற்கைத்துறையையுடையது. அத்துறையில் ஒரு பெரிய படை அமைதியாகத் தங்கியிருக்க முடியும். இத்தகைய துறையின் சிறப்பை பாராட்டிய பிரதமர்பிற் ''ஆங்கிலசாம்ராச்சியத்தின் பாதுகாப்பு, மிகச்சிறந்ததும், மிக அனுகூலமானதுமான திருகோணமலைத் துறையில் தங்கியுள்ளதெனவும் அதற்கு ஈடானதுறை உலகில் வேறெங்குமில்லை'' யெனவும்குறிப்பிட்டதிலிருந்து திருகோணமலையின் சிறப்பு விளங்கும்.

மேற்கூறப்பட்ட காரணங்களிலொற்றுன் மக்காட்னி (சென்னை ஆளுபதி) திருகோணமலையைக் கைப்பற்றுமாறு எட்வேட் கியூ என்பவனை அனுப்பினுர் அவன் 1782இல் சனவரியில் திருகோணமலைக்கோட்டையையும் ஒஸ்ரின்பேக் கோட்டையையும் கைப்பற்றினுன். அதைத் தொடர்ந்து கொழும்பையும் கைப்பற்றஅவன் விரும்பியபொழுதிலும், சிறிது புனராலோசனையின் மேல் அத்திட்டத்தைக் கைவிட்டான். பின்னர் திருகோணமலையில் நிறுத்தப்பட்டபடைகளுக்கு உதவியைப்பெறவும், ஒருக்கால் ஒல்லாந்தருடன் மீண்டும் உறவு ஏற்படினும், திருகோணமலையை அவர்களிடம் திரும்பிக் கொடுக்காது தாமே வைத்திருத்தற்கு வசதியாக அதை மன்னனின் கொடையாகப்பெறுதற்கும், பிற வர்த்தக சலுகைகளைப் பெறவும் விரும்பியவராய் பிரித்தானியர் 'பொயிட்' என்பவனை மன்னனிடம் தூதனுப்பினர்.

பொயிட் கண்டியை அடைந்தபோது கீர்த்தி ஸ்ரீ இராச சிங்கன் இறந்து அவன் மகன் இராசாதி இராசசிங்கன் பதவியேற்றிருந்தான். அவன் பிரித்தானியர் தன்னுடன் தொடர்பு கொள்ளாமலே திருகோணமலையைக் கைப்பற்றியதனுல் அவர்கள் மேல் ஐயுறவுகொண்டிருந்தானுகையினுல் அவர்களின் கோரிக்கைக்கு இணங்கவில்லை. இதனுல் பொயிட் வெறுங்கையுடன் திரும்பவேண்டியதாயிற்று.

இவ்வாறு பொயிட் திரும்பி வரும்வழியில் டிசவ்றன் என்னும் பிரெஞ்சுத்தளபதியால் சிறைபிடிக்கப்பட்டான்.

டிசவ்றன் அப்பொழுது ஒல்லாந்தரின் துணைக்காகவே அங்கு வந்திருந்தான். அவன் அதற்குப் பின்னர் திருகோணமலையைத் தாக்கி அதைக் கைப்பற்றினுன். இவ்வாறு பிரான்சியரின்கைக்கு மாறிய திருகோணமலை 1783 இல் ஏற்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின்படி பிரித்தானியரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டபோது அதை அவர்கள் ஒல்லாந்தரிடம் கையளித்தனர். இவ்வாறு திருகோணமலையைக் கைப்பற்றி அதன் மூலம் இலங்கையை அகப்படுத்துவதற்குப் பிரித்தானியர் மேற்கொண்ட முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது.

பிரான்சியப் புரட்சியும் புதிய வாய்ப்பும்

1789ம் ஆண்டில் பிரான்சில் ஏற்பட்ட அரசியற் புரட்சி இலங்கையை கைப்பற்ற ஆங்கிலேயருக்கு மீண்டும் ஒரு

வாய்ப்பையளித்தது. இப்புரட்சியின்போது பிரான்சியப்படைகள் ஒல்லாந்திற்குள்ளும் புகுந்து 'பற்றேவியக் குடியரசு' என்ற பெயரில் புதிய ஒரு குடியரசை நிறுவினர். இதனால் ஒல்லாந்து மன்னன் வில்லியம் V (ஸ்ராற் ஹோல்டர்) இங்கிலாந்துக்குத் தப்பியோடினான். இந்நிலையில் ஒல்லாந்தின் குடியேற்ற நாடுகளும் பிரான்சியரின் கைக்குள் வீழ்வது சாத்தியமெனக்கண்ட பிரித்தானியர் அவற்றைக் கைப்பற்ற எண்ணினர். இதற்கு முதற்படியாக கிரெனவில் ஒல்லாந்துக் குடியேற்றங்களைப் பாதுகாப்பதற்குத் தமது படைகளை அனுப்புவதற்கு அனுமதியளிக்குமாறு தஞ்சம் புகுந்த மன்னனைத் தூண்டினர். இக்கட்டான நிலையிலிருந்த மன்னன் பிரித்தானியர் தான் மீண்டும் அரச பதவியைப் பெற உதவக்கூடும் என்னும் நம்பிக்கையில் அவர்களது கோரிக்கைக்கு இசைந்தான்.

இதன்மேல், மன்னன் குடியேற்ற நாடுகளைப் பிரெஞ்சுப் படையெடுப்பினின்றும் பாதுகாப்பதற்காக, நேசநாடாகிய பிரித்தானியாவின் படைகளைத் திருகோணமலைத் துறையிலோ அவசியமான பிற இடங்களிலோ தங்கியிருக்க அனுமதிக்குமாறு இலங்கையிலிருந்த ஒல்லாந்த ஆள்பதிக்கு நிருபம் ஒன்றனுப்பினான்.

மன்னனின் நிருபம் சென்னையிலிருந்த ஆங்கில ஆள்பதி கொபாட் மூலமாக அனுப்பப்பட்டது. அதைலேஜர் அச்சிலுள் கொழும்பிலிருந்த ஒல்லாந்த ஆள்பதியிடம் சமர்ப்பித்தான் உடன் அவன் தனது அரசியற் சபைகத்தைக்கூட்டி ஆலோசித்தான் மன்னனின் கோரிக்கைகளை முற்றுக நிறை வேற்றுவது அவர்களுக்குச் சிரமமாயிருந்தது. ஏனெனில் தமக்குப் பிரான்சியரிடமிருந்து 'பாதுகாப்பு' அளிப்பதுஎன்றபோர்வையில் பிரித்தானியர் இலங்கையை நிரந்தரமாகக் கைப்பற்றவேமுயல்கின்றனர் என அவர்கள் சந்தேகித்தனர் மேலும் பிரித்தானியப் படைகளை எந்த ரீதியில் அனுமதிப்பது என்பது பற்றியும் அப்படைகள் தனித்தே அன்றி ஒல்லாந்துப் படைகளுடன் இணைந்தோ இயங்கும் என்பது பற்றியும் நிருபம் தெளிவு படுத்தவில்லை. அன்றியும் எதிர்பார்த்தபடி பிரான்சியரின் தாக்குதல் நிகழாவிடின் பிரித்தானிய படைகளின் நிலை யென்ன என்பதும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை இந்நிலையில் பிரித்தானியரின் உதவியை முற்றுக மறுக்க எண்ணினராயினும் தமது படைகளின் நிலை, நிதி நிலைமை, உணவு நிலைமை முதலியவற்றையும் பிரித்தானியரின் படைவலிமையும் சீர்தூக்

கிப் பார்த்த பின்னர் அவர்களது உதவியை முற்றுக நிராகரிக் காமலும் அதே சமயம் முழுவதும் ஏற்காமலும் ஒரு நடுவழி யைப் பின்பற்றினர். அஃதாவது பிரித்தானியர் வசம் முழுப் பொறுப்பையும் ஒப்படைக்கத் தாம் தயாராயில்லை யென்றும் ஆனால் 800 பிரித்தானியப் படைவீரரை முன்னர் அமுலிலிருந்த சேவை நிலைமைகளின் கீழ் தமது படைகளுடன்சேர்க்க இணங்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இதன்படி 300 படைவீரரை அநுமதிக்குமாறு திருகோணமலைத் தளபதி போன்பெயருக்குக் கட்டளை விடுக்கப்பட்டது.

ஆனால் போன்பெயர் பிரித்தானியர் நாகபட்டினத்தில் தமது படைகளுக்கெதிராகப்போர் நடவடிக்கைகளிலீடுபட்டிருந் ததைக் கேள்விப்பட்டிருந்தமையால் உடன் பிரித்தானியகப்பற் படைத் தலைவனுக்கு ஒரு நிருபம் எழுதி அவனது உள்நோக் கத்தைத் தெளிவுபடுத்துமாறு கேட்டான் இதற்குப் பதிலளித்த பிரித்தானிய படைத்தலைவன் தாம் ஒல்லாந்தரின் பழம்பெரும் நண்பர் என்ற முறையில் அவர்களின் பாதுகாவலுக்கே அங்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கவே போன்பெயர் கப்பற்படையை அநுமதிக்கமுடிவுசெய்தான் ஆயினும் ஒல்லாந்து ஆள்பதி அனுப் பிய கட்டளையில் அரசியற்கழக உறுப்பினரில் பெரும்பான்மை யோரின் ஒப்பம் இல்லாதிருப்பதை ஒரு தவறாகக் கொண்ட போன்பெயர் போர் வீரர்களை அநுமதிக்க மறுத்தான். உடன் பிரித்தானியர் திருகோணமலையைத் தாக்க ஆயத்தங்கள் செய் தனர்.

இது இவ்வாறுகஅஞ்செல்பீக் ஒல்லாந்திலேற்பட்ட புரட்சி மக்களின் விருப்பத்துடன் நிகழ்ந்ததெனச் சில பத்திரிகைகள் மூலம் அறிந்தவுடன் தனது அரசியற்கழகத்தைக்கூட்டி அடுத்த நடவடிக்கை பற்றி ஆலோசித்தான். முடிவில் பிரித்தானியப் படைகளை அனுமதிப்பதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆகஸ்ட் 15ல் இத்தீர்மானம் பிரித்தானிய படைத்தலைவனுக ஸ்ரூவட்டுக்கு அனுப்பட்டது. இதைத்தொடர்ந்து தளபதி ஸ்ரூவட் திருமலையைத் தாக்கினான். ஆகஸ்ட் 23ல் தொடங்கிய தாக்குதலின் மூன்றும் நாள் ஒல்லாந்தர் சரண்புகுந்தனர். பின் னர் ஆகஸ்ட் 31ல் ஒஸ்ரின்பேக் கோட்டையும் கைப்பற்றப் பட்டது.

திருமலை வெற்றியைத் தொடர்ந்து பிரித்தானியர் ஒல்லாந்தரின் ஏனைய கோட்டைகளையும் பிடிக்க முனைந்தனர் இதன் மேல் பிறேசர் தலைமையிற் சென்ற ஒரு படை செப்டம்பர் 18ல் மட்டக்களப்பையும் ஸ்ரூவட்தலைமையிற் சென்ற படை செப்டம்பர் 25ல் யாழ்ப்பாணத்தையும், கைப்பற்றின. மொன்சன் என்பவரின்படை முல்லைத்தீவையும், பாபட் என்பவனின் படை மன்னாரையும், பவுசர் ஏன்பவரின் படை கற்பிட்டியையும் அதேயாண்டு கைப்பற்றின.

இவ்வாறுஒல்லாந்தர்கரையோரமாகாணங்களிலிருந்த தமது கோட்டைகளைக் கணிசமான எதிர்ப்புக் காட்டாமலேயே கை நெகிழ விட்டு விட்டனர். இதற்கு ஒரு காரணம், கொழும்பை யாவது முழுப்பலத்துடன் காக்கலாம் என அவர்கள் எண்ணியதே மேலும் கொழும்பைக் கைவிடாது இறுதி காலம் வைத்திருந்தால் அதற்குள் தாய்நாட்டிலிருந்தோ பிரான்சியரிட மிருந்தோ உதவிகிடைத்துவிடும் எனவும்அவர்கள் மனப்பால் குடித்தனர். அன்றியும் இந்தியாவில் திப்பு சுல்தானின் போர் நடவடிக்கைகளினால் பிரித்தானியரின் கவனம் இந்தியப் போர்முனைக்கு ஈர்க்கப்படுமெனவும் அப்போது தாம் பிரித்தானியரை எளிதில் வெல்லலாமெனவும் அவர்கள் பகற்கனவு கண்டனர்.

அவர்கள் கொபாடின் நிருபத்திற் குறிப்பிட்டிருந்த படிபிரித்தானியரின் பாதுகாப்பை, ஏற்றிருந்தால் பிடிக்கப்பட்டகோட்டைகள் பின்னர் திருப்பிக்கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால்அவர்கள் அப்போதைய குழப்பமான நிலையில் தாம் மேற்கொண்டது தான் சரியென நம்பியதால் பிரித்தானியர் படைப்பலத்தால் தமது கோட்டைகளைக் கைப்பற்றி நிரந்தரமாக்க இடமளித்து விட்டனர்.

இனி, கொழும்புபிரித்தானியர்கைவசமாகிய வரலாற்றை நோக்குவோம். முன்னர் குறிப்பிட்டதுபோல் திருமலையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம்,மன்னார், கற்பிட்டி ஆகியவற்றைக் கைப்பற்றிய பின்னர் பிரித்தானியப்படைகள் நீர்கொழும்பையடைந்தன. அங்கிருந்த ஒல்லாந்தப்படைகள் ஏற்கனவேவெளியேறியிருந்தமையால் எதிர்ப்பு எதுவும் இல்லாமலேயே ஆகஸ்ட் 3ம்திகதி நீர்கொழும்பு கைப்பற்றப்பட்டது. அன்றுபம்பாயிலிருந்து வந்த படையும் திருமலையிலிருந்துவந்த படைகளும் ஒன்று சேர்ந்த போது பிரித்தானியப் படைமொத்தம் 6500 போர் வீரரையுடையதாயிருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் பேராசிரியர் கியூ கிளேகோன்என்பவர் தமதுசாதூரியத்தால் ஒல்லாந்தரின் கொழும்புப் படையின் முதுகெலும்பாயிருந்த டிமியூறன் என்பவரின் கூலிப்படையைப் பிரித்தானியர் பக்கம்மாற்றினான். இதனால் பிரித்தானியரின் படைப்பலம்மேலும்அதிகரித்தது. டிமியூறன்இலங்கை நிலைமை களை நன்கறிந்தவனுதலால் அவன் தெரிவித்த உபாயங்களும் படையெடுப்பின்போது ஸ்ரூவட் தளபதிக்குஉதவின.

இதன் மேல் பிரித்தானியர் களனிகங்கையைக் கடந்த பெப்ருவரி 7ல் கொழும்பைத்தாக்கினர். ஒல்லாந்தர் அதிக எதிர்ப்புக் காட்டாமலே 12ஆம் திகதிகோட்டையுட் புகுந்து கொண்டனர். இதையடுத்து 14ஆம் திகதி சரணடையுமாறு அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அந்நிலையில் அஞ்செல்பீக்தனது அரசியற் கழகத்தைக் கூட்டிநிலைமையை ஆராய்ந்தான். அப்போதைய நிலையில் சரணுகதியடைவதை விடச்சிறந்த வழி இருக்கவில்லை. ஏனெனில், ஒல்லாந்தப்படை யிலிருந்து பல சுதேசிப்படைஞர்களும் மலாய்ப்படைஞர்களும் விலகியிருந்தனர். உள்நாட்டுப் பிரதானிகள் வாக்களித்தபடி 800போர் வீரரைக் கொடுக்கவில்லை. பிரான்சியரிடமிருந்தோ பற்றேவியாவிலிருந்தோ எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. நிதி நிலைமையோ மோசமாயிருந்தது. உணவு நிலையும்திருப்தி யாயிருக்கவில்லை ஊழியர்களிற் பலரின்வேதனமும் கொடுக்கப்ப டாமலிருந்தது. அதேசமயம் விற்கப்படாத பொருட்கள் ஒரு புறம் தேங்கியிருந்தன.

இவை ஒருபுறமிருக்க, முன்எதிர்பார்த்தபடி இந்தியாவில் திப்பு சுல்தானின் படையெடுப்பும் நிகழவில்லை. இந்நிலையில் ஒரு சிறு படையுடன் பலமிக்க பிரித்தானியப்படையை எதிர்ப் பது மதியீனம் என எண்ணிய அரசியற்கழகத்தினர் சரணடை வதே சிறந்ததென முடிவுசெய்தனர். பேர்சிவலின் கருத்தின் படிஒல்லாந்துப்படைகளிடையும், குடியியல் அலுவலர்களிடை யேயும் நிலவிய ஒழுங்கீனம், கட்டுப்பாடின்மை, சச்சரவுகள், பிரிவினை ஆகியனவும் அவர்கள் சரணுகதியடையத் தூண்டின. இவற்றுடன் கண்டிய மன்னனின் படைகள் பிரித்தானியருக்கு உதவியளித்ததும் சரணுகதிக்குப் பிறிதொரு காரணமாகும்.

இத்தகைய நிலைமைகளில் சரணாகதியடைவதென ஒல்லாந்தர் முடிவுசெய்தனர். இதன்படி 1796 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 16ஆம் நாள் கொழும்பு பிரித்தானியர் கைக்குமாறியது. அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைதிப் பொருத்தனையின் பிரதான அம்சங்கள் மேல்வருமாறு (1) ஒல்லாந்த அலுவலாளர்கள் இலங்கையில் தங்கியிருக்க அனுமதி; விரும்பியோர் நாட்டைவிட்டுப் போகும்போது தமது சொத்தை வரியின்றி எடுத்துச் செல்ல அனுமதி. (2) படைவீரர்களைப் போர்க்கைதிகளாகப் பிரித்தானியரின் செலவில்சென்னைக்குக்கொண்டு செல்லுதல் (3) மதகுருவர்கள் தமது கடமைகளைச் செய்ய அனுமதி (4) தீர்க்கப்படாதிருந்த வழக்குகள் நடைமுறையிலிருந்த நீதிமன்றங்களில் ஓராண்டிற்குள் தீர்க்கப்படுதல் (5) உறுதிகளும் மரணசாசனங்களும் இருந்தபடியே தொடர்ந்து செல்லுபடியாதல்.

வினாக்கள்

1. பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்ற எண்ணியதற்குக் காரணங்கள் யாவை?
2. 1794-95 ல் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கையை எவ்வாறு பாதித்தன?
3. பிரித்தானியர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றுதற்கு உதவிய இலங்கையின் உள்நாட்டு நிலைமைகளை விபரிக்குக.
4. பிரித்தானியர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றிய வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.
5. பிரித்தானியர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றுதற்குச் சாதகமாயமைந்த உள்நாட்டு வெளிநாட்டு நிலைமைகளை ஆராய்க.

அத்தியாயம் 2

வர்த்தக சங்கத்தின் ஆட்சி

கரையோர மாகாணங்களை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றுவதில் கிழக்கிந்திய வர்த்தகசங்கம் பெரும்பங்கை வகித்தது. அது அம்முயற்சியில் 12000 பவுன் வரை செலவிட்டிருந்தது. இதனால் அப்பணத்தை எவ்வாறுயினும் அறவிடுதற்கு அச்சங்கத்திற்கு அருகதையும் உரிமையும் உண்டு என்னும் நியாயத்தின் அடிப்படையில் கரையோர மாகாணங்களின் ஆட்சிப்பொறுப்பு அச்சங்கத்திடம் விடப்பட்டது. அன்றியும் தமக்கும் ஒல்லாந்தருக்குமிடையே மீண்டும் நட்புறவு ஏற்படும் பொழுது கரையோர மாகாணங்களை ஒல்லாந்தரிடம் திருப்பிக் கொடுக்கவேண்டியிருக்கும் என்பதினாலும் பிரித்தானியர் அவற்றைத்தமது நேரடியான பாலனத்தின் கீழ்க் கொண்டுவரவில்லை.

இக்காரணங்களினால் கரையோர மாகாணங்கள் சென்னை அரசாங்கத்தின் ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டன. எனவே சென்னையிலிருந்த ஆள்பதி கொபாட்இலங்கையின் ஆள்பதியுமாகினான்.

கரையோரமாகாணங்களின் குடியியற் பாலனமும் படைப் பாலனமும்ஒருங்கே ஸ்ருவட்என்பவனிடம்ஒப்படைக்கப்பட்டன. ஆனால் அவன் முற்றிலும்ஒரு படையாட்சியையே நிறுவினான். குடியியற் கருமங்களில் அவனது கட்டுப்பாடு குறைவாகவேகாணப்பட்டது. அன்றியும்குடியியற்பாலனஅதிகாரிகள்நேரடியாகச் சென்னை அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளக் கூடியதாகவுமிருந்தது. ஸ்ருவட்பொறுப்பை யேற்றவுடன் யாழ்ப்பாணம், மன்னார் என்பவற்றிலிருந்து கோட்டைகளுக்கு இராணுவ தளபதிகளை நியமித்தான்.

நீதிபாலனம்:-

ஸ்ருவட்ஒவ்வொரு பிரிவிலும் ஏற்படும்தகராறுகளை விசாரிக்க ஒரு இராணுவநீதிமன்றைநிறுவினான். ஆனால் தனிப்பட்ட குடியியல் வழக்குகளை விசாரிக்கத்தனியான மன்றுகள் இருக்கா

மையால் அவ்வழக்குகள் நடுத்தீர்ப்புக்கு விடப்பட்டன மேலும், வரியறவிடுதல் தொடர்பான தகராறுகளை விசாரிக்கும் உரிமை இறைவரித்தலைமையதிகாரியிடம்மட்டும் விடப்பட்டது. இவ்வாறு, பொதுவாக நோக்கின் இறைவரி நிர்வாக அலுவலர்களே நீதி பாலனத்துக்கும் முழுப்பொறுப்பாக இருந்தார்கள்.

குடியியற்பாலனம்

கரையோரமாகாணங்களைக் கைப்பற்றுதற்குத்தான் செலவிட்ட பணத்தை விரைவாக அறவிடவிரும்பிய வர்த்தகசங்கம் அண்ட்றூஸ் என்பவனை இறைவரிப்பொறுப்பாளனாகநியமித்தது. அவன் கரையோரமாகாணங்களைக் கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் என்னும் மூன்று பிரிவுகளாகப்பிரித்தான். இவைகலக்டர்கள் பிரிவு எனப்பட்டன. கொழும்புப் பிரிவு சிலாபம் முதல் மாத்தறையீறாகவுள்ள பிரதேசத்தையும்திருகோணமலைப் பிரிவு மட்டக்களப்பு, முல்லைத்தீவுப்பகுதிகளையும் யாழ்ப்பாணப்பிரிவு கற்பிட்டி, மன்னார்ப் பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது யாழ்ப்பாணப் பிரிவுக்கு ஜோர்விஸ்என்பவனும், காலிப்பிரிவுக்கு கஸ்ஸே என்பவனும் கொழும்புப்பிரிவுக்கு அலெக்சாண்டர் என்பவனும் பொறுப்பாகவிருந்தனர். இவர்கள் கலெக்டர்கள் எனப்பட்டனர். இவர்களதுஅலுவலகங்கள் கச்சேரிகளாகின.

கலெக்டர்களின் கீழ் வரி வசூலிக்கும் பணியில் ஈடுபட்டோர் பல்லாயிரவராவர் அமில்தார், பேஷ்கார், சம்பிரதி (கணக்காளர்) கொத்தவால்) மணியகார், முயகம் முதலிய பெயர்களுடன் அவர்கள் பணியாற்றினர். அமில்தார் கலெக்டருக்கு அடுத்த நிலையிலிருந்தார். இவர் முன்னையமுதலியாருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார் அமில்தார்கள் நீதிபாலனஅதிகாரங்களுடையவர்களாகவுமிருந்தனர்.

இறைவரியை அறவிடுதற்குக்குத்தகை முறையே இங்கு பின்பற்றப்பட்டது இதன்படி ஒரு நிர்வாகப் பிரிவில் வரியை வசூலிக்கும் உரிமை ஏல முறையில் ஒருவருக்கு வழங்கப்பட்டது. ஆயினும், பெரும்பாலும் அமிர்தார்களோ, கலக்டர்களோ தாம் அவ்வுரிமையைப் பெற்று வந்தனர் இதனால் அவர் 'ஒருவரில்' மூவராக வரி வசூலிப்பு குத்தகை பார்த்தல் நீதிபாலன என்னும் மூன்று வேலைகளையும் செய்பவராக அமைந்தனர் இத்தகைய நிலைமை ஊழலுக்கு இடமளித்தது என்பதைச்சொல்லத் தேவையில்லை.

1797 ஆம் ஆண்டுக் குழப்பம்

மேல் விபரிக்கப்பட்ட றைவரிவசூல் முறைகள் நாட்டில் அமைதியின்மை, அதிருப்திமுதலியவற்றுக்கு அடிகோலின இறை வரியைஅறவிட்டவர்களின் அட்டூழியங்களும் அதைச்செலுத்தும் முறையும் மக்களின் ஆத்திரத்தைக்கிளறின. இதுவரை மக்கள் சேவைமானிய அடிப்படையில் அரசனுக்கு தமது வரியைச் செலுத்திவந்தனர். இம்முறையின்படி ஒராண்டில் குறிக்கப்பட்ட ஒரு காலத்துக்கு அரசனுக்கு ஊதியமின்றிச் சேவை செய்தல் போதுமானதாயிருந்தது. ஆனால்புதிய முறையின் கீழ் சேவை மானிய முறை நீக்கப்பட்டது வரித்தொகையைப் பணமாகவே செலுத்தவேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டனர். பணப்புழக்கம் குறைவாயிருந்த அக்காலத்தில் அம்முறை எத்துணை அநியாயமானது என்பதைக் கூறத் தேவையில்லை.மேலும் சேவைமானிய ஒழிப்பைத்தொடர்ந்து மக்கள்நிலத்தின்மீலவில் அரைப்பங்கை அரசிறையாகக்கொடுக்க வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது:

இவ்வாறான நியதிகள் பொதுமக்களுக்குமிக்க சிரமத்தைய ளித்தன இவற்றைத்தவிரப் புகையிலை, பாக்கு, ஆமைபிடித் தல் விளையாட்டுப் போட்டிகள் (உம்சேவற்சமர்) இரத்தினக்கல் அகழ்தல்,உப்பு,மீன்,மதுவகை முதலியவற்றின் மீதும் வரிவிதிக் கப்பட்டது. இவ்வரிகள் அநீதியானவை என்பது ஒருபுறமிருக்க இவற்றை அறவிட்டமுறையோ அக்கிரமமானது எனக் கூறலாம். வரிகளை அறவிடுவதற்குப் பொறுப்பாக இருந்த அமில்தாரும் பிறரும் இந்நாட்டு மக்களின் மொழியையோ சம்பிரதாயங்களை யோ அறிந்திராத அன்னியர் தமது சேவை எவ்வளவு காலம் நிலைக்குமென்பதையிட்டு அவர்களாற் திடமாகக் கூறமுடியாத படியால், எவ்வளவு விரைவாக வரிகளை அறவிடமுடியுமோ அவ் வளவு விரைவில் அவற்றைப்பெற முனைந்தனர். அதில் அவர்கள் மனிதாபிமான உணர்ச்சிகளைக் கைகழுவிவிட்டு மக்களைப் பல கொடுமைகளுக்குள்ளாக்கினர். மேலும்வரி அறவிடும் அமில் தார்களே நீதிபாலன அதிகாரிகளாயுமிருந்தபடியால் தண்டனை முலமும் வரிகளைப்பெறக்கூடியதாயுமிருந்தது. அன்றியும் கலக் டர்களை ஏமாற்றி வரிப்பணத்தில் ஒரு பகுதியைத் தாமே எடுத் துக்கொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பிருந்தது.

மேல் விபரிக்கப்பட்டமுறையில் புதியவரிகளாலும்: புதிய வரிவசூலிப்பவர்களாலும் மக்கள் பெரும் தொல்லைகளுக்குட்பட்

டிருக்கும் வேளையில் பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் தென்னைவரியொன்று புதிதாகவிதிக்கப்பட்டது. இதன் மூலம் 50 தென்னைகளைக்கொண்ட தோப்புகளில் உள்ள ஒவ் வொரு தென்னைக்கும் 2 சிலிங் விகிதம் வரி விதிக்கப்பட்டது இவ் வரி முதலியார்களையும் தலைவர்களையும்சற்றுக் கடுமையாகவும் ஏனையோரைக் கணிசமான அளவும் பாதித்தது. தென்னையின் விளைச்சலைப் பொருட்படுத்தாது எல்லா மரங்களுக்கும் வரி விதிக் கப்பட்டதும் வரி அதிகமாயிருந்ததும் அதைப் பணமாகக்கட்டு மாறு நிர்ப்பந்திக்கப்பட்டதும் எரிகிற கொள்ளியில் நெய்வார்த் தாற்போல் மக்களின் அதிருப்தியை மேலும் அதிகரித்தன.

இந்நிலையில் 'துப்பாக்கி முனையிலேயே' தென்னைவரிகளை அறவிடக்கூடியதாயிருந்ததென டொயில் குறிப்பிட்டதிலிருந்து மக்களின் மனநிலை தெளிவாகிறது. இவ்வாறு வரிச் சுமையைத் தாங்கமுடியாது மக்கள் வாடும்வேளையில் ஒல்லாந்தர் பிரித்தா னியரின் அக்கிரமங்களைப்பற்றிப் பொய்யான செய்திகளைப் பரப் பியதோடு பிரான்சிபப் படையொன்று உடன் வரவிருப்பதாக வும் கயிறு திரித்துவிட்டனர். இவற்றின்விளைவாக நாட்டில் ஆங் காங்கு பல பலாத்காரச்சம்பவங்கள் இடம்பெற்றன. ஹன்வலை யில் வரிவசூலிப்பவன் ஒருவன் கட்டிவைக்கப்பட்டான். வன்னியில் ஒருவன் கொல்லப்பட்டான் ஹேவகம் சல்பிற் றைகம் கோறளை களில் மக்கள் கச்சேரிகளுக்குப் படையெடுத்துச்சென்று குழப்பம் விளைவித்தனர். இவ்வாறு அநியாயத்துக்கெதிராகப் பொங்கியெ ழுந்த மக்களின் எதிர்ப்பைஅறிந்த டொயில் மார்ச் 25இல்தென் னை வரியைத் தற்காலிகமாக நீக்கிவிட்டு நிலைமையை கொபாட் ஆள்பதிக்கு அறிவித்தான். அவன் உடன் இலங்கை நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென டி மியூறன் தலைமையில் அண்ட்ரூஸ் அக்நியூ என்பவர்களைக்கொண்ட ஒரு குழுவை நிய மித்தான். ஆனால் அண்ட்ரூஸ் தனது பாலனத்தின் கீழிருந்த இறைவரி பற்றி ஆராயப்புகுந்த அக்குழுவின்பணியில் அதிக பங் கெடுக்காமல் குழுவின் முடிவு தெரியமுன்னரே மீண்டும்தென்னை வரியை வசூலித்தான் இதன்விளைவாக மீண்டும் குழப்பங்கள் ஏற் பட்டன. திருகோணமலையில் அமில்தார் ஒருவன் கொல்லப்பட் டான். கடுவலையிலும் ஹன்வலையிலும் குழப்பக்கள் ஏற்பட்டன.

இவற்றைத்தொடர்ந்து விசாரணைக்குழு குழப்பங்களுக்குக் காரணமான தென்னைவரியை ஒழித்துவிடுமாறு சிபார்சு செய்தது

அக்குழுவின் பிரதான சிபார்சுகள் மேல்வருமாறு 1. தென்னவரி நீக்கப்படவேண்டும். 2. சேவைமானிய முறை மிண்டும் ஏற்படுத் தப்படவேண்டும். 3. உள்நாட்டுநிர்வாகத்தில் திசாவைமுறைபுது ப்பிக்கப்பட்டவேண்டும். 4 ஒவ்வொருகோறளையிலும் வரிவசூலிப்புத் தொடர்பான தகராறுகளையும் குடியியல் வழக்குகளையும் விசா ரிக்க முதலியார்கள் நியமிக்கப்படவேண்டும். 5. ஒல்லாந்தரின் லான்ஞுட்ஸ் நீதிமன்றுகள் மீண்டும் இயங்கவேண்டும். இவ்வாறு டி மியூறன் செய்த சிபார்சுகளைப் பின்வந்த நோத் ஆள்பதியும் அநுசரித்து நடந்தது குறிப்பிடத்தக்கது.

வினாக்கள்

1. கிழக்கிந்திய வர்த்தகசங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றமைக் குக் காரணங்கள் எவை?
2. வர்த்தகசங்கத்தின் ஆட்சிமுறையை விபரிக்குக.
3. 1797 ஆம் ஆண்டுக் குழப்பங்களுகுக் காரணங்களை ஆராய்க

அத்தியாயம் 3

முதல் ஆள்பதியும் இரட்டை ஆட்சியும்

கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினரின் அட்டூழியத்துக்கெதிராக 1797 இல் ஏற்பட்ட குழப்பங்களைப்பற்றி விசாரணைக்குழு ஆராய்ந்துகொண்டிருக்கும்போதே குடியேற்றநாட்டுச் செயலாளர் டண்டாசின் ஆலோசனையின்படி பிரித்தானிய அரசு இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை வர்த்தக சங்கத்திலிருந்து நீக்கித் தனது நேரடிப் பொறுப்பின்கீழ் கொண்டுவரத் தீர்மானித்தது. எனினும் வர்த்தக சங்கத்தின் கோரிக்கைக்கிணங்க இறைவரி வர்த்தகம் பற்றிய விடயங்கள் அதனிடமே விடப்பட்டன. எனவே குடியியல்நீதி பொது நிர்வாகம் ஆகிய கருமங்களை மட்டுமே பிரித்தானிய அரசு தனது பொறுப்பில் வைத்துக்கொண்டது. இத்தீர்மானத்தைத் தொடர்ந்து நோத் இலங்கையின் முதலாவது ஆள்பதியாகத் நியமனஞ்செய்யப்பட்டார். அவர் வர்த்தகசங்கத்தின் இயக்குநர்குழுவுக்கும் இந்திய ஆள்பதிக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் எனவும் அதேசமயம் பாதுகாப்பு குடியியல்நீதி நிர்வாகம் முதலியவற்றைப்பொறுத்தமட்டில் முழு அதிகாரமும் அவரிடமிருப்பினும் அவர் குடியேற்றநாட்டுச் செயலாளருக்குப் பொறுப்புள்ளவராயிருக்க வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. இவ்வாறு இலங்கையின் பாலனம் பிரித்தானிய அரசினாலும் வர்த்தகசங்கத்தாலும் நடத்தப்பட்டதையே 'இரட்டைஆட்சி' என்பர்

இரட்டைஆட்சியின் விளைவாக நோத் பல் தொல்லைகளுக்குள்ளாகியதோடு வர்த்தகசங்கஊழியர்களின் வெறுப்பையும் வளர்த்துக்கொண்டார். ஆயினும்பழைய ஆட்சிமுறையைச்சீர்ப்படுத்திப் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதில்.அவர் பின்நிற்கவில்லை.

நோத் ஆள்பதியாக நியமிக்கப்பட்டபோது அவருடன் ஒரு பிரதான செயலாளரும் அவருக்கு ஒரு பதிற்செயலாளரும்நியமிக்கப்பட்டனர்? பதவியேற்றபின்னர் நோத் டிமியூறன்விசாரணைக்குழுவின் சிபார்சுகளுக்கிணங்கப் பலசீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

நிருவாகச் சீர்திருத்தங்கள்

நோத்இராணுவவிடயங்களில் தமக்கு உதவி செய்வதற்காக 'இராணுவச் சபை' ஒன்றை 1799ல் உருவாக்கினர். இதில் எழுவர் உறுப்பினராயிருந்தனர் இதன்மேல் அன்ரூட்ஸ்வகித்த இறைவரிமேற்பார்வையாளர் பதவியை ஒழித்துவீட்டுஇறைவரிக் கருமங்களைக்கவனிப்பதற்காகக்கொழும்பு காலி மட்டக்களப்பு. திருமலை.யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில்ஐந்து கலெக்டர்களை நியமித்தார். இவர்கள் பிரதம செயலாளருக்குப் பொறுப்புள்ளவர்களாகஇருந்தனர். இவர்களுக்குக் கீழ் கோறளைகளுக்குப்பொறுப்பாகமுதலியார்களும்,அவர்களின் கீழ் தலைமைக்காரர்களும் கடமையாற்றினர். முதலியார்களும் கலெக்டர்களுக்கும் இடையில் அத்தபத்து முதலியாரும் ஆள்பதியையும்முதலியார்களையும் இணைக்கும் ஒருவராக மகா முதலியாரும்அமைந்திருந்தனர்.

ஆனல்1801 ஏப்ரில் மாதத்தில் நோத் இறைவரிவர்த்தக சபை ஒன்றைத் தாபித்தார். இதில் எழுவர் உறுப்பினராயிருந்தனர். இதைத்தொடர்ந்துகலெக்டர்கள்பதவிகள் ஒழிக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாகப்பன்னிரண்டுஉபஇறைவரிப்பிரிவுகளுக்கும் ஒவ்வொருவர்த்தகஇறைவரிமுகவர் நியமிக்கப்பட்டார்.

மேலும்நோத்நிருவாகத்திற்காணப்பட்ட ஊழல்களைக்களைய முனைந்தார். குற்றம் புரிந்தவர்களைத் தண்டித்தார். பலரைப் பதவியினின்று நீக்கினர். குறிப்பாக சென்னையிலிருந்து வந்த ஊழியர்களைக் கவனமாகக் கண்காணித்து வந்தார்.

மேற்கூறப்பட்ட மாற்றங்களைப் புகுத்தியதுடன் நில்லாது நோத்நிலஅளவைத் திணைக்களம் கணக்காய்வாளர்திணைக்களம் நிலப்பதிவுத் திணைக்களம் முதலியவற்றையும் நிறுவினர் அன்றியும் நோத்தின் காலத்தில் அம்மை நோய் பரவியதன்விளைவாகச் சுகாதார விடயங்களிலும் அவர் அதிக சவனம் எடுக்க வேண்டியிருந்தது.இதனல் நோத்சுகாதாரத்திணைக்களம் ஒன்றைநிறுவினர் அம்மைப்பால்கட்டும்முறையும்இவர்காலத்திலேயேஆரம்பிக்கப்பட்டது. அந்நோயைத் தடுப்பதற்காககொழும்பு, யாழ்ப்பாணம், காலி,திருகோணமலைஎன்னுமிடங்களில் மருத்துவநிலையங்கள் நிறுவப்பட்டன.

நோத் அஞ்சல் சேவை ஒன்றையும் ஒழுங்குபடுத்தினர். அஞ்சல் சேவை புனரமைக்கப்பட்டதோடு கொழும்பில் ஒரு மத்திய அஞ்சல் நிலையமும் யாழ்ப்பாணம், காலி மாத்தறை மன்னர், திருகோணமலை ஆகிய இடங்களில் கிளை நிலையங்களும் நிறுவப்பட்டன

அடுத்து நோத் கல்வி விருத்திக்கு வேண்டிய கருமங்களையும் மேற்கொண்டார்: ஒல்லாந்தரால் உருவாக்கப்பட்ட பூரணமான கல்வித்திட்டம் வர்த்தக சங்கத்தினரால் புறக்கணிக்கப்பட்டிருந்தது அதை உடன் புனரமைத்துக் கல்விக்கூடங்களுக்குப் புத்துயிரளித்தார். ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிக்காக 6 றிக்ஸ் டாலரும் அதன் போதகருக்கு 15 றிக்ஸ்டாலரும்வழங்கப்பட்டது. உயர் பதவிகளை வகிக்கத் தகுதியுடையோரின் கல்விக்காக 4 பள்ளிக்கூடங்களிருந்தன; அவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்டோருக்காக அக்கடமி என்னும் மத்திய கல்விக்கூடம்ஒன்று கொழும்பில் கட்டப்பட்டது. நோத் ஒரு சமயம் கல்விக்காக செலவழிக்கப்படும் பணத்தைக் குறைக்க எண்ணியபோதும் கோடினர் என்பவரின் முயற்சியால் அது கைவிடப்பட்டது. நோத்தர் மத்தாபனங்கள் வறியோர்நிதி என்பவற்றைப் பாலனம் செய்வதற்காக 1800 இல் ஒரு குழுவை நியமித்தார். நீதிபாலனவிடயத்தில் நோத் மேற்கொண்ட நடவடிக்கைகள் முக்கியமானவை. தான் ஆட்சிப்பொறுப்பைஏற்ற காலத்தில் நீதி பாலனம் தம்பித்திருந்ததை உணர்ந்த நோத் அதைச் சீர்படுத்தவேண்டிய நடவடிக்கைகளை எடுத்தார். இத்துறையில் கல்கத்தாச் சட்டவாதி எட்மண்ட் கறிங்ரனின் ஆலோசனைகளைநாடிய நோத்-அவரின்சிபார்சுக்கிணங்க அக்டோபர் 14 ஆம் நாள் குற்றவிசாரணை நீதிமன்று ஒன்றை அமைத்தார். அதில்ஆள்பதி படைத்தலைவன் பிரதமசெயலாளர் ஆகியோரைத்தவிர வேறு மூவரும் உறுப்பினராயிருந்தனர். அது ஊர்சுற்றும் நீதிமன்றுக விளங்கியது. அதைத்தவிரகாலி கொழும்பு யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் குடியியல் நீதிமன்றுகளும் ஏனையஇடங்களில் லான்றூட்ஸ் நீதிமன்றங்களும் நிறுவப்பட்டன. இவற்றுக்குமேல் இரு மேன்முறையீட்டு நீதிமன்றங்களும் இயங்கின. நோத் காலத்தில் கொடூரமான தண்டனைகள் ஒழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவவாறு நோத் சீர்திருத்தப் பாதையில் பவனிவரும்போது இலங்கையின் அரசியல் நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது.

இலங்கை முடிசார் குடியேற்ற நாடாதல்

ஐரோப்பாவில் நெப்போலியப் போர்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து 1801இல் ஏற்பட்ட ஏமியன்ஸ் உடன்படிக்கையின்படி இலங்கை பிரித்தானியரின் வசமாகியவுடன் முடிசார் குடியேற்ற நாடாக - பிரித்தானிய அரசின் முழுப் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. இரட்டை ஆட்சியில் தமக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை ஏற்கனவே நோத் குடியேற்ற நாட்டு அலுவலாளருக்கு விளக்கி அவைகளைத் தீர்க்க வழிகாணுமாறு கேட்டிருந்தார். அவற்றையும் கருத்திற்கொண்டே டண்டாஸ் இலங்கையை முடிசார் குடியேற்ற நாடாக்க முடிவுசெய்தார். எனவே நோத் 1802 முதல் பிரித்தானிய அரசுக்கு மட்டும் பொறுப்புள்ள ஆள்பதியாகப் பணியாற்றினர். அந்நிலையில் அவருக்கு ஆலோசனை கூறுவதற்கென ஐவரைக்கொண்டகுழு ஒன்று நியமிக்கப்பட்டது அதில் பிரதம நீதியரசர், பிரதம செயலாளர், பிரதம தளபதிஎன்னும் மூவரும் பிரதான உறுப்பினர்களாயிருந்தனர் அடுத்து குடியியற் சேவை ஒன்று அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சென்ற அலுவலாளர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுத்திருப்பி அனுப்பப்பட்ட அதேவேளை 24 குடியியற்சேவையாளர் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டனர் ஏற்கனவே இங்கிருந்த எண்மருடன் மொத்தம் 32போர் இலங்கையின்முதலாவது குடியியற் சேவையில் பணிபுரிந்தனர். நோத் குடியியற் சேவையாளரைச் செவ்வனே கண்காணித்ததோடு அவர்களுக்கென ஓய்வுகால ஊதியம் பற்றியும் ஒழுங்குகளை ஏற்படுத்தினர்.

நில, நீதிபாலனச் சீர்திருத்தங்கள்

இலங்கை முடிசார் குடியேற்ற நாடாகிய பின்னர் நோத் மேற்கொண்ட சீர்திருத்தங்களில் நிலச் சீர்திருத்தம் குறிப்பிடத்தக்கது: இத்துறையில் இராசகாரிய முறையை ஒழிப்பதில் அவர் கவனம் திரும்பியது. அம்முறை மக்களை அடிமைகளாக்கியதோடு சமூக வேறுபாடுகளுக்கும் வித்தாயமைந்தது. மேலும் அம்முறை முதலியார், முகாந்திரம், எனப்பட்டவர்கள் மக்களை வருத்தி அதிக சேவையைப் பெறவும் இடமளித்ததோடு அவர்களின் அதிகாரங்களையும் அதிகரித்தது. எனவே அம்முறையை நீக்கி விட்டுக் குடியானவனை நிலத்துக்கு உரிமையாளனாக்குவதன் மூலம் பயிர்ச்செய்கை விருத்தியடைவதோடு வர்த்தகமும் வளருமென நோத் நம்பினர்.அன்றியும் இறைவரி அதிகரிப்புக்கும்அது உதவலா

மென அவர் கருதினர். எனவே 1802 மே மாதம் முதல் இராச காரியம் ஒழிக்கப்பட்டது. இதன்மேல் மக்கள் தாழ்நிலமாயின் விலைச்சலில் 1/10 ஐயும் உயர்நிலமாயின் 5/1 ஐயும் இறுத்தல்போதுமான தென விதிக்கப்பட்டது. இதன்விளைவாக மக்கள் தமது சேவைக்கு ஊதியம்பெறவும் முடிந்தது. ஆனால் நோத் எதிர்பார்த்தபடி இத்திட்டம் பயனளிக்கவில்லை.

இலங்கை முடிசார் குடியேற்றநாடாகியவுடன் இங்கிருந்த நீதிபாலன அமைப்பில் மேலும்சில மாற்றங்கள் புகுத்தப்பட்டன. 1801 இல் மன்னனால் விடுக்கப்பட்ட பட்டயத்தின்படி இலங்கை முழுவதுக்கும் பொதுவான உயர்நீதிமன்றுஒன்று நிறுவப்பட்டது. அதில் கறிஃரன் பிரதம நீதியதிகாராகவும் இலசிங்ஙன் துணைநீதிபதியாகவும் கடமையாற்றினர். அம்மன்று தேசவழமை, முஸ்லிம்களின் சட்டக்கோவை, ரோமன் டச்சுச்சட்டம் என்பவற்றினடிப்படையில் வழக்குகளை விசாரித்தது. வழக்குரைவாரியார் ஒருவர் முடிக்குரிய தரப்பில் வழக்குகளை நடத்தினர் ஆனால் சிறு குற்றங்களை முன்போல் சமாதான நீதிபதிகளே விசாரித்தனர். மேலும் கொழும்பு யாழ்ப்பாணம் புத்தளம் மாத்தறை மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மாகாணநீதிமன்றங்களும் நிறுவப்பட்டன. அவை லான்ரூட்ஸ் எனப்படும் ஒல்லாந்த நீதிமன்றங்களின் பணியைச் செய்தன.

மேற் கூறப்பட்டவற்றைத்தவிரப் பிரதம நீதியரசர் துணைநீதியரசர் ஆள்பதி பிரதம செயலாளர் ஆகியோரைக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றமும் பதில் அட்மிறல்நீதிமன்று ஒன்றும்நிறுவப்பட்டன. நோத் முன்குறிப்பிட்டவற்றைத்தவிரப் பயிர்ச் செய்கையை விருத்திசெய்யுமுகமாக முத்துராச வெலித்திட்டத்தை செயல்படுத்த முனைந்தார். ஆயினும்கண்டிப்போரின் காரணமாக அது கவனிக்கப்படவில்லை. நோத் காலத்திலேயே முதன்முதல் அரசாங்கச் செய்திமடல் ஒன்றும் வெளியிடப்பட்டது. 1802 இல் வெளிவந்த இம்மடல் செய்திகளை மட்டுமன்றி இலக்கியம் அரசியல் பற்றிய கட்டுரைகளையும் கவிதைகளையும் தாங்கிவந்ததினால் ஒரு சஞ்சிகையைப்போல அமைந்தது.

பிரித்தானியரும் கண்டி இராச்சியமும்

பிரித்தானியர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றமுன்னரேயே மூன்று தடவை கண்டிய அரசனுடன் தொடர்பு கொண்டபொழுதிலும் அவற்றால் அவர்கள் எதுவித பயனையும் அடையவில்லை. பைபஸ், பொயிட், ஆகியோர் மேற்கொண்ட தூதுகள் எதிர்பார்த்த பயனை விளைவிக்கவில்லை எனினும் 1795இல் அண்ட்றூஸ் மேற்கொண்டதூதின் விளைவாகக் கண்டியரசின் தனது தூதுவர்கள் இருவரைச் சென்னைக்கு அனுப்பிக்கொபாட் ஆள்பதியுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டான். அது கண்டி அரசனுக்கே சாதகமாயமைந்தது. அவ்வுடன்படிக்கையை உறுதிப்படுத்துவதற்காக 1796ஆம் ஆண்டில் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றியவுடன் அண்ட்றூஸ்மீண்டும் கண்டிக்குச் சென்றுளையினும்இராசாதி இராசசிங்கன் அதனை உறுதிப்படுத்த மறுத்தமையால் அவன் வெறுமனே திரும்பவேண்டியதாயிற்று:

கண்டியின் அரசியல் நிலை:- கரையோர மாகாணங்களைப் பிரித்தானியர் கைப்பற்றிய காலத்தில் கண்டிய அரசவையில் பல சம்பவங்கள் நிகழ்ந்தன, நாயக்க மன்னர்களின் ஆட்சியில் வெறுப்புற்ற பிரதானிகள் பலர் மன்னனைப் பதவியிலிருந்து நீக்க மறைமுகமாக முயற்சி செய்தனர். பிலிமத்தலாவை இப்பிரதானிகளின் தலைவன், சூழ்ச்சிக்கு இருப்பிடமாகவும் சதிக்கு உறைவிடமாகவும் அமைந்த பிலிமத்தலாவை 1798 இல் இராசாதி இராசசிங்கனைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டுத்தானே ஆளமுனைந்தபோது அவனது உறவினர்கள் மற்றும் பிரதானிகள் எதிர்த்தமையால் தனது திட்டத்தைக் கைவிட்டான். ஆனால்அவ்வாண்டே மன்னன் இறந்துபோனவுடன் பிலிமத்தலாவை மன்னனால் நியமிக்கப்பட்ட முத்துசாமியை அரசனுக்காது வயதில் இளையவனை கண்ணுச்சாமியை ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் என்ற பெயருடன் பதவியிலிருத்தினன் கண்ணுச்சாமியைக் கைப்பொம்மையாகக் கொண்டு தனது திட்டங்களை நிறைவேற்றலாமெனப் பிலிமத்தலாவை கருதினன். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து முத்துசாமி யாழ்ப்பாணத்துக்குத் தப்பியோடினன். அவன் உறவினர் மூவர் பிரித்தானியரிடம் தஞ்சம் புகுந்தனர். ஆனால் பிரித்தானியர் இவர்களுக்கு எவ்வித உதவியும்செய்யமுன் வரவில்லை.

இந்நிலையில் பிலிமத்தலாவை பிரித்தானியரின் உதவியுடன் தான் மன்னனவதற்கு முயன்று அவர்களுடன் தொடர்பு கொள்ளலானன்.

நோதும் கண்டி அரசும் :- இவ்வாறு பிரித்தானியரைப் பயன்படுத்த விரும்பிய பிலிமத்தலாவை ஆள்பதி நோதுக்கு ஒரு நிருபம் அனுப்பி ஒரு முக்கியமான விடயத்தைப்பற்றிப் பேசுவதற்குச் சீதவாக்கைக்கு வருமாறு கோரினான். நோத் அவ்வேண்டுகோளை ஏற்று அங்கு சென்றார். அங்கு பிலிமத்தலாவை தான் அரசன் மீது கொண்டுள்ள வெறுப்பையும், தனது திட்டத்தையும் சூசகமாகத் தெரிவித்தான். நோத் அவற்றைப்பொருட் படுத்தவில்லை. ஆயினும் பிலிமத்தலாவையின் தொடர்பை முற்றாக நீக்கவில்லை. இதற்குப்பின்னரும் இரண்டு தடவை பிலிமத்தலாவை நோதைச் சந்தித்தான்.

ஆயினும்மன்னனைப்பதவியிலிருந்து நீக்கிப் பிலிமத்தலாவையை அரசனுக்கும் எத்திட்டத்தையும் தாம்ஏற்கத்தயாராயில்லையெனநோத்திடமாகத் தெரிவித்தார் இருப்பினும் பிலிமத்தலாவை அதன் பின்னர் பொயிட்டைச் சந்தித்து தனது கோரிக்கையை மீண்டும் விடுத்ததோடு ஒரு படையை உடனே கண்டிக்கு அனுப்பவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினான் ஆனால் இக்கோரிக்கைக்கு பொயிட் சம்மதிக்கவில்லை.

இவ்வாறுக கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் பிலிமத்தலாவையின் சூழ்ச்சிகளையும் பதவி ஆசையையும் அறிந்தபோது அவன்மேல் வெறுப்புற்றிருந்தான். பிலிமத்தலாவையின் அதிகாரம் வரம்பு மீறியிருந்தது. அதுவும் மன்னனுக்கு அச்சத்தை விளைத்தது. அந்நிலையில் அவன் தனது நாயக்க வமிசஉறவினர்களின் நட்பை வளர்த்ததோடு அவர்களின் ஆலோசனைப்படியே செயலாற்றி வந்தான் அன்றியும் பிலிமத்தலாவையின் மகனை மணம் முடிக்காது அவனது பகைவனின் புத்திரிகள் இருவரை மனைவியராக்கியது அவர்களிடை மேலும் பகைமையை அதிகரித்தது

கண்டி அரசனின் நிலைமை இவ்வாறு பலவழிகளிலும் பலவீனமடைவதை அறிந்த நோத் இறுதியில் பிலிமத்தலாவையின் வேண்டுகோளுக்கிணங்கி. அவன் மன்னனின் அநுமதியைப் பெற்றுத்தரின் ஒரு தூதுவனைப் படையுடன் கண்டிக்குஅனுப்பத் தயார் என தெரிவித்தான். பிலிமத்தலாவை இதற்கு ஒருப்படவே மக்டோவல் தலைமையில் 164 போர் வீரருடன் 1803 மார்ச் 12இல் கண்டிக்கு ஒரு தூதுக்குழு சென்றது இப்படையின் வருகையைக்கண்டமக்கள் பயந்து ஓட்டம் பிடித்தனர். மன்னனும்கண்டியைவிட்டோடஎண்ணினான். இந்நிலையில்பிலிமத்தலா

வையின்வேண்டுகோளுக்கிணங்கத்தமதுபடையிற்பெரும்பகுதியை சூவான்வலியில் நிறுத்திவிட்டு ஒரு சிறு படையுடன் மக்டோவல் கண்டிக்குச்சென்று மன்னனைச் சந்தித்தான், ஆயினும் மக்டோவல் விடுத்த கோரிக்கைகளுக்கு அதிகமாக மன்னன் எதிர்க்கோரிக்கைகள் விடுத்தமையால் அவன் தூது தோல்வியடைந்தது.

இவ்வாறு மக்டோவலின் தூது தோல்வியடைந்தவுடன் பிலிமத்தலாவை பிரித்தானியருக்கும் மன்னனுக்குமிடையில் பகைமையை வளர்க்கப் பலவாறு முயன்றான். கரையோர மாகாணங்களில் மக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டுதல் ஆட்சிக்குஎதிராக அதிருப்தியைஉருவாக்குதல், பொய்யான செய்திகள் அறிக்கைகளைவெளியிடுதல்என்பன அவன் மேற்கொண்ட சிலவழிகளாம். ஆனால் இவற்றின் மூலம் ஒன்றும் நிகழாது போகவே 1802 ஆம் ஆண்டு பெப்ரவரி 3 இல் மீகாஸ்தென்னை, றத்வத்தை, கொனகொல்ல என்பவர்களைக் கொழும்புக்குத் தூதாக அனுப்பினான். அவர்கள் பிலிமத்தலாவையின் கோரிக்கைகளை வற்புறுத்தினர். ஆனால் நோர்த் அரசனுக்குத் தீங்கிழைக்கும் அக்கோரிக்கைகளை மீண்டும் நிராகரித்தான்.

இதன்மேல் பிலிமத்தலாவை மார்ச் 8 இல் மக்டோவலுக்கு இரகசிய நிருபம் ஒன்றெழுதிக் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு ஒரு வீதி அமைப்பதற்கு முதல் அதிகாரி என்ற ரீதியில் தான் அனுமதி வழங்குவதாகவும் அது மன்னனுக்குத் தெரியாதிருக்கவேண்டுமெனவும் தெரிவித்தான். ஆனால் பிலிமத்தலாவை விரித்த இவ்வலையில் மக்டோவல் விழாது தப்பினான்.

முதற் கண்டிப்போர்

இவ்வாறு முன் குறிப்பிடப்பட்டபல விதமான தந்திரங்களினாலும் சூழ்ச்சிகளினாலும் தனது திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் பிலிமத்தலாவை பிரித்தானியரையும் கண்டிய அரசனையும்மோதச்செய்வதற்குவேறொரு உத்தியைக் கையாண்டான்.

அக்காலத்தில் கரையோரப் பகுதியில் வாழ்ந்த சோனகர் உப்பு, மீன், புகையிலைமுதலியவற்றைக்கொண்டுசென்று கண்டியில் பண்டமாற்றுச் செய்து பாக்கை வாங்கி வருவது வழக்கம் இவ்வாறுவியாபாரநோக்கத்துடன் கண்டிக்குச் சென்றுதிரும்பிய

புத்தளச் சோனகர் சிலரைப் பிலிமத்தலாவை தனது கையாட்கள் மூலம் தாக்கி அவர்கள் கொண்டு சென்ற பொருட்களையும் பறிமுதல் செய்து துரத்திவிட்டான். இந்நிகழ்ச்சியைப் புத்தளப் பிரிவு அதிகாரிமூலம் அறிந்தநோத் பொயிட் மூலம் தீரவிசாரித்த பின்னர் கண்டிய அரசனுக்கும் பிலிமத்தலாவைக்கும் கண்டனக் கடிதங்கள் எழுதி வியாபாரிகளுக்குப் போதிய நட்ட ஈடு கொடுக்குமாறு கோரினர். இதற்குப் பதிலளித்த மன்னன் வியாபாரிகளைக் கண்டிக்கு அனுப்பினால் விசாரணையின் பின்னர் அவரது கோரிக்கை கவனிக்கப்படும் எனத் தெரிவித்தான். இதைத் தொடர்ந்து வியாபாரிகள் கண்டிக்குச் சென்றபோது மன்னன் அவர்களுக்கு நட்ட ஈட்டையோ, பாக்கையோ கொடாது காலம் கடத்தினான். இதைஅறிந்த நோத் ஒரு மாத காலத்திற்குள் பறிமுதல்செய்யப்பட்ட பாக்கை திருப்பிக் கொடாவிடின் தான் கண்டி மீது படையெடுக்க நேரிடும் என எச்சரித்தார். ஆனால் அதற்கும் உரிய காலத்தில் பதில் வராமல் போகவே நோத் கண்டிமீது படையெடுக்கத்துணிந்தார்.

நோதின் கண்டிப்படையெடுப்புக்கு முன் கூறப்பட்டநிகழ்ச்சியே உடன் காரணமாயிருந்தது. ஆயினும்கண்டியைக்கைப்பற்றுவது அல்லது அதைத்தமது படைக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம் என்பதைப் பிரித்தானியர் இவ்வளவில்உணர்ந்திருந்தனர். கரையோர மாகாணங்கள் பிரித்தானியரின் கீழ் இருப்பினும் கண்டியஅரசுநாட்டின்நடுவில் 'அரசுக்குள்அரசாக' வே அமைந்திருந்தது. அந்நிலையில் கண்டியர்கள்அவ்வப்போது கரையோரப் பகுதியல் ஏற்பட்டகுழப்பங்களிற் பங்கு பற்றிப் பிரித்தானியருக்குத் தொல்லை கொடுத்தனர். மேலும்கண்டிய அரசன் கண்டிப்பகுதியிலிருந்துவெளியேகொண்டு செல்லப்படும் பொருட்களுக்குவரி விதிப்பதன் மூலம் கட்டில்லா வியாபாரத்துக்குக் குந்தகம் விளைவித்தான். கண்டியர்களின் ஒத்தாசையுடன் நிகழ்ந்த குழப்பங்களும் அமைதியைக்குலைத்து வியாபார விருத்திக்குத் தடையாயிருந்தன. மேலும் கண்டி கைப்பற்றப் படாதவரை பிரித்தானியர் அதிகசெலவில் கண்டி இராச்சியத்தைச் சுற்றிப்பாதுகாப்புநடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டியிருந்தது. நாடு முழுவதும் ஒரே ஆட்சியின்கீழிருப்பின் கரையோரப் பகுதியை மட்டும் காப்பது போதுமானது. ஆகவே இராணுவபாதுகாப்பு நிர்வாக ரீதியில் நோக்கும் போது கண்டியைக்கைப்பற்றலின் அவசியம் புலப்படும். அன்றியும் கொழும்பு

திருகோணமலை என்னுமிரண்டையும் இணைத்துஒரு வீதியைஅமைப்பதன் மூலம் நாட்டின் பாதுகாப்பைப்பலப்படுத்தவும்,போக்குவரத்தை விருத்தி செய்யவும் பிரித்தானியர் விரும்பினர். ஆனால் அவ்வீதி கண்டி இராச்சியத்தினூடாகச் செல்லவேண்டியிருந்தது இடர்ப்பாடாயிற்று. இறுதியாக அக்காலத்தில் பிரித்தானியர் பிரான்சியருடன் பகைகொண்டிருந்தமையால் தமது ஆட்சிக்குட்பட்டிருந்த பிரதேசத்தின்அயலில்-சிறப்பாகத் திருகோணமலைத் துறைக்கு அயலில் ஒரு பகையரசு இருப்பதை விரும்பியிருக்க முடியாது. இக்காரணங்களினால் கண்டியைக் கைப்பற்ற அல்லது இந்தியாவில் வெல்லஸ்லி கையாண்ட படைத்துணை நட்பு முறையைப் பின்பற்றிக் கண்டியின் பாதுகாப்பையாவது தம்கையில் வைத்திருக்கப் பிரித்தானியர் விழைந்தனர்.

எனவே 'பாக்குப்பறிமுதல்' நிகழ்ச்சியைச்சாட்டாகவைத்து நோத் கண்டிமீது படையெடுத்தார்.1803 ம்ஆண்டு சனவரி 31ல் மக்டோவல் தலைமையில் ஒருபடை கொழும்பிலிருந்து புறப்பட்டது 1700 வீரரைக்கொண்டிருந்த இப்படை தம்பதேனியா கலகெதரை கிறியகம என்னுமிடங்களுக்கூடாகச்சென்று பெப்ருவரி 20 இல் கட்டுகஸ்தோட்டையை அடைந்தது. அன்று திருமலையிலிருந்து பாபட் தலைமையில் வேறுஒரு படையும் அங்கு வந்திருந்தது பின்னர் இரண்டுபடைகளும் கண்டியை நோக்கிப் புறப்பட்டன. அப்படைகளின் வரவை அறிந்த மன்னன் நகருக்கு எரியூட்டிவிட்டு அங்குராங்கட்டைக்கு ஒடி ஒளித்தான். கண்டிக்கு வந்த படைஞர் 'பறைநாய்களேத்தவிர' எவரையும் கண்டிலர் அந்நிலையில் மன்னனின் மறைவிடத்தை நோத் அறியமுடியாதுபோகவே யாழ்ப்பாணத்திலிருந்து முத்துச்சாமியை அழைத்து அவனுக்கு முடிசூட்டிஅவனுடன் ஒரு உடன்படிக்கையும்செய்து கொண்டார்.

இவ்வாறுக,கைக்கெட்டியது வாய்க்கெட்டாததைப்போல் தான்நீண்டகாலம் எதிர்பார்த்திருந்த முடி முத்துச்சாமியின் தலையில் சூட்டப்பட்டதைக் கண்ட பிலிமத்தலாவ மனம் புழுங்கினன். அவன் உடன் பிரித்தானியருக்கு நண்பனாகப் பாசாங்கு செய்து அரசன் அங்குராக்கட்டையிலிருப்பதாக ஒரு தெய்தியை நோத்திடம் தெரிவித்தான். இதைத்தொடர்ந்து அங்குராங்கட்டைக்குச் சென்று அரசனைக் காணுது திரும்பினர். ஆனால் மன்னனைத் தேடிப்பிடிக்குமாறு அரசன் விடுத்தவேண்டுகோளை பெயிலி நிராகரித்தான்.

இந்நிலையில் பிலிமத்தலாவையின் தூண்டுதலினால் கண்டியிலி
ருந்து வெளியிடங்களுக்கான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.
மழைக்காலமும் ஆரம்பமாகியது. அதைத்தொடர்ந்து மலேரி
யாச் சுரமும் தனது கைவரிசையைக் காட்டிற்று. இதனால் பலர்
பாதிக்கப்படவே மருந்துப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு
ஏற்பட்டது. இக்கட்டான இந்நிலைமையில் பிலிமத்தலாவையை
ஆட்சிக்குப் பொறுப்பாளனுக்கினால் அவனிடமிருந்து உதவியைப்
பெறலாமெனத் தெரிவிக்கப்பட்ட தகவுரையின் பேரில்நோத்
முத்துச்சாமிக்குத்துரோகமிழைக்கப் பின்னிற்காதவனாய் பிலிமத்
தலாவையுடன் ஓர் இணக்கத்திற்கு வந்தான் இதன்படிமுத்துச்
சாமியை வன்னி நாட்டரசனுக்குவதென்று பிலிமத்தலாவையை
'உத்துன்குமராய' என்னும் பெயருடன் ஆட்சியில் அமர்த்துவ
தென்றும்ஏழு கோறளைகளைப் பிரித்தானியர் பெறுவதென்றும்
திருகோணமலைக்கு ஒரு வீதியமைப்பதற்குப் பிரித்தானியரை
அனுமதிப்பதென்றும் தப்பியோடிய மன்னனைக் கைப்பற்றியவு
டன் இவற்றைச்செயல்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நோத் பிலிமத்தலாவையைத் தம்பதேணியாவிற் சந்தித்த
போது மேற்கூறப்பட்டஒழுங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது பின்
னர் முத்துச்சாமியின் ஒப்பத்திற்காக அவ்வுடன்படிக்கையின்
பிரதி ஒன்று பாபட் என்பவரால் கண்டிக்கு எடுத்துச்செல்லப்
பட்டது. ஆனால் பாபட் கண்டியில் சடும் நோய்வாய்ப்பட்ட
மையினால் மக்டோவல் பொறுப்பை ஏற்றான். பின்னர் மக்டோ
வல் மீண்டும் நோய்வாய்ப்பட்டபோது பொறுப்பு டேவியின்
கைக்குமாற்றப்பட்டது.

இம்மதிவ்வாறாக, மலேரியாச் சுரம் போர் வீரர்களைப் பலமா
கத் தாக்கியதனால் மலாய்ப் படைவீரரும், பிரித்தானிய படை
வீரரிற் பலரும் சேவையிலிருந்து விலகினர். பிரித்தானியப்படை
வீரரின் தலையைக் கொய்து வருபவருக்குப்பத்து ரூபாயும், சுதே
சப் படைவீரன் தலையைக்கொய்து வருபவருக்கு ஐந்து ரூபா
பரிசும்கிடைக்குமென மன்னன் அறிவித்திருந்ததும் பல போர்
வீரர் பீதியுற்று விலகக் காரணமாகியது. நிலைமை படுமோச
மாக இருக்கும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கண்டியப்
படைகள் பிரித்தானியப் படைகளைச் சூழ்ந்து தாக்கின. இத்
தாக்குதலை டேவிமிகுந்த தீரத்துடன் 10 நாட்களுக்கு மட்டும்
சமாளிக்க முடிந்தது. அதன் பின்னர் பிலிமத்தலாவையின்
நிபந்தனைகளின் கீழ் அவன் சரணடையநேர்ந்தான். அந்நிபந்
தனைகளுக்கிணங்க பிரித்தானியப்படை முத்துச்சாமியுடன்

திருகோணமலைக்குச் செல்ல அநுமதிக்கப்பட்டது. போர்க்க ருவிகள், காயமுற்றோர் பற்றிய விடயங்களைத்தான் கவனிப் பதாகப் பிலிமத்தலாவை ஒப்புக் கொண்டான். இதன் மேல் பிரித்தானியப்படைகள் கண்டியை விட்டு வெளியேறின. ஆயின் இப்பொழுது மகாவலி பெருக்கெடுத்திருந்தமை யால் படை 'வட்டப்புளவை' என்னுமிடத்தில் ஓர்ரவதங்கவேண்டியேற் பட்டது. அதையறிந்த மன்னன் தன் சீற்றம் ஆறுதலடைந் முத்துச்சாமியைத்தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரினான். இதற்குடேவி முதலில் மறுத்தானெனினும் அவனது முழுப்படை யையும் அழிக்கப்போவதாக மன்னன் பயமுறுத்தியதைத் தொ டர்ந்து முத்துச்சாமியையும் அவன்தம்பியையும் மன்னனிடம் ஒப்படைத்தான் அவர்களை அரசன் உடன் சிரச் சேதம்செய் வித்தான்.

அதன் பின்னரும் சீற்றம் தணியாத அரசன் வட்டப்புளு வாவில் தங்கியிருந்த படைவீரர்கள் அனைவரையும், மற்றும் நோய்வாய்ப்பட்டிருந்த தோரையும் படுகொலை செய்வித்தான். இதன்மேல் டேவி சிறையில்வைக்கப்பட்டான். அவன் சில கா லத்தின்பின்னர் அச்சிறையிலேயே இறந்து விட்டான்.

இவ்வாறு முதற் கண்டிப்போர்முழுத் தோல்வியாக முடிந் த்து. இதற்கு நோத் ஆள்பதியே முக்கியமான காரணமாகும். எண்ணித்துணியாது படையெடுப்பை மேற்கொண்டது.அவரது மடமைத்தனத்தைக் காட்டுகிறது. கரடுமுரடானதரைத்தோற் றத்தையுடைய கண்டிப்பகுதியில்போக்குவரவுப்பாதைகள் செவ் வனே அமையாத ஒரு காலத்தில் காடுகள் மேடுகளுக் கூடா கப்போர் வீரரைக்கொண்டு செல்வதும் படைகளுக்கு வேண்டி யவற்றை உடனுக்குடன் பெறுவதும் எளிதன்று. இதை நோத் தன்குஉணர்ந்திருக்கவில்லை, மேலும் நாட்டின்காலநிலைமாற்றங் களையும், பருவகாலவேறுபாட்டையும் கருத்திற் கொள்ளாது மழைக்காலத்திற்குச் சற்றுமுன்னர்படையெடுப்பை நடத்தியது மதியீனமன்றே? மேலும் நோத் கண்டியில் படைகளின் அவல நிலையை அறிந்து அவற்றை உடன்திருப்பியழைக்குமாறுமக்டோ வல் பாபட்முதலியோர் விடுத்த வேண்டுகோளைப் புறக்கணித்த மை அவரது பிடிவாதக்குணத்தையும் விவேகமின்மையையும் காட்டுகிறது. அன்றியும்ஒவ்வொரு தற்காலிக வேற்றியையடைத் தும் அவர்தனது குறிக்கோளையும் பெரிதாக்கிக்கொண்டார். மே லும்கண்டிப் பகுதியில் நவீன போர்முறைகளைப் பயன்படுத்த இயற்கைச் சூழல் இடந்தராதென்பதையும்நோத்விளங்கியிருக்க

வில்லை நாட்டுப்புறத்தை நன்கறிந்த கண்டியப்படைகள் ஆங்காங்கு மறைந்திருந்து தாக்குதல்களை மேற்கொண்டபோது போர்த்திறன் மிக்க பிரித்தானியர் கூடப் புறமுதுகு காட்டவேண்டியதாயிற்று. நோதின் தோல்விக்குப் படைக்குறைவும் ஒரு காரணமாகும். அக்காலத்தில் பிரித்தானியர் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் போர்களில் ஈடுபட்டிருந்தமையால் நோத் போதிய வெளியுதவியைப் பெறமுடியாமற்போயிற்று.

நோத் பிலிமத்தலாவையின் அதிகாரத்திலும் அவனது வாக்குறுதிகளிலும் அதிக நம்பிக்கை வைத்ததும் மன்னனின் பலத்தையும் செல்வாக்கையும் குறைவாக மதிப்பிட்டதும் அவரது தோல்விக்கு உதவின. மக்களின் மத்தியில் மதிப்பிழந்த முத்துச்சாமியை மன்னனாக முடிசூட்டியது அவர் விட்ட பெருமபிழையாகும். இவ்வாறு நோதின் திறமைக்குறைவே அவரின் தோல்விக்குப் பெருமளவில் காரணமாயிருந்தது. ஆயின் பிலிமத்தலாவையின் சூழ்ச்சிகளும் அதற்குக்கணிசமானஅளவு உதவின.

இவ்வாறு கண்டிப்பிரதேசத்திலிருந்து பிரித்தானியரை வெளியேற்றியநிலையில் மன்னன் அவர்களை நாட்டைவிட்டே துரத்திவிடலாமென மனப்பால் குடித்துத் தனதுபடைகளைக் கரையோரப் பிரதேசத்தில் தாக்குதல் மேற்கொள்ளுமாறு ஏவினான். ஆனால் பிரித்தானியரின் படைப்பலம் அதற்கிடையில் அதிகரித்திருந்தமையால் அவர்கள் கண்டிப்படைகளை எளிதில் தோற்கடித்து விட்டனர்.

இதன் பின்னர் வங்காளத்திலிருந்தும் சென்னையிலிருந்தும் மேலும் படைகள் வந்ததைத்தொடர்ந்து நோத் தாம்இழந்த கீர்த்தியை மீட்கவும் மன்னன் மீது வஞ்சம் தீர்க்கவும் எண்ணிக கண்டிமீது இரண்டாவது படையெடுப்பொன்றைமேற்கொள்ள முயற்சித்தார். இத்திட்டத்தின்படி படைகள் கொழும்பு, நீர்கொழும்பு புத்தளம். அம்பாந்தோட்டை மட்டக்களப்பு திருகோணமலை என்னும் ஆறு இடங்களிலிருந்து கண்டிக்குப்புறப்படுவதாகவிருந்தது. ஆனால் படைத்தலைவனுக்கும் நோதுக்கும்இடையில் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டினால் இம்முயற்சி கைவிடப்பட்டது. அம்முடிவு மட்டக்களப்பிலிருந்து பறப்பட்ட ஆர்தர்ஜோன்சனுக்கு அறிவிக்கப்படாமையால் அவன் தனது படைகளுடன் கண்டிக்குவந்து அங்கு பிற படைகளைக்காணாதபோது மிக்க தீரத்துடன் திருமலைக்குத் திரும்பிச் சென்றான்.

நோதின் தோல்வியைப் பற்றிய தகவல் பிரித்தானியாவை எட்டியவுடன் அங்குள்ள பாராளுமன்றத்தில் பல கேள்விகள் எழுந்தன: கண்டிப்படு தோல்விக்கு நோதின் திறமையின்மையே காரணமெனக் கருதப்பட்டதால் நோத் 1805 இல் தம் பதவியைத் துறந்து தாயகத்திற்குச் சென்றார்.

வினாக்கள்

1. முதற் கண்டிப்போருக்கு அடிகோலிய சம்பவங்களைத் தொகுத்து எழுதுக.
2. நோதின் படையெடுப்பு தோல்வியடைந்தமைக்குக் காரணங்களெவை ?
3. நோத்மேற்கொண்ட சீர்திருத்தங்களை விபரிக்குக.
4. நோத் காலத்தில் கண்டி இராச்சியத்தின் அரசியல் நிலையை விபரிக்குக.
5. வரலாற்றுக் குறிப்பெழுதுக :-
   பிலிமத்தலாவை, மக்டோவல், டேவி.
6. முதற் கண்டிப்போரின் தோல்விக்குப் பிலிமத்தலாவை எவ்வாறு உதவினான் என்பதை விளக்குக.

அத்தியாயம் 4

மெயிற்லந்தின் ஆட்சி

நோத் பதவியைத் துறந்தபின்னர் 1805 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி சேர் தோமஸ் மெயிற்லந்து இலங்கையின் ஆள்பதியாகப் பதவியேற்றார். வெளிநாடுகளில் பல்வேறுதுறைகளிலும் சிறந்த பணிபுரிந்து பாராட்டைப்பெற்ற மெயிற்லந்து தாம் பெற்ற அநுபவத்தை வழிகாட்டியாகக்கொண்டு இங்கும் அளப்பரிய சேவை செய்தார். அவர் ஆற்றிய சேவையும் மேற்கொண்ட சீர்திருத்தங்களும் பிரித்தானிய ஆள்பதிகளின்வரிசையில் அவருக்கு ஓர் சிறப்பான இடத்தைப் பெற்றுக்கொடுத்தன எனின் அது மிகையன்று.

மெயிற்லந்து பதவியேற்றபோது பல பிரச்சனைகள் அவரை எதிர்நோக்கியிருந்தன. படைப்பிரிவினர்க்கும் குடியியற்பிரிவினருக்குமிடையேதகராறுகள், கண்டியமன்னனின் பகை, வெறுமையான திறைசேரி ஆட்சியில் வெறுப்புற்ற மக்கள், முதலியன அவற்றுட் சிலவாகும். மெயிற்லந்து அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மிகுத்த விவேகமும் திறமையும் காண்பித்தார். கண்டிய அரசை பொறுத்தவரை நோத் பின்மற்றிய வழிபைத் தாமும் பின்பற்றிக் காலத்தையும் பணத்தையும் வீரயமாக்காமல் பிரித்தானியரின் ஆட்சியை வலுப்படுத்துவதிலும் நிர்வாகத்தைத் திருத்தியமைப்பதிலும் அவர் அதிக அக்கறை காட்டினார். நாட்டின் நிலைமையை நேரில் அறிவதற்காக அவர் தாம்பதவியேற்ற ஆறுமாத காலத்திற்குள் ஒரு சுற்றுலாவை மேற்கொண்டமை அவர் மக்களின்நலனில் எவ்வளவு அக்கறைகொண்டிருந்தார் என்பதற்குச் சீரிய எடுத்துக்காட்டாகும்.

நிலச்சீர்திருத்தங்கள்-: கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினராலும் நோஞ்ஞலும் நீக்கப்பட்ட இராசகாரியமுறையை மீண்டும் செயல்படுத்தியதே இத்துறையில் அவரின் பிரதான பணியாயிருந்தது இராசகாரிய முறை ஒழிப்பினால் பல அனர்த்தங்கள் ஏற்பட்டிருந்ததை மெயிற்லந்து அறிந்திருந்தார். மக்கள் சாதி அடிப்படையில் அமைந்த தொழில்களைப் பண்டுமுதற் செய்து பழக்கப்பட்டிருந்தமையால் வேதனத்துக்காகவேனும் வேறு தொழில்களை மேற்கொள்ள விரும்பவில்லை, அவ்வாறு செய்தல்

இழுக்கு எனவும்அவர்கள் எண்ணினர். இதனால் பொதுவேலைக ளைச்செய்வதற்காக நோத் பெருந்தொகைச்செலவில் தென்னிந் தியாவிலிருந்து கூலியாட்களைத் தருவிக்கவேண்டி யிருந்தது. இது பற்றிக் குறிப்பிட்ட மெயிற்லந்து 'இந்நாட்டு மக்களில்ஒருவரா வது உடல்வேலைமூலம் தனது வருவாயையும் வசதிகளையும் அதிக ரிக்கவிரும்பவில்லை. உடல்வேலை செய்வதிலும்பார்க்க ஒருசில தென்னைமரங்களின் நயவில் அவற்றின் கீழிருந்து சோம்புவதை யே விரும்புவர்'. எனக்கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

மேலும் சேவைமானிய ஒழிப்பினால் வருமானம் அதிகரிக்கும் என நோத்நம்பியிருந்தும் அதுஅதிகரிக்கவில்லை.ஏனெனில்நோத் எதிர்பார்த்தபடி மக்கள் கறுவாப் பயிர்ச்செய்கையிலோ நெற் செய்கையிலோ எவ்வித கரிசனையுமின்றியிருந்தனர் அதேசமயம் நாட்டில் குற்றச்செயல்களே அதிகரித்தன.மேலும் சேவைமா னிய ஒழிப்பினால் மக்கள் தமது கடமைகளிலிருந்து விடுவிக்கப் பட்டபோது ஓய்வுநேரத்தை நல்வழியில் பயன்படுத்தாமல் பல விதமான குற்றச்செயல்களைப்பிரிவதிலேயே ஈடுபட்டனர்.இக்கா லத்தில் ஒராண்டில் நிகழ்ந்த குற்றச்செயல்கள் இதற்கு முன்னர் 20 ஆண்டுகளில் நடந்ததைவிட அதிகமாயிருந்தது இவற்றை யெல்லாம்அவதானித்த மெயிற்லாந்து இராசகாரியமுறை கால ப்போக்கில் கைவிடப்படலாமெனினும் அன்றைபதிலையில் அவசி யமானது எனக்கூறி அதை அமுல்செய்தார்.

மெயிற்லந்து இராசகாரியமுறையை மீண்டும் அமுல் செய்த தோடு பயிர்ச்செய்கையை விருத்திசெய்யவும் பல முயற்சிகளை மேற்கொண்டார். இத்துறையில் அலெக்சாந்தர்ஜோன்சன்என்ப வரின் ஆலோசனைகளுக்கிணங்க காலி, மாத்தறை அம்பாந்தோ ட்டை முதலிய இடங்களிலுள்ள குளங்களையும் பயிர்ச்செய்கை நிலைமைகளையும் பார்வையிடுவதற்காக ஒருஅதிகாரியைஅனுப்பி னார். அலெக்சாந்தர்ஜோன்சன் நாட்டிலிருந்தபாழடைந்தகுளங் களை அரசாங்கம் திருத்துவது கடினமென்பதனால் ஐரோப்பியர் களையும் இந்தியர்களையும் இங்கு முதலீடுசெய்ய அனுமதிக்க வேண்டுமெனவும் வற்புறுத்தினார். அவர் தாவரவியற் பூங்கா ஒன்றை நிறுவவும் பயிர்ச்செய்கை.உபகரணங்களையும் எந்திரங் களையும் கரட்சிக்கு வைக்கவும் பொது தொழில்நுட்ப கைத்தொ ழிற் பாடசாலைகளை அமைக்கவும் தகவுரை கூறினார்.

நீதிபாலனச் சீர்திருத்தங்கள்:-மெயிற்லந்தின் முதலாவது நடவடிக்கை மாகாணநீதிமன்றுகளில் கலெக்டர்களுக்கு வாரியாரின் அதிகாரங்களைக் கொடுத்ததும், சமாதான நீதிபதிகளின் கோடுகளை நீக்கிவிட்டதுமாகும். இதைத்தொடர்ந்து 1809 இல் கொழும்புத் துறைமுகத்துக்கெனக் குடியியல், குற்ற விசாரணை அதிகாரங்களையுடைய ஒருநீதிமன்றைத்தாபித்தார் பின் அவ்வசையான மன்றுகளின் தொகையைப்படிப்படியாகஅதிகரித்தார் அம்மன்றுகளின் நீதிபதிகளுக்குக் குற்றவாளிகளைக்கைதுசெய்தல் பாதுகாவலில் வைத்தல். தண்டனைவிதித்தல் முதலிய விடயங்களில் அறிவுறுத்தல் செய்தார்.

மெயிற்லந்து கொழும்பு,புத்தளம், சிலாபம் காலி, யாழ்ப்பாணம் மட்டக்களப்புதிருகோணமலை என்னும் ஐந்து இடங்களில் மாகாணநீதிமன்றுகளைத்தாபித்தார். இவற்றின் நீதிபதிகள் இறைவரி முகவர்களாயிருக்காமல் வேறுனவர்களாக நியமிக்கப்பட்டனர்.

மேலும்1809 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின்படி யாழ்ப்பாணத்தில் ஒரு சிறுமேன்முறையீட்டுமன்றத்தைத்தாபித்தார். அவ்வகைமன்று 1810 இல் கொழும்பு, சிலாபம் பகுதிக்கும் நிறுவப்பட்டது.இக்கோடுகளுக்கு இறைவரிபற்றிய வழக்குகளை விசாரிக்க அதிகாரமிருக்கவில்லை.

மேலும் அலெக்சாந்தர்ஜோன்சன் என்பவரின் நீதிபாலனம் சம்பந்தமான ஆலோசனைகளை ஏற்று அவரை இங்கிலாந்துக்கு அனுப்பி அங்குள்ள அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றார். இவ்வாறு இங்கிலாந்துசென்ற அலெக்சாந்தர்ஜோன்சன் 1810 ஆம் ஆண்டுப்பட்டயத்துடனும் பிரதமநீதியரசர் பதவியுடனும் நாடுதிரும்பினர். அப்பட்டயம் அடுத்தஆண்டு செயல்படுத்தப்பட்டது.அதன் பிரகாரம் உயர்நீதிமன்றுஇரண்டு பிரிவுகளாக இயங்கவேண்டியிருந்தது. ஆயினும் தீர்க்கப்படாத வழக்குகளை விசாரிப்பதற்காக அது தொடர்ந்தும் ஒரு பிரிவாகவே இயங்கியது 1810 ஆம்ஆண்டுப்பட்டயத்தின்படி மாகாண நீதிமன்றுகள்ஒழிக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக யாழ்ப்பாணம், காலி கொழும்பு,மாத்தறை ஆகிய இடங்களில் லான்ட்ரூட்ஸ் நீதிமன்றுகள் நிறுவப்பட்டன. இம்மன்றுகளின் தலைவராகக் கலெக்டர் கடமையாற்றினர். மேலும் யூரிமார்(நடுவர்)மூலம் விசா

மாகாண நிர்வாகம், இறைவரி ஆணையாளரின் கீழிருந்தகலக்டரின்பொறுப்பில்விடப்பட்டது. கலக்டர்களின்தொகை 11 ஆக அதிகரிக்கப்பட்டது. இவர்கள் தமதுமாகாணத்திலிருந்து இறைவரியைச் சேகரித்ததோடு சிறுகுடியியல் குற்ற வழக்குகளை விசாரித்து நீதிவழங்கவும் பணிக்கப்பட்டனர் மேலும் தமது மாகாணங்களில்ஒழுங்காகமூன்றுமாதத்துக்கு ஒரு தடவை சுற்றுலாச் செல்லவேண்டுமெனவும் குடித்தொகைபற்றிஅறியவேண்டுமெனவும். உற்பத்திப்பொருட்கள் தொழில் முதலியவற்றைப் பற்றித் தலைமைக்காரரின் அறிக்கைபப் பெறவேண்டுமெனவும் தனது சுற்றுலாவைப்பற்றிஅறிக்கைசமர்ப்பிக்கவேண்டுமெனவும் விதிக்கப்பட்டது.

மெயிற்லந்து நோத் ஆள்பதியால் நிறுவப்பட்டகானிப் பதிவுத் திணைக்களத்தையும். தர்மதாபனக் குழுவையும் 1805ல் ஒழித்தார். தர்மதாபனக்குழுவின் பணி 'பொயிட் என்பவரிடம் விடப்பட்டது. பின்னர் 1806 இல் இறைவரி வர்த்தகக் குழுவை ஒழித்துவிட்டு அதற்குப்பதிலாக ஒரு ஆணையாளரைநியமித்தார். மேலும் அஞ்சல் சேவையைப் புனரமைத்ததோடு உப்புக்கெனத் தனியான ஒரு திணைக்களத்தையும் அவர் நிறுவினர்.

மெயிற்லந்து முதலியார்களின் செல்வாக்கைக் குறைப்பதற்காகஅவர்களிடையே 'குடும்பப்பொறுமை' ஏற்படத்தக்கவாறு நடக்கும்படி தனது கலக்டர்களுக்குப்பணித்தார் இவ்வகையாகப் பிரித்தாளும் கொள்கையைப் புத்த பிக்குகளுக்கிடையிலும் இந்துக்களிடையிலும் அவர் கையாண்டதாகத் தெரியவருகிறது அன்றியும் முதலியார்களின் நீதிபாலனக் கடமைகளை நீதிபதிகளிடம்அளித்தும், தோம்புகளைவைத்திருக்கும்பொறுப்பை ஆசிரியர்களிடம்கொடுத்தும் முதலியார்களின் செல்வாக்கை முறியடித்தார். மெயிற்லந்து பின்பற்றியசிலவழிகள் தவறுஎனவையாகத் தோன்றினும் அவரது ஆட்சிமுழுவெற்றிஎன்றே கூறவேண்டும். அவர் கரையோர மாகாணங்களின் நிருவாகஅமைப்பைப் புனரமைத்துப்பூர்த்திசெய்ததோடு அதை ஒரு நிலையான அடிப்படையில்அமைத்தார். அவரால் நிறுவப்பட்ட அமைப்பும், விதிக்கப்பட்டகட்டளைகளும் அவருக்குப் பின்னர் 20 ஆண்டுகள் வரை நிலைத்தன. உண்மையில் நிர்வாக அமைப்பைப்பொறுத்தமட்டில் அவருக்குப் பின்வந்தோர் எதையும்செய்யவேண்டிய தேவை

பிருக்கவில்லையென்பதே மெயிற்லந்தின் ஆட்சியின் மென்மைக்குத் தக்க சான்றாகும். இவ்வாறு நாட்டுக்கு நற்பணிபுரிந்த மெயிற்லந்து உடல் நலக்குறைவினால் 1811 ஆம் ஆண்டு யூன் மாதம் பதவியிலிருந்து விலகித் தாயகம் சென்றார்.

வினாக்கள்

1. கரையோர மாகாணங்களில் பிரித்தானியரின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கு மெயிற்லந்து என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார்?
2. இராசகாரியமுறையை அவர் மீண்டும் செயல்படுத்தக் காரணங்கள் யாவை?
3. மெயிற்லந்து குடியியற் சேவையைத் திருத்தியமைத்தார் என்பதை விளக்குக.
4. மெயிற்லந்து தோதை விடச் சிறந்தவராவர். ஆராய்க.

அத்தியாயம் 5

கண்டிகைப்பற்றப்படலும்

1817-18 கலகமும்

மெயிற்லந்து பதவியிலிருந்து விலகிய பின்னர் ரெபேட் பிறவுன்றிக் ஆள்பதியாக நியமனம் பெற்றார். இவரின் ஆட்சிக் காலத்தில் கண்டி இராச்சியம் பிரித்தானியர் வசமாயிற்று. கண்டி இராச்சிய விடயத்தைப் பொறுத்தவரை கண்டி மன்னனின் பகையை வலிந்து தேடக் கூடாதெனவும், தற்பாதுகாப்புக்காகவன்றி வேறு காரணத்துக்காகக் கண்டி இராச்சியத்துக் கெதிராகப் படைகளைப் பயன்படுத்தக் கூடாதெனவும் பிறவுன்றிக் குடியேற்ற நாட்டுச் செயலாளரால் அறிவுறுத்தப்பட்டிருந்தார். ஆயினும் பிறவுன்றிக் அதைப்பொருட்படுத்தவில்லை தமது ஆட்சிக் காலத்திலேயே கண்டியைக் கைப்பற்றவும் அதன் மூலம் நாடு முழுவதையும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரவும் அவர் வேணவாக் கொண்டார் ஆனால் இந் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவர் தன்னிச்சையாகச் செயற்பட்டார் எனக்கூறமுடியாது. தனதுகுறிக்கோளை நிறைவேற்றுவதற்குக் கிடைத்தவாய்ப்பைத் தக்க முறையில் பயன்படுத்தினார் என்பது பொருத்தமானது. பிறவுன்றிக்கின் ஆசைகள்பூர்த்தியடைய உதவிய நிலைமைகளை ஆராய நாம் இனி கண்டிய அரங்கத்திற்குச் செல்வோம்.

பிலிமத்தலாவையின் வீழ்ச்சி :-

1803 ஆம் ஆண்டில் நிகழ்ந்த முதலாவது கண்டிப்போரைத் தொடர்ந்து பிலிமத்தலாவை மன்னனின் நம்பிக்கையை இழந்திருந்தான். இதன் பின்னர் இரண்டு ஆண்டுகள்வரை அவன் தனது நிசாவையிலேயே தங்கியிருந்தான். இதுஇவ்வாறுக ஏழுகோறளைகளின் இரண்டாம் அதிகார் மீகாஸ்தன்னை 1808 இல் இறந்தவுடன் அப்பதவி பிலிமத்தலாவையின் மருமகனாகிய எகெலப் பொலக்கும் நிசாவை.எகெலப்பொல மொலிகொடை என்னும் இருவருக்கும் கூட்டாகவும் கொடுக்கப்பட்டது. நிசாவை இருவரின் பொறுப்பில்விடப்பட்டதனால் இருவருக்கும்வரியிறுக்கவேண்

டும் என்ற நிலையேற்பட்டபோது ஏழுகோடி மக்கள் கிளர்ச்சி செய்தனர். அப்பொழுது பிலிமத்தலாவை ஏழு கோடிகளைத் தனக்கும் தன் மருமகன் றத்வத்தைக்கும் கொடுத்தால் தான்கல கத்தை அடக்குவதாகக் கூறவே மன்னனும் அதற்கு உடன்பட்டு அவ்வாறே செய்தான். கலகமும் அடக்கப்பட்டது. ஆனால் இந் நிகழ்ச்சிகளைச் சாட்டாகக்கொண்டபிலிமத்தலாவைதன் ஆலோ சனைகளை மன்னன் மதிப்பதில்லையென்ற பொருளில்ஒரு போது அவனிடம் முறையிட்டசமயம் பிரதானிகள் தன் கட்டளைகளை ஏற்பதேமுறை என மன்னன் கடிந்தான். இதன் பின்னர்1821 இல் பிலிமத்தலாவை கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனின் மகளுகிய மாப் பிட்டிய பண்டாரனின் மகளுக்குத் தனது மகனை மணமுடிக்க முனைந்தபோது கண்டியஅரசைக்கைப்பற்றுவதற்குப்பிலிமத்தலா வைவகுத்த ஒரு வழியே அது வென ஐயுற்ற மன்னன் அவனை அரண்மனைக்கு அழைப்பித்து ஏனையபிரதானிகளின் முன்னிலையில் பல குற்றங்களைச் சுமத்தியதோடு சிலகாலத்தின்பின்னர் அவனைப் பதவியினின்றும்நீக்கிவிட்டான். இவ்வாறுமன்னன் தனக்குஇழை த்த அவமானத்தை எண்ணி எண்ணி மனம் புழுங்கிய பிலிமத்த லாலை மலாய் முகாந்திரம்மூலம்அவனைக்கொல்வதற்கு ஒரு திட் டம் வகுத்தான் ஆனால், துரதிட்டவசமாக. அவன் திட்டமிட் டபடி மன்னன் கொல்லப்படுவதற்கு முன்னரே யட்டிநுவரப் பகுதித் தலைமைக்காரர்கள் கலகம் விளைவித்தபடியால் சதி அம் பலமாகியது உடன்பிலிமத்தலாவையும், றத்வத்தையும்வேறு அறு வரும்கைப்பற்றப்பட்டுக் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டனர்.

எகெலப்பொலையும் அவனது சூழ்ச்சிகளும் :-

பிலிமத்தலாவை கொல்லப்பட்டபின்னர் 1808இல் பிரதா னிகளின் பொர்சின் பேரில் அவனது பதவிக்கு எகெலப்பொலை நியமிக்கப்பட்டான். அதே சமயம் எகெலப்பொலை முன்னர் வகித்தபதவிக்கு உனம்புவ என்பவன்நியமனம் பெற்றான்.பின்னர் 1813இல் உனம்புவஇறந்தபோது மன்னன் அப்பதவிக்கு எகெலப் பொலையின் பரமவைரியாகிய மொலிகொடையை நியமித்தான்.

இஃதிவ்வாறுக, மன்னன் பிலிமத்தலாவையின் சதிஅம்பல மாகிய காலம் முதல் பிரதானிகளிற் சந்தேகம் மிக்கவனுகவும் அமைதியற்றவனுகவும்வாழ்ந்து வந்தான். பலமும் செல்வாக்கும் மிக்க பிரதானிகளின் மேல் அவன் கொண்ட ஐயுறவு நாளிலும் பொழுதிலும் அதிகரித்தபடியேயிருந்தது.இதனுல் அவன் அவர்

களின் பலத்தைக்குறைப்பதற்குப் பல வழிகளைக் கையாண்டான் நிசாவைகளைப்பிரித்தல், தாழ்ந்த குலத்தவர்களுக்குப்பதவியளித்தல் பிரதானிகளின்பொறுப்புக்களை அடிக்கடிமாற்றுதல் குற்றச் சாட்டுகளின்பேரில்அவர்களைத் தண்டித்தல், மாரளா என்னும் இறப்புவரியைஅதிகரித்தல், அவர்கள் பதவியேற்கும் காலத்தில் மன்னனுக்குச்செலுத்தும் காணிக்கைகளின் அளவை அதிகரித் தல் முதலியன அவன் பின்பற்றிய சில வழிகளாம்.

மேலும்இக்காலத்தில் மன்னன் தனதுசொந்தப் பாதுகாப்பை முன்னிட்டுப் படுக்கையறைகளையும் காவற்காரரையும் மாற்றும் வழக்கத்தையும்மேற்கொண்டதோடு மது அருந்தவும் தொடங்கி யிருந்தான். அத்துடன் தான் ஐயுறவு கொள்வோரைத் தண்டித் தும் கொல்வித்தும் பிரதானிகளை அச்சுறுத்தி ஒரு விதபயங்கர ஆட்சியை அமைத்தான். அன்றியும் அரசு பற்றிய எல்லா விட யங்களிலும்தனது உறவினர்களாகிய நாயக்கர்களின் ஆலோச னைகளின்படியே கருமமாற்றிவந்தான்.இதுவும்பிரதானிகளை மன் னன் மேற் கொண்டிருந்த வெறுப்பைமேலும்அதிகரித்தது. இக் காலத்திருன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனின் மகனாகிய மாம்பிட்டிய பண்டார என்பவனை அரசத் துரோகக்குற்றச் சாட்டின் பேரில் மன்னன் கொல்வித்தான்.

இவ்வாறு மன்னன் தமக்கெதிராக மேற்கொண்ட நடவடிக் கைகளினால் அவன் மீது நிராப் பகைமை பூண்டிருந்த பிரதானி களின் தலைவனாகஎகெலப்பொலை அமைந்தான். அவன் பிலிமத் தலாவையைப்போல்ஒரு திறமைசாலியாயிருக்காவிடினும் சூழ்ச் சிகளில் அவனுக்குக் சளைத்தவனன்று. எகெலப்பொலை பிலிமத்த லாவையின் சதியிற் பங்குகொண்டிருந்தான் என மன்னன் 1811 ஆம் ஆண்டுமுதல் சந்தேகித்துவந்தான். இதனால்எகெலப்பொலை தனது மாமன் சென்ற வழியையே தானும் பின்பற்றி 1812 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியருடன் மறைமுகமாகத் தொடர்பு கொண்டுவந்தான் அவன் தொடர்பு கொண்டது டிஓயிலி என்னும் அதிகாரியுடனாகும் டிஓயிலி, பிரதான மொழி பெயர்ப் பாளனாகவும், கண்டிய விவகாரங்களைக் கவனிப்பவனாகவும் மெயிற்லந்து காலத்தில் நியமிக்கப்பட்டிருந்தான், இவ்வாறு எகெலப்பொலை பிரித்தானியருடன் தொடர்பு கொண்டதை மன்னன் அறிந்தபோது அவனதுமனக்கசப்புமேலும்அதிகரித்தது

இஃதிவ்வாறிருக்கும்போது இன்னொரு சந்தர்ப்பம் அவர்களை மேலும் பிரித்துவைத்தது. மன்னன் தனது இரு மனைவியர்க்கும் மகப்பேறுஇன்மையால் 1815ஆம் ஆண்டு பெப்ருவரியில் வேறு ஒரு மகளிரைமணம்முடித்தான். இம்மணவிழாவின் போது எகெலப்பொலை, மொலிகொடஉட்பட்ப பலர் பரிசில்கள் வழங்கினர். அவ்வமயம் மன்னன் எகெலப்பொலையின் பரிசு பெறுமதியற்றது என இகழ்ந்தமையால் அவன் மனமுடைந்து தனதுதிசாலைக்குத் திரும்பினன். அங்கிருக்கும் காலத்தில்மக்களுக்குத் தொல்லைகொடுத்தான் என்ற குற்றத்தின் பேரில் அரசவைக்குவருமாறு அவனுக்குமன்னன் ஆணையிட்டான் ஆனால் எகெலப்பொலை அங்கு செல்ல அஞ்சி அன்றேடு மன்னனுடன் தொடர்புகளைக்கைகழுவிவிட்டு மாற்றாராகிய பிரித்தானியருடன் தொடர்பு கொண்டான்.

1814இல் டிஓயிலிக்கு எழுதியகடிதத்தில் கண்டியைக் கைப்பற்றுமாறு அவன் கேட்டிருந்தான் ஆனால் அது தக்கதருணமன்று எனக்கூறி ஆங்கிலர்எளாவிருந்தனர். எனினும் எகெலப்பொலை ஒருகலகத்தை உருவாக்கினால் பிரித்தானியரின் உதவிகிடைக்கலாம் என்ற பாணியிலேயேடி ஓயிலியின் கடிதம் அமைந்திருந்தது எனவேஇவ்விதமாகநம்பிக்கையூட்டப்பட்ட எகெலப்பொலை சப்பிரகமுவாவிலும் ஏனைய கோறளைகளிலும்மன்னனுக்கெதிராகக் கலகங்களைத் தூண்டி விட்டான்.

எகெலப்பொலையின் செயல்கள் மன்னனின்கோபத்திற்குத் தூபமிட்டன. அவன்உடன் தென்மேல் எல்லையை மூடிவிட்டுக் குழப்பம் நடந்த கோறளைகளைச் சேர்ந்தவர்களைக்கண்டியைவிட்டு வெளியேற்றினன். அடுத்து எகெலப்பொலையைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவனது இடத்திற்கு மொலிகொடையைநியமித்தான். அவன் மனைவியையும்மக்கள் நால்வரையும் தடுப்புக் காவலில்வைத்தான். இதன் மேல் கலகத்தையடக்கி எகெலப்பொலையைக் கைப்பற்றிவருமாறு மொலிகொடை அனுப்பப்பட்டான். மொலிகொடை1000 வீரருடன் சென்று கலகத்தை அடக்கினன். ஆனால் எகெலப்பொலை தப்பியோடிப் பிரித்தானியரிடம் தஞ்சம் புகுந்தான்.

எகெலப்பொலைஅகப்படாதமையினால் ஆத்திரமடைந்த மன்னன் அவன் மைத்துனனையும் புஸ்வல்லையையும் கொன்ற தோடு நில்லாது அவன் மக்கள் நால்வரையும், மகாதேவாலயத்துச்சும் நாத தேவாலயத்துக்குமிடையில் தன் முன்னிலையில்சிரச் சேதம்

செய்வித்தான். இக்காலத்தில் மன்னன்மேற்கொண்ட கொடுஞ் செயல்களால் கண்டி முழுவதுமே கலக்கமடைந்தது எனலாம்பிர தானிகள் பொதுமக்களைமட்டுமன்றித்தான் சந்தேகித்த பிக்கு களையும் மன்னன் சிறையிலிட்டான். பக்தியிற் சிறந்த பரணத் தலா என்னும்பிக்குவைச்கொல்வித்தான். மன்னனின் கொடூரச் செயல்களினால் பீதியுற்று 500 குடும்பங்கள் வரை கண்டியை விட் டுப் புலம்பெயர்ந்து கரையோரப் பிரதேசங்களிற் குடியேறின.

கண்டியின் நிலை இவ்வாறிருந்தவேளை பிறவுண்றிக் அ தன் மேற்படையெடுத்ததற்கு ஏற்றகாலத்தையும்நேரத்தையும்எதிர் நோக்கியபடி அதற்குவேண்டியஏற்பாடுகளைக்கவனமாகச்செய்து வந்தார். இச்சந்தர்ப்பத்தில் படைபெடுப்பை மேற்கொள்ள டிஓயினி விரும்பினுனெனினும் பிறவுண்றிக் இன்னும் சிறிது கா லம்பொறுத்திருக்குவே விரும்பினர் பிறவுண்றிக் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம் தற்செயலாக ஏற்பட்டது. இச்சம்ப வம் 'பாக்குப் பறிமுதல்' சம்பவத்துக்கு இணையானது இது எகெலப்பொலையின் சூழ்ச்சிஎன்பதே அறியாதபிறவுண்றிக்அவன் ஏற்றியபொறியில் வீழ்ந்தார் கொழும்புக்கு அண்மையிலுள்ள மகரைஎன்னுமிடத்திலிருந்து வியாபாரத்திற்காகக் கண்டிக்குச் சென்ற பதின்மர் பிரித்தானியரின் உளவாளிகள் எனச்சந்தேகிக் கப்பட்டமையால்அங்கு அவர்களின் கரங்களையும். செவிகளையும துண்டித்துக கட்டித்தொங்க விட்டுத் துரத்திவிட்டனர். இவர்க ளில்எழுவர் இடை வழியில் இறந்து போக, ஏனையோர் கொழும் புக்குச் சென்று ஆள்பதியிடம்முறையிட்டனர் ஆள்பதி இச்செ யலை அநியாயமான, மிலேச்சத்தனமான. கொடுஞ்செயல்என வர்ணித்துக்கண்டிப் படையெடுப்புக்குமேலும் ஆயத்தங்களைச் செய்தார், அவ்வேளையில் ஒரு நாள் சில கண்டியப் படைவீரர் குழப்பக்காரர் சிலரைக் கைப்பற்ற வந்த சமயம் பிரித்தானிய ரின் பாலனத்துக்குட்பட்ட பகுதியில் சில குடிசைகளுக்குத் தற் செயலாகத் தீவைத்து விட்டனர்.

இச் செயல் போர் தொடுப்பதற்குப் போதிய 'சாட்டாக' இருந்தமையால் பிறவுண்றிக் இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாது 1815 ஆம்ஆண்டு ஜனவரி 15இல் கண்டி மீதுபோர் தொடுத் தார், இதையடுத்து மக்களுக்கென ஒரு பிரகடனம் விடுக்கப் பட்டது. அது கண்டிப்படையெடுப்பின் காரணங்களை விளக்கி யதோடு, மக்களின் பாரம்பரியங்களும், பிரதானிகளின் உரி மைகளும் பேணப்படு மென்றும் பொதுமக்க ளுக்குப் போதிய பாதுகாப்பளிக்கப்படு மென்

றும்கூறி அவர்களின் ஒத்துழைப்பையும் கோரியது. இப்பிரகடனத்தைத்தொடர்ந்து பிறவுன்றிக் படைகளை நடாத்திச்சென்று கண்டியை அடைந்தபோது மொலிகொடை அங்கு வந்து தனது 'திசாவை'யையும் பிரித்தானியரிடம் ஒப்படைத்துவிட்டு அவர்கள்பக்கம் சேர்ந்தான், இதன்மேல்பெப்ருவரி 11இல் நாலு கோறளை மூன்று கோறளை சப்பிரகமுவ ஆகியன பிரித்தானியர் வசமாகின. அன்றே கண்டிமன்னன் நகரை விட்டோடிஞன் அடுத்தநாள் கண்டிகைப்பற்றப்பட்டது அதையடுத்துமன்னனைத் தேடும்முயற்சிமேற்கொள்ளப்பட்டது இறுதியில் அம்மாதம் 18 ஆம் திகதி தெல்தேனியாப்பகுதியிலிருந்த உடுப்பிட்டிய ஆராய்ச்சியின் வீட்டில் மன்னன் அவனது மனைவியர்களுடன் கைப்பற்றப்பட்டான் இவ்வாறுகைப்பற்றப்பட்டமன்னனை இலங்கையில் வைத்திருத்தல்பயனற்றதென எண்ணிய பிரித்தானியர் ஒரு கப்பலில் அவனை இந்தியாவுக்குஅனுப்பி வேலூரில் காவலில்வைத்தனர். அங்கு அவன் 1832 இல் இறந்தான்.

இவ்வாறு இரண்டாம் கண்டிப்போர் பிறவுன்றிக்கிற்கு அதிக புகழையும்பெருமையையும் தேடிக்கொடுத்தது. ஒருதுளி இரத்தமும் சிந்தாமல் கண்டியைக் கைப்பற்றியமைக்காகப் பிரித்தானியர் அவரை வாயார வாழ்த்தினர்.

1815 ஆம் ஆண்டு உடன்படிக்கை :-

கண்டியின் வீழ்ச்சி முற்றுப்பெற்ற பின்னர் பிறவுன்றிக் அதன் ஆட்சியை நிலையானஅடிப்படையில் அமைப்பதற்குவேண்டிய கருமங்களை மேற்கொண்டார். அதற்குமுதற்படியாக 1815 ஆம் ஆண்டுமார்ச் மாதம் 5ம் திகதி மன்னனது அத்தாணிமண்டபத்தில் அலங்காரக்காட்சிகளிடையேபிரதானிகள் பிரமுகர்கள் அடங்கிய மன்று ஒன்று கூட்டப்பட்டது. அதில் கண்டியரசு கைப்பற்றப்பட்டமைக்குரிய காரணங்கள் விளக்கப்பட்டன. அதன் பின்னர் பிரித்தானியருக்கும் கண்டிப் பிரதானிகள் தலைமைக்காரர்களுக்கு மிடையில் ஒரு உடன்படிக்கைமேற்கொள்ளப் பட்டது. அவ்வுடன்படிக்கையில் கூறப்பட்டவற்றில் பிரதானமானவை மேல் வருமாறு :-

1. ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் தனது அக்கிரமமான செயல்களின் மூலம் அரச பதவிக்கும் கௌரவத்துக்கும் அதிகாரத்துக்கும் உரிமையையிழந்துவிட்டான். அத்துடன் மலபார்'வமிசத்தினருக்கும் இனி ஆட்சி உரிமை இல்லை.

2. மலபார் வமிசத்தினர் பிரித்தானியரின் அனுமதியின்றி இலங்கைக்கு வருதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

3. கண்டியரசு பிரித்தானிய முடியின் கீழ்க் கொண்டுவரப் பட்டுள்ளது. அதன் ஆட்சிஆள்பதியின்கீழ் பிரதானிகள் தலைமைக்காரர்கள் மூலம் நாட்டின் பண்டைய சட்டங்கள் சம்பிரதாயங்களுக்கிணங்கநடைபெறும்.

4. பௌத்தசமயம் சமயக்குருமார் கோவில்கள் கிரியைகள் ஆகியன பேணப்படும்.

5. குரூரமான (சித்திரவதை) தண்டனைகள் ஒழிக்கப்படும். கடும் தண்டனைக்குரிய குற்றங்கள் பிரித்தானியஅதிகாரிகளினால் மட்டும் விசாரணை செய்யப்படும். ஆள்பதியின் ஆணையின்றி மரண தண்டனை விதிக்கப்படமாட்டாது.

6. கண்டியரல்லாதவரின் நீதிபாலனம், பிரித்தானிய அதிகாரிகளின் பொறுப்பில் இருக்கும். இராஜவத்தினர் இராஜவச் சட்டத்திற்கமைவர்.

7. கண்டி அரசுக்குரிய இறைவரியும், மற்றும் வருமானங்களும் புதிய அரசைச் சேரும். அவை பிரித்தானிய அதிகாரிகளினால் முன்பிருந்த சட்டபூர்வமான வழக்கத்தின்படி தொடர்ந்து வசூலிக்கப்படும்.

8. கண்டிய வர்த்தகம் சம்பந்தமான விடயங்களை ஆள்பதியேகவனித்து வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்.

இவ்வா 1815 ஆம் ஆண்டு உடன்படிக்கை ஆட்சிப்பொறுப்பை மாற்றிய அதே சமயம் குடியியல் ஆட்சி முறையில் புது முறைகளைப் புகுத்தி மக்களின் வெறுப்பை வளர்க்காது அவர்களுக்குப் பழக்கமான. பழைய முறையையே பெருமளவு அனுசரித்து நடக்கத் துணிந்தது குறிப்பிடத்தக்கது.

கண்டியின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் :-

அடுத்து கண்டியின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆராய்தல் பயனுள்ளது. ஒல்லாந்தரினலும்: ஆள்பதி நோதிஞலும்கைப் பற்ற முடியாதிருந்த 'கண்டி, 'பிறவுண்றிக்' படையெடுப்பின் போது வீழ்ச்சியடைந்தமைக்குப் பல காரணங்களைக் கூறலாம்

முதலாவதாக ஒல்லாந்தர் காலத்திலும் ஆள்பதி நோதின் காலத்திலும் கண்டியமன்னன் மக்களின்நம்பிக்கைக்குப் பாத்திர மாயிருந்தான். அக்காலத்தில் எக்காரணத்தை முன்னிட்டும் மக்களின் விசுவாசம்மன்னனை விட்டகலவில்லை இதனால் மன் னன் அன்னியரின் படையெடுப்புக்களைத் தன்படையின் உதவி யுடன் முறியடிக்கக்கூடியதாயிருந்தது. ஆனால்பிறவுன்றிக்கின் கா லத்தில் மன்னன் கொடுங்கோலாட்சியின் சின்னமாக விளங்கினார் பிலிமத்தலாவையின்சதி அம்பலமாகிய நான்முதல் அவன் பிரதா னிகள் மீது சந்தேகங்கொண்டிருந்தமையால் அவர்களின் ஆலோ சனைகளைப்பெறுது தனதுஉறவினர்களின் சொற்படியே நடக்கத் தொடங்கினான். இதனால் பிரதானிகள்மன்னன் மீது மேலும் வெறுப்புற்று சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர். அதையறிந்த மன்னன் தனக்கு விசுவாசமானஒரு குழுவைச் சபைக்கு அண்மையில்வைத் துக்கொண்டு விரோதிகளெனவும் சூழ்ச்சிக்காரரெனவும் தான் சந்தேசித்தோரை விசாரணையின்றித் தண்டித்தும் அவர்களின் உறவினர்களைத் துன்புறுத்தியும் சிறையிலிட்டும் பலவாறுபிரதா னிகளதும் பொதுமக்களதும் வெறுப்பை வளர்த்துக்கொண்டான்

மேலும் பிரதானிகளுக்கு உடந்தையாக மக்கள் சதிகளிலும் சூழ்ச்சிகளிலும் ஈடுபடாதிருப்பதற்காக அவர்களை ஒரு கிராமத் திலிருந்து இன்னொரு கிராமத்துக்குமாற்றியதோடுபலவந்தமாக இராசகாரியத்தில் ஈடுபடச்செய்து கட்டிடங்கள் கட்டுதல்திருத் துதல் முதலிய பலவேலைகளைச் செய்வித்தான் இத்தகைய செயல் கள்மக்களின்வெறுப்பைக் கொழுந்துவிட்டெரியச் செய்தமை யால் அவர்கள் மன்னனின் ஆட்சி மாறும் காலத்தை மிக ஆவ லுடன் எதிர்பார்த்திருந்தனர் எனின் அதுமிகையாகாது. அடுத் ததாக எகெலப்பொலையின் சதியும் அவன் போருக்கு முன்னர் பிரித்தானியருக்குத்தெரிவித்த உபாயங்களும் படையெடுப்பின் போது அளித்த உதவிகள் ஒத்தாசைகளும் பிறவுன்றிக்கின் வெற் றிக்குப்பெருந்துணைசெய்தன. அன்றியும்படைவீரரின்விசுவாசமின் மையும் தமிழ்வீரரின் அரைமனதான ஆதரவும் தோல்விக்குப் பெருமளவு உதவின மேலும் நோதைப்போலன்றி பிறவுன்றிக் நன்கு திட்டமிட்டுப்படையெடுப்பை நடத்தியதோடு அதிகபடை பலத்துடனும்கண்டிக்குச்சென்றார் தனது படைவலியைக்காட்ட அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆயினும்மன்னனின் எவ் வித எதிர்ப்பையும் அப்படைகள் முறியடித்திருக்குமென்பதில் ஐயமில்லை.

அடுத்ததாக, மன்னன், பௌத்த குருமாரிற் பலரைக் சந்தேகத்தின் பேரில் தண்டித்தும், ஒரு குருவைக் கொல்வித்தும், தலதா மாளிகைக்குரிய இரு கிராமங்களைத்தானே எடுத்தும், பல வழிகளில் மகாசங்கத்தினதும், மக்களினதும் மனதைப் புண்படுத்தியிருந்தான். மேலும் அவன் இந்து சமயத்தில் ஈடுபாடுடையவன் என்பதினால், புத்த சமயத்துக்குப் போதிய ஆதரவளிக்கத் தவறினார் எனப் பலர் குற்றஞ்சாட்டினர். எனவே அவனைப் பதவியிலிருந்து நீக்க அனைவரும் விழைந்ததில் வியப்பொன்றில்லை.

இறுதியாகவொன்றைக் குறிப்பிடலாம் அஃதாவது, சிறியதும் மத்தியகால அமைப்பையுடையதும், பிற்போக்கான கருத்துக்களையும் பேதத்தை வளர்க்கும் கொள்கைகளையும் உடையதாய் உட்பிரிவினைகளால் பலவீனப்பட்டிருந்ததுமான ஒரு அரசு வல்லமைபடைத்த தற்கால அரசைஎதிர்த்து நின்றிருக்க முடியாது. பிரித்தானியர் கரையோர மாகாணங்களைக்கைப்பற்றி அங்கு நிலவிய ஆட்சியை விடப்பலம்வாய்ந்த ஒரு ஆட்சியை நிறுவியமை கண்டியின் வீழ்ச்சியைத்தவிர்க்கமுடியாத தொன்றாக்கி விட்டது.

இவ்வாறு, மன்னனின் கொடுங்கோலாட்சி, மக்களினதும் படைகளினதும், விசுவாசமின்மை, பிரதானிகளின் சூழ்ச்சிகள் பிக்குகளின் எதிர்ப்பு முதலிய பல காரணிகள் ஒன்று சேர்ந்து கண்டியின் வீழ்ச்சியைப் பூர்த்தி செய்தன.

கண்டிக் கலகம் (1817-18)

கண்டியைக் கைப்பற்றியபின்னர் பிறவுண்றிக் 1815ம்ஆண்டு உடன்படிக்கையில் தெரிவித்தபடி நிருவாகத்தை நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டார். இவ்வொழுங்குகள் பழைய முறைகளைத் தழுவியனவாகவும்; பிரதானிகளின் உரிமைகள் அதிகாரங்களைப்பேணுவதாகவும் இருந்த போதிலும் நாளடைவில் ஆள்வோரும் ஆளப்பட்டோரும் இரு முனைகளாகினர் அவர்களை இறுகப் பிணைப்பதற்குப்பொது வான எதுவுமிருக்கவில்லை இனத்தால், மதத்தால், மொழியால், பண்பாட்டால் வேறுபட்டிருந்த அவ்விரு பகுதியினரையும் அதிகாரம் மட்டுமே வலிந்துஇணைத்தது. அந்நிலையில் புதிய ஆட்சி ஒழுங்குகள் எவ்வித நன்மையையும் அளிக்காததை உணர்ந்து அதிருப்தியுற்ற மக்கள் பழைய ஆட்சி முறையை எண்ணி எண்ணி ஏக்க முறுவாராயினர்.

விக்கிரமராசசிங்கனின் அக்கிரம ஆட்சியை நீக்குவதற்காகப் பிரித்தானியரின் துணையைவேண்டி நின்ற கண்டியர் அவனுக்குப் பதிலாக அவர்களை அரியணையிலேற்ற ஆசைப்படவில்லை. அன்றியும் அவ்வாறு ஆட்சிமாறினும் அதனால் தமது 'அந்தஸ்து' பாதிக்கப்படும் என அவர்கள் கற்பனை செய்திருக்கவில்லை இந்நிலையில் ஒரு கண்டிவாசி குறிப்பிட்டவை அவர்களின் மனநிலையைப்படம் பிடித்துக்காட்டுகின்றது, 'நீங்கள் இப்பொழுது அரசனைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டீர்கள். இனி நாம் வேண்டுவதொன்றுமில்லை; நீங்கள் எங்களை விட்டு ஏகலாம் என்பதே அதுவாம். மார்சல் என்பார் கூறியதுபோல் 'ஒரு அரசு நீதியைச் செய்தால் மட்டும் போதாது அது மக்களுக்கு ஏற்புடைத்தாகவுமிருக்க வேண்டும். ஆனால் ஆட்சிமாறியஒரு சில மாதங்களுக்குள்ளேயே கண்டியில் அதிருப்தி ஏற்பட்டு விட்டது

மன்னனின் ஆட்சியில் மக்கள் நாமுண்டு நம் நிலமுண்டு என்றவகையில் பிரதானிகள் கட்டுப்பாட்டில் ஓரளவு சுதந்திரத்துடன் வாழ்ந்தனர். சாதிப்பிரிவினைசமூக வாழ்க்கையுடன்பின்னிப் பிணைந்திருந்தது. சாதிக்கேற்பவே தண்டனைகளும் விதிக்கப்பட்டன. ஆனால் பிரித்தானியர் ஆட்சியில் 'சாதிக்கு ஒரு நீதி என்பது நீங்கி'ச் சட்டத்தின்முன் அனைவரும் சமம்என்ற கொள்கை நிலைநாட்டப்பட்டது சமூகத்தில் ஒருவரின் நிலையைக் கருத்திற்கொள்ளாது குற்றத்திற் கேற்ற தண்டனை விதிக்கும் புதிய நீதி பாலன முறையை மக்கள் விரும்பவில்லை.

மேலும்மூன்று நூற்றாண்டு காலமாகக் கரையோரப் பிரதேசத்திலிருந்து ஆட்சி செய்த அன்னிய அரசுகளை விரோதிகள் எனக் கருதிப் பழகியவர்கள் இப்பொழுது ஒரு அன்னியஅரசின் ஆட்சியில் அடங்கி, ஒடுங்கி வாழ்வதை அடியோடு வெறுத்தனர். அன்றியும் பழைய ஆட்சியில் மன்னன்' என்பது பொருளுள்ள ஒரு பதமாக இருந்தது. ஏனெனில் மக்கள் அவனைத் தரிசிக்கவும் தமது குறைகளை முறையிடவும் அப்பொழுது முடிந்தது ஆனால் இப்போதுபல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் ஒருவனே தம் மன்னன் என்றபோது அது மக்களுக்குப் புரியாத தொன்றுயிருந்தது. இதனால் முன்னர் மக்கள் அரசனிடம் கொண்டிருந்த விசுவாசத்தை இப்பொழுது காட்டுவதற்கு முடியாமலிருந்தது. எனவே அநாமதேயமான ஒரு அரசனின் ஆட்சியை அவர்கள்அறவே வெறுத்து அதை அகற்ற முனைந்ததில் ஆச்சரியமில்லை.

கண்டியப் பிரதானிகளும் புதிய ஆட்சி முறையினால் மனம் புழுங்கினர். பிரதானிகளின் அதிகாரம் பேணப்படுமெனஉடன் படிக்கை உறுதியளித்திருந்த போதிலும் அது வெறு 'ஏட்டுச்சு ரைக்காய் என்பதை அவர்கள் வெகுவிரைவில் உணர்ந்து கொண்டனர். மன்னனின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் அரசனது ஆணைக்குமட்டுமே அடங்கி வாழ்ந்தனர். அரசனுக்கு அடுத்து அதிக அதிகார முடையவர்கள் அவர்களே. ஆனால் இப்போதோ பிரித்தானிய அதிகாரிகளின் ஆணையை அவர்கள் நிறைவேற்ற வேண்டியிருந்தது. இவ்வாறு அதிகாரம் குறைந்ததால் செல்வாக் கையும் இழந்தனர். அன்றியும் சாதாரணபடைவீரர் கூடத் தம்மை ஒரு பொருட்டாக மதிக்காமலும், மரியாதை செய்யாம லும் சென்றதும், சமூகத்தில் ஒருவனின் நிலைக்கேற்ப நீதி வழங் கப்படாததும் அவர்களுக்குச் சலிப்பை ஏற்படுத்தின. சுருங்கக் கூறின் தம் 'அந்தஸ்து புதிய ஒழுங்குகளால் அதிகமாகப் பா திக்கப்பட்டதை அவர்கள் உணர்ந்தனர்.

புதிய ஆட்சியில் பிரதானிகளின் நீதிபாலன அதிகாரங்கள் குடியியற் சேவையாளரிடம் விடப்பட்டதும் இறைவரி பற்றிய விடயங்களைக் குடியியற் சேவையாளர் கவனித்ததும் மக்களிடை யே அவர்களின் செல்வாக்கை மேலும் குறைத்தன இறுதியாக கண்டிப்பிரதேசமும் கரையோரமாகாணங்களும் ஒரே ஆட்சியின் கீழ் வந்ததைத் தொடர்ந்து வர்த்தகம் தங்குதடையின்றி விருத் தியடைந்தமையால் பிரதானிகள் முன்புபோல் எல்லைப் புறக் கடவைகளில் பொருட்களுக்கு வரிவிதித்துத் தம் வருவாயை அதிகரிக்க முடியவில்லை.

அடுத்து, புத்தகுருமாரும்புதிய ஆட்சியை அறவே வெறுத் தனர். தம் மத்தியில் வேற்று மதத்தினர் இருந்து ஆட்சி செய் வது புத்த சமயத்துக்குஆபத்தானது என அவர்கள் கருதினர். மேலும் புத்தகுருமாரிற் பலர் பிரதானிகளின் உறவினர்களாயு மிருந்தபடியால் அவர்களின் அதிருப்தி மிக அதிகமாயிருந்தது. அன்றியும், கண்டி அரசர்கள் புத்தசமய விழாக்களிலும் விசேட நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டதோடு குருமாருக்குத்தக்க மரியாதை செய்தும் வந்தனர் ஆனால் இப்பொழுதோ புத்த குருமாரே பிரித்தானிய அதிகாரிகளை மதிக்க வேண்டியிருந்தது. அத்துடன் பிரித்தானியர் புத்தமதவிடயங்களில் எவ்விதகரிசனை யுமின்றி இருந்தனர் இக்காரணங்களினால் ஒரு புத்த அரசன் அவசியம் என்பதை அவர்கள் உணர்வராயினர்.

இறுதியாக, கண்டிமக்களிடம்ஒரு குருட்டு நம்பிக்கையும் இருந்து வந்தது. அஃதாவது பிரித்தானியரால் கண்டியில் வாழ முடியாது என அவர்கள்நம்பினர். ஒரு கண்டியன் குறிப்பிட்டது. என்னவெனில் பிரித்தானியர் கண்டியைஆள்வது ஒரு எருதையும் எருமையையும் ஒரேவண்டியிற்பூட்டுவதைப்போன்றது.என்பதாகும். மேலும் ஆட்சிமாற்றத்தினுல் உடனடியாகஏதாவது நன்மை ஏட்பட்டிருப்பின் சிலவேளை அவர்கள்சிறிது அமைதியடைந்திருக்கலாம். ஆயின் அத்தகைய நன்மைஎதுவும் ஏற்படவில்லை இவ்வாறு, பிக்குகள்,பிரதானிகள்,பொதுமக்கள் ஆகியோர் பிரித்தானியரின் ஆட்சியின்மேல் கொண்டிருந்த அதிருப்தி அது வெளிப்படுதற்கு ஏற்ற தருணம்வரை அகச்சுழலாகஅடங்கியிருந்தது அதுவெளிப்படுதற்கு உதவிய நிலைமைகளை அறிய இனி வெல்லசரங்கிற்குப் போவோம்.

வெல்லஸ்ஸஎனப்படும் பிரிவில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமது வர்த்தக நலன்களுக்குத் தீங்கிழைத்த சிங்களத்திசாவையின்ஆட்சியை விரும்பாமல் தமக்கென ஒரு முஸ்லிம்முகாந்திரத்தை நியமிக்கும்படிஆள்பதியை வேண்டிக்கேட்டனர் அவ் வேண்டுகோளுக்கிணங்கிய ஆள்பதி ஹாஜிமரைக்கார் என்பவரை முகாந்திரமாக நியமித்தார் இதனுல் தனது அதிகாரம் அந்தஸ்து வருவாய் என்பனகுறைந்ததைக்கண்ட சிங்களத்திசாவை பிரித்தானியர் தனக்கு அநீதியிழைத்து விட்டனர் எனக்கருதிப் பழிக்குப்பழி வாங்கச் சந்தர்ப்பம் பார்த்திருந்தான். அவ்வேளையில் விக்கிரமராசசிங்கனின் உறவினனும் இராசாதிராசசிங்கனின் மைத்துனனுமாகிய துரைசாமி கண்டியரசுக்கு உரிமைகோரி வெல்லசப் பகுதிக்கு வந்திருப்பதாக ஒருவதந்திபரவியது' அதைக்கேள்விப் பட்டசிங்களத்திசாவைஅதுவேதக்கதருணமென எண்ணி ஆங்கிலேயருக்கெதிரான குழப்பங்களைத்தூண்டிவிட்டான்.

இவற்றை அறிந்த வதுளைப்பகுதி அதிகாரியான வில்சன் அப்போலியுரிமைக்காரனைக் கைது செய்யுமாறு ஹட்ஜிமரைக்காரை அனுப்பினன். ஆனுல் மரைக்காரைக்கண்ட சிங்களவர் செங்கொடியைக் கடை எருதைப்போல் சீறியெழுந்து அவனைப் பிடித்துக்கட்டிவைத்தனர்.அச்செய்தியையறிந்த வில்சன் அவனை மீட்கச்சென்றபோது காட்டில் கரந்திருந்தவர்கள் எய்த கணையினுல் தானே இறந்துபட்டான்.

இந்நிலையில் எகெலப்பொலியின் தகவுரைபின் போரில்ஹவாலின் திசாவையாகிய கெப்பிற்றிபொலை என்பவனைக் கலகங்களை அடக்குமாறு வெல்லசைக்கு அனுப்பினர். ஆனால் அவன் இங்கு சென்றபின் மனம்மாறித் தானும் கலகக்காரருடன் சேர்ந்து அவர்களின் தலைவனுமானான். கெப்பிற்றிப்பொலை பக்கம் மாறியதைத் தொடர்ந்து கலகத்தில் ஒரு திருப்பம் ஏற்படவே அது காட்டுத்தீ போல் நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவியது. அப்போது பிரித்தானியரிடம் போதிய படைப்பலம் இருக்காதபடியால் கலகத்தை அடக்குதல் மிகக் கடினமாயிற்று. ஒருநிலையில் கண்டியை விட்டு வெளியேறவும் அவர்கள் எண்ணினரென்ன அதிலிருந்து கலகத்தின் தன்மையை உய்த்துணரலாம்.

ஆயினும் இந்தியாவிலிருந்து படைகள் வந்தவுடன் நிலைமை சீரடைந்தது. இராணுவச் சட்டத்தின் கீழ் படைகள் பல அட்டூழியங்களைச் செய்து மக்களைப் பணியவைக்க முயன்றன. வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன; பயிர்கள் அழிக்கப்பட்டன. பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். கெப்பிற்றிப்பொலையின் சொத்துக்கள் பறிமுதலாக்கப்பட்டன. அவனது மனைவியும், மக்களும் காவலில் வைக்கப்பட்டனர். அவன் தலையைக் கொய்து வருவோருக்கு 2000 றிக்ஸ் டொலர் பரிசளிப்பதாகப் பிரசித்தப்படுத்தப்பட்டது. பல பிரதானிகள் தம் உடமைகளையும் உயிரையும் இழந்தனர். இதற்கிடையில் கலகக்காரர்களின் தலைவர்களில் ஒருவனான மடுகல்லை, கெப்பற்றிப்பொலையுடன் கருத்து முரண்பட்டுப் பிரிந்துவிட்டான். இதன் மேல் ஹவாப் பகுதியில் கலகத்தின் மூச்சுக் குறைந்தது. ஆயினும் தும்பறை மாத்தளைப்பிரிவுகளில் அது ஓய்வடையவில்லை, பின்னர் 1818 ஒக்டோபர் 28 இல் கெப்பிற்றிப்பொலையும், நவம்பர் மூதலாம் திகதி மடுகல்லையும் கைப்பற்றப்பட்டனர். நவம்பர் இரண்டாம் நாள் புனிததந்ததாது பிரித்தானியர் வசமாகியதைத் தொடர்ந்து கலவரங்கள் முடிவடைந்தன.

கண்டிக் கலகத்தின்போது, கலகக்காரருக்கு உடந்தையாயிருந்தானெனச் சந்தேகப்பட்ட எகெலப்பொலை, மொறிஷஸ் தீவுக்கு அனுப்பப்பட்டு அங்கு உயிர் நீத்தான். கெப்பிற்றிபொலையும் மடுகல்லையும் 1818 ஆம் நவம்பரில் கொலைஞர்களின் வாளுக்கு இரையாகினர். கெப்பிற்றிபொலை வீரனாக வாழ்ந்துவீரனாகவே இறந்தான். அவ்வீரபுருடனின் நினைவு கண்டியர் மனதில் இன்றும் நின்று நிழலாடிக்கொண்டிருக்கிறது.

கலகத்தின் தோல்விக்குக் காரணங்கள்

1817-18 ஆம் ஆண்டுக் காலத்திய கலகங்களின் தோல்விக்கு முதற்காரணம் அதைமுன்னின்று நடாத்தியவர்களின் முயற்சிகள் ஒரு முகப்படுத்தப்படாமையே கலகக்காரரின் தலைவர்கள் கலந்தாலோசிக்காமல் தனித்துக் கருமமாற்றினர். அவர்கள் முதலிலேயே திட்டமிட்டு இதை நடத்தாமையால் கலகங்கள் அங்குமிங்கும் தொட்டம் தொட்டமாக விட்டுவிட்டு ஏற்பட்டன. இது அவற்றை அடக்கும் வேலையை எளிதாக்கியது.

இரண்டாவதாக கண்டியஅரசுக்கு உரிமை கோரிய துரைச்சாமி என்பவன் உண்மையில் அவனன்று என்பதும் உண்மையான துரைசாமி மதுரையிலிருப்பதாகவும் ஏழுகோறளையைச்சேர்ந்த கிராமவாசியாகிய வில்பவ என்பவனே பிக்குவேடம்போட்டுப் போலியுரிமை கோரினன் என்பதும் வெளிப்பட்டவுடன்மக்களின் எதிர்ப்புணர்ச்சி தணிந்துவிட்டது.

மூன்றுவதாக மொலிகொடை பிரித்தானியருக்கு விசுவாசமாக இருந்து அளித்த உதவிகள் கலகத்தை அடக்குவதற்குக் கணிசமான அளவு உதவிசெய்தன. அவன் படைநடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு தனது செல்வாக்கினால் ஏழுகோறளைப் பகுதியை அமைதியுடனிருக்கச்செய்தான். அதுவுமல்லாமல் பிரித்தானியர் கரையோரப்பிரதேசத்துடன்தொடர்புகொள்ளவோ படையுதவிபெறவோமுடியாதுபோயிருக்கும்

மேலும் புனிததந்ததாது கைப்பற்றப்பட்டதும்கலகத்தின் மூச்சைக் குறைக்க உதவியது எனலாம். ஏனெனில் அதைஎவர் வைத்திருக்கிறாரோ அவரே ஆள உரிமையுடையவர்எனக் கண்டியர் நம்பினர் எனவே 1818 ஆம்ஆண்டு நவம்பரில் புனிததந்ததாது பிரித்தானியர் வசமாகியபோது கண்டியர்களைப் பிரித்தானியர் ஆள்வது கடவுள் சித்தமாயிற்றுஎன எல்லாரும்முடிவு கட்டினர் அன்றியும் கலகத்தின் இடை நடுவில் மடுகல்லே கெப்பிற்றிபொலையுடன் மாறுபட்டதும் வீரவாகு என்னும் பெயருடைய வேறொரு போலியுரிமையாளனை நிறுத்திஆதரித்தும் கலகத்தைப் பலவீனமடையச் செய்துவிட்டது.

இறுதியாக, பிரித்தானியரின் படைப் பலமும் கலகத்தின் தோல்விக்குப் பெருமளவு உதவுவது கண்டியர்கள் பழங்காலப் போர்க் கருவிகளையே பெரிதும் பயன்படுத்தினர் அவர்கள் நவின கருவிகளின் முன் எதிர் நிற்க முடியாது போயிற்று

அன்றியும் படைகளின் அழிவுச்செயல்களும் மக்களின்மனதில் பீதியை உண்டாக்கியது. அத்துடன் 1818ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் நாள் விடுக்கப்பட்ட பிரகடனம் அவ்வாண்டு செப்டம்பர் மாதத்திற்குள் திரும்பிவரும் கலகக்காரர்களுக்கு மன்னிப்பளிக்கப்படும்எனக்கூறியது. அதுவும் பலரின் போர்மனப்பான்மையை நீக்கிவிட்டது. எனலாம்.

1818ம் ஆண்டுப் பிரகடனம்:-கண்டிக் கலகம் பிரதானிகளின்கைவினை என்பதை உணர்ந்த பிறவுன்றிக் கலகம்ஓய்ந்தவுடன் ஒரு பிரகடனத்தை விடுத்தார்.அப்பிரகடனம் பிரதானிகளின் செல்வாக்கையும் அதிகாரத்தையும் வேரோடு சுல்விவிட்டு அவர்களின் பணியைப் பிரித்தானிய அதிகாரிகளுக்குக் கொடுக்க முனைந்தது பிரதானிகள் அடக்கப்படாதவரை தமதுஆட்சிவேரூன்றுவதும். அமைதியாக நடைபெறுவதும் அசாத்தியம் எனக் கருதிய பிறவுன்றிக் அரசாங்கஊழியர்கள்மக்களுடன்நேரடியாக தொடர்பு கொள்வது தான் ஆட்சியை வலுப்படுத்துவதற்குச் சிறந்தவழியென முடிவுசெய்து அதற்குஏற்ப புதிய ஒழுங்குகளை மேற்கொண்டார். அவ்வொழுங்குகளின் தொகுப்பே 1818 ஆம் ஆண்டுப்பிரகடனமாகும். சுருங்கக்கூறின் 1815 ஆம்ஆண்டுஉடன் படிக்கை பிரதானிகளுக்கும் பிறர்க்கும்வழங்கியஉரிமைகள்சலுகைகளை இது மீட்டுவாங்கியது எனலாம்.

1818 இல் விடுக்கப்பட்ட பிரகடனம் மொத்தம் 56உட்பிரிவுகளை (பிரமாணங்களை) உடையதாயிருந்தது அவற்றில் முதல் ஆறும் 1815 முதல் 1818 வரை கண்டியின் அரசியல்வரலாற்றையும், கலகம் உருவாகியமுறை பற்றியும் கூறின.ஏழாம், எட்டாம் பிரிவுகள் கண்டியின் பாலனம் ஆள்பதியின்கீழ் ஓர் ஆணையாளர் குழுவிடம் விடப்படும் எனவும், மக்கள் எல்லோரும் சமமாக நடத்தப்படுவர் எனவும் கூறின. 9 முதல் 15 வரையுள்ள பிரிவுகள் அரச அலுவலாவர்களின் நியமனம், கடமைகள் பொறுப்புக்கள் ஆகியவற்றை வரையறைசெய்தன: 16 வது பிரிவு புத்த சமயத்திற்குஉரியமதிப்பளிக்கப்படுவதோடு பிற சமயங்களுக்கும் பாதுகாப்பளிக்கப்படும்எனக் கூறியது. 17 முதல் 25 வரையுள்ள பிரிவுகள் புதிய வரி முறைகளைப்பற்றி எடுத்துக் கூறின. 26 முதல் 29 வரையுள்ள பிரிவுகள் பிரதானிகளின் வேதனம் பற்றிக் குறிப்பிட்டன. 30 முதல் 32 வரையுள்ள பிரிவுகள் புதிய அரசு மக்களின் சேவையை அவர்களின் சாதி சம்பிரதாய அடிப்படையில் பெறுவது பற்றிக்கூறின. 33ம் பிரிவுகண்டிய ஆணையாளர் குழுவுக்குப் பிரதானிகளைத் தண்டிக்கும் உரிமையை அளித்தது. 34 முதல் 55 வரையுள்ள பிரிவுகள் நீதிப்பட்டயமாக அமைந்தன.

1818 ஆம் ஆண்டுப் பிரகடனம் கண்டிய மக்களைத் தற்கால விருத்திப் பாதையில் திசை திருப்பியது. அது பிரதானிகளின் அதிகாரங்களுக்குச் சாவுமணி அடித்தது எனலாம். புதியஒழுங் குகளின்படி பிரதானிகள் ஆணையாளர் குழுவின் கீழ் ஒவ்வொரு மாகாணத்தினதும் அதிகாரியின் ஆணைப்படி மட்டுமே தமது கடமைகளைச் செய்யலாம். அன்றியும் எழுத்துமூல அனுமதியின்றி அவர்கள் எவ்வித அதிகாரமும் செலுத்த முடியாதென்றும் சிறு நியமனங்களை அதிகாரி அல்லது முகவர் மட்டுமே செய்யலாமெனவும் விதிக்கப்பட்டதோடு பிரதானிகள் இதுவரை பெற்றும் அரசுக்குச் செலுத்தியும்வந்த வருமானம் ஒழிக்கப்பட்டு அவர்கள் வேதனம் பெறும் ஊழியர்களாக்கப்பட்டனர். மேலும் பிரதானிகளிடம் முன்பிருந்த குடியியல் வழக்கு விசாரணை அதிகாரமும் நீக்கப்பட்டுக் குற்றவிசாரணை அதிகாரமும் பெருமளவு குறைக்கப்பட்டது. இவ்வாறு 1815 ஆம் ஆண்டுஉடன்படிக்கை நாயக்க வமிசத்தினரின் வீழ்ச்சியைக் குறித்ததுபோல் 1818 ஆம் ஆண்டுப்பிரகடனம் பிரதானிகளின்வீழ்ச்சியைக் குறித்தது.புதியஒழுங் குகளின் விளைவாகப் பிரதானிகள் சிறகிழந்த பறவைகள் போல ஆயினர் இதன்மேல் நாடு முழுவதும் ஒரேமாதிரியான நிர்வாக அமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டது.

வினாக்கள்

1. 1815 இல் கண்டி பிரித்தானியர் வசமாகியதை விபரி.
2. நோத் தோற்கவும் பிறவுண்ரிக் வெல்லவும்காரணங்கூறு
3. 2 ஆம் கண்டிப்போருக்கு அடிகோலிய சம்பவங்களையும் கண்டி சைப்பற்றப்பட்டபின்னர் எழுந்த பிரச்சினைகளையும் சுருக்கிக்கூறுக.
4. 1815ஆம் ஆண்டுக் கண்டியுடன்படிக்கையின்பிரதான அமிசங்களைத்தொகுத்தெழுதி அவற்றின் முக்கியத்துவத்தையும் குறிப்பிடுக.
5. 1818 கண்டிக்கலகத்தின் காரணங்களையும் விளைவுகளையும் விபரிக்குக.
6. அக்கலகம் தோல்வியடைந்ததேன் ?
7. 1818 ம் ஆண்டுப் பிரகடனத்தின் பிரதான அமிசங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் குறிப்பிடுக.
8. வரலாற்றுக் குறிப்பெழுதுக. டி ஒயிலி, முத்துச்சாமி கெப்பிற்றிப்பொலை, மொலிகொட.

அத்தியாயம் 6

ஆள்பதி பாண்சின் ஆட்சியும் ஆரம்ப விருத்தியும்

1820 ஆம் ஆண்டு பிறவுன்றிக் பதவியிலிருந்து விலகிய பின்னர் ஒட்வேட், பாண்ஸ் ஆள்பதியாகினர். எனினும் ஈராண்டுக்குள் அவர் இந்தியாவின் படைத்தளபதியாகச் செல்லவேண்டியிருந்தமையால் 1822 முதல் பதிஜெற் என்பவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். பின்னர் 1824 முதல் பாண்ஸ் மீண்டும் இலங்கையின் ஆள்பதியாகி 1831 வரை தொடர்ந்து சேவைசெய்தார்.

எட்வேட் பாண்சின் ஆட்சி திடமானதும் முற்போக்கானதுமான பாலனத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது எனலாம். கண்டி கைப்பற்றப்பட்டபின்னர் நாடு முழுவதையும் ஒன்றுபடுத்தவும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் முதல் நடவடிக்கைகளை மேற்கொண்டவர் இவரே. பாண்ஸ் சில முக்கியமான பாலன நடவடிக்கைகளையும்மேற்கொண்டார் ஆயினும் வீதிகளை அமைப்பதன் மூலம் போக்குவரத்து பொருளாதார விருத்திக்கு அவர் ஆற்றிய சேவையே இன்றும் நாம் அவரை நினைவுகூரச் செய்கின்றது.

போக்குவரத்து விருத்தி

பாண்ஸ் ஆள்பதியாகப் பதவியேற்றபின்னர் போக்குவரத்தை விருத்தி செய்து நாட்டின்முன்னேற்றத்துக்கு உதவுவதையே முதற்கடமையாகக் கொண்டார். அக்காலத்தில் கரையோரப் பிரதேசத்திலிருந்த பட்டினங்களுக்கு அயலில் மட்டும் வண்டிகள் செல்லக்கூடிய சிறு வீதிகள் காணப்பட்டன. ஏனைய இடங்களில் கல்லும் முள்ளும் நிறைந்த காலடிப்பாதைகளே காணப்பட்டன இதனால் போக்குவரவு மிகக் கடினமாயிருந்தது. உதாரணமாக 1800 இல் ஆள்பதி பாண்ஸ் கரையோர மாகாணங்களில் மேற்கொண்ட ஒரு சுற்றுலாவின்போது பல்லக்குச் சுமப்போர் 160 பேரும் பொதி சுமப்போர் 400 பேரும் அவருடன் கூடச் சென்றனர் என்பதிலிருந்து அக்காலப் போக்குவரவு நிலையை ஒருவர்

ஊகிக்கலாம். எனவேபாண்ஸ் 'இலங்கையின் முதற்தேவை வீதிகள் இரண்டாவது தேவை வீதிகள்; மூன்றுவதுதேவை வீதிகள் எனக்குறிப்பிட்டது நிலைமையை உள்ளபடி விளக்குவதாகும்.

மேலும் கண்டி கைப்பற்றப்பட்டதையடுத்துபிறவுண்றிக் அப் பிரதேசத்தின் பாதுகாப்புக்காக ஆங்காங்கே பல கோட்டைகளை யும் படைநிலையங்களையும் அமைத்திருந்தார் அத்தகையகுன்றுக் கோட்டைகளும் படை நிலையங்களும் பலக்கடுவை, கலகெதரை அட்டாப்பிட்டி, அலுபொத முதலிய இடங்களில் அமைக்கப்பட் டிருந்தன ஆயின் கரடுமுரடான மலைப்பிரதேசத்தில் காடுகளின் மத்தியில் அமைந்த இக்கோட்டைகள் நாட்டின் பாதுகாப்புக்கு உதவா என்பதையும் அவற்றை நிர்வகிப்பது சிரமம்என்பதையும் உணர்ந்தபாண்ஸ் விரைவான போக்குவரவுக்கேற்ற வீதிகளையும் அமைப்பதின் மூலம் பாதுகாப்பைப் பலப் படுத்தவும் நாட்டை வளப்படுத்தவும் முடியும் எனத் துணிந்தார்

பிறவுண்றிக் கண்டிப் படையெடுப்பின் போது அப்பிரதேசத் தின்போக்குவரத்து நிலையை நன்கறிந்திருந்தார். செங்குத்தான மலைகள், அடர்த்தியான காடுகள், ஆறுகள் என்பவற்றைக் கடந்து ஒடுக்கமான பாதைகள் வழியே ஒருவர் சென்றுவராகச்செல்வ தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளை உணர்ந்தஅவர் கண்டியின் வீழ்ச்சி யைத்தொடர்ந்துகொழும்பையும் கண்டியையும் இணைத்து ஒரு வீதியை அமைக்க முதல் நடவடிக்கைகளை மேற் கொண்டார் இதற்கு முதற்படியாக 1818ல் ஒரு பிரகடனத்தை விடுத்தார் இப்பிரகடனம் வீதிகளை அமைப்பதற்கு மக்களின் சேவையைக் கோரியது: பாண்ஸ்இப் பிரகடனத்தின் கீழ் 15 நாட்கள்மக்க ளின்சேவையைப்பெற்று வீதிகளை அமைக்கும்வேலையைத் தொட ங்கினார். அவர் முதலில் கொழும்பைஇலங்கையின் எல்லாப் பிர தான நகரங்களுடனும் இணைக்கவும், கண்டியை எல்லாக் கரை யோரப் பட்டினங்களுடன் தொடுக்கவும் திட்டமிட்டார் இதன் படி தாம் பதவியேற்று இரண்டு ஆண்டுகளுக்கிடையில் கொழும் பையும் கண்டியையும்இணைத்தார் கொழும்பிலிருந்து களனியா வியாங்கொடை, கேகாலை என்பவற்றுக்கூடாகக் கடுகண்ணாவை யைக் கடந்து கண்டிக்குச் செல்லும் முதல் வீதி பிறேசர் என்பவரால் வகுக்கப் பட்டது, கடுகண்ணாவைக் கணவாய் க்கூடாக இவ்வீதியை அமைத்த டோசன் என்பவரின் நினைவுச் சின்னத்தை அங்கு இன்றும் காணலாம் 1820 இல் தொடங்கப் பட்ட கொழும்பு கடுகண்ணாவை

கண்டி வீதி 1825 இல் முடிக்கப்பட்டது. 1821இல் கொழும்பையும், கண்டியையும், கலகெதரைக் கணவாய்க்கூடாக இணைக்கும் இரண்டாவது வீதி தொடங்கப்பட்டது இதுவும் 1825 இல் பூர்த்தியாகியது. இவ்வீதியை அமைப்பதற்காக 500 அடி நீளமான ஒரு மலையைக் குடைய வேண்டியிருந்தது இது தொடர்பாகக் கண்டிக்குடியானவன் ஒருவன் ''கண்டியைக்கைப்பற்றுவதாயின் மலையைக் குடையவேண்டும், மகாவலிகங்கைக்குப்பாலம் போடவேண்டும், தந்ததாதுவை அகப்படுத்த வேண்டும்'' எனக் குறிப்பிட்டது. கவனிக்கத்தக்கது. ஏனெனில் இப்போது அம்மூன்று நிபந்தனை களையும் பிரித்தானியர் நிறைவேற்றிவிட்டனர் அத்துடன் அவர்களால்அமைக்கப்பட்டகளனிப்(படகுப்)பாலம் மகாவலிகங்கை (முதிரைப்) பாலம். மாவனல்லைப்பாலம், நானுஓயாப்பாலம் ஆகியன கண்டியையும் கரையோரப் பிரதேசத்தையும்ஒரே ஆட்சியின் கீழ் இணைக்கும் உண்மையான பாலங்களாயின. கொழும்பு கண்டி வீதிகள் அமைக்கப்பட்ட பின்னர் குருநாகலிலிருந்து தம்புல்லை வரையும், கண்டியிலிருந்து மாத்தளைக்கூடாகத் தம்புல்லை வரையும் வீதிகள் அமைக்கப்பட்டன. இவை 1832இல் முடிவடைந்தன. இதன் மேல் கண்டியை, நுவரெலியா தெல்தெனை என்பவற்றுக்கூடாகவதுளையுடனும், குருநாகலுக்கூடாகச் சிலாபம், நீர்கொழும்பு, புத்தளம் என்பவற்றுடனும், தம்புல்லைக்கூடாகத் திருகோணமலையுடனும் இணைக்கும் வேலைகள் தொடங்கப்பட்டன. கண்டி–நுவரெலியா வீதி 1827 இல் தொடங்கப்பட்டது. இது பத்து ஆண்டுகளின் பின்னரே பூர்த்தியடைந்தது.

பாண்ஸ் கரையோரப் பிரதேசத்தில் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட வீதிகளைத் திருத்துவதிலும் கவனம் செலுத்தினர். இவ்வீதிகள் அகன்றவையாகவும், மணல் நிறைந்தவையாகவும், திருத்தப்படாத நிலையிலும் காணப்பட்டன. இவற்றைத் திருத்தியதோடு பிரதான வீதிகளுடன் சிறு வீதிகளை இணைக்கும் வேலையும் இவர் காலத்தில் தொடங்கப்பட்டது.

பாண்ஸின் பெருமுயற்சியினால் வீதிகள் அமைக்கப்பட்டதைத் தொடந்து அஞ்சல்சேவையும் விருத்தியடைந்தது. புதிய வீதிகள் துரிதமான அஞ்சல்சேவைக்குதவின. இதற்கு முன்னர் கொழும்புக்கும் திருகோணமலைக்குமிடையில் மட்டும் ஒழுங்கான சேவை நடந்தது. இரண்டு பாதைகள் இவற்றை இணைத்தன.

வடக்கே யாழ்ப்பாணம். முல்லைத்தீவு என்பவற்றுக் கூடாகத் திருகோணமலையை இணைத்த பாதைவழியே ஒரு சேவையும், தெற்கே காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு என்பவற்றுக் கூடாகத் திருகோணமலையை இணைத்தபாதை வழியே இரண்டாவது சேவையும்நடைபெற்றது. இவற்றைத் தவிர கண்டிப்பிரதேசத்துடனும் ஒழுங்கான அஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட்டது இச்சேவைகள் வீதிகளால் இணைக்கப்பட்ட தூரங்களிடையே கொண்டோடிகள் மூலம் நடத்தப்பட்டன

பயிர்ச்செய்கை விருத்தி :-பாண்ஸ் காலத்தில் கண்டிப்பிரதேசத்தில் வீதிகள் திறக்கப்பட்டமைபெருந் தோட்டப் பயிர்ச் செய்கையின் விருத்திக்கும் வழி வகுத்துவிட்டது. மலைநாட்டில் முதல் முதல் விருத்தியடைந்த பெருந்தோட்டப் பயிர் கோப்பியாகும் கோப்பி அன்னியர் வருகைக்கு பின்னரேயே இலங்கையில் சிறிய அளவில் பயிரிடப்பட்டிருந்த போதிலும் அதைப்பானமாகப்பயன் படுத்தும் முறையை மக்கள் அறிந்திருக்க வில்லை. பின்னர் ஒல்லாந்தர் அப்பயிரைப் பெருமளவிற் பயிரிடமுனைந்த போதிலும், கரையோரப் பிரதேசத்தின் தரைத்தோற்றம், காலநிலை ஆகியன சாதகமாயில்லாதபடியால் அவர்களின் முயற்சி அதிக பலனளிக்கவில்லை. ஆயினும் கண்டிய மக்கள் கோப்பியைச் சிறு அளவில் ஆங்காங்கு (குறிப்பாக ஊவாவில்) பயிரிட்டு வந்தனர். இப்பொழுது வீதிகள் அமைக்கப்பட்டவுடன் கோப்பிப் பயிர்ச்செய்கைவேகமாக விருத்தியடைந்தது.

ஆள்பதி மெயிற்லந்து அலெக்சாண்டர் ஜோன்சனின்பிபார் சின்போில் பிரித்தானியர் கொழும்புக்கு வெளியில் நிலம் வாங்குவதற்குவிதிக்கப்பட்டிருந்த தடையை 1810 இல் நீக்கியிருந்தார் இதன்மேல் பிரித்தானியர் 5 வருடகாலம்வரைவரியின்றி 4000 ஏக்கர் அளவான நிலத்தைப்பெற முடிந்தது. இச்சலுகை பிற்காலத்தில் பிற இன மக்களுக்கும் வழங்கப்பட்டது. இவற்றின் விளைவாகக்கண்டிப் பிரதேசத்தில் பெருந்தோட்டங்கள் திறக்கப்பட்டன.

கோப்பிச் செய்கையில் முதன் முதன் ஈடுபட்டவர்கள் இலங்கையிலிருந்தகுடியியல்இராணுவ,நீதிபாலனச்சேவையாளர்களே ஜோர்ஜ்பேட்என்பவர் முதலாவது பெருந்தோட்டக்காரர் எனப்பட்டார். புசல்லாவையில்இவர் அமைத்த சிறுகோப்பித் தோட்டம், £ 600 வரை இலாபம் கொடுத்தது. பின்னர் ஆள்பதி

பாண்ஸ்அவர்கள் தாமே1825இல் சுன்னெறுவாவில் ஒரு தோட்டத்தை நிறுவினர். இதைத் தொடர்ந்து 1835ஆம் ஆண்டளவில் தும்பறைப்பள்ளத்தாக்கு, அம்பகமுவ: கொத்மலை, புசல்லாவை முதலியஇடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கோப்பி பயிரிடப்பட்டது. கோப்பிச் செய்கை, தொடக்கத்தில் இலாபமளிக்கவில்லை. ஆனால்1835க்குமேல் அது அதிக இலாபத்தைக் காட்டியது. இக்காலத்தில் கோப்பி அருந்தும் பழக்கம் ஐரோப்பாவில் அதிகரித்திருந்ததும், மேற்கிந்திய தீவுகளில் அடிமை முறை ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர் தட்டுப்பாடுஏற்பட்டதனால் அங்கிருந்துஏற்றுமதி செய்யப்பட்ட கோப்பியின் அளவு தற்காலிகமாகக் குறைந்ததும், கோப்பியின் எழுச்சிக்கு உதவின பாண்ஸ் தமது காலத்திலேயே கோப்பிச் செய்கை விருத்திக்காகக் குடிகளுக்குப் பல உதவிசெய்தார். 1820இல் கோப்பி மீது விதிக்கப்பட்ட 5 வீதம் ஏற்றுமதிவரியை நீக்கினர் 1824இல் விசேச்சலில் 10/1 ஐக் கொடுக்கவேண்டும் என்னும் சட்டத்திலிருந்து கோப்பித் தோட்டக்காரருக்கு விலக்கு அளித்தார். 1829ல் பயிர்ச்செய்கை, கைத்தொழில் என்பவற்றுக்கு வேண்டிய உபகரணங்களின் இறக்குமதிவரியை நீக்கினர். அத்துடன் கோப்பிச் செய்கையில் ஈடுபடுவோர் இராசகாரியம் செய்யத் தேவையில்லைஎன அறிவித்தார். இவையும் கோப்பிச் செய்கையின் விருத்திக்கு உதவின.

நிர்வாகச் சீர்திருத்தங்கள்:- பாண்ஸ் நிர்வாகத் துறையிலும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டார். இத்துறையில் இவரது முதற் செயல் கரையோரப்பிரதேசத்தின் உதவிச்செயலாளர் பதவியையும் முத்திரை சுங்கக்கட்டுப்பாட்டதிகாரி பதவியையும் ஒழித்ததாகும். அடுத்து, கொழும்பு, களுத்துறைப்பிரிவுகளை ஒன்றுகவும் மாத்தறை, தங்காலைப் பிரிவுகளை ஒன்றுகவும் இவர் இணைத்தார் அத்தோடு, குடியியற் சேவையாளரின் பதவி, உயர்வுக்குச்சிங்களம் அல்லது தமிழ் அறிவு அவசியம் எனவும் 1822இல் ஒரு விதியைக் கொண்டுவந்தார்.

சமூகச் சீர்திருத்தங்கள் :- பாண்ஸ் அக்காலத்தில் நிலவிய அடிமைமுறையை ஒழிப்பதற்குஅரும்பாடுபட்டார். இலங்கையில் நிலவிய அடிமை முறைமேற்குநாடுகளில் நிலவிய முறையிலும் வேறுபட்டது. இங்கு நான்கு வகையான அடிமைகள் காணப்பட்டனர். முதலாவது வகையினர் தாம் ஒருவரிடம் பெற்ற கடனுக்காக அவருக்கு அடிமை வேலை செய்தனர். இவர்கள் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் தம்மைவிடுவித்துக் கொள்ளமுடியும். இரண்டாவது வகையினர் தம் பெற்றோர்களால் அடிமைகளாக விற்கப்பட்டிருந்தனர் மூன்றுவது வகையினர் அரச

ஞல் அடிமைகளாக்கப்பட்டிருந்தனர். நாலாவதுவகையினர் அடிமைகளாயிருந்ததாயார்களின் பிள்ளைகளாயிருந்தனர் யாழ்ப்பாணப் பகுதியிலும் ஒரு வகை அடிமை முறை வழக்கிலிருந்தது. இம்முறைகள் நிலவுவது சமூக முன்னேற்றத்துக்குத் தடையென்பதை மெயிற்லந்து காலத்தில் அலெக்சாண்டர் ஜோன்சன் குறிப்பிட்டிருந்தார். அவர் 1816இல் அடிமைகளின் எசமானர்களுக்கு விடுக்கப்பட்ட ஒரு வேண்டுகோளில் ஆகஸ்ட் 12ஆம் திகதிக்குப் பின்னர் பிறந்த குழந்தைகளை விடுவிக்குமாறு கேட்டிருந்தார். அவரது பிரகடனம் ஒரு தொகையை எசமானர்களுக்குக் கொடுப்பதன் மூலம் அடிமைகள் தம்மை விடுவித்துக்கொள்ள வழி வகுத்தது. இம் முறையின் மூலம் 1821 இல் யாழ்ப்பாணத்தில மட்டும் 2211 அடிமைகள் விடுதலை பெற்றனர்.

பாண்ஸ் கல்விப்பகுதியைப்புனரமைக்க வேண்டியஅவசியத்தை உணர்ந்தார் அக்காலத்தில். மக்களைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றுவதற்கு ஒரு கருவியாகவே கல்விப்போதனை அமைந்திருந்தது இத்தகையமத அடிப்படையிலான கல்வி இலங்கையைப்போன்ற ஒரு நாட்டிற்குஏற்காதது எனப்பாண்ஸ்கருதினர். அக்காலத்தில் மதகுருமாரே கல்வி போதிப்பவர் களுமாயிருந்தனர். இதனல் பாண்ஸ் மாகாணங்களிலிருந்து மாணவர்களைத் திரட்டிஅரசாங்கச் செலவில் கற்பித்து ஆசிரியர்களாக்கி அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கு ஒரு திட்டம் வகுத்தார். ஆயினும் பணமூடையினல் இத்திட்டம் கைவிடப்பட்டது. எனவே பாண்சின் காலத்தில் மிஷனரிகளின் பாடசாலைகள் தாம் கல்வி போதனையில் அதிக பங்கைப் பெற்றன. 1829 இல் அரசாங்க பாடசாலைகள் 90 காணப்பட்டன. ஆயினும் அவை பெயரளவிற்றன் இயங்கின. புரட்டஸ்தாந்த மிஷனரிமார் 1823இல் கண்டியிலும் 4 பாடசாலைகளை நிறுவினர், 1826 இல் மொத்தம் 200 க்கும் அதிகமான பாடசாலைகள் அவர்கள் பொறுப்பில் இருந்தன. புரட்டஸ்தாந்தரைத் தவிர அமெரிக்கன் மிஷன், வெஸ்லிமிஷன்பாடசாலைகளும்ஆங்காங்குநிறுவப்பட்டன இலங்கையின்முதலாவது பெண்பாடசாலை அமெரிக்கன்மிஷன் ஆதரவில் உடுவிலில் 1816இல் தாபிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேற்குறிப்பிட்டவற்றைத்தவிர 1831 இல்கத்தோலிக்கரின் பாடசாலைகளும் 63 காணப்பட்டன். பாடசாலைகள்சுதேச மொழிகளில் போதித்தமையினல் அரசாங்கத்தின் ஆதரவைப் பெறவில்லை. இவற்றைப் போலவே பௌத்த, இந்துப் பாடசாலைகளும் தன் மொழிப்பாடசாலை களாயிருந்தமையால் அரசாங்க உதவியைப் பெறவில்லை.

வினுக்கள்

1. இலங்கையை ஒன்றுபடுத்துவதற்காக பாண்ஸ் கைக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?
2. பாண்சின் ஆட்சி இலங்கையின் முன்னேற்றத்துக்கு எவ்வாறு உதவியது?
3. பாண்ஸ் நாட்டுக்கு ஆற்றிய சேவையை மதிப்பிடுக.

அத்தியாயம் 7

கோல்புறூக் சீர்திருத்தங்கள்

1796ஆம் ஆண்டு முதல் கரையோர மாகாணங்களை ஆண்டு வந்த பிரித்தானியர் 1815 இல் கண்டி வீழ்ச்சியடைந்ததை யடுத்து நாடு முழுவதின் ஆட்சிக்குப் பொறுப்பாயினர். ஆயினும் அதன் பின்னர் கூட நாடு முழுவதற்கும் பொதுவான நிர்வாக அமைப்போ, நீதிபாலன முறையோ ஏற்படுத்தப்படவில்லை. கண்டிப்பிரதேசத்தின் நிருவாக நீதிபாலன முறைகள் ஒருவகையாகவும், கரையோர மாகாணங்களில் தமிழ்ப் பிரிவுகளின்பாலனம் இன்னெரு வகையாகவும், சிங்களப் பிரிவுகளின் பாலனம் மற்றெரு வகையாகவும் நடைபெற்றது. மேலும் இலங்கையின் நிதி நிலைமை ஒருபொழுதாவது திருப்திகரமாயிருக்கவில்லை நிர்வாகச் செலவுகள் நாட்டு வருமானத்தைவிட எப்பொழுதும் அதிகமாகவே காணப்பட்டன மெயிற்லந்து மேற்கொண்ட சீர்திருத்தங்களினாலும் நிலைமை சீரடையவில்லை. இவற்றிலும் மேலாக இலங்கையில் அநீதியான அக்கிரமான ஆட்சியின் விளைவாக மக்கள் நலிவடைவதாகவும், அரசாங்கத்தின் ஏகபோக வர்த்தக உரிமைகளால் நாட்டின் வர்த்தக நலன் பாதிக்கப்படுவதாகவும், பிரித்தானியகுடியேற்ற வாசிகள்பலர் இங்கிலாந்தில் கண்டனக்குரலெழுப்பினர். இதேசமயம் இங்கிலாந்தின் ஏனைய குடியேற்ற நாடுகளாகிய நன்னம்பிக்கைமுனை, மொறிஷஸ் தீவு ஆகியனவற்றின் நிலைமைகளை ஆராயவும் பலர் விழைந்தனர். இதன் விளைவாக, 1822 மார்ச் மீஹோட்டன் என்பவர் பாராளுமன்றத்தில் கொண்டுவந்த ஒரு பிரேரணையின் மூன்று குடியேற்ற நாடுகளினதும் நிலைமைகளை நேரிற்கண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கும் படி கோட்டிருந்தார். இதைஏற்றமன்னர் 1823இல் கோல்புறூக் என்பவர் தலைமையில் மூவரைக் கொண்டஒரு குழுவை நியமித்தார். இக்குழுவினர்மொறிஷஸ் நன்னம்பிக்கை முனை என்பவற்றின் நிலைமைகளை ஆராய்ந்தனர். பின்னர் அவர்களில் இருவர் இங்கிலாந்துக்குச்சென்றுவிடக்கோல்புறூக்மட்டும் இலங்கைக்கு (1926இல்) வந்தார். ஒராண்டின் பின்னர், C. H. கமிறன் என்பவர் நீதிபாலன விடயமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இங்கு வந்தார்.

கோல்புறூக்-கமிறன் என்னும்இருவரும் தாராண்மைவாதிக ளாயிருந்தனர். அவர்கள் எத்துறையிலும் அரசாங்கத்தின் தலை யீட்டையும் ஏகபோக உரிமையையும் எதிர்ப்பவர்கள். தனி நப ரின் சுதந்திரத்தையும் முயற்சிகளையும் காப்பது தலையாயகடமை யெனக் கருதுவோர். இவர்களின் கருத்துக்கள் அக்காலத்தின் அர சியல் பொருளாதார நிலைமைகளிலிருந்து பிறந்தவையெனலாம் அடம் சிமித்என்னும் பொருளியல் நிபுணரின் கட்டில்லா வியா பாரக்கொள்கை ஜெறெமி பெந்திங் என்பவரின் சனநாயகத்து வங்கள் வறியமக்களுக்காக மதச்சார்பான இயக்கங்கள் எழுப் பிய கண்டனக்குரல்கள் முதலியவற்றின் தாக்கம் இங்கிலாந்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் வேறுபல நாடுகளிலும் வெளிப்பட்ட காலம் அதுவாகும். கோல்புறூக்கும் கமிறனும்அத்தகைய கருத் துக்களில் ஈடுபாடு கொண்டிருந்தவர்களாதலின் இங்கிலாந்தில் ஏற்பட்டமாற்றங்கள் இலங்கைக்கும் ஏற்றனவாகும் என்ற எண் ணத்தில் பல சிபார்சுகளைத் தெரிவித்தார்கள். அச்சிபார்சுகளைத் தெரிவிக்குமுன்னர் அவர்கள் நாட்டின் பலபகுதிகளுக்கும் நேரில் சென்றனர். கண்டிப்பிரதானிகள்பலரைப் பேட்டிகண்டனர். கம் சபா விசாரணையிலும் பங்குபற்றினர். 435 வினாக்களடங்கிய 'வினாக்கொத்து' ஒன்றை அரசாங்கஅலுவலாளர்களிடையே விநி யோகித்துஅவர்களின் கருத்துக்களையும் அறிந்தனர். அதேசமயம் மக்கள் தாமேபலமனுக்களை இவர்களுக்கு அனுப்பிவைத்தனர் இவ்வாறு தாம் கண்ட, கேட்ட, அறிந்த விடயங்களையெல்லாம் அலசி ஆராய்ந்த பின்னர் கோல்புறூக்கும் கமிறனும்தமது அறிக் கைகளை 1832 ஆம்ஆண்டு மார்ச் 12இல் சமர்ப்பித்தனர் கோல் புறூக் பொதுநிர்வாக குடியியற் பாலன விடயங்களைப் பற்றியும், கமிறன் நீதிபாலன விடயங்களைப்பற்றியும் தமது அறிக்கைகளில் தெரிவித்தனர்.

நிர்வாக, யாப்புச் சீர்திருத்தங்கள்:-கோல்புறூக் தெரிவி த்த மிக முக்கியமான நிர்வாகச் சீர்திருத்தம் நாடு முழுவதுக்கும் பொதுவான ஒரே ஆட்சி முறையை ஏற்படுத்தியதாகும் அதுவ ரை, கண்டிப் பிரதேசம், கரையோர மாகாணங்களின் தமிழ் பிரிவுகள், சிங்களப் பிரிவுகள் ஆகியன தனித்தனி வேறுபட்ட முறையில் ஆளப்பட்டு வந்தன. இதன் விளைவாக, நாட்டு மக்கள் ஒன்றுபடமுயலவில்லை. 'நாம் இலங்கையர்' என் னும் எண்ணம் எவரிடமுமிருக்கவில்லை. ஒவ்வொருவரும் தமதுபிர தேசத்துக்கே விசுவாச முடையவராயிருந்தனர். இது நாட்டு

முன்னேற்றத்துக்குத் தடையெனக் கருதிய கோல்புறூக் நாடு முழுவதும் ஆள்பதியின் ஆட்சியின் கீழ் ஒரேவிதமாக நிர்வகிக்கப் பட வேண்டும் எனச் சிபார்சு செய்தார்.

மேலும் முன்னர் அமைந்திருந்த 16 நிர்வாகப் பிரிவுகளை ஒழித்துவிட்டு அவற்றுக்குப் பதிலாக மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், கீழ்மாகாணம் வடமாகாணம் எனும் ஐந்துமாகாணங்களை அமைத்தார். அத்துடன் புதிய மாகாணங்களின் எல்லைகளைவரலாற்றடிப்படையில் அன்றிவசதியின் அடிப்படையிலேயே வகுத்தார் இதன் விளைவாகக் கண்டியஇராச்சியத்தின் சில பகுதிகள் கரையோர மாகாணங்களுடன்இணைய வேண்டியேற்பட்டது. உதாரணமாக நுவரகலா வீவ எனும் பகுதி வடமாகாணத்துடனும், சப்பிரகமுவ மாகாணத்தின் ஒரு பகுதி தென் மாகாணத்துடனும் இணைக்கப்பட்டன.

அடுத்து, குடியியற் சேவை பற்றியும் சில சிபார்சுகளைச் செய்தனர் அக்காலத்திற்குடியியற்சேவையாளர்எண்ணிக்கையில் அதிகமானோராகவும் அதிகவேதனத்தைப் பெறுபவராகவுமிருந்ததையறிந்த கோல்புறூக் அவர்களின் தொகையையும் வேதனத்தையும் குறைக்குமாறும், ஒய்வுகாலவேதனத்தை நிறுத்துமாறும் சிபார்சு செய்தார். மேலும் குடியியற் சேவை ஐரோப்பியரின் ஏகபோக உரிமையாயிராது நாட்டுமக்களின் சேவையையும் பயன்படுத்தத் தக்கதாக அது எல்லோருக்கும் 'திறந்துவிடப் பட' வேண்டும் எனவும் கோல்புறூக் தெரிவித்தார்.

யாப்புச் சீர்திருத்தங்களைப் பொறுத்தமட்டில் அவர்தெரிவித்தசிபார்சுகள் முக்கியமானவை. முதலாவதாக, ஆள்பதியின் சர்வாதிகாரங்களை நீக்குமாறு கோல்புறூக் சிபார்சு செய்தார். இதுவரை ஆள்பதியேபிரதானஇராணுவ நீதி, குடியியற்பாலன அதிகாரியாயிருந்தார், அத்துடன் கண்டிப்பகுதியைப் பொறுத்தவரை குற்ற விசாரணை அதிகாரமும் அவரிடமிருந்தது. இவ்வாறு எல்லா அதிகாரங்களையும் ஒருவர் வைத்திருத்தல் கூடாதெனக்கூறி நிர்வாகத்தையும், நீதி பாலனத்தையும் தனியாகப் பிரித்தார். இதனுல்அரசுக்கு எதிரான ஒருவரை விசாரணையின்றிச் சிறையிலிடவும் நாடு கடத்தவும் அவருக்கிருந்த அதிகாரங்கள் அழிக்கப்பட்டன. அன்றியும் ஆள்பதியின் ஆணைக்கு அடங்காதவையான உயர் நீதிமன்று மாவட்ட நீதிமன்றுகள் ஆகியவற்றை நிறுவுவதன் மூலம்ஆள்பதியின் நீதிபாலன அதிகாரங்கள் நீக்கப்பட்டன.

மேலும் இராசகாரிய முறையின் கீழ் ஒருவரைச் சேவை செய்யுமாறு நிர்ப்பந்திக்கவும், சாதி, சம்பிரதாயம் என்பவற்றுக்கேற்ப வேதனத்துக்கோ, வேதனமின்றியோ அவரின் சேவையைப்பெறவும், அவரின் வேதனத்தை நிர்ணயிக்கவும் ஆள்பதியிடமிருந்த அதிகாரங்கள் அவ்விராசகாரிய முறையின் ஒழிப்பினுல் அகன்றன. அத்துடன் நாட்டின் நிர்வாக விடயங்களில் தன்னிச்சையாக அவர் நடவாதிருப்பதற்காக ஒரு சட்டநிர்வாகக் கழகமும் அமைக்கப்பட்டது.

இவ்வாறு ஆள்பதியின் அதிகாரங்களைக்குறைத்ததோடமையாது ஆளப்பட்டோருக்கும் அரசு விடயங்களில் சிறிது அநுபவத்தையும், அக்கறையையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் சட்டக் கழகம் (சட்ட நிருபணசபை) ஒன்றும் நிறுவப்பட்டது முன்னர் குறிப்பிடப்பட்ட சட்டநிர்வாகக் கழகமும், சட்டக்கழகமும் அரசாங்கத்தின் அங்கங்களாயின.

சட்டக் கழகம்:-(சட்டநிருபண சபை) பொது விடயங்களையும், ஆள்பதியால் கொண்டுவரப்படும் சட்டங்களையும் அலசி ஆராய்வதையும் அவற்றில் திருத்தங்களைக் கொண்டு வருவதையும் தன் பணியாகக் கொண்டது இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாகப் பொதுமக்களின் குரல் அரசாங்கத்திற்குக் கேட்கக்கூடியவிதமாக அது அமைக்கப்பட்டதே அதன் சிறப்பெனலாம். சட்டக்கழகத்தில் 15 பேர் உறுப்பினராயிருந்தனர். அவர்களில் 9 பேர் உத்தியோகப்பற்றுள்ளவர்களாகவும், அறுவர் உத்தியோகப் பற்றற்றவர்களாகவும் இருந்தனர். உத்தியோகப் பற்றற்றவர்களில் ஐரோப்பியருக்கு மூவரும் தமிழர், சிங்களவர் பறங்கியர் ஆகியோருக்குத்தனித்தனி ஒருவரும் நியமிக்கப்பட்டனர். இவர்கள் நிரந்தரமான உறுப்பினர்களாயிருந்தனர்.

சட்டநிர்வாகக் கழகம்:-(சட்டநிர்வாக சபை) ஒரு வகையில் ஆள்பதியின் ஆலோசனைக் குழுவைப் போல அமைத்தது. அதில் ஆள்பதி, அரசாங்கச் செயலாளர் பொருளாளர் மேல்மாகாண முகவர் சுங்கத்தலைவர், நில அளவீட்டுப் பகுதித் தலைவர்; கணக்காய்வாளர் தலைவர் ஆகியோர் உறுப்பினராயிருக்கவேண்டுமெனச் சிபார்சு செய்யப்பட்டது அரசிறை நிர்வாகம் பற்றிய எல்லா விடயங்களிலும் ஆள்பதிக்கு உதவுவதே இதன் கடமை. இக்கழகம் ஏதாவது தகவல் தேவைப்படும் போது

அதைக்கோரும் அதிகாரத்தையும் பெற்றிருந்தது. இதனால் அரசாங்கத்தின் நிர்வாகச் செயல்களுக்கு ஆள்பதி மட்டுமேபொறுப்பு என்ற நிலை நீங்கியது எனலாம். ஆயின், இக்கழகத்தின் ஆலோசனைகளை ஆள்பதி கேட்டு நடக்கவேண்டுமென்பதில்லை. அவர் இக்கழகத்துடன் முரண்படும்போது, தமது முடிவுக்கான காரணங்களை விளக்கிக் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்குஅறிவிக்கவேண்டும்.

பொருளாதாரச் சீர்திருத்தங்கள்:- கோல்புறூக்கின்சிபார்சுகளில் முக்கியமான பிறிதொன்று இராசகாரிய முறை ஒழிப்பாகும். இம்முறை பண்டுதொட்டு நிலவிவந்த ஒரு வழக்கமாகும். இதன் கீழ் நிலத்தை வைத்திருப்பவர்கள் அரசாங்கத்துக்குச்சேவை செய்ய ஓர் ஆண்மகனை உதவ வேண்டும் என்ற நியதி இருந்தது. கோல்புறூக் வந்த காலத்தில் மக்கள் இராசகாரியத்துக்குப் பதிலாகத் 'தானியவரி' யைக் கொடுக்க கூடியதாயிருந்தது. எனினும் அரசாங்கம் விரும்பியபோதுவேதனத்துக்கோ;வேதனமின்றியோ அவர்கள் வேலை செய்யவேண்டியிருந்தது இம்முறையின்படி ஒருவர் அப்பொழுது ஆண்டில் 15 நாட்கள் வீதிகள்,பாதைகள் அமைப்பதிலும், பாலங்களைத் திருத்துவதிலும் வேதனமின்றி உழைக்கவேண்டியிருந்தது. தாராண்மை வாதியும்,தனி நபர் சுதந்திரத்தில் நம்பிக்கையுள்ளவருமான கோல்புறூக்இதை ஒரு வகை அடிமை முறையாகக் கருதினார். அன்றியும் இம்முறையில்வேறு பல குறைபாடுகளும் காணப்பட்டன. முதலாவதாக, ஒவ் வொருவரது நிலமும் ஒரேயளவானதாயிருக்கவில்லை: இரண்டாவதாக, நிலங்களின்பயனும் விளைச்சலும் வேறுபட்டிருந்தன: மூன்றுவதாக, இம் முறையைக் கைவிட முடியாத நிலையில் மக்கள் இருந்தனர். நாலாவதாக, மக்கள் நிலத்துடன் பிணைக்கப்பட்டமையால் வேறு தொழிலைச் செய்ய முடியவில்லை. எனவே அவர்கள் தொழிற் சுதந்திர மற்றவர்களாயிருந்தனர். மேலும் இம்முறை வர்த்தகம், பயிர்ச்செய்கை முதலியவற்றின் விருத்திக்கும் உதவவில்லை. இறுதியாக, அரசாங்கம் இராசகாரிய முறையில் தங்கியிருக்கும் வரை இது ஒரு அடிமை முறையாகவே அமைந்தது.

இவ்வாறு, தனி நபர் சுதந்திரத்துக்கும் நாட்டு விருத்திக்கும் தடைகல்லாயிருந்த இராசகாரியத்தைஒழிக்க வேண்டும் எனக் கோல்புறூக்சிபார்சு செய்தார். இதன் விளைவாகச் சாதி,சமூக

வேறுபாடுகள் நீங்கவும் மானியப் பொருளாதாரமுறை மாறி வர்த்தகப் பொருளாதாரம் வளரவும் வழி பிறந்தது.

பொருளாதாரத் துறையில் கோல்புறூக் தெரிவித்த இன்னொரு சிபார்சு வர்த்தகத்தில் அரசாங்கத்தின் ஏகபோக உரிமை பற்றியது போத்துக்கேயர் காலம் முதல் கறுவா வர்த்தகம் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாயிருந்து வந்தது இம்முறை நாட்டின் வர்த்தக நலனுக்குத் தீங்கானது என்றும் நாட்டின் விருத்திக்குத் தனிப்பட்டோர் முயற்சியும், கட்டில்லா வர்த்தகமும் இன்றியமையாதது எனவும் கூறிய கோல்புறூக் அரசாங்கத்தின் ஏகபோகஉரிமைகளைக்கைவிடுமாறு சிபார்சு செய்தார். இதன் விளைவாக 1833 இல் அரசாங்கத்தின் கோப்பித் தோட்டங்களும், 1835 இல் கறுவாத்தோட்டங்களும் தனிப்பட்டோருக்கு விற்பனை செய்யப்பட்டன.

சமூகச் சீர்திருத்தங்கள்:- இப்பிரிவில் கோல்புறூக் கல்வி பற்றித் தெரிவித்தவைகவனிக்கத் தக்கவை. கோல்புறூக் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை வற்புறுத்தினார். தாம்புகுந்ததும்மாற்றங்களால் மக்கள் பலனடைவதாயின் அவர்களின் வாழ்க்கைச் சித்தாந்தம் மாறவேண்டுமெனவும் அம்மாற்றம் ஆங்கிலக் கல்வியின்றியும், மேல் நாட்டுக் கருத்துக்களைப் பின்பற்றுமலும் சாத்தியமில்லை எனவும் அவர்கருதினர். மேலும் ஆட்சியில்பங்கு பற்றவும், வெளியுலகத்துடன் தொடர்புகொள்ளவும், ஆங்கிலம்அவசியம் என அவர்கள் எண்ணினர். எனவேஆங்கிலக் கல்வியை விருத்திசெய்யுமுகமாக அம்மொழிப் பாடசாலைகளுக்குஅதிக உதவியை அளிக்குமாறும் கொழும்பிலிருந்த செமினறியைச் சீர்ப்படுத்துமாறும், கோல்புறூக் சிபார்சுசெய்தார் அத்துடன் ஆசிரியர்கள் ஆங்கில ஆறிவுடையவராயிருக்க வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. நாட்டிலுள்ளபாடசாலைகளின் குறைபாடுகளைக்கவனிக்கவும், திருத்தங்களை மேற்கொள்ளவும் ஒரு பாடசாலைக்குழுவை நிறுவுமாறும் அவர் தகவுரை கூறினார். அக்குழுபாடசாலைகளில் நியமிப்பதற்கேற்ற ஆசிரியர்களைச் சிபார்சு செய்தது. மேலும் மிஷன் பாடசாலைகளிலிருக்குமிடத்தில் அரசாங்கப் பாடசாலைகளை நிறுவவேண்டியதில்லை எனவும் கோல்புறூக் தெரிவித்தார்.

நீதிபாலனச் சீர்திருத்தங்கள்:- இவை கமிறனல் சிபார்சு செய்யப்பட்டன, 1833 பெப்ருவரி 18இல் வெளியிடப்பட்ட பட்டயத்தில் இவை அடங்கியுள்ளன. கமிறன் வந்த காலத்தில்

நரட்டின் நீதி பாலனம் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டுக் காணப்பட்டது. கமிறன் அதைக் கண்டித்து, நாடு முழுவதுக்கும் பொதுவான ஒரு நீதிபாலன அமைப்பைச் சிபார்சு செய்தார். மேலும் ஐரோப்பியருக்கென விசேடகுடியியல், நீதிபாலனம் அவசியமற்றதென்றும், உயர்நீதிமன்றத்தின் குடியியற் பாலனம் மேலும்விரிவு படுத்தப்பட வேண்டுமென்றும் நீதி மன்றுகள் ஆள்பதியின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு உயர் நீதிமன்றின் கீழ்க்கொண்டுவரப்பட வேண்டுமென்றும், குற்ற வழக்குகளில் பூரி முறையான விசாரணை பின்பற்றப்பட வேண்டு மெனவும் சிபார்சு செய்தார் மேலும்மாவட்டங்களிலுள்ள நீதிமன்றுகளின் தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றுக்கு மேன் முறையீடு செய்யும் உரிமையும்மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனக் கமிறன் கருத்துத் தெரிவித்தார். கமிறன் சிபார்சுகள் நிதிபாலனத் துறையில் சகல இனமக்களுக்கும் சாதி,மத பேதமின்றிச்சமத்துவத்தை ஏற்படுத்தின எனலாம்.

கோல்புறூக்-கமிறன் சிபார்சுகளின் குறை நிறைகள் :-

கோல்புறூக்-கமிறன் சிபார்சுகள் முற்கால ஆட்சிக்கும் தற்காலஆட்சிமுறைக்கும் இடையே ஒரு பிரிகோடாக அமைவதாக C.C. இமண்டிஸ் கருதுகிறார். அவை இலங்கையின்இக்கால அரசியல் பொருளாதார சமூக விருத்திக்கு வித்தாயமைந்தனஎனலாம்.முதலாவதாக, அச்சீர்திருத்தங்கள் நாடுமுழுவதையும்ஒரே மாதிரியாகநிர்வாக; நிதிபாலன அமைப்பின் கீழ்ஒன்றுபடுத்தின. இரண்டாவதாக, இராசகாரிய முறை ஒழிப்பினால் சமூகஏற்றத்தாழ்வுகளுக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது: மானியகாலச் சமூதாய அமைப்பு தகர்க்கப்பட்டது; தனி மனிதனின் சுதந்திரம் பேணப்பட்டது: வர்த்தகம், பயிர்ச்செய்கை முதலியன புத்துயிர் பெற்றன. மூன்றுவதாக: ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சியினால் பல இனத்தவரிடையேயும் பிணைப்பு ஏற்பட்டது சுதேசிகள்: அரசியல், நிர்வாகஅனுபவம் பெற்றனர்; பல புதிய கருத்துக்களையும், அரசியற் தத்துவங்களையும் தெரிந்துகொண்டனர். இவை பிற்காலச்சீர்திருத்தங்களுக்குத் தூண்டுகோலாயின நாலாவதாக அரசியலமைப்புமாற்றங்கள்: சர்வாதிகாரத்துக்கு முற்றுப்புள்ளிவைத்ததோடு சட்டத்தின் ஆட்சியைநிலைநாட்டின. தனி மனிதனின்உரிமைகளைப் பேணிச் சனநாயக ஆட்சிக்கு வழி திறந்துவிட்டன. சட்டக்கழகத்தில் பொதுமக்கள் பங்கு பற்றியமை பிற்காலத்தின் பிரதிநிதித்துவஆட்சிக்குவித்தாகியது.ஐந்தா

வதாக, அரசாங்கத்தின் ஏகபோகவர்த்தக உரிமை நீக்கப்பட்டமை, பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையின் விருத்திக்கு அடிகோலியது. இதனால் வர்த்தகமும்வளர்ந்தது. மேலும் பத்திரிகைகள் பலவெளிவரவும், கருத்துச்சுதந்திரத்தைப்பேணவும்கோல்புறூக் கமிறன் சிபார்சுகள் உதவின.

ஆயினும் அவற்றில் சிலகுறைபாடுகளும் உள்ளன. முதலாவதாக, குடியியற் சேவைபற்றிய சீர்திருத்தங்கள் அதைச் சீர்குலைத்துவிட்டன. குறைந்த வேதனம், ஒய்வு காலவேதனமின்மை, முதலியன அச்சேவையைச் செயலிழக்கச் செய்துவிட்டன. மேலும் சட்டக்கழகத்திற்குத் தெரியப்பட்ட ஆறு சுதேசிகள் தாமும்சமூகத்தில்உயர்நிலையிலிருந்தபடியால்சாதாரணமக்களின் குரல் அங்கு ஒலிக்கவில்லை. அன்றியும் இராசகாரியம் ஒழிக்கப்பட்டதனால் நிலங்கள் கைவிடப்பட்டன பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்தது, குற்றச் செயல்களும்அதிகரித்தன கிராம வாழ்க்கை சீரழிந்தது இறுதியாக கண்டியும், கரையோரப் பிரதேசமும் இணைந்தபடியால் பிற்போக்கான கண்டிய மக்கள் ஏனையோரால் சுரண்டப்பட்டனர்.

வினாக்கள்

1. கோல்புறூக்-கமிறன் குழுவினரின் பிரதான சிபார்சுகளைத் தொகுத்தெழுதுக.
2. கோல்புறூக்-கமிறன் சிபார்சுகள் இலங்கையின் வரலாற்றில்ஒரு திருப்பத்தைஏற்படுத்தின எனக்கூறலாமா?
3. இராசகாரியம் என்றால் என்ன? அதை ஒழிக்குமாறு கோல்புறூக் சிபார்சு செய்த தேன்?
4. கோல்புறூக்-கமிறன் குழுவின் சிபார்சுகளிலுள்ள நிறை குறைகளை ஆராய்க.
5. கோல்புறூக்குழுவினர் அக்காலத்தியகுடியியற் சேவை நீதி பாலனம் பற்றித் தெரிவித்த கண்டனங்களைக் குறிப்பிடுக.

அத்தியாயம் 8

பிரித்தானியர் ஆட்சி பலப்படுதல்

கோல்புறூக்-கமிறன் சீர்திருத்தங்கள் இலங்கையின் வரலாற்றில் ஒருபிரதான திருப்பமாயமைந்தன. அவை நாட்டின் பண்டையபொருளாதார; சமுதாயக் கட்டுக்கோப்பைப் புனரமைத்து அதைத் தற்காலப் பாதையில் திசை திருப்பின இதன் விளைவாகப் புதிய இலங்கை ஒன்று உருவாகியது எனக்குறிப்பிடலாம்;

கோல்புறூக்-கமிறன் சிபார்சுகளைச் செயல்படுத்தும்பொறுப்பு ஆள்பதி ஹோட்டனின் தலையில் விழுந்தது. கோல்புறூக்-கமிறன் விசாரணைக் குழுவின் நியமனத்திற்கு மூலகாரணமாயிருந்தவர் இவரே. இவர் இலங்கையைப்பற்றி முன்னரே அறிந்திருந்தாராதலின்இங்குள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பது எளிதாகியது. ரெபேட்ஹோட்டன் 1831 முதல் 1837 வரை ஆள்பதியாகக் கடமையாற்றினர். அவர் காலத்திலேயே சட்டநிர்வாக, சட்டநிரூபண சபைகள் முதல்முதல் செயல்படத் தொடங்கின

சட்டக் கழகம் நிறுவப்படுதல் :- 1833 ஆம் ஆண்டில் முற்பகுதியில் மன்னர் சட்டக்கழகத்தை நிறுவுவதற்கான ஆணையைப்பிறப்பித்திருந்தார். ஆயினும் அதைமுறைப்படி கூட்டுவதற்குச் சிலகாலம் சென்றபடியால் முதலாவதுகூட்டம் 1-10-1833 இல் தான் நடந்தது, அப்பொழுதும் அதில் உத்தியோகப் பற்று உள்ளவர்கள் மட்டுமே கலந்துகொண்டனர், ஏனெனில் உத்தியோகப்பற்றற்ற ஆறுபேரை நியமிப்பதில் ஹோட்டன் ஆர்வம் காட்டவில்லை சுதேசிகள் எவரும் அந்நியமனத்துக்குத் தகுதியுடையவராயில்லையென்றும் ஐரோப்பியரேவரும் அன்நியமனத்தில் அக்கறையுடையவரா யிருக்கவில்லையென்றும் அவர் விளக்கம்கூறினர். ஆயினும் குடியேற்றநாட்டுச் செயலாளரின் வற்புறுத்தலின்பேரில் அவர் ஐரோப்பிய தோட்டக்காரர் மூவரையும் ஒரு பறங்கியரையும் நியமித்த பின்னர் அப்போதிருந்த சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பாளர் இருவரையும் இணைப்பாறச் செய்து அவர்களைச் சுதேசிகளுக்காக நியமனம்

செய்தார். இவ்வாறு நியமனம் பெற்ற முதலாவது தமிழர் முதலியார் ஆ குமாரசாமியாகும்.

சட்டக்கழகம் வெளிப்பார்வைக்கு ஒரு தாபனமாயிருப்பினும், அதன் பயன் குறைவாயிருந்தது. ஏனெனில் அதில் பங்கு பற்றிய உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர் அறுவரும் அங்கு கொண்டுவரப்பட்ட விடயங்களைப் பற்றித் தமது கருத்துக்களைப் பரிமாறுதலுடன் நிறுத்திக் கொண்டனர். அவர்களிடம் வேறு அதிகாரமெதுவும் இருக்கவில்லை. அவர்கள் ஆட்சேபித்தாலும் ஆள்பதி அதனைப் பொருட்படுத்தாது ஒரு சட்டத்தைக்கொண்டுவர முடியும். மேலும் உத்தியோகப் பற்றற்றவர் சிலராகவேயிருந்ததும் ஒரு இடர்ப்பாடாயிற்று இக்காரணங்களினால் ஆள்பதியின் அதிகாரம் இன்னமும் எதிர் பார்த்த அளவுக்குக் குறையவில்லை.

குடியியற் சேவைச் சீர்திருத்தங்கள் :- கோல்புறூக் கமிறன் சிபார்சுகளின் விளைவாகக் குடியியற் சேவை சீர்குலைந்து செயலற்றுநிலைக்கு வந்திருந்ததை அறிந்த ஆள்பதி ஹோட்டன் அதைச் சீர்திருத்த வேண்டிய அவசியத்தைக் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அறிவுறுத்தினர். குறைவான வேதனம், ஒய்வுகால வேதனமின்மை திறமையினடிப்படையிலன்றிச் சேவை மூப்பினடிப்படையில் பதவி உயர்வு, முதலியவற்றினால் திறமையுள்ள பலர் இச்சேவையிற்சேராது ஒதுங்கிக்கொள்ளத்திறமையற்றோரே இதைப் புகலிடமாகக் கொண்டனர்.

எனவே ஆள்பதி ஹோட்டன் இது பற்றி மேற்கொண்ட முயற்சிகளின் பயனாகக்குறைந்த சேவைக் காலத்தையுடையவர்களின் வேதனம் அதிகரிக்கப்பட்டதோடு, அதிக சேவைக்காலத்தையுடைய(பழைய) வர்களின் ஒய்வுகால வேதனம் கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டது ஆயினும் 1833ம் ஆண்டுச்சுப் பின்னர் நியமனம் பெற்றோருக்கு ஒய்வுகால வேதனஉரிமை அளிக்கப்படவில்லை.

ஹோட்டனுக்குப்பின்னர் ஆள்பதியாகிய ஸ்ருவட்மக்கன்ஸியும் (1837--41) குடியியற் சேவையிற் சில சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். எல்லாப் புதுச்சேவையாளர்களும் ஒரு அரசாங்க முகவரின் கீழ் 6 முதல் 9 மாதகாலம் உதவியாளராகப் பணியாற்றிப் பயிற்சி பெற வேண்டுமெனவும், அரசாங்க முகவர் அவர்கள் தகுதியுடையோர்எனச்சிபார்சு செய்தாலே மட்டும்

நியமனம் நடைபெறும் எனவும் இவர் காலத்தில் விதிக்கப்பட்டது. ஸ்ருவட் மக்கென்சிக்குப் பின்னர் ஆள்பதியாகிய சேர் கொலின் காம்பெல் (1841—47 காலத்திலும் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவர்காலத்தில் குடியேற்ற நாட்டுச் செயலாளராயிருந்த ஸ்ரான்லி பிரபு குடியியற் சேவையைப் புனாமைப்பதன் அவசியத்தை உணர்ந்து அதற்கேற்ற பல நடவடிக்கைகளை மேற்கொண்டார் 1844ம் ஆண்டு அவரால் விடுக்கப்பட்ட கட்டளை குடியியற் சேவையாளர் இலாபத்திற் காகப் பயிர்ச்செய்கையிலோ வர்த்தகத்திலோ ஈடுபடுதலைத் தடை செய்தது. அவ்வாறு இதுவரை ஈடுபட்டவர்கள் நியாயமான கால எல்லைக்குள் தமது சொத்துக்களை விற்றுவிட வெண்டும் அல்லது இராப்பாற வேண்டும் என விதித்தது.

இதன் மேல் 1845ல் விடுக்கப்பட்ட ஒரு கட்டளையின் படி 1832க்குப் பின்னர் சேர்ந்த குடியியற் சேவையாளருக்கு ஓய்வு காலவேதனம் அளிக்கும் ஒரு திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அத்துடன் குடியியற் சேவையாளர் உடல் நலக் குறைவினாலன்றிவேறு காரணங்களுக்காக 55 வயதுக்கு முன்னர் சேவையை விட்டு நீங்கினால் அவர்கள் ஓய்வுகால வேதனத்தைப் பெறமாட்டார்கள் எனவும் குடியியற் சேவையாளர் தெரிவு ஒரு புகுமுகத் தேர்வின் மூலம் நடைபெறுமென்றும் விதிக்கப்பட்டது. மேலும் ஒரு மாவட்டத்தில் ஏற்படும் குடியியற் சேவை வெற்றிடத்தை நிரப்புவதாயின் அங்குள்ள மொழியில் சேவையாளர் அறிவுடையவராயிருக்கவேண்டுமெனவும், பதவி உயர்வு திறமையின்டிப்படையிலேயே நிகழும் எனவும் அறிவிக்கப்பட்டது. இதன் மேல் 1845 இல் விடுக்கப்பட்ட ஒரு கட்டளை 1844ம் ஆண்டுக்கட்டளையைத் திருத்தியமைத்தது. இக்கட்டளை குடியியற்சேவையாளர்குடியிருப்புக்கு வேண்டியநிலத்தைத் தவிரவேறெதையும் வாங்கக் கூடாதெனவும், உற்பத்திப் பொருட்களை விற்பனைசெய்யக் கூடாதென்றும் 1844க்குப் பின்னர் வாங்கப்பட்டதோட்டங்களை விற்க வேண்டுமென்றும். அதற்கு முன்னர் வாங்கியவற்றை வைத்திருப்பதாயின், தமது கடமைகளைச் செய்வதை எவ்விதத்தாலும் பாதிக்காதவாறு அவற்றை நிர்வகிக்க வேண்டும் எனவும் விதித்தது.

மேற் குறிப்பிட்ட சீர்திருத்தங்களின் பயனாகக் குடியியற்சேவை மீண்டும் சிறந்த முறையில் இயங்கத் தொடங்கியது. மேலும் கோல்புறூக் ஐந்தாகக்குறைந்த மாகாணங்களின் பரப்பு அதிகமாயிருந்தபடியால் நிர்வாகம் சிறப்பாக நடைபெறவில்லை அத்துடன் போதிய போக்குவரத்து வசதி இல்லாத அக்காலத்தில் பெரிய மாகாணங்களின் உட்பகுதிகளின் தேவைகளை அறிதலும் நிறைவேற்றுதலும் சிரமமானதாயிருந்தது. இக்காரணங்களினால் மாகாணங்களின் தொகையை அதிகரித்தல் அவசியமாயிற்று. எனவே 1845 இல் சிலாபம், புத்தளம் குருநாகல் என்னும் பகுதிகளை உள்ளடக்கியதாய் வடமேல் மாகாணம் ஒன்றுபுதிதாக அமைக்கப்பட்டது. அதேசமயம் இரத்தினபுரிப் பிரிவு தென்மாகாணத்திலிருந்து நீக்கப்பட்டு மேல்மாகாணத்துடன் இணைக்கப்பட்டது. இம்மாற்றங்கள் குடியியற் சேவை மேலும் திறம்படச் செயல்படுதற்கு உதவின.

பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையின் விருத்தி : ஆள்பதி எட்வேட்பான்ஸ் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச்செய்கை இக்காலத்தில் (1835-47) பெருந்தோட்டமுறையில் பெருமளவு விருத்தியடைந்தது. மேற்கிந்திய தீவுகளில் தொழிலாளருக்கு ஏற்பட்டதட்டுப்பாடு, பிரித்தானியாவில் இலங்கையின் கோப்பிக்குவிதிக்கப்பட்டவரி குறைக்கப்பட்டமை ஐரோப்பிய நாடுகளில் (சிறப்பாக பெல்ஜியம் பிரான்ஸ்) கோப்பி நுகர்ச்சி அதிகரித்தமை முதலியன இலங்கையின் கோப்பிச்செய்கையின் எழுச்சிக்கு உதவின. மேலும் நிலம்வாங்குவதில் அதுவரையிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதும் இராசதானியமுறையின் ஒழிப்பும் பலரும் கோப்பிச்செய்கையில் ஈடுபட உதவின. அன்றியும் ஆர். பி. ரைற்லர் என்பவர் ஜமேக்காத்தீவில் கோப்பிச்செய்கையில் புதிய முறைகளைக் கற்றுலந்து அவற்றை இங்கு புகுத்தினார். இதனால் விளைச்சல் கணிசமாக அதிகரித்தது

கோப்பிச்செய்கையில் முதல் முதல் ஈடுபட்டவர்கள் இங்கிருந்த உயர்தர அதிகாரிகளாவர். ஆள்பதி ஸ்டுவேட்மக்கென்சி தாமே 2264 ஏக்கர் தோட்டமொன்றை வைத்திருந்தார். அதே சமயம்படைத்தளபதி 2361 ஏக்கர் தோட்டமொன்றின் உரிமையாளராஞர் இக்காலத்தில் 1 ஏக்கர்நிலம் 5 சிலிங்கிற்கு (60 சதம்) விற்கப்பட்டது கவனிக்கத்தக்கது. இவ்வாறு பலரும் 'கோப்பிப் பைத்தியத்தினால்' பீடிக்கப்பட்டமையினால் கண்டிப்பிரதேசத்தி

விருந்தகாடுகள் மேடுகள் கரம்பைகளெல்லாம் கோப்பித் தோட்டங்களாகக் காட்சியளித்தன; இவ்வாறு 1845 இல் மொத்தம் 367 தோட்டங்கள் காணப்பட்டன. அவற்றின் 38000 ஏக்கராகும். இவற்றில் 30 இலட்சம் பவுன்முதலீடுசெய்யப்பட்டது.

இவ்வாறு பாண்ஸ் காலத்தில்சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச் செய்கை 1815 அளவில் 10 இலட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் ஈட்டித்தரும் ஒரு பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை யாகியது அவ்வாண்டில் 2 இலட்சம் அந்தர் கோப்பி ஏற்றுமதி செய்யப்பட்டது(1937இல் 30,000 அந்தர்)

ஆனல் கோப்பியின் எழுச்சி நீடித்து நிலைக்கவில்லை. 1847-49 காலத்தில் அது சடுதியாக வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு உள்நாட்டு நிலைமைகளும் வெளிநாட்டுநிலைமைகளும் காரணமாயின. பிரதமர் பீல் இலங்கையத்தவிர்ந்த ஏனையநாடுகளின்(யாவா, பிறேசில்) கோப்பியின் மீது விதிக்கப்பட்ட வரியைக் குறைத்தமையினல் இங்கிலாந்தில் பிறநாட்டுக் கோப்பிபெருந் தொகையாகக் குவிந்தது. அதன் விளைவாகக்கோப்பியின் விலைவீழ்ந்தது. அதேசமயம் அக்காலத்தில் இலங்கையின் கோப்பி உற்பத்தி அதிகரித்திருந்தது. மேலும் 1847-49 காலத்தில் இங்கிலாந்தில் பணநெருக்கடி ஏற்பட்டமையினல் மக்கள் கலப்புக் கோப்பியை அதிகமாகக்குடிக்கத் தொடங்கினர். இதனல் இலங்கைக் கோப்பி விற்பனையின்றித் தேங்கியது. அன்றியும் 1846 க்குப் பின்னர் தென்னிந்தியத் தொழிலாளர்கள் குறைந்த தொகையிலேயே இங்கு வந்தனர். இதனல் தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்பட்டபோது அவர்களின் வேதனம்உயர்ந்தது. மேலும் போக்குவரத்துவசதிகள் கோப்பியின் விருத்திக்கு ஏற்ப அதிகரிக்காமையினல் உற்பத்தி செய்யப்பட்ட கோப்பியைக் கொழும்புக்குக் கொண்டுசெல்வது அதிக செலவை ஏற்படுத்தியது. நாட்டின் பொருளாதார நிலையும் போக்குவரத்துப்பாதைகளின் பராமரிப்பின்மைக்கு ஒரு காரணமாயிருந்தது. அன்றியும் இக்காலத்தில் எலிகளும் ஒருவகை மூட்டைப் பூச்சியும் கோப்பிச் செடியை அழித்து விளைச்சலைக் குறைத்துவிட்டன.

இவற்றிலும் முக்கியமான காரணங்கள் தோட்டங்களைப் பற்றியவை. பலர் விரைவாகப் பணக்காரராகலாம்என்ற அவா

வில் அதிகவிலை கொடுத்து நிலத்தை வாங்கியிருந்தனர் அப்போது நிலத்தின் தன்மை, செழிப்பு, கோப்பிக்கு அது ஏற்றதா என்பன கவனிக்கப்படவில்லை இதனால் விளைச்சல் வீழ்ந்தது மேலும் பயிர்ச்செய்கையில் போதியகவனமின்மை; போதிய கண்காணிப் பின்மை அநாவசியமான செலவுகள் மண், காலநிலை என்பவை பற்றிய அறிவின்மை முதலியனவும் கோப்பிச்செய்கையில் பலர் நட்டமடைய உதவின இவற்றின் விளைவாகப் பலர் தமது தோட் டங்களை விற்றுவிட்டுக் கோப்பிச் செய்கைக்கு முழுக்குப்போட் டனர். 1842 ல் 1500பவுனுக்குவாங்கப்பட்டஒருதோட்டம் 1847 இல் 50 பவுனுக்கு விற்கப்பட்டமை கோப்பியின் வீழ்ச்சி எத்த கையது என்பதை விளக்கும்.

போக்குவரவின் விருத்தி கோப்பிச்செய்கை மலைநாட்டின்மூலை முடுக்கெல்லாம் பரவியதன் விளைவாகப் போக்குவரத்து வசதிக ளின் தேவைபடுதியாக அதிகரித்தது. உற்பத்திப் பொருட்களைக் கொழும்புக்குக் கொண்டுசெல்வதற்கும் பெருந்தோட்டங்களுக் கும் தொழிலாளர்களுக்கும் தேவையானவற்றை எடுத்துச்செல்வ தற்கும் விரைவான போக்குவரத்து இன்றியமையாததாயிருந்தது அத்துடன் புதிய தோட்டங்களைத் திறப்பதற்கும் வீதிகள் அவசி யமாயின இக்காரணங்களை முன்வைத்துப் பெருந்தோட்டஉரிமை யாளர்கள் வீதிகளை அமைக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தி னர். கோப்பி வர்த்தகத்தில் அதிகலாபமீட்டிய அரசாங்கம் அக் கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்துத் தன்னால் ஆனதைச் செய்தது.

ஆள்பதி ஹோட்டன், பாண்ஸ் காலத்தில் நிறுவப்பட்டவீதி களைப் பழுது பார்ப்பித்ததோடு கண்டியையும்வதுளையையும் இரு வீதிகளால் இணைக்கும் வேலையை முடித்தார் மேலும் கொழும்பு யாழ்ப்பாணம் வீதியும், கொழும்பு திருகோணமலை வீதியும் கொழும்பு–அரிப்பு வீதியும் இவர்காலத்திலேயே மூற்றுப்பெற் றன. இவருக்குப் பின்னர் ஆள்பதி மக்கென்சி வீதிகளைத்திருத் துவதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தினார். அவர் காலத் தில்(1841 இல்) கொழும்பு கண்டி வீதிக்கும், அம்பேபுஸ் குரு நாகல் வீதியின் ஒரு பகுதிக்கும் கல் பதிக்கப்பட்டது: அவருக் குப் பின்னர் கொலின் காம்பெல், இரத்தினபுரி இறக்குவானை வீதியையும் அவிசாவலை எட்டியாந்தோட்டை வீதியையும் அமைப்பித்தார். களுத்துறை அகலவத்தைவீதி; காலி பத்தே

கம்மீதி, வியாங்கொடை நீர்கொழும்பு வீதி, குருநாகல், புத்தளம் வீதி ஆகியனவும் இக்காலத்திலேயே அமைக்கப்பட்டன. இவ்வீதிகள் நாட்டின் நாலாபக்கங்களையும் தலைநகருடன் இணைத்ததோடு பெருந்தோட்டங்களின் தேவையையும் பூர்த்திசெய்தன. அத்துடன் நாட்டை ஒன்றுபடுத்திப் பிரித்தானிய ஆட்சிபலமடைவதற்கும் இவை பெருமளவில் உதவின எனலாம்.

கல்விப் புனரமைப்பு :- 1823—48 காலத்தி ஏற்பட்ட முக்கியமான சம்பவங்களில் கல்விப் புனரமைப்பும் ஒன்றாகும். ஆள்பதி ஹோட்டன், கோல்புறூக் சிபார்சுக்கமையவே கல்விக் குழுவை 1834இல் அமைத்தார். இக்குழு பாடசாலைகளின் நிர்வாகத்தைக் கவனித்ததோடு, அரசினர் பாடசாலைகளில் நியமனம் செய்வதற்கேற்ற ஆசிரியர்களையும் சிபார்சு செய்தது. இக்குழு அரசாங்க முகவர், பிரதான குடியியல், நீதிபாலன அதிகாரிகள், மதகுருமார் முதலியோரை உறுப்பினராகக் கொண்டிருந்தது. இதன் கீழ் எல்லா மாகாணங்களிலும் கிளைக் குழுக்கள் நிறுவப்பட்டன. அவற்றில் அரசாங்க முகவருடன் மாகாண நீதிபதி ஆங்கில மதபோதகர் ஆகியோர் அங்கம் வகித்தனர். இவற்றைத் தொடர்ந்து 1839ல் கொழும்பு அக்கடமி (இன்று ரோயல் கல்லூரி) ஆரம்பிக்கப்பட்டது. கத்தோலிக்கர்களும் அவ்வாண்டு அரசாங்க உதவியுடன் ஒரு ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தனர்.

இதற்குப் பின்னர் 1841 ல் மத்திய பாடசாலைக்குழுவொன்று தாபிக்கப்பட்டது. இக்குழுவில் முதல் முறையாக ஒரு கத்தோலிக்கரும் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவ்வாறு இக்காலத்தில் அரசாங்கப் பாடசாலைகள், மிஷன் பாடசாலைகள் தனியார் பாடசாலைகள் என மூன்று வகையான பாடசாலைகள் இயங்கிவந்தன. ஆயினும் இவற்றுள் மிஷன் பாடசாலைகளே சிறந்த முறையில் இயங்கிவந்தன.

பத்திரிகைகளின் வளர்ச்சி :—கோல்புறூக் சிபார்சுகள் தனிப்பட்ட பத்திரிகைகள் சில வெளிவருவதற்கும் உதவின. இதுவரை அரசாங்கத்தின் செய்தி மடல் மட்டுமே ஒரு பத்திரிகையைப் போலப் பவனி வந்தது. 1832இல் அரசாங்கம் கொழும்புச் சஞ்சிகை என்றபெயரில் ஒரு பத்திரிகையைத் தொடங்கி

யது. ஆயின் அது 1833 இல் நிறுத்தப்பட்டது. இதன்பின்னர் கொழும்பு வர்த்தகர்கள் பலர் ஒன்றுகூடி 4-2-1834 இல் ஒப்சேவர் பத்திரிகையை ஆரம்பித்தனர். இப்பத்திரிகை ஆரம்பத்திலிருந்தே அரசாங்கத்தின் கொள்கைகளைக் கண்டித்து வந்தது. இதனால் 1837 இல் அரசாங்கத்தை ஆதரிக்கும் குரோனிக்கிள்' என்னும் பத்திரிகை வெளியிடப்பட்டது. இது அடுத்த ஆண்டில் சிலோன் ஹெரால்ட் என்னும் பெயருடன் வெளிவந்தது. பின்னர் 1846 யூலை மாதம் மீண்டும் பெயர்மாறி ரைம்ஸ் பத்திரிகையாக வெளியிடப்பட்டது. அவ்வாண்டு எக்சாமினர் என்னும் புதிய பத்திரிகையொன்றைச் சில சட்டவல்லுனர் (பெரும்பாலும் பறங்கியர்) வெளியிட்டனர். ஆயினும் அப்பத்திரிகை 1900 இல் நிறுத்தப்பட்டது.

பத்திரிகைகளின் வளர்ச்சியின் விளைவாகப் பொதுமக்கள் அரசாங்கத்தின் குறைபாடுகளை அறியத்தொடங்கினர். இதுபிற்காலச் சீர்திருத்தங்களுக்குப் பெருமளவு உதவியது.

வினாக்கள்

1. 1832-50 காலத்தில் கோப்பிச்செய்கை விருத்தியடைந்தவரலாற்றையும் அது 1847 அளவில் வீழ்ச்சியடைந்ததற்குரிய காரணங்களையும் கூறுக.
2. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையின்போக்குவரத்து விருத்தியை ஒரு புறவரிப்படத்துடன் விபரி.
3. 1833-50 காலத்தில் குடியியற்சேவையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களைத் தொகுத்தெழுது.
4. வரலாற்றுக் குறிப்பெழுதுக- ஹோட்டன் 1834 ஆம் ஆண்டுக் கல்விக்குழு.

அத்தியாயம் 9

1848ம் ஆண்டுப் பின்னிடைவு (கலகம்)

ஆள்பதிகள் ஹேஸ்டன், மக்சென்சி, கம்பெல் ஆகியோரின் ஆட்சிக் காலம் (1813-17) பிரித்தானியரின் ஆட்சி பலப்படவும் நாடு ஒன்றுபடுதற்கும் வேண்டிய அமைதியுடன் காணப்பட்டது. ஆனால் அக்காலத்தில் நாட்டின்பொருளாதார, சமூக அரசியல் அமைப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கம் ஆட்சிக்கெதிராக மக்களைத் தூண்டி விட்டது அவ்வெழுச்சியே 1848ம் ஆண்டுக்கலகமாகும். இக்கலகம் 1818ம் ஆண்டுக் கலகத்தைப்போலப் பரவலாக ஏற்படவில்லை. ஆயினும், அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பேய், என்பதுபோல் பிரித்தானியர்கள் இதையொரு புரட்சி எனப் பிழையாக மதிப்பிட்டுப்பாரதூரமான நடவடிக்கைகள் மூலம் அடக்கிவிட்டனர்.

1848ம் ஆண்டுக் கலகம் அன்னியர் ஆட்சியின் மீதுவளர்ந்து வந்த மக்களின் வெறுப்பின் இரண்டாவது வெளிப்பாடாகும் இதைத் துரிதப்படுத்திய காரணிகள் கோல்புறூக்சிபார்சுகளின் விசாரணைகளென்ன: இதன் உடன் காரணங்கள் ரொறிங்ரன் ஆளபதியின் பிடிவாதக்குணமும், அவர் விதித்த பல புதியவரிகளும் 1848ம்ஆண்டு வீதிச்சட்டமுமாகும். ஆயின் இக்கலகத்தின் பிரதான காரணங்கள் கண்டியர்களின் சட்டத்துக்குக் கீழ்ப்படியாத்தன்மை, குடியியற் சேவையின் திறமையின்மை, பிரதானிகள் விரோதிக்கப்பட்டமை: அவர்களின்செல்வாக்குக்குறைந்தமை கோபிச் செய்கையின்விளைவாகக் கண்டியரின் மனதில் பாதிக்கப்பட்டமை, என L. மில்ஸ் கருதுவதிலும் உண்மையுண்டு இக்காரணங்களைப்பின்வரும் தலைப்புகளின்கீழ் தொகுத்து நாம் ஆராயலாம்.

கலகத்தின் அடிப்படைக் காரணங்கள்

1848ம் ஆண்டுக்கலகத்தின் அடிப்படைக் காரணங்களைக் கோல்புறூக்–கமிறன் சிபார்சுகளின் விளைவுகள், பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையின் தாக்கம், பிரதானிகளினதும் பௌத்த சங்கத்தினதும் அதிருப்தி என மூன்றாக வகைப்படுத்தலாம்.

கோல்புறூக் கமிறன் சிபார்சுகளின் விளைவுகள் :—

கோல்புறூக்-கமிறன் சிபார்சுகளைத் தொடர்ந்து நாடுமுழுவதும்ஒரேவிதமான நிர்வாக அமைப்பின் கீழ் வந்ததினால் சுண்டியர்கள் தமதுதனித்துவத்தை இழந்தனர். புதிய ஆட்சி அவர்களது பிரதேசத்தில் புரட்சிகரமான பல மாற்றங்களைப்புகுத்தியிருந்தது. பேரக்குவரத்துப் பாதைகள், பெருந்தோட்டங்கள் தாழ் பிரதேசச் சிங்களவர், இந்தியர், வெள்ளையர் பணம் இவை தாம் அவர்களின் பாரம்பரிய வாழ்க்கையைப் பாதித்து அவர்களின் தனித்துவத்தை அழித்தன. இவற்றுக்கெதிராக எழுந்த எதிர்ப்புணர்ச்சிதான் 1848ம் ஆண்டுக் காலத்தின் அடிப்படைக் காரணங்களில் மிகமுக்கியமானது.

இரண்டாவதாக, கோல்புறூக்கின்சிபார்சுகளின் விளைவாக இராசகாரியம் ஒழிக்கப்பட்டதனால் பல அனர்த்தங்கள் ஏற்பட்டன. இதன் விளைவாக மக்கள் கட்டாயசேவையிலிருந்து விடுபட்டமையால் ஓய்வு நேரங்களைத் தவறான வழிகளிற் பயன்படுத்திக் களவு, சூது, கொலை முதலிய குற்றங்களைப் புரிந்தனர். சிலர் தமது நிலத்தை விற்றனர், பலர் தமது நிலத்தைப்பயன்படுத்தாது விட்டனர் இதனால் பயிர்ச்செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இராசகாரியம் ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து கம்சபாக்கள் தம் அதிகாரங்களை யிழந்து காகிதப்புலிகளாயின. அவை முன்னர் சமூகத்திற்கு அரிய பணியாற்றிவந்தன. கிராமத்தின் நீர்ப்பாய்ச்சல் வசதிகளையும். பயிர்ச்செய்கையையும் பேணுவதில் அவை பெரும் பங்கு பெற்றன. தன்கடமையிலை தவறுவோர்களைத் தண்டிக்கும் அதிகாரமும் அவற்றிடம் இருந்தது. இப்பொழுது அதைச் செய்யமுடியாத நிலையேற்பட்டது. ஏனெனில் நீதிமன்றங்கள் மட்டுமே தண்டனை விதிக்கும் அதிகாரத்தை யுடையனவாயிருந்தன.

ஆனால் இந்நீதிமன்றுகள் தம் விசாரணையை நடத்த அதிகாலம் எடுத்தன. அதே சமயம் பயிர்ச்செய்கையுடன் தொடர்புள்ள பல சம்பிரதாயங்களும், வழக்கங்களும் சட்டங்களுடன் இணைந்திருந்தமையால், அவற்றைச் சரிவர விளங்கிக்கொள்ள முடியாத பிரித்தானியர் நீதி செலுத்துவது கடினமாயிற்று. அன்றியும்: சிறு குற்றங்களும் தற்போது முறைப்படி நீதிமன்றுகளினூலேயே விசாரிக்கப்பட வேண்டியிருந்ததினாலும் பல வகையான நீதிமன்றுகள் அமைந்திருந்ததினாலும், மக்களின

வழக்காடும்' சுபாவம் மேலும் வளர்ந்தது. இதனால் வழக்குரைஞர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர் அதிக பயனடைய ஏழைக் காரக்காரர்கள் மேலும் வறியவர்களாயினர். அன்றியும் வழக்காடுதலினால் காலம் வீணே கழிந்தபோது பயிர்ச்செய்கையும் கவனிப்பின்றி விடப்பட்டது. இவ்வாறு இராசகாரிய ஒழிப்பும் கம்சபாக்கள் செயலற்றமையும் கிராமீய வாழ்க்கையைச் சீர்குலைத்தன.

மூன்றுவதாக, குடியியற் சேவை பற்றிய கோல்புறூக் சீர்திருத்தங்கள் அச்சேவையைச் செயலிழக்கச் செய்துவிட்டன. ஸ்ராள்லி பிரபுவின் சீர்திருத்தங்களினால் மூன்று ஆண்டுகளுக்குள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை மேலும் 1833க்குப் பின்னர் குடியியற் சேவையிற் சேர்ந்தோர் திறமை குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். அவர்கள் தமது வேதனக்குறைவை ஈடுசெய்வதற்காகக் கோப்பிச் செய்கையில் ஈடுபடலாமென ஒரு சலுகை இருந்தபடியால் பலர் தமதுஉத்தியோக அலுவல்களை உதாசீனம் செய்துவிட்டுத் தோட்டவேலைகளில் கவனம் செலுத்தினர். இதனால் கண்டியர்கள் இவர்களைக் கோப்பித்தோட்டக்காரர் எனவே குறிப்பிட்டனர். அன்றியும் இவர்கள் பலர் சுதேச மொழிகளிற்திறமை பெறவில்லை. இதனால்குடிமக்களின் பிரச்சினைகளை இவர்கள் அறியமுடியாதிருந்தது. மேலும் மெயிற்லாந்து காலத்தில் விதிக்கப்பட்டபடி இவர்கள் தமது நிர்வாகப் பிரிவில் சுற்றுலாச் செல்லும் வழக்கத்தையும் கைவிட்டிருந்தனர். இவ்வாறான நிலைமைகளில் மாகாணங்களின் தொகை குறைந்து அவற்றின் பரப்பு அதிகரித்தமையால் குடியியற் சேவையாளர் குடிமக்களுடன் அறவே தொடர்பற்றிருந்தனர். இவ்வாறு குடியியற் சேவை செயலிழந்ததன் விளைவாகக் குளங்களும், நீர்ப்பாசனக் கால்வாய்களும் கவனிப்பின்றிக் கைவிடப்பட்டன; பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டது. இதனால் மக்கள் ஆட்சியாளர் தம்மீது அனுதாபமற்றவரென்றும் தமது நலன்களைப் பற்றிக் கவலைப்படாதவர் எனவும் கருதத்தலைப்பட்டனர்.

நாலாவதாக, கோல்புறூக்கின் சிபார்சுகளின் விளைவாகச் சட்டக் கழகத்தில் நியமிக்கப்பட்ட சுதேசிகள் சாதாரண குடிமக்களாயிருக்காது செல்வந்தராயும், பெருந்தோட்டக்காரராயுமிருந்தபடியால் அவர்கள் சாதாரணபொதுமக்களின் பிரச்சினை

களை விளங்கவோ, கழகத்தில் விளக்கவோ வல்லவர்களாயிருக்க வில்லை. அதன் விளைவாக ஆளப்பட்டோரின் உண்மையான நிலை மைகளை ஆள்வோர் அறியமுடியாமலிருந்தது.

பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையின் தாக்கம் :—

கண்டிப்பிரதேசத்தில் திறக்கப்பட்ட பெருந்தோட்டங்கள் அங்கு வாழ்ந்தமக்களின் மனதில் ஆட்சிக்கு எதிரான அதிருப்தியை, அதிகரித்தன. ஆள்பதி தொறிங்டன் எமது கோப்பித்தோட்டங்கள் கண்டியரின் கடும் வெறுப்புக்குக் காரணமாகும் எனக் குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது. பெருந்தோட்டங்கள் தாமே கண்டியர்களின் வெறுப்புக்கு இலக்காகவில்லை. அத்தோட்டங்கள் திறக்கப்பட்டதுடன் தொடர்புள்ள பல தொல்லைகள்தான் அவர்களின் மனப்புழுக்கத்திற்குக்காரணமாயின.

முதலாவதாக, பெருந்தோட்டங்கள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து மலைநாட்டில் போக்குவரத்து விருத்தியடைந்தது. இதன் விளைவாக, பெருந்தொகையான கரைநாட்டவர்களும் முஸ்லீம்களும் விரும்பத்தகாதோரும் கண்டிப்பிரதேசத்திற்குள் புகுந்தனர்: இதன்விளைவாகக் கண்டியமக்கள் தமது அந்தரங்க மான அமைதியான வாழ்க்கையில் வீதிகள் தலையிடுவதாகக் கருதினர்.

இரண்டாவதாக, கோப்பித் தோட்டங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் கண்டியர் வசித்தபடியால் அவர்கள் வளர்த்த ஆடு மாடுகள் தோட்டங்களுட் சென்று பயிரழிவை விளைவித்தன. இதைத்தோட்டக்காரர் வெறுத்தனர், அத்துடன் கண்டியர்கள் பத்தனைகளை எரித்தபோதெல்லாம் சில கோப்பித் தோட்டங்களும் பாதிக்கப்பட்டன. இதுவும்தோட்டக்காரரின் வெறுப்புக்கு ஒரு காரணமாயிருந்தது. அதேசமயம் தாம் முன்னர் மேய்ச்சல் நிலமாகப்பயன்படுத்திய காடுகள் தோட்டங்களாவதைக் கண்டியர் வெறுத்தனர்; அத்துடன்கோப்பிச்சக்கையிலுள்நீரோடைகள் அருவிகள் அழுக்கடைவது அவர்களின் ஆத்திரத்தைக்கிளறியது அன்றியும் தம் மத்தியில் வெள்ளையர்களும் மலபார்கூலிகளும் வாழ்வதையும் அவர்கள் அடியோடு வெறுத்தனர்.

மூன்றுவதாக, பிரித்தானியர் பெருந்தோட்ட விருத்திக்காக நிறைவேற்றிய நிலச்சட்டங்கள் முன்னர் கூட்டுரிமையின் கீழ் இருந்தநிலத்தைக்கூறுபோடவும்விற்பனைசெய்யவும் ஏதுவாயின

இதனால் பலர் தமது பங்குகளை விற்பதிலும் எல்லைகளுக்காக வழக்காடுவதிலும் காலத்தை விரயம் செய்தனர். அத்துடன் தோட்டங்கள் திறப்பதற்காக முடிக்குரிய நிலத்தை அரசாங்கம் விற்கமுனைந்தபோதெல்லாம் கண்டியர்களும், நிலத்தை வாங்க வந்தவர்களும் சச்சரவிலீடுபட்டனர். பலசந்தர்ப்பங்களில் கண்டியரிடம் விடப்பட்டிருக்க வேண்டிய நிலங்கள் அவர்களின் ஆட்சேபணைக்கிடையில் விற்பனை செய்யப்பட்டதனால் அவர்களின் வெறுப்பு அதிகரித்தது

நாலாவதாக, அரசாங்கம் பெருந்தோட்டப் பகுதிகளில் சாராயத்தை அறிமுகப்படுத்தியதால் பலர் மதுவுக்கு அடிமையாகினர் சாராயத்தின் நுகர்ச்சியை அதிகரிப்பதற்காகமுதலில் மக்களுக்கு அது இலவசமாகவும்வழங்கப்பட்டது 1833 முதல் 1848 வரையுள்ள காலத்தில் மொத்தம் 153 சாராயத்தவறணைகள் கண்டிப் பிரதேசத்தில் திறக்கப்பட்டன இக்காலத்தில் பணப்புழக்கமும் அதிகரித்திருந்தமையால் குடிப்பழக்கமும் அதிகரித்தது. மேலும் மதுமயக்கத்தினால் பலர் தமது பயிர்களையும் அடகுவைத்து அதை அருந்த முற்பட்டனர். 1847 ஜூன் முதல் 1848 ஜூன்வரையுள்ள காலத்தில் கண்டி, உடுநுவர, உடபலாத்த, உடபுலத்கம என்னும் பிரிவுகளில் வசித்தோர் ஆளுக்குச் சராசரி 2.3 கலன் சாராயம் அருந்தியதாக மதிப்பிடப்பட்டது. இவ்வாறு மதுவின் பாவனை அதிகரித்தமையால் கொலை, களவு, வழிப்பறி முதலிய எல்லாவகையான குற்றச் செயல்களும் மலிந்தன. இதனால் முன்னெருபோது எளிமையான வாழ்க்கையும், அமைதியும் ஒழுங்கும் நிலவிய ஒரு சமுதாயத்தில் சட்டவிரோதச்செயல்களும் ஒழுங்கீனமும் தலைவிரித்தாடின.

இறுதியாக பெருந்தோட்டங்கள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து மலைநாட்டுட் புகுந்த கரையோரச் சிங்களவரும் பிற இன வர்த்தகர்களும் சமூக விரோதிகளும் சுரண்டற்காரரும் அப்பாவியான கண்டி மக்களைப் பல வழிகளிலும் ஏமாற்றியும் சுரண்டியும் வயிறுவளர்ப்பராயினர். இவர்களின் செயல்களும், பல ஐரோப்பியரின் தீய பழக்கவழக்கங்களும் மக்களின் அருவருப்புக்கு இலக்காகின.

பிரதானிகளதும் பௌத்தசங்கத்தினதும் அதிருப்தி:-

1818-ஆம் ஆண்டு கலகத்தின் பின்னர் பிரித்தானியர் பிரதானிகளின் அதிகாரத்தையும். செல்வாக்கையும் குறைப்பதற்காப் பல நடவடிக்கைகள் எடுத்திருந்தனர். இதனால் பிரதானிகள் தாம் முன்பு செலுத்திய அதிகாரத்தையும். முந்திய. அந்தஸ்தையும் செல்வாக்கையும் இழந்து தாழ்நிலையிலிருந்தனர். எனவே தமது நிலைக்குப் புதிய ஆட்சியினரே காரணம் என இவர்கள் எண்ணியதில் தவறொன்றுமில்லை இந்நிலையில் நாட்டில் பலத்தவரும் ஒழுங்கினம். கட்டுப்பாடின்மை முதலியவற்றைச்சுண்டும் காணுது இவர்கள் காலம்கழித்தனர். இவர்களின் ஆதரவு அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்குமானால் கண்டியச் சமுதாயம் அவ்வளவுக்குச் சீரழிந்திருக்காது. மேலும் மாகாணங்களின் தொகைகுறைந்து பரப்பு அதிகரித்ததின் பின்னர் மக்களின் குறைநிறைகளை நேரில் அறிவது சிரமமாயிருந்தது. அக்காலத்தில் பிரதானிகளை நல்லமுறையிற் பயன்படுத்தியிருந்தால் நாட்டில் நிலவிய அமைதியின்மையைப்பெருமளவுகுறைந்திருக்கலாம் ஆனால் ஆட்சியாளர் அவ்வித முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை.

அடுத்ததாக அரசாங்கம்: புத்தசமயத்துக்கும். மகா சங்கத்துக்கும் போதிய பாதுகாப்பு அளிக்கப்படும் என 1818 இல் உறுதியளித்திருந்த போதிரும் பிற்காலத்தில் அது அவ்வுறுதி மொழியை நிறைவேற்றாது தன் கடமையைத் தட்டிக்கழித்து விட்டது. 1815க்குப் பின்னர் அஸ்கிரிய, மல்வத்தை மடாதிபதிகளின் நியமனம் ஆள்பதியினால் செய்யப்பட்டு வந்தது ஆனால் பண்டைச் சிங்கள அரசர்களின் தூண்டுதலின் பேரில் முன் குறிப்பிட்ட மடாதிபதிகளின் நியமனக் கடிதங்களில் ஒப்பமிடமறுத்து விட்டார். இருவருக்குப்பின்வந்த கம்பெல் காலத்தில் தலதாமாளிகைக்குக் காவலாளியாக இருந்த பிரித்தானியர் விலக்கப்பட்டுத்தந்ததாது நிலாமையின் பொறுப்பில் விடப்பட்டது. அத்துடன் ஆண்டுதோறும் தலதாமாளிகைக்கு வழங்கப்பட்டதுவந்த 300டவுன் நல்கொடையும் நிறுத்தப்பட்டது. அரசாங்கத்தில் இச் செயல்கள் பத்த குருபாரிஷதும் பொது மகக ளதும்வெறுப்புக்குஇலக்காகின. இதனால் தமது சமயமும் சம் பிரதாயங்களும் பேணப்படுவதற்காகப்பண்டைய முடியாட்சிக் ஞ்திரும்ப அவர்கள் விழைந்தனர் எனலாம்.

உடன் காரணங்கள் :— ஆள்பதிரொறிங்ரனுல் விதிக்கப்பட்ட பலவிதமான வரிகளும் 1848ம் ஆண்டு வீதிச் சட்டமும் கலகத்தின் உடன் காரணங்களாயிஈ. ரொறிங்ரன் காலத்தில் (குறிப்பாக 1845-47 இல்) கோப்பிவர்த்தகத்தில் வீழ்ச்சி ஏற்பட்டமையினுல் அரசாங்கம் நட்டமடைந்தது. அதன் செலவினங்களுக்குப் பணம் போதவில்லே. 1846ம் ஆண்டுப்பாதீடு (வரவுசெலவுத்திட்டம்) பற்ருக்குறைச்சலைக் காட்டியது. இதனுல் குடியேற்ற நாட்டுச்செயலாளரின் ஆணையின் கீழ் செலவைக்கட்டுப்படுத்தவும், வருமானத்தை அதிகரிக்கவும் பல புதுவழிகளே ரொறிங்ரன் மேற்கொண்டார் புதிய வரிகளே விதிக்கும் அவரதுதிட்டத்துக்குரெனன்ற் அவர்களும்ஆதரவளித்தார் இதன்மேல், கடைகள், படகுகள், வண்டிகள்ஆகியன ஆண்டுக்குக்கு 1பவுன்வரிபாகக் கட்டவேண்டும் என்று விதிக்கப்பட்டது. அத்துடன் முத்திரை வரியும் அதிகரிக்கப்பட்டது. அதனுல் வழக்கறிஞர்களும் வழக்காடுதலில்ஈடுபட்டுள்ளோரும் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இதேசமயம் 'விருந்தை விவகாரம்' கொழும்புப் பறங்கியரின் பலத்த எதிர்ப்பை உருவாக்கியது அங்குவீதிகளே அமைப்பதற்கு இடைஞ்சலாயிருந்த விருந்தைகளே அகற்றுமாறு ரொறிங்ரன் ஒரு கட்டளேயை விடுத்தார், வீதியோரங்களில் வீடுகளேக்கட்டியிருந்த பறங்கியர் தமக்கு நட்டஈடு தருமாறு கோரினர். அவ்விருந்தைகள் 50 ஆண்டுகளுக்கு முன்னரும் இருந்ததாக உறுதிமூலம் நிருபித்தால் அதை வழங்குவதாக ரொறிங்ரன் தெரிவித்தார். ஆனுல் அத்தகைய அத்தாட்சிகள் இல்லாமையினுல் பறங்கியரின் கோரிக்கை பயனற்றுப் போயிற்று. இதனுல் அவர்கள் அரசாங்கத்தை எதிர்க்கத்தொடங்கினர் கிறிஸ்தோபர் எலிபட் இவர்களுக்காக ஒப்சேர்வர் பத்திரிகையில் அரசாங்கத்துக்கெதிரான பிரசாரத்தை மேற்கொண்டார் 3-7-48பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையில் ஆள்பதியின் செயல்கள் பலமாகக் கண்டிக்கப்பட்டதோடு அவரின் செயல்களே எதிர்க்குமாறும் மக்கள் தூண்டப்பட்டனர்.

இம்மிவ்வாருக 1848 ஆண்டு ஒரு வீதிச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன்படி 18 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்டோர் ஆண்டில் ஆறு நாட்களுக்கு வீதியமைக்கும் வேலேயில் ஈடுபடவேண்டும். அல்லது 3சிலிங் வரியாகக்கொடுக்க வேண்டும் என விதிக்கப்பட்டது. பார்வைக்கு இராசகாரியம் போல அமைந்ததனுல் இச்சட்டம் மக்களின் பலத்த எதிர்ப்புக்

குள்ளாகியது. ஏனெனில் கண்டிய மக்களுக்குவீதிகள் தேவைப் படவில்லை. ஆகவே தோட்டக்காரரின் நலனுக்காகவே அச்சட் டம்கொண்டுவரப்பட்டதாக மக்கள்எண்ணினர்.மேலும்ஐரோப் பியரும் தோட்டக்காரரும் 3 சிலிங்வரியைக்கொடுத்து எளிதில் தப்பிக்கொள்ளக்கூடியதாயிருந்த அதேசமயம் சாதாரண குடி மக்கள் பணம் இல்லாமையால் வரியைச் செலுத்தமுடியாது அவ திப்பட்டனர். இவ்வாறு மக்கள் மனக் கொதிப்படைந் திருந்த நிலையில் துவக்குவரி நாய்வரி என வேறுஇருவரிகளும் கொண்டு வரப்பட்டன இது எரிகிற நெருப்பில் நெய்வார்த்ததுபோல் மக் களின் வெறுப்பை மேலும்வளர்த்தது. மிருகங்களிலிருந்து பர் களைக் காப்பதற்குக் கண்டியர் துவக்குகளை வைத்திருந்தனர் அவைபழமையான பெறுமதிகுறைந்த துவக்குகளாகும் ஆனால் அவற்றுக்கு விதிக்கப்பட்டவரி (2சிலிங் 6பென்ஸ்) பெறுமா னத் தில் 20 முதல் 25 வீத அளவாயிருந்தது. இவ்வாறு பல புதிய வரிகளாலும் வீதிச்சட்டத்தினாலும் மக்களின் வெறுப்பும் அதிருப் தியும் அதிகரித்திருந்தவேளையில் அரசாங்கம் நீலஏடு ஒன்றைத்த யாரிப்பதற்கு முனைந்தது. அதற்காக மக்களின் பொருளாதார நிலையைப்பற்றிஅறியும் நோக்கத்துடன் 30 வினாக்களைக்கொண்ட ஒரு வினாக்கொத்துப் பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட் டது. அரசுக்கண்டமக்கள் 30 புதிய வரிகளை விதிப்பதற்காகவே அவ்வினாக்கள் கேட்கப்பட்டன எனச் சந்தேகித்தனர் அதேசம யம் வேறுபலவதந்திகளும்மக்களிடையே பரவின. இவை யெல் லாம் ஒன்றுசேர்ந்து கலகங்களை உருவாக்கிவிட்டன.

கலகத்தின் போக்கு :- 1848 ஆம் ஆண்டுக்கலகம் முதன் முதல் வெளிப்பட்டது கண்டியிலாகும். அவ்வாண்டுயூலைமாதம் 6ம் திகதி துவக்குவரியினால் ஆத்திரமூட்டப்பட்ட3000 மக்களைக் கொண்ட ஒரு கூட்டம் அரசாங்கஅதிபருக்குத் தமது எதிர்ப்பைத் தெரி விக்கத்திரண்டது. அரசாங்கஅதிபர் அவர்களைச் சமாதானம் செய்யமுடியாமற்போகவே படைகள் தருவிக்கப்பட்டன அதன் பின்னர் கூட்டம் கலைந்தது. பின்னர் யூலை 8 ல்ஆளுபதி ரெனன்ற் பிரதானிகள், தலைமைக்காரர்களடங்கிய கூட்டமொன்றில் புதிய வரிகளைப்பற்றிய விளக்கங்களைக்கொடுத்தார். ஆயினும் மக்கள் அவற்றினால் ஏமாற்றமும் அதிருப்தியுமடைந்தனர். இதன் பின் யூலை 16ம் தேதிகொழும்பில் மக்கள் கூட்டமாகத்திரண்டு ஆள் பதியைக் காண்பதற்குக் கோட்டையை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். கொழும்பிலிருந்த 42 பொலிசாரால் நிலைமையைக்

கட்டுப்படுத்தமுடியாமற்போகவே ரொறிந்ரன் படைகளைத் தருவித்தார். ஆனால் அதற்கிடையில் கிறிஸ்தோபர் எலியட் மக்களை ஒருவாறு சாந்தப்படுத்தி விட்டமையால் படைகள் வரு முன்னரே கூட்டம் குலைந்துவிட்டது.

ஆயினும் மலைநாட்டில்—குறிப்பாக மாத்தளைப் பகுதியில் கலகம் ஒரு திருப்பத்தையடைந்தது. அங்கு கொங்கலகொட பண்டாரஎன்னுமொருவன் தோன்றிக் கண்டியரசுக்குப் போலி உரிமை கோரியபோது பொதுமக்கள் பலர் அவனை ஆதரித்தனர். பல பிக்குகளும் அவனுக்கு ஆதரவு நல்கினர். எனவே 20-7-1848 இல் அவன் சம்பிரதாயமுறைப்படிகண்டிய அரசனாக முடிசூட்டப் பட்டான். அவனுக்கு புறுங்அப்பு, டிங்கிரிஹுல எனும் இருவர் உதவியாளராயிருந்தனர். இதன் மேல் புதிய அரசனும் ஆதரவா ளர்களும் யூலை 28 இல் மாத்தளைக்குப் படையெடுத்தனர். அங்கு அவர்கள் பொதுக் கட்டிடங்களுக்கும்சில தோட்டக்காரரின் பங்களாக்களுக்கும்அழிவுவிளைவித்தனர். அதைக் கேள்விப்பட்ட அரசாங்கம் அன்று கண்டி மாவட்டத்தில் படைச் சட்டத்தை அமலாக்கியது. அதன்மேல் கப்பலின் லில்லிதலைமையில் சென்ற படைகள் மாத்தளைக் கலகத்தை அடக்கின. ஆனால் அந்த நாள் குருநாகல் பகுதியிலும் குழப்பங்கள் ஏற்பட்டபோது கப் பலின் வாற்சன் தலைமையில் ஒரு படை அங்கு விரைந்தது. அப்படை வாரியப்பொலை என்னுமிடத்தில் எதிர்ப்பட்ட சுமார் இரண்டாயிரக்கணக்கானோரைக் கொன்று குவித்தது. அன்று (யூலை 29) ஏழு கோறளைப் பகுதியில் படைச் சட்டம் அமுலாக்கப்பட்டது. இதற்குப் பின்னர் ஆகஸ்ட் முதலாம் நாள் 1400 பேரைக் கொண்டகூட்டமொன்று கண்டியைத்தாக்கிய போதிலும் அது முறியடிக்கப்பட்டது. இதன் மேல் கலகம் நின்றுவிட்டது.

1848 கலகத்தின் போது படைகள் புரிந்த அட்டூழியங்கள் சொல்லிலடங்கா. 1818ம் ஆண்டுக் கலகத்தைப் போல இதுவும் உருவெடுக்கக் கூடும் என்ற பீதியிலேயே படையினர் அவ்வாறு செய்தனர். படைச்சட்டத்தின் கீழ் மக்களின் உடைமைகள் சூறைக் கப்பட்டன. பயிர்கள் அழிக்கப்பட்டன. வீடுகள் தீக்கிரையாக் கப்பட்டன. ஒரு புத்த பிக்கு தனது அங்கியுடனேயே சுட்டுக் கொல்லப்பட்டார். புறுங் அப்பு, கொங்கலகொட பண்டார, டிங்கிரிஹுல ஆகியோரும் அக்கதியே அடைந்தனர். கலகத்தை அடக்குவதற்கு ஆள்பதி கையாண்ட நடவடிக்கைகளும், படைக

னின் வன் செயலும் பிரதமநீதிபதியினதும்;பத்திரிகைகளினதும் பல பிரித்தானியரதும்பலத்த கண்டனத்துக்குஉள்ளாயின. இதனால் இவ்விடயம் இங்கிலாந்துக்கும்எட்டியது. இதன் பின்னர் நிறுவப்பட்டஒரு விசாரணைக்குழு ரொறிஸ்ரனில்குற்றம் கமத்தியதோடு அவரைத் திருப்பியழைக்குமாறு சிபார்சு செய்தது. அதற்கிணங்க ஆள்பதி ரொறிஸ்ரன் பதவியிலிருந்து விலகித்தாயகம் சென்றார்.

வினாக்கள்

1. 1848-ம் ஆண்டுக் கலகங்களுக்கு தோல்புறுக்– கமிறன் சீர்திருத்தங்கள் எவ்வகையில் காரணங்களாயின ?
2. 1848ம் ஆண்டுக் கலகத்தின் காரணங்களையும் அதன் பின் விளைவுகளையும் சுருக்கித் தருக.
3. வரலாற்றுக் குறிப்பெழுதுக :—
   (1) ரொறிஸ்ரனின் வரிகள் (2) கொங்கொலகொட பண்டோ (3) புரூன் அப்பு (4) கிறிஸ்தோபர் எலியட்

அத்தியாயம் 10

அமைதியும் முன்னேற்றமும்

(1850 - 1915)

1848ம் ஆண்டுக் கலவரத்தை யொட்டி நியமிக்கப் பட்ட விசாரணைக் குழுவின் சிபார்சுக்கிணங்க ஆள்பதி ரொறிங்ரன் மீட்டு அழைக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஆள்பதிகள் அண்டர்சன் (1850-55) ஜோர்ஜ் வார்ட் (55-60) மக்கார்த்தி (60-65) ரெபின்சன் (65-73) ஹிகரி (73-77) லோங்டன் (77-83) கோர்டன் (83-90) ஹவ்லொக் (90-96) றிட்ஜ்வே (1896-1903) பிளேக் 1903-1907) ஆகியோர் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று அதை நல்வழியில் நடத்தினர் அவர்களின் ஆட்சிக் காலம் அமைதிக்கும், முன்னேற்றத்துக்கும், நாட்டின் பொதுஅபிவிருத்திக்கும் பெயர்பெற்றது. குறிப்பாக, குடியானவர்களின் நலன்களைப் பேணுவதிலும், நீர்ப்பாசனம், பயிர்ச் செய்கை முதலியவற்றை விருத்தி செய்வதிலும் கிராம ஆட்சி முறைகளைப் புனருத்தாரணம் செய்வதிலும், மற்றும் போக்குவரத்து, சுகாதார, கல்விவசதிகளைப் பெருக்குவதிலும் அவர்கள் அரும் பணியாற்றினர். இதன் விளைவாகக் குடியானவர்களின் நிலைமை சீரடையவும் ஆட்சி பலமடையவும் நாடுவிருத்தியடையவும் வழி பிறந்தது.

நீர்ப்பாசன விருத்தி :- கேல்புறூக் கமிறன் குழுவின் சிபார்சுகள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விருத்திக்குவழிவகுத்தஅதே சமயம் விவசாயிகளின் வீழ்ச்சிக்கும் காலாகின. அச்சிபார்சுகளிற் காணப்பட்டஒரு பெரும் குறைபாடு இதுவேயாகும். பெருந்தோட்டப்பயிர்ச்செய்கைக்கும் பொருளாதார விருத்திக்கும் உதவும் பல சீர்திருத்தங்களை வற்புறுத்திய கோல்புறூக் குழுவினர் சாதாரண குடிமக்களின் நிலைமையைச் சீர்படுத்துவதற்கு வேண்டிய உருப்படியான எந்த நடவடிக்கையும் குறிப்பிடாததனால்பண்டைய கிராமீயப் பொருளாதாரம் வீழ்ச்சியடையவும், நீர்ப்பாசன வசதிகள் சரிவரப் பின்றிக்கைவிடப்படவும், குளங்கள் தூரவும் பயிர் நிலங்கள் பாழடையவும் நேர்ந்தது.

இந்நிலைமை 1855 வரை நீடித்தது. 1848ம் ஆண்டுக் கலகத்திற்கு விவசாயிகளின் வீழ்ச்சியும் ஒரு காரணமாயிருந்ததை அர

சாங்கம் அறிவதற்கு அதிக காலம் செல்லவில்லை, எனவே ஆள் பதி வாட் பதவியேற்றவுடன் நாட்டைச் சுற்றிப்பார்த்து அதன் நிலைமையையும் தேவைகளையும் நேரடியாகக் கண்டறிந்தார். உடன் நாட்டின் முதுகெலும்பைப்போலமைந்த விவசாயிகளின் நன்மைக்காக, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கவும், தூர்ந்து போன குளங்களைப் புதுப்பிக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவர் காலத்தில் நாட்டின் நிதி நிலைமையும் சீராயிருந்தபடியால் அவர் தமது திட்டங்களை நிறைவேற்றக் கூடியதாயிருந்தது.

வாட் முதலில் தென்மாகாணத்திலும் கிழ்மாகாணத்திலும் தம் கவனத்தைச் செலுத்தினர், நீர்ப்பாசன வேலைகளுக்குமக்களின் உதவியைப் பெறுவதற்காக 1856 இல் கம்பரலைப் புதுப்பித்தார். அத்துடன் நீர்ப்பாசன வேலைகளைக் கவனிப்பதற்கென விசேட ஊழியர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதன் மேல் தென்மாகாணத்திற் கிருவபத்துப் பகுதியிலுள்ள 'உறுபொக்க கிராம என்னும்இரு குளங்களின் அணைக்கட்டுகளைத் திருத்தும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் காலி மாவட்டத்தில் உள்ள 'தேவிபத்துற' பததியை ஜின்கங்கையின் வெள்ளப்பெருக்கிலிருந்து பேணுவதற்காக ஒரு அணைக்கட்டுக் கட்டப்பட்டது: மேலும்கீழ்மாகாணத்திலுள்ள அம்பாறை, இருகமம் குளங்களும் வேறுபலசிறு குளங்களும் இவர் காலத்தில் திருத்தியமைக்கப் பெற்றன, இதன் விளைவாக மட்டகளப்பிலிருந்து அக்கரைப் பற்றுவரையுள்ள பகுதிபரந்த பயிர்நிலமாகியது

வாட் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் நீர்ப்பாசனமும் பயிர்ச்செய்கையும் புத்துயிர்பெற்றன. மக்கள் மீண்டும் பயிர்த் தொழிலில்அதிக ஆர்வம் காட்டினர், அவர் 1860இல் பதவியை விட்டுச் சென்றபின்னர் ரொபின்சன் ஆள்பதியாகி அவர்விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து மேற்கொண்டார். தென்மாகாணத்திலுள்ளகோனதுறை' ஹாலி-எல, எல்லாவெல, உடுகிறிகவில்ல திசமகாராம, தந்தேனியாமுதலிய இடங்களிலுள்ள நீர்ப் பாசனவசதிகளும்பதுளை,மாத்தளைப் பகுதிகளிலுள்ள சிறு குளங்களும்இவர்காலத்தில் திருத்தியமைக்கப்பட்டன.

ரொபின்சனுக்குப் பின்னர் ஆள்பதியாகியகறி நீர்ப்பாசன விருத்தியில் அவரைவிட அதிகசிரத்தையெடுத்தார்: றுவர கலாவியாப்பகுதியின் விருத்தி இவரின் அரிய சாதனையாகும். இவர்

தமன்கடுவை, நுவரகலாவிய என்னும் இரு பிரிவுகளையும் இணைத்து டமத்தியமாகாணத்தை உருவாக்கி அதன் நிர்வாகப் பொறுப்பை J.F. டிக்சன் என்பவரின்கீழ் விடுத்தார். அம்முகவரின் திறமையாலும், மக்களின் ஒத்துழைப்பினாலும் முதலாவது ஆண்டிலேயே 900 குளங்களைத்திருத்தும் வேலை தொடங்கப்பட்டது அவர் மேற்கொண்டநடவடிக்கைகளின விளைவாக அதுவரை அடவியின் ஆட்சியிலும், மலேரியாவின்பிடியிலும் சிக்கிச் சிரழிந்திருந்த அநுராதபுரம் தன் பண்டைய பொலிவை மீண்டும் பெற்றது. கி. பி. 459இல் தாதுசேனனால் கட்டப்பட்ட காலவீவாக் குளத்தைத்திருத்தும் முயற்சிகளும் இவரால் தொடங்கப்பட்டது அக்குளத்திலிருந்து அநுராதபுரத்துக்குச் சென்ற யோதவல என்னும் கால்வாயின் பெரும் பகுதியை 1873—77 காலத்தில்இவர் திருத்தினர்.

ஆள்பதி கிறகரியின் காலத்தின் பிற்பகுதியில் கோப்பியின் வீழ்ச்சியின் விளைவாக நாட்டின் நிதி நிலையில் நெருக்கடி ஏற்பட்டதனால் நீர்ப்பாசன வேலைகள் சிலகாலம் நிறுத்தப்பட்டன ஆயினும்1883இல் ஆள்பதிகோடனின் வருகையின் பின்னர் அவ்வேலைகள் முழு மூச்சுடன் மேற்கொள்ளப்பட்டன. ஆள்பதி கிறகரியின்காலத்தில் தொடங்கப்பட்ட காலவீவைக் குளப்புனரமைப்புவேலைகள் இவர்காலத்தில் பூர்த்தியடைந்தன. கோடன் 1887இல் விடுத்தஒரு கட்டளைச்சட்டத்தின்படி கொழும்பில்ஒரு மத்திய நீர்ப்பாசனக்குழுவும் மாகாணங்களில் கிளைக்குழுக்களும் நிறுவப்பட்டன. அதுடன் தானியவரியிலிருந்து பெறப்படும் வருமானத்தில் 1/10ஐ நீர்ப்பாசனத்திற்குச் செலவிடுமாறு அவர் பணித்தார். இச் செயல் நீர்ப்பாசனவேலைகள் தொடர்ச்சியாக நடைபெறஉதவியது. இவ்வாறுகோடன்தமது ஆட்சிக்காலத்தில் ஆறுவருடங்களுக்குள் 42 குளங்களையும், 164 அணைக்கட்டுகளையும் 30 இலட்சம் ரூபாசெலவில்திருத்தியமைத்தார்.

கோடனுக்குப் பின் ஆள்பதியாகிய ஹவ்லொக் 1892இல் தானியவரியை நீக்கிவிட்டு அதை ஈடு செய்யுமுகமாக ஆண்டு தோறும்20,000 ரூபாயைநீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கீடு செய்தார். அவரைத் தொடர்ந்து றிட்ஜ்வே காலத்தில நீர்ப்பாசன வேலைகள் மீண்டும்அதிக கவனத்தைப் பெற்றன. அவர் நீர்ப்பாசனக் குழுக்கள் சிறந்த பணியாற்றுவதைக் கண்டு அவற்றை

நீக்கிவிட்டு முதல் முறையாக 1900இல் நீர்ப்பாசனத் திணைக் களம் ஒன்றை நிறுவினர். இத்திணைக்களத்தின் இயக்குநராக எச். ஜே. எஸ். ரொட் என்பவரும் நீர்ப்பாசன உதவியாளராக ஹென்றிபாக்கர் என்பவரும் நியமிக்கப்பட்டார். 1901ல் நிறை வேற்றப்பட்டநீர்பாசனச் சட்டத்தின்படி நீர்ப்பாசனத் திணைக் களத்தின் கீழ் அலுவலகங்கள் பல நிறுவப்பட்டன. முட்டிவே நீர்ப்பாசன வேலைகளுக்கு 50 இலட்சம் ரூபாவைச் செலவிடத் திட்டமிட்டு 13 நீர்பாசனத் திட்டங்களைத் திருத்தும் வேலையை தொடங்கினர். கீழ்மாகாணத்தில் சந்தளாய், வாகனேரி றுகம் உன்னிச்சை, திஸ்சா, சாகமம் திட்டங்களும், தென் மாகாணத் தில் வளவகால்வாய்த் திட்டமும் வடமாகாணத்தில் கனுங் கேணி கரைச்சித் திட்டங்களும் இவரால் திருத்தியமைக்கப் பட்டசில பிரதான நீர்பாசனத் திட்டங்களாகும்.

இவ்வாறு 1850க்கும் 1910க்குமிடையில் நாடெங்கிலும் பல் லாயிரக்கணக்கான சிறு நீர்ப்பாசனத் திட்டங்களும் 20க்கு மேற் பட்ட பெரிய திட்டங்களும் திருத்தியமைக்கப் பட்டதுடன் விவ சாயம் மீண்டும் எழுச்சி பெற்றதில் வியப்பில்லை. இக்காலத்தில் வடமத்திய மாகாணத்தில் 1000ம் வடமேல் மாகாணத்தில் 1300 ஆக இரு மாகாணங்களிலும்மட்டும் மொத்தம் 2900 சிறு நீர்பாசனத் திட்டங்கள் திருத்தப்பட்டது சுவனிக்கத் தக்கது

கம்சபாக்களின் புனரமைப்பு :— 'கம்சபா' எனப்படும் கிராம சபைகள் மிகப் பழங்காலம் முதல் உள்ளூராட்சிக்குப் பொறுப் பாயிருந்துவந்திருக்கின்றன. இச்சபைகள் கிராமத்தலைவர்கள் மூத்தோர், தலைமையில் கிராம பாலனத்தை நடத்திவந்தன இவர்கள் அவ்வப்போது தேவையேற்படும் சமயங்களில் ஒரு மடத்தில் அல்லது மரத்தின் கீழ் ஒன்றுகூடிப்பொது வேலைகளைச் செய்வதில் ஒவ்வொருவரினதும் பங்குகளை நிர்ணயித்தும் சிறு குற்றச் செயல்கள் பற்றி விசாரணை செய்து தீர்ப்பளுக்கியும் கிராமத்தில் எழும் சச்சரவுகளைச் சமாதானமாகத் தீர்த்தும் வருவது வழக்கம். இச்சபையின் முடிவுகளுக்குக் கட்டுப் படாதோர் சமூகப் புறக்கணிப்புக்குள்ளாயினர். இவ்வாறு இச் சபைகள் கிராமிய வாழ்க்கையின் பாதுகாவலர்களாப் பணி யாற்றின. ஆயின் 1818ம் ஆண்டுக்குப் பின்னர் கண்டிப்பிரதே சத்தில் இவை தமது அதிகாரங்களை இழந்தன. பின்னர் கோல் புறூக் சிபார்சுகளைத் தொடர்ந்து சேவைமானியமுறை நீக்கப் பட்டதுடனும் பொலிஸ் நீதிமன்று விண்ணப்பநீதிமன்று ஆகியன

1943இல் நிறுவப்பட்ட திணைலும், இவை செயலற்றுப் போயின இதன் விளைவாக, நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்த பொழுது மேஜர் ஸ்கின்னர் இவற்றைப்புனரமைப்பதன் அவசியத்தை வற்புறுத்தியிருந்தார். ஆயினும் ஆள்பதி வாட்வரும்வரை இது பற்றி எவரும் கவனம் செலுத்தவில்லை.

ஆள்பதி வாட்நீர்ப்பாசன வேலைகளைக் கவனிப்பதில் கருத்தூன்றியிருந்தார். அவர் அவ்வேலைகளைச் செய்வதற்கு மக்களின் உடலுதவியைப்பெறுவதற்காகக்கம்சபாக்களைப் புனரமைத்தார் இதன்மேல் இச்சபைகள் பண்டைக்காலம் தொட்டுத் தாம் பின் பற்றியவழக்கங்களைப் புதுப்பித்து அவற்றின்கீழ் மக்களின் சேவையைப் பெற்றுக் குளங்களைத்திருத்தவும் நீர்ப்பாசன வசதிகளைப் பேணவும் முடிந்தது. இச்சபைகளின் கட்டுப்பாட்டுக் கடங்காதோர் £ 2 வரை தண்டம் விதிக்கப்பட்டனர். ஆள்பதிகள்வாட்,மக்கார்தி முதலியோர் இவற்றின் உதவியுடனேயே நீர்ப்பாசன வேலைகளைச்செய்தனர்.

கம்சபாக்களின் புனரமைப்பின் இரண்டாவதுகட்டம் ஆள்பதிரெபின்சன் காலத்தில் பூர்த்தியாகியது அவர் 1871 இல் கம்சபாக்களுக்கு அதிகாரங்களை வழங்கினர். கிராமத்தில் ஏற்படும் தகராறுகளைத்தீர்த்தல்,பாதைகள், பாலங்கள், மடங்கள்கிணறுகள், சந்தைகள், சுடலைகள் முதலியவற்றை அமைத்தல் பாடசாலைகளை நிறுவி, நிர்வகித்துஅதில் பிள்ளைகளின் வரவைக்கவனித்தல் முதலிய பல பொறுப்புக்கள் அவற்றிடம் விடப்பட்டன. கிராமசபையின் உறுப்பினர்களாக 25 வயதுக்கு மேற்பட்ட சில நிலச் சொந்தக்காரர் ஆண்களால் மட்டும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் 3 ஆண்டு காலம் பதவிவகித்தனர்.

கம்சபாக்களின் புனரமைப்புடன் கிராம நீதிமன்றுகளும் நிறுவப்பட்டன. இவற்றில் ஐவர் உறுப்பினராயிருந்தனர். இதன் தலைவர்வேதனம் பெறும் ஒரு ஊழியராயிருந்தார். இவை 100 ரூபாவுக்கு மேற்படாததண்டனை விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தன. இவற்றின் பிரதான கடமை இணக்கம் ஏற்படுத்துவதே. ஆயினும் ஒருவரைக் கைது செய்யவும் விசாரிக்கவும்இவை அதிகாரம்பெற்றிருந்தன. இவற்றைமேற்பார்வை செய்யும்பொறுப்பு அரசாங்க முகவரிடம்

விடப்பட்டது. இவ்வாறு கிராம சபைகளும் கிராம நீதிமன்றுகளும் புனரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கிராமிய வாழ்வு புத்துயிர் பெற்றது; குற்றச் செயல்கள் குறைந்தன பயிர்ச் செய்கை விருத்தியடைந்தது. மக்களின் வாழ்க்கையில் மீண்டும் மலர்ச்சி ஏற்பட்டது.

சுகாதார, வைத்தியசாலைகளின் அபிவிருத்தி:—

ஆல்பிரெட் நோத் தம் காலத்தில் நாட்டின் பல பகுதிகளில் அம்மைநோய் பரவியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், கொழும்பு காலி திருகோணமலை ஆகிய இடங்களில் மருத்துவ விடுதிகளை நிறுவினார். மருத்துவத் திணைக்களத்தின் ஆரம்பமுயற்சி அதுவே யெனலாம் ஆயினும் அப்போது இராணுவ வைத்தியர்களே மருத்துவ விடுதிகளுக்குப் பொறுப்பாயிருந்தனர். 1817க்கும் 1816க்குமிடையில் வாந்திபேதி, மலேரியா முதலிய பல நோய்கள் அவ்வப்போது பரவிப்பல நூற்றுக்கணக்கானோரின் உயிரைப் பறிகொண்டன. இதன் விளைவாக அரசாங்கம் வெப்பவலய வியாதிகளைத் தடுக்கும் விடயத்திலும் குணப்படுத்தும் விடயத்திலும் அதிக சிரத்தையெடுத்தது இதன் பின்னர் பெருந்தோட்டங்களின் விருத்தி; போக்குவரத்து விருத்தி, நகரங்களின் வளர்ச்சி என்பவற்றைத் தொடர்ந்து வைத்திய சேவையைப் பலப்படுத்தி நாடெங்கிலும் விரிவுபடுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பின்னர் 1853இல் நாட்டின் சில பகுதிகளில் அம்மை நோய்பரவியதைத்தொடர்ந்து மக்களிடம் சுகாதாரப் பழக்கங்களை உண்டாக்குவதற்கும், நோய்தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தற்கும் சுகாதாரக் குழுக்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் நிறுவப்பட்டன.

சுகாதாரக் குழுக்கள் 1876 வரை இயங்கின; அதற்கிடையில், ஒப்சேர்வர் பத்திரிகையின் ஆசிரியராயிருந்த கிறிஸ்தோபர் 1848இல் குடியியல் வைத்தியத் திணைக்களத்தின் பொறுப்பாளராகப் பதவியேற்றிருந்தார். அவர் பதவியேற்ற பின்னர் மேற்கத்தியமருத்துவமுறையைப் பரப்புவதில் அதிக கவனம்செலுத்தப்பட்டது. குறிப்பாக ஆல்பிரெட் கிறகரியின் காலத்தில் கிராமப் புறங்களிலெல்லாம் சிறு மருத்துவ நிலையங்கள் நிறுவப்பட்டு வைத்திய சேவை விரிவுபடுத்தப்பட்டது. கிறகரி 1876இல் சுகாதாரக் குழுக்களை நீக்கிவிட்டார். அவற்றின்பணி 'லோக்கல் போர்ட்' எனப்படும் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டது பின்னர் 1890இல் மேற்கத்திய முறை மருத்துவத்தில்

பயிற்சியளிக்கும் முதலாவது மருத்துவக் கல்லூரி திறக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1892இல் 'சனிற்ரறி போட்ஸ்' எனப்படும் குழுக்கள் அமைக்கப்பட்டன. இவற்றின் உறுப்பினர் ஆள்பதியால் நியமிக்கப்பட்டனர். 1927 இல் இவ்வகையான 19 குழுக்கள் பணியாற்றின.

1890இல் மருத்துவக் கல்லூரி திறக்கப்பட்டதையடுத்து அதனோடு தொடர்புள்ள பல நிறுவனங்களும் தாபிக்கப்பட்டன. 1893இல் கண், காது தொண்டை நோய்களுக்கான மருத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டது 1899 இல் டி சொய்சா பற்றீரியா ஆராய்ச்சி நிலையமும் 1906இல் விக்ரோறியா ஞாபகார்த்தக் கண்மருத்துவ நிலையமும் நிறுவப்பட்டது. 1918 இல் பாஸ்சர் நிலையமும் 1910இல் காசநோய்ச் சிகிச்சை நிலையங்களும் (கந்தானை முகம, காங்கேசன்துறை) 1927இல் பல் சிகிச்சை நிலையமும் திறக்கப்பட்டது. 1895—1912 கால வைத்திய சேவைகளின் விரிவைக் கீழுள்ள அட்டவணை புலப்படுத்தும்:—

	1895	1906	1913
மருத்துவ நிலையங்கள்	317	568	586
சிகிச்சை பெற்றோர்	7,94,700	1,531,158	1,85,256

இவ்வாறு 1850ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் அரசாங்கம் எடுத்த முயற்சிகளின் பயனாக மலேரியா, பேதி அம்மை முதலிய நோய்கள் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தப் பட்டதோடு மக்களின் வாழ்க்கை முறையும் பழக்கங்களும் திருத்தமடைந்துள்ளன.

கல்வியின் முன்னேற்றம்:- கோல்புறுக் - கமிறன் சிபார்சுகள் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தைப் பற்றியும், அதைவிருத்தி செய்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் தெரிவித்திருந்தும் நாட்டின் பெரும்பான்மையினராகிய சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் ஆங்கிலக் கல்வியைப்பெறும் வாய்ப்புக்கள் இருக்கவில்லை. ஏனெனில் 'அரசாங்க பாடசாலைகள்'எனப் பட்டவை எல்லாம் அங்கிலிக்கன் மிஷன் பாடசாலைகளாகவே காணப்பட்டன. அவற்றில் பயில்வோர் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் கிறிஸ்தவ மதபோதனை பெறவேண்டும் என்ற நியதியிருந்தது. 1841இல் இந்நியதிக்கு விலக்கு அளிக்கப்பட்டது

ஆயினும்அதனல் அதிக பலன் ஏற்படவில்லை. மேலும் 1841ல் நிறுவப்பட்டமத்திய கல்விக்குழு தகுதியுள்ள தனிப்பட்டபாட சாலைகளுக்கு உதவியளிக்கும் அதிகாரத்தை யுடையதாயிருந்த பொழுதிலும் அவ்வுதவிபௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் சுயமொழிப் பாடசாலைகளுக்கு அளிக்கப்படவில்லை. கத்தோலிக்கர்கள் மட்டும் ஓரளவு உதவியைப் பெற்ற அதே சமயம் அங்கிளிக்கன் மிஷன் பாடசாலைகளே அதிக உதவியைப் பெற்றன. இதனல் அவை மட்டுமே நன்கு விருத்தியடைந்தன.

இந்நிலையில் 1858இல் அங்கிளிக்கன் மதகுரு Dr. சப்மன் கல்விக்குழுவுக்கு அனுப்பிய மனுவொன்றில் கிறிஸ்தவ மிஷன்களின் பாடசாலைகள் எல்லாவற்றுக்கும் உதவிப்பணம் அளிக்கப்பட வேண்டுமெனக்கோரினர். கல்விக்குழு அக்கோரிகையை ஏற்றது. 1858இல் சட்டக்கழகமும் அதை அங்கீகரித்தது. ஆனல் 'மனித்தியால கிறிஸ்தவ மதபோதனை' விடயத்தில் பிறசமய மாணவர்களுக்குச்சலுகை அளிக்கப்பட்டதைப் புரட்டஸ்தாந்த மிஷன் ஆட்சேபித்தது. அது எல்லா மாணவர்களுக்கும் கிறிஸ்தவ மத போதனை செய்யவேண்டும் எனப்பிடிவாதமாக நின்றபடியால் கல்விக்குழு தனது முந்திய முடிவை மாற்றியது.

இதன் விளைவாக கல்வியின் விருத்தி தடைப்பட்டிருந்தது அந்நிலையில் கலாநிதி பொன்ஜன் என்னும் கத்தோலிக்க மதகுரு அரசாங்கத்தின் கல்விக்கொள்கையைப் பலமாகக் கண்டித்தார். அவர் அரசாங்கம் மதவேறுபாடின்றி எல்லாப்பாடசாலைகளுக்கும் உதவிசெய்யக் கடமைப்பட்டதென்றும் அது எவரது "சமயக் கருத்துக்களிலும் நம்பிக்கைகளிலும் தலையிடுவது சரியன்று" எனவும் மதபோதனையைத் தவிர்த்து ஏனைய விடயங்களில் பாடசாலைகள் அரசாங்கம் கட்டுப்படுத்தலாம் எனவும் கருத்துத் தெரிவித்தார் மேலும் கல்விக் குழுவின் திறமையின்மையைப் பற்றியும் வேறு பலர் குறை கூறியிருந்தனர். எனவே அவற்றையெல்லாம் செவிபடுத்த சட்டக் கழகம் நாட்டின் கல்வி நிலைமை பற்றி ஆராய்வதற்கென 1865இல் ஒரு விசாரணைக்குழுவை நியமித்தது. அக்குழு தெரிவித்த சிபார்சுகளில் பிரதான மானவை மேல்வருமாறு :—

1. மத்திய கல்விக்குழு ஒழிக்கப்பட்டு அதனிடத்தில்பொதுக் கல்வித்திணைக்களம் ஒன்று நிறுவப்படவேண்டும்.

2. ஆரம்ப பாடசாலைகளின் போதனமொழி தாய்மொழி யாக இருக்கவேண்டும்.

3. உயர் கல்விக்கென ஒரு கல்விக்கூடம் நிறுவப்படவேண் டும். அத்துடன்தகுதியுள்ளமாணவர்கள் இங்கிலாந்துக்குச் சென்றுபல்கலைக்கழகக்கல்வியைப் பெறக்கூடியதாக 'உப காரச்சம்பளமுறை' யைஒழுங்குபடுத்தவேண்டும்.

4. சுயமொழிப் பாடசாலைகளின் தொகை அதிகரிக்கப் பட வேண்டும். அத்துடன் சுயமொழி ஆசிரியர்களின் பயிற் சிக்காக ஒரு கழகம் அமைக்கப்படவேண்டும்.

5. அரசாங்கத்தின் உதவியைப் பெறுவதற்கு கிறிஸ்தவ மத போதனை ஒரு நிபந்தனையாக இருத்தல் கூடாது.

சட்டக்கழகம் இச்சிபார்சுகள் அனைத்தையும் ஏற்றுக்கொண் டது. இதைத்தொடர்ந்து 1869 இல் ரெபின்சன் காலத்தில் பொதுக்கல்வித் திணைக்களம் ஒரு இயக்குநரின்கீழ்நிறுவப்பட்டது அவ்வியக்குநர் எல்லா அரசாங்க பாடசாலைகளையும் மேற்பார் வைசெய்ததோடு மதபேதமின்றி ஆண்டிறுதித்தேர்வின் பெறு பேறுகளின் அடிப்படையில் எல்லாப்பாடசாலைகளுக்கும் உதவிப் பணத்தை அளித்தார் இதன் விளைவாக, பௌத்த, இந்து, முஸ்லிம் பாடசாலைகளின் தொகை பெருமளவு அதிகரித்தது. 1872, 1890, 1912 என்னும் ஆண்டுகளிற் காணப்பட்ட நிலை மைகள் மேல்வருமாறு :—

	1872	1890	1912
அ. பாடசாலைகள்	200	436	802
மாணவர் தொகை	10852	140290	108841
உதவிபெறும் பாடசாலை	402	984	2000
மாணவர் தொகை	25443	73698	230358

சுயமொழிப்பாடசாலைகளின் விருத்தியைத்தொடர்ந்து 1889 இல் சுயமொழிப்போதனாசிரியர்களின் பயிற்சிக்காக ஒரு கழகம் நிறுவப்பட்டது. இதைத்தொடர்ந்து 1893இல்தொழில் நுட்பக் கல்லூரியும் 1903இல் ஆங்கிலஆசிரியர்களுக்கான பயிற்சிக்கல்லூ ரியும்ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு ஆரம்ப, இடைத்தரக் கல்வியில் முன்னேற்றம் அதிகரித்துவந்தஅதேசமயம் உயர்கல்வி போதிய அளவு விருத்தி

யின்றியிருந்ததைப்பலரும்உணர்ந்தனர். 1880இல் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகச் சிரேட்ட தராதரப்பத்திரத்தேர்வு ஆரம்பிக்கப் பட்டு அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆண்டு தோறும் சில மாணவர்கள் உயர்கல்விக்காக இங்கிலாந்துக்கு அனுப்பப் பட்டனர். ஆயினும் இவ்வொழுங்கு திருப்திகரமானதாயிருக்க வில்லை. எனவே இலங்கையின் கல்விநிலைபற்றி ஆராய்வதற்கு 1911இல் பிறிதொரு கல்வி விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. பிறிட்ஜெஸ் என்பவர் இதன் தலைவராகப் பணியாற்றினர்.

இக்குழுவின் சிபார்சுகள் மேல்வருமாறு :—

1. நாலாம் வகுப்புவரை தாய்மொழி கட்டாயபாடமா யிருக்கவேண்டும்.
2. ஆங்கிலப்பாடசாலைகளை ஆரம்பப்பாடசாலைகள், உயர் பிரிவுடைய ஆரம்பப்பாடசாலைகள், அறிவியலிலும் குடும் பக்கலையிலும் போதனையளிக்கும் முழுமையான உயர் நிலைப்பாடசாலைகள் எனத் தரம்பிரிக்கவேண்டும்.
3. நாட்டின் தேவைக்கு ஏற்றபாடத்திட்டத்தின் அடிப்படை யில் உள்ளூரில் ஒரு தேர்வு நடத்தப்படவேண்டும்.
4. இலண்டன் பல்கலைக்கழக B.A B.Sc பட்டத்தேர்வுகளு க்கு மாணவர்களை ஆயத்தம் செய்யும் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி அமைக்கப்படவேண்டும்.

இச்சிபார்சுகள் இலங்கையின் கல்விப்பிரச்சினைக்கு முடிவான தீர்வைக்காணவிடினும் சில நன்மைகளை விளைவித்துள்ளன. குறிப்பாக இலங்கையின் தேவைக்கேற்ப வகுக்கப்பட்ட ஒரு பா டத்திட்டத்தின்படி E.S.L.C. எனும் தேர்வு நடத்தப்பட்டமை யால், மாணவர்கள் சுயமொழிகளுடன், இலங்கை வரலாறு, இலங்கைப் புவியியல் முதலியவற்றையும் படிக்கும் வாய்ப்பு ஏற் பட்டது. அத்துடன் 'அறிவியல்' பாடபோதனை மூலம் மாண வர்கள், வெறும் ஏட்டுப்படிப் போடு நில்லாது இக்கால அறி வியற்சாதனைபற்றி அறியவும் ஆய்வுகளில் ஆர்வம் கொள்ளவும் வழிபிறந்தது. மேலும் இச்சிபார்சுகளின் விளைவாக 1921 இல் பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்று கொழும்பில் நிறுவப்பட்டது. ஆயினும், இலங்கைக்கு முழுமையான, பூரணமான ஒரு பல்க லைக்கழகம் வேண்டும் என்றகோரிக்கைமுதலாம் உலகப்போருக்கு முந்திய காலத்திலிருந்தே விடுக்கப்பட்டுவந்தது. இதற்காகமுன் னின்றுழைத்தவர் சேர் பொன் அருணாசலம் அவர்களாகும்

அவரதும், பிற கல்விமான்களினதும் அயராத முயற்சிகளின் விளைவாக, கண்டியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு 1928இல் சட்டக்கழகம் சம்மதித்தது அதன் விளைவே இன்று பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகமாகும். இது 1942 இல் நிறுவப்பட்டது.

இந்து, பௌத்த சமயங்களின் மறுமலர்ச்சி :-

போத்துக்கீசர் காலமுதலாகப் பௌத்த, இந்து சமயங்கள் நலிவுற்றுவந்திருக்கின்றன. போத்துகேசர் பல இந்து பௌத்த கோவில்களை இடித்தழித்ததோடு அவற்றின் சொத்துக்களையும் அபகரித்தனர், ஒல்லாந்தர், பகிரங்கமான மதவழிபாடுகளுக்குத் தடைசெய்தனர். ஆனால் பிரித்தானியர் அனைவருக்கும் வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கியிருந்தனர். ஆயினும் அவர்கள் காலத்தில் இங்கு வந்த வெஸ்லியன், பப்ரிஸ்ற், அங்கிலிக்கன் முதலிய பல வகையான மிஷன்கள், பாடசாலைகள் மூலமும் துண்டுப்பிரசுரங்கள் சஞ்சிகைகள் மூலமும் மதபிரசாரம் செய்து பெருந்தொகையானோரை (குறிப்பாக கரையோரப் பகுதிகளில்) மதமாற்றஞ் செய்து வந்தனர். அக்காலத்தில் பௌத்த சமயம் இந்து சமயம் ஆகியவற்றை பின்பற்றுதல் மதிப்பு குறைவானதாகக் கருதப்பட்டது. இந்நிலைமை பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை நிலவியது. இதன் பின்னர்பௌத்தகுருமார் பலர் தமது சமயத்தையும பண்பாட்டையும் பேணும்முயற்சியில் இறங்கினர். அவர்கள் கிறிஸ்தவசமயத்துக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டதோடுமதவாதங்களிலும் ஈடுபட்டனர். மேலும் தமது பழமையான கல்வி நிலையங்களைப் புனரமைப்பதிலும் அவர்கள் கவனம் செலுத்தினர் இம்முயற்சிகளின் பயனாக 1839இல் 'பரமசேதியபிரிவீனு' இரத்மலானையில் நிறுவப்பட்டது. 1873இல் மாளிகாகந்தையில் வித்தியோதயப்பிரிவீனுவும் 1876இல் களனியாவில் வித்தியாலங்காரப்பிரிவீனுவும் நிறுவப்பட்டன.

இவ்விதமாகப் பௌத்த சமயத்துக்குப் புத்துயிரளிக்கும் முயற்சியில் ஈடுபட்டபுத்தகுருமாரில் மொகோத்திவத்த குணானந்த என்பவர். குறிப்பிடத்தக்கவர். அவருக்கும் புரட்டஸ்தாந்தக் குரு ஒருவருக்குமிடையில் ஒரு சமயவாதம் 1873 இல் பாணந்துறையில் நடைபெற்றது அதுபற்றிய செய்தி, ஆங்கிலப்பத்திரிகைகள் வாயிலாக அமெரிக்காவிலிருந்த ஒல்கொட்' என்பவருக்கும் எட்டியது

கேணல் ஒல்காட், இரசியப் பெண்மணியாகிய பிளவற்ஸ்கி என்னும் இருவரும் 1875இல் நியூயோர்க்கில் பிரமஞானசங்கம் ஒன்றை அமைத்திருந்தனர். சமயங்களின் உண்மைப் பொருளை அறிவதே அதன் நோக்கமாயிருந்தது. பின்னர் அவர்கள் சென்னைக்கு வந்து அடையாற்றில் தங்கி இந்து சமயத்தைப்பற்றிப் படித்தனர். அத்துடன் தமது சங்கத்தின் தலைமை நிலையத்தையும் 1878இல் சென்னையிலேயே நிறுவினர். இதன்மேல் இருவரும் 1880இல் இலங்கைக்குவந்து புத்த சமயத்தைத்தழுவி அவ்வாண்டேபௌத்த பிரமஞான சங்கத்தை நிறுவினர் ஒல்காட் பௌத்த தர்மத்தை பரப்புவதற்கு அரும்பாடுபட்டார் பௌத்தமதக் கொள்கைகளைப் பரப்புவதற்காக 1880ஆம்ஆண்டு முடிவில் 'சரசவிசந்தாரச' எனும் பெயரில் ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார் அத்துடன் ஞாயிறுக்கிழமைச்சமயப்பாடசாலைகளையும்தொடக்குவித்தார். ஒல்காட்டின் முயற்சியினாலேயே விசாகத்திருநாள் ஒரு விடுமுறை நாளாக அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் (புத்தரின்மேனியிலிருந்து பிறந்ததாகக் கருதப்படும்) 6 நிறங்களையுடைய கொடியும் அவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒல்காட்டின் மிகச்சிறந்த பணி பாடசாலைகளை நிறுவியமை எனலாம். அவரால் நிறுவப்பட்ட பௌத்த பிரமஞான சங்கத்தின் ஆதரவில் பல நூற்றுக்கணக்கான பாடசாலைகள் நாடெங்கிலும் திறக்கப்பட்டன 1866இல் ஆரம்பிக்கப்பட்டஆனந்தாக்கல்லூரியும், காலியிலுள்ள மகிந்தாக்கல்லூரியும், கண்டியிலுள்ள தர்மராஜாக்கல்லூரியும் அவற்றில் குறிப்பிடத் தக்கவை.

பௌத்த மதத்தின்புத்துயிர்ப்புக்கும் எழுச்சிக்கும்அருந்தொண்டு புரிந்த இன்னொரு பெரியார் **அனகாரிக தர்மபாலா** வாகும். அவர் மேற்கத்தியநடை,உடைபாவனைகளைப் பின்பற்றும் மக்களைக் கடிந்து புத்த சமயப் பண்பாட்டைப்பேணுமாறும், புத்தசமயப்பாடசாலைகளை ஆதரிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்மேலும் 1885–1889 காலத்தில் ஒல்காட்டுடன் ஒத்துழைத்து நாட்டில் நிறுவப்பட்டுள்ள புதுதசமயப்பாடசாலைகள் நிறுவப்படுதற்கும்உதவினர். 1882இல் கல்கத்தாவில் மகாபோதிசங்கத்தைத் தாபித்ததோடு மகாபோதி ஜேணல் என்னும் சஞ்சிகை ஒன்றையும் வெளியிட்டுப் புத்தசமயத்தின் புத்துயிர்ப்புக்கு அவர் அரிய தொண்டாற்றினர். அனகாரிக 1893இல்சிக்காக்கோவில் இடம் பெற்றசர்வதேசசமய மாநாட்டிலும் பங்குபற்றியது குறிப்பிடத் தக்கது.

பிரித்தானியர் காலத்தின் முற்பகுதியில் சைவசமயமும்மங்கியிருந்தது. அக்காலத்தில் ஆங்கிலக்கல்வியைப் பெறுவதற்காக பலர் கிறிஸ்த்தவர்களாக மாறினர். இவர்களிற்சிலர் கல்வி கற்ற பின்னர் மீண்டும் சைவர்களாயினர். அதே சமயம் பலர் கிறிஸ்த்தவ மத குருமாரின் போதனைகளினால் மதமாறியிருந்தனர். அக்காலத்தில் 'கிறிஸ்தவர்' எனின் மதிப்பும், சைவர் எனின் இழுக்

கும் நிலவியது. இவ்வாறு சைவசமயம் தாழ்நிலையடைந்திருந்த காலத்தில்தான்நாவலர் தோன்றினர். நாவலர் 1822ம் ஆண்டு நல்லூரில் பிறந்தார். இளமையில் தமிழ் இலக்கண இலக்கியங்களை கற்றுத்தெளிந்தபின் பேர்சிவல் என்பார் தலைமையாசிரியராயிருந்த மத்திபபாடசாலை (இன்று யாழ்மத்திய கல்லூரி)யில் ஆங்கிலக் கல்வி கற்றார். அவரது கல்விப்புலமையைக் கண்ணுற்றபேர்சிவல் அவரைத் தமது கல்லூரியில் ஆசிரியராக அமர்த்தினார் பின்னர் பேர்சிவலின் வேண்டுகோளுக்கிணங்க நாவலர்பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தார்

ஆயினும் கிறிஸ்தவர்களின் பிரசாரத்தாலும், ஆங்கிலக் கல்வி போதனையாலும்சைவமும், தமிழும் மங்குவதைக் கண்ட நாவலர் தமது பதவியை உதறித்தள்ளிவிட்டு சமயத்துக்கும் மொழிக்கும் தொண்டாற்றத் தொடங்கினர். இம்முயற்சியில் அவர் கிறிஸ்தவர்களைக் கண்டித்துப் பல கட்டுரைகளும் சிறுநூல்களும் வெளியிட்டார். அத்துடன் ஊர் ஊராகச் சென்று சைவப் பிரசங்கங்கள் செய்தும் பல புதிய நூல்களை எழுதியும் பலபழைய தமிழ் நூல்களைப் பதிப்பித்துவெளியிட்டும் பணியாற்றினர் அன்றியும் அவர்தாமே சில சைவப்பாடசாலைகளை நிறுவியதோடு பிறரின் உதவியுடனும் பலவற்றை நிறுவினர். இவ்வாறு தமது போதனைகளாலும், சாதனைகளாலும் சைவத்துக்கும், தமிழுக்கும்அருந்தொண்டாற்றிய நாவலர் 1880 இல் அமரரானார். ஆயினும் அவரால் விழிப்பூட்டப்பட்ட சைவப் பெருமக்கள் பலர் 1888இல் சைவபரிபாலன சபையை நிறுவி, அடுத்த ஆண்டில் 'இந்து சாதனம்' என்னும் பத்திரிகையையும் வெளியிட்டனர். இப்பத்திரிகையும், இக்காலத்தில் வெளிவந்த சத்தியவேதபாதுகாவலன், உதயதாரகை எனனும் கிறிஸ்தவப் பத்திரிகைகளும் சமயசம்பந்தமான கண்டனக்கட்டுரைகளையும், மறுப்புக்கட்டுரைகளையும் தாங்கிவந்ததினால் மக்களிடை ஒரு விழிப்பு ஏற்பட்டது.

சைவ பரிபாலனசபையினால் 1890 முதல் நடத்தப்பட்ட உயர்நிலைப்பாடசாலை பின்னர் யாழ். இந்துக் கல்லூரியாகியது. இதற்குப்பின்னர் 1923இல் சைவர்கள் பலர்ஒன்று சேர்ந்து சைவவித்தியாவிருத்திச் சங்கம், ஒன்றை நிறுவினர். இது பெருந்தொகையான பாடசாலைகளை நிறுவிச்சமயத்தொண்டும் தமிழ்த் தொண்டும் செய்தது.

அதே சமயம் அரசியல்மேதையும், கல்வி விற்பன்னருமாகிய சேர் பொன் இராமநாதன் அவர்களும், சைவசமயக் கல்வியில் கரிசனைகாட்டினர். அவரின் முயற்சியினால் 1913 இல் சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியும், 1919இல் யாழ்ப்பாணம்பரமேஸ்வரக் கல்லூரியும் நிறுவப்பட்டன. மாணவர்களின் நலனுக்காக நிறுவப்பட்ட இக்கல்லூரிகள் இன்றும் நற்பணியாற்றிவரு

கின்றன. இத்துறையில், இராமகிருஷ்ண சபையினரின் பணியும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயம் மட்டக்களப்பு சிவானந்தவித்தியாலயம். திருகோணமலை இந்துக் கல்லூரி என்னும் மூன்று பெரிய கல்லூரிகளை நிறுவிச் சைவத்துக்கும், தமிழுக்கும் பெருந்தொண்டாற்றினர்

மேற்குறிப்பிட்டவாறு, பௌத்த சமயம், சைவ சமயம் என்னும் இரண்டும் மறுமலர்ச்சி பெற்ற காலத்தில் முஸ்லிம்களின் நலனைப்பேணுவதிலும் சில பெரியார் சிரத்தை கொண்டனர். அவர்களுக்கு சித்திலெவ்வை என்பார் முன்னோடியாகத் திகழ்ந்தார். அவரது முயற்சியின் விளைவாக 1891 இல் முஸ்லிம் கல்விச் சங்கம் ஒன்று தாபிக்கப்பட்டது. அதன் ஆதரவால் மருதானை சகிராக் கல்லூரி, கம்பளை சகிராக் கல்லூரி ஆகியன கட்டப்பட்டன. அவை முஸ்லீம்களின் கல்வி, கலாச்சாரங்களைப் பேணும் நிலையங்களாக இன்றும் பணியாற்றி வருகின்றன.

வினாக்கள்

1. 1848ம் கலகத்தின் பின்னர் குடியானவர்களின் நலனைப் பேணுவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகளைச் சுருக்கமாக விபரி.
2. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசாங்கம் பயிர்ச்செய்கையின் விருத்திக்காக எடுத்தநடவடிக்கைகளைத் தொகுத்தெழுதுக.
3. 1832 முதல் 1911 காலத்தில் கல்வி விருத்தியடைந்தவரலாற்றை விபரிக்குக.
4. 1859--1910 காலத்தில் அரசாங்கம் மேற்கொண்ட சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை விபரிக்குக.
5. வரலாற்றுக்குறிப்பெழுதுக:— கேணல்ஒல்காட்: ஆறுமுக நாவலர் சுயமொழிக்கல்வியின் அபிவிருத்தி:
6. ஆள்பதி கோடன், றிட்ஜ்வே, ஆகியோர் நாட்டின் அபிவிருத்திக்கு ஆற்றிய சேவையை மதிப்பிடுக.

அத்தியாயம் 11

பெருந்தோட்டங்களின் விரிவும் விளைவுகளும் (1850 - 1931)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி இலங்கையின் பொருளாதார வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டமாகும். இலங்கையின் இன்றைய இரட்டைப் பொருளாதார நிலைக்கான வித்துக்கள் அக்காலத்திலேயே முளைவிட்டன. முற்றிலும் உணவுப் பயிர்ச்செய்கையிலேயே மக்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்த தளம் நாட்டில் பணப்பயிர்களின் செல்வாக்குப் பரவிய காலமே அதுவாகும். அக்காலத்தில் ஏற்பட்டமாற்றங்கள் பிற்கால இலங்கையின் பொருளாதார அமைப்பில் மட்டுமன்றி சமூக அரசியற்றுறைகளிலும் வியக்கத்தக்க பல மாற்றங்களை விளைவித்துள்ளன.

பெருந்தோட்டங்களின் எழுச்சி

இலங்கையின் தேசிய வருமானத்தில் பெரும்பகுதி இன்றும் பெருந்தோட்டப் பயிர்களின் மூலமே பெறப்படுகின்றது. இப்பயிர்களின் விருத்திக்குப் பிரித்தானியர்களே பெருமளவு உதவினர். பெருந்தோட்டப்பயிர்களாகிய கறுவா, கோப்பி, தேயிலை, றப்பர் முதலியன வர்த்தகப் பொருளாகப்பயன்பட்டதோடு அவற்றைப் பயிரிடுதல் முதலீட்டிற்குத் தகுந்த இலாபத்தையும் அளித்ததினால்தான் அவர்கள் இப்பயிர்களைப் பெருந்தோட்ட முறையில் விருத்திசெய்ய முற்பட்டன. மேலும் கண்டிப் பிரதேசம்கைப்பற்றப்பட்டபின்னர் வளமிக்க மலைநாடு அவர்களின் ஆட்சியின் கீழ் வந்ததும் அங்கு தேயிலை றப்பர் முதலியவற்றைப்பயிரிடுதற்கு வாய்ப்பான புவியியல் நிலைமைகள் காணப்பட்டதும் அவர்களின் முயற்சிக்கு மேலும் உதவின. இக்காரணங்களினால் தொடக்கத்தில் கோப்பியும் அதைத்தொடர்ந்து கொக்கோ, சிங்கோனா தேயிலை றப்பர் ஆகியனவும் மலைநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாகப் பயிரிடப்படத் தொடங்கின.

கோப்பியின் எழுச்சியும் வீழ்ச்சியும் :- இலங்கையின் கோப்பிச் செய்கை வரலாற்றை இருபகுதிகளாக வகுக்கலாம். முதலாவது பகுதி 1835 முதல் 1851 வரையுள்ள காலத்தையுள்ளடக்கும்.

இக்காலத்தில் கோப்பி மிகத்துரிதமாக மலைநாட்டின்பல பகுதி களிலும் பரவியது. ஆயினும் 1847 முதல் 1851 வரையுள்ள காலத்தில் அது சடுதியாக வீழ்ச்சியடைந்தது. 1835—51 காலத்தில் கோப்பியின் வீழ்ச்சி பற்றிய விபரங்கள் முன்னரே விபரிக்கப்பட்டது. (பக்கம் 68-69)

கோப்பிச்செய்கையின் வரலாற்றில் இரண்டாவது பகுதி 1851 முதல் 1890 வரையுள்ள காலத்தையுள்ளடக்கும் இக் காலத்தின் முற்பகுதியில் கோப்பிச் செய்கை மீண்டும் எழுச்சி யடைந்து இறுதியில் இரண்டாவது முறையாகவீழ்ச்சியடைந்தது

1847 - 51 காலத்தில் கோப்பிப் பயிர்ச்செய்கையிலும்வர்த் தகத்திலும், ஏற்பட்ட மந்தநிலை 1853 அளவில் நீங்கிவிட்டது. அதன்மேல் கோப்பிச் செய்கை மீண்டும் புத்துயிர் பெறலாயிற்று இங்கிலாந்தில் பொருளாதார நெருக்கடி நீங்கியமை, தோட்டங் கள் மலிந்த விலைக்குக் கிடைத்தமை கப்பல் கட்டணம் குறைந் தமை, தொழிலாளர் போதிய அளவு கிடைத்தமை, பயிர்ச்செய் கை முறைகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தமை முத லியபல காரணங்களின் விளைவாகக் கோப்பிச் செய்கை மீண்டும் எழுச்சிபெற்று முன் என்றுமில்லாத அளவுக்கு விரிவடைந்தது. 1851 முதல் 70 வரையுள்ள காலம் 'கோப்பி அரசன்' உன்னத நிலையிலிருந்த காலமாகும். அக்காலத்தில் இலங்கைக்கோப்பி உலகச் சந்தையில் அதிக விலைக்கு விற்கப்பட்டது பல நாடுகள் இலங்கை கோப்பியைப் போட்டியிட்டு வாங்கத் தலைப்பட்டன. இக்காலத்தில் மலைநாட்டின் பல பகுதிகளும் வீதிகளால் இணைக் கப்பட்டிருந்தன. அத்துடன் கொழும்பு-கண்டி புகையிரதப்பா தையும் பூர்த்தியாகியிருந்தது (1867இல்) இவற்றின் விளைவாகக் கோப்பியைக் கொழும்புக்குக் கொண்டுசெல்வதில் ஏற்பட்டு வந்த செலவு பெருமளவு குறைந்தது. இவ்வாறு கோப்பித் தோட்டக்காரர் அதிக இலாபத்தை அடையக்கூடியநிலைமைகள் நிலவியதனால் 'கோப்பிப் பைத்தியம்' மீண்டும்பரவியது. அதன் விளைவாக மலைநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கோப்பித்தோட் டங்கள் திறக்கப்படலாயின. கண்டி, மாத்தளை கம்பளை, நாவ லப்பிட்டி, புசல்லாவை ஆகியஇடங்களைத் தவிர இக்காலத்தில் அற்றன், உடபுசல்லாவை, தொலஸ்பாகை, நுவரலியா அப்புத்தளை வெலிமடை, இரத்தினபுரி முதலிய இடங்களிலும் ஜின்கங்கையின் உற்பத்திப்பிரதேசத்திலும், சிவனொளிபாதமலை யடிவாரத்திலும்கோப்பித்தோட்டங்கள்திறக்கப்பட்டன. இதன்

விளைவாக 1850இல் 45000 ஏக்கராக இருந்த கோப்பி நிலம் 1855 இல் 85600 ஏக்கராகவும், 1865 இல் 1,60,000 ஏக்கராகவும் அதிகரித்தது.

மேற்குறிப்பிட்டவை பெருந்தோட்டக் கோப்பி நிலங்களின் பரப்பளவு மட்டுமே. இக்காலத்தில் கண்டிக் குடியானவர்களும் கோப்பிச்செய்கையில் அதிக கரிசனைஎடுத்தமையால்அவர்களும் சிறு சிறு தோட்டங்களில் கோப்பியைப் பயிரிட்டனர். இவ்வாறு பயிரிடப்பட்ட நிலம் 1847 இல் 48000 ஏக்கராக இருந்தது. எனவே இலங்கையிலிருந்து 1850--70 காலத்தில் ஏற்றுமதிசெய்யப்பட்ட கோப்பியில் பருமட்டாக 25 முதல் 50 வீதம் இலங்கையின் கோப்பித்தோட்டங்களிலிருந்தே ஏற்றுமதி செய்யப்பட்டது கோப்பியின் மொத்தஅளவுகள்மேல்வருமாறு:—

1850	4,0000 அந்தர்	1865	9,27,440 அந்தர்
1855	85,505 ,,	1870	10 13,004 ,,

இவ்வாறு 1851க்கு மேல் எழுச்சிபெற்றுவந்த கோப்பியின் உன்னதநிலை நீடித்து நிலைக்கவில்லை. 1870ம் ஆண்டுக்குப் பின்னர் அதன் இரண்டாவதும் இறுதியானதுமான வீழ்ச்சிதொடங்கியது. 1869ம் ஆண்டில் ஒருவகை இலைநோய் கோப்பிச் செடிகளிற் பரவ தொடங்கியது அந்நோயின் தன்மையை முதலில் அறியமுடியாதுபோயிற்று. அது சிறிது காலத்தில் தானேநீங்கிவிடும் என்று பலர் எண்ணினர். ஆனால் மதல் சிமைப் பகுதியில் 1869இல் தொடங்கிய அந்நோய் 1880 அளவில் மலைநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவிப் பேரழிவை ஏற்படுத்திவிட்டது. ஆயினும் அக்காலத்தில் கோப்பிக்குக் கிடைத்த அதிக விலையின் காரணமாகப்பலர் கோப்பி உற்பத்தியை அதிகரிப்பதற்காக டிம்புலை டிகோயா, நுவரேலியா முதலிய இடங்களில் மேலும் பல தோட்டங்களைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன் விளைவாக 1895இல் 1,6000 ஏக்கராயிருந்த கோப்பித்தோட்டநிலம்1875இல் 2,75000 ஏக்கராகஅதிகரித்தது. இதில் 85000 ஏக்கர் நுவரேலியாவில் மட்டும் காணப்பட்டது. ஆயினும் பயிரழிவு விரைவாகப் பரவியதனால் ஏற்பட்ட விளைச்சற் குறைவை அதிக நிலப்பரப்பிலானபயிர்ச்செய்கை ஈடுசெய்ய முடியவில்லை. இதன் விளைவாகக் கோப்பிச் செய்கையைப்பலரும் கைவிடுவராயினர்.

மேலும் 1880ம் ஆண்டுக்குப்பின்னர் கோப்பியின் விலை சர்வதேசச் சந்தையில் வீழ்ச்சியடைந்தது. குறைந்த தரத்தையுடைய பிறேசில் கோப்பியின் உற்பத்தி மிகஅதிகரித்தமை அதற்குக்காரணமாகும். 1879—84 காலத்தில் இங்கிலாந்தில்ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும், அங்கிருந்த கிளாஸ்கோ வங்கிமுறிவடைந்ததைத் தொடர்ந்து இங்கிருந்த ஒறியன்ரல் வங்கி முறிந்ததும் கோப்பியின் வீழ்ச்சிக்கு உதவின. அத்துடன் 1876 இல் லீபீரிய இனக்கோப்பியைப் பயிரிடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை. ஏனெனில் அவையும் சிறிது காலத்தில் பூச்சிநோயினால் பீடிக்கப்பட்டு அழிந்தன.

இதனால் 1890இல் மொத்தம் 50,000 ஏக்கரில் மட்டும் கோப்பி பயிரிடப்பட்டது அவ்வாண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட கோப்பியினளவு 7 500 அந்தராகக் குறைந்தது. இவற்றின்விளைவாக 1,7000 கோப்பித் தோட்டக்காரரில் 400 பேர் நாட்டை விட்டுப் போயினர்.

சிங்கோனா :- கோப்பியின் வீழ்ச்சி தோட்டக்காரரை மட்டுமின்றி, நாட்டின் பொருளாதாரத்தையும் பலமாகப் பாதித்தது. ஆயினும் ஒரு சில ஆண்டுகளுக்கிடையில் மாற்றுப்பயிர்கள் அதனிடத்தைப்பிடித்துக்கொண்டன. அப்பயிர்களின் வரிசையில் முதலாவதாக இடம் பெறுவது சிங்கோனாவாகும். சிங்கோனாப் பயிர்ச்செய்கைக்கு ஊக்கமளித்தவர் பேராதனைத் தாவரப்பூங்காவின் இயக்குநராயிருந்த கலாநிதி துவைற் என்பவராகும். இவர் 'கோப்பிஅரசனின்' ஆட்சிக்காலத்தில் தோட்டக்காரர்க்கு விடுத்த எச்சரிக்கையில் கோப்பியை மட்டும் நம்பியிராது பல பயிர்களையும் கலந்து பயிரிடுமாறு அறிவுறுத்தியிருந்தார். ஆனால் அன்றிருந்த நிலையில் அவரதுதெரிப்புரைகள்செவிடன் காதில் ஊதியசங்காயின ஆயினும் துவைற்ஸ்தாமே மாற்றுப் பயிர்ச்செய்கையில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்தார். அவர் 1861இல் ஹக்கலையில் ஒரு சிறிய சிங்கோனாத் தோட்டமொன்றைப் பரீட்சார்த்தமாக நிறுவினார். அது எதிர்பார்த்த பலனளித்தது அன்றியும் ஆள்பதி கிறகரியும் அம்முயற்சிக்கு ஆதரவளித்தார் அதனால் அரசாங்கமே நாற்றுக்கன்றுகளை விற்கவும் தலைப்பட்டது. இதன் விளைவாக 1870இல் 500ஏக்கரில் மட்டும் பயிரிடப்பட்ட சிங்கோனா 1875இல் 5000ஏக்கரிலும் 1880 இல் 45.000 ஏக்கரிலும் 1885இல் 39.000 ஏக்கரிலும் பயிரிடப்பட்டது.

இலங்கைச் சிங்கோனு தரத்திற் சிறந்ததாயிருந்த படியால் அதிக விலையைப் பெற்றது. அது ஒரு அவுன்ஸ் 12½ சிலிங்காக 1885இல் விற்கப்பட்டது. அன்றியும் கோப்பியின் விலை வீழ்ச்சியினாலும் பலர் சிங்கோனுப் பயிர்ச்செய்கையில் கவனமெடுத்தனர். ஆயினும் சிங்கோனுவைக் கோப்பிச் செடியுடன் கலந்தோ துணைப்பயிராகவோ அன்றி 3000 அடிக்குமேற்பட்டஉயரமுள்ள பகுதிகளிலேதான் பயிரிட்டனர். இவ்வாறு இலங்கையில் உற்பத்தி அதிகரித்த வேளையில் யாவாவிலும் சிங்கோனுப் பயிர்ச் செய்கை மிக அதிகரித்திருந்தது. இதன்விளைவாக, தேவைக்கு அதிகமான சிங்கோனுப்பட்டைசந்தைக்கு வந்தமையினால் அதன் விலை சடுதியாக வீழ்ச்சியடைந்தது. இதனால் தோட்டக்காரர்கள் சிங்கோனுப் பயிர்ச்செய்கையும் கைவிட்டனர் 1890 இல் 70,000ஏக்கரில் மட்டுமேசிங்கோனு பயிரிடப்பட்டது. அன்றியும் 1880இல் 10 இலட்சம் இருத்தலாயிருந்த சிங்கோனுப் பட்டையின் ஏற்றுமதி 1910இல் 98,000 இறாத்தலாகக் குறைந்தது குறிப்பிடத்தக்கது.

கொக்கோ :— சிங்கோனுப் பயிர்ச் செய்கை வீருத்தியடைந்த அதே காலத்தில் கொக்கோப் பயிர்ச் செய்கையிலும் சில தோட்டக்காரர் கவனம் செலுத்தினர். தும்பறைப் பள்ளத்தாக்கு, மாத்தளை முதலிய இடங்களின் புவியியல் நிலைமைகள் கொக்கோவுக்கு வாய்ப்பாயிருந்தமையினால் கோப்பித் தோட்டக்காரரிற் சிலர் கொக்கோவை அங்கு பயிரிடத் தொடங்கினர். இதனால் 1878இல் 300 ஏக்கராக விருந்த கொக்கோ நிலப்பரப்பு 1883இல் 10,000 ஏக்கராகவும் 1888இல் 12,000 ஏக்கராகவும் அதிகரித்தது. அத்தொகை 1900 அளவில் 20,000 ஏக்கராக அதிகரித்தது. இன்று ஏறத்தாழ 35,000ஏக்கரில் கொக்கோ பயிரிடப்பட்டுள்ளது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கொக்கோவுக்கு அதிக கேள்வியிருப்பது இப்பயிர்ச் செய்கையின் விருத்திக்கு உதவியுள்ளது ஆயினும் கொக்கோவைச் சில இடங்களில் மட்டும் பயிரிடக் கூடியதாயிருந்தமையால் கோப்பியினிடத்தை அது பிடிக்க முடியவில்லை.

தேயிலை:—தேயிலை முதன் முதல் 1839இல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. ஆயினும் 1841 இல் தான் இதைச் சிறு தோட்டங்களில் பயிரிட்டனர். அவ்வாண்டுபுசல்லாவையிலுள்ள தோட்டத்திலும் றம்பொடையிலுள்ளதோட்டத்திலும் தேயிலை பயிரிடப்பட்டது. அது சீனத் தேயிலையாகும். அத்தேயிலைச் செடிகள் மெதுவாகவே வளர்ந்தன. அத்துடன் தேயிலை உற்

பத்திச் செலவும் அதிகமாயிருந்தது. அப்பொழுது 1 ரூத்தல் தேயிலையை உற்பத்திசெய்ய பவுன் 5 வரை செலவாகியது. இதனால் சீனத்தேயிலையைக் கைவிட்டபின்னர் அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடியதும், விரைவாக வளரக்கூடியதுமான அசாம் தேயிலையை 1867இல் இங்கு கொண்டுவந்து பயிரிட்டனர். அவ்வாண்டு 10 ஏக்கரில் மட்டும் அது பயிரிடப்பட்டது.

தொடக்கத்தில் தேயிலைச் செய்கையின் விருத்திக்குப் பல தடங்கல்கள் இருந்தன. முதலாவதாக, கோப்பியின் விலை வீழ்ச்சியினால் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. பணமுடையோர் சிங்கோனாப் பயிர்ச்செய்கை விரைவில் பயனளிக்கும் என்பதனால் அதில் முதலீடு செய்ய விரும்பினர்; மேலும் தொழிலாளர்கள் கோப்பித்தோட்ட வேலையையே விரும்பினர் அன்றியும் அக்காலத்தில் தேயிலைத் தோட்டங்களுக்கு வேண்டிய விதைகளைப் பெறுவதிலும் சிரமம் இருந்தது. ஏனெனில் அசாம் இலங்கையின் முழுத்தேவையையும் பூர்த்தி செய்ய முடியவில்லை இவற்றிலும் மேலாக, தேயிலையைப் பதம் செய்வதற்கு எந்திரங்களை வாங்கவும், தொழிற்சாலைகளை நிர்மாணிக்கவும் அதிக முதல் தேவைப்பட்டது. இக்காரணங்களினால் ஒரு சிலர் மட்டுமே தேயிலைப்பயிர்ச் செய்கையில்ஈடுபட்டனர்.

ஆயினும் சிலஆண்டுகளில் இப்பிரச்சினைகள் தீர்ந்து போயின. குறிப்பாக 1863ம் ஆண்டுக்குப் பின்னர் தேயிலைச் செய்கை எழுச்சிபெறக்கூடியதாயிருந்தது. சிங்கோனாவின் விலை வீழ்ச்சியடைந்தமை, கொக்கோவைக் குறிப்பிட்ட சிலபகுதிகளில் மட்டும் பயிரிடக்கூடியதாயிருந்ததை, தேயிலை மலைநாட்டின் மண், தரைத்தோற்றம், தரையின் உயரம் ஆகியவற்றுக்கு அதிக பொருத்தமானதாயிருந்தமை, அசாமிலும் பார்க்க இங்கு தேயிலையின் விளைச்சல் அதிகமாயிருந்தமை, கோப்பி பயிரிடப்பட்டதும் ஏற்கனவே திருத்தப்பட்டதுமான நிலம் போதியளவு கிடைத்தமை, தேயிலையைப் பதனிடுவதிலும் தயாரிப்பதிலும் புதிய சிறந்த முறைகள் அறியப்பட்டமை ஆகியன தேயிலைச் செய்கையின் எழுச்சிக்கு உதவின, மேலும் தேயிலை கோப்பியைப் போல அகால மழையினாலோ, காலநிலை மாற்றங்களினாலோ பாதிக்கப்படாது ஆண்டு முழுவதும் பயன் தரக்கூடிய ஒரு பயிராக இருந்ததும் அதில் பலர் ஆர்வம் காட்டுவதற்குக் காரணமாகியது.

மேலும் தேயிலைத்தோட்டங்களில் வேலைசெய்வதற்கு வேண்டிய தொழிலாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து கிடைத்ததும் அவற்றின் விருத்திக்கு உதவின. சிங்களவர் கூலி வேலைகளில் நாட்டமுடையவர்களாயிருக்கவில்லை. அன்றியும் இராசகாரியம் நீக்கப்பட்டபின்னர், பெரும்பாலானோர் தமது நிலத்தின்பயனைப் பங்கீடுசெய்து வாழவே விரும்பினர். இதனால் தேயிலைத் தோட்ட வேலைகளுக்கெனத் தென்னிந்தியத் தமிழர் பெருந்தொகையாகத் தருவிக்கப்பட்டனர். ஆள்பதி வாட்சலைமன்னார் இராமேஸ்வரம் படகுச் சேவையை ஏற்படுத்தியதும், கிறகரி மன்னார் மதவாச்சி வீதியை அமைத்ததும் தொழிலாளர்களின் பிரயாணத்துக்கு உதவின. மேலும் அவர்களுக்குப் பல பிரயாணச் சலுகைகளும், வரிச் சலுகைகளும் வைத்தியவசதிகளும் அளிக்கப்பட்டமையால் பெருந்தொகையானோர் இங்கு வர விரும்பினர். இவ்வாறு வந்தவர்களின் கடும் உழைப்பினால் தான் காடுகளெல்லாம் தோட்டங்களாயின.

மேற்குறிப்பிடப்பட்டவற்றின் விளைவாக 1883 முதல் 1896 வரையுள்ள காலத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கை வேகமாக விருத்தியடைந்தது. இக்காலத்தில் ஆண்டுதோறும் சராசரி 20000 ஏக்கர் தேயிலையின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இதனால் 1897இல் 10 ஏக்கராயிருந்த தேயிலை நிலப்பரப்பு 1875 இல் 1085 ஏக்கராகவும் 1885இல் 1,02000 ஏக்கராகவும், 1890 ல் 2120000 ஏக்கராகவும், 1896இல் 330000 ஏக்கராகவும் அதிகரித்தது. ஆனால் 1896ம் ஆண்டின் பின்னர் தேயிலையில் ஒரு சிறு வீழ்ச்சி ஏற்பட்டது.

தேயிலையின் உற்பத்தி கேள்வியிலும் அதிகமாயிருந்ததே அவ்வீழ்ச்சிக்குக் காரணமாகும். உற்பத்தி அதிகரிப்பின் விளைவாக 1883இல் இருத்தல் 1சிலிங் 3பென்ஸ் விலைபெற்றதேயிலை 1697 இல் இருத்தலுக்கு 9 பென்ஸ் விலையையே பெற்றது. இதன் விளைவாகப் புதிய தோட்டங்களைத் திறக்கும் வேலை நிறுத்தப்பட்டதுடன் பயன் குறைவான தோட்டங்களும் கைவிடப்பட்டன இவ்வாறாக. 1903இல் 4.06000 ஏக்கராயிருந்த தேயிலை நிலப்பரப்பு அடுத்தஆண்டு 3888750ஏக்கராகுறைந்தது ஆயினும் 1904க்குப் பின்னர் தேயிலை மீண்டும் புத்துயிர் பெற்றதுபயிர்ச்

செய்கையிலும் உற்பத்தியிலும் சிறந்த, சிக்கனமான முறைகள் பின்பற்றப்பட்டது. பிரித்தானிய சாம்ராச்சிய நாடுகளிலும் இரசியா, ஐக்கிய அமெரிக்கா முதலியவற்றிலும் தேயிலை நுகர்ச்சி அதிகரித்ததும் பல சிறு தோட்டங்கள் ஒன்றுக இணைக்கப்பட்டதும், பெரிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டதும் தேயிலைச் செய்கையின் புத்துயிர்ப்புக்கு உதவின.

இந்நிலைமைகள் முதலாம் உலகப்போரின் தொடக்கம் வரை (1914) நீடித்தன. போர் தொடங்கிய பின்னரும் பிரித்தானியா அதிக தேயிலையை இறக்குமதி செய்ததினால் தேயிலை ஏற்றுமதி அதிகமாயிருந்தது. ஆனால் 1916ம் ஆண்டுக்குப் பின்னர் கப்பற்போக்குவரத்துக் குறைவினாலும் பசலையின் விலை அதிகரித்ததனாலும் நாணயமாற்று பற்றிய பிரச்சனைகளாலும் தேயிலையின் இறக்குமதி விதியோகம் என்பவற்றைப் பிரித்தானிய அரசாங்கம் தானே பொறுப்பேற்றதினாலும் 1917—18 காலத்தில் தேயிலையின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. இதனால் இங்குசையிருப்பு அதிகரித்தது. பின்னர் போர் முடிந்தது 1921இல் நிலைமைகள் சீர்ப்பட்டவுடன் தேயிலை ஏற்றுமதி பழைய நிலைக்கு வந்தது. ஆயினும் கையிருப்பிலிருந்த அதிகதேயிலையின் ஏற்றுமதியினால் விலை வீழ்ச்சி ஏற்பட்டது 1920இல் தேயிலையின் விலை மிகக் குறைந்து காணப்பட்டது. இதனால் இந்தியாவும் இலங்கையும் தாமாகவே உற்பத்தியளவைக் குறைத்துக்கொண்டன. இதன்படி 1920ம் ஆண்டின் உற்பத்தியளவை 1915--91 காலஆண்டு உற்பத்தியில் 80 வீதமாகவும் 1921ம் ஆண்டுஉற்பத்தியை முன்குறிப்பிட்ட கால உற்பத்தியின் 80 வீதமாகவும் நிர்ணயித்தனர். ஆயினும் கிழக்கிந்திய தீவுகள் இவ்வொழுங்கில் பங்குபற்றவில்லை இதனால் 1825-32 காலத்திலும் தேயிலையின் விலை வீழ்ச்சியடைந்தது. 1928இல் ஏற்பட்டசர்வ தேசப்பொருளாதார நெருக்கடியும், அதற்குஒரு காரணமாயிற்று. இதன் பின்னர் 1932 முதல் புதிய சர்வதேசக் கட்டுப்பாட்டுமுறையொன்று செயல்படுத்தப்பட்டது. இக்கட்டுப்பாடு தொடர்ந்து பல ஆண்டுகள் நடைமுறையிலிருந்தது. இதன் கீழ் ஒவ்வொரு நாட்டின் ஏற்றுமதியளவும் (சோட்டாஅடிப்படையில்) நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அண்மைக்காலத்தில் – குறிப்பாக 1925க்குப் பின்னர் இலங்கையின் தேயிலைப்பயிர்ச்செய்கையை விருத்தி செய்வதிலும்

விளைச்சலை அதிகரிப்பதிலும் தேயிலை ஆராய்ச்சிக் கழகம் சிறந்த பணியாற்றிவருகிறது. 1925இல் தலவாக்கொல்லையில் நிறுவப் பட்டஇக்கழகம் பயனுள்ள பல ஆராய்ச்சிகள் மூலம்; பயிர்ப் பாதுகாப்பு, மண் பாதுகாப்பு, தேயிலையின் விளைச்சல் முதலிய துறைகளில் பெருந்தோட்டக்காரருக்கு உதவிசெய்துவருகிறது.

றப்பர் :— றப்பர் 1876இல் இலங்கைக்கு முதன் முதல் கொண்டு வரப்பட்டது. பிறேசிலிலிருந்து இங்கிலாந்துக்கு எடுத்துச்செல் லப்பட்டு அங்குள்ள கியூ தோட்டத்தில் வளர்க்கப்பட்ட 'பாரா' இன றப்பர்க் கன்றுகளே இங்கு கொண்டுவரப்பட்டன. இவை முதன் முதல் கம்பகாவுக்கு அண்மையிலுள்ள ஹெனரத்கொ டப் பூங்காவிலும் பேராதனைப் பூங்காவிலும் பயிரிடப்பட்டன. ஆயினும் 1880—90 காலத்தில் சிங்கோனா செய்கையும், 1890-1900 காலத்தில் தேயிலைச்செய்கையும் இலாபமளித்து வந்தமை யினால் தோட்டக்காரர் றப்பர்ச்செய்கையில் அதிக ஆர்வம்காட் டவில்லை பின்னர் 1900—04 காலத்தில் தேயிலை வர்த்தகத் தில் ஏற்பட்ட தேக்க நிலைமை பலர் றப்பர்ச் செய்கையிலும் நாட்டம் செலுத்த ஏதுவாகியது. இதனால் 1883ம் ஆண்டு களுத்துறைப் பகுதியில் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இறப் பர்ச் செய்கை 1900ம் ஆண்டில் 1750 ஏக்கரிலும் 1905இல் 40,000 ஏக்கரிலும் பரந்து காணப்பட்டது. இத்தொகை 1910 இல் 2,03,000 ஏக்கராகவும், 1915இல் 2,25,000 ஏக்கராகவும் 1920இல் 4,00,000 ஏக்கராகவும் அதிகரித்தது.

றப்பர்ப்பயிர்ச்செய்கையின் விருத்திக்குப் பல காரணிகள் உதவின. தென்மேல் தாழ்நிலத்தின் தரைத்தோற்றம் காலநிலை மண் ஆகியன றப்பருக்கு வாய்ப்பானவை. ஒழுங்கான மழை, வளமானசரளை மண், 500—1000 அடி உயரமான நிலம் ஆகியன றப்பரின் தேவைகளைப் பூர்த்தி செய்தன. மேலும் றப்பர்த் தோட்டங்களின் பராமரிப்பு தேயிலைத் தோட்டங்களைப் பராம ரிப்பதிலும் எளிதானதும் சிக்கனமானதுமாகும், சாதாரணமாக ஒரு ஏக்கர் தேயிலைத் தோட்டத்திற்கு 2 தொழிலாளர்கள் தே வைப்படுவர். ஆயின் 3 ஏக்கர் றப்பர் தோட்டத்திற்கு 1 தொ ழிலாளி போதுமானது. மேலும் தேயிலையைப்போலன்றி றப்பர் குறிப்பிட்ட சில காலங்களிலேயே பலனைக்கொடுக்கின்றது. அன் றியும் றப்பரை ஏற்றுமதிக்குத்தயார் செய்வதற்குப் பெரியதொ ழிற்சாலைகளும் தேவையில்லை. இவற்றுடன் றப்பர்தொட்டுத் விருந்தே அதிக இலாபத்தை ஈட்டிக் கொடுத்ததும் பலர்றப் பர்ச்செய்கையில் ஈடுபடஉதவின.

1905ம் ஆண்டுக்குப்பின்னர் றப்பரின் உற்பத்தி அதிகரித்ததற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும்ஏற்பட்டமோட்டார் வாகனப் போக்குவரத்து விருத்தியே முக்கியமான காரணமாகும். அத்துடன் மின்சார உபகரணப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பும் றப்பரின் தேவையை அதிகரித்தன: இதனால் பல வெளிநாட்டு நிறுவனங்கள் றப்பரை உற்பத்தி செய்யும் நாடுகளில் முதலீடு செய்யத் தொடங்கின இத்தகைய 'முதல்' இலங்கைக்கும் வந்தது இவற்றின் விளைவாகமுதலாம் உலகப் போரின் முடிவுக்காலம் வரை றப்பரின் உற்பத்தியும் விலையும் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றன 1914-18 காலத்தின் மொத்தம் ஒரு இலட்சம் ஏக்கரில் றப்பர் புதிதாகப் பயிரிடப்பட்டது. இது அக்கால வர்த்தக நிலைமையை நன்கு பிரதிபலிக்கின்றது. ஆயினும் போருக்குப் பின்னர் றப்பரின் கேள்வியும் விலையும் வீழ்ச்சியடைந்தன. ஐக்கிய அமெரிக்கா தனது கொள்வனவைத் தற்காலிகமாக நிறுத்தியதும் றப்பர் ஏற்றுமதிச் செலவு அதிகரித்ததும் அவ்வீழ்ச்சிக்குக் காரணங்களாம் இதன் விளைவாக 1910இல் இருத்தல் 12 சிலிங் விலைபெற்ற இறப்பர் 1922இல் இருத்தல் 9 பென்சாக விலைப்பட்டது.

இவ்வாறு றப்பரின் விலை வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு வழிகாணுமாறு பிரித்தானிய அரசு ஸ்ரீவன்சன் தலைமையில் ஒரு குழுவை நிறுவியது. அக்குழு இறப்பரின் விலையை இருத்தல் 1 சிலிங் 6 பென்சில் நிலைக்கச்செய்வதைநோக்கமாகக் கொண்டு ஏற்றுமதியின் அளவை 1919—20 கால உற்பத்தியின் 60 வீதமாகக் குறைக்குமாறும் சந்தை நிலைமைக்கேற்ப அவ்வீதத்தை மாற்றுமாறும் சிபார்சு செய்தது. இச்சிபார்சுகளை ஏற்றுக் கொண்ட பிரித்தானிய அரசு 1922 முதல் 1928 வரை சாம்ராச்சிய நாடுகளின் ஏற்றுமதியளவைக் 'கோட்டா' முறையில் நிர்ணயித்தது. ஆயினும் பிறக்கிந்திய தீவுகள் இவ்வித கட்டுப்பாடுகளை மேற்கொள்ளாமையினால் இத்திட்டம் அதிக பலனளிக்கவில்லை இதனால் 1926—32 காலத்தில் றப்பரின் விலை மீண்டும் வீழ்ச்சியடைந்தது. 1925 இல் இருத்தல் 4 சிலிங்காக விலைப்பட்ட றப்பர் 1931இல் இருத்தல் 3 பென்சாக வீழ்ச்சியடைந்தது 1928ல் ஸ்ரீவன்சன் கட்டுப்பாட்டுத்திட்டம் கைவிடப்பட்டதும் ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்டகைத்தொழில் மந்தநிலையும்

சர்வதேசப் பெருளாதார நெருக்கடியும் அதற்குக் காரணங்களாயிருந்தன.

1930—39 காலத்தில் இந்நிலைமைகளில் அதிகமாற்றம் ஏற்படவில்லை. ஆயினும் இலங்கையின் றப்பர்ப் பயிர்ச்செய்கை மேலும் விரிவடைந்துவந்தது. பின்னர் இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து றப்பரின் விலை மீண்டும் அதிகரித்தது இதன் விளைவாக 1931இல் 4,57000 ஏக்கராயிருந்த றப்பர் நிலப்பரப்பு 1940இல் 5இலட்சம் ஏக்கராக அதிகரித்தது இன்று 6½ லட்சம் ஏக்கரில் றப்பர் பயிரிடப்பட்டுள்ளது. இலங்கையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டறப்பர்ப் பயிர்ச்செய்கை விருத்திக்கு றப்பர் ஆராய்ச்சிக்கழகமும்கணிசமாகஉதவியுள்ளது.

தென்னை :—தென்னை தொல்காலப் பயிர்களில் ஒன்றாகும் இது இலங்கையில் எப்பொழுது முதல் பயிரிடப்பட்டது என்பதைக் கூறுதல் கடினம். நெல்லைப்போலவே தென்னையும் இலங்கை மக்களின் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புள்ளதாயிருந்து வருகிறது. அஃதெவ்வாறாயினும், பெருந்தோட்ட முறையான தென்னைப் பயிர்ச் செய்கை பிரித்தானியர் காலம் முதலே மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. அன்றியும் ஆரம்ப முதல் தென்னைப் பயிர்ச்செய்கை உள்ளூரவர்களின் கையிலேயே இருந்துவரத் தெங்குப்பொருட்களின் வர்த்தகம் மட்டும் வெளியார் கையில் இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது.

1870ம் ஆண்டில் தெங்குப்பொருட்களின் ஏற்றுமதிப்பெறுமானம் முழு நாட்டு வருமானத்தில் 4 வீதமாகஇருந்தது. ஆயின் அது 1880இல் 9 வீதமாகவும், 1890இல் 15 வீதமாகவும், 1900இல் 17 வீதமாகவும் அதிகரித்தது.

1860 ஆண்டில் ஏறத்தாழ 2 இலட்சம் ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டிருந்தது இத்தொகை 1890இல் 4 இலட்சமாகவும் 1900 ஆண்டில் 6 இலட்சமாகவும் அதிகரித்தது. ஆயின் அவ்வாண்டில் 60,000 ஏக்கர் மட்டும் பெருந்தோட்டப் பயிராயிருந்தது.

தென்னைப் பயிர்ச்செய்கை முதலாம் உலகப் போர்வரை தொடர்ந்து விருத்தியடைந்து வந்தது. ஆயினும்போர்க்காலத்தில் (1914—18)கப்பற் போக்குவரத்துத் தடைப்பட்டமையால்

ஏற்றுமதி குறைந்தவுடன் விலை 50 வீதம் வரை வீழ்ச்சியடைந்தது. இதனால் 1913இல் 20.7 வீதமாக இருந்த அதன் ஏற்றுமதிப்பெறுமானம் 1917இல் 10.6 வீதமாகக் குறைந்தது. இதன் விளைவாகச் சிறு தோட்டக்காரர் பலர் தமது தோட்டங்களை விற்றுவிட்டு றப்பர்ப் பயிர்ச்செய்கையில் ஈடுபடத் தொடங்கினர். ஆனால் போருக்குப் பின்னர் நிலைமைகள் சீர்ப்பட்டதையடுத்துத் தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி மீண்டும் அதிகரித்தது. இதனால் 1920இல் ஏற்றுமதிசெய்யப்பட்ட தெங்குப் பொருட்களின் பெறுமானம் முழு ஏற்றுமதிப் பெறுமானத்தில் 27 வீதமாக, என்றுமில்லாதளவு அதிகரித்தது. பின்னர் 1932 வரையுள்ள காலத்தில் அதன் நிலை அதிக மாற்றமின்றிக் காணப்பட்டது. 1942இல் நிறுவப்பட்ட தெங்கு ஆராய்ச்சிக் கழகம் தென்னைக்கைத்தொழில் சம்பந்தமாகப் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அத்தொழிலின் விருத்திக்கு உதவிவருகிறது.

பெருந்தோட்டங்களின் விருத்தியினால் ஏற்பட்ட விளைவுகளும் பிறமாற்றங்களும்

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை பெருமளவில் விரிவடைவதற்கு வழிவகுத்தவை கோல்புறூக்-கமிறன் சிபார்சுகள் எனலாம். அதே சமயம்பெருந் தோட்டப்பயிர்ச் செய்கையின் விருத்தி, நாட்டின்பண்டையபொருளாதார அமைப்பைத் தகர்த்ததும் சமுதாய அமைப்புக்குச்சாவுமணி அடித்ததும் புதிய பல சக்திகளை வெளிப்படுத்தியும்பலவழிகளில் ஒருபுதிய இலங்கை உருவாகுதற்கு உதவியுள்ளது. பலநூற்றாண்டுகாலமாக உணவுப் பயிர்ச்செய்கையில் மட்டும் ஈடுபட்டும் சாதி, குலம், பிறப்பு என்னும்சமூகத்தவைகளிற் சிக்குண்டுவெளியுலகத் தொடர்பின்றி இணைற்றுத் தவளைகள்போல் காலத்தைக் கழித்தும் வந்தஒரு சமுதாயம் விழிப்புற்று எழுச்சிபெற்றுத்தனது அரசியல் சமூகத்தவளைகளை அகற்றிவிட்டுத் தன்னுட்சி பெறவும் உலக அரசியல் தலைநிமிர்ந்து நிற்பதற்கும் உதவிய பல காரணிகளில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையும்ஒன்று என்பதை மறுக்க முடியாது. ஆயினும் அதனால் முற்றிலும் நன்மையையே விளைந்தது என முடிவு செய்யக் கூடாது. ஏனெனில் அது சில தீமைகளையும் விளைவித்துள்ளது. அவற்றை

ஆராயுமுன்னர் முதலில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையினால் உண்டாகிய பொருளாதார விளைவுகளை நோக்குவோம்:

பொருளாதார விளைவுகள்:-பெருந்தோட்டப்பயிர்செய்கையின் விருத்தியினால் ஏற்பட்ட புரட்சிகரமான பொருளாதார விளைவு: உள்ளூர் உணவுப் பயிர்ச்செய்கை உயிர்நாடியாகக் கொண்டிருந்த 'ஒற்றைப் பொருளாதாரம்' வெளிநாட்டு வர்த்தகப்பொருளாதாரத்துடன் இணைந்து 'இரட்டைப் பொருளாதாரமாகமாறியதேயாகும்' இம்மாற்றம் இருபத்திமூன்றுநூற்றாண்டுகாலம்நிலவியஒரு பொருளாதார அமைப்பை ஒரு நூற்றாண்டுகாலத்துக்குள் மாற்றிவிட்டது.

முற்காலத்தில்மக்கள்உணவுப்பயிர்ச்செய்கையிலேயேமுழுக்கவனத்தையும் செலுத்திவந்தனர். அவர்கள் தமக்கு வேண்டியவற்றைத்தாமே பயிரிட்டதோடு தமது தேவைகளைப் பொறுத்தமட்டில் தன்னிறைவு பெற்றிருந்தனர். ஒவ்வொரு கிராமும் அவ்வாறேயமைந்தது, உணவுக்காக அவர்கள் வெளிநாட்டாரையோ வெளியூராரையோ நம்பி வாழவில்லை. ஆனால் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விருத்தி அந்நிலைமையை மாற்றிவர்த்தகப் பயிர்களின் முக்கியத்துவத்தை அதிகரிக்கச் செய்து விட்டது. இதனால் அப்பயிர்கள் அதிக கவனத்துடன் பயிரிடப்படலாயின. அப்பயிர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பதனால் வரும் பணத்தின் மூலமே நாம் எமது உணவுத்தேவைகளைப் பூர்த்திசெய்வதுமட்டுமின்றி, பிற வாழ்க்கை வசதிகளையும் பெருக்கிக்கொள்ளவேண்டிய தாயிருக்கிறது. இவ்வாறு பன்னிறைவு பெற்ற, உள்ளூர்ப் பயிர்ச்செய்கைப் பொருளாதாரம் மாறி ஏற்றுமதி இறக்குமதி(வர்த்தக)ப் பொருளாதாரம் ஏற்பட்டது பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் பிரதான விளைவாகும்.

நிலப்பயன்பாட்டு முறையின் அடிப்படையில் நோக்கும்போது பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஒரு புரட்சிகரமான மாற்றமாகத் தென்படினும், மொத்தத்தில் அதிக பயனுள்ளதெனவே கூறவேண்டும். ஏனெனில் 1 ஏக்கர் நிலத்தில் நெல்லைப் பயிரிடுவதன்மூலம் கிடைக்கும் வருவாயைவிட ? பங்கு அதிகமான வருவாய் 1 ஏக்கர் தேயிலைத் தோட்டத்திலிருந்து கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது எனவே இம்மாற்றம் ஒரு சில தோட்டஉரிமையாளர்களுக்கு அதிக நன்மையளிப்பினும் பொருளாதார ரீதியில் நாட்டுக்கும் ஓரளவு நன்மை பயந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

இரண்டாவதாகப், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விருத்தியைத் தொடர்ந்து பழமையான 'பண்டமாற்றுப் பொருளாதாரம்' மாறிப் புதிய 'பணப் பொருளாதாரமுறை' வழக்கில் வந்துள்ளது. பின்னர் 'பணம்' யாருக்கும் தேவைப்படவில்லை. குடியானவர்கள் அரசனுக்கும் பிரதானிகளுக்கும் தம் கடமையைச் செய்யவேண்டுமென்றிருந்தது அது தவிர்க்கப்பட முடியாதது. தேவைக்கு வேதனமாகப் பணம் வழங்கப்படவில்லை. மேலும் பொருட்களின் பெறுமதி ஒப்பிட்டு முறையிலேயே அமைந்தது. பணத்தின் அடிப்படையில் அமையவில்லைஎன வே அக்காலத்தில் மக்கள் ஒரு பொருளைக்கொடுத்து அதற்குப் பதிலாக இன்னொன்றைப் பெற்றனர். ஆனால் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை பணம் பொருளாதார முறையை உருவாக்கிவிட்டது. இதனால் பொருட்கள் சேவைகள் என்பவற்றின் பெறுமதி 'பணத்தில்' மதிப்பிடப்படுவதாயிற்று. மேலும் சேவை மானியம், இராசகாரியம் என்பன ஒழிந்தமையால் தற்பொழுது பணத்திற்காக 'ஒப்பந்த முறையில்' சேவைசெய்யும் புதிய முறை உருவாயிற்று. இவற்றின் விளைவாகப் பணத்தின் முக்கியத்துவம் பன்மடங்கு அதிகரித்துவிட்டது.

மூன்றாவதாக, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விளைவாக, உள்ளூர் வர்த்தகம் வளர்ச்சியடைந்துள்ளது. முன்னர் தன்னிறைவு பெற்றிருந்த கிராமங்களும் பிரதேசங்களும் இப்பொழுது பிற கிராமங்களிலும் பிரதேசங்களிலும் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் வெளியிடங்களின் விடயங்களிலும் சரிசமனாயுள்ளவராயினர். மேலும் தொழிலாளர்கள் தற்பொழுது தமது தொழிலை மாற்றவும் ஒருபிரதேசத்திலிருந்து இன்னொன்றுக்குப் புலம்பெயர்தலும் சாத்தியமாயுள்ளது இந்நிலைமைகளின் விளைவாக, நாடு இன்று பொருளாதார ரீதியில் இணைக்கப்பட்டுவிட்டது என்லாம். போக்குவரத்துப்பாதைகளின் விருத்தியும் இவ்விணைப்புக்குத் துணையாயிருந்தது.

நான்காவதாக, அரசாங்கம் வர்த்தகத்தின் ஏகபோக உரிமையைக் கைவிட்டதனால் தனிப்பட்டவர்களும் பெருந்தோட்டங்களை விருத்திசெய்யவும்வர்த்தகத்தில் ஈடுபடவும் வசதியுண்டானது. இதன் விளைவாக வெளிநாட்டு வர்த்தகம் விருத்தியடைந்ததோடு ஏற்றுமதி வருமானமும் அதிகரித்தது உதாரணமாக, 1825இல் ஏற்றுமதி வருமானம் 50 இலட்சம் ரூபாவா

யிருந்தது. அது 1840இல் 1 கோடி ரூபாவாகவும் 1877 இல் 10 கோடி ரூபாவாகவும் அதிகரித்தது. வருமானம் அதிகரித்ததற்கு இன்னொரு காரணம், பல பயிர்கள் விருத்திசெய்யப்பட்டதாகும் முன்னர் கறுவா மட்டுமே வெளிநாட்டு வர்த்தகத்தில் பங்கு பெற்றன. இப்பொழுது தேயிலை, றப்பர், கொக்கோ தெங்குப் பொருட்கள் ஆகியனவும் வர்த்தகப் பொருட்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

மேலும் வர்த்தகத்தின் மூலம் மட்டுமன்றி ஏற்றுமதி வரி, தோட்டவரி, வருமானவரி, இலாபவரி முதலிய பல வரிகளின் மூலமாகவும், அரசாங்கத்தின் வருவாய் அதிகரித்துள்ளது.

ஐந்தாவதாக பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையின் பக்கவிளைவுகளிலொன்றாக இலங்கையில் வங்கிமுறை விருத்தியடைந்தது. வங்கிகள் பணத்தைச் சேமிக்கமட்டுமன்றி கடனாகப் பெறவும் உதவுவதனால் தோட்டக்காரர் பலர் வங்கிகளிற்பெற்ற கடன் உதவியுடன் தமது தொழிலைச் செய்யக்கூடியதாயிருந்தது. இலங்கையில் 1841இல்முதலாவது வங்கி (ஒரியன்ரெல் வங்கி) நிறுவப்பட்டது. 1843இல் அது கண்டியில் ஒரு கிளையை நிறுவியது. காலகதியில் மேலும் பல வங்கிகள் நிறுவப்பட்டன. அவை சேமிப்பு, முதலீடு கடன் முதலிய பல துறைகளில் மக்களுக்கு உதவிவருகின்றன.

போக்குவரத்து, அஞ்சல், தொடர்புசேவை விருத்தி :—

பெருந் தோட்டங்களின் விரிவு துரிதமான போக்குவரத்து, தொடர்புசேவைகளின் விருத்தியைஅவசியமாக்கியமையால்,வீதிகள், புகையிரத வீதிகள் ஆகியவற்றை அமைப்பதிலும் அரசாங்கம் ஈடுபட்டது. பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்திப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டவரிகள் அரசாங்கத்துக்கு அதிக வருவாயை ஈட்டிக்கொடுத்தமையால் அப்பயிர்ச் செய்கையும் வர்த்தகமும் நல்ல நிலையில் இருந்த காலங்களிலெல்லாம் அரசாங்கம் பழைய வீதிகளைத் திருத்தியும், புதியவற்றை அமைத்தும் பலவாறு தோட்டக்காரருக்கு உதவியது. அவ்வுதவி நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் போகிவதைப்போல்பொது மக்களுக்கும் பயனுள்ளதாகியது. குறிப்பாக, கண்டியப் பிரதேசத்தின் புறம்போக்கான நிலைமை போக்குவரத்து வசதிகள் மாற்றியமைத்ததோடு. அதைப் பொருளாதார அரசி

யல் சமுதாயரீதியில் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் இணையச் செய்துவிட்டன. மேலும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விருத்தியால் கிடைத்த வருமானம் தான் அரசாங்கம் கரையோரப் பகுதிகளிலும் போக்குவரவு தொடர்புசேவைகளை அதிகரிக்க உதவியதுஎன்பதையும் மறக்கலாகாது.

1835 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிர்வாக இராணுவ தேவைகளுக்காகவே சிலவீதிகள் அமைக்கப்பட்டன. ஆனால் அவைசிறந்த நிலையில் இருக்கவில்லை 1841 இல் கல் பதிக்கப்பட்ட சொழும்பு கண்டி வீதி மட்டும் நல்ல நிலையில் இருந்தது. பின்னர் அள்பதி கோட்டன் காலத்தில் கோப்பிச்செய்கைவிருத்தியைத்தொடர்ந்து மலைநாட்டிலும் கரையோரப் பிரதேசங்களிலும் சிலவீதிகள் அகைக்கப்பட்டன. இதற்குப்பின்னர் ஆள்பதி ரொறிஞ்சன் தாம் விடுத்த வீதிவரிமூலம் கிடைத்த வருமானத்தில் ஒருபகுதியை (3)1ஐ)மட்டும் பிரதான வீதிகளைத் திருத்துவதற்குச் செலவிட்டார். அவருக்குப்பின்னர் ஆள்பதியாகிய அண்டர்சன்காலத்தில்தான் புது வீதிகளை அமைக்கும் வேலை மீண்டும் தொடங்கப்பட்டது. அட்டர்சன் கம்பளை எட்டியாந்தோட்டை வீதியையும் வேறு பலவற்றையும் பெருந்தோட்டப்பிரதேசத்தில் அமைத்ததுடன் யாழ்ப்பாணம் ஆனையிறவு வீதியையும் திருத்தினர்.

அண்டர்சனுக்குப் பின்னர் ஆள்பதியாகிய வாட் கொத்மலை பகுதியிலும் சண்டிக்கும் மாத்தளைக்கும் கிழக்கிலுள்ள பகுதியிலும் புதிய பகுதிகளை அமைத்தார். அத்துடன் பிரதான வீதிகள் ஆறுகளைக் கடக்குமிடங்களில் பாலங்களை அமைத்தார்.இவர்காலஇறுதியில் 3000 மைல் நீளமான வீதிகள் நல்லநிலையில்இருந்தன இவருக்குப் பின்னர் ரொபின்சன் காலத்திலும் பலபுதிய வீதிகள் அமைக்கப்பட்டன.அவர் தொளஸ்பாகே அறநாயக்கவீதி கினிகதென்னை டிக்கோயா வீதி சாலி அக்ரரசவீதிஎன்பவற்றைஅமைத்ததோடு கொழும்பு வதுளை வீதியைக் கும்பலவளை வரையிலும் நீட்டினர். அத்துடன் வதுளை மட்டக்களப்பு வீதியை அமைக்கும் வேலையும் இவர் காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டது.

ரொபின்சனுக்குப் பின்னர் கிறகரி வீதிகளை அமைப்பதில் அதிக சிரத்தை காட்டினர் அவர் தம்மால் நிறுவப்பட்டதான வட மத்திய மாகாணப்பகுதியில்வீதிகளை அமைப்பதில்விசேடகவ

செலுத்தினர். இக்காலத்தில் கண்டி-யாழ்ப்பாண வீதி, கண்டி திருகோணமலை வீதி ஆகியன திருத்தப்பட்டன. மாங்குளம் முல்லைத்தீவு வீதி, மதவாச்சி-மன்னார் வீதி, அநுராதபுரம்- புத்தளம் வீதி, உடப்புசல்லாவை நுவரேலியா வீதி, கொஸ்லாந்தை அம்பாந்தோட்டை வீதி ஆகியனவும் இக் காலத்திலேயே அமைக்கப்பட்டன.

கிறகரிக்குப் பின்னர் லோங்டன் நுவரேலியா-நானுஓயாவீதி ஹற்றன் பொகவந்தலாவை வீதி என்பவற்றை அமைத்ததோடு கண்டி தெல்தேனியா வீதியை மூன்ஸ்ரோன் வரையும் நீட்டினர். இதன் பின்னர் கோடன் காலத்தில் அநுராதபுரம்-திருகோணமலை வீதி அமைக்கப்பட்டது. றிட்ஜ்வேயின் காலத்தில் கும்பலாவலை—பசறைவீதி, அத்தனகலை- பஸ்யாலை வீதி கேகாலை - புளத்கோகுப்பிட்டியா வீதி, டிம்புலை - அக்கரைப்பத்தனை வீதி, மட்டக்களப்பு - கிளிவெட்டி வீதி, ஹொரணை அலுத்கம வீதி ஆகியனவும் வேறு சில வீதிகளும் அமைக்கப்பட்டன அவருக்குப் பின் வந்த பிளேக் மக்கலம் ஆகியோர் காலத்தில் மாதம்பை-அம்பலாந்தோட்டை வீதி, வெள்ளவாயா, பொத்துவில் வீதி, திருகோணமலை - நாவலாறு வீதி, வெள்ளவயா - பிபிலை வீதி, வெளிமடை-பண்டாரவளை வீதி ஆகியனவும் வேறு சில வும் அமைக்கப்பட்டன.

இவ்வாறு 1912ம் ஆண்டளவில் மொத்தம் 3883 மைல் நீளமான வீதிகள் இலங்கையில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் 2772 மைல் கல்பதிக்கப்பட்டிருந்தது. 277 மைல் கல்பதிக்கும் வேலைமுற்றுப்பெறுநிலையிலிருந்தது. எஞ்சியது வண்டில்களின் பாவனைக்கு மட்டும் ஏற்றதாயிருந்தது. ஆனால் 1928ம் ஆண்டளவில் மொத்தம் 16400 மைல் நீளமான வீதிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 5260 மைல் கல்பதிக்கப்பட்டிருந்தது அவ்வாண்டில் 2860 மோட்டார் லொறிகள் இலங்கையின் வீதிகளைப் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்டவாறு வீதிகள் அமைக்கும் வேலையில் ஆள்பதிகள் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் புகையிரத வீதிகளை அமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1850 - 55 காலத்தில் கோப்பி ஏற்றுமதி ஏறத்தாழ 1 1/2 மடங்கு அதிகரித்திருந்தமையினாலும் துரிதமான போக்குவரத்து வசதியில்லாமல்பிறேசில், யாவா என்பவற்றின் கோப்பியுடன் போட்டியிடமுடியாதிருந்தமையாலும், பல தோட்டக்காரர் புகையிரதப் பாதைகளை

நிறுவவேண்டியஅவசியத்தை வற்புறுத்தினர். 1895இல் ஆள்பதி வாட் இலங்கைக்கு புகையிரத சேவையின் இன்றியமையாமை பற்றிக்குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அறிவித்திருந்தார். இதன் பின்னர் 1855ம் ஆண்டு யூலையில் சட்டக்கழகம் அது சம பந்தமாக ஆள்பதியால் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தை அங்கீகரித்தது. அதைத் தொடர்ந்து 1858இல் ஒரு பிரித்தா னிய தனியார் நிறுவனம் கொழும்பு–கண்டிபுகையிரத வீதியை அமைக்கும் வேலையைத் தொடங்கியது ஆனால் அந்நிறுவனம் முதலில் செய்துகொண்டஒப்பந்தத்திற்கு முரணாக, அதிக தொ கையைக் கோரியமையால் 1861இல் வேலை இடையில் நிறுத்தப் பட்டது. பின்னர் அரசாங்கம் தானே புகையிரதப் பாதையை அமைக்கும் வேலையைப் பொறுப்பேற்றது. இதன்மேல் 1865 இல் கொழும்பிலிருந்து அம்பேபுச வரையிலும் பாதை யமைக்கப்பட் டது. அப்பாதை 1867ல் கண்டியையும் கொழும்பையும்இணைத் தது.

இவ்வாறுகொழும்பு – கண்டிப்பாதை அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கோப்பி ஏற்றுமதிச் செலவு கணிசமாகக்குறைந்தது. அத்துடன் தோட்டப் பகுதிகளுக்கு வேண்டிய உணவுப் பொருட் களை விரைவாக எடுத்துச் செல்லுதலும் எளிதாயிற்று. எனவே தோட்டக்காரர்கள் புகையிரதப் பாதையைமேலும் விரிவுபடுத் தக் கோரினர். இதன் விளைவாக கொழும்பு கண்டிப் பாதை 1873இல் கம்பளைவரையும் 1880ல் வடக்கேமாத்தளைவரையும், 1888இல் அற்றன் வரையும், 1893இல் அப்புத்தளை வரையும் 1924இல் வதுளைவரையும் நீட்டப்பட்டது. இவற்றுடன் நானு ஓயாவிலிருந்து ரூகலைக்கு அமைக்கப்பட்ட ஒடுக்கமான ஒரு பாதையுடன் மலைநாட்டின்புகையிரதப்பாதை அமைக்கும் வேலை பூர்த்தியாகியது.

மலைநாட்டின் புகையிரதப் பாதை அமைப்பு வேலைகள் 1906இல் முடிவடைந்தபொழுது மலைநாட்டுக்கு வெளியிலும் பல பாதைகள் பூர்த்தியாயிருந்தன. தென்மேல் பிரதேசத்தில் தென்னை: றப்பர் என்பவற்றுடன் றக்குவானை உயர் நிலப் பகுதி யில் தேயிலையும் பயிரிடப்பட்டமையால் அங்கு புகையிரதப் பாதைகள் அமைப்பது அவசியமாயிருந்தது. இதனால் கண்டிப் பாதை அமைக்கப்படத் தொடங்கியபோதே கரையோரப் பாதையமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

கரையோரப்பாதை 1877இல் மொறட்டுவை வரை நீட்டப் பட்டிருந்தது. அதுபின்னர் 1879இல் களுத்துறை வரையிலும் 1894இன் காலி வரையிலும் 1895இல் மாத்தறை வரையிலும் நீட்டப்பட்டு அங்கு முடிவு பெற்றது தேயிலை றப்பர்த் தோட் டங்களின் தேவைக்காகக் களனிப் பள்ளத்தாக்கில் அமைக்கப்ப ட்டஒடுக்கமான பாதை 1902இல் அவிசாவளை வரை அமைக்கப் பட்டிருந்தது. அது அடுத்த ஆண்டு எட்டியாந்தோட்டைவரை யிலும், 1912இல் இரத்தினபுரிவரையிலும் நீட்டப்பட்டு இறுதி யில் ஒப்பநாயசகாவில் முடிவுபெற்றது. தென்மேல் பிரதேசத் தின் வடமேல் பகுதியிலுள்ள தென்னந்தோட்டங்களின்தேவை யைப் பூர்த்தி செய்வதற்காக 1908இல் கொழும்பு – புத்தளம் பாதை ஆரம்பிக்கப்பட்டது. இது 1926இல் பூர்த்தியாகியது.

இவ்வாறு இலங்கையின் மத்திய, தென், தென்மேல் பகுதி யில் புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டுவந்த வேளையில் ஆள்பதி றிட்ஜ்வே வடபகுதியிலும் பாதைகளை அமைக்கவேண் டியதேவையை உணர்ந்தார் குடியகர்த்திமிக்க யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தென் இலங்கையுடன் இணைப்பதற்கும் குடா நாட்டுடன் வர்த்தகத்தை விருத்தி செய்வதற்கும் இடையி லுள்ள பிற்போக்கான நுவரகலாவிய பிரதேசத்தை விருத்தி செய்வதற்கும் இந்தியாவுடன் இலங்கையைத் தொடர்புபடுத்தி, அங்கிருந்து தொழிலாளர் வருவதற்கு வசதியளிப்பதற்கும்வட பகுதியில் பாதைகள் அமைத்தல் அவசியமாயிற்று என வே பொல்காவலையிலிருந்து வடக்குநோக்கிப் பாதையை அளமக்கும் வேலைகள் 1902இல் தொடங்கப்பட்டன. இப்பாதை 1905 இல் முடிவுற்றபொழுது கொழும்பு – காங்கேசன்துறையுடன்இணைக் கப்பட்டது இதன் பின்னர் 1911 இல் மதவாச்சி மன்னார் பாதையும், 1928 இல் மாகோ மட்டக்களப்பு திருகோண மலைப் பாதைகளும் பூர்த்திசெய்யப்பட்டன. இவ்வாறு நாட்டின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டபாதைகளின் மொத்த நீளம் 950 மைல் ஆகும்.

போக்குவரவுப் பாதைகளின் விருத்தியின் விளைவாக அஞ்சல் சேவையும் தந்திதொடர்பு சேவைகளும் விருத்தி அடைந் தன. 1822ல் முதல் முறையாக 'அஞ்சல்கோச்சு' ஒன்று கொழு ம்புக்கும் கண்டிக்குமிடையில் ஓடத்தொடங்கியது. இதன் பின் னர் நாட்டின் பல பகுதிகளும் வீதிகளால் இணைக்கப்பட்டது டன் அவ்வித 'கோச்சுக்கள்' பிற இடங்களுக்கும் ஓடலாயின.

அதேசமயம் எல்லா மாகாணத் தலைநகர்களிலும் அஞ்சல்நிலையங்கள் திறக்கப்பட்டன. இதன் விளைவாக அஞ்சல் சேவை சிறந்த முறையில் இயங்கத் தொடங்கியது. 1895இல் 139 அஞ்சல் நிலையங்களும் 48 சேகரிக்கும் நிலையங்களும் காணப்பட்டது. 1901ல் அத்தொகை முறையே 149, 190 ஆக அதிகரித்தது. அஞ்சல் சேவை விருத்தியுடன் தந்திச் சேவையும்விருத்தியடைந்தது. 1858ல் கொழும்புக்கும் காலி மன்னார் ஆகிய பட்டினங்களுக்குமிடையில் தந்திச்சேவை தொடங்கப்பட்டது. 1874 இல் குருநாகல் அனுராதபுரம் ஆகியனவும் 1876 இல் மட்டக்களப்பும் 1887இல் நீர்கொழும்பும். 1888இல் இரத்தினபுரியும் அடுத்த ஆண்டு மாத்தறையும் தந்திச் சேவையைப் பெற்றன. இதற்குப்பின்னர் றிட்ஜ்வேயின் காலத்தில்யாழ்ப்பாணமும் தந்திச் சேவையைப் பெற்றது. இவ்வாறு 1895 இல் 59 ஆக இருந்த தந்தி அலுவலகங்கள் றிட்ஜ்வேயின் காலத்தில் 88 ஆகவும் பிளேக்கின் காலத்தில் 103 ஆகவும் அதிகரித்தன. இதற்கிடையில் 1879இல் இங்கிலாந்தில் தொலைபேசி பாவனையில் வந்திருந்தபடியால் அச்சேவையை இங்கும் புகுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுத்தது. இதன் விளைவாக 1880க்குப் பின்னர் தொலைபேசி அமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டன பின்னர் ஆள்பதி பிளேக்கின் காலத்தில் எல்லா அரசாங்க அலுவலகங்களும் தொலைபேசி வசதிகளைப் பெற்றிருந்தன. இவ்வாறு உள்நாட்டுத் தந்திச் சேவையும் தொலைபேசியும் விருத்தியடைந்து வரும் வேளையில் கடல் கடந்த தந்திச் சேவையும்1870இல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் விளைவாக இலங்கை ஆள்பதி குடியேற்ற நாட்டு அலுவலகத்துடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ளவும் ஆணைகளைப் பெறவும் முடிந்தது இத்துறையில் இறுதிச்சாதனையாக 1924இல் ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

குடி அதிகரிப்பும் பட்டினங்களின் விருத்தியும் :—

பெருந்தோட்டங்களின் விருத்தியின் விளைவாக மலைநாட்டின் குடித்தொகையும் இலங்கையின்குடித்தொகையும்அதிகரித்துள்ளன. மலைநாட்டின் குடித்தொகையதிகரிப்புக்குக் காரணம் வெளியார் பெருமளவில் அங்கு குடியேறியமையாகும். பெருந்தோட்டங்களின் விருத்தியைத் தொடர்ந்துவர்த்தக வாய்ப்பும் பலவகையான வேலைவாய்ப்புக்களும் ஏற்பட்டமையால் முதலில்

கரையோரச் சிங்களவரும் அவர்களைத் தொடர்ந்து முஸ்லிம்களும் பிறரும் மலைநாட்டில் பெருந்தொகையாகக் குடியேறினர். ஆயினும் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட தோட்டத்தொழிலாளர்களின்வருகைதான் மலைநாட்டின்குடித்தொகையைக்கணிசமான அளவு அதிகரிக்கச் செய்ததுடன் அதன் குடிப்புவியியலைச் சிக்கலானதாக்கியும்விட்டது. கீழ்வரும்அட்டவணை 1827 முதல் 1931 வரையுள்ள காலத்தில் இலங்கையில் வசித்து வந்த இந்தியரின் தொகையைக் காட்டுகிறது. இந்தியத்தொழிலாளர் தொகை 1827–1931 காலத்தில் பிரமிக்கத்தக்க அளவில் அதிகரித்திருப்பது இதிலிருந்து புலனாகும்.

1827	10,000	1911	4,57,765
1847	50,000	1921	4,93,944
1877	1,46009	1931	6,92,540

இலங்கையின் குடித்தொகையதிகரிப்புக்குத் தோட்டத்தொழிலாளர்களின் வருகையையும் ஒரு காரணமாயினும்இயற்கை அதிகரிப்பு விகிதம்கூடியதும் இறப்பு விகிதம் குறைந்ததும் பிறிதொருகாரணமாகும்:பெருந்தோட்டங்களின்மூலம்பெறப்பட்ட வருவாயில்ஒருபகுதிநாட்டின் நலனுக்காகச் செலவிடப்பட்டது. இதன் விளைவாக வாழ்க்கைவசதிகள் அதிகரித்தன. வைத்திய வசதி, சுகாதாரவசதிகள் என்பவற்றின் விருத்தியினால் இறப்பு விகிதம் குறைந்தது. இதேசமயம் பழைய கிராமிய வாழ்க்கை முறைமாறி மக்கள் இடம் பெயர்ந்தும் கூட்டமாகவும் வாழத் தொடங்கியதும் பிறப்பு விகிதம் அதிகரிக்க ஒரு காரணமாகும் இவற்றின் விளைவாக 1842இல் (உத்தேசமாக) 10 இலட்சமாக இருந்த இலங்கையின் குடித்தொகை 1871இல் 25 இலட்சமாகவும், 1901இல் 35 இலட்சமாகவும், 1921இல் 45 இலட்சமாகவும்,1931இல் 54 இலட்சமாகவும் அதிகரித்தது.

மேலும், குடித்தொகை அதிகரிப்புடன் இணைந்துஇக்காலத்தில் ஏற்பட்ட இன்னொரு நிகழ்ச்சி பட்டினங்களின் விருத்தியாகும். இலங்கையில் கொழும்பு, காலி, கண்டி யாழ்ப்பாணம் முதலிய ஒரு சிலவற்றைத்தவிர ஏனையபட்டினங்கள்19ஆம்நூற்றாண்டிலிருந்து விருத்தியடைந்தவையே. அவற்றில் பலபெருந்தோட்டங்களின் விருத்தியுடன்தொடர்புள்ளவை.பெருந்தோட்

பிரதேசத்தில் பாதைகள் அல்லது வீதிகளின் தந்திகளிலும் வீதிகள் முடிவடைந்த அல்லது தற்காலிகமாக முடிவடைந்த இடங்களிலும் தான் பெரும்பாலான பட்டினங்கள் தோன்றியுள்ளன உற்பத்திப் பொருட்களைச் சேகரிக்கும் மையங்களாகவே இவை தொடக்கத்தில் உருவாகின. நாளடைவில் அங்கு வர்த்தகர்களும், தொழிலாளர்களும் வியாபாரிகளும் பிறரும் அடிக்கடி கூடியதைத்தொடர்ந்து அவை சிறு சந்தைப்பட்டினங்களாகமாறின தேயிலைத்தோட்டப் பிரதேசத்தில் றத்தோட்டை எல்கடுவ றங்காலை புசல்லாவை தொலஸ்பாகை ஹற்றன் பொகவந் தலாவ நானுஓயா ரூகலை உடப்புசலாவை றக்குவாணை முதலியவும் றப்பர்த் தோட்டப் பிரதேசத்தில் கேகாலை எட்டியாந்தோட்டை மத்துகம ரூவான்வலை முதலியனவும் பெருந்தோட்டங்களின் விருத்தியைத் தொடர்ந்து உருவாகிய பட்டினங்களுக்குச் சில உதாரணங்களாகும். மலைநாட்டில் குடித்தொகையும் பட்டினங்களும் விருத்தியடைந்ததைப் போல் இக்காலத்தில் தென்மேல் பிரதேசத்திலும் குடி அதிகரிப்புக் காணப்பட்டது. இதற்குப்பெருந்தோட்ட விருத்தியும் தொழில் வசதிகளின் அதிகரிப்பும் கொழும்பு நகரினதும் துறையினதும் விருத்தியும் உள்நாட்டுப் பிரதேசத்திலிருந்து மக்கள் புலம்பெயர்ந்ததும் காரணங்களாயின.

கொழும்பு நகரின் வளர்ச்சியும் துறையின் விருத்தியும்.

கொழும்பு இந்நூற்றாண்டின் உலகின் தலைசிறந்த துறைகளில் ஒன்றாகவும் இலங்கையின் அதிமுக்கியமான பட்டினமாகவும் விருத்தியடைந்தமைக்கு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையும்பெருமளவு உதவியது.

மத்திய காலம் முதலாக இலங்கை பல நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டதாக வரலாறு கூறினும் கொழும்பு அக்காலத்தில் அதிக சிறப்புற்று விளங்கவில்லை. அக்காலத்தில் காலி வெலிகம மாத்தறை முதலிய துறைகள் கொழும்பைவிடக் கூடிய முக்கியத்துவமுடையனவாயிருந்தன. பின்னர் போத்துக்கீசரின் வருகையைத் தொடர்ந்து தான் கொழும்பு கோட்டை இராச்சியத்தின் பிரதான துறையாகியது. ஆயினும் அதன் விருத்தி பிரித்தானியர் காலத்திலேயே ஏற்பட்டது.

பிரித்தானியர் காலத்தில் காலி கொழும்பு என்னுமிரண்டு துறைகளாயிருந்தபோதிலும் காலிதான் அதிக முக்கியத்துவ

முடையதாயிருந்தது. தூரகிழக்குப்பிரதேசக் கப்பல்களெல்லாம் காலியிலேயே தரித்துச் சென்றன. பின்னர் 1869 இல் சுயஸ்கால்வாய் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து காலியில் தங்கும் கப்பல்களின் தொகை மேலும் அதிகரித்தது. அச்சமயம் கொழும்பு விருத்தியடையவில்லை. ஏனெனில் அது தென்மேல் காற்றுக்காலத்தில் பாதுகாப்பற்றதாகவும் துறையின் வாயில் மணற்றடையைக் கொண்டதாகவும் இருந்தது. இந்நிலையில் வெளிநாட்டு வர்த்தக விருத்தி இலங்கைக்கு ஒரு சிறந்த துறைஇருக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியது. இதனால் அரசாங்கம் காலித் துறைமுகத்தைத் திருத்த எண்ணியதாயினும் நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் அதைக்கைவிட்டுவிட்டது. ஏனெனில் காலித்துறை பாறைப் பாங்கானதாகவும் விரிவுக்கு இடங்கொடாததாகவும் பாதுகாப்பற்றதாகவும் இருந்தது. இதனால் கொழும்புத் துறையை விருத்தி செய்தல் எளிதாகவும்சிக்கனமானதாயுமிருந்தது.

இம்முடிவையடுத்து 1871ம் ஆண்டு சட்டக்கழகத்தில் கொழும்புத் துறைக்குப் பாதுகாப்பான ஒரு அலைதாங்கி கட்டுவதுஎன ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் ஆள்பதிகிறகரி காலத்தில் (1878இல்) தென்மேற்கு அலைதாங்கியை அமைக்கும் வேலை ஆரம்பமாகியது. 4516 அடி நீளமான இவ்வேலை 1882இல் முடிவடைந்தது. அதைத் தொடர்ந்து பீ.ஒ.நிறுவனத்தின்கப்பல்களுக்காலிக்குப் பதிலாக கொழும்பில் தரிக்கத்தொடங்கின. இதன் பின் கொழும்புத் துறையில்கப்பல்களுக்குவேண்டிய வசதிகள்ஏற்படுத்தப்பட்டன. இதனால் அங்கு தங்கும் கப்பல்களின்தொகை மேலும் அதிகரித்தது. 1870 இல் 78 கப்பல்களும் 1878 இல்388 கப்பல்களும் அங்கு தங்கின அதேசமயம் கொழும்பின் வர்த்தகமும் அதிகரித்தது. அத்துடன் கொழும்பு நாட்டின் பலபகுதிகளுடனும்வீதிகளாலும் புகையிரதப்பாதைகளாலும் இணைக்கப்பட்டவுடன் அதன் பின்னணிநிலம் நன்கு விருத்தியடைந்ததைத் தொடர்ந்து ஏற்றிறக்குமதி வர்த்தகம் பெருகியது. இதையடுத்துக் கொழும்புத் துறையில் மேலும் பலவசதிகள் ஏற்படுத்தப்பட்டன. 1893இல் வடகிழக்கிலும்வடமேற்கிலும்அலைதாங்கிகள் கட்டப்பட்டன. இவ்வாறுமூன்றுஅலைதாங்கிகளால்காக்கப்பட்ட

துறையின் பரப்பு 643 ஏக்கராகியது. இத்துறையில் 40 கப்பல்கள் வரை ஒரே சமயத்தில் தங்கி நிற்க முடியும். இதற்குப் பின்னர் 1912 இல் தென்மேற்கு அலைதாங்கி மேலும் 2 000 அடி நீட்டப்பட்டதனால் துறை தென்மேல் காற்றுக்காலத்தில் மேலும் பாதுகாப்பைப் பெற்றது. இவ்வாறு துறையில் நவீன வசதிகள் ஏற்பட்டமையினாலும் கொழும்பு நகரின் வளமிக்க பின்னணி நிலம் விருத்தியடைந்தமையினாலும் இலங்கையின் சிறப்பான புவியியல் நிலையத்தின் விளைவாகவும் கொழும்பு இலங்கையின் பிரதான துறைப்பட்டினமாகவும், உலகின் தலைசிறந்த செயற்கைத் துறைகளில் ஒன்றாகவும் திகழ்கிறது.

கொழும்புத் துறையின் விருத்தி நகரத்தின் விருத்திக்கும் ஓரளவு உதவியது. வங்கிகள், வர்த்தகதாபனங்கள், ஏற்றுமதி இறக்குமதிகளில் ஈடுபடும் நிறுவனங்கள் கப்பற் போக்குவரத்து நிறுவனங்கள் முதலியன நிறுவப்பட்டதும் கொழும்பு நாட்டின் தலைநகராகியதைத் தொடர்ந்து பாலன அலுவலகங்கள் பாராளுமன்றம் முதலியன அமைக்கப்பட்டதும் கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்ததும் போக்குவரத்து விருத்தியடைந்ததும் கொழும்பின் நகரத்தின் விருத்திக்கும் விரிவுக்கும் உதவின. இதனால் 1871 இல் 95,483 ஆகவிருந்த குடித்தொகை 1931 இல் 2,84 160 ஆகவும் இன்று 5 1/2 இலட்சமாகவும் அதிகரித்துள்ளது. தற்பொழுது கொழும்பு நகரம் தென் தென்கிழக்கிசைகளில் மேலும் விரிவடைந்து வருகிறது.

மத்திய வகுப்பினரின் தோற்றம் :—பெருந் தோட்டங்களின் விருத்தியுடன் ஆங்கிலக் கல்விவசதிகள் அதிகரிப்பும் வேறு சில காரணிகளும் இணைந்து இலங்கையில் புதியதாக ஒரு மத்திய வகுப்பினரின் தோற்றத்துக்குக்காலாயின. பிரித்தானியர் ஆட்சியின் தொடக்கத்தில் பறங்கியர் மட்டுமே மத்திய வகுப்பினராக —பாட்டாளி வகுப்புக்கும் ஆளும் வகுப்புக்கும் இடையில் இருந்தனர். ஆயினும் காலகதியில் ஆங்கிலக்கல்வியும் தொழிற் கல்வியும் விருத்தியடைந்ததையடுத்துச் சிங்களர் தமிழர்முஸ்லிம்கள் ஆகியோர் பலர் பறங்கியரின் நிலையைப்பெற்றனர். மருத்துவச்சல்லூரி சட்டக்கல்லூரி தொழில் நுட்பக்கல்லூரி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி ஆகியன அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து மருத்துவர்கள் சட்டவல்லுனர் ஆசிரியர் ஆகியோரின் தொகை ஆயிரக்கணக்கில் அதிகரித்தது. அதேசமயம் 1870ம் ஆண்டுக்குப்

பின்னர் அரசாங்க நிர்வாகப்பகுதியும் மற்றும்வர்த்தகத்தாபனங்கள்: கைத்தொழில்கள், போக்குவரத்து தொடர்பான நிறுவனங்கள் முதலியனவும் விருத்தியடைந்ததில் விளைவாகப்பெருந்தொகையான உள்ளூர் வாசிகள் அரசாங்க ஊழியர்களாகவும், வர்த்தகதாபன ஊழியர்களாகவும், மற்றும் ஒப்பந்தக்காரர்கள் வர்த்தகர்களாகவும் நிலைமாறினர்.

அன்றியும் பெருந்தோட்டங்களும் பெருந்தொகையானோருக்கு வேலை வாய்ப்புக்களை அளித்தன. தென்மேல் பிரதேசச் சிங்களவர், தம் மூதாதையர் ஒல்லாந்தர் காலத்திற்கற்றதச்சு வேலைவீடுகட்டும்வேலை எந்திரவேலை முதலியவற்றைத் தாமும் கற்றுக்கொண்டு பெருந்தோட்டங்களில் வேலைகளைப் பெற்றனர். சிலதளவு ஆங்கிலம் கற்றோர் வீடுகள், கட்டிடங்களை அமைத்தல், தோட்டங்களுக்காக நிலத்தை துப்பரவு செய்தல், வீதியமைத்தல் முதலிய வேலைகளை ஒப்பந்த முறையிற் செய்தனர். வேறு பலர் தோட்டங்களுக்கு வேண்டிய பொருட்களை வண்டிகளிற் கொண்டுவந்து கொடுத்தும், ஏற்றி இறக்கும் வேலையிலும் வர்த்தகத்திலும் ஈடுபட்டும்தமது வருவாயைப் பெருக்கிக்கொண்டனர் இவ்வகையினரிற் பலர் பிற்காலத்தில் தாமே சிறுதோட்டங்களை வாங்கியதோடு கோப்பி, தெயிலை, றப்பர்வர்த்தகத்திலும் நேரடியாக ஈடுபடுவராயினர்.

இவ்வாறு இராசகாரிய, சேவைமானிய ஒழிப்பு, ஆங்கிலக் கல்வியின் பரவல்; பெருந்தோட்டங்களின் விரிவு, நிர்வாகஅபிவிருத்தி, வர்த்தகவளர்ச்சி முதலிய பல காரணிகள் ஒன்று சேர்ந்து இலங்கையில் மத்தியவகுப்பினரை உருவாக்கின. இவ்வகுப்பினர் பெரும்பாலும் பட்டினவாசிகளாயிருந்தனர். இதனால் எப்போதும் ஆட்சியாளருடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களாகவும் அரசியல் விழிப்புற்றவர்களாகவும், இருந்தபடியால் இவர்கள் ஆங்கிலக் கல்வி மூலம் பெற்ற புதிய கருத்துக்களின் தூண்டுதலினால் நாளடைவில் நாட்டின் அரசியல் முறையில் சீர்திருத்தத்தையும், அரசாங்கத்தில் தமக்கு அதிக பிரதிநிதித்துவத்தையும் பொறுப்பையும் கோரிக் கிளர்ச்சி செய்வாராயினர்.

முதலாளி - தொழிலாளர் வகுப்பு வேறுபாடுகள் :—

பெருந்தோட்டங்களும், பணப்பொருளாதார முறையும் விருத்தியடைந்தமையினால் பழமையான மானியகால நில ஆதி

பத்திய முறை மாற, அதனிடத்தில் சிறியமுதலாளித்துவ வகுப்பு ஒன்றுஉருவாகியது. அதேசமயம் பெருந்தோட்டங்களின்விருத்தி இராசகாரிய, சேவை மானிய முறைகளின் ஒழிப்பு —துறை முகம் வர்த்தகதாபனங்கள் போக்குவரத்துச் சேவை என்பவற் றின் விருத்தி ஆகியனவற்றைத் தொடர்ந்து தொழிலாளர்வகு ப்பு ஒன்றும் உருவாகியது. இவ்வாறு உருவாகிய இரு வகுப்பி னரும் நாளடைவில் தமது நலன்களைப் பேணிக்கொள்வதற் காகச் சங்கங்கள் அமைக்கவும் நிறுவனரீதியில்தமது நலன்களுக் காகப் போராடவும் தலைப்பட்டனர். இவற்றின் விளைவாகவே பெருந்தோட்டக்காரர் சங்கம் இலங்கைத் தொழிலாளர் சங்கம் முதலியன உருவாகின. இவை வர்க்க பேதத்தை மே லும் உறுதிப்படுத்தின.

புதியசமுதாயத்தின் பிறப்பு

மேற் குறிப்பிட்டவாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் பொருளாதாரத் துறையிலும் கல்வித் துறையிலும் மற்றும் போக்குவரத்து வர்த்தகம் முதலியவற்றிலும் ஏற்பட்ட மாற் றங்களின் விளைவாக இலங்கையில் புதிய ஒரு சமுதாயம் உருவாகியது அதில் சாகிகளின் செல்வாக்கும் கட்டுப்பாடும் ளர்ந்து செல்வம் கல்வி என்பவற்றின் அடிப்படையில் புதிய வர்க்க வேறுபாடுகள் உண்டாயின. அத்துடன் தொழிலாளி கள் முதலாளிகள் மத்திய வகுப்பினர் எனும் பல் வே று வகுப்பினர் புதியதாகத் தோன்றினர்.

மேலும் இது காலவரை கிணற்றுத்தவளையைப்போலவாழ்ந் தமக்கள்போக்குவரத்து வசதிகளின் விருத்தியின் விளைவாகநாட் டின் பல பகுதிகளுக்கும் செல்லவும் ஒருவரோடொருவர் தொடர்புகொள்ளவும் பிரதேச உள்ளூர்வேறுபாடுகளை மறக்க வும் நாட்டின் நலனுக்காக ஒன்றுபட்டு உழைக்கவும் போராட வும் முடிந்தது. தே சி ய இயக்கத்தின் தொடக்கம் இது வே. மேலும் மத்தியவகுப்பினரின் எழுச்சி பௌத்த இந்து சமயங் களின் புனருத்தாரணத்துக்கும் உதவியதோடு இலங்கையை அரசியல் விடுதலைப் பாதையிலும் வழிநடத்திச் சென்று இறுதி யில் அந்நியரின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைத்தது.

பெருந்தோட்டங்களின் விருத்தியின் விளைவுகள்:—

மலைநாட்டில் பெருந்தோட்டங்கள் திறக்கப்பட்டதனால் ஏற் பட்டசிலதியவிளைவுகளைப்பற்றி முன்னரே) பக்கம் 76 ஐபார்க்க)

குறிப்பிடப்பட்டது. கண்டு அவற்றை மீண்டும் சுருக்கமாகக் குறிப்பிடுவோம் பெருந்தோட்டங்கள் அமைக்கப்பட்டகாலத்தில் மலேநாட்டிலும் தென்மேல் பிரதேசத்திலும் முடிக்குரிய நிலம்பெருமளவில் பராதீனப்படுத்தப்பட்டது. அந்நிலம் ஆங்கிலேயரால் வாங்கப்பட்டது அச்சமயம் உள்ளூரவர்களின்தேவைகள் உதாசீனம் செய்யப்பட்டன. இதன் விளைவாக இன்று மலேநாட்டிலும், தென்மேல் பிரதேசத்திலும் நிலம் இல்லாத குடியானவர்களின் பிரச்சனை தலைதூக்கியுள்ளது.

இரண்டாவதாக, பெருந் தோட்டங்களுக்காகக் காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டமையால் மலேநாட்டில் மண்ணரிப்பும் அருவிகளின் வரட்சியும் ஏற்பட்டுள்ளன.

மூன்றுவதாக, பெருந்தோட்டங்கள் முற்றிலும் பிரித்தானியரின் உடைமைகளாயிருந்தபடியால்அவற்றின் மூலம்கிடைத்த வருமானத்தில் பெரும்பகுதி இந்நாட்டுக்குக் கிடையாமல் வெளிநாடுகளுக்குச் சென்றது. மேலும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையுடன் தொடர்புள்ள வர்த்தகமும் வெளியார் கையிலேயே இருந்தபடியால் அவர்கள் உள்ளூர் உற்பத்தியையும் கைத்தொழிலாக்கத்தையும் நசுக்கினர். இதனால் நாட்டின் விருத்தி தடைப்பட்டது.

நான்காவதாக' பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையும் வர்த்தகமும் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து உணவுப் பயிர்ச் செய்கையில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. இதனால் உள்ளூர் உணவுஉற்பத்திகுன்றியது.அதேசமயம் எமது உணவுத் தேவைகள் இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டதனால் வெளிநாட்டுப் பொருளாதார நிலைமைகள் வர்த்தகஇறக்கங்கள் நெருக்கடிகள் ஆகியன எமது பொருளாதாரக் கட்டுக்கோப்பை அவ்வப்போது பாதிக்கத் தலைப்பட்டன. 1929ம் ஆண்டில் ஏற்பட்டசர்வதேசப் பொருளாதாரநெருக்கடி அதனை நன்கு புலப்படுத்தியது. மேற் கூறப்பட்டவற்றின் விளைவாகவே இலங்கை இன்று உணவுக்காக வெளிநாடுகளிடம்கையேந்தும் நிலையேற்பட்டுள்ளது.

இறுதியாக' பெருந்தோட்டப்பொருளாதார விருத்தியினால் உண்டாகிய செல்வம் எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. ஒரு சிலர் அதிக செல்வந்தராயினர். மத்திய வகுப்பினர் இடைநிலையிலிருந்தனர். அதேசமயம் பெரும்பான்

மையான கிராமப்புற வாசிகளும் நகர்ப்புறங்களில் குடியேறிய மக்களும், தமது பொருளாதார நிலையில் விருத்தியெதுவுமின்றிப் பின்தங்கி விட்டனர். இவ்விதமாகப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை சமூக உறுதியின்மையையும் சமத்துவமின்மையையும் தோற்றுவித்துவிட்டது.

வினாக்கள்

1. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையின் பொருளாதாரநிலையை விபரிக்குக.
2. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விருத்தியினால் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்களை ஆராய்க.
3. 1850-80 காலத்தில் கோப்பியின் எழுச்சி வீழ்ச்சியை விபரி
4. 1850–1900 காலத்தில் இலங்கையில் போக்குவரத்துவசதிகள் அதிகரித்த முறையைப் படத்தின்உதவியுடன்எழுதுக
5. இலங்கையின் புகையிரதவீதி அமைப்புவரலாற்றைப் படத்தின்உதவியோடு விபரி;
6. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொழும்பு நகரும் துறையும் வளர்ச்சியடைந்த வரலாற்றை விபரி.

அத்தியாயம் 12

பாலனவிருத்தியும் அரசியற்றிட்ட மாற்றங்களும் (1850-1931)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிவரைஇலங்கையின் பொருளாதாரத் துறை, சமூகத்துறை கல்வித்துறைபோக்குவரத்து முதலியவற்றில் உண்டான மாற்றங்கள் நிர்வாக பாலனதுறைகளிலும் பல மாற்றங்கள் ஏற்படக் காரணமாயின. இவ்விதமாற்றங்கள் விருத்தியடையும் ஒரு சமுதாயத்தின் அதிகரித்துவரும் தேவைகளைப் பூர்த்திசெய்ய அவசியமாயின. மேலும் அவை நாட்டில் ஆட்சியைப் பலப்படுத்தவும் பாலனத்தை எளிதாக்கவும் உதவியதன்மூலம் ஆளப்பட்டோரின் நலன்கள் நல்ல முறையில் கவனிக்கப்படவும் வழிவகுத்தன.

பாலனவிருத்தி

குடியியற்சேவை-1833ம் ஆண்டிலிருந்து குடியியற் சேவையின் திறமை குன்றிக் காணப் பட்டதுபற்றியும் குடியியற் சேவையாளர் தம் கடமைகளைச் செவ்வனேநிறைவேற்றுதது 1848ம் ஆண்டுக் கலகத்திற்கு ஒரு காரணமாயிருந்ததுபற்றியும் முன்னர் குறிப்பிட்டோம்; அந்நிலைமைகள் மேலும் சிலகாலம்நீடித்தன. 1848 ம் ஆண்டுக்குப் பின்னரும் சிலகாலம் வரை குடியியற்சேவையாளர் சுதேச மொழிகளைக்கற்பதில்ஆர்வம் காட்டவில்லை பாலனவேலை பளுவாயிருந்தமையினாலேயே தாம் அம்மொழிகளில் புலமை பெறமுடியவில்லை என அவர்கள் ஒரு நொண்டிச் சாக்கை எப்போதும் கூறினர். இதனால் ஆள்பதிமக்கார்தி தமதுகாலத்தில் குடியியற் சேவைப்பயிற்சியாளர்களுக்கு விசேட படியைவழங்கியும் அலுவலகவேலையைக் குறைத்தும் அவர்கள்சிங்களம்அல்லது தமிழில் பயிற்சிபெற வசதியளித்தார். அத்துடன் அம்மொழிகளில் சித்தியடைந்தோருக்கு மட்டுமே நியமனம் உடன்வழங்கப் பட்டது. இதன்விளைவாக குடியியல் சேவையின்தகைமையும் திறமையும் அதிகரித்தன.

குடியியற் சேவையிற் சேர விரும்புவோர் 1845-56 காலத்தில் இங்கிலாந்தில் நடத்தப்பட்ட கெயில்பறிதேர்வில் சித்தியடையவேண்டியிருந்தது. ஆனால் ஆள்பதி வாட் எவ்விததேர்வுமின்றி இலங்கையிலேயே குடியியற்சேவையாளரைத் தெரிவு செய்வதற்கு அநுமதிக்கப்பட்டிருந்தார். ஆயினும் 1879 இல் மீண்டும் கெயில்பறி தேர்வு முறை புகுத்தப்பட்டது. அப்போட்டித்தேர்வுஅவ்வாண்டு முதல் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நடத்தப்பட்டது. பின்னர் 1880ல் அது மறுபடியும் இங்கிலாந்தில் நடத்தப்பட்டு 1920 இல் மீண்டும் இலங்கையிலும் நடத்தப்பட்டது. அப்போது கேம்பிரிச் ஒரேட்ட தராதரப்பத்திரத்தேர்வு அல்லது லண்டன் மற்றிக்குலேசன் தேர்வில் சித்தியடைந்தோர் மட்டும் போட்டித்தேர்வுக்கு அநுமதிக்கப்பட்டனர். 1921 இல் இலங்கையில் பல்கலைக்கழகக்கல்லூரி தொடங்கப்பட்டதையடுத்துப் பட்டதாரிகள்மட்டும் போட்டித் தேர்வுக்கு அநுமதிக்கப்பட்டனர்.

1920 ஆம் ஆண்டுக்குப்பின்னர் குடியியல்சேவையில் 3/1பங்கு தானங்கள் இலங்கையருக்கு ஒதுக்கப்பட்டது 1924 ல்அவ்விகிதம் அரைப்பங்காக அதிகரிக்கப்பட்டது.அதன்விளைவாக அதிகமான இலங்கையர் குடியியற்சேவையாளராகும்வாய்ப்பு ஏற்பட்டது. பின்னர் 1943முதல் போட்டித்தேர்வு இலங்கையில்மட்டும்நடத்தப்பட்டதனால் இலங்கையரின் விகிதம் மிக அதிகரித்தது.

1850-90 காலத்தில் குடியியற் சேவையில் வேறுபலகுறைபாடுகளும் காணப்பட்டன.சேவையாளரின்வேதனம் குறைவாகவும் பதவி உயர்வுக்கான வாய்ப்புக்கள் அருமையாகக் காணப்பட்டதுமே இரு பிரதான குறைபாடுகளாயிருந்தன. இவற்றினால் குடியியற்சேவையின் திறமை குன்றுவதைக் கண்ணுற்ற ஆள்பதிறிட்ஜ்வே சேவையாளரின் வேதனத்தைக்கூட்டுவித்தார்.அத்துடன்வருடம் தோறும் அவர்களுக்குப் படிஉயர்ச்சியும் வழங்கப்பட்டது. இதன்பின்னர் குடியியற்சேவையில் இன்னொரு குறைபாடும்காணப்பட்டது. அதாவது ஒரு சேவையாளர் விடுமுறையிற் செல்லும்போது அவரின்வேலையைச் செய்வதற்கு வெளியிலுள்ளாரையும் நியமிக்கவேண்டியிருந்தது, அவ்வொழுங்கு திருப்தியளிக்காதமையால்ஆள்பதி றிட்ஜ்வே ஏழுகுடியியற் சேவையாளர்களைமேலதிக

மாகச் சேவையில் அமர்த்துமாறு குடியேற்றநாட்டுச் செயலாள ரிடம் கோரியிருந்தார். அவரது கோரிக்கை ஆள்பதி மக்கலம்கால த்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்பயனாக குடியியற்சேவைமுன் னரிலும் திறம்பட இயங்கக்கூடியதாயிருந்தது.

குடியியற்பாலனம்:-

கோல்புறூக் சிபார்சுகளின் இலங்கையின்மாகாணத்தொகை 5 ஆகக் குறைக்கப்பட்டதும் அதன்பின்னர் ஆள்பதி கோட்டன் காலத்தில் புத்தளம் சிலாபப்பிரிவுகளை உள்ளடக்கியதாய் வட மேல் மாகாணம் உருவாக்கப்பட்டதும் அவ்வாண்டே இரத்தின புரிப்பகுதி தென்மாகாணத்திலிருந்து நீக்கப்பட்டு மேல் மாகா ணத்துடன் இணைக்கப்பட்டதும் முன்னர் குறிப்பிடப்பட்டன. இம் மாற்றங்கள் மாகாணபாலனத்தை மேலும் திறம்படச் செய் வதற்காகவே மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் நாடு விருத்திப் பாதையில் வேகமாக முன்னேறி வரும் வேளையில் பாலனமும் அத்துணை வேகத்தில் முன்னேறவேண்டிய அவசியத்தை உணர்ந்த ஆள்பதி கிறகரி 1873 இல் அநுராதபுரப் பிரிவையும் தமன்கடுவை பிரிவையும் உள்ளடக்கியதாய் வடமத்திய மாகாணத்தை உரு வாக்கினர் இதன்பயனாக முன் வடமாகாணத்தின்கீழிருந்த அநு ராதபுரப் பிரிவு அதிகபயனடைந்தது.

இதற்குப்பின்னர் ஆள்பதி கோடன் காலத்தில்மலைநாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள பசறை, மதுல்சீமைப் பகுதிகளில் பெருந் தோட்டங்கள் பெருமளவில் விருத்திபடைந்த தோடு அவற்றின் தேவைகளும் அதிகரித்தமையினாலும் அப்பிரதேசத் தின் நலன்களைக் கண்டியிலிருந்து பேணுவது கடினமாயிருந்த மையாலும் அவர் மத்திய மாகாணத்திலிருந்துவிந்தனை, வெல வ்ல, உடுக்கிந்தை, யட்டிக்கிந்தை முதலிய பிரிவுகளைத் தனி யாக்கி அவற்றுடன் புத்தளை, வெளவாயப் பிரிவுகளை இணை த்து 1886 இல்ஊவா மாகாணத்தை உருவாக்கினர், இதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் கேகாலை; இரத்தினபுரி என் னும் இருபிரிவுகளும் இணைக்கப்பட்டுச் சப்பிரகமுவ மாகாணம் உண்டாக்கப்பட்டது. இவற்றின் விளைவாக இலங்கை 9 மாகா ணங்களை உடையதாயிற்று.

பிரித்தானியர் காலத்தில் மாகாண பாலனம் அரசாங்க முகவரின் கீழ் விடப்பட்டது. அவர் ஆள்பதியின் பிரதிநிதி யைப் போலிருந்து ஆட்சிப் பொறுப்பை வகித்தார் அவர்

முன்னர் திசாவைகள் செய்த சடமைகளைச் செய்தார் எனலாம் அவரது அலுவலகம் மாகாணத்தலைநகரங்களில் அமைந்திருந்தது. அவர் இறைவரி, பயிர்ச்செய்கை முடிசார் நிலம் முதலியன பற்றிய விடயங்களைக் கவனித்ததோடு அரசாங்கத்தின் கோரிக்கைகளை மக்களுக்கும்மக்களின் தேவைகளையும் கோரிக்கைகளையும் அரசாங்கத்திற்கும் தெரிவிக்கும் கடமைகளையும் உடையவராயிருந்தார். காலகதியில் பாலனவேலைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து ஒவ்வொரு மாகாணமும் சில மாவட்டங்களாகப்பிரிக்கப்பட்டு உதவி அரசாங்கமுகவர்களின் கீழ்விடப்பட்டன. இவ்விதமாக முன்னர் 19 மாவட்டப்பிரிவுகள்காணப்பட்டன. (தற்போழுது அவற்றின்தொகை 22ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது) மாவட்டங்களின் உட்பிரிவுகளான கோறளை, பற்று முதலியன நட்டேமாகாத்மயா முதலியார் முதலிய கிராமத்தலைமைக்காரர்களின் கீழ் (தமிழ்ப்பகுதியில்மணியகாரன்உடையார், விதானை வன்னியர்) விடப்பட்டன. இவர்கள் வேதனம் பெறும் ஊழியர்களாக்கப்பட்டனர்.

அடுத்து நாட்டின் அபிவிருத்திவேலைகளைத் துரிதப்படுத்துவதற்கும்ஒவ்வொரு வகையான வேலையிலும் அதிக கவனம் செலுத்தவதற்குமாகப் பல புதிய திணைக்களங்கள் நிறுவப்படலாயின. அத்துடன் முன்பிருந்த திணைக்களங்களும் புனரமைக்கப்பட்டன. இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின்பிற்பகுதியில் புதிதாக நிறுவப்பட்ட திணைக்களங்கள் பொதுக் கல்வித் திணைக்களம், அளவையாளர் நாயகத்தின் திணைக்களம்,குடியியல் மருத்துவத் திணைக்களம் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் புகையிரதத் திணைக்களம் துறைமுகத் திணைக்களம் சுங்கத்திணைக்களம் காட்டுத்திணைக்களம் நிலக்குடியேற்றத் திணைக்களம் ஆகியனவாகும் இக்காலத்தில் புனரமைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டதிணைக்களங்கள் பொதுவேலைத் திணைக்களம் தாவர ஆராய்ச்சித்திணைக்களம் (இது பின்னர் பயிர்ச்செய்கைத் திணைக்களமாகியது) நிலஅளவீட்டுத் திணைக்களம் பொலிஸ் திணைக்களம் ஆகியனவாகும். இவற்றின் பின்னர் இருபதாம்நூற்றாண்டின் தொடக்கத்தில் மது பரிபாலனத் திணைக்களம் (1909) ஒன்றும் புதியதாக அமைக்கப்பட்டது. இவ்வாறு பாலனவேலை பலதிணைக்களங்களுக்கும்பகிர்ந்தளிக்கப் பட்டதன் விளைவாக அரசாங்க முகவர்கள் தம் கடமைகளை எளிதாகச் செய்யக்கூடியதாயிருந்ததோடு நாட்டின் தேவைகளும் நல்ல முறையில் கவனிக்கப்படலாயின.

மேற்குறிப்பிட்ட முறையில் மத்திய அரசாங்க ஆட்சிவிருத்தியடைந்த அதேசமயம் அரசாங்கம் உள்ளூராட்சி முறையிலும் படிப்படியாகப் பல மாற்றங்களைப் புகுத்தியது. உள்ளூராட்சித் துறையின் விருத்தியில் அரசாங்கம் முதல் முதல் எடுத்த நடவடிக்கை வீதிக்குழுக்களை அமைத்ததாகும். ஆளுநர் தோமஸ் ரனின் காலத்தில் (1848இல்) வீதிச்சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட சிலரைக்கொண்ட வீதிக்குழுக்கள் நாடெங்கிலும் நிறுவப்பட்டன. இதற்குப் பின்னர் ஆளுநர் வாட் காலத்தில் கம்சபாக்கள் புனரமைக்கப்பட்டதும் மெக்கலம் காலத்தில் (1871இல்) அவை நீதிபாலன அதிகாரங்களையும் பெற்று முழுப்பொலிவுடன் சேவையாற்றத் தொடங்கியதும் முன்னர் குறிப்பிடப்பட்டன (பக்கம்86) நீர்ப்பாசன வேலைகளைக் கவனிக்கவும், கிராமவாழ்க்கையைச் சீர்ப்படுத்தவும் பட்டினங்களில் உள்ள நீதிமன்றுகளில் தொடரப்பட்ட பல்லாயிரக்கணக்கான அழிவழக்குகளை நிறுத்தவும், பிரதானிகள், தலைமைக்காரர்கள் முதலியோரின் அநுசரணையுடன் கிராமத்தில் அமைதியை ஏற்படுத்தவும் கம்சபாக்களின் புனருத்தரணம் உதவியது. மேலும் அவற்றின் புனரமைப்பு, பண்டைக்காலம் முதல் கிராம பாலனத்துடன் ஒன்றியிருந்த ஒரு உள்ளூராட்சி முறையை மீண்டும் உறுதிப்படுத்துவதாயிற்று.

கம்சபாக்கள் புனரமைக்கப்பட்ட அதேசமயம் 1852 முதல் சுகாதாரக் குழுக்களும் ஒவ்வொரு மாகாணத்திலும் நிறுவப்பட்டிருந்தன. அவை தொற்றுநோய்களுக்கெதிரான சுகாதார நடவடிக்கைகளை எடுப்பதற்காக அமைக்கப்பட்டன. ஆயின் 1892இல் அவற்றின் இடத்தில் 'சனிற்ரறி போட்ஸ்' எனப்படும். சுகாதாரப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன இக்குழுக்கள் ஒவ்வொன்றின் கீழும் பல சிறிய பட்டினங்களின் சுகாதார பரிபாலனம் விடப்பட்டிருந்தது. எனவே இவ்விருவகைக் குழுக்களும் சுகாதார விடயங்களை மட்டும் கவனித்து வந்தன. இவற்றுக்கு வேறு அதிகாரம் இருக்கவில்லை. அதேசமயம் இக்காலத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் புதுவதாக உருவாகியிருந்த சிறு பட்டினங்களின் பாலனம் பல புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தியபடியால் அரசாங்கம் அந்நகரங்களின் பாலனத்தை 'லோக்கல் போட்' எனப்படும் உள்ளூர்க் குழுக்களிடம் 1876இல் கையளித்தது. இக்குழுக்கள் 3 தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களையும் 3 நியமன உறுப்பினர்களையும் உடையனவாய் அரசாங்க முகவர் அல்லது அவரது உதவியாளரின் கீழ் இயங்கின.

இதற்குப் பின்னர் 1920இல் அரசாங்கம் உள்ளூராட்சி முறையில் முன்னர் வழக்கிலிருந்த எல்லா தாபனங்களையும் நீக்கி விட்டு முழுமையான பாலனதிட்டமொன்றைச் செயல்படுத்த எண்ணி நகர சங்கங்களை நாட்டின் பல பகுதிகளிலும் நிறுவியது. ஆயினும் இத்திட்டத்தின் கீழ் 8 நகர சங்கங்கள் மட்டுமே நிறுவப்பட்டன. மாநகரசங்கப் பிரிவுகளை இவை உள்ளடக்கவில்லை.

மேல் விபரிக்கப்பட்டவை கிராமங்கள், சிறு நகரங்கள் பற்றிய ஆட்சி முறையில் ஏற்பட்ட மாற்றங்களாம். இம்மாற்றங்கள் கொழும்பு, கண்டி, காலி, முதலிய பெரிய பட்டினங்களைப் பொறுத்தமட்டில் எம்மாற்றத்தையும் விளைவிக்கவில்லை. ஏனெனில் அவற்றின் பிரச்சனைகளும், தேவைகளும் விசேடமானவையாகக் காணப்பட்டன. அவற்றின் பாலனம் சிக்கலானதுமாகும். ஏனெனில் அங்கு, வீதிகளை அமைத்தல், போக்குவரத்தைக் கட்டுப்படுத்தல், குடியிருப்பு அமைத்தல், கழிவுப்பொருட்களை அகற்றல், நீர்வசதி, வெளிச்ச வசதிகளை அளித்தல், சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தல் முதலிய பல கருமங்களைச்செய்யவேண்டியிருந்தது. எனவே உள்ளூராட்சி முறையில் உச்ச நிலையிலுள்ளமாநகர சங்கங்கள் கொழும்பு, கண்டி காலி என்னும் மூன்றுபட்டினங்களில் முறையே 1866, 1867, 1868என்னும் ஆண்டுகளில் நிறுவப்பட்டன. பிற்காலத்தில் நுவரேலியா, குருநாகல், நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகியனவும் மாநகர சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

நீதி பாலனம் :-

1850ம் ஆண்டுகளுக்குப் பின்னர் இத்துறையில் ஏற்பட்ட முக்கியமான சீர்திருத்தம் கம்சபாக்களின் நீதிபாலன அதிகாரங்களை மீண்டும்வழங்கியதாகும், இதுபற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டது வாட் காலத்தில் புனரமைக்கப்பட்ட இச்சபைகள் 1871இல் ரெபின்சன் காலத்தில் சிறு குற்றங்களை விசாரிக்கவும் 100 ரூபாவுக்கு மேற்படாமல் தண்டனை வழங்கவும் அதிகாரத்தைப் பெற்றன. இதன் விளைவாக நீர்ப்பாசனம், பயிர்ச்செய்கை நில உரிமை, எல்லைகள் முதலியன பற்றிய தகராறுகள் விரைவாகவும் எளிதாகவும் தீர்க்கப்படலாயின. பின்னர் 1899ம் ஆண்டு விடுக்கப்பட்ட நீதிமன்றக் கட்டளைச் சட்டம் 1833ம் ஆண்டு நீதிப்பட்டயத்தை நீக்கிவிட்டு உயர் (உச்ச) நீதிமன்று மாவட்ட நீதிமன்று, மஜிஸ்திறேற் நீதிமன்று விண்ணப்ப நீதிமன்று ஆகியனவற்றை நிறுவியது மேலும் உயர் நீதிமன்று

மேல் முறையீட்டு நீதிமன்றமும் பணியாற்றும் அதிகாரத்தைப் பெற்றது. மாவட்டநீதிமன்று குடியியல் குற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றதுடன் மஜிஸ்திறேற் நீதிமன்றிலிருந்து மேன்முறையீட்டில்வரும் குடியியல் வழக்குகளை விசாரிக்கும்அதிகாரத்தையும் பெற்றது. விண்ணப்ப நீதிமன்றுகள் 300 ரூபாவுக்கு மேற்படாத தண்டனைக்குரிய வழக்குகளை விசாரணைசெய்தன மஜிஸ்திறேற் நீதிமன்று சிறு குற்றங்களை விசாரித்து தண்டனைகளை வழங்கியதுடன் பாரிய குற்றங்களைப் பற்றிய பூர்வாங்க விசாரணையின் பின்னர் அவற்றை மாவட்ட நீதிமன்றுக்கோ உயர் நீதிமன்றுக்கோ பாரப்படுத்தின.

அரசியற்றிட்ட மாற்றங்கள்

சோல்பறூக்-கமிறன் சிபார்சுகளைத் தொடர்ந்து 1833 ல் புகுத்தப்பட்ட அரசியற்றிட்டம் இலங்கையின் சனநாயக ஆட்சி வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தை வகிக்கின்றது. அத்திட்டம் முதல் முறையாக, பொதுமக்களுக்கும் மதிப்பளித்து அவர்களின் பிரதிநிதிகளின் குரலை ஆட்சியாளர் கேட்க வைத்தது ஆயினும் ஆட்சிப் பொறுப்பில் அன்று அவர்கள் இம்மியளவுவாவது பங்குபெறவில்லையென்பது அத்திட்டத்தின் பிரதான குறைபாடாயிருந்தது அக்கால இலங்கையர்களைப் பொறுத்தவரை அக்குறைபாடு பெரிதாக இருக்கவில்லை. ஏனெனில் அப்பொழுதுதான் இலங்கையர்கள் ஆட்சி இயலில் முதற் பாடங்களைப் படிக்கத் தொடங்கியிருந்தனர். இதனால் வர்த்தக நலன்களையுடையவர்களாயிருந்த ஆங்கிலேயரும், ஆங்கிலக் கல்வி மூலம் மத்திய வகுப்பினராக உருவாகியிருந்த பறங்கியரும் தாம் தொடக்கத்தில் சட்டக் கழகத்தில்மாற்றங்கள் வேண்டுமெனச் சலியாது போராடி வந்தனர். அவர்கள் அக்கழகத்தில் பல குறைபாடுகளைக் கண்டனர். சட்டக்கழகத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகப்பற்றற்றோரிடம் அதிகாரம் எதுவும் இருக்கவில்லை. மேலும் ஆள்பதியே எல்லா விடயங்களிலும் முதன்மையுடையவராகக் காணப்பட்டார். அத்துடன் உத்தியோகப் பற்றற்றவர்களில் எவரும் சட்ட நிர்வாகக் கழகத்தில் உறுப்பினராயிருக்காதபடியால் பணவிடயங்களில் வாக்களிப்பதற்கு முன்னர் அது பற்றிய விபரங்களை அவர்களால் அறியமுடியவில்லை. சுருங்கக் கூறின் அவர்களின் கோரிக்கை பொருளாதார அடிப்படையில்

எழுந்தது எனலாம். எனவே அரசாங்கத்தின் வரவு செலவு பற்றியமுடிவுகளில் தமக்கும் பங்கு இருக்க வேண்டுமெனவும் அதற்கு ஏற்ற வகையில் உத்தியோகப் பற்றற்றவர்களின் தொகையை அதிகரிக்கவேண்டுமெனவும் அவர்கள் கோரினர் இவ்வித கோரிக்கைகளும் கிளர்ச்சிகளும் பெருந்தோட்டங்களின் தேவைகளை அரசாங்கம் கவனிக்காதசமயங்களில் அதிகரித்தன.

ஆனால் பரங்கியரும் ஆங்கிலேயரும் இலங்கையில் மிகச் சிறுபான்மையினராயிருந்த படியால் அரசாங்கம் அவர்களின கோரிக்கைகளை நிராகரித்தது. இதுபற்றி ஆள்பதி வாட் கூறியதாவது "எண்ணூயிரம் ஐரோப்பியரையும் விவேகமிக்க சிறுவகுப்பினராகிய பறங்கியரையும்இருபதுலட்சம் வேறு இனமக்களையும்கொண்ட ஒரு குடியேற்ற நாட்டில் பிரதிநிதித்துவ ஆட்சிக் கொள்கைகளைப் புகுத்தமுடியாது அங்கு முடிசூதேசிகளின் நலன்களுக்கும் ஐரோப்பியரின் நலன்களுக்கும் இடையில் சம நிலையை நாட்டவேண்டும்.

ஆயினும் 1855இல் வாட் பெருந்தோட்டக்காரர்கள்சங்கம் வர்த்தக சங்கம் என்னும் இரண்டும் 3 பிரதிநிதிகளைத் தாமே தெரிவு செய்து சட்டக் கழகத்தின் உறுப்பினராக்கலாம்என ஒரு சலுகையை வழங்கியிருந்தார் இதற்குப் பின்னர் 1860 இல் பணம்சம்பந்தமற்ற பிறமசோதாக்களைக் கொண்டு வருவதற்கு உத்தியோகப் பற்றற்றவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இச்சலுகைகள் உண்மையான பிரச்சனையைத் தொடவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இஃதிவ்வாறுக 1864ம் ஆண்டில் சட்டக்கழகத்தில் ஒரு புதிய பிரச்சனை எழுந்தது. அது இராணுவத்திற்கான செலவைப் பற்றியது. இலங்கை முடிசார் குடியேற்ற நாடாகிய காலம் முதல் இங்கிருந்த படைகள் பரிபாலனச் செலவில் ஒரு பகுதியைப் பிரித்தானியாவும் பொறுத்துவந்தது. ஆனால் 1864 இல் பிரித்தானியா அவ்விடயத்தை ஆராய்ந்தபின் படைகளிற் குரிய செலவு முழுவதையும் இலங்கையே எதிர்காலத்தில் பொறுக்கவேண்டுமெனத் தெரிவித்திருந்தது இம்முடிவை இங்கிருந்த ஆங்கிலேயரும் பறங்கியரும் பிறரும் எதிர்த்தனர். இதன் விளைவாக, 1864இல் கூடிய சட்டக் கழகத்தில் ஆள்பதியின் பிரதிநிதியாக நிறைவேற்றப்பட்டுவிட்டது. இது குடி-

யேற்ற நாட்டு ஆட்சியின் வரலாற்றில் முன்னேப்போதும் நடவாத நிகழ்ச்சியாகும். ஆயினும் சட்டக்கழகம் படைச் செலவினங்களை அநுமதித்தது இதனைத் தொடர்ந்து சட்டக்கழகத்தின் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர் அனைவரும் பதவியைத் துறந்தனர். அவர்கள் சீ. ஏ. லோறன்ஸ், ஜேம்ஸ் டி அல்விஸ், ஜே.ஈற்றன் ஆகியோராவர்.

இவ்வாறு பதவியை விட்டு விலகியவர்கள் அனுப்பிய விலகற் கடிதத்துக்குப் பதிலளித்த குடியேற்ற நாட்டுச் செயலாளர் சட்டக்கழகத்தின் செயல்கள் சரியானவையென்றும் இலங்கையே இராணுவச் செலவு முழுவதையும் பொறுப்பேற்க வேண்டுமெனவும் தெரிவித்ததுடன் எதிர்காலத்தில் இறைவரிப் பங்கீடு பற்றிய முடிவுகள் சட்டக்கழகத்தில் நிறைவேற்றப்படும் கட்டளைச் சட்டங்களுக்கேயன்றி நிர்வாக நடவடிக்கைகளுக்கமையா எனவு விசேடசலுகையையும் தெரிவித்திருந்தார் இதைத் தொடர்ந்து 'இலங்கைக் கூட்டவை' என்றும் பெயரில் ஒரு அரசியல் தாபனம் நிறுவப்பட்டது. இதில்எல்லா இனமக்களும் சேர்ந்தனர். விரைவில் இத்தாபனம் பொதுக்கூட்டங்களை நடத்தியும், மனுக்களைத் தயாரித்தும், இங்கிலாந்தில் சில பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியைப் பெற்றும் 'கண்டி ஹெரால்ட்' என்னும் பத்திரிகையைத் தொடங்கிப் பிரசாரம் மேற்கொண்டும் சீர்திருத்தக் கிளர்ச்சி செய்தது. ஆனால் ஆட்சியாளரின் மனம் மாறவில்லை.

எனினும் காலம் இலங்கையருக்கேசாதகமாயிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலக்கல்வியின் பரவலினால் அரசியல் விழிப்புற்ற இலங்கையர்கள் ஐரோப்பிய அரசியற் கருத்துக்களினாலும், சிந்தனையினாலும் தூண்டப்பெற்ற வராய் தமக்கே தனித்துச் சீர்திருத்தங்களுக்காகப் போராடத் தொடங்கினர். இதனால் பிரித்தானியர் அவர்களின் கோரிக்கைகளைத் தட்டிக் கழித்தல் கடினமாயிற்று. இருந்த போதிலும் பிரித்தானிய அரசு இக்காலத்தில் 'ஏகாதிபத்திய' எண்ணத்தில் திளைத்திருந்தபடியாலும், பிரித்தானியரின் முதலீட்டுக்கும்கைத் தொழில் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கும் ஏற்ற இடங்களாக அரசு குடியேற்ற நாடுகளைக் கருதியதாலும், உள்நாட்டவருக்கு நிர்வாகத்தில் பங்களித்து அரசாங்கத்தின் செயல் திறனைக்குறைக்க விரும்பாமையாலும், சீர்திருத்தம் கோரியமத்திய வகுப்பினர் நாட்டின் பெரும்பான்மையாளராகிய பொது மக்க

ளிலிருந்தும் புறம்பானவராய் அவர்களின் சிந்தனைகளைப் பிரதிபலிக்காதவர்களாயிருந்தபடியாலும் அரசு சீர்திருத்தக்காரர்களின் பிரதான கோரிக்கைகளைப் புறக்கணித்து வந்ததுடன் அவ்வப்போது சிறு சிறு மாற்றங்களை மட்டும் புகுத்தியதுடன் நின்று விட்டது.

1889ம் ஆண்டு மாற்றங்கள்:—இத்தகைய ஒரு சிறுமாற்றம் 1889இல் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி அவ்வாண்டு முதல் சட்டசபையில் சண்டியரும் முள்ளிமக்களும் ஒவ்வொரு பிரதிநிதி மேலதிகமாக நியமிக்கப்பட்டார். இதனால் சட்டக் கழக உறுப்பினர் தொகை எட்டாக அதிகரித்தது. ஆயினும் உத்தியோகப் பற்றுள்ளோர் இன்னமும் பெரும்பான்மையினராகவே காணப்பட்டனர் (9) அத்துடன் ஒப்புநோக்க பிரதிநிதித்துவ முறை தொடர்ந்து பின்பற்றப்பட்டதும் சட்ட நிர்வாகக் கழகத்தில் உத்தியோகப் பற்றற்றவர்கள் யாருக்கும் இடமளிக்காததும் நீண்டகாலக் குறைபாடுகளாயிருந்தன. இந்நிலையில் சேர் ஹமில்டன்கோடன் இறுதியாகுறிப்பிட்ட குறைபாட்டை நீக்கத்தி செய்வதற்கு இசைந்தபோதிலும் அதற்குக் குடியேற்ற நாட்டுச்செயலாளர் ஒருப்படவில்லை ஆயினும் அவ்வாண்டுமேற்கொள்ளப்பட்ட புதிய ஒழுங்கின்படி சட்டக்கழக உறுப்பினரின் சேவைக் காலம் 5 ஆண்டுகளாக வரையறுக்கப்பட்டது. இதற்கு முன்னர் அவர்கள் ஒவ்வொரு ஆளுநரும் மாறும் காலம் வரை தொடர்ந்து பதவிவகித்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு 1889ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் வெறும் கண்துடைப்பு என்பதை உணர்ந்த மத்திய வகுப்பினர் தமது சீர்திருத்தக் கிளர்ச்சியை மேலும் வலுப்படுத்தினர். ஆங்கிலக் கல்விபெற்றோரின் தொகையதிகரிப்பு, பொதுமக்களின் விழிப்பு, தேசாபிமானிகள் பலரின் உழைப்பு, பத்திரிகைகளின் பணி, ஆகியன அவர்களுக்குப் பக்கபலமாயமைந்தன. அத்துடன 1835—1910 காலத்தில் நாட்டின்பல துறைகளிலும் ஏற்பட்டிருந்த வியக்கத்தக்க மாற்றங்களும் அரசியல் சீர்திருத்தத்தின் அவசியத்திற்கு அடிக்கோடிட்டன.

1833இல் ஏறத்தாழ 10 இலட்சமாயிருந்தகுடித் தொகை 1910இல்40 இலட்சமாக அதிகரித்தது. கல்விகற்ற மாணவர் தொகை 1834இல் 13,891 ஆக இருந்து 1906இல் 2,67,691 ஆக அதிகரித்திருந்தது. அன்றியும் இக்காலத்தில் பல கல்லூரி

கள் உயர் கல்விப்போதனையிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. இதன் விளைவாக ஆங்கிலம் கற்றோரின் தொகை 1901இல் 7ரூ,496 ஆக அதிகரித்திருந்தது மேலும் பொருளாதாரத்துறையிலும் இலங்கை பெரும் முன்னேற்றம் கண்டிருந்தது 1813 ல் 43 இலட்சம் ரூபாவாயிருந்த இறைவருமானம் 1907 இல் 3½ கோடி ரூபாவாக அதிகரித்திருந்தது. அன்றியும் நாட்டின் நிர்வாகம் மேலும் விரிவடைந்தமையால் பல புதிய திணைக்களங்களும் நிறுவப்பட்டிருந்தன. இவற்றைத்தவிர சட்டக்கழகத்தின் பிரதிநிதித்துவ முறையும் புனரமைப்பைவேண்டிற்று.ஏனெனில் 8000 ஐரோப்பியருக்கு 3 பிரதிநிதிகள் நியமிக்கப்பட்ட அதேசமயம் 14½ இலட்சம் கரைநாட்டுச் சிங்களவருக்கு 1 பிரதிநிதியும் 10 இலட்சம் கண்டியருக்கு 1 பிரதிநிதியும், 9½ இலட்சம் தமிழருக்கு 1 பிரதிநிதியும், 2½ இலட்சம் முஸ்லிம்களுக்கு 1 பிரதிநிதி மட்டும் நியமிக்கப்பட்டிருந்தனர். எனவே இன அடிப்படையிலான நியமனத்தை ஒழித்துவிட்டுப் பிரதேசவாரியான நியமனம் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் நியமன முறைக்குப் பதிலாகத்தேர்வு முறை பின்பற்றப்பட வேண்டுமெனவும் சில உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களைச் சட்ட நிருவாகக் கழகத்திலும் நியமிக்கவேண்டுமெனவும் கோரிக்கைகள் விடப்பட்டன.

1907இல் நிறுவப்பட்ட தாழ்பிரதேச வியாபாரருட் சங்கமும், யாழ்ப்பாணச் சங்கம், சிலாபச் சங்கம் முதலியனவும் இவ்விதமான கோரிக்கைகளை எதிரொலித்தன. மேலும் இக்காலத்தில் இந்தியாவில் மோர்லி – மின்ரோ சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்பட்டமையால் அவற்றினூல் வழங்கப்பட்ட தேர்தல் உரிமைகளை இங்கும் புகுத்துமாறும் கோரிக்கையாளர் குரலெழுப்பினர்,

1910ம் ஆண்டு (மக்கலம்) சீர்திருத்தங்கள் :—இவ்வாறு கோரப்பட்ட சீர்திருத்தங்களிற் சிலவற்றை ஆள்பதி மக்கலம் ஐரோப்பிய சமூகத்தினரும் எதிர்த்தனர். ஆயினும் குடியேற்ற நாட்டுச் செயலாளர் அக்கோரிக்கைகளிற் சிலவற்றை ஏற்றுக் கொண்டு 1910இல் ஒரு பட்டயத்தை விடுத்தார். அப்பட்டயம் அரசியற்றிட்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தியது.

அதன்படி சட்டக்கழகத்தின் உறுப்பினர் தொகை 17இலிருந்து25ஆக அதிகரிக்கப்பட்டது. அதில் 11 பேர் உத்தியோகப் பற்றுள்ளவர்களாகவும். 10 பேர் உத்தியோகப் பற்றற்றவர்களாகவும் இருந்தனர். உத்தியோகப்பற்றற்ற பதின்மரில் ஒருவர் நகர்ப்புற ஐரோப்பியருக்காகவும், ஒருவர் நாட்டுப்புற ஐரோப்பியருக்காகவும், ஒருவர் பறங்கியருக்காகவும் நியமணம் பெற்றனர்- நாலாமவர் கல்விகற்ற இலங்கையரின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மிகுதி அறுவரில் இருவர் தாழ்பிரதேசச் சிங்களவருக்காகவும், இருவர் தமிழருக்காகவும் ஒருவர் கண்டியருக்காகவும், ஒருவர் முஸ்லிம்களுக்காகவும் ஆள்பதியால் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு அமைக்கப்பட்ட சட்டக்கழகம் 12-I-1912இல் முதல் முறையாகக் கூடியது. இக்கழகத்தில் கல்வி கற்ற இலங்கையரின் பிரதிநிதியாக சேர் பொன் இராமநாதன்சிங்களவர் பலரினதும் ஆதரவுடன் தெரிந்தெடுக்கப்பட்டார். பிற்கால நிகழ்ச்சிகள் அவரின் தெரிவு மிகப் பொருத்தமானது என்பதை ஆவருக்கும் உணர்த்தின

1910ஆம் ஆண்டுச் சீர்த்திருத்தங்களினால் எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. அது மத்திய வகுப்பினரின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவுமில்லை. ஆட்சியாளருடன் சமத்துவத்தைக்கோரிய இலங்கையரின் ஆசையை நிறைவேற்றவுமில்லை மேலும் உத்தியோகப்பற்றுள்ளோர் இன்னும் பெரும்பான்மையினராயிருந்ததுடன் அவர்கள் முக்கியமான விடயங்களில் ஐரோப்பியப் பிரதிநிதிகளின் ஆதரவையும் பெறக்கூடியதாயிருந்தது. ஏனெனில் இக்காலத்தில் வளர்ந்துவந்த தேசிய விழிப்பையும் எழுச்சியையும் ஐரோப்பியர் விரும்பவில்லைஎன்க. மேலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை ஒழிக்கப்படாதும் விரும்பத்தக்காத ஒரு அமிசமாயிருந்தது.

இவ்வாறாக 1915இல் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஆங்காங்கு ஏற்பட்ட கலவரங்களின் போது ஆட்சியாளர் நடந்துகொண்டமுறை ஆட்சிக்கெதிராக மக்களின் வெறுப்பை அதிகரித்ததோடு உரிமைப் போராட்டத்தின் உத்வேசத்தையும் கூட்டிவிட்டது.

1915ம் ஆண்டுக் கலகம் :—1915ம் ஆண்டு முஸ்லிம்களுக்கும் சிங்களவர் களுக்குமிடையில் ஏற்பட்ட கலகங்கள் கம்பளையில் பௌத்த கோவிலின் எசல பெரகரா பற்றிய தகராறுகளி லிருந்து முளைத்தவை கம்பளையிலுள்ளபௌத்த கோவில் முகா மையாளர் 1914 ம் ஆண்டு வழமைபோல எசலப் பெரகரா வை நடத்துவதற்கு அரசாங்கத்தின் அனுமதியைக்கேட்டிருந்த பொழுது அரசாங்க முகவர் ' கம்பளையில் (கம்பய)வுக்குப்பு முஸ் லிம்களால் புதிதாகக் கட்டப்பட்டிருந் மசூதிக்கு 100 யார் தூரத்துக்குள் வாத்தியங்களோ இசைக்கக்கூடாதென ஒரு கட்டுப் பாட்டை விதித்தார். இவ்வித கட்டுப்பாடு முன் எப்போதும் இருக்காதபடியால் பௌத்த கோவில் (நிலாமை) அக்கட்டுப் பாட்டுக்கு எதிராக கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் அவ்வழக்கை விசாரணை செய்த நீதி பதி புதிய கட்டுப்பாடு பிழையானது எனத்தீர்ப்பளித்தார். உடன் அரசாங்கம் உயர் நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்ய அது அரசாங்கத்துக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியது. அத்தீர்ப்பு 2—2-1915இல் வழங்கப்பட்டது.

இத்தீர்ப்பில் அதிருப்தியுற்ற பௌத்த கோவில் முகாமையா ளர் பிறிவு கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்தார். இதற்கி டையில் விஷமிகள் பலர் முஸ்லிம்களுக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்யுமாறு சிங்களவர்களைத் தூண்டினர். ஆனால் பௌத்த மதத் தலைவர்கள் அதற்கு ஆதரவளிக்கவில்லை. ஆயினும் (28-5—1915) விசாகப்பெருநாளில் கண்டியில் நடைபெற்ற ஒரு 'கரேரல்' ஊர்வலத்தின்போது காசில் வீதி மசூதிக்கண்மையில் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் சிறு சச்சரவுகள் இடம்பெற்றன. இதற்கு அடுத்த நாள் தலதாமாளிகாவுக்கு வழிபாட்டிற்காகவந்த பெருந் தொகையான கிராமப்புற மக் கள் இரவு நகரில் தங்கியிருந்த சமயம் ஒரு (முஸ்லிம்) உண்டிச் சாலையிலிருந்து சில சிங்களவர் கூடப்பட்டதும் மறுநாள் மாலை யில் ஆங்காங்கு ஏற்பட்ட சிறு கைகலப்புகளும் யூன் 1ம், 2ம் திகதிகளில் சிங்களவர்களால் முஸ்லிம்களின் சில கடைகள் உடைக்கப்பட்டதும் தாம் கண்டியில் நிகழ்ந்த முக்கியமான சம்ப வங்கள். ஆயினும் விஷமிகளால் பரப்பப்பட்ட பல பொய் யான செய்திகளால் அடுத்த சில நாட்கள் கேகாலை, குருநாகல், கொழும்புப்பகுதிகளிலும் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும்

மிடையில் கலவரங்கள் ஏற்பட்டன: இக்கலவரங்களின் தன்மையையும் காரணத்தையும் விளங்கிக்கொள்ளாத அரசாங்கம் விபரீதபுத்தியினால் படைச்சட்டத்தை அமுலாக்கிப்பலரை அநியாயமாகச் சுட்டுக் கொன்றது. அத்துடன் பல பௌத்த தலைவர்கள் காவலில் வைக்கப்பட்டு அவர்களின் வீடுகளும் சோதனையிடப்பட்டன. இக்காலத்தில் அரசாங்கம் முஸ்லிம்களுக்குச் சாதகமாக நடந்தமைக்குக் காரணம், உலகப்போர் நடந்துகொண்டிருந்த அக்காலத்தில் தமது சாம்ராச்சியத்திலுள்ள முஸ்லிம் மக்களின் விரோதத்தை வளர்த்துக்கொள்ள விரும்பாமையே.

இவ்வாறு கலகம் முடிவடைந்து பின்னர் பௌத்தர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் காண முனைந்தனர், கொழும்பில் இதற்காக ஒரு பொதுக்கூட்டம்நடாத்தப்பட்டது. அதன் பின்னர் D R. ஜயதிலக்க, E.W. பெரேராஎன்னும் இருவரும் பௌத்தர்களின் குறைபாடுகளை முறையிடுவதற்கு இங்கிலாந்துக்குப் பயணமாயினர். அவர்களைத் தொடர்ந்து சேர் பென். இராமநாதன் அவர்களும் இங்கிலாந்து சென்று குடியேற்ற நாட்டுச் செயலாளரைச் சந்தித்துப்பேசினர். இதன் விளைவாக அரசாங்கம் கலவரகாலச் சம்பவங்களை விசாரிக்க ஒரு குழுவை நியமித்ததோடு காவலில் வைக்கப்பட்ட பல பௌத்த தலைவர்களையும் விடுதலை செய்தது.

1915ம் ஆண்டுக் கலவரம் மக்களின் தேசிய உணர்ச்சியைத் தட்டியெழுப்பியதுடன் ஆட்சிக்கெதிராக அதிருப்தியை மேலும் அதிகரிக்கச் செய்தது. அக்கலவர காலத்தில் நடந்தவைபோன்ற சம்பவங்கள்மீண்டும்நடைபெறுதிருப்பதாயின்ஆட்சிப்பொறுப்பு இலங்கையரிடம் இருப்பது இன்றியமையாததுஎன்பதைத் தலைவர்கள் உணர்ந்தனர். அதேசமயம், பெருந்தோட்டங்களின்விரிவுவர்த்தகத்தின் வளர்ச்சி அரசாங்கசேவையின் விரிவு, மருத்துவம், தொழில்நுட்பம், சட்டம்முதலிபதுறைகளில் கல்வி வசதியின் அதிகரிப்பு, பௌத்த. இந்து சமயங்களினதும் அவற்றின் கலாச்சாரங்களினதும் புனருத்தரணம் முதலிய பலவற்றின் விளைவாக மத்தியவகுப்பினரின் அரசியல்விழிப்பு என்று மில்லாத அளவுஅதிகரித்திருந்தது. அன்றியும்மொன்ரேக - செம்ஸ்போட் குழுவினரின் சிபார்சுகள் இந்தியாவை அதன் விடுதலைப்பாதையில் மேலும் சில தூரம் முன்னேக்கி இட்டுச் சென்றபடியால் அதனைக் கண்ணுற்ற இலங்கையர் தாமும்அத்தகைய ஒரு நிலையை அடைய வேண்டுமென அவாவுற்றனர்.

மேலும், இக்காலத்தில் ஜேர்மனியுடன் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிரித்தானியா, ஐரோப்பாவிலுள்ள பல சிறிய நாடுகளின் சுய நிர்ணய உரிமைக்காகவும், சுதந்திரத்திற்காக வும் பரிந்து பேசிவந்தபடியால் இலங்கையர்கள் தமதுநாட்டு விடயத்திலும் பிரித்தானியா அவ்விதமே நடக்கவேண்டும் என எதிர்பார்த்தனர்.

இந்நிலையில் 1917 மே மாதத்தில் 'சீர்திருத்தக்குழு' என ஒரு புதிய அரசியற் கழகம் நிறுவப்பட்டது. அது அரசியற் சீர் திருத்தங்களுக்காகக் கிளர்ச்சி செய்து D.B. ஜயதிலக்க என்பவ ரைக்குடியேற்றநாட்டுச் செயலாளரைப் பேட்டிகாணுமாறுஅனுப் பியது. இதற்கிடையில் 1919ம் ஆண்டு டிசம்பரில் சீர்திருத்தக் குழு, இலங்கைத் தேசியசங்கம், என்னும் இரண்டும் இணைந்து 'இலங்கைத் தேசிய காங்கிரஸ்' என்னும் புதிய அரசியல் இயக் கமாக உருவெடுத்தன. இலங்கைத்தேசிய காங்கிரஸ் தாழ்பிர தேசச்சிங்களவர், தமிழர் முஸ்லிம்கள் முதலிய பலரின்கூட்டு முயற்சியால் நிறுவப்பட்டது. அதன் தலைவர்களாக சேர் பொன். அருணாசலம், சேர் ஜேம்ஸ் பீரிஸ் ஆகியோர் பதவியாற் றினர் ஆட்சியாளருக்கெதிராக இலங்கையர் அனைவரும்ஒரே அணியின் கீழ் ஒன்றுபட்டுப்போராடுவதன் மூலமே சீர்திருத்தங் களைப்பெற முடியும் எனக் காங்கிரஸ் நம்பியது.

இலங்கைத் தேசிய காங்கிரஸ் அரசியற்திட்டத்தைமாற்ற வேண்டுமென ஆட்சியாளரை வற்புறுத்தியதுடன் பம்பாய் மா நிலத்துக்கு வெலிங்டன் பிரபுவினால் வழங்கப்பட்டதை யொத்த ஒரு அரசியற்றிட்டத்தை இலங்கைக்கும் கோரியது. மேலும் 50 உறுப்பினர்களைக்கொண்ட ஒரு சட்டக் கழகம் நிறுவப்பட வேண்டுமெனவும் அதில் 10 பேர் பிரதேசவாரியாகத் தெரிவு செய்யப்படவேண்டுமெனவும் சட்டநிர்வாகக் கழகத்தில் அரை ப்பங்கினராவது இலங்கையர்களாயிருக்க வேண்டுமெனவும் வாச கர் தெரிவு செய்யப்பட்டவரா யிருக்கவேண்டுமெனவும்வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவமுறை ஒழிக்கப்பட வேண்டுமெனவும், வரவு செலவு திட்டவிடயத்தில் தெரிவு செய்யப்படும் உறுப் பினருக்குப் பூரண அதிகாரம் இருக்கவேண்டுமெனவும் ஆள்பதி ஆங்கிலப் பாராளுமன்ற முறையில் அநுபவமுள்ளவராயிருக்க வேண்டுமெனவும். ஆண்கள் எல்லோருக்கும் கட்டுப்பாடின்றியும் பெண்களுக்குச் சில கட்டுப்பாடுகளுடனும்வாக்குரிமை அளிக்க

வேண்டுமெனவும் தேசிய காங்கிரஸ் கோரியது. சுருங்கக்கூறின் முழுமையான, பாராளுமன்ற, பொறுப்பாட்சியை அதுகோரியது எனலாம்.

இவ்வாறு காங்கிரஸ் விடுத்த கோரிக்கைகளையும் வேறு கருத்துக்களையும் ஆள்பதி மானிங் அவர்களின் தகவுரைகளையும் ஆராய்ந்த பின்னர் 1920ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் குடியேற்ற நாட்டுச் செயலாளர் ஒரு புதிய கட்டளைச் சட்டத்தைப் பிறப்பித்தார். அது நடைமுறையிலிருந்த அரசியற்திட்டத்தில் சில மாற்றங்களைச் செய்தது.

1920-ம் ஆண்டு (மானிங்)சீர்திருத்தங்கள் :—

1920ஆம் ஆண்டு ஆகஸ்டில் வெளியிடப்பட்ட புதிய கட்டளைச்சட்டத்தின்படி சட்டக்கழகத்தின் உறுப்பினர் தொகை 37 ஆக அதிகரிக்கப்பட்டது. அதில் 23 பேர் உத்தியோகப் பற்றற்றவர். 14 பேர் உத்தியோகப் பற்றுள்ளவர்கள். உத்தியோகப் பற்றற்றவர்களில் 16 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 7 பேர் ஆள்பதியால் நியமிக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட 16 பேரில் 11 பேர் பிரதேசவாரியாகவும், 5பேர் வகுப்புவாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். வகுப்புவாரியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் இருவர் ஐரோப்பியருக்காகவும், ஒருவர் பறங்கியருக்காகவும், ஒருவர் தாழ்பிரதேசச்சிங்களவருக்காகவும் ஒருவர்வர்த்தக சங்கத்திற்காகவும் தெரிவுசெய்யப்பட்டனர், நியமனப் பிரதிநிதிகள் 7 பேரில் 2 பேர் கண்டியருக்காகவும், ஒருவர் பறங்கியருக்காகவும், ஒருவர் முஸ்லிம்களுக்காகவும் எஞ்சிய மூவரும் பிரதிநிதித்துவம் பெறுத பிறருக்காகவும் நியமனம் பெற்றனர். மேலும் 1920ம் ஆண்டுச் சீர்திருத்தங்கள் வாக்குரிமையையும் விரிவுபடுத்தின. அதன்படி 21 வயதுக்கு மேற்பட்டவர்களாய், ஆங்கிலம், சிங்களம், அல்லது தமிழ் மொழியைப் பேசவும்,எழுதவும், வாசிக்கவும் வல்லமுடையவர்களும், 600 ரூபா ஆண்டுவருமானம் அல்லது 1500ரூபாவுக்குமேற்பட்ட ஆதனத்தையுடையோரும் வாக்குரிமையைப்பெற்றனர். இத்தகைமைகளின் விளைவாக,மொத்தக்குடித்தொகையில் 4 வீதமானோர் மட்டும் வாக்காளர்களாகியது கவனிக்கத்தக்கது.

1920ஆம்ஆண்டுச் சீர்திருத்தங்கள் மக்களின் உரிமைக் கோரிக்கைகளில் ஒன்றையாவது பூர்த்திசெய்யவில்லை, இதனால்

தேசிய காங்கிரஸ் அவை சமூகங்களுக்கிடையில் வெறுப்புக்கிடமான வேறுபாடுகளைப் புகுத்துவதாகவும் பொறுப்பாட்சியின் தொடக்கத்தையே மறுப்பதாக இருப்பதாகவும் கூறிப் புதிய கழகத்தில் பங்குகொள்ளாது ஒதுங்கியது மேலும் கண்டியர்களுக்குப் பிரதேசவாரியான பிரதிநிதித்துவம் தொடாதது சிங்களவரை மறைமுகமாக இரு பிரிவினராக்க முயல்வதுபோலத் தென்பட்ட. அன்றியும் புதிய அரசியற்றிட்டம் சட்டக்கழகத்தில் கலந்துரையாடலைக் கட்டுப்படுத்தியதோடு முன்னர் இருக்காத சில அவசரகால அதிகாரங்களையும் ஆள்பதிக்கு வழங்கியிருந்தது இக்குறைபாடுகளின் காரணமாக தாழ்பிரதேசவீரர் பொருட் சங்கம் தனது பிரதிநிதியைத் தெரிவுசெய்ய மறுத்தது இந்நிலையில் ஆள்பதி தேசிய காங்கிரசுக்கு விடுத்த ஒரு வேண்டுகோளில் காங்கிரஸ் புதிய சட்டக்கழகத்தில் பங்குபற்றினால் அக்கழகத்தின் சிபார்சுகளுக்கேற்பப் புதிய சீர்திருத்தங்களைப் பின்னர் பெற்றுத்தருவதாக வாக்களித்தார். அவ்வுறுதியின் பேரில் தேசிய காங்கிரஸ் புதிய கழகத்தில் பங்குபற்றிச் சம்மதித்தது. இதன் மேல் தேர்தல்கள் நடாத்தப்பட்டு 1921 யூன் மாதத்தில் புதிய கழகம் கூடிற்று.

1924–ம் ஆண்டு (மானிங்) சீர்திருத்தங்கள் :–

புதிய கழகம் செயற்படத் தொடங்கிச் சில காலம் செல்லு முன்னர் தேசிய காங்கிரசில் (மேல்மாகாணத் தமிழருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் விடயத்தில்) கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டமையினால் தமிழர்கள் அதைவிட்டு விலகித்தமிழ் மகாஜன சபையை நிறுவினர். பின்னர் 1921ம் ஆண்டு டிசம்பரில் ஜேம்ஸ் பீரிஸ் சட்டக் கழகத்தில் கொண்டுவந்த ஒரு பிரேரணையில் 45 உறுப்பினரையுடை ஒரு புதிய கழகத்தை நிறுவுமாறும், அதில் 28 பேர் பிரதேசவாரியாகத் தெரியப்படுமாறும் கோரினர். இக் கோரிக்கைக்கு மாற்றாக 1922இல் தமிழர்கள், ஐரோப்பியர் பறங்கியர்; முஸ்லிம்கள், இந்தியர் ஆகியோரடங்கிய ஐக்கிய முன்னணி 45 உறுப்பினருடைய கழகத்தில் பிரதேசவாரியாகத் தெரிவுசெய்யப்பட்டோர் 19 பேரும் வகுப்புவாரியாகத் தெரிவு செய்யப்பட்டோர் 11பேரும்இருக்கவேண்டுமெனக்கோரியதுடன் அதுபற்றியமனுவையும் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அனுப்பிவைத்தது. மானிங் முன்னணியினரின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை ஆதரித்தார். ஆயினும் பிற விடயங்களில் அவர் இலங்கையர் தெரிவித்த கருத்துக்களை ஆத

ரிக்கவில்லை. இதன் பின்னர் இவ்விடயம் பற்றியமுடிவை எடுப்பதற்காகஆள்பதிகுடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு நிலைமையை அறிவித்தார். அவர் எல்லோருடைய கோரிக்கைகளையும் ஆராய்ந்த பின்னர் 1924 ஆகஸ்டில் சட்டக் கழகத்தைக் கலைத்துவிட்டுப் புதிய முறையில் கழகத்தை நிறுவுமாறு ஆணைபிறப்பித்தார். இதன்படி நிறுவப்பட்ட கழகத்தில் மொத்தம் 39 பேர் உறுப்பினராயிருந்தனர். அதில் 37 பேர் உத்தியோகப் பற்றற்றோர். இவர்களில் 23 பேர் பிரதேசவாரியாகவும் 11 பேர் வகுப்புவாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். 3 பேர் நியமனம் செய்யப்பட்டனர். உத்தியோகப்பற்றுள்ளோர் 12 பேரில் ஐவர் தமது பதவியின் காரணமாக உறுப்பினராயினர், குடியேற்ற நாட்டுச் செயலாளர், பிரதம இராணுவத்தலைவர், சட்டத்துறை நாயகம், இறைவரி ஆணையாளர், பொருளாளர் ஆகியோரே இவ்வைவராவர். எஞ்சிய 7 பேரும் ஆள்பதியால் அரசாங்க சேவையிலுள்ளோரிலிருந்து நியமிக்கப்பட்டனர் வகுப்புவாரியாகத் தெரிவுசெய்யப்பட்ட 11பேரில் மூவர் ஐரோப்பியருக்காகவும், இருவர் பறங்கியருக்காகவும் ஒருவர் மலாகாணத் தமிழருக்காகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

1924-ம் ஆண்டுச்சிபார்சுகள் பிரதிநிதித்துவ ஆட்சிக் கொள்கைகளை அறிமுகப்படுத்தின. ஆயினும் இலங்கையருக்கு உண்மையான அதிகாரம் வழங்கப்படவில்லை. உத்தியோகப்பற்றற்றவர்களுக்கு அரசியல், பாலனத்துறைகளில் பயனுள்ளபயிற்சியை அளித்தது அதன் சிறப்பெனலாம் அதிலுள்ள பிரதானகுறைபாடு என்னவெனின், உத்தியோகப் பற்றற்றவர்களுக்குச் சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தைமட்டும்வழங்கிவிட்டு அவற்றைநிறைவேற்றுவதில் எவ்வித பொறுப்பையும் அளிக்காது விட்டமையாகும் இதன் விளைவாக, பொறுப்பும் அதிகாரமும் பிரிக்கப்பட்டுவிட்டன. இதனால் உத்தியோகப் பற்றற்றவர்கள் உத்தியோகப் பற்றுள்ளோரையும் ஆள்பதியையும்அதிகமாகக் கண்டிப்பதிலும் குற்றம் காண்பதிலும் மிக உற்சாகமுடன் ஈடுபடுவராயினர். இந்நிலைமைகள் உத்தியோகப்பற்றுள்ளோரையும், உத்தியோகப்பற்றற்றோரையும்நிரந்தரமான எதிரிகளாக்கிவிட்டன. மேலும் சிக்காலத்தில் பெரும்பான்மைச் சமூகத்தினரின் மேல் ஐயுறவு கொண்டிருந்த சிறுபான்மையோரின் பிரதிநிதிகளும் நியமனப் பிரதிநிதிகளும் எப்பொழுதும் உத்தியோ

கப் பற்றுள்ளோரையே ஆதரிக்கத் தலைப்பட்டனர். இறுதியாக ஆள்பதி 'மிக முக்கியமானது' எனத்தாம் கருதும் விடயங்களில் சட்டங்களை ஆக்கும் அதிகாரமளிக்கப்பட்டிருத்தமை இக்கழகத்தின் இன்னொரு குறைபாடாயிருந்தது. எனவே இக்கழகம் தொடக்கத்திலிருந்தே தோல்வியாகியதுடன்டொனமூர்திட்டத்துக்கும் வழிவகுத்தது.

வினாக்கள்

1. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குடியியல் நீதி பாலனத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொகுத்தெழுதுக.
2. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையர் சீர்திருத்தக் கோரிக்கைகளை விடுப்பதற்கு உதவிய நிலைமைகள் யாவை?
3. 1889 முதல் 1924 வரை அரசியற் திட்டத்தில் ஏற்பட்டமாற்றங்களைச் சுருக்கி எழுதுக.
4. 1910ம், 1920ம் ஆண்டு அரசியற் திட்டங்களிலுள்ள குறைபாடுகள் யாவை?
5. மானிங் காலத்தில் அரசிற்யதிட்டத்தில் செய்யப்பட்ட மாற்றங்களை ஒப்பிட்டு அவற்றின் குறை நிறைகளைக் குறிப்பிடுக.
6. வரலாற்றுக் குறிப்பெழுதுக:—
   (1) இலங்கைத்தேசிய காங்கிரஸ்
   (2) சேர் பொன் அருணாசலம்
   (3) மக்கலம் சீர்திருத்தங்கள்.

அத்தியாயம் 13

விடுதலைப் பாதையில்

(1) டொனமூர் அரசியற்றிட்டம்

1921ம் ஆண்டு அமைக்கப்பட்ட சட்டக்கழகத்தின் குறை பாடுகள் வெளிப்பட அதிககாலம் செல்லவில்லை. மானிங் அவர்களுக்குப்பின்வந்த சேர் ஹியூ கிளிபோட் அச்சட்டக் கழகம் சிறப் பாகச்செயல்படாதுஇடர்படுவதாகக்குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அறிவித்தார். எனவே 1924ம் ஆண்டுத்திட்டம் செயல்படும் விதம், அதுசம்பந்தமாக எழும் பாலனப் பிரச்சினை ஆகியன பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் அரசியற் திட்டத்தைத் திருத்துவதற்குத் தெரிவிக்கப்படும் தகவுரைகளை ஆராய்வதற் கும் 1923ம் ஆண்டின் அரச கட்டளைச் சட்டத்திற் செய்ய வேண் டிய திருத்தங்களைப் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் டொனமூர் பிரபுவின் தலைமையில் ஒரு குழு 1927ம் ஆண்டு ஆகஸ்ட் 6ம் நாள் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

டொனமூர் குழுவினரின் முடிபுகள்:— முதலாவதாக அரசியற்திட்டத்தைப் பற்றிக் கவனம் செலுத்திய டொனமூர் குழுவினர் மானிங் காலத்திய திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நன்கு அறிந்திருந்தனர். பொறுப்பும், அதிகாரமும் பிரிக்கப்பட்டிருந்தமையே அதன் பெருங் குறைபாடாயிருந்தது. அதை நிவர்த்திசெய்வதானால் பூரண பொறுப்பாட்சியை இலங்கையரிடம் கையளிக்க வேண்டும். ஆயின் அத்தகைய ஒரு நிலைக்கு இலங்கையர் அரசியற் பரிபக்குவம் அடையவில்லை என டொனமூர்க் குழுவினர் கருதினர். ஏனெனில் இலங்கையர் சட்டக் கழகத்திற் பங்குபற்றி அரசியல் அறிவைப் பெற்றிருப்பர்களேயன்றி நிர்வாகத்தில் எவ்வித அநுபவத்தையும் பெற்றிருக்கவில்லை. மேலும் சட்டக் கழகம் உறுப்பினர்களிடையே போதிய பொறுப்புணர்ச்சியையும் விருத்திசெய்திருக்கவில்லை அன்றியும் இலங்கை மக்கள் இன்னமும் இன, மத, சாதி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு ஒரேகுரலில் பேசும் நிலைக்கு வந்திருக்கவில்லை யென்பதனாலும், சிறுபான்மையினர் பூரண பொறுப்பாட்சியை எதிர்த்தமையாலும், இலங்கையில் அரசியற் கட்சிகள் எவையும் உருப்பெறுதிருந்தமையாலும் டொனமூர்க் குழுவினர் இலங்கையின் பிரச்சினைக்குப் பூரண பொறுப்பாட்சி பரிகாரமா

காது என முடிவு செய்தனர். ஆயினும் இலங்கைமக்கள் எதிர் காலத்தில் முழு ஆட்சிப்பொறுப்பையும் ஏற்கக்கூடியவாறு ஆட் சித் துறையில் தேவையான அநுபவத்தைப் பெறத்தக்கதாக உறுப்பினர்களுக்கு அதிகாரத்தையும் போதிய அளவு பொறுப் பையும் அளிக்கும் ஒரு புது முறையான அரசிபற் திட்டத்தை அவர்களுக்கு வழங்க டொனமூர் குழு தீர்மானித்தது.

அடுத்து வாக்குரிமை விடயத்திற் கவனம் செலுத்திய குழு வினர் அதுவரை மக்களில் குறிப்பிட்டதகுதியுடைய ஒரு பகுதி யினர் (மத்திய வகுப்பினர்) பட்டும் வாக்குரிமையைப் பெற்றி ருந்தமையால், சாதாரண பொதுமக்களின் நிலைமைகள் முன் னேற்றம் அடையாதிருந்ததை அவதானித்தனர். எனவே இலங்கையர்கள் தமது விடயங்களைத் தாமே கவனித்தற்கு மேற்கொண்டு பொறுப்புக்கள் அளிக்கப்படுவதற்கு முன்னர். அரசாங்கம் பூரண பிரதிநிதித்துவ முள்ளதாக அமைக்கப்பட வேண்டும் என அவர்கள் கருதினர். எனவே முன்பிருந்த வாக் குரிமைத் தகுதிகளைத் தளர்த்துவதென அவர்கள் முடிவு செய் தனர்.

மேலும் வாக்குரிமைத் தகுதிகளைத் தளர்த்துவது பல சமூக சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேறுவதற்கு உதவுமென்றும் தேர்தலில் ஊழல்கள் மலிவதைக் கட்டுப்படுத்துமெனவும், பொதுமக்கள் அரசியலறிவைப் பெறவும், பொறுப்பாட்சியின் தன்மையை விளங்கிக்கொள்ளவும் உதவுமென்றும், அறியாமை வறுமை, ஆகியனவற்றுல் அல்லற்படும் மக்கள் தம் குறைகளைத் தீர்த்துக்கொள்ளவும் பொறுப்பாட்சியின் பயனை அனுபவிக்க வும் துணைசெய்யுமென்றும், குறிக்கப்பட்ட ஒரு வகுப்பினர் மட்டும் அரசியலில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துவதைத் தடுத்து ஆட்சியில் அனைவரும் பங்கு பெற வழிசெய்யுமென்றும் அவர்கள் கருதினர். இக்காரணங்களை முன்னிட்டு 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும், 30 வயதுக்கு மேற்பட்ட பெண்க ளுக்கும் வேறு எவ்வித கட்டுப்பாடுமின்றி வாக்குரிமையளிப்ப தென டொனமூர் குழுவினர் தீர்மானித்தனர்.

அடுத்து பிரதிநிதித்துவ முறை பற்றிக் கவனம் செலுத்திய குழுவினர் அதுவரை நடைமுறையிலிருந்துவந்த வகுப்புவாதிப் பிரதிநிதித்துவ முறையை நீக்க முடிவு செய்தனர். வகுப்பு

வாரிப் பிரதிநிதித்துவ முறையை நீடிக்கவேண்டுமெனத் தமிழர் களும் பிற சிறுபான்மையினரும் கோரியிருந்தனர் ஏனெனில் பிரதேசவாரியான பிரதிநிதித்துவத்தினுல் சிங்களவர் பெருந் தொகையான தொகுதிகளைக் கைப்பற்றி விடுவர் என அவர்கள் அஞ்சினர். ஆயினும் டொனமூர் குழுவினர் அவர்களின் கோ ரிக்கைக்கு இணங்கவில்லை. இது பற்றி அவர்கள் கூறியதாவது இலங்கையின் நிலைமைகளை ஆராய்ந்த நாம் வகுப்புவாரிப் பிர திநிதித்துவ முறையின் தீமைகளைப் பற்றித் தயக்கமின்றிக் கூறு வதுஇதுதான்: இம்முறை அரசியலைப் பிடித்துள்ள ஒரு பெரு நோய்! இதுமக்களிடை சுயநலம், சந்தேகம், வெறுப்பு ஆகியன வற்றை வளர்க்கிறது: அரசியல் உணர்ச்சியின் வளர்ச்சிக்கு நஞ் சூட்டுகிறது. தேசிய மனப்பான்மையின் விருத்திபைத்தடுக்கி றது. எனவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அதன் பிரித்த ழிக்கும் இயல்புகளுடன் தொடர்ந்து அரசியற் திட்டத்தில் இடம் பெறுமாயின் நாட்டில் வசிக்கும் வேறுபட்ட மக்கள் ஒருமைத் தன்மையை வளர்க்கவோ நாட்டின் பிரசைகள்என்ற வகையில் நாட்டுக்குத்தாம் அனைவரும் பொதுவான கூட்டுப்பாடுடையவர் கள் என்பதை உணரவைக்கவோ முடியாது.

மேலும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு அரசியலில் அடிப்படை இல்லை என்றும், சட்டக்கழகத்திற் பங்குபற்றிய பலர். தமது இன, மத வேறுபாடுகளை மறந்து பணியாற்றியி ருப்பதனுல் அது அவசியமானதன்று என வும் அம்முறை நாட்டின் வேற்றுமையைமேலும் வளர்க்கின்றதெனவும் டொன மூர் குழுவினர் கூறி, அதை நீக்க முடிவு செய்தனர். ஆயினும் அதைச் சடுதியாகவும் முற்றுகவும் மாற்ற விரும்பாத குழுவினர் வகுப்புவாரியானநியமனப் பிரதிநிதித்துவத்துக்கு இடமளிக்காத தோடு தேர்தல் முறையிலான பிரதிநிதித்துவம் பிரதேசவாரி யாக மட்டுமே நடைபெற வேண்டும் எனச்சிபார்சு செய்தனர்.

புதிய திட்டம்

அரசுக் கழகம் ;—டொனமூர் குழுவினர் இலங்கையர் அரசி யல், நிர்வாகத்துறைகளில், போதிய அனுபவத்தையும்பொறுப் பை வகிப்பதில் பயிற்சியையும் பெற உதவக்கூடியதான அரசுக் கழகம் (அரசாங்க சபை) ஒன்றைச் சிபார்சு செய்தனர். இக் கழகம் பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 உறுப்பின ரையும், 8 நியமன உறுப்பினரையும், பிரதம செயலாளர்

நிதிச் செயலாளர், சட்டச் செயலாளர், என்னும் 3 அரசாங்க அலுவலாளர்களையும் கொண்டதாய் மொத்தம் 61 உறுப்பினரையுடையதாயிருக்கும். (டொனமூர் குழுவினர் அரசுக் கழகத்தில் 65 தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் 12 நியமன உறுப்பினரும் இருக்கவேண்டுமென சிபார்சு செய்தனர் ஆயினும் குடியேற்ற நாட்டுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தொகையை 50 ஆகவும் நியமன உறுப்பினர் தொகை 8 ஆகவும் குறைந்தது குறிப்பிடத்தக்கது). அரசுக் கழகம் சட்டங்களை ஆக்கவும், அவற்றை நிறைவேற்றவும் அதிகாரம் பெற்றிருந்தது. அதன் தலைவராகப்பிரதம செயலாளர் பணியாற்றினார் மந்திரிசபையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும்.ஒரு வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு 3 மாத காலத்திற்குள் நிறைவேற்றப்படாவிட்டாலும் அரசுக் கழகம் கலைக்கப்படும் என விதிக்கப்பட்டிருந்தது.

நிர்வாகக் குழுமுறை :— அரசுக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்படும் 50 பிரதிநிதிகளும் 8 நியமனப் பிரதிநிதிகளும், இரகசிய வாக்கெடுப்பு மூலம் 7 நிருவாகக் குழுவாகப் பிரிந்துகொள்வர். இக்குழுக்கள் ஒவ்வொன்றும் தமக்கு ஒரு தலைவரைத் தெரிவு செய்யும். இவர் மந்திரி எனப்படுவார் இம்மந்திரிகள் எழுவரும் முறையே (1) உள்நாட்டு அலுவல்கள் (2) பயிர்ச்செய்கை (3) உள்ளூர் பாலனம் (4) சுகாதாரம் (5) கல்வி (6) பொது வேலைகள் (7) போக்குவரத்துஎன்னும் துறைகளுக்குப் பொறுப்புள்ளவராவர். இவர்களைத் தவிரப், பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டச் செயலாளர், என்னும் மூவரும் முறையே பொது சேவை, நிதி, சட்டம் எனப்படும் துறைகளுக்குப் பூழுப் பொறுப்பானராயிருப்பார். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட மந்திரிகளும், அரசாங்க அலுவலாளர் 5 பேரும் சேர்ந்து 'மந்திரிசபை' யாகஇயங்குவர். மந்திரிசபை அரசுக் கழகத்தின் வேலைத்திட்டம், வரவு செலவுத்திட்டம் ஆகியனவற்றை வகுத்தல் அரசுக் கழகம் கூடும் நாள், நிகழ்ச்சி நிரல் முதலியவற்றைநிர்ணயித்தல் முதலிய கடமைகளையுடையது.

நிர்வாகக்குழுக்கள் ஒவ்வொன்றும் தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள விடயங்களைப்பற்றிக்கொள்கைகளை வகுக்கவும் முடிவுகளை மேற்கொள்ளவும் அரசாங்கத்தினதும், ஆளுநரினதும் அங்கிகாரத்திற்காக அம்முடிவுகளைச் சமர்ப்பிக்கவும் அங்கிகா

ரத்தின் பின்னர் அவற்றைச் செயல்படுத்தவும் அதிகாரம் பெற்றன. அத்துடன் வரவுசெலவுத்திட்டத்தை தயாரிப்பது மந்திரிசபையின் கூட்டுப்பொறுப்பாயிருந்தமையால் அது நிறை வேற்றப்படாவிட்டால் மந்திரி சபை பதவியிலிருந்து விலக வேண்டும் என விதிக்கப்பட்டது.

வாக்குரிமை :- மானிங் காலத்தில் வாக்குரிமையளிப்பதற்கு விதிக்கப்பட்ட கல்வி, சொத்து வருமானம் பற்றிய நிபந்தனை கள் நீக்கப்பட்டு, 21 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் இன மத, சாதி, கல்வி நிலை வேறுபாடின்றி வாக்குரிமையளிக்கப்பட் டது. (டொனமூர் குழுவினர் பெண்களின்வயதுஎல்லையை 30 ஆக) நிர்ணயித்தபோதிலும் பின்னர் சட்டக்கழகத்தின் கோரிக் கைப்படி அது 21 வயதாக குறைக்கப்பட்டது.

பிரதிநிதித்துவம் :- வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப் பட்டுப் பிரதேசவாரியான பிரதிநிதித்துவ முறை ஏற்படுத்தப் பட்டது; பிரதிநிதிகள் தொகுதிவாரியாகச் சர்வசன வாக்குரி மையின் மூலம் தெரிந்தெடுக்கப்படுவர். அவர்களின் பதவிக்கா லம் 4 ஆண்டுகளாயிருக்கும் சர்வசனவாக்குரிமை மூலம் பிரதி நிதிகளைத் தெரிவு செய்ய முடியாது, நாட்டின் பல பாகங்களி லும் சிதறலாகக் காணப்படும் சமூகத்தினரின் நலன்களைக்கவ னிப்பதற்காக 8 பிரதிநிதிகள் ஆள்பதியினால் நியமனம்பெற்றனர்.

ஆள்பதியின் அதிகாரங்கள் :- டொனமூர் குழுவினர் அரசக் கழகத்தின் அதிகாரத்தைக் கூட்டிய அளவுக்கு ஆள்பதியின் அதிகாரங்கள் குறைந்தன. ஆயினும் நாட்டின்பாலனம் நல்ல முறையில் நடக்கின்றதா எனக் கவனிக்கும்பொறுப்பு இவரைச் சார்ந்தபடியால் அவருக்குச் சில விசேட அதிகாரங்கள் அளிக் கப்பட்டன. அவை (1) அரசக் கழகத்தினால் அங்கீகரிக்கப் பட்ட முறிகளை உறுதிப்படுத்தல் (2) மன்னரின முடிவு தெரியும் வரைஒரு முறியை உறுதிப்படுத்தாது விடல் (3) அவசியமேற் படும் போது சில முறிகளை அரசக்கழகத்தின் மறு பரிசீலனைக்கு அனுப்புதல் (4) சில முக்கியமான முறிகளின் அங்கீகாரத்திற்கு அரசக் கழகத்தில் 2/3 பங்கினரின் ஆதரவைக் கோருதல் (5) தமது உசிதப்படி எம் முறியையும் 6 மாத காலம் செயற்படாது தடுத்துவைத்தல் (6) நாணயம், சமயம், விவாகரத்து முதலிய சில விடயங்கள் பற்றியமுறிகளுக்கு அங்கீகாரமளிக்க மறுத்தல் என்பனவாகும்.

மேலும், ஆள்பதி நாட்டின் பாதுகாப்புக்கும் அரசாங்க அலுவலாளர்களின் நியமனம், வேலை நீக்கம் முதலிய வற்றுக்கும் பொறுப்புள்ளவராயிருந்ததோடு அவசர காலங்களில் எந்தத் திணைக்களத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவரவும் அதிகாரம் பெற்றிருந்தார். இவற்றைத்தவிர அரசுக்கழகம் நிறைவேற்றத் தவறும் சில முக்கியமான சட்டங்களைத் தாமே சட்டமாக்கிக்கொள்ளவும்அவருக்கு அதிகாரம்வழங்கப்பட்டது.

அரசாங்க அலுவலாளர்கள் :- பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், நீதிச் செயலாளர் என்னும் மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களும் ஆள்பதிக்கு மட்டுமே பொறுப்புடையவர்கள். பிரதமசெயலாளர் மந்திரி சபையின் தலைவராகவும், பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல்கள் முதலியவற்றுக்குப் பொறுப்புள்ளவராகவும் பணியாற்றினர். மேலும் ஆள்பதியில்லாதபோது அவருக்காகக் கடமையாற்றவும் இவர் மட்டுமே அருகதையுடையவராயிருந்தார். நிதிச்செயலாளர் நிதி விடயங்களுக்கும் திறைசேரி அரசாங்க அச்சகம் ஆகியனவற்றுக்கும் பொறுப்பானவர், இவர் அரசுக் கழகத்திற்கும், நிர்வாகக் குழுவின் தலைவருக்கும் நிதிவிடயமாக ஆலோசனை கூறினர். சட்டச் செயலாளர் நீதி பாலனத்தைக் கவனித்துவந்ததோடு சட்டவிடயங்களில்அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறினர்.

அரசாங்க அலுவலாளர்கள் மூவரும் மந்திரி சபையின் உறுப்பினர்களாயிருந்தனர். ஆயினும் அவர்கள் எது விடயத்தைப் பற்றியும் ஆலோசனை கூறமுடியுமேயன்றி வாக்களிக்கும் உரிமையற்றவர்களாயிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

டொனமூர் அரசியற் றிட்டத்திலுள்ள குறை நிறைகள்:- டொனமூர் குழுவினரால் சிபார்சுசெய்யப்பட்ட அரசியற் திட்டம் குடியேற்ற நாட்டு அரசாங்கத்துக்கும், பூரணசுதந்திர முள்ள அரசாங்கத்துக்கும் இடையிலுள்ள ஒரு பாலத்தைப் போன்றது எனலாம். இத்திட்டம் வாக்காளருக்கும். தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கும் பொறுப்பாட்சியின் தன்மையைப் புரியவைத்தது. மேலும் நிர்வாகக் குழு முறை உறுப்பினர்களும் சிறப்பாக மந்திரிகள் ஒவ்வொருவரும்—தமக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எழும்பிரச்சனைகளைப் பற்றிச்சுயமாகச் சிந்திக்கவும், அவற்றின் தீர்வுக்கு வழிகாணவும் பயிற்சியளித்தது.

அன்றியும் தனிப்பட்ட உறுப்பினர்களும் முன் என்றுமில்லாத அளவு முக்கியத்துவம் பெற்றனர். ஏனெனில் அவர்கள் சட்டங்களை உருவாக்குவதிலும் செயற்படுத்துவதிலும் பங்குபெற்றதோடு திறமையுள்ளவர்களாயின் தாம் விரும்பிய ஒரு விடயத்தைத் தமது குழுவின் தலைவர் மூலம் நிறைவேற்றுவிக்கக் கூடிய வாய்ப்பையும் பெற்றனர்.

ஆயினும் டொனமூர் திட்டத்தில் சில குறைகளும் காணப்பட்டன முதலாவதாக தனிப்பட்ட உறுப்பினர்கள் தமது அதிகாரத்தை அளவுக்கு அதிகமாகவும், சிலபோது தவறுதலாகவும் பயன்படுத்த இத்திட்டம் இடமளித்தது. இரண்டாவதாக நிர்வாகக் குழுக்கள் கூட்டுதலின்றிப் போட்டி மனப்பான்மையுடன் பணியாற்றியதால் நிர்வாக விடயங்களில் தாமதங்கள் தவிர்க்கப்பட முடியாது போயின. இதனால் பாலனம் பாதிக்கப்பட்டது. மூன்றாவதாக நிர்வாகக்குழுமுறை சாதாரணமான விடயங்களை நிறைவேற்றுதலையும் காலதாமதப் படுத்தியது. மேலும் கூட்டுப்பொறுப்பு இன்மையினால் அரசாங்கத்தின் குறைபாடுகளை ஒருவர் மற்றொருவர்மேல் சுமத்துவதும் சாதாரணமாகியது.

மேலும் தனிப்பட்ட உறுப்பினருக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டமையால் கொள்கை அடிப்படையிலான அரசியற் கட்சிகளின் ஆட்சிமுறை தடைப்பட்டது. இறுதியாக மந்திரிசபையில் இடம் பெற்ற மூன்று அரசாங்க அலுவலாளர்களும் ஆள்பதிக்கு மட்டுமே பொறுப்பாயிருந்ததாலும் ஏனைய மந்திரிகளின் விடயங்களில் இவர்களின் சட்டுப்பாடு காணப்பட்டதாலும் ஆள்பதி தாமே சட்டம் இயற்றும் அதிகாரமுடையவராயிருந்ததாலும் ஒருவகையான இரட்டை ஆட்சியே நிகழ்வதாயிற்று.

(2) அரசுக் கழக ஆட்சி

டொனமூர் குழுவினரால் சிபார்சு செய்யப்பட்ட அரசுக் கழகத்திற்கான முதலாவது தேர்தல் 1931 ஆண்டு யூன் மாதம் 23ம் திகதி நடைபெற்றது. ஆயினும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை டொனமூர் குழுவினர் ஒழித்ததற்கு எதிர்ப்புக்காட்டு முகமாக இலங்கைத் தமிழர் தேர்தலை ஒன்றியொதுக்கியமையால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நான்கு தொகுதிகளிலும்

தேர்தல் நடைபெறவில்லை. எஞ்சிய 46 தொகுதிகளிலும் தெரிவுசெய்யப்பட்டோரில் 28 பேர் தாழ்பிரதேசச் சிங்களவர்கள் 10 பேர் கண்டியர்கள்; 3 பேர் இலங்கைத் தமிழர்; 2 பேர் இந்தியர்கள்: 2 பேர் ஐரோப்பியர் ஒருவர் முஸ்லிம். முதலாவது அரசுக் கழகத்தில் நியமனப் பிரதிகளாகிய எண்மரில் நால்வர் ஐரோப்பியர்; இருவர் பறங்கியர்; ஒருவர் முஸ்லிம்; ஒருவர் இந்தியர். முதலாவது அரசுக்கழகம் 10-7-31 ல் சம்பிரதாய முறைபடி தொடக்கிவைக்கப்பட்டது.

சீர்திருத்தக் கோரிக்கை :--இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அரசுக் கழகம் இரண்டு ஆண்டுகளுக் கழிப்பதற்கு முன் புதிய சீர்திருத்தக் கோரிக்கைகள் வெளிவரத் தொடங்கின. ஈ. டப்ளியூ பெரேராஇவ்விடயத்தில் முன்னணியில் நின்றார். அத்துடன் மற்றிரசபையினரும் அரசியற்திட்டத்தில் மாற்றம் காண விரும்பினர், ஆயினும் ஆள்பதி தொம்சன் புதிய திட்டத்தின் அடிப்படை அமிசங்களில் மாற்றம் செய்வதற்கு இது காலமன்று என அவர்களின் கோரிக்கைகளைத் தட்டிக் கழித்துவிட்டார். இதற்கிடையில் யாழ்ப்பாணப்பகுதித் தொகுதிகளில் தேர்தல் நடைபெற்று நான்கு பிரதிநிதிகள் அரசுக்கழக உறுப்பினராயிருந்தனர், அவர்கள் நால்வரும் ஏனைய சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதிகளும் இணைந்து குடியேற்ற நாட்டுச்செயலாளருக்கு அனுப்பிய ஒரு விண்ணப்பத்தில், அரசுக்கழகத்தில் ஏதாவது மாற்றம் செய்வதாயின் அது ஒரு சமூகத்தினர் மற்றொரு சமூகத்தினரை நசுக்குவதற்கு இடமளியாதவாறு அமைய வேண்டும் எனக் கோரியிருந்தனர். ஆள்பதி தொம்சனுக்குப் பின்வந்த ஸ்ரப்ஸ் சீர்திருத்தம்பற்றிய கோரிக்கைகளைக் குடியேற்ற நாட்டுச்செயலாளருக்கு அறிவித்திருந்தார். இவ்வாறுக முதலாம் அரசுக்கழகத்தின் ஆட்சிக்காலம் 1935இல் முடிவடைய இரண்டாம் அரசுக்கழகத்துக்கான தேர்தல் 10-2-36இல் நடைபெற்றது.

இரண்டாம் அரசுக் கழகத்தில் சிங்களவர்கள் தாம் மட்டுமே மந்திரிகளாக வரத்தக்கவிதமாக நிர்வாகக் குழுத்தேர்தலை நடத்தியபடியால் பிறஇனத்தவர் மந்திரிகளாக முடியாது போயிற்று. இது சிறுபான்மை மக்களிடை மனக்கசப்பைஏற்படுத்தியது சிறப்பாக. தமிழர்கள் இதனால் மிக மனம் புழுங்கியிருந்தபடியால் தமிழ்த் தலைவர்களில் ஒருவரான திரு ஜி. ஜி. பொன்னம்பலம் சிறுபான்மையோருக்கும். பெரும்பான்மையோருக்கும்

சமபலம் இருக்கத் தக்கமுறையில் பிரதிநிதித்துவமுறை அமைய வேண்டுமென ஆள்பதியிடம் ஒரு கோரிக்கை விடுத்தார் இது வே 'ஐம்பதுக்கு ஐம்பது' எனப்படும் கோரிக்கையாகும். அதே சமயம் பெரும்பான்மையினரும் அரசுக்கழக ஆட்சியையிரும்ப வில்லை. அவர்களும் மேலும் சீர்திருத்தம் கோரியபடியே இருந்த னர். அந்நிலையில் குடியேற்றநாட்டுச்செயலாளர் புதிய ஆள்பதி கோல்டிகொற்றுக் விடுத்த ஒரு வேண்டுகோளில் நடைமுறையி லுள்ள நிட்டத்தின் குறைபாடுகளையும் அவற்றைத்திருத்துவதற் கான தகவுரைகளையும், சிறப்பாக சிறுபான்மையோரின் குறை கள், ஆள்பதியின் அதிகாரங்கள். நிர்வாகக் குழுமுறைபற்றிய விடயங்களையும்ஆராய்ந்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார்.

ஆள்பதிகோல்டி சொற் தயாரித்து அனுப்பிய அறிக்கை முக்கியமான ஒன்றாகும். அதில் இவர் நிர்வாகக் குழு ஆட்சி முறையின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதோடு 'கபினற்' முறையான ஆட்சியே இலங்கைக்குஏற்றதென எடுத்துக்காட்டி னர். அத்தகைய கபினெற்றில் அரசாங்க அலுவலாளர்களுக்குப் பதிலாக இருஉறுப்பினர்களை நியமிக்கலாம்எனவும் அவர் தகவு ரை கூறியிருந்தார், அதே சமயம் 50க்கு 50 என்னும்சிறு பான் மையோரின் கோரிக்கை அவர் நிராகரித்துவிட்டுச் சிறு பான் மையோரின் பிரதிநிதித்துவப் பிரச்சினையைப் பொருத்தமான முறையில் தொகுதிகளை வகுப்பதன் மூலம் தீர்க்கலாமெனத்தெ ரிவித்திருந்தார். மேலும் அவர் ஆள்பதியின் அதிகாரங்களையோ வாக்குரிமையையோ எவ்வழியிலாயினும் கட்டுப்படுத்துவதைத் தாம் ஆதரிக்கவில்லை எனவும்தமது அறிக்கையில் தெரிவித்திருந் தார்.

கோல்டிகொற்தம் அறிக்கையை 13–6–1939இல் அனுப்பி யிருந்தார். 3 மாதங்கள் முடிவதற்குள் இரண்டாம் உலகப் போர் ஆரம்பமாகியது. அதன்விளைவாக 1941ம் ஆண்டு நடை பெறவிருந்த அரசுக்கழகத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. பின்னர் 1941ம்ஆண்டுடிசம்பரில் யப்பான் போரில் பங்குபற்றி யதனால் சீர்திருத்தக்கோரிக்கைகளைப் பிரித்தானியா கவனிக்க முடியாதுபோயிற்று. ஆயினும் இலங்கையர்கள் தமது குரலைத் தணிக்கவில்லை. அக்காலத்தில் சேர் ஸ்ராபோட்கிறிப்ஸ்என்பவர் தலைமையில் இந்தியாவின் அரசியற் பிரச்சினை பற்றி ஆராய

வந்த குழுவை இலங்கைக்கு அனுப்புமாறும் அது சாத்தியமின்றேல் இந்நகரிலிருந்து ஒரு தூதுக்குழு சிறிப்ஸ் குழுவைச்சந்திக்க வசதி செய்துதருமாறும் அவர்கள் கேட்டனர். ஆனால் குடியேற்ற நாட்டுச் செயலாளர் அவற்றுக்கு இசையாமல் போர்முடியும்வரை பொறுத்திருக்குமாறு வேண்டுகோள்விடுதார் அவரது பதிலில் திருப்தியடையாத அரசுக்கழகம் இலங்கைக்கு 'ஆணிலப் பத அந்தஸ்து' வழங்குமாறு 1942இல் ஒரு புதியகோரிக்கையைவிடுத்தது இதற்குப் பதிலளித்த குடியேற்ற நாட்டுச்செயலாளர் 'போர் முடிவில் திரும்பவும் ஆராயப்பட விருக்கும் இலங்கையரின் அரசியற்றிட்டப்சம்பந்தமான சீர்திருத்தங்கள் முடியின் கீழ் இலங்கைக்கு எல்லாஉள்நாட்டு விடயங்களிலும் முழுப்பொறுப்பாட்சியைவழங்குவதையே நோக்கமாய்க் கொண்டிருக்கும், என 1943இல் ஒருபிரகடனத்தைவிடுத்தார். அத்துடன் அவர்தமது பிரகடனத்தில் அறிவித்திருந்த உத்தேசத் திட்டத்தின் அடிப்படையில் இலங்கை மந்திரிசபை தனது சிபார்சுகளைத் தெரிவிக்கலாமெனவும் அறிவித்திருந்தபடியால் இலங்கைமந்திரிசபை உடன்சேர் ஜவர் ஜெனிங்ஸ்அவர்களின் துணையுடன் ஒரு நகல் அரசியற்றிட்டத்தை வரைந்துஇங்கிலாந்துக்கு அனுப்பியது. அத்திட்டத்தைப்பெற்றபின்னர் 1944ம் ஆண்டு யூலை மாதம் குடியேற்றநாட்டுச் செயலாளர்விடுத்தவேறொரு அறிக்கையில் மாட்சிமை தாங்கியமன்னர். இலங்கையின் புதியஅரசியற்றிட்டம் பற்றியவிடயங்களை மக்களுடன் கலந்து தீர ஆலோசித்துமுடிவு செய்வதற்காக ஒரு விசாரணைக்குழுவைவிரைவில் அனுப்பவிருக்கிறார்எனத் தெரிவித்தார் இதனைத் தொடர்ந்து சோல்பரிப்பிரபு தலைமையில் ஒரு விசாரணைக்குழு 1944ம் ஆண்டு டிசம்பரில் இலங்கை வந்து சேர்ந்தது. இனி, சோல்பரிக்குழுவினரின் சிபார்சுகளை ஆராயுமுன்னர் டொனமூர் திட்டத்தின் கீழ் நடந்த பிரதான அபிவிருத்தி வேலைகளைச் சுருக்கமாகத்தெரிந்துகொள்வோம்.

சமூக அபிவிருத்தி

1931ம்ஆண்டு முதல் 1947ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் டொனமூர்திட்டத்திற்கமைய அமைக்கப்பட்ட

அரசுக்கழகம் ஆட்சிசெலுத்தியது. அக்காலத்தில் கல்வி சுகாதாரம் பயிர்ச்செய்கை, முதலியவிடயங்களின்பால னப் பொறுப்புஇலங்கையர்களின் கைகளிலேயே இருந்தது எனவே இக்கால எல்லையில் இலங்கையர்களால் சாதிக்கப்பட்டதை ஆராய்தல்பயனுடையது.

கல்வி:- 1929ம் ஆண்டுச்சர்வதேசபொருளாதாரநெருக்கடி இலங்கையையும் பாதித்தமையினால் இந்தக் கல்வி கற்ற இளைஞர்களிடையேவேலையின்மை ஒரு பெரும்பிரச்சனையாகியது நடைமுறையிலிருந்த கல்வித்திட்டத்தின் குறைபாடுகளும் அத்தகையநிலைமைக்கு ஒரு காரணமென்பதை உணர்ந்த அரசாங்கம் புதிய ஒரு கல்வித்திட்டத்தை உருவாக்க எண்ணி, நடைமுறையிலிருந்த கல்வித்திட்டத்தில் நாட்டின் தேவைகளுக்கேற்புடைத்தவேண்டிமாற்றங்களை ஆராய்வதற்கென ஒரு விசாரணைக்குழுவை 1940இல் நியமனஞ்செய்தது. அக்குழு 1943இல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

1943ம் ஆண்டுக்கல்வி அறிக்கை மாணவர்களெல்லோருக்கும் ஓரேவிதமான கல்விபயனுள்ளதன்றென முடிவுசெய்தது அதுவரை அறிவுக்கும், தொழில்திறனுக்கும் மட்டும் அதிககவனஞ் செலுத்தப்பட்டுவந்ததென்றும், ஒரு குழந்தைக்குஅளிக்கப்படும் கல்வி அதன் முழுமையான வளர்ச்சிக்குஉதவவேண்டும் என்னும் தெளிவித்தவிசாரணைக்குழு, உடற்பயிற்சிக்கல்வி, கைவேலை, இசை, நடனம், சித்திரம்முதலியதுறைகளில் அதிககவனம் செலுத்தப்படவேண்டுமெனச்சிபார்சு செய்தது. மேலும்விசாரணைக்குழு ஆரம்பபாடசாலைமாணவர்கள் பயிற்சிப்பாடசாலை மாணவர், உயர்தரபாடசாலைமாணவர்கள் என்னும் மூவகையான மாணவர்களைக்கருத்திற்கொண்டது ஆரம்பபாடசாலையிற் கல்வி கற்றபின் மாணவர்களின் இயல்பூக்கத்திற்கேற்ப அவர்கள் தொழில் பயிற்சிப்பாடசாலைக்கோ, உயர்தரபாடசாலைகளுக்கோ அனுப்பப்படவேண்டுமெனவும் அங்கு அவர்கள் தம்ஆற்றலை விருத்தி செய்ய வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டுமெனவும் விசாரணைக்குழுதெரிவித்தது- அதன் கருத்துப்படி நாட்டிலுள்ள மாணவர்களில் 80வீதமா

னேர் தொழிற்பயிற்சிக்கும், 15வீதமானேர் உயர்கல்விக்கும் 5வீதமானேர்பல்கலைக்கழகக்கல்விக்கும் ஏற்றவர்களாவர். பெரும் ஆரம்பபாடசாலைமுதல் பல்கலைக்கழகம்வரைகல்வி இலவசமாக அளிக்கப்பட வேண்டுமென்றும், ஆரம்பபாடசாலைகளில் தாய்மொழியே போதனாமொழியாகஇருக்கவேண்டுமெனவும் முக்கியமான மூன்று சிபார்சுகளைத்தெரிவித்தது. இக்குழுவின் சிபார்சுகள் 1945 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டன. இலவசக் கல்வித்திட்டம் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து கல்விகற்கும் மாணவர்களின் தொகையும் கல்விப்பகுதிக்கான செலவுப்கணிசமான அளவு அதிகரித்தன. பின்வரும் புள்ளிவிபரம் அதைத் தெளிவுபடுத்தும்.

ஆண்டு		கல்விகற்ற மாணவர் தொகை		செலவு (ரூபா)
1932	...	510,459	...	1,200,000
1937	...	668,113	...	1,349,800
1942	...	715,203	...	
1947	...	962,280	...	3,821700

சுகாதாரம்;- சுகாதாரத் துறையிலும் இக்காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. குறிப்பாகமலேரியாச்சுரத்தை ஒழிப்பதிலும் கொழுக்கிப்பூச்சி வியாதியைக்கட்டுப்படுத்துவதிலும் சுகாதாரத் துறையினர் கூடியகவனம்எடுத்தனர். D.D.T மருந்து தெளிக்கும் வேலைஉலகப்போர்க்காலத்தில் மிகத்தீவிரமாக மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக நாட்டின் பெரும்பகுதி மலேரியாவின் பிடியிலிருந்து மீட்கப்பட்டது. மேலும் இக்காலத்தில் நாட்டின்பலபகுதிகளிலும் மருத்துவ நிலையங்களும், மருத்துவவிடுதிநிலையங்களும் நிறுவப்பட்டுவைத்தியசேவைவிரிவுபடுத்தப்பட்டதனால் பெருந்தொகையான கிராமப்புறமக்கள் பெரும்பயனடைந்தனர். மருத்துவநிலையங்களைத்தவிர தாய்சேய்நலன் பேணும் நிலையங்களும், மருத்துவ ஆலோசனைநிலையங்களும்பெருமளவு அதிகரித்தன. சீழ்வரும் புள்ளிவிபரம்அதனைக்காட்டும்.

	1935	1939	1947
சுகாதார நிலையங்கள் ...	86	... 408	... 581
மருத்துவ ஆலோசனை நிலையங்கள் ...	4802	... 16,354	... 16,688

இவ்வாறுவைத்திய வசதிகள் அதிகரித்ததினால் வைத்தியப்பகுதியினரின்செலவு 1931இல் 10 இலட்சம் ரூபாவாயிருந்து 1937-1938இல்13 இலட்சம் ரூபாவாகவும், 1946-47 இல்38 இலட்சம்ரூபாவாகவும் அதிகரித்தது.

கூட்டுறவுஇயக்கம்:- சமூக அபிவிருத்தித்துறையில் ஏற்பட்ட இன்னுமொருமுன்னேற்றம் கூட்டுறவுஇயக்கத்தில் ஏற்பட்டது. 'கூட்டுறவுநாட்டுயர்வு' என்றசுலோகத்தின் உட்பொருளைஉணர்ந்தஅரசாங்கம் அதன் விருத்தியில் அதிக கவனமெடுத்தது. 1930 இல் கூட்டுறவுத் திணைக்களம்ஒன்று நிறுவப்பட்டது அரசுக்கழகம் நிறுவப்பட்டஆண்டில் (1931இல்) 40 கூட்டுறவுச்சங்கங்கள் நாட்டிற்காணப்பட்டன. அதன்பின்னர் அரசுக்கழகத்தின்நடவடிக்கைகளினால் 1936ம் ஆண்டளவில் கூட்டுறவுச்சங்கங்களின் தொகை 1000 ஆக அதிகரித்தது. அவற்றில் 39,000உறுப்பினர்இருந்தனர் 1936ம்ஆண்டுக்குப்பின்னர்கூட்டுறவுஇயக்கம் மேலும் வேகமாக விருத்தியடைந்ததன்விளைவாக 1940இல் 1660 கூட்டுறவுச்சங்கங்கள் நிறுவப்பட்டிருந்தன. பின்னர் போர்க்காலத்தில்உணவுக்கட்டுப்பாட்டுத்திட்டம் அமுலாக்கப்பட்டதனால் கூட்டுறவு இயக்கம் மேலும் ஒருபடிவளர்ச்சியடைந்தது. அக்காலத்தில்நாட்டில் உணவுப்பொருட்களை விநியோகிப்பதற்காககூட்டுறவு(சங்கக்)கடை நிறுவப்பட்டன. இவ்வகையான கடைகள்1945இல் 4000 காணப்பட்டன. இவற்றுக்கு உணவுப்பொருட்களை மொத்தவிநியோகம் செய்யும் கூட்டுறவுமொத்தவிற்பனைத்தாபனம் (C.W.E.)1943முதல்இயங்கி வந்தது.

சமூகச்சட்டங்கள்:- கல்வி, சுகாதாரம், முதலியவற்றைத் தவிர ஏனைய சமூக சேவைகளில் அண்மைக்காலத்தில் தான்அரசாங்கம் அதிக கவனம் எடுத்துவந்திருக்கிறது.

ஆயினும் அரசுக்கழக ஆட்சிக்காலத்திலும் சமூகசே வைபோதியஅளவுகவனத்தைப் பெற்றது. இ த னல் 1937--38இல் 33,126,000 ரூபாவாயிருந்தசமூகசேவைச் செலவு 1946-47இல் 106,896,000 ரூபாவாக அதிகரித் தது. சமூகத்தில் கணிசமான தொகையினர் வாழ்க்கை யைஓட்டமுடியாத நிலையில் இருந்தனர். இந்நிலைமை எப்பொழுதும் நிலவிவந்திருக்கிறது. எனவே இத்துறை யில்முதல்நடவடிக்கையாக 1939ம் ஆண்டு வறியோர் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது இதுகுருடர், செ விடர், முடவர், அனுதைகள், வறியோர் முதலியோருக் குச் சகாயநிதிகொடுப்பதை உள்ளூராட்சி மன்றுகளின் பொறுப்பாக்கியது. ஆயினும் கிராமச்சங்கங்கள், நகர சங்கங்கள்போன்றவை போதியபண வசதியற்றவையா தலின் அவற்றால்உதவியளிக்கமுடியாது இதனால்மத்திய அரசாங்கமே பிரிவுஇறைவரி அலுவலாளர்கள் மூலம் வறியோர்களுக்கு இன்றும் உதவிவருகிறது.

தொழிலாளர் சேமநலச் சட்டங்கள்:-அரசுக்கழகஆட்சியின் கீழ் தொழிலாளர்களின் சேமநலன்களைப் பாதுகாப்ப தற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அவ ற்றில் முக்கியமான இரு சட்டங்கள் (1) வைத்திய தே வைச்சட்டம் (2) தொழிலாளர் நட்ட ஈட்டுச்சட்டம் என்பனவாகும். வைத்தியதேவைச்சட்டம் பெருந்தோ ட்டங்களில்வசிக்கும் தொழிலாளர்களுக்கு வை த் தி ய வசதிகளும், கண்காணிப்பும் அளிக்கப்படவேண்டுமென விதித்தது தொழிலாளர் நட்டஈட்டுச்சட்டம் ஒரு தொ ழிலாளிதற்செயலாகவோ தனது கடமையைச்செய்யும் போதோகாயமுற்றால் தொழில்கொள்வோர் அவருக்கு நட்டஈடுவழங்கவேண்டுமெனவிதி த்தது. மேலும்1941 இல் நிறைவேற்றப்பட்ட சுரங்கங்கள் ஆலைகள் பற்றிய சட்டம் தொழிலாளர்களுக்கு வேலைத்தலங்களில் அளிக் கப்படவேண்டியபாதுகாப்புகளைவற்புறுத்தியது. ஆலைக ளில் இரசாயனப்பொட்கள், எந்திரங்கள், முதலியவற் றினால்தொழிலாளருக்கு ஆபத்து ஏற்படாதபடிபாது காப்புக்கள்மேற்கொள்ளப்படவேண்டுமெனவும்,தொழி லாளர்களின் பிறதேவைகள்ஆலைகளில் பூர்த்திசெய்யப்

படவேண்டுமெனவும் விதித்தது. மேலும்கடைகள் பற்றியசட்டம், தொழிலாளர்களின் வேலை நேரங்களையும் அவர்களுக்கான விடுமுறையைப்பற்றியும் நிர்ணயிக்கிறது. இவற்றைத்தவிர 1931ம் ஆண்டுமுதல்சம்பள நிர்ணயக்குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன இவை ஒவ்வொருதொழில் துறையிலும்பல்வேறு தரங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு அளிக்கப்படவேண்டிய சம்பளம் மிகைவேதனம் முதலியவற்றைநிர்ணயித்துவருகின்றன. இவற்றின் விளைவாக, தொழிலாளர்களின் சேமநலன்கள் நன்முறையில் பேணப்பட்டுவருகின்றன.

தொழிற்சங்க இயக்கங்களின் எழுச்சி:- டொலமூர் குழுவின்றிய சிபார்சுக்கிணங்கச் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதைத்தொடர்ந்து தொழிலாளர் வகுப்பினர் எழுச்சிபெற்றனர். அதன்மேல் அவர்களின் நலன்களைப் பேணும் நோக்கத்துடன பல தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1931ம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கங்களில் சேர்பொன். அருணாசலம் அவர்களால் 'இலங்கைத் தொழிலாளர்சேமநலக்குழு. என்றபெயரில் முதன் முதல் (1919இல்) நிறுவப்பட்டுப் பின்னர் இலங்கைத்தொழிலாளர்சம்மேளனம் என பெயர்மாறியசங்கம் ஏ. ஈ. குணசிங்க என்பவரால் தொடங்கப்பட்ட இலங்கைத் தொழிற்சங்கம் என்பன குறிப்பிடத்தக்கவை. ஆயினும் இவைஅங்கீகரிக்கப்படாத இயக்கங்களாகவே பணியாற்றின பின்னர் 1935 இல் தொழிற்சங்கச்சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து எல்லாத் தொழிற்சங்கங்களும் பதிவு செய்யப்படவேண்டும் எனவிதிக்கப்பட்டது இதன்மேல் தொழிலாளர்களுக்குப்நலன்களைச் சட்டபூர்வமாகப் பேணிக் கொள்ளமுடிந்தது. 1931-47 காலத்தில் 100க்கும்அதிகமான தொழிற்சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தபோதிலும் 8 சங்கங்கள்மட்டும் இயங்கிக் கொண்டிருந்தன. இவற்றில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத்தோட்டத்தொழிலாளர் சங்கம் என்னும் இரண்டும் அதிக உறுப்பினர்களையுடையனவாகக் காணப்பட்டன. எஞ்சிய 80 சங்கங்களிலும் 1000 அங்கத்தவர்க

ளுக்குக்குறைவாகவே காணப்பட்டனர் தொழிற்சங்கங்கள் தொழில்கொள்வோருக்கெதிராகப் பயன்படுத்தும் ஒரு கருவி வேலைநிறுத்தமாகும். இவ்வகையான வேலை நிறுத்தங்கள் 1935க்குப்பின்னர் அதிகமாகவுற்பட்டன. 1947ல்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் மிகப் பெரிய அளவிலான வேலைநிறுத்தம் ஒன்று இடம் பெற்றது அதிலும் அதை அரசாங்கம் சமாளித்துவிட்டது.

(3) சோல்பரி அரசியற்றிட்டம்

சோல்பரி பிரபுவின் தலைமையிலான விசாரணைக்குழுவினர் இலங்கைக்கு வந்தபின் பத்திரிகைகள் முலமாகவும் மக்களுக்கு அறிவிப்புகளை விடுத்து அரசியற்றிட்டம் தொடர்பாக அவர்களின் கருத்துக்களைக்கோரினர். அத்துடன்நாட்டின் பல பகுதிகளுக்கும் சுற்றுலாச் சென்று பலதரப்பட்டமக்களினதும் கருத்துக்களையும், பிரேரணைகளையும்கேட்டனர் இவ்வாறு மொத்தம் 160 பிரேரணைகளை அவர்கள் பெற்றிருந்தபோதிலும் 80 நூற்றுக்குழுக்களின்சார்பாகியங்களையும்கேட்டனர் சோல்பரி விசாரணைக்குழுவினர் முன்சாட்சிய மளித்திரு ஜி ஜி. பொன்னம்பலம் பெரும்பான்மையோர், சிறுபான்மையோருக்கு இழைக்கும் பல அநீதிகளைச் சுட்டிக்காட்டினர். அரசிறைப்பங்கீடு அரசாங்கசேவைபாளர் நியமனம், சட்டங்களை ஆக்கும் முறைமுதலியவற்றில் பெரும்பான்மையினர் சிறுபான்மையோருக்குப் பாரபட்சம் காட்டுவதாக திரு ஜி ஜி பொன்னம்பலம் குற்றம்சாட்டினர். ஆனால் விசாரணைக் குழுவினர் அவரது குற்றச்சாட்டுகளை ஆராய்ந்தபோது வேண்டுமென்றே அரசாங்கம் வகுப்புவாதரீதியில்செயல் பட்டதற்குச் சான்றுகளில்லையென்பதை அறிந்தனர். எனவேதமிழ்க்காங்கிரசின் குற்றச்சாட்டுகளிற் பலவற்றைவிசாரணைக்குழுவற்கவில்லை எனினும் சிலசட்டங்களைப்பொறுத்தவரை பெரும்பான்மை யோருக்குச் சலுகையளிக்கப்பட்டதை விசாரணைக்குழுவினர் ஒப்புக்கொண்டதோடு எதிர்காலத்தில் சிறுபான்மையோரின் நலன்கள்பாதிக்கப்படாவண்ணம் அரசியற்றிட்டத்தில் சில பாதுகாப்புகளை மேற்கொள்வதற்கு முடிவு செய்தனர். சோல்பரிக்குழுவினரின்சிபார்சுகள் மேல்வருமாறு.

ஆட்சி முறை;- டொனமூர் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அரசுக்கழகத்திற்குப்பதிலாகப்பாராளுமன்றம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும். அது மன்னர் அல்லது அவரின் பிரதி நிதியுடன் பிரதிநிதிகள்சபை (செனற்எனப்படும்) மேல் சபைஎன்னும் இரு சபைகளையுடையதாயிருக்கும் பிரதி நிதிகள்சபையில் 101உறுப்பினர் இருப்பர். அவர்களில் 95பேர் பிரதேசவாரியாகத்தேர்ந் தெடுக்கப்பட்டவர்க ளாகவும் 6 பேர் பிரதிநிதித்துவம்பெறுதவர்களின் சேம நலன்களைக் கவனிப்பதற்காக ஆள்பதியால் நியமிக்கப் பட்டவர்களாகவும் இருப்பர் 75000மக்களைக்கொண்ட அல்லது 1000சதுரமைல்பரப்பினையுடையதொகுதி ஒவ் வொன்றும் ஒரு உறுப்பினரைத்தெரிவுசெய்யும். தொகு திகளை நிர்ணயம் செய்யும்போது ஒரு பிரதேசத்தின் இயற்கைஅமைப்புகுடியமைப்பு போக்குவரத்து வசதி கள் முதலியவற்றைக்கவனிக்கவேண்டும் என விதிக்கப் பட்டது. மேலும்ஒருகுறிப்பிட்ட பிரதேசத்தில் மொழி யால அல்லது மதத்தால்வேறுபட்டவர்கள்கணிசமான தொகையில்வசித்தால் அதை'பல அங்கத்தவர்' தொகு தியாக்குமாறும் சோல்பரி குழுவினர்சிபார்சுசெய்தனர். பிரதிநிதிகள் சபையின் பதவிக்காலம் சாதாரணமாக5 ஆண்டுகளாகும். தேர்தல்முடிவின்படி அதிகதொகுதிக ளைப்பெற்ற கட்சியின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட் டவர்அரசாங்கப் பொறுப்பை ஏற்பார். அவர் பிரதம மந்திரியாவார் அவரின்சிபார்சின்பேரில் ஏனைய மந்திரி கள்ஆள்பதியால் நியமனம் பெறுவர். மந்திரிசபை (கபி னெற்) பிரதானநிர்வாகஉறுப்பாகஅமையும், அது எல் லாவிடயங்களிலும் கூட்டுப் பொறுப்பையுடையதாயி ருக்கும். மந்திரிசபை உறுப்பினரில் இருவர் செனெற்றி லும்உறுப்பினராகஇருப்பர். அவர்களில் ஒருவர் நீதிமந் திரியாயிருப்பார்-

செனெற்சபை:- இச்சபை 30 உறுப்பினர்களையுடையதா யிருக்கும். அதில் 15 பேர் பிரதிநிதிகள் சபையினரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயிருப்பர். இவர்கள் விகி தப்பிரதிநிதித்துவ அடிப்படையில் 'தனிமாற்றுச்சீட்டு' முறையில் தெரிந்தெடுக்கப்படுவர். எஞ்சிய 15 பேரும்

ஆள்பதியால் நியமிக்கப்படுவர். அவ்வாறு நியமிக்கப்படுவோர் சமுதாயத்தில் கல்வி, கைத்தொழில், வர்த்தகம் அறிவியல் முதலிடவற்றில் எதிலாவது மகத்தானசேவைசெய்தோராக இருக்கவேண்டும்; செனற்றுக்கு நியமிக்கப்படுவோர் குறைந்தது 35 வயதுடைய வராகவும் இருக்கவேண்டும் என வும் விதிக்கப்பட்டது. செனற் உறுப்பினர்களில் நியமனம் பிரதிநிதிகள் ஐவரும், தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஐவருமாகப் பதின்மர்ஈராண்டுசேவையின் பின விலகுவர். ஆயின் இவர்கள் மீண்டும் உறுப்பினராகமுடியும். செனற்சபை நிரந்தரமான ஒருசபையாகஅமையும். ஏனெனில் அது எக்காலத்திலும் கலைக்கப்டுவதில்லை. செனற்சபை பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்படும் முறிகளை ஆழ்ந்து ஆராய்வதோடுஅவசியமாயின் தான்அலற்றை நிறை வேற்றுது விடலாம் ஆயினும் நிதிதொடர்பானமுறிகளை 1மாதத்துக்குமேல் அது தடுத்துவைத்திருக்கமுடியாது. மேலும் செனைற்றிலுல் நிராகரிக்கப்பட்ட ஒரு முறி தொடர்ந்து இரு கூட்டுத் தொடர்களில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் சட்டமாகலாமெனவும் விதிக்கப்பட்டது.

ஆள்பதிநாயகத்தின்அதிகாரங்கள்:- ஆள்பதிநாயகம் பன்னரின் பிரதிநிதியாக அவருக்குப் பொறுப்புள்ளவராகப் பணியாற்றுவார். அவருக்குச் சிலவிசேட அதிகாரங்கள் இருக்கும். அவற்றின் கீழ் அவர், நாட்டின் பாதுகாப்பு, நாணயம், வெளிவிவகாரம்,வாக்குரிமை, வர்த்தகக்கட்டுப்பாடு, பற்றிய முறிகளை மன்னரின் அங்கீகாரத்துக்கெனஒதுக்கிவைக்கலாம். மேலும்பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், பிரதம மந்திரியின் சிபார்சின் பேரில்மந்திரிகளை நியமித்தல்முதலியசம்பிரதாயமான கடமைகளையும் அவர்செய்வார். இவற்றைத்தவிரச் சிறுபான்மையோரின்நலன்களைப்பாதிக்கும் முறிகளுக்கு அங்கீகாரமளிக்காது ஒத்திவைக்கவும்அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டது. அவைகீழேவிபரிக்கப்பட்டுள்ளன.

சிறுபான்மையோருக்காக பாதுகாப்புக்கள்:-

சோல்பரிக் குழுவினர் தமது விசாரணையின்போது சிறுபான்மையோர். பெரும்பான்மையோர் மீது ஐயுற

வும் அச்சமும்கொண்டிருந்ததை அறிந்தனர். எனவே சிறுபான்மையோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதற் காகச் சில விசேட ஒழுங்குகளை ஏற்படுத்தினர். இவ் வாறு மேற்கொள்ளப்பட்டவை (1) செனற் (2) பல அங்கத்தவர் தொகுதிகள் (3) ஆள்பதியின்விசேட அதி காரங்கள் (4) பொதுசேவைஆணைக்குழு என்பனவா கும். செனற்உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்ய ப்படாதவர்களாதலினால் அவர்கள் பொதுத்தேர்தலைப் பற்றிஎவ்வித அச்சமுமின்றித்தாம் சரியென எண்ணிய வற்றை உள்ளபடி எடுத்துக் கூறத்தயங்கமாட்டார்கள் எனவே ஒரு சமூகத்தவரையோ சமயத்தவரையோ பா திக்கும் முறிகளைப் பிரதிநிதிகள்சபை அவசரப்பட்டு நிறைவேற்றினால் செனற்உறுப்பினர்அதை உடன்நிறை வேற்றுபல் அதிலுள்ள குறைகளை வெளிப்படுத்தலாம். இதனால் 'பொதுசனக்கருத்து' அல்லது எதிர்ப்பு உரு வாக்கப்படும்போது பிரதிநிதிகள்சபை அம்முறியில திருத்தங்கள் செய்யவோ அதை மாற்றியமைக்கவோ முண்டப்படலாம். இம்முறையில்செனற் சிறுபான்மை யோருக்குப் பாதுகாப்பளிக்கும்.

அடுத்துகுறிக்கப்பட்ட ஒருபிரதேசத்தில்கணிசமான தொகையினராகச் சிறுபான்மையோர் வசித்த போதி லும் தமக்கென ஒரு பிரதிநியைத் தெரிந்தெடுக்க முடி யாதநிலையில் இருப்பாராயின் அத்தொகுதியைப்'பல அங்கத்தவர்' தொகுதியாக்க விசாரணைக்குழு சிபார்சு செய்தது. இதன் விளைவாகச்சில தொகுதிகளில் சிறுபா ன்மையோர் மேலதிக பிரதிநிதித்துவம்பெற்றனர்.

மூன்றுவதாக, ஆள்பதிசிறுபான்மையோரின்நலன்க ளைப்பாதிக்கும் சில முறிகளுக்கு அங்கீகாரமளிக்காது விட விசாரணைக்குழு அதிகாரமளித்தது. அத்தகைய முறிகள் (1) ஒரு சமயத்தவர் அல்லது சமூகத்தினரால் பலமாகஎதிர்க்கப்பட்டதும் அவர்களுக்குத் தீங்கு விளை விக்குமெனஆள்பதியால் கருதப்படுவதுமான ஒரு முறி (2) ஒரு சமயத்தவருக்கு அல்லது சமூகத்தவருக்கு விசேடசலுகைகளையோ,வசதியீனங்களையோ ஏற்படுத் தியேறெரு சமூகத்தவருக்கு அவ்விதம் ஏற்படுத்தாத

முறி (3) சமயதாபனங்கள். சமய அனுட்டானங்களை மாற்றும்அல்லதுகட்டுப்படுத்தும் முறிஎன்பனவாகும்.

நான்காவதாக 3,600 ரூபாவுக்குமேல் அடிப்படை வேதனம்பெறும்அரசாங்கஉழியர்களின் நியமனம், இடமாற்றம், வேலைநீக்கம் முதலியன பொது சேவைக் குழுவிடம்விடப்பட்டமுடியால் அது இன மத வகுப்பு வேறுபாடின்றித் தன் பணியைச்செய்வதன் மூலம் சிறுபான்மை யோரின் நலன்கள் பாதுகாப்பைப் பெறும் எனச்சோல்பரி குழுவினர் நம்பினர்- இறுதியாக 75000 மக்கள் அல்லது1000சதுரமைல்என இரு அடிப்படைகளில் தொகுதிகள் பிரிக்கப்படுவது சிறுபான்மையோர் அதிகபிரதிநிதித்துவம்பெறஉதவும்எனச்சோல்பரிக்குழுவினர் எதிர்பார்த்தனர்.

இலங்கை சுதந்திரம் பெறுதல் :-

சோல்பரிக் குழுவினர் தமது அறிக்கையை 1945 ம் ஆண்டு யூலை11இல் மன்னரிடம் கையளித்தனர் அவர்களின் விசாரணையின் போது அரசுக்கழகத்தினர் நேரடியாகச்சாட்சியமளியாது ஒன்றியொதுக்கியிருந்தபடியால் பிரித்தானிய அரசு அக்கழகத்தின் முதல்வராயிருந்த D.S. சேனநாயக்காவை இங்கிலாந்துக்கு அழைத்தது அவர் அழைப்பை ஏற்றுஅங்கு சென்றிருந்த காலத்தில் அங்கு தேர்தல்நடைபெற்று அட்லிபிரபுவின் தலைமையிலான தொழிற்கட்சி பதவிக்குவந்திருந்தது அட்லிபிரபுவின் அரசாங்கம் இலங்கையின் விடுதலைக் கோரிக்கையை அனுதாபத்துடன் கவனித்ததுடன் D.S. சேனநாயக்கா பர்மா, இந்தியா ஆகிய நாடுகள் விடுதலை பெறஇருப்பதையும் இலங்கை போர்க்காலத்தில் பிரித்தானியாவுக்குச்செய்த பேருதவிகளையும் சுட்டிக்காட்டி அதற்கு ஆணிலப்பதஅந்தஸ்து அளிக்குமாறுஆனித்தரமாகவற்புறுத்தினர்.

அட்லிஅரசாங்கம் D.S. சேனநாயக்காவின கருத்துக்களையும் அப்போது ஆள்பதியாயிருந்த சேர் ஹென்றி மூரின்தகவுரைகளையும்ஆராய்ந்த பின்னர்1945இல் ஒரு வெள்ளையறிக்கையைவிடுத்தது. அவ்வறிக்கைஇலங்கை மக்கள்ஆணிலப்பதஅந்தஸ்து என்னும் இலக்கை அடைவதில் பிரித்தானிய அரசின் அனுதாபமும் ஆதரவும்

கிடைக்குமெனத்தெரிவித்ததோடுஅவ்விலக்கைஅடைவ
தற்கு உதவக்கூடியதும் முன்னர் இலங்கை மந்திரிசபை
யால் தயாரிக்கப்பட்டநகல் திட்டத்திலிருந்து அதிகம்
வேறுபடாததுமான சோல்பரிதிட்டத்தை ஒரு இடைக்
காலத்திட்டமாக ஏற்குமாறும் கோரியது. இதன் பின்
னர் D.S. சேனனுயக்கஇலங்கை வந்து வெள்ளை அறிக்
கை பற்றியஅரசுக்சழகத்தின் விவாதத்தில் பங்குபற்றி
யதோடு அதுஅரசுக்கழகத்தில் மிகுப் பெரும்பான்மை
யோரின்ஆதரவைப்பெற்று நிறைவேறவும் வழி செய்
தார். இதன்மேல் 15-5-46இல் பிரித்தானிய அரசாங்
கம் வெள்ளைஅறிக்கையின் அடிப்படையில் ஒரு இடைக்
கால அரசியற்றிட்டத்தைப் பிரகடனப்படுத்தியது
அதில் சட்டங்களை ஆக்குவதற்கு ஆள்பதிக்கு அளிக்கப்
பட்டிருந்த ஒதுக்கீட்டு அதிகாரமும்: மன்னரின் அங்கீகா
ரத்துக்குச் சில முறிகளைச் சமர்ப்பிக்கவேண்டும் என்ற
நியதியும் தாம் இலங்கை ஆணிலப்பத அந்தஸ்தை
அடையாததுமாகும். அதைத்தொடர்ந்து 18-6-1947
இல் ஆள்பதி அரசுக்கழகத்தைகூட்டிப்பிரித்தானியஅர
சுஇலங்கைக்கு ஆணிலப்பதஅந்தஸ்து அளிக்கவிருப்ப
தைஅறிவித்தார். எனவே அரசுக்கழகம் 1-7-47 இல்
தனது இறுதிக்கூட்டத்தைநடத்தியது. இதன் பின்னர்
புதிய தேர்தலுக்கு வேண்டியஒழுங்குகள்செய்யப்பட்ட
தன்மேல் ஆகஸ்ட் 15 முதல்செப்டம்பர் 20 வரை தேர்
தல்கள் நடைபெற்றன.

1947ம் ஆண்டுத் தேர்தலில் U.N.P க்கட்சி அதிக
தொகுதிகளைக்கைப்பற்றியது. ஆயினும்பெரும்பா
ன்மையில்லாதபடியால் சுயேச்சைகளின்உதவியுடன்
அது அரசாங்கத்தைஅமைத்தது. திரு D.S. சேனநாயக்
காஇலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாகினார்.
முதலாவது பாராளுமன்றம் 25-10-1947இல் தொடக்
கிவைக்கப்பட்டது. இதுஇவ்வாறுக, பிரித்தானிய பா
ராளுமன்றத்தில் அவ்வாண்டுநவம்பரில் 'இலங்கைசுதந்
திரச்சட்டம்' இருமுறைநிறைவேற்றப்பட்டுடிசம்பர் 21
இல் மன்னரின் அங்கீகாரத்தையும்பெற்றது இதைத்
தொடர்ந்துஇலங்கைப் பாராளுமன்றத்திலும் சுதந்தி

ரம் பற்றியபிரேரணைகொண்டுவரப்பட்டுப்பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது. இதன் விளைவாக இலங்கை 10-2-1948ஆண்டு முதல் ஆணிலப்பதஅந்தஸ்தைப்பெற்றுத்தனது அரசியல்வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைஆரம்பித்தது.

இவ்வாறு சகல உள்நாட்டு வெளிநாட்டு விடயங்களிலும் பூரண பொறுப்பாட்சியைப் பெற்ற இலங்கை அரசுதனது பாதுகாப்பை முன்னிட்டுப் பிரித்தானியாவுடன் செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்தின்படி போர்க்காலங்களில் இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று உதவி செய்யஇசைந்தன- அத்துடன் இலங்கையில் பிரித்தானியா சில,படைத்தளங்களைவைத்திருப்பதற்கும் இலங்கை அநுமதித்தது இவ்வொப்பந்தம் திரு S.W.R.D. பண்டாரநாயக்காவின்ஆட்சிகாலத்தில்(1957இல்)நீக்கப்பட்டுவிட்டது. எனவே இன்று இலங்கை வெளிநாட்டுப் பாதுகாப்புவிடயங்களிலும் முற்றிலும் தன்னையே நம்பியிருக்கும் சுதந்திரமான நிலையைப் பெற்றுள்ளது எனலாம்.

வினாக்கள்

1. டொனமூர்குழு சர்வசனவாக்குரிமையை வழங்கவும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழிக்கவும் நிர்மானித்தது ஏன்?
2. டொனமூர்குழுவினரின் சிபார்சுகளையும் 1924ம் ஆண்டு மாளிங் சீர்திருத்தங்களையும் ஒப்பிடுக.
3. டொனமூர்குழுவினரின்சிபார்சுகளைத்தொகுத்தெழுதுக.
4. டொனமூர் திட்டத்தின் கீழ் சமூகஅபிவிருத்திபற்றி எடுக்கப்பட்டநடவடிக்கைகளை விபரிக்குக.
5. சோல்பரி அரசியற்றிட்டத்தையும்,டொனமூர் அரசியற்றிட்டத்தையும் ஒப்பிடுக.
6. சோல்பரிக் குழுவினரின் சிபார்சுகளைத் தொகுத்தெழுதுக.
7. 1911ம் ஆண்டு முதல் 1931ம் ஆண்டுவரை இலங்கையின் அரசியற்றிட்டத்தில் ஏற்பட்டமாற்றங்களைக்குறிப்பிடுக.
8. 1931 முதல் 1947வரையுள்ளகாலத்தில் இலங்கையின் அரசியல் வரலாற்றை படிமுறையாகத் தொகுத்தெழுதுக;
9. வரலாற்றுக் குறிப்பெழுதுக— (1) நிர்வாகக்குழுமுறை (2) வளர்ந்தோர் வாக்குரிமை (3) கொல்டிகொற அறிக்கை
10. டொனமூர்த்திட்டத்திலிருந்தகுறைபாடுகளைச் சோல்பரிதிட்டம் எவ்வாறு நீக்கியது?

பகுதி ஆ உலக வரலாறு

அத்தியாயம் 14

அமெரிக்க விடுதலைப்போர்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி புரட்சிகளுக்குப் பெயர் பெற்றகாலமாகும். அக்காலத்தில் இடம் பெற்ற அமெரிக்கப் புரட்சியும் பிரெஞ்சுப் புரட்சியும் உலக வரலாற்றில் உன்னதமான இரு நிகழ்ச்சிகளாகும் அரசியற் சமத்துவம், சமுதாயச் சமத்துவம் என்பன அமெரிக்க விடுதலைப்போரின் வெளிப்பாடுகளெனின் சுதந்திரம்சகோதரத்துவம் சமத்துவம் ஆகியன பிரெஞ்சுப் புரட்சியின் தாரகமந்திரங்களாகும் சுருங்கக்கூறில் அரசனின் தெய்வீக அதிகாரம் அடக்குமுறை, அநீதி முதலியவற்றுக்கெதிராகப் பதினெட்டாம் நூற்றாண்டு முதல் உலகின் பலபகுதிகளிலும் மக்கள் நடத்திய பல போராட்டங்களின் முன்னோடிகளே அந்நிகழ்ச்சிகளெனலாம். அவை காலத்தின் அடையாளங்களெனவும் கூறலாம். ஏனெனில் முடியாட்சி பேரரசுவாதம் பிரபுத்துவம் முதலியவற்றுக்கு மக்கள் சவால் விடுக்க முற்பட்டதும் இக்காலமேயாகும்- நவயுகத்தின் விடுதலையியக்கங்களுக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்த அமெரிக்கவிடுதலைப்போரும் பிரெஞ்சுப்புரட்சியும் சில பொதுவான அமிசங்களையுடையனவாயினும் அவற்றைத் தூண்டிய சக்திகளும் சந்தர்ப்பங்களும் வேறுபட்டவை. அமெரிக்க விடுதலைப்போரின் அடிப்படைக் காரணங்களையும் அமிசங்களையும் அறிய அமெரிக்க அரங்கிற்குப் போவோம்.

ஆங்கிலக்குடியேற்றங்களின் வரலாறு-

பதினேழாம் நூற்றாண்டு ஐரோப்பிய அரசுகள் திரைகடலோடித் திரவியம் தேடுவதில் தீவிரமாக ஈடுபட்ட காலமாகும். அக்காலத்தில் தேட்டம் கண்டு

பிடிப்பு, குடியேற்றங்களின் தாபிதம் முதலியவற்றில் ஸ்பெயின் பிரான்ஸ் ஒல்லாந்து இங்கிலாந்து முதலிய நாடுகள் மும்முரமாக ஈடுபட்டன. புது உலகமாகிய அமெரிக்காவும் அந்நாடுகளின் குடியேற்றப்போட்டிக ளுக்கும் வாத்தகப் பூசல்களுக்கும் களமாகியது. வட அமெரிக்காவின் வடபகுதியில் பிரான்சியரும் தெற்கு மேற்குப் பகுதிகளில் ஸ்பானியரும் கிழக்குக் கரையோ ரத்தில் ஆங்கிலேயரும் குடியேற்றங்களைத் தாபிப்பதி லும் தமது ஆட்சியை விரிவுபடுத்துவதிலும் வெற்றி பெற்றனர்.

வட அமெரிக்காவில் ஆங்கிலக் குடியேற்றம் ஒன் றை நிறுவ (1584 இல்) முதல் முயற்சி மேற்கொண்ட வர் சேர் வால்ரர் றலி என்பவராகும். ஆயினும் அவர் முயற்சி தோல்வியடைந்தது பின்னர் முதலாம் ஜேம்ஸ் காலத்தில் தான் (1806) வேர்ஜீனியாஎன்னும் முதலா வது ஆங்கிலக் குடியேற்றம் நிறுவப்பட்டது, இதைத் தொடர்ந்து ஜேம்ஸ் சார்ள்ஸ் ஆகியோர் காலத்தில்இங் கிலாந்தில் உண்டானமதச்சச்சரவுகளின்விளைவாக பல புரட்டஸ்தாந்தியர் 1620 இல்மேபிளவர் என்னும் கப் பலில் வந்து நியூ இங்கிலாந்து எனப்படும் பிரதேசத்தில் பல குடியேற்றங்களை நிறுவினர். அவை பின்னர் மசசூ செற்ஸ் நியூஹம்சயர் கொனெக்ரிகட் முதலியகுடியேற் றங்களாகின. இதன்பின்னர் இங்கிலாந்தில்உள்நாட்டுப் போர் நடந்தகாலத்தில் குடியேற்றங்களை நிறுவும் முய ற்சிதடைப்பட்டிருந்தது. ஆயினும் 1660 இல் சார்ள்ஸ் 2 மன்னனபின்னர் அம்முயற்சிகள் மீண்டும்மேற்கொ ள்ளப்பட்டன இதன்மேல் பால்ரிமோர் பிரபு மேரிலாந் தையும் பென் என்பவர் பென்சில்வேனியாவையும் நிறு வினர். பின் 1743 இல் ஒகிள்தோப் என்பவர் ஜோர்ஜீ யாவை நிறுவினர்.

இவ்வாறு ஆங்கிலேயர் தாமே குடியேற்றங்களை நிறுவியதுடன் நில்லாது பிரான்சியர், ஒல்லாந்தர் ஆகி யோரின் சில குடியேற்றங்களையும்கைப்பற்றினர். இவ் வாறு மேரிலாந்துக்கும் நியூ இங்கிலாந்துக்கு மிடையில் அமைந்திருந்த பல ஒல்லாந்தக் குடியேற்றங்கள் 1684 இல் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டன. இவற்றில்

ஒன்றான நியூ அம்ஸ்ரடாமுக்கு நியூயோர்க் என ஆங்கிலேயர் பெயரிட்டனர். இதேபோல் பிரான்சியரின் குடியேற்றமான 'கரோலினா'வும் ஆங்கிலேயர்கையில் வீழ்ந்ததைத் தொடர்ந்து, 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்வட அமெரிக்காவின் கிழக்குக் கரையோரமாக மொத்தம் 13 பிரித்தானியக் குடியேற்றங்கள் இருந்தன. அவை மெயின், நியூஹாம்சயர், கொனெக்டிகட், ரோட் தீவு, மசசூசெற்ஸ், நியூஜேர்சி, நியூயோர்க், டிலவாறே, மேரிலந்து, வேர்ஜினியா, கரோலினா, ஜோர்ஜியா, பென்சில்வேனியா என்பனவாகும்.

இக்குடியேற்றங்கள் உருவாகிய முறையும், இவை நிறுவப்பட்ட பிரதேசங்களின் தரைத்தோற்ற, கால நிலை வேறுபாடுகளும், குடியேற்றவாசிகளின் மத நம்பிக்கைகளும், அரசியற் கருத்துக்களும் அவற்றிடையே பல வேறுபாடுகளை ஏற்படுத்தின. பல சந்தர்ப்பங்களில் அவை எல்லைகள் தொடர்பாகத் தம்முள் சச்சரவுகளிலும் பூசல்களிலும் ஈடுபட்டதுண்டு. ஆயினும் தொடக்கத்திலிருந்தே ஆங்கிலக்குடியேற்றங்கள் 3 பொது எதிரிகளுக்கெதிராகப் போராடவேண்டியிருந்தது. அவை (1) செவ்விந்தியர் (2) பிரான்சியர் (3) பிரித்தானிய அரசு என்பனவாகும்.

முன் குறிப்பிட்டமூன்றினுள்ளும் செவ்விந்தியரின் தொல்லைகளும், பிரான்சியரின் ஆக்கிரமிப்புகளும் ஏழாண்டுப்போரின் முடிவில்(1756–63) முற்றுமுழுதாகப் போக, பிரித்தானியப் பேரரசின் ஆதிக்கம் ஒன்று மட்டுமே எஞ்சியிருந்தது. செவ்விந்தியரதும், பிரான்சியரதும் தொல்லைகளிலிருந்து விடுபட்ட அமெரிக்க மக்கள் தமது மூன்றாவது தொல்லையையும் அகற்ற முனைந்தது தவிர்க்கப்பட முடியாததொன்றாயிற்று.

விடுதலைப்போரின் அடிப்படைக்காரணங்கள்

அமெரிக்க விடுதலைப்போரின் அடிப்படைக் காரணங்களை (1) யாப்புத்தொடர்பான பிணக்கு (2) பேரரசு நடவடிக்கைகள் (3) வர்த்தகக் கட்டுப்பாடுகளும் வரிகளும் என மூன்றாகவகைப்படுத்தலாம்.

யாப்புத் தொடர்பான பிணக்குகள் :- வடஅமெரிக்கா வின் ஆங்கிலக் குடியேற்றங்களுக்கும் பிரித்தானியா வுக்குமிடையிலான யாப்புத்தொடர்பு எக்காலத்திலும் வரையறுக்கப்படவுமில்லை, தெளிவாக்கப்படவுமில்லை இது குடியேற்றங்களுக்கும் பிரித்தானியாவுக்குமிடை யில் கருத்து வேறுபாடுகளையும், பிணக்குகளையும் ஏற் படுத்தியது. ஆங்கிலக் குடியேற்றங்கள் பெரும்பாலும் தனிப்பட்ட முயற்சியினாலும் இங்கிலாந்தில் அவ்வப் போது நிலவிய அரசியல் சமய மனோபாவங்களுக்கு மாறுபட்டிருந்தவர்களாலும் நிறுவப்பட்டமை, அவற் றின் சச்சரவிடும் மனப்பான்மையை வளர்த்தது.

பிரித்தானியக் குடியேற்றங்கள் 18 ஆம் நூற்றாண் டின் நடுப்பகுதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு சட்டசபை பிரித்தானிய அரசினால் நியமிக்கப் பட்டஆள்பதி, அவரது உதவியாளர்களைக் கொண்ட ஒரு கழகம் என்பவற்றை யுடையனவாயிருந்தன. ஆள்பதி நிர்வாக அதிகாரமுடையவர் ஆயினும் அவரையும்அவரது உதவியாளர்களையும் பராமரித்தல் (அஃதாவது அவர்களுக்கு வேதனம் வழங்கல்) சட்ட சபையின் பொறுப்பாயிருந்தது. சட்டசபை தான் விரும்பாத ஒரு ஆள்பதிக்கு வேதனம் கொடுக்காமல் விடக்கூடிய நிலையும் இருந்தது. இது பிரித்தானிய அர சுக்குச்சங்கடமான ஒரு நிலைமையாகும். அதே சமயம் சட்டசபை நிறைவேற்றும் தீர்மானங்களைரத்துச்(வீற் றே) செய்வதன் மூலம் ஆள்பதி குடியேற்றங்களின் வெறுப்புக்குஇலக்காஞர்.

மேலும்.பிரித்தானியா அமெரிக்கக் குடியேற்றங் களைத் தனது போரசுக் கண்கொண்டே நோக்கியது. அவற்றுக்குப் பிரித்தானிய பாராளுமன்றத்தில் பிர தி நிதித்துவம் இல்லாதபோதிலும் அவை அப்பாராளு மன்றத்துக்கு கட்டுப்பட்டிருக்க முடியும் என அது கருதியது. ஆனால் குடியேற்றங்கள் தமது சட்டசபை களைபாராளுமன்றமெனவேமதித்தன. அன்றியும் குடி யேற்றவாசிகள் தமது குடியேற்ற (உரிமைப்பட்ட யங்களை அடிப்படைச்சட்டங்களாகவேகருதின. தமது அரசியல் உரிமைகளும் சலாக்கியங்களும் 'முடி'

யிலிருந்து பெறப்பட்டனவேயன்றிப் பிரித்தானியபாரா ளுமன்றத்திலிருந்தன்றுஎன அவர்கள் கருதினர். எனவே தாம் பிரித்தானிய அரசின் கீழ் ஒரு வகையான இணைப்பு ஆட்சிக்குட்பட்டதாகவே அவர்கள் நம்பினர் இத்தகையஒரு நிலையில் பிரித்தானிய பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுநடவடிக்கைகள் மக்களை அதிக அளவில் அரசியற் சிந்தனையில் ஈடுபடத் தூண்டின. 'எமது மூதாதையர் வந்தபோது இங்கு அரசாங்கம் எதுவும் இருக்கவில்லை, 'முடி' சாம்ராச்சியத்தின் பாதுகாப்புக்காக அமெரிக்காவில் நிதி திரட்டுவதற்குச் சட்டம் இயற்றமுடியுமா? என்பன போன்ற பல வினாக்கள் எல்லோரது மனதிலும் எழுந்தன அன்றியும் ஒற்றிஸ் என்பவர்மேலும் ஒரு படி சென்று 'குடியேற்றங்களில் நிதி திரட்டும் உரிமை அவற்றின் சட்டசபைகளுக்கு மட்டுமே இருக்கவேண்டும், எனக்கூறினர்.

இந்நிலையில் தாம் பிரதிநிதித்துவம் வகிக்காத தமக்கு ஆட்சியில் பங்களிக்காத ஒரு பாராளுமன்றத்தின் சட்டங்கள் தம்மைக்கட்டுப்படுத்தா என அவர்கள் எண்ணத்தலைப்பட்டனர். 17ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட போராட்டங்களெல்லாம் பிரதித்துவமின்றேல் வரியில்லை, என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே 17ம் நூற்றாண்டில்நிலவியகருத்துக்களுக்கு விசுவாசமாயிருக்கும்ஒரு உணர்ச்சி தான் அமெரிக்கப புரட்சியை உருவாக்கியது என ஒரு ஆசிரியர் கூறுவதும் ஏற்புடைத்து.

பேரரசு நடவடிக்கைகள்:—பிரித்தானியப்பேரரசு தனது அதிகாரத்தையும், ஆட்சியுரிமையையும் நிலைநாட்டுவதற்காக நிர்வாகஒழுங்குஎன்றபோர்வையில் எடுத்த பல நடவடிக்கைகள் குடியேற்றவாசிகளின் சுதந்திர உணர்ச்சிக்குச் சவாலாக அமைந்தன. 1763ம் ஆண்டு வேத்தியற் பிரகடனம் அப்பலேச்சியனுக்கு அப்பாலுள்ள பிரதேசத்தை இந்தியர்களின் ஒதுக்குப் பிரதேசமாக ஆக்கியது. அதற்குள்யாரும் செல்வதாயின் பிரித்தானிய அரசின்ஆணையைப் பெறவேண்டும் என விதிக்கப்பட்டது. மேலும் ஐந்து பேரேரிகளுக்குக்

கிழக்கிலுள்ள பிரதேசம் 'குவிபெக்' மாகாணமாக்கப் பட்டதைத் தொடர்ந்து அது கனடாவின் ஒரு பகுதியாக்கப்பட்டது அத்துடன் 1774இல் நோத் மேற்குப் பிரதேசத்தில் நில விற்பனையை நிறுத்திவிடுமாறு கட்டளையிட்டமை மத்திய குடியேற்ற வாசிகளுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியது. இவற்றைத் தவிர பிரித்தானிய படைகளுக்கு உறைவிடமும் வசதிகளும் அளிக்க வேண்டுமென்னும் சட்டமும் வர்த்தகம், சுங்கம் சம்பந்தமான வழக்குகளை நடத்தவைஸ் அட்மிரல்டி கோடுகளை நிறுவியமையும் ஏழாண்டுப்போரின் பின்னர் 10,000 பேரைக்கொண்ட ஒருபடையை வடஅமெரிக்காவில் நிறுத்துவதற்குஎடுத்தமுடிவும், குடியேற்றங்களின் பிரித்தானியஎதிர்ப்புணர்ச்சியைக் கொழுந்துவிட்டெரியச் செய்தன எனலாம்.

வர்த்தகக்கட்டுப்பாடுகளும் வரிகளும் :-

பிரித்தானியக் குடியேற்றங்கள் தொடக்கத்திலிருந்தே வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தன. ஆனால் பிரித்தானியா, கடற்போக்குவரத்துச் சட்டங்களின் மூலம் குடியேற்றங்களின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தியது. அச்சட்டங்களின் கீழ்குடியேற்றங்கள் பிரித்தானியாவுக் கூடாகவே வெளிநாடுகளுடன் வர்த்தகம் செய்யமுடியும். இக்கட்டுப்பாடுகள் கள்ளக்கடத்தல் அதிகரிக்க வழிவகுத்தன. அவ்வாறு கள்ளக்கடத்தல் அதிகரித்தபோது அதைத்தடுப்பதற்காகப் பிரித்தானியா சுங்கக் கட்டுப்பாடுகளை மேலும் தீவிரமாக அமுல் செய்யத் தொடங்கியது. இதன் விளைவாக மக்கள் பல தொல்லைகளுக்குட்பட்டனர்.

மேலும் ஏழாண்டுப்போர் குடியேற்றங்களின் நன்மைக்காகவே மேற்கொள்ளப்பட்டதென்றும், அதே சமயம்பிரித்தானியாவில் ஆகக்கூடிய வரிவிதிக்கப்படும் போது குடியேற்றங்களில் வரிவிகிதம் குறைவாயுள்ளதென்றும் காரணம் காட்டிகிறென்வில் 1746இல் அரசிறைச்சட்டமொன்றை அமுல் செய்தார்- அது குடியேற்றநாடுகளுக்கு இறக்குமதி செய்யப்படும் வைன், லோன் (துணி) கோப்பி முதலியவற்றுக்கு அதிக வரி

விதித்தது. இச்சட்டம் நியூஇங்கிலாந்து மக்களின் கடும் எதிர்ப்புக் குள்ளாகியது. இதற்குப் பின்னர் 1775 இல் முத்திரைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது இதன் கீழ் செய்தித்தாள், சட்ட வர்த்தகப்பத்திரங்கள் ஆகியன வற்றில் முத்திரைகள் ஒட்டப்படவேண்டும்என விதிக் கப்பட்டது இச்சட்டம் பத்திரிகைகளதும் பொதுமக் களதும் பலத்த எதிர்ப்புக்குள்ளாகியது. இச்சட்டத் துக்குஎதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் குடியேற்றங்கள் பிரித்தானியாவிலிருந்து தமது இறக்குமதியைக் குறைத் துவிட்டபடியால் பிரித்தானியவர்த்தகர்களின் தூண்டு தலினால்அச்சட்டம் 1776இல் நீக்கப்பட்டது. ஆயினும் குடியேற்றங்களில்வரிவிதிப்பதற்குப்பிரித்தானிய பாரா ளுமன்றத்துக்கு அதிகாரம்உண்டு என்பதை வற்புறுத் தும் நோக்கத்துடன் உரிமைப்பிரகடனச்சட்டமொன்று அவ்வாண்டு நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முத்திரைச் சட்டத்தின் பின்னர், அமெரிக்கக்குடி யேற்றங்களின் எதிர்ப்புக்கு இலக்காகிய செயல்ரவுன் சென்ட்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது அவர் இங் கிலாந்தில் நிலவரி குறைக்கப்பட்டதனால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்காகக் குடியேற்றங்களுக்கு இறக்குமதி செய்யப்படும் கண்ணாடி, ஈயம், பூச்சுமை, தாள், தேயிலை, முதலியவற்றின்மீது 1776 இல் புதிய வரிகளை விதித்தார். அத்துடன் வர்த்தகக் கட்டுப்பாடு களைச் சரிவர அமுல் நடத்துவதற்காகச் 'சுங்க ஆணை யாளர் குழு' ஒன்றும்பொஸ்ரன்நகரில் நிறுவப்பட்டது. இந்நடவடிக்கைகள் ஆணையாளர் குழுவுக்கும் பொது மக்களுக்குமிடையில்பொஸ்ரனில்தகராறுகளை ஏற்படுத் தின1770இல்ஏற்பட்ட ஒரு தகராறில் இராணுவத்தின் ரும்தலையிடவேண்டிவந்தது. அதன்விளைவாக 5 பொஸ் ரன்வாசிகள்கொல்லப்பட்டனர், 'இது பொஸ்ரன் படு கொலை' எனப்படும். இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட புதிய பிரதமர்நோத் தேயிலையொன்றைத் தவிர்த்து ஏனையவற்றில் விதிக்கப்பட்ட வரிகளை அன்றே நீக்கி விட்டார். தேயிலைவரியை மட்டும்விட்டு வைத்தது பிரித்தானிய பாராளுமன்றத்தின் முதன்மையையும்,

குடியேற்றங்களை ஆளுவதற்கு அதற்குள்ள உரிமையை யும் காட்டுவதற்கே என விளக்கம் கொடுக்கப்பட்டது.

நோத் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின் மூன்று ஆண்டுகள் ஒரளவு அமைதி நிலவியது பின்னர் 1773 ஆம் ஆண்டு தேயிலைச்சட்டம், என ஒன்று நிறை வேற்றப்பட்டது. பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் பண நெருக்கடியைத் தீர்ப்பதற்காக அச்ச ங்கம் தேயிலையை நேரடியாக அமெரிக்க குடியேற்ற நா டுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் அங்கு சில்லறையாக அதை விற்பனை செய்யவும் அச்சட்டம் வசதி செய்தது. இந் நடவடிக்கையினால் அமெரிக்காவில் தேயிலையின் விலை குறைந்தது. ஆயினும் வர்த்தகர்களையும் கடத்தற்கார ர்களையும் கடுமையாகப் பாதித்ததனால் அச்சட்டம் அவ ர்களின் கடுமையான எதிர்ப்புக்குள்ளாகியது. அந்நிலை யில் 1773 டிசம்பர் 16ஆம் நாள் பொஸ்ரன் துறைமுக திற்கு ஒரு கப்பல்தேயிலையுடன்வந்திருந்தபோது 50பேர் செவ்விந்தியர்களைப்போல வேடமிட்டு அக்கப்பலில் ஏறி அதிலிருந்த 359 தேயிலைப் பெட்டிகளைக் கடலுள் வீசி விட்டனர். இதை 'பொஸ்ரன் தேநீர்விருந்து' என்பர்.

பொஸ்ரன் நிகழ்ச்சிகள் பிரித்தானியரின் ஆத்திரத் தைக் கிளறின. இதன் விளைவாக 1775 இல் நான்கு புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன அவற்றைச் சகிக்க முடியாத சட்டங்கள் என்பர். அவற்றில் ஒன்று அழிக்க ப்பட்ட தேயிலைக்கு நட்டஈடு கிடைக்கும்வரை பொஸ் ரன் துறையை மூடியது. இன்னொன்று முன்னர் தடுத்து வைக்கப்பட்ட மசசூசெற்ஸ் குடியேற்றத்தின் பட்டயத் தை உயிர்ப்பித்து அதன் ஆள்பதிக்கு அதிக அதிகாரங் களைக் கொடுத்தது. வேறொன்றுகுற்றவாளிகளை இங்கி லாந்துக்குக் கொண்டு செல்லவழி வகுத்தது. நாலாவது சட்டம் இராணுவத்திற்குத் தங்குமிடம் கொடுக்கப்படு ம் விடயத்தைக் கவனிப்பதற்கு வசதிசெய்தது. இவ் வாறு பிரித்தானியா மேற்கொண்ட பல்வேறு நடவடிக் கைகள் குடியேற்றங்களை ஒன்றுபடச்செய்தே தா டு

அவை தமது உரிமையை நிலைநாட்டுவதற்குப்படையேந்தவும் தூண்டின. எனவே 1774 மே மாதம் வேர்ஜினியாச்சட்டசபை குடியேற்றங்களின் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்தது. அதன் அழைப்பை ஏற்ற 12 குடியேறறங்கள் தம்பிரதிநிதிகளை அனுப்பின. அவர்கள் 1774 செப்ரம்பர் 5இல் பிலடெல்பியாவில்கூடினர். இது முதலாம் காங்கிரஸ் கூட்டம் எனப்படும்.

முதலாவது பிலடெல்பியாக் காங்கிரஸ் மன்னருக்கு மனுஒன்றை அனுப்பியதோடு 1774 நவம்பர் முதல் பிரித்தானியாவிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதையும், அதற்கு ஏற்றுமதிசெய்வதையும் பிரித்தானியாவின் பொருட்களைப் பயன்படுத்துவதையும்நிறுத்துவதெனத் தீர்மானித்தது இதன் பின்னர் ஒவ்வொரு குடியேற்றமும் தனது படைகளுக்குப் பயிற்சியளிக்கத் தொடங்கியதோடுபோருக்குத்தம்மைத் தயார் செய்தது.

விடுதலைப் போருக்கு வழிவகுத்த துணைக்காரணங்கள் :-

முன் குறிப்பிட்டவற்றைத் தவிர அமெரிக்கர்களிடம்பிரித்தானிய எதிர்ப்பு உணர்ச்சியை உருவாக்குவதில் வேறு மூன்று காரணிகளும் கணிசமானபங்கைப் பெற்றன. வரிவசூலிப்போர், சுங்க ஆணையாளர்கள் ஆகியோரின்பேராசையும் அவர்கள் பின்பற்றிய வழிகளும் அவற்றில்ஒன்றாகும் வரிவசூலிப்போரும்சுங்க ஆணையாளர்களும் தமது கடமைகளைச் செய்வதுடன் நிறுத்தாமல் குடியேற்றவாசிகளுக்குப் பல தொல்லைகளையும் வசதியீனங்களையும் உண்டுபண்ணினர். இதனால் அவ்வப்போது பல சச்சரவுகள் ஏற்பட்டன.

இரண்டாவதாக அமெரிக்ககுடியேற்றங்களில் தெற்கிலிருந்தவை பயிர்ச்செய்கையிலும், பெருந் தோட்ட விருத்தியிலும்ஈடுபட்டன. அவற்றில் ஈடுபட்டபெருந் தோட்டக்காரர் அடிக்கடி பணமுடைக்குள்ளாயினர். அப்போது அவர்கள்ஸ்கொத்லாந்திய ஆங்கிலேயவர்த்தக நிறுவனங்களிடம்பெருந் தொகையாகக்கடன் வாங்கியிருந்தனர். அவற்றுக்கு அவை அதிகவரியைவிதித்துவந்தன

அத்தியவசியத் தேவைகளிலும், அவ்வப் போது பயிர்களின் விளைச்சல் குறைவுகளிலும் பாதிக்கப்பட்ட தோட்டக்காரர்கள் தமது கடன்காரர்களின் நெருக்குதல்களினால் அதிக தொல்லைக்குள்ளான போது பிரித்தானியர் மேல் அவர்களின் வெறுப்பு அதிகரித்தது.

மூன்றாவதாக, பிலிப் டேவிட்சன் என்பார் குறிப்பிட்டதுபோல் அமெரிக்கவிடுதலைப் போர் திறமையாக மேற்கொள்ளப்பட்ட பிரித்தானிய எதிர்ப்புப் பிரசாரத்தின் வெற்றியையும் காட்டுகிறது. அத்தகைய எதிர்ப்புப் பிரசாரத்தில் தனிப்பட்ட தலைவர்களும் (உம் ஓற்றிஸ் குவின்சி, லீ, தொம்பெயின்) பலபொழுதுபோக்குவிடுதிகளும், தொழிலாளர் சங்கங்களும் வேறு பல இயக்கங்களும் ஈடுபட்டன. மேலும் முத்திரைச்சட்டம், காகிதவரிமுதலியவற்றால் பாதிக்கப்பட்ட செய்தித்தாள்களும் இடைவிடாது பிரித்தானிய அரசுக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொண்டுவந்தன. மத குருமாரும் இத்துறையில் பின்நிற்கவில்லை. இவ்வாறு அனைத்துடம் உருவேற்றப்பட்டமக்கள் விடுதலை பெற விழைந்ததில் வியப்பொன்றுமில்லை.

விடுதலைப் போரின் ஆரம்பம் :-

இத்திவ்வாறாக, 1774 இலையுதிர் காலத்தில் வட அமெரிக்க படைத் தளபதியாகிய தேஜ் மசசூசெற்ஸ் குடியேற்றத்தின் ஆள்பதியாக்கப்பட்டார், அவர் முன் குறிப்பிடப்பட்ட 'சகிக்க முடியாச் சட்டங்கள்' நாளை கையும்அமுல் நடத்துமாறு பணிக்கப்பட்டார், அவர் கடமையேற்ற ஆறும் மாதத்தில் அவரதுசெயல் திறன் இன்மையைப் பிரித்தானியர் கண்டித்துக், குடியேற்றங்களின் தலைவர்களைப் பிடித்துக் காவலில்வைக்குமாறு தூண்டினர். இதைத்தொடர்ந்து தேஜ்கொனகொட் என்னுமிடத்தில் துப்பாக்கி வெடிமருந்து முதலியவற்றைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்த சில குடியேற்றவாசிகளைப் பிடிப்பதற்காக 700 படைவீரரை அனுப்பினர். படைவீரர்களின் வருகை அமெரிக்கர்களால் நாட்டுப்புற மக்களுக்கு அறிவிக்கப்பட்

டதை யடுத்து மசசூசெற்ஸ் படையொன்று லெச்சிங் ரன் என்னுமிடத்தில் பிரித்தானியப் படைகளை எதிர்த் தது. அங்கு ஏற்பட்டஎதிர்ப்பைச் சமாளித்து எதிரே றிச் சென்ற பிரித்தானியப் படைகளைக் கொன்கோ டில் பெரிய படையொன்று எதிர்கொண்டது. அங்கு நிகழ்ந்த போரில் பலர் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் பிரித்தானியப் படைகள் பொஸ்ரனை நோக்கி வரும் வழியில் உள்ளூர்ப் படைகளால் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டன. பிரித்தானியப் படைகள் பொஸ்ரனை அடைந்தபொழுது அங்கும் ஒரு பெரியபடையின் எதிர்ப்புக்குள்ளாக வேண்டியிருந்தது. லெச்சிங்ரன், கொன்கோட் ஆகிய இடங்களில் அமெரிக்கர்கள் காட்டிய எதிர்ப்புக்களைப்பற்றிய செய்திகாட்டுத்தீப்போல எங்கும் பரவியபோது குடியேற்றங்களில் முன் என்றுமில்லா ஒற்றுமை உணர்ச்சி உருவெடுத்தது. அவை தமது வேறுபாடுகளை மறந்து பொது எதிரியை எதிர்ப்பதெனக் கங்கணம் கட்டின. இவ்வாறு முடிவு செய்தகுடியேற்றங்கள் 1774 மே 10 இல் இடம்பெற்ற இரண்டாவது பிலெடெல்பியாக் காங்கிரசிற்குத் தம் பிரதிநிதிகளை அனுப்பின. அக்காங்கிரஸ் பொஸ்ரனில் பிரித்தானியரை எதிர்கொண்ட படைகளுக்குப் பொறுப்பேற்றதோடு 20,000 போர் வீரரைக் கொண்ட ஒரு படையைத்திரட்ட உதவுமாறு குடியேற்றங்களுக்கு ஒரு வேண்டுகோளையும் விடுத்தது. இதன்பின் யூன்15 இல் ஜோர்ஜ் வாசிங்டன் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் படைத்தளபதியாக நியமனம்பெற்றார். அவரின் கீழ்வாட், பட்னம், லீ, முதலியோர் மேஜர்களாகப் பணியாற்றினர்.

அமெரிக்கப் படைகள் திரட்டப்பட்ட பின்னர் போர் தீவிரமடைந்தது. தொடக்கத்தில் அமெரிக்கப் படைகள் பங்கர்கில் என்னுமிடத்திலும் பிறீடர்கில் என்னுமிடத்திலும் தோல்வியடைந்தன ஆயினும்1776 முற்பகுதியில் பிரித்தானியபடைகள் பொஸ்ரனில் பலத்த எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்டபொது, நகரை விட்டுச் செல்லவேண்டியநிலை ஏற்பட்டது. இதற்குப்பின்னர் அமெரிக்கப் படைகள் கனடியப் பகுதியிலும் பலத்த

தாக்குதல்களை மேற்கொண்டபோது குவிபெக்கில்முறிய டிக்கப்பட்டதன் விளைவாக அங்கிருந்து பின்வாங்க நேரிட்டது. இவ்வாறு இருதரப்பினரும் வெற்றியும்தோல்வியும் மாறி மாறிப் பெற்றுவரவருடம் ஒன்று உருண்டோடியது. இதற்கிடையில் 1776 சனவரியில் தோமஸ் பெயின் என்பவர் வெளியிட்ட 'பகுத்தறிவு' என்னும் தலைப்பைக் கொண்ட துண்டுப்பிரசுரம் ஒன்று மூன்றாம் ஜோர்ஜ் மன்னரில் நம்பிக்கைவைக்காது சுதந்திரத்துக்குப் போராடுமாறு அமெரிக்கமக்களைத் தூண்டியது. அதேசமயம் பிரித்தானிய சாம்ராச்சியத்திலிருந்து விலகி ஏனைய நாம்வெளிநாடுகளின் உதவியைப் பெறலாம் என அமெரிக்கர் எண்ணத்தலைப்பட்டனர் இவற்றின் விளைவாக மூன்றாவதுகாங்கிரஸ் கூட்டத்தில் குடியேற்றங்களின் பிரதிநிதிகள் பிரித்தானியாவிலிருந்து பிரிவதற்கு வாக்களித்தனர் இதைத்தொடர்ந்து 17.6ஏப்ரலில் காங்கிரஸ் அமெரிக்கத்துறைகளை எல்லா நாடுகளுக்கும் திறந்துவிட்டது (பிரித்தானியாவைத்தவிர) பின்னர் யூலை 2ம்நாள் அமெரிக்காவில் சுதந்திரப் பிரேரணை ஹென்றிலீ என்பவரால் முன் மொழியப்பட்டு யூலை 4ம் நாள் க்காங்கிரசால் அங்கீகரிக்கப்பட்டது. இதுவே அமெரிக்கசுதந்திரப்பிரகடனமாகும்.

சுதந்திரப் பிரகடனத்தின் பின்னர் பிரித்தானியர்க்கெதிரான போர் மேலும் தீவிரப்படுத்தப்பட்டது பிரித்தானியாவின் நிலைமையும் படிப்படியாக மோசமடைந்தது 3000 மைல் தொலைவிலிருந்து படையுதவியையும், அவற்றுக்குவேண்டியஉணவையும் பிறபொருட்களையும் விரைவில் பெறுதல் அரிதாயிற்று மேலும் பிரித்தானிய தரைப்படையும், நல்ல நிலைமையில் இல்லாமையால் 30,000 ஜேர்மனிய கூலிப்படைகளையும் சேவையில் அமர்த்த வேண்டியதாயிற்று அன்றியும் அமெரிக்கப் போரை நடத்துமாறு பொறுப்பளிக்கப்பட்ட படைத்தலைவர்களும் திறமையுள்ளவர்களாயிருக்கவில்லை மேலும் அமெரிக்கர்கள் தமது நாட்டின் நில அமைப்பையும்சூழலையும் நன்கு அறிந்தவராதலின் அவற்றை அறியாத பிரித்தானியப் படைகளை எளிதில்வெல்ல முடிந்தது.

இவ்வாறான நிலைமையில் பேர்கோயின் என்னும் பிரித்தானிய படைத்தளபதி கனடாவிலிருந்து நியூயோக்கிற்குவரும் முயற்சியின்போது 1777ஒக்ரோபர்17 இல் கட்சன் பள்ளத்தாக்கிலுள்ள 'சறரோகா' என்னுமிடத்தில் அமெரிக்கப்படைகளினால் தோற்கடிக்கப்பட்டான் இதைத்தொடர்ந்துபோரில் ஒரு திருப்பம் ஏற்பட்டப் பிரான்சும் அமெரிக்கர்கள் சார்பாகப்போரில் குதித்தது. ஏழாண்டுப்போரில்பெற்றதோல்வியை ஈடு செய்யுமுகமாகவும் குடியேற்றங்களுடன் வர்த்தகத்தை வளர்க்கலாம் என்னும் நம்பிக்கையினாலும் பிரான்ஸ் போரில் இறங்கியது. பிரான்சைத்தொடர்ந்து பிரித்தானியாவின் இன்னொருஎதிரியான ஸ்பெயினும் அமெரிக்கர்கள் பக்கமாகப் போரிடத்துணிந்தது.பிரான்சும் ஸ்பெயினும் போரில்பங்குபற்றியதையடுத்துப் பிரித்தானியாவின் கடலாதிக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. அன்றியும் பிரித்தானியர்கடத்தற் பொருட்களுக்காகக்கப்பல் களைச்சோதனைசெய்ய முற்பட்டமையால் ஐரோப்பியநாடுகள் இரசிய அரசியாகிய இரண்டாம் கதரீனின் கீழ் 'படையுடை நடுநிலைமைக்குழு' என்னும் ஒரு எதிர்ப்பு அணியை உருவாக்கின.

இதற்குப் பின்னர் 1781இல் வேர்ஜினியாவில் யோக்ரவுண் குடாநாட்டில் கோண்வாலிஸ் தலைமையிலானபிரித்தானியப் படைகள் பிரெஞ்சு, அமெரிக்கப் படைகளினால் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தரைப்போரின் மூச்சுக்குறைந்தது எனலாம் இதன் மேலும் கடற்போர்நடந்ததாயினும் அது பிரித்தானியருக்குக் குறிப்பிடத்தக்க நன்மை எதையும் விளைவிக்கவில்லை. மேலும் அமெரிக்கப்போரினால் பிரித்தானியாவுக்குப் பெருந்தொகையான பொருட்செலவும் ஏற்பட்டிருந்தது. யோக்ரவுண் போரின் பின் பலாத்காரச் செயல்களை நீடிப்பதில் பிரித்தானியர் ஆர்வம் காட்டவில்லை. பின்னர் 1782 மார்ச்சில் பாராளுமன்றம் அமெரிக்க குடியேற்றங்களைப் பலாத்காரமாகப்பணிபவைக்கும் முயற்சிகளைக் கைவிடுவது என்ற ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. அதைத்தொடர்ந்து

நோத்தமது பிரதமர் பதவியிலிருந்து விலகினர். அதன் மேல் மூன்றாம் ஜோஜ்மன்னர் 1783 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் சமாதானம் செய்து கொண்டதோடு அவற்றின் சுதந்திர நிலையையும் ஏற்றுக்கொண்டார்.

அமெரிக்க விடுதலைப் போரின் விளைவுகள் :- அமெரிக்க விடுதலைப் போரின் விளைவாக 'அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள்' என்னும் பெயருடன் புதிய ஒரு அரசு உலகில் உதயமாகியது. வெல்ஸ் என்பவரின் கருத்துப்படி ஐக்கிய அமெரிக்கா சுதந்திரம்பெற்றது அதை எப்படிப் பெற்றது என்பதைவிட மனிதவரலாற்றில் அதிக முக்கியத்துவமுடையதாகும். சாம்ராச்சியம், சமயம், பிரபுத்துவம் முதலியவற்றின் பிடியிலிருந்து முற்றாக விடுபட்டு உலகில்முதன்முதலாக ஒரு சுதந்திர அரசு உதயமாகியது. அது முட்டையிலிருந்து ஒரு குஞ்சு வெளிப்பட்டதைப் போன்றது. என வெல்ஸ் வர்ணிக்கிறார்

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் விடுதலைப் போர் பிரித்தானியாவின் படைவலியைச் சீர்குலைத்ததோடு பொருளாதார நட்டத்தையும். விளைவித்தது. ஆயினும் அத்திலாந்திக்குக் குறுக்கே விரிந்து பரந்து கிடந்த ஒரு பெரு நிலப்பரப்பைக் கைநெகிழ விட்டதனால் அதுஎதிர்காலத்தில் ஆசிய குடியேற்ற நாட்டுவிடயங்களில்அதிக சுவனமெடுக்கக் கூடியதாயிருந்தது. இவற்றைவிடமுக்கியமான விளைவுகள் ஐரோப்பாவின் அரசியல் அரங்கில் ஏற்பட்டன எனலாம். புதிய உலக மக்கள் அநீதியான ஒரு முடியாட்சிக்கெதிராக வெற்றிகரமாகப்போராடி அதை ஒழித்துக் குடியரசு ஒன்றை நிறுவியதும் அதன் தலைவர் மக்களின் விருப்பத்தின் பேரில் தெரிவு செய்யப்பட்டதும் சனநாயக தத்துவங்கள் மலர்ந்ததுமாகிய இவை எல்லாம் பழைய உலக மக்களின் மனதில் புதிய உற்சாகத்தையும் புத்துணர்ச்சியையும்ஏற்படுத்தின. அதன் விளைவாக அவர்களின் மனதில் விடுதலைவேட்கையென்னும்நெருப்புகொழுவப் பட்டது. அது விரைவில் பெருநெருப்பாகவளர்ந்து பிரான்சிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் புரட்சிகளாக மலர்ந்தது.

அத்தியாயம் 15

பிரெஞ்சுப்புரட்சி

அமெரிக்க விடுதலைப்போர் முடிவுற்று ஆறு ஆண்டுகள் கழிவதற்குள் பிரான்சின் பெரும்புரட்சி தொடங்கியது. பிரெஞ்சுப்புரட்சி அரசியற் புரட்சியாக மட்டும் அமையாது சமுதாயப்புரட்சியாகவும் அமைந்தது. அது பழைய சமுதாயக்கட்டுக்கோப்பைத்தகர்த்துச் சமத்துவத்தை வலியுறுத்தியது. மக்களுக்காக மன்னனேயன்றி மன்னனுக்காக மக்களல்ல என்பதை இம்மாநிலம் அறியச் செய்தது. அத்தகைய மகத்தான புரட்சியின் வித்துக்கள் 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தேவிதைக்கப்பட்டுவந்தபோதிலும் அவை முளைவிடுதற்கான சந்தர்ப்பம்-அந்நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே ஏற்பட்டது. அச்சந்தர்ப்பத்தையும் அது உண்டாகிய விதத்தையும் அறியமுன்னர் புரட்சிக்கு முந்திய பிரான்சின் நிலைமைகளைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வோம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சின் நிலைமை அதன் அயல்நாடுகளிற் காணப்பட்டதைவிட மோசமாயிருக்கவில்லை. ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கு அடுத்தபடியாகப் பிரான்சே செல்வச்செழிப்புள்ள நாடாயிருந்தது. அதன் வெளிநாட்டுவர்த்தகம் 1714-80 காலத்தில் 6 பங்கு அதிகரித்திருந்தது. பிரான்சின் ஐரோப்பிய ஏற்றுமதி இங்கிலாந்தின் ஏற்றுமதியைவிட அதிகமாயிருந்தது. இக்காலத்தில் கைத்தொழிற்புரட்சியின் பயனைப் பிரான்சியர் அனுபவிக்கத் தொடங்கியிருந்தனர். போக்குவரத்துவசதிகள் நல்லமுறையில் அமைக்கப்பட்டிருந்தன. பிரான்சியக்குடியானவனின் நிலைமை அயல்நாடுகளிலிருந்தோரைவிடச் சற்றுச் சிறப்பாகவேகாணப்பட்டதெனலாம்-ஆயினும் அங்கு புரட்சி ஒன்று ஏன் உருவாகியது? அதற்குப்பதில் இதுதான். பிரெஞ்சுப் புரட்சி உளுத்துப்போன மத்தியகாலச் சமூகத்தளைகளுக்கெதிராக முன்னேற்ற மனப்பான்மை கொண்ட வகுப்பினர் தெரிவித்த எதிர்ப்பின் வெளிப்பாடே.

ஆனல் பிரெஞ்சுப் புரட்சி சமூகக்காரணங்களினுல் மட்டுமன்றி அரசியல், பொருளாதாரக் காரணங்களினுலும் தூண்டப்பட்டு என்பதை அறியவேண்டும்.

பிரெஞ்சுப்புரட்சியின் காரணங்கள்

பிரெஞ்சுப் புரட்சி பின் வரும் காரணங்களின் கூட்டுத்தாக்கத்தின்விளைவாக ஏற்பட்டது. அவை (1) அநீதியும் அக்கிரமமுமான சமூக அமைப்பு (2) பொருளாதார, சமூக அமைதியின்மை (3) புதிய அரசியல் தத்துவக் கருத்துக்களின் தாக்கம் (4) ஆட்சியின் வீழ்ச்சி என்பனவாகும்.

அக்கிரமமான சமூக அமைப்பு :-பிரெஞ்சுச் சமுதாயம் பல நூற்றாண்டு காலமாகப் பிளவுபட்டிருந்தது. அது, குருவாயம் பிரபுக்கள், குடியானவர் என மூன்று வகுப்புக்களையுடையதாயிருந்தது. அவை முறையே 'முதலாம் எஸ்ரேற்' 'இரண்டாம் எஸ்ரேற்' 'மூன்றும் எஸ்ரேற் என அழைக்கப்பட்டன. குருவாயத்தைச்சேர்ந்தவர்களின் தொகைமுழுக் குடித்தொகையின் 3/1 % மாகவும் (ஏறத்தாழ 1 இலட்சம்) பிரபுக்கள் வகுப்பினரின் தொகைஏறத்தாழ 4 இலட்சமாகவும் காணப்பட்டது. மிகுதி 20 இலட்சப்பேர் மூன்றும் வகுப்பினராயிருந்தனர். இவ்வாறு பிளவுபட்டபிரெஞ்சுச் சமுதாயத்திற் காணப்பட்ட பிறிதொரு அமிசம் அதன் ஒப்பின்மையாகும். குருவாயமும் பிரபுக்களும் சலாக்கியம் பெற்ற வகுப்பினர், அவர்கள் செல்வத்திலும் வசதிகளிலும் மிதந்தனர் அதேசமயம்சாதாரணகுடியானவர்கள் சமூகத்தலைகளின் பிடியிலிருந்துதம்மை விடுவிக்க முடியாதவர்களாய் அடிமைகள்போல்வறுமையில் அமிழ்ந்தனர்.

பிரபுக்களும் குருவாயத்தினரும் 15ம் 16ம் நூற்றாண்டுகளில்நாட்டுக்கு நற்சேவை புரிந்தனர். ஆயினும் 'றிசிலியு' என்பவரின் நடவக்கைகளினுல் அவர்கள் தமது சமூகக்கடமைகளைக் கைவிட்டதனுல் பிற்காலத்தில்சமூகத்துக்குஒரு சுமையாகவே வாழ்ந்தனர். பிரபுக்கள் பிரான்சின் பயிர்நிலத்தில் 5/1 க்கு உரிமையாள

ராயிருந்தனர், அவர்கள் தமது நிலத்தைப் பணியாட்கள் பொறுப்பில் விட்டு விட்டு அதன்மூலம் வரும் வருவாயைக்கொண்டு பட்டினங்களில்ஆடம்பரவாழ்விலும் சுகபோகங்களிலும் ஈடுபடுபவராயினர்.பிரபுக்கள் வரிச் சலுகையுடையவர்களாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் அகந்தை மிக்கவர்களாகவும் ஏழ்மையில் வாடும் சாதரரண குடிமக்களை இகழ்பவர்களாயுமிருந்தனர்.

குருவாயத்தினரும் பொதுமக்களின் மதிப்பை இழந்திருந்தனர். அவர்களிற் பலர் தமது மத அனுட்டானங்களையும் நம்பிக்கைகளையும் கைவிட்டு உலகவிடயங்களிலும் உல்லாச வாழ்விலும் ஈடுபடுவாராயினர். அதே சமயம் மூன்றும் வகுப்பினரான சாதாரண மக்களின் நிலையோ பரிதாபமானதாயிருந்தது அவர்கள் தாங்க முடியா வரிச்சுமையின் கீழ் வாடினர். ஒருபுறம் அரசனுக்கும் இன்னொருபுறம் பிரபுக்களுக்கும் மறுபுறம் குருவாயத்துக்கும் அவர்கள் வரிசெலுத்தவேண்டியிருந்தது அவர்கள் அரசாங்கத்துக்கு ரெயில் என்னும் நேர்வரியையும் உப்புவரி, தோல்வரி, மதுவரி, சுங்கவரி முதலிய மறைமுக வரிகளையும் செலுத்தினர். பிரபுக்களுக்கு நிலவரிநிலஉரிமை மாற்றவரி, வைன் தயாரிப்பதற்கானவரி முதலியவற்றைச் செலுத்தினர். அதேசமயம் குருவாயத்துக்கு ரைத் என்னும் வரியைச் செலுத்தினர். ரேர்கோ என்பவரின் கருத்துப்படி பிரான்சின் சில பின்தங்கிய பகுதிகளில் வரிப்பணம் போக ஒரு குடும்பத்துக்கு 125-150 லீவர்மட்டும் (ஏறத்தாழ75ரூபா) ஓராண்டுக்கு மிஞ்சியது,

இவ்வரிகள் ஒருபுறமிருக்க குடியானவர்கள் நாட்டின் வேட்டைவிலங்குச் சட்டத்தினாலும் பாதிக்கப் பட்டனர். அச்சட்டங்களின் கீழ் பிரபுக்களின் வயல்களுக்கூடாகச் சவாரி செய்தாலும் தாம்வளர்க்கும் புறுக்களை வயல்களுக்குட் செல்ல விட்டாலும் அவர்களை யாரும் தட்டிக்கேட்க முடியாதிருந்தது. இது ஏழைக்குடியான

வர்களின் வயிற்றெரிச்சலைக்கூட்டியது. மேலும் குடியானவர்கள் உடற்சேவைசெய்ய வேண்டுமென வும் விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலைமைகளின் கீழ் குடியானவர்கள் இன்னற்படுவது போதாதென்பது போல் பிரபுக்கள் தமது வருவாய் குன்றிய காலத்தில் தம்மை அதுவரை செயற்படுத்தாதிருந்த பட்டயங்களைப் புதுப்பிக்க மேற்கொண்ட முயற்சிகள் எரிகிறநெருப்பில் எண்ணெய்வார்த்தாற்போல் குடியானவர்களின் கோபத்தையும் வெறுப்பையும் கூட்டி விட்டன.

பொருளாதார, சமூக அமைதியின்மை:

பிரெஞ்சுப் புரட்சிக்கு முற்பட்ட 15-20 ஆண்டுக் காலத்தில் நாட்டில் நிலத்தட்டுப்பாடு, வேலையின்மை, வேலைநிறுத்தங்கள், உணவுத்தட்டுப்பாடு முதலியவற்றின விளைவாகச் சமூக அமைதி குறைந்து சட்டவிரோதச் செயல்களும், கலகங்களும், ஆர்ப்பாட்டங்களும் அதிகரித்திருந்தன.

பிரான்சின் பயிர்ச்செய்கை நிலப்பரப்பில் 1/6 மட்டும் குடியானவர்களுக்கு உரிமையாயிருந்தது. நாட்டில் குடிப்பெருக்கத்தின் விளைவாக நாளடைவில் நிலத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. உதாரணமாக 1726இல் 180 இலட்சமாக இருந்த குடித்தொகை 1780இல் 250 இலட்சமாக அதிகரித்திருந்தது. இதனால் பல குடியானவர்கள் வேறுதொழிலையும் நாடவேண்டியிருந்தது ஆயின் கிராமிய கைத்தொழில்கள் போதிய அளவு விருத்தியடையாதபடியால் தொழிலற்ற குடியானவர்கள் வேலை பெறுவது கடினமாயிற்று இரண்டாவதாக 1778ம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் கைத்தொழில், பயிர்த்தொழில், உற்பத்திப்பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்ததினால் சாதாரண (சுத்த கைக்) கமக்காரர்கள் நட்டமடையநேர்ந்தது. அதைத் தொடர்ந்து 1787-89 காலத்தில் தொடர்ச்சியாகக் கோதுமை அறுவடை மிகக்குறைந்தபடியால் தானியத்தின் விலை சில இடங்களில் இருமடங்காக அதிகரித்

தது. அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற வர்த்தகக் கொள்கையும் நிலைமையை மேலும் மோசமடையச் செய்தது இந்நிலையில் 1788 நவம்பரிலிருந்து பாணின் விலை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது. இந்நிலைமை பஸ்தில் கோட்டையின் வீழ்ச்சிவரை நீடித்தது கவனிக்கத்தக்கது. இவ்வாறு பாணின் விலை அதிகரித்த காலங்களிலும் அதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட காலங்களிலும் கலவரங்கள் ஏற்பட்டன.

மூன்றாவதாக 1786க்குப் பின்னர் பிரான்சின் கைத்தொழில் நெருக்கடியான நிலையிலிருந்தது. கட்டற்றவர்த்தகக் கொள்கையின் கீழ் ஆங்கிலேயருடன் வர்த்தகப்போட்டி அதிகரித்தமையால் பிரான்சின் கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டன. இதன் விளைவாகப் பல்லாயிரக் கணக்கானோர் வேலையின்றி இருந்தனர். 1788 செப்ரம்பர் முதல் 1789 ஜனவரி வரையுள்ள காலத்தில் பிரான்சின் பிரதான கைத்தொழில் நகரங்களில் மொத்தம் 2 இலட்சம்பேர் வேலையின்றியிருந்தனர். இவர்களில் 80,000 பேர் பாரிஸ் நகரில் மட்டும் காணப்பட்டனர். மேலும் 1725-85 காலத்தில் விலைவாசிகள் 65 வீதம் அதிகரித்திருந்த பொழுது நடுத்தரவகுப்பினரின் ஊதியம் 22வீதம்மட்டும் அதிகரித்திருந்தது அவர்களிடை அதிருப்தியை உண்டாக்கியது இது அன்றியும் பாரிஸ் நகரம் தனது எல்லைகளில் நிறுவப்பட்ட சுங்கவரி நிலையங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது குழப்பங்கள் ஏற்பட்டன. அத்துடன் 1783-89 காலத்தில் பாரிஸ் மக்களிடம் குருவாயத்துக் கெதிரான ஒரு உணர்ச்சி உருவாகியிருந்ததாகவும் ஹார்டி என்பவர் குறிப்பிடுகிறார். மேற்குறிப்பிட்டவற்றின் விளைவாகப் பிரான்சிய சமுதாயத்தில்-சிறப்பாக மூன்றும் வகுப்பினரிடை நிலவிய சமூகஅமைதியின்மை அவர்களின்போராட்டமனப்பான்மையை வளர்த்து அவர்களைமெல்லப் புரட்சிக்குஆயத்தம் செய்தது எனலாம்.

புதிய அரசியல் தத்துவக் கருத்துக்களின் தாக்கம்

பிரான்சிய சமுதாய அமைப்பிற் காணப்பட்டதீமை களைச் சுட்டிக்காட்டிப் பதினெட்டாம் நூற்றாண்டில் பல தத்துவஞானிகளும் அங்கதவாதிகளும் வெளியிட்ட கருத்துகள் மக்களின் சிந்தனையைக் கிளறி அவர்களது மனதைப் புரட்சிக்கு ஆயத்தம் செய்தன. மொன்ரெஸ்க், ரூசோ, வால்ரேயர் முதலியோர் 'எழுத்துப் புரட்சி'யில் முன்னணியில் நின்றனர் மொன்ரெஸ்க் 'எஸ்பிறிற்டிலோ' என்னும் தமது நூலில் வல்லாட்சியின் தீமைகளை விளக்கிப் பிரித்தானிய அரசியற் றிட்டத்தை சுதந்திரத்தின் சின்னமாக எடுத்துக்காட்டினர் 'ரூசோ சமூக ஒப்பந்தம்' என்னும் நூலில் புரட்சியாளருக்கு ஒரு மந்திரத்தைப் போதித்தார் 'மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான் ஆனால் எங்கும் சங்கிலியாற் கட்டப்பட்டிருக்கிறான்' என்பது அவரின் மணிமொழி. மேலும் பிரசைகளின் 'பொது விருப்பத்'திற்குக் கட்டுப்பட்ட ஒரு அரசாங்கத்துக்கு மட்டுமே மக்கள் பணிந்து நடக்க வேண்டும் எனவும் அவர் போதித்தார். வால்ரெயர் தமது அங்கதக் கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள் முதலியவற்றின் மூலம் பழமை பேணும் மதபீடத்தின் பிற்போக்கு மனப்பான்மையையும், மத நம்பிக்கையையும்கண்டித்தார். எனசைக்ளோபீடிஸ்ற் எனப்பட்ட எழுத்தாளர் பிரிவினர் தைதறற் என்பவரின் தலைமையில் வரிமுறையின் சமத்துவமின்மை, அநீதி, நீதிபாலன ஊழல்கள், போர்களில் ஏற்படும் வீண்செலவுமுதலியன வற்றைக்கண்டித்தனர். அதேசமயம் பொருளியல் எழுத்தாளர்கள் பொருட்களின் உற்பத்தி, விநியோகம், பற்றிய விடயங்களையிட்டு விஞ்ஞக்களை எழுப்பினர்.

இவற்றின் விளைவாக, மக்கள்--சிறப்பாக மத்திய வகுப்பினர் அரசியல், சமூகப் பிரச்சனைகளைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினர் கைத்தொழிற் கட்டுப்பாடுகள், பயிர்த் தொழிற் பிரச்சனைகள், ரெபுக்களின் வரி, தானிய வர்த்தகம் முதலிய இன்னே

ரன்ன விடயங்கள் அவர்களது எண்ணங்களை நிறைத் திருத்தன.

இவ்வாறு உள்நாட்டு எழுத்தாளர்கள், தத்துவ வாதிகள் முதலியோர் நடைமுறையிலிருந்த வழக்கங் கள் சம்பிரதாயங்கள், நிறுவனங்கள் முதலியவற்றைக் கண்டித்தபோதிலும் அவற்றை எவ்வாறு மாற்றலா மென்பதைக் குறிப்பிடவில்லை. சுருங்கக்கூறின் அவர்கள் ஒரு இலக்கைக் காட்டினரேயன்றி அதை அடையும்வழி யைக் காட்டவில்லை பலாத்காரப்புரட்சி அவர்களின் சிந்தனையில் இடம்பெறவில்லை. அத்தகைய ஒரு நிலையில் அமெரிக்க விடுதலைப்போர் போராட்டத்துக்கு ஓர்எடு த்துக்காட்டாகவும் புரட்சிக்கு ஒரு வழிகாட்டியாகவும் அமைந்து பிரான்சியப்புரட்சியின் பிறப்புக்கு உதவியது. அமெரிக்க விடுதலைப்போரில் பங்குபற்றிய லாபாயற் முதலிய பலபடைவீரர்கள் அமெரிக்க சுதந்திரப் பிரகட னம் தமது காதுகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டுஇ ருக்க நாடு திரும்பியிருந்தனர். அவர்கள் தம்நாட்டில் அமெரிக்காவில் காணப்பட்டதைவிட அதிக கொடுங் கோலாட்சி நிலவியதைக் கண்டபோது தம்மையறியா மலேயே புரட்சியின் பக்கம் திரும்பினர்.

இவ்வாறு மக்களின் மனம் புரட்சியின்பக்கம் திரும் பியபொழுதிலும் வெறும் கருத்துக்களின் அடிப்படை யிலோ உதாரணத்தின் தூண்டுதலிலுலோ அவர்கள் புரட்சியை விளைவிக்கவில்லை. ஆனல் பிரான்சின் ஆட்சிக் கட்டுக்கோப்புக் குலைந்தபோது அடங்கிக்கிடந்த புரட் சிச் சக்திகள் பொங்கியெழுவது தவிக்கமுடியாததா யிற்று

ஆட்சியின் வீழ்ச்சி-:பதினேழாம் நூற்றுண்டில் 14 ஆம் லூயி மன்னனல் மேற்கொள்ளப்பட்ட பெருப் போர்க ளின் விளைவாக நாட்டின் நிதிநிலைமை மிகமோசமா யிருந்தது அவனுக்குப்பின்வந்த 15 ம்லூயி திறமையற் றவனுயிருந்தான் அவன் 1774 இல் இறக்கப் 16ஆம் லூயி முடி சூடினன். பதினறும்லூயி விவேகமற்றவனு

கவும், மன உறுதியில்லாதவளாகவும் இருந்தான். அவன் அரசு என்னும் கப்பலைத் தன் போக்கில் அலையவிட்டுத் தான் வாழாவிருந்தான். அவன் நிலை அவ்வாறிருக்க அவனது ஆஸ்திரிய மனைவிமேறி அந்தோனேற் பதவியாசை பிடித்தவளாகவும், பொறுப்பற்றவளாகவும் இருந்ததோடு, தான் விரும்பிய சிலருக்குச் சலுகைகளையும், சலாக்கியங்களையும் பெற்றுக் கொடுக்கும்பணியில் காலத்தைக் கழிப்பாளாயினள். அரசன் அவளின் கைப் பொம்மைபோல இருந்தான். அந்நிலையில் பிரான்சின் நிதி நிலைமை படிப்படியாகச் சீர் கெட்டு வந்தது. ஏழாண்டுப் போர், அமெரிக்க சுதந்திரப்போர் ஆகியவற்றில் ஈடு பட்டதன் விளைவாகப் பிரான்சின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதனால் வரவு செலவுத் திட்டத்தில் ஆண்டு தோறும் பற்றுக்குறைச்சல் ஏற்பட்டது. நாட்டின் வரி முறை நடுத்தர வகுப்பினரையும்குடியானவர்களையும் கசக்கிப் பிழிந்தமையினால் அவர்கள் மேல் மேற்கொண்டு வரிவிதிக்க முடியாதிருந்தது. அதேசமயம் குருவாயமும் பிரபுக்களும்வரிச்சலுகை பெற்றவர்களாய் வாழ்ந்தனர்.

இத்தகைய நிலையில் அரசுக் கப்பலைச் செலுத்துதல் மிகக் கடினம் என்பதை எளிதில்விளங்கிக்கொள்ளலாம் கலோன் என்னும் ஒரு பிரான்சிய நிதியமைச்சர் தம் நாட்டின் நிலையைக் குறிப்பிடும்போது பிரான்ஸ் பல தனி மாகாணங்களையும், கலப்பு நிர்வாகத்தையும் கொண்டது. அங்குசில மாவட்டங்கள் அதிகமாகவும், வேறு சில மிகக் குறைவாகவும்,வரிப் பளுவைச் சுமக்கின்றன அங்கு செல்வந்தர்கள் மிக குறைவாகவும், வரிகொடுக்கின்றனர். அந்நாட்டில் தொடர்ச்சியாக ஆட்சியைச் செலுத்த முடியாது உண்மையில் அது தான் மிகச்சீர்கெட்ட;ஊழல்மலிந்த இராச்சியம் இன்றைய நிலையில் அதனை ஆளமுடியாது , எனத்தெரிவித்தது கவனிக்கத்தக்கது.

பிரான்சின் அன்றைய நிலைமைகளில் திறமையும் திடசித்தமும் படைத்த மன்னன் புரட்சியைத்தவிர்த்திருக்கமுடியும் ஆயின் பதினைந்தாம் லூயி அப்படிப்

பட்டவனன்று. எனினும் நாட்டின் நிதிநிலைமையைச் சீர்படுத்த அவன் சில நடவடிக்கைகளை மேற்கொண்ட போது அரசியினதும் அவளது ஆதரவாளர்களதும் எதிர்ப்பினால் அவை தோல்வியடைந்தன.

பதினைந்தாம் லூயி ரேர்கோ என்னும் திறமை மிக்கவொருவனைத்தனது முதல் நிதியமைச்சராக நியமித் தான். அவன் நிர்வாகத்தில் ரேர்கோ பல முன்னேற்ற மான கருத்துக்களையுடையவனாயிருந்தான். அவன் நிர் வாகத்தில் பல சீர்திருத்தங்களை மேற்கொள்ள முனைந் தான். உள்நாட்டுச் சுங்கவரிகளையும் கடன்களையும் நீக்கவும், பாரிஸ் நகருக்கு வெளியில் கட்டில்லாத தானியவர்த்தகத்தை அநுமதிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டான். ஆனால் அவன் தமது செயல்களால் அரசவை, பிரபுக்கள், பாரிஸ் பாராளுமன்றம் ஆகிய வற்றின் வெறுப்பைச் சம்பாதித்தமையால் விரைவில் பதவியை இழந்தான். அவனுக்குப் பின்னர் நெக்கர் என்பவன் 60 கோடி லீவர் கடன் பெற்று நிதிநெருக் கடியைத் தீர்க்க முயன்றான். ஆனால் அவன் முன்னர் ரேர்கோ மேற்கொண்ட சில சீர்திருத்தங்களையும் செயல்படுத்தியபோது குருவாயத்தினதும் பாரிஸ் பா ராளுமன்றத்தினதும் எதிர்ப்புக்குள்ளானான். இதன் விளைவாகநெக்கரும் பதவியைத் துறந்தான். நெக்கருக் குப் பின்னர் பிரான்சின்பொருளாதாரத்தைச் சீர்படுத் துவதற்குக் கரோன் என்பவன்புரட்சிகரமானபல புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டான் அவன் செல்வந் தர்கள் மீதும் சலாக்கியம் பெற்ற வகுப்பினர் மீதும் முத்திரைவரி, நிலவரி முதலியவற்றை விதிக்கவும் உள் நாட்டுச் சுங்கக் கட்டுப்பாடுகளை ஒழிக்கவும், புதிய கட னைப் பெறவும் நடவடிக்கைள் மேற்கொண்டான். அவனது செயல்கள் பழைய ஆட்சி முறைக்கு ஒரு சவா லாக அமைந்தன. அவன் தனது திட்டங்களைச் செய்ய படுத்த உதவுமாறு 'மேன்மக்கள் கழகம்' ஒன்றைக் கூட்டுமாறும் மன்னனுக்கு வேண்டுகோள் விடுத்தான். அரசன்முதலில் மறுத்தபோதிலும் இறுதியில்அவனது வேண்டுகோளுக்கு இசைந்தான். இதன் மேல் 1787

பெப்ருவரி 27 இல் அரசனல் நியமனம் செய்யப்பெற்ற வர்களைக்கொண்ட மேன்மக்கள்கழகம் கூடிற்று. அதில் 144 பேர் இருந்தனர். அக்கழகம் தனதுசீர்திருத்தங்களை ஆதரிக்கும் எனக் கலோன் நம்பினன் ஆனல் அது அவ னது திட்டத்தை முற்றும் நிராகரித்தது. அதைத்தொ டர்ந்து கலோனும் ஏப்ரல் 8ல் பதவியைத் துறந்தான்

1787 ஆம் ஆண்டின் மேன்மக்கள் கழகப்புரட்சி தான் பிரெஞ்சுப்புரட்சியின் முதலாவது அறிகுறி என அண்மைக்கால வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர் மேண்மக்கள் கழகப்புரட்சியே நடுத்தர வகுப்பினர் குடி யானவர்-பட்டினப்பகுதித் தொழிலாளர் ஆகியோரின் புரட்சிகளுக்கு முன்னேடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தது. இந்நான்கு வகையானபுரட்சிகளும் ஒருங்கு இணைந்ததே பிரெஞ்சுப் புரட்சியெனப் பேராசிரியர் பொல்லாட்குறிப்பிட்டுள்ளார்; கலோன்பதவியிலிருந்து விலகியபின்னர் பிறைன்என்பவன் நிதியமைச்சரானன் அவனது சில நடவடிக்கைகளுக்கு மேன்மக்கள் கழகம் ஆதரவழித்தபோதிலும் பலவற்றுக்கு அது எதிர்ப்புத் தெரிவித்ததோடு பாரிஸ்பாராளுமன்றத்தின் தீர்ப்புக்கு அவற்றை விடுமாறு தகவுரை கூறியது .இதன்படி சீர் திருத்தப்பிரச்சனை பாரிஸ் பாராளுமன்றத்தின் பரி சீல னைக்கு விடப்பட்டபோது அது முத்திரைவரி, நிலவரிக ளுக்கு மறுப்புத் தெரிவித்துவிட்டு நாட்டின் நிதிநெருக் கடியைச்சமாளிப்பதற்குப் ஸ்ரேற் ஜெனரல் என்னும் நாட்டவையைக்கூட்டுமாறு கோரிக்கை விடுத்தது பாரிஸ் பாராளுமன்றத்தின் செயல் அரசனின் அதிகா ரத்துக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தது. உடன் அர சன் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டான் இதைத் தொடர்ந்து ஆட்சிக்கு எதிராக அதிருப்தி அதிகரித்தது போர்டோ, டூஜன் றீன்ஸ் முதலிய இடங்களில் கலகங் கள் ஏற்பட்டன. இவ்வாறு பொது எதிர்ப்பு எழுந்த போது மன்னன் மீண்டும் பாராளுமன்றத்தைக் கூட்டு வித்தான். அத்துடன் நெக்கர் மீண்டும் நிதி மந்திரி

மந்திரியாக்கப்பட்டான். அவனது ஆலோசனைக்கிணங்க, ஸ்ரேற்ஸ் ஜெனறலை 1789 மே மாதத்தில் கூட்டுவதற்கு மன்னன் முடிவுசெய்தான்.

புரட்சியின் ஆரம்பம் :- 1789 மேயில் ஸ்ரேற்ஸ்ஜெனரல் கூடியது. கூட்டத் தொடக்கத்தில் உறுப்பினர்கள் வகுப்பு வகுப்பாகத் தனித்தனி கூடி வாக்களிப்பதா அல்லது ஒரே சபையாகக்கூடுவதா என்றபிரச்சினைவிவாதிக்கப்பட்டது. மூன்றும் வகுப்பினர் எல்லோரும்ஒன்றாகக் கூடுவதையே விரும்பினர். ஆனால், மன்னனோ பிரபுக்களோ அதை விரும்பவில்லை. இதனால் இப்பிரச்சினை ஆறுவார காலம் தீர்க்கப்படாமலிருந்தது இறுதியில் மூன்றும் வகுப்பினர் 'தேசிய சபை' எனத் தமக்குப்பெயர் சூட்டிக்கொண்டு தாமேநாட்டைப் பிரதிநிதித்துவம்வகிப்பதாகவும் தமது சம்மதமின்றி வரிவிதிக்கக் கூடாதெனவும் தெரிவித்தனர்.

மூன்றும் வகுப்பினரின் செயல்கள் அரசாங்கத்திற்கு ஒரு சவாலாக அமைந்தது. அதன் பின்னர் மறுமுறைதேசியசபை கூடவிருந்ததினத்தில் கூட்டமண்டபத்தின் கதவுகள் பூட்டப்பட்டிருந்தமையால் (தவறுதலாக அல்லது மன்னனின் ஆணைப்படி) சபையினர் அருகிலிருந்தஒரு ரென்னிஸ் மைதானத்துக்குச் சென்று அங்கு கூடி நாட்டுக்குஒரு அரசியல் திட்டத்தை வகுத்ததன்றித் தாம் பிரிவதில்லையெனச் சத்தியம்செய்துகொண்டனர். இது 'ரென்னிஸ் மைதானச் சத்தியம்' எனப்படும். இதைத்தொடர்ந்து மன்னன் பயமுறுத்தல் மூலம் மூன்றும் வகுப்பினரைப் பணிய வைக்க முயற்சித்தான். ஆயினும்மூன்றும் வகுப்பினரின் தலைவரான மிறபோவின் உணர்ச்சியூட்டும் பேச்சுக்களின் விளைவாக அது பயனளிக்கவில்லை.

இவ்வாறாக பாரிஸ் நகரில் புரட்சியை வழி நடத்தும் குழுவொன்று உதயமாயிற்று. அதுவே பாமரமக்கள் குழுவாகும். தேசியசபையின் கூட்டம் மன்னனின் பயமுறுத்தல்கள் முதலியவற்றை அது அறிந்திருந்தது. அன்றியும் யூன் 26ம் திகதி முதல் வேர்சைல்பகுதியில் மன்னன்படைகளைக் குவித்திருந்தும் யூலை 11இல் நெக்கர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதும் பாரிஸ்பாமரமக்களின் ஆத்திரத்தைக் கிளறியது. அவ்வாறு மக்கள் ஆத்திரமூட்டப்பட்டிருந்த போது டெஸ்மோலின் என்னும்ஒரு பத்திரிகை எழுத்தாளன் அவர்களைப் படைதாங்குமாறு ஆவேசத்துடன் தூண்டினன். உணர்ச்சிவசப்பட்டமக்கள் உடன் பலகுழுக்களாகப் பிரிந்தனர். யூலை 12—13 ஆகிய இரு நாட்களிலும்படைசேகரிக்கும் வேலை மும்முரமாக நடந்தது. யூலை 14ம் நாள்7000—8000 பாமர மக்களைக் கொண்ட ஒரு கூட்டம் 'ஹோட்டல் டி இன்வலிட்' என்னும்ஒரு விடுதியில் 30,000 துப்பாக்கிகளைக் கைப்பற்றியது. அப்பொழுதுகூட்டத்தினர் சிலர் 'புறப்படுங்கள் பஸ்தீலுக்கு' எனக் கூச்சலிட்டபோது வெறிபிடித்த மக்கள் கூட்டம் பஸ்தீலைநோக்கி விரைந்தது. பஸ்தீல் கோட்டை மிகப் பழமையானது அதில் அரசன் தனது விரோதிகளைப் பிடித்துச் சிறைவைப்பது வழக்கம். எனவே அநீதியின் சின்னமான அக்கோட்டையை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆவேசத்துடன் தாக்கினர் பஸ்தீல் காவற்படைகள் பணிந்தன, கோட்டைவீழ்ந்தது, அதிற் சிறையிருந்தோர் புரட்சியின் முதற் பயனாக விடுதலை பெற்றனர்.

பஸ்தீலின் வீழ்ச்சி முடியாட்சியின் வீழ்ச்சிக்கு முன்னறிவிப்புக்கொடுத்தது. அதுமுதலாக புரட்சி பலாத்காரப்பாதையைப் பின்பற்றியது. பஸ்தீலின் வீழ்ச்சி

பற்றிய செய்தி காட்டுத் தீபோல் நாடெங்கும் பரவியதைத் தொடர்ந்து பிரபுக்களின் மாடமாளிகைகள் எரிக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. கொலையும், கொள்ளையும் எங்கும் பரவ நாடு முழுவதும் அல்லோல கல்லோலப்பட்டது

புரட்சியின் போக்கு :— இதுஇவ்வாருக, ஆகஸ்ட்4ம் 5ம் தேதிகளில் கூடிய தேசிய சபை பழைய வரிகளையும், மானிய கால ஒழுங்குகளையும் முற்றுக நீக்கிவிட்டுப் பிரான்சின் எதிர்காலத்துக்கான புதிய திட்டம் ஒன்றை வகுக்கும் வேலையில் ஈடுபட்டது ஆகஸ்ட் 27ல் 'மனித உரிமைகள் பிரகடனம்' வெளியிடப்பட்டது. அது மக்கள் சுதந்திரம், சொத்து, பாதுகாப்பு ஆகிய வற்றைப்பெற உரிமையுடையவர்கள் எனவும் அதிகாரம் மக்களிடமிருந்தே தோன்றுவதாகவும், பிரகடனப் படுத்தியது தேசியசபை நாட்டின் நிர்வாகப் பிரச்சனைகளைத்தீர்ப்பதில் ஈடுபட்டிருந்த வேளையில் உணவுப் பிரச்சனைதலைதூக்கியது. அந்நிலையில் தமது நிலைக்கும் நாட்டின் சீர்கேட்டுக்கும் அரசனே பொறுப்பு என முடிவுசெய்த பாரிஸ் சனக்கூட்டமொன்று வேர்செயிலுக்குச் சென்று அரசமாளிகையைத் தாக்கியது. ஆயினும் தளபதி லாபாயற் ஆர்ப்பாட்டக்காரரைச் சமாளித்துவிட்டான். மறுநாள் மன்னன் அவனது மனைவி மகன் சகிதம் ஊர்வலமாய் பாரிஸ் நகருக் கூட்டிச் செல்லப்பட்டான், அப்போது மக்கள் அவனைச் சுட்டிக்காட்டி 'இதோ! நாம் பாண் காரனையும், அவன் மனைவியையும் மகனையும் கொண்டுவந்து விட்டோம்' எனக் கோஷமிட்டுச் சென்றனர். மன்னன் பாரிசுக்குத் திரும்பியபின்னர் தேசிய சபை மீண்டும் நாட்டின் நிர்வாக விடயங்களில் கவனத்தைச் செலுத்தியது. அதன் விளைவாக, புதியஒரு அரசியற்றிட்டம் உருவாக்கப்பட்டது. அதன் கீழ் பிரான்ஸ் பல கொமியூன்க

ளாகப் பிரிக்கப்பட்டது. அவை ஒவ்வொன்றும் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபையினால் ஆளப்பட வசதிகள் செய்யப்பட்டது. அத்துடன் மன்னன் மத்திய அரசாங்கத்தில் நிர்வாகசபையின் தலைவராக்கப்பட்டான். இவ்வாறு ஒரு புதிய அரசியற்றிட்டம் ஆக்கப்பட்டபின்னர் நீதிபாலனமுறை திருத்தியமைக்கப்பட்டது. அதன் மேல் நிதிவிடயமாகக் கவனம் செலுத்திய தேசியசபை மதபீடங்களின் சொத்தை அரசாங்கத்தின் உடைமையாக்கிவிட்டு 1790 இல் குருவாயந்துக்கான குடியியல் அரசியற்றிட்டம் ஒன்றை வகுத்தது. இதன்படி மதபீடம் அரசாங்கத் திணைக்களமாக்கப்பட்டது. தேசியசபையின் இச்செயல் மக்களிடையே கருத்துவேறுபாடு களை ஏற்படுத்தியதோடு கத்தோலிக்கனான மன்னனின் கடும் எதிர்ப்பையும் சம்பாதித்தது. தேசியசபையின் தீவிரமான போக்கில் அதிருப்தியுற்ற மன்னன் மேரி அந்தோனெற்றின் தூண்டுதலின்கீழ் 1791 யூன் 20இல் பாரிஸ்நகரைவிட்டுத் தப்பியோட முயற்சித்தான். ஆயினும் வறேன்ஸ் என்னுமிடத்தில் அவன் பிடிக்கப்பட்டு பாரிசுக்குக் கொண்டுவரப்பட்டான். அங்கு அரசன் புதிய அரசியல் திட்டத்தை ஏற்கவேண்டியதாயிற்று. இதன்மேல் 1791 ஒக்ரோபரில் புதிய அரசியல்திட்டத்தின் கீழ் சட்டசபை கூடியது. அச்சபையில் இடம்பெற்ற 745 உறுப்பினர்களும் புதியவர்கள். அவர்களின்போக்கு அரசியல்திட்டத்தை வகுத்தவர்களிலும் பார்க்க அதிக புரட்சிகரமாயிருந்தது. எனவே தமது கருத்து வேறுபாடுகளினால் அவர்கள் மூன்று குழுவினராகப் பிரிந்தனர். ஒரு பிரிவினர் அரசியற்றிட்டத்தை ஆதரித்தனர். அதற்கு எதிரான இன்னொரு பிரிவினர் ஜீரோண்டின்ஸ் எனப்பட்டனர். இவர்கள் 'முடியை' முற்றுக ஒழித்துவிட்டுக் குடியரசை நிறுவ விரும்பினர் இவ்விரு பிரிவினருக்குமிடையில் மிதவாதிகளாக மூன்றாவதுகுழுவினர் அமைந்தனர்.

புரட்சிப் போர்களும் படுகொலையும் :- இவ்வாறு கட்டுப் பாட்டோடு கூடிய முடியாட்சி நிலவும் காலத்தில் பிரான்சில் நடைபெற்றநிகழ்ச்சிகள் ஐரோப்பிய நாடுக ளின் கவனத்தை ஈர்த்தன. ஒரு பிரித்தானிய தலை வரான பொக்ஸ் பஸ்தீல் வீழ்ச்சியைக் கேட்டபொழுது 'உலகில் இடம்பெற்றநிகழ்ச்சிகளில் எவ்வளவு சிறந்த நிகழ்ச்சி இது!' எனக் கூறினர். அதேசமயம் பிறசி யா, ஆஸ்திரியா முதலிய நாடுகளின் மனப்பான்மை வேறுவிதமாயிருந்தது ஆஸ்திரியா பிரெஞ்சுப் புரட்சி யினல் பீதியுற்றிருந்தது. அந்நாட்டு மன்னனின் சகோ தரியே மேரி அந்தோனெற். எனவே அவளது பாது காப்பில்ஆஸ்திரியாகரிசனை கொண்டிருந்தது. மேலும் புரட்சியினல் பாதிக்கப்பட்ட அல்சேஸ் மாகாணத்து ஜேர்மன் இளவரசனுக்கு நட்டஈடு கொடுக்கும் விட யம் இரு நாடுகளுக்குமிடையே தகராறை ஏற்படுத்தி யது. அன்றியும் புரட்சிகாலத்தில் பிரான்சைவிட்டு ஓடிய பலபிரபுக்கள் ஆஸ்திரியாவைப் பிரான்சின்மேல் படையெடுக்குமாறு தூண்டிக்கொண்டிருந்தனர் இறு தியாக, பிரான்சுடன் மேற்கொள்ளும்போரினல் தான் பயனடையலாம் என ஆஸ்திரியா நம்பியது. இக்கார ணத்தினல் ஆஸ்திரியமன்னன், லெப்போல்ட்II பிறசிய மன்னனுடன் கூட்டாக வெளியிட்ட 'பில்னிற்ஸ்' பிரகடனத்தில் பிற நாடுகளும் ஆதரித்தால் தாம் பிரான்சியப் பிரச்சினையில் தலையிடுவதாகத் தெரிவித் தான். ஆனல் அவன் 1792இல் இறந்துவிட அவனுக் குப் பின் அரசனகிய பிரான்சிஸ் II பிரான்சின் பரம வைரியாக மாறினன்.

பிரான்சிஸ் ஆக்கிரமிப்பு மனப்பான்மையுடையவ னயிருந்தமை பிரான்சின் புதிய தலைவர்களிடையும் போர் மனப்பான்மையை வளர்த்தது அவர்களில் ஜிரோன்டின்ஸ் ஆஸ்திரியாவுடன் போரிட வேண்டு

மெனத் துடியாய்த் துடித்தனர். அவர்கள் 1792இல் அரசாங்கத்தைத் தம்வசமாக்கி ஒரு பாத காலத்திற் குள் மன்னன் ஆஸ்திரியா மீது போர் தொடுக்குமாறு செய்துவிட்டனர்.

ஆஸ்திரியப் போர் 1792 ஏப்ரலில் ஆரம்பமாகி யது. போரின் தொடக்க நிலைகளில் பிரான்சியப் படைகள் படுதோல்வியடைந்தன. படைகள் போருக் கெனப் போதிய பயிற்சி அளிக்கப்படாததும் பல சிறந்த படைத் தளபதிகள் புரட்சிக்காலத்தில் நாட் டைவிட்டு ஓடியிருந்ததுமே அ த ற் கு க் காரணங் களாம்.

ஆஞல் மேரி அந்தோனெற்பிரான்சின் இராணுவ இரகசியங்களை ஆஸ்திரியாவுக்கு வெளிப்படுத்தியதே தோல்விக்குக்காரணம் எனப் பலர் குற்றம் சாட்டத் தொடங்கினர். அந்நிலையில் பாரிசில் கலகக்காரர் குழு வொன்று டான்ரன் என்பவனின் தூண்டுதலின் கீழ் மன்னனது மாளிகையைத் தாக்கியது. அப்பொழுது அவன் தேசிய சபையின் பாதுகாப்பை கோரினன். ஆஞல் சபை அவனது ஆட்சியை நிறுத்துவதாகமுடிவு செய்து அவனைச் சிறையிலிட்டது. அத்துடன்தேசிய மன்று ஒன்றைக் கூட்டுமாறும் அச்சபை கோரியது

இது இவ்வாறிருக்க, ஆஸ்திரிய - பிறசியப் படை கள் பிரான்சின் கிழக்குப் பகுதியில் பல இடங்களைக் கைப்பற்றி முன்னேறிக்கொண்டுவந்தன. இது நகரில் பீதியைஏற்படுத்தியது. இதன் விளைவாக ஆட்சிக்கு விரோதமானவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டோரும் பிரபுக்களும் மிதவாதிகளும் சிறையில் வைக்கப்பட்டு அவசரமாக நிறுவப்பட்ட மன்றுகளின் விசாரணையின் பின்னர்படுகொலை செய்யப்பட்டனர். இது செப்டம்பர் படுகொலை எனப்படும். செப்டம்பர் படுகொலைக்குப்

பின்னர் புதிய தேசியமன்று 1792 செப்டம்பர் 20 இல் கூடியது. அதற்குத் தெரிவு செய்யப் பட்டவர்களில் பலர் யாக்கொபின்ஸ் என்னும் தீவிர இடதுசாரிகளா யிருந்தனர். அவர்கள் மன்னனில் வெறுப்பு மிக்கவர் கள். எனவே செப்டம்பர் 21 இல் முடியாட்சியை ஒழி த்துவிட்டுப் பிரான்சை ஒரு குடியரசாக்குவதில் வெற்றி பெற்றனர். மேலும் இக்கால ஏல்லையில் அரசன் வெளி நாட்டுக்குத் தப்புயோடியவர்களுடன் தொடர்பு கொ ண்டு ஆட்சியைக்கவிழ்க்கச் சதிசெய்கிறுன் என்பதைக் காட்டும் சில இரகசியப் பத்திரங்கள் கண்டுபிடிக்கப் பட்டபோது அரசனைக் கொல்லுமாறு யாக்கொபினர் தேசிய மன்றைத் தூண்டினர்- அம்மன்றுஅதற்கு இண ங்கியதனுல் 1793 சனவரி 31 இல் அரசன் சிரச்சேதம் செய்யப்பட்டான்.

அரசன் இ ற ந்தபின் தேசியசபை பிறசிய ,ஆஸ் திரிய ஆக்கிரமிப்பு விடயத்தில் தனது கவனத்தைச் செலுத்தியது. வால்மி என்னுமிடத்தில்நடந்த போரில் பிரான்சியப்படைகள் பிறசியப்படைகளைப் புறமுதுகிட் டோடச் செய்தன பிரான்சின் வெற்றிக்குப் போலந்து நாட்டின் பிரிவினை சம்பந்தமாக ஆஸ்திரியாவுக்கும் பிறசியாவுக்குமிடையில் அபிப்பிராயபேதம் ஏற்பட்ட தே பிரதான காரணமாகும் ஆயினும் ஆஸ்திரியா விரைவில் வேறு நண்பர்களைப் பெற்றுக்கொண்டது 1792 செப்ரம்பர் படுகொலைகளும்பிரான்சியதேசியமன் றத்தின் செயல்களும் பெல்ஜியம் பிரான்சியப்படைக ளால் கைப்பற்றப்பட்டதும் பிரான்ஸ் ஒல்லாந்தின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்காததும் மன்னன் சிர ச்சேதம் செய்விக்கப்பட்டதுமாகிய இவையெல்லாம் பிரித்தானியாவில் பிரான்சிய எதிர்ப்புணர்ச்சியை அதிகரிக்கச் செய்தன அந்நிலையில் போர் தவிர்க்க

முடியாததாயிற்று. அதேசமயம் பிரான்சும் தனது பழைய எதிரியும் பரமவைரியுமான பிரித்தானியாவுக்கு ஒரு பாடம் கற்பிக்க ஆவலாயிருந்தபடியால் 1793 பெப்ருவரியில் பிரான்சே பிரித்தானியாவுடன் போர் தொடுத்தது அடுத்தமாத இறுதியில் பிரித்தானியாவுடன் ஒல்லாந்து, பிறசியா, ஆஸ்திரியா, ஸ்பயின் ஆகிய நாடுகளும் சேர்ந்து போரிடத் தொடங்கிய போதுபிரான்சின் நிலைமை மிக இக்கட்டானதாயிருந்தது. அது பல்முனைத் தாக்குதலின் கீழ் தோல்வியடைந்து வரும்வேளையில் பிரான்சின் மேற்குப்பகுதியில் உள்நாட்டுப்போர் ஆரம்பமாகி நிலைமையை மேலும் சிக்கலாக்கியது. இந்நிலையில் ஜிரோன்டின்களின் நிலை பலவீனமடைந்தபோது அவர்களது மந்திரிசபையிலுள்ளோரின் நடவடிக்கைகளைக்கண்காணிக்குமாறு தேசிய மன்றம் ஒரு குழுவை நியமித்தது இது 'பொதுசன பாதுகாப்புக் குழு' எனப்பட்டது. பொது சனபாதுகாப்புக்குழு நிறுவப்பட்டதிலிருந்து 'ஜிரோன்டின்களுக்குப் யாக்கொபின்சுக்கும் இடையேநிலவியபூசல்கள்பகைமையாக உருவெடுத்தன. இதனால் ஜிரோன்டின்ஸ் 12 பேரைகொண்ட ஒரு குழுவை நிறுவி யாக்கொபின்சின் கையிலிருந்த பாரிஸ் நகரக் கொமியூனின் நடவடிக்கைகளை விசாரிக்குமாறு பணித்தனர். இதைக் கண்ட யாக்கொபின்கள் பதிலடி கொடுக்கத் தயங்கவில்லை. கலகக்கார யாக்கொபின் கூட்டமொன்று தேசியமன்று நடக்கும்போது சபைக்குட்பிரவேசித்து' ஜிரோன்டின் தலைவர்களைக் கைதுசெய்யுமாறு கோரிக் குழப்பம்விளைவித்தது. அதற்கு அச்சபைசம்மதிக்க 22 ஜிரோன்டின் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பயங்கர ஆட்சி :—ஜிரோன்டின் தலைவர்கள் கைதுசெய்யப்பட்ட பின்னர் முன்னர் குறிப்பிட்ட 'பொதுசன பாதுகாப்புக்குழு,வும் பொது பாதுகாப்புக் குழு என்

னும் வேறுரு குழுவும் ஆட்சி விடயங்களில் அதிகம் பங்கைப்பெறத்தொடங்கின. பொதுபாதுகாப்புக்குழு பொலிஸ் வேலைகளைச் செய்தது. இவ்விரு குளுக்களும் நாட்டின் பாதுகாப்பு என்ற போர்வையில் பயங்கர ஆட்சியை மேற்கொண்டன, இவை மாகாணங்களிலு ள்ள கொம்மியூன் களுடன் முகவர் மூலம்தொடர்பு கொண்டு சந்தேகத்துக்கிடமானவரைக் கைதுசெய்வித் துச் சிரச்சேதம் செய்யும் வேலையில் மும்முரமாக ஈடு பட்டன. வெளிநாட்டுப் படைகளின் நெருக்கு தலி னல் அக்குழுக்களின் பயங்கர நடவடிக்கைகள் ஒரு படி அதிக உக்கிரமானதாக அமைந்தன என லாம் 1793 செப்ரம்பரில் சந்தேகிக்கப்படுவோர் சட்டம், ஒன்று நிறைவேற்றப்பட்டது அது ஒரு குற்றச்சாட் டின் பேரில் சந்தேகிக்கப்படுவோரைச் சிறையில்வைக்க இடமளித்தது. அச்சட்டத்தின்கீழ் 3990 பேர்வரை புரட்சியின் எதிரிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கிலொற்றினுக்குஇரையாக்கப்பட்டனர். மேறிஅந்தோ நெற்றும் பல ஜிரோன்டின் தலைவர்களும் இவ்வாறே கொல்லப்பட்டனர்.

இக்காலத்தில் மாகாணங்களில் ஏற்பட்ட எதிர்ப் புரட்சிகளை அடக்குவதற்கும் வன் முறைகள்பயன்படுத் தப்பட்டன. இவ்விதமாக நான்ரேநகரில் 4099 மக்க ளும் லியோன்ஸ் நகரில் 2000 மக்களும் சுட்டுக்கொல் லப்பட்டனர். இப்பயங்கர ஆட்சிக்காலத்தில் புரட்சி அரசாங்கம் உள்நாட்டு விடயங்களிலும் பல புதிய நட வடிக்கைகளை மேற்கொண்டது. பொருட்களுக்கு உச்ச விலை விதித்தல், தசமமுறையான நாணயமுறையை ஏற் படுத்துதல், புதிய மதமொன்றை உருவாக்குதல் முத லியன அவற்றிற் சில இக்காலத்தில்இடம் பெற்ற சம்பவங்கள் ஆட்சியாளருக்கிடையில்பலத்த அபிப்பி ராய பேதங்களையும் பிளவுகளையும் ஏற் படுத் தின. இதன் விளைவாக ரொப்ஸ்பியர், டான்ரனைடும்; ஹெர் பட்டோடும் பகைத்து அவர்களைச் சிரச்சேதம் செய் வித்தான். இதன்மேல் ரோப்ஸ்பியர் ஒரு சர்வாதிகாரி போல நடந்துகொண்டான். அவன்பதவி வகித்த 7 வா

ரகாலத்தில்மொத்தம் 1376போர் தம் தலையை இழந் தனர். அவன் செயல்கள் தேசிய மன்றிலும், பிற குழுக்களிலும் பலரால் எதிர்க்கப்பட்டன. ஆயினும் அவன் தனது செயலைச் சரியென நாட்ட முயன்ற தோடு தனது எதிரிகளைக் கொன்றொழித்து விடுவதாக யூலை 16இல் ஒரு பயமுறுத்தலை விடுத்தான். இவ்வாறு தேசிய மன்றில் ரொப்ஸ்பியருக்கு எதிர்ப்பு அதிகரித்தி ருந்த நிலையில் அவனைக்கைதுசெய்யுமாறு கொண்டுவரப் பட்ட ஒரு பிரேரணை தேசியமன்றில் நிறைவேறியது. இதன் விளைவாக ரொப்ஸ்பியரும் அவனது ஆதரவாளர் கள் பலரும் 1794யூலை 28 இல் சிரச்சேதம் செய்யப்பட் டனர். ரொப்ஸ்பியரின் இறப்புடன் பயங்கர ஆட்சி யும் முடிவடைந்தது.

பயங்கர ஆட்சியின் முடிவைத் தொடர்ந்து அர சாங்கத்தில் பல மாற்றங்கள்செய்யப்பட்டன. பாரிஸ் நகரத்து கொம்மியூன் புனரமைக்கப்பட்டது. பொது சன பாதுகாப்புக் குழுவிலிருந்து யாகொபின்கள் நீக்க ப்பட்டனர். அவர்களது குழுக்கள் தடைசெய்யப்பட் டன பலர் கொல்லப்பட்டனர் உச்சவிலைச்சட்டம நீக்கப்பட்டது.

இவ்வாறு அரசாங்கம்உள்நாட்டுவிடயங்களில் ஈடு பட்டுக்கொண்டிருந்த காலத்தில் பிரான்சியப் படை கள் வெளிநாட்டுப் படைகளுடன் வீராவேசத்துடன் போரிட்டு வெற்றிவாகை சூடிக்கொண்டிருந்தன. 'கார்னொட்' என்பவனின் திறமையே பிரெஞ்சுப்படை களின் வெற்றிக்கு மூலகாரணமாயமைந்தது. பிச் சேறு, ஹோச், ஜோர்டன் முதலிய திறமையும், ஆற் றலும் மிக்க படைத் தலைவர்களின கீழ் பிரான்சியப் படைகள் வெளிநாட்டுப் படைகளைப் பிரான்சுக்கு வெளியில் துரத்தியதோடுநில்லாது பெல்சியம், பிரசி யாமுதலியநாடுகளுக்குள்ளே சென்றும் போர் புரியத் தொடங்கின. பிரான்சியப் படைகளுடன் எதிர் நிற்க முடியாத பிறசியா, 1795ஏப்ரலில் 'பசில்' என் னுமிடத்தில் சமாதானம் செய்துகொண்டது. அவ்

வாண்டு யூலையில் ஸ்பெயின், ஒல்லாந்து ஆகியனவும் போரிடுவதை நிறுத்தின. இதன்மேல் இங்கிலாந்தும் ஆஸ்திரியாவும் மட்டும் எஞ்சி நின்றன. பிரித்தனி மாகாணத்தில் ஒரு கலவரத்தை ஏற்படுத்த பிரித்தானியா எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து உள்நாட்டுப் போர்களும் முடிவடைந்தன.

இதன் பின்னர் தேசிய மன்றும் 'புரட்சி ஆண்டு 3 இன் அரசியற்றிட்டம்' ஒன்றை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டது. இத்திட்டத்தின் கீழ் முதியோர் கழகம், கீழ் சபை என இரு உறுப்புக்களையுடைய சட்டசபையும் ஐந்துஉறுப்பினர்களைக்கொண்ட இயக்குநர்குழு ஒன்றும் நிறுவப்பட்டன புதிய கழகங்களின் உறுப்பினர்களில் 3]2பங்கினர் பழையதேசிய மன்றிலிருந்தே தெரிவு செய்யப்படவேண்டும் என வும் விதிக்கப்பட்டது. இவ்வாறு நிறுவப்பட்ட புதிய ஆட்சிமுறையில் அதிருப்தியுற்றவர்கள் ஒரு கலகத்தை ஏற்படுத்த முயற்சித்த போது படைத் தளபதி பரசும், உதவித் தளபதி நெப்போலியனும் அதைநசுக் கி விட்டனர். இதன் பின்னர் தேசிய மன்று தானே கலைந்து போக ஆட்சிடிறெக்ரறியின் கைக்கு மாறியது.

வினாக்கள்

1. பிரான்சிய சமுதாயத்தின் அமைப்பு எவ்வாறு புரட்சிக்குக் காரணமாகியது என்பதை விளக்குக ?
2. பிரான்சியப் புரட்சியின் அடிப்படைக் காரணங்களை விளக்குக ?
3. சிறு குறிப்பெழுதுக :—(1) செப்ரம்பர்படுகொலை (2)பயங்கர ஆட்சி (3) பஸ்தில் (4) மேரி அந்தோனெற்

அத்தியாயம் 16

நெப்போலியனின் எழுச்சியும் வீழ்ச்சியும்

டிறக்ரறியின் வீழ்ச்சி-: (1798,99). 1795ஆம் ஆண்டில் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற டிறக்ரறி 5 ஆண்டுகள் வரை பிரான்சின் அரசியல் நிர்வாகத்தை நடத்திவத்தது. இக்காலத்தில் பிரான்சில் ஓளவு அமைதி நிலவியது. அதன் உள்நாடடுநிர்வாகப் புனரமைப்பும் பூர்த்தியாகியதோடு புரட்சித்தலைவர்களும் ஒருவர் பின்னொருவராகக் கிலொற்றீனுக்குப் பலியாகியிருந்தனர். எனவே பிரெஞ்சுமக்கள் ஒருவகையான விரக்தி மனப்பான்மையுடன் ஆட்சியில் அக்கறையற்றவர்களாய்க் காலத்தை கழிப்பாராயினர்.

டிறக்ரறி 1795 இல் கூடி ஐவரை அதன் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்தது. டிறெக்ரறியின் ஆட்சி மிதவாதிகளினதும் இடதுசாரிகளினதும் எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டியிருந்தது. மிதவாதிகள் மீண்டும் குடியாட்சியை விரும்பினர் ஆனால் இடதுசாரிகள் அதை வெறுத்தனர் இவர்களில் தீவிரவாதிகளான இடதுசாரிகள் பேபோ என்பவர் தலைமையில் டிறக்ரறியைக்கவிழ்க்க முயற்சித்தபோது அது முளையிலேயே கிள்ளப்பட்டது. இதன்மேல் மிதவாதிகளின் கை ஒங்கியிருந்த காலத்தில் மதகுருமாருக்கும் புரட்சிக்காலத்தில் நாட்டை விட்டு வெளியேறியோருக்கும் எதிரான சில சட்டங்கள் நீக்கப்பட்டன. அதை டிறெக்ரறியின் மூன்று உறுப்பினர் எதிர்த்து அச்செயல் அரசனின் ஆதரவாளர்களின் சதி எனக்கூச்சலிட்டு நெப்போலியனின் உதவியைக் கோரினர். அவன் அக்கோரிக்கையைப் படைகளுடன் அனுப்பினன் அதன்மேல் டிறக்ரறியின் இரண்டு உறுப்பினர்கள் சிறையிலிடப்பட்டு முன்னர் நீக்கப்பட்ட சட்டங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டன,

1799 இல் டிறக்ரறி உறுப்பினருக்கு இடதுசாரிகளின் ஏதிர்ப்பு அதிகரித்ததின் விளைவாக அவர்களில் மூவர் தாமே விலகவேண்டியதாயிற்று. அதன்மேல் சீயஸ் என்பவன் டிறக்ரறியில் முதன்மை பெற்றான். அவன் ஆட்சி முறையை மாற்றப் பெரிதும் விரும்பிய படியால் டிறக்ரறியை வீழ்த்துவதற்குத் தனக்கு உதவி செய்யக்கூடிய ஒருவனைத் தேடிக்கொண்டிருந்தான். அவ்வேளையில் தான் நெப்போலியன் எகிப்தியப்போர் முனையிலிருந்து நாடுதிரும்பியிருந்தான், நெப்போலியனின் வருகையுடன் பிரான்சின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் உருவாகியது.

நெப்போலியனின் எழுச்சி-: நெப்போலியனின் எழுச்சிக்கு அதிட்டதேவதையின் அருளும் உதவியது எனலாம் ஏனெனில் அவனது வாழ்க்கையில் ஏற்பட்டஎதிர்பாராத சில சந்தர்ப்பங்கள்தான் அவனை ஒரு மாவீரன் என்ற நிலைக்கு உயர்த்தின,

நெப்போலியன் 1769 இல் கோசிக்காத்தீவில் ஒரு சட்டவாதியின் மகனாகப் பிறந்தான். அங்கு உருவான ஒரு தேசியஇயக்கம் அத்தீவை ஆண்டுவந்த ஜெனுவா அரசாங்கத்தை வீழ்த்திய பின்னர் அதன் ஆட்சி பிரான்சின் கைக்கு மாறியது இதன்மேல் நெப்போலியன் பிரான்சிலுள்ள பிறன் என்னுமிடத்திலிருந்த இராணுவ கல்விக்கூடத்தில் சேர்ந்தான். அங்கு அவன் இராணுவ விடயங்களில் மட்டுமன்றி அரசியல் பற்றியும்பல விடயங்களைக் கற்றுத் தெளிந்தான். பின்னர் கோசிக்காவில் பிரான்சியருக்கெதிராகத் தேசியஇயக்கம் உருவாகியபோது அவன் பிரான்ஸ் பக்கம் நின்றபடியால் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டான். இதன்மேல் நெப்போலியனது வாழ்க்கை பிரான்சின் வரலாற்றுடன் பின்னிபிணைவதாயிற்று.

பிரான்சில் நெப்போலியன் பீரங்கிப்படையில்சேர்ந்து 1793 இல் தனது திறமைபின்மூலம் பதவியுயர்வு பெற்றான். இதற்குப் பின்னர் 1795 இல் பாரிஸ்

நகரில்தேசிய மன்றுக்கு எதிராக எழுந்த புரட்சியை அடக்குவதில் நெப்போலியன் காட்டிய திறமை டிறக் ரறியின் பாராட்டையும், 'ஜெனறல்' நிலைக்குப் பதவி உயர்வையும்பெற்றுக்கொடுத்தது. மேலும் நெப்போ லியன்செல்வாக்கு மிக்கஒரு பெண்ணைவிவாகம் செய்த மையால்பாரிஸ்நகரில் முக்கியமான பல பிரமுகர்களின் நட்பைப்பெற்றான். இதன்பயனாக 1796 இல் இத்தா லிக்கு எதிரான போரில் படைத்தளபதியாகநியமிக் கப்பட்டான்.

இத்தாலியப் போர் நெப்போலியனது போர்த் திறமை, துணிவு, முடிவுகளை விரைவில் மேற்கொள் ளும் ஆற்றல்பகைவரின் பலவீனத்தை அறிந்து தாக் கும் போர் நுட்பம் படைகளின் விசுவாசத்தைப் பெறும்திறமை ஆகியவற்றைவெளிப்படுத்தின இத் தாலியப்படையெடுப்பின்போது மலைக் கணவாய்ப் பாதைகள்ஆஸ்திரிய— சாடினியபடைகளினால் ம றிக் கப்பட்டிருந்ததைக்கண்ட நெப்போலியன் சாடினியா மீது தாக்குதலைத் திருப்பினான். சாடினியர் அவன் தாக்குதலுக்குஎதிர்நிற்க முடியாது சரணடைந்தனர். அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட 'செறுஸ்கோ' போர் நிறுத்த உடன்படிக்கைப்படிசவோய், நீஸ் என் னும் இருமாகாணங்கள் பிரான்சின் உடைமையாயின. இதன் பின்னர் இத்தாலிக்குட் பிரவேசித்தநெப்போலி யன் 'லோடி' போரில் ஆஸ்திரியரைத் தோற்கடித் தான். இவ்வெற்றிகளைக் கண்டபாமா மொனேனை, இராச்சிய அரசர்களும் நேப்பில்ஸ் மன்னனு நெப் போலியனுடன் சமாதானம் செய்து கொண்டனர். அடுத்து ஆஸ்திரியரை இத்தாலியிலிருந்து விரட்ட எண்ணிய நெப்போலியன் 'மந்துவ' கோட்டையை மூற்றுகையிட்டு1797ம் ஆண்டு 'றிவோலிப் போரில் ஆஸ்திரியரைத் தோற்கடித்து லொம்பாடி முழுவதை யும் கைப்பற்றினான். இதன்மேல் பாப்பரசரைப் பணி யச் செய்து 'ரொலென்ரினோ' உடன் படிக்கையின்படி 'அவிக்னன்' மாகாணத்தை பிரான்சுடன் சேர்த்துக் கொண்டான். பின்னர் கிழக்கு அல்ப்ஸ் மலைப்பிரதே

சத்துக்கூடாகஆஸ்திரியரைத் துரத்திச்சென்று வியன்னாவில் போரை நிறுத்திவிட்டு 'காம்போ போமியா' உடன்படிக்கையைச் செய்துகொண்டான். அதன்கீழ் ஆஸ்திரியா,பெல்சியத்தைப் பிரான்சுக்குக் கையளித்துவிட்டுவெனிஸ் இராச்சியத்தைப் பெற்றுக்கொண்டது. ஆஸ்திரியப் போரின் விளைவாகப் பிரான்ஸ்தெற்கில் பிரனீஸ் மலையையும். கிழக்கில் றைன் நதியையும் இயற்கை எல்லையாகப்பெற்றது.

ஆஸ்திரியப்போர் முடிந்தவுடன் நெப்போலியன் ஆங்கிலேயருக்கெதிராகத் திரும்பினான். அப்பொழுது இங்கிலாந்து மட்டுமே பிரான்சினால் தோற்கடிக்கப்படாமலிருந்தது. இங்கிலாந்தின் கடல் வலிமைதான் அதைவெற்றிகொள்ளும் வேலையைக் கடினமாக்கியது. ஆயினும் டிறெக்ரறி நெப்போலியன் தலைமையில் ஒரு பெரும் படையை விடுத்து இங்கிலாந்துக்கெதிராகப் போரை நடத்துமாறு பணித்தது ஆனால் மேற்கு அரங்கில்இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், ஒல்லாந்து ஆகிய நாடுகளின் கடற்படைகளைத் தோற்கடித்திருந்தமையால் அங்கு இங்கிலாந்துடன் போரிடுவது புத்தியற்றது என எண்ணிய நெப்போலியன் கிழக்கு நோக்கிக் கவனத்தைச் செலுத்தினான். எகிப்துப் பிரதேசத்தைக்கைப்பற்றுவதன் மூலம் பிரித்தானியரை இந்திய சாம்ராச்சியத்துடன் தொடர்பு கொள்ளாதபடி தடுப்பதும், திப்பு சுல்தானின் படைகளுடன் சேர்ந்துஇந்தியாவிலிருந்து பிரித்தானியரைத் துரத்துவதும் அவன் திட்டங்களாயிருந்தன. அதே சமயம் டிறக்ரறிஉறுப்பினர்கள்நெப்போலியன் தமக்கு ஆபத்தைவிளைவிக்கக்கூடியவன்என அஞ்சியபடியால் அவனது எகிப்தியபடையெடுப்புத்திட்டத்துக்காதரவளித்தனர்.

எனவே 1790மேயில் 38, 000 வீரர்களுடனும் பல பொறியியலாளர்கள், அறிவியலாளர்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஆகியோருடனும் நெப்போலியன் எகிப்திய படையெடுப்பை மேறகொண்டான். அவன்தான் சென்றபாதையில் மோல்ரா தீவையும் கைப்பற்றிவிட்டு அலெக்சாந்திரியாவில் இறங்கினான்.

அங்குஎகிப்தியப்படையைத் தோற்கடித்துவிட்டு நாட்டின் அதிபதியாயிருந்த வேளையில் நெல்சன் பிரித்தானியகடற்படையுடன் நெப்போலியனைத் தொடர்ந்து அபுக்கீர்குடாவில்தங்கிநின்ற பிரான்சிய கப்பற்படையை அழித்துவிட்டான். இதன் விளைவாக நெப்போலியன் பிரான்சுடன் தொடர்புகொள்ளவும் உதவியைப் பெறவும் முடியாத நிலையில் சிரியா மீதுபடையெடுத்தான். யாபாவைக் கைப்பற்றினான் ஆனால் ஏக்கரைக் கைப்பற்ற முடியாது போயிற்று ஏனெனில் சிட்னி சிமித் என்னும் பிரித்தானிய தளபதியின் கடற்படை அதைக் காவல் செய்தது இதற்கிடையில் 'பிளேக் நோய்' பிரெஞ்சுப் படைகளைப்பீடித்தது. இதனால் நெப்போலியன் கெயிரோவுக்குத் திரும்பவேண்டியதாயிற்று. கெயிரோவில் இருக்கும்போது இரசியா, ஆஸ்திரியா முதலிய நாடுகளின் தாக்குதலினால் பிரான்சுக்குப் பேராபத்து ஏற்பட்டிருப்பதைக் கேள்விப்பட்ட நெப்போலியன் கிழக்குப்போர்களைக் கைவிட்டு நாட்டுக்குத்திரும்பினான் நெப்போலியன் பிரான்சுக்குத் திரும்பிவிட்டான் என்ற செய்தி பிரான்சியமக்களைக் குதூகலிக்கச்செய்தது. அவர்கள் அவனை ஒரு தேசிய வீரனாக வரவேற்றனர்.

நெப்போலியன் முதற்கொன்சல் ஆதல்-

நெப்போலியன் நாடுதிரும்பியபோது டிறக்ரறியின் ஆட்சிமிகப்பலவீனமடைந்திருந்தது. அந்நிலையில் அதை நீக்குவதற்கு சியஸ், ரலிறண் என்பவர்களுடன் அவன் ஒரு திட்டம் வகுத்தான். அதன்படி ஒரு சதியைச் சாட்டாகக் கொண்டு தேசியமன்று பாரிஸ் நகரிலிருந்து செயின் கிளவுட் என்னுமிடத்திற்கு மாற்றப்பட்டது. உடன் நெப்போலியன் பாரிஸ்படைகளின் தளபதியாக்கப்பட்டான். இதன்மேல் டிறக்ரறி உறுப்பினர் மூவர் பதவியிலிருந்து விலக ஏனைய இருவரும் சிறைவைக்கப்பட்டனர். பின்னர் நாட்டின் அரசியல் திட்டத்தைத் திருத்தியமைப்பதற்கு மூவரைக்கொண்ட ஒரு 'கொன்சூலேற்'றை நிறுவுவதில் வெற்றிபெற்றநெப்போலியன் அதில் தானே முதலாவது கொன்சல் ஆகினான்.

'முதலாம் கொன்சல்' என்னும் பதவியைப் பெற்ற நெப்போலியன் பிரான்சில் தனது அதிகாரத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டான். கொன்சூலேற்றில் மூவர் உறுப்பினராயிருந்த போதிலும் அவன் தானே எல்லா விடயங்களையும் முன்னின்று செய்தான். உத்தியோகத்தர் நியமனம், சட்டப் பிரகடனம், படைநிர்வாகம் முதலியபலவற்றையும் அவனே கவனித்தான் அவனது மனோவலிமையை எவரும் மீற முடியாதிருந்தது.

இவ்வாறு தனது பிடியைப் பலப்படுத்திக்கொண்ட நெப்போலியன் வெளிநாட்டுப் போர்களில் தனது கவனத்தைத் திருப்பினன் அப்போது ஆஸ்திரியாவும் இங்கிலாந்தும் தாம் பிரான்சுடன் போரிட்டுக்கொண்டிருந்தன முதலில் இத்தாலியிலிருந்த ஆஸ்திரியப் படைகள் மேற் கவனத்தைச் செலுத்திய நெப்போலியன் செயின்ட் போர்ஞட் கணவாய்க் கூடாக மிலான் நகருக்குட் புகுந்து ஆஸ்திரியப் படைகள் உதவி பெற முடியாதவாறு தடுத்து அவற்றுடன் போர்புரிந்தான். இப்போரில் ஆஸ்திரியர் தோல்வியுற்றனர். லியூன்வில், உடன்படிக்கையின்படி (1801) றைன் நதிக்கு மேற்கிலுள்ள பிரதேசம்முழுவதும் பிரான்சைச் சேர்ந்தது, அத்தோடு பிரான்சினுல் புரட்சிக்காலத்தில் நிறுவப்பட்ட நான்குகுடியரசுகளையும் ஆஸ்திரியா ஆதரித்தது.

இதன் பின்னர் இங்கிலாந்திற்கவனம் செலுத்திய நெப்போலியன் அதற்கு எதிராக, இரசியா, டென்மார்க், சுவீடன், பிறசியா என்னும்நாடுகளைக் கொண்ட 'படை பூண்ட நடுநிலைமை' என்னும் கூட்டை உருவாக்கினன். ஆயினும் இக்காலத்தில் இரு நாடுகளும் அமைதியை விரும்பியபடியால் 1802இல் 'ஏமியன்ஸ் உடன்படிக்கையைச் செய்து கொண்டன. இவ்வுடன் படிக்கையின் கீழ் இங்கிலாந்து தான் அதுவரை ஸ்பெயின், ஒல்லாந்து, பிரான்ஸ் ஆகியவற்றிடமிருந்து கைப்பற்றிய இடங்களில் இலங்கை, திரினிடாத் என்னும் இரண்டையும் தவிர ஏனையவற்றை திருப்பிக்

கொடுக்க இசைந்தது. அதே சமயம் நெப்போலியன் ஏகிப்து, நேப்பிள்ஸ், போத்துக்கல் ஆகிய நாடுகளிலிருந்து தனது படைகளை வெளியேற்றச் சம்மதித்தான் இவ்வாறு ஏமியன்ஸ் உடன் படிக்கையினால் அமைதிஏற்பட்டிருந்த காலத்தில் நெப்போலியன் உள்நாட்டு விடயங்களிலும் சீர்திருத்தங்களிலும் சிலகாலம் கவனம் செலுத்தினான்.

நெப்போலியனின் உள்நாட்டு சீர்திருத்தங்கள் :-

பிரெஞ்சுப் புரட்சி நாட்டின் அரசியல்சமுதாய பொருளாதாரக் கட்டுக்கோப்புகளைச் சீர்குலைத்தபோதிலும் அவனது சமுதாய விளைவுகள் மகத்தானவை. ஆயினும் புரட்சின் பலனை மக்கள் இன்னும் அநுபவிக்காதிருப்பதை நெப்போலியன் உணர்ந்து அதற்குவேண்டியஆக்கபூர்வமான வேலைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டான். பிரான்சுக்கு நிலையான, உறுதியான ஒரு சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதே அவன் நோக்கமாயிருந்தது. அதில் அவன் வெற்றிபெற்றான்.

நெப்போலியன்முதலில் மதப்பிரச்சனைபிற் கவனம் செலுத்தினான். அவன் தான் மத நம்பிக்கையற்றவனாயிருந்த போதிலும்சாதாரண மக்களின் வாழ்க்கையில் மதத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தான். எனவே புரட்சிக்காலத்தில் விரோதிக்கப்பட்ட ரோமன் கத்தோலிக்க மதத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்வதற்காகப் பாப்பரசருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அவருடன் 1802 இல் ஒரு உடன்படிக்கையும் செய்துகொண்டான். அதன்படி ரோமன் - கத்தோலிக்கநெறி மீண்டும் பிரான்சு நாட்டின் சமயமாக்கப்பட்டது. மேலும் பிஷப்புக்கள், கொன்சலாகிய நெப்போலியனால் நியமிக்கப்படுவதென்றும் பாப்பரசர் அவர்களுக்கு அங்கீகாரமளித்துப் பட்டம் சூட்டுவதெனவும் ஏற்பாடு செய்யப்பட்டது. நெப்போலியன் மெற்கொண்ட அச்செயல் அவனது அரசாங்கத்தின் பலத்தை வெகுவாக அதிகரித்தது. அடுத்து நாட்டின் நீதிபாலன விடயத்தில் நெப்போலியன கவனம் செலுத்தினான். பிரான்சில் வழக்கிலிருந்த பழையதும் புதியது

மானசட்டங்களையெல்லாம் ஒன்றுக்கி ஒழுங்குபடுத்தித் தொகுத்து ஒரு நீதிக்கோவையை உருவாக்கியதேநெப் போலியனின்சாதனைகளுக்கெல்லாம் சிகரமாயிருந்தது. அவன் அதைவிட்டுத் தானே அளவிலாப் பெருமைப் பட்டுக்கொண்டான் எனது பெருமைநாற்பது போர் களை வென்றதில் இருக்கவில்லை இச்சட்டக் கோவையி லேயே தங்கியுள்ளது, என அவன் கூறியுள்ளான்.

நெப்போலியன் மேற்கொண்ட மூன்றுவது சீர்தி ருத்தம் உள்ளூராட்சிபற்றியது. புரட்சிக் காலத்தில் பலமுறை உள்ளூராட்சியை ஒழுங்குபடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆயினும் அ வை வெற்றியடைய வில்லை. நெப்போலியன் அதிகாரத்தை மத்திபில் குவி த்து வைத்து உள்ளூர் நிர்வாகப்பிரிவுகளின் தலைவர்க ளின் நியமனத்தை மத்தியஅரசின் பொறுப்பாக்கினன் இதனால் உள்ளூராட்சித் தலைவர்கள் மத்திய அரசாங் கத்துக்குப் பொறுப்புள்ளவர்களாகினர்கள்.

நெப்போலியன், கல்வி நிதி கைத்தொழில் முத லிய துறைகளிலும் பல நற்பணிகளைச் செய்தான். அத் துடன் நாட்டின் தேவைகளையொட்டி உயர்கல்விக்கூட ங்களையும் தொழிற் கல்விக்கூடங்களையும் நிறுவினன், பாரிஸ் பல்கலைக்கழகமும் இவனது காலத்திலேயே தொடக்கிவைக்கப்பட்டது. அடுத்து நிதி நிலைமையைச் சீர்ப்படுத்த முயன்ற நெப்போலியன் வரி வசூலிப்பு பிறையைத் திறம்பட அமைத்தான். பிரான்சியவங்கி ஒன்றும் நிறுவப்பட்டது. மேலும் உற்பத்தித் துறையில் பாதுகாப்புக்கொள்கையை நெப்போலியன் கடைப்பிடி த்தபோதிலும் உள்நாட்டு வர்த்தகத்தில் கட்டுப்பாடு களை நீக்கிவிட்டான். அத்துடன் வீதிகள் கால்வாய்களை அமைப்பதிலும் அவன் சிரத்தை காண்பித்தான் இவற் றின் விளைவாக நாட்டின் பொருளாதாரம் பலப்பட்ட தோடு அமைதியும் ஏற்பட்டது. இதனால் நெப்போலிய னது செல்வாக்கு மேலும் ஒருபடி அதிகரித்தது.

நெப்போலியனின் 1804 ம் ஆண்டளவில் தனது புனரமைப்பு வேலையையும், சீர்திருத்தங்களையும் பூர்த்திசெய்திருந்தான் அவ்வேளையில் அவனது தனியாட்சி போதியபலமடைந்து இருந்தபடியால் அவன் சகல அதிகாரங்களையும் தானே கைப்பற்ற எண்ணினான் ஏற்கனவே 1802 இல் அவன் தனது கொன்சல் பதவியை ஆயுட்காலம்வரை நீடித்திருந்தான். எனவே அவனது ஆட்சியைக்கவிழ்ப்பதற்குப்பழைய அரசனின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட ஒரு சதி 1804 ல் வெளிப்பட்ட போது நாட்டில் நிலவிய பீதியைப்பயன் படுத்தித்தன்னைப்பிரான்சின் சக்கரவர்த்தியாக்கிக் கொண்டான். 1804 இல் இடம்பெற்ற முடிசூட்டுவிழாவைப் பாப்பரசரே முன்னின்று நடத்திவைத்தார்.

பேரரசுப் போர்கள் :- இவ்வாறு நெப்போலியன் உள்நாட்டில் தனது அதிகாரத்தைப் பலப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது இங்கிலாந்து அவனது போரசு வேட்கையினாலும் சர்வாதிகார ஆட்சியினாலும் பீதியுற்றிருந்தது 'சான்டொமிங்கோ' என்னும் மேற்கிந்திய தீவைக் கைப்பற்றுவதற்கு அவன் மேற்கொண்ட ஒரு முயற்சியும் எகிப்தைக் கைப்பற்றுவதற்கு முன்னோடியாக அந்நாட்டு நிலைமைகளை அறிய ஒருதூதுவனை அனுப்பியிருந்த செயலும், பிரித்தானியாவின் உற்பத்திப் பொருட்களைப் பிரான்சில் அநுமதிக்காமையும் பிரித்தானியருக்குக் கோபமூட்டின. அதேசமயம் பழைய முடியாட்சி ஆதரவாளர்களை இங்கிலாந்து தனது நாட்டிலிருந்து துரத்தாது விட்டதும், தனது ஆட்சியைப் பிரித்தானிய பத்திரிகைகள் கண்டித்ததும் நெப்போலியனதுஆத்திரத்தைத் தூண்டின அந்நிலையில் மால்ரா தீவை இங்கிலாந்து பிரான்சுக்குக் கொடுக்க மறுத்தபோது அதுவே அவ்விரு நாடுகளும் மீண்டும் போரிடும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது.

போரின் தொடக்கத்தில் இங்கிலாந்தும், பிரான்சும் மட்டும் பொருதின பின்னர் 1805 ல் இங்கிலாந்தின் பிரதமர் பிற் நெப்போலியனுக்கெதிராக ஆஸ்திரியா, பிறசியா ஆகிய நாடுகளையும் கொண்ட ஒரு கூட்டைஏற்படுத்துவதில் வெற்றிபெற்றார். இதனைஎன

வாக ஏற்பட்டபோராட்டம், ஐரோப்பாவின் பெரும் பகுதியை நெப்போலிய சாம்ராச்சியத்தின் பகுதியாக்கியது. அது நெப்போலியனின்எழுச்சியின் உச்சக்கட்டமாக அமைந்ததோடு அவனது அதிசயிக்கத்தக்க இராணுவமேதா விலாசத்தையும் அனைவர்க்கும் புலப்படுத்தியது.

நெப்போலியன் முதல் இங்கிலாந்தின் மீது படையெடுக்கத் திட்டம் வகுத்தான் ஆனால் ஆங்கிலக்கால்வாயைக் கடந்து செல்வது பெரும் பிரச்சனையாகியது நெல்சன், கோன்வாலிஸ் ஆகியோர் பிரான்சியக்கடற் படையை முறையே பிறெஸ்ற், ரூலோன் என்னுமிடங்களில் தடுத்து வைத்திருந்தனர். நெல்சனை அங்கிருந்து அகற்ற விலனே என்னும் கடல்படைத் தலைவன் முயன்றபோதிலும் அதில் தோல்வி கண்டான் பின்னர் நெல்சன் அக்டோபர் 12 இல் ஸ்பானிய பிரான்சிய கடற் படைகளை திறபல்கார் என்னுமிடத்தில் படுதோல்வியடையச் செய்தான் அந்நிலையில் இங்கிலாந்துப் படையெடுப்புத் திட்டம் கைவிடப்பட்டது. ஆயினும் அச்சந்தர்ப்பத்தில் ஐரோப்பிய முனையில் ஆஸ்திரிய, இரசியப் படைகளின் எதிர்ப்பை நெப்போலியன் சமாளிக்க வேண்டியிருந்தது. அப்பொழுது ஆஸ்திரியப் படைகள் பவேரியாவுக்குள் நுழைந்திருந்தன. எனவே நெப்போலியன் ஒரு பெரும்படையை அங்கு அனுப்பினான். பிரெஞ்சுப் படைகள் அதிகமாயிருந்தபடியால் ஆஸ்திரியப் படைகளை உல்ம் எனுமிடத்தில் எளிதாகத்தோற்கடித்துவிட்டன. ஆயினும் எஞ்சிய ஆஸ்திரியப் படைகள் இரசியப் படைகளின் உதவியுடன் மன்னன் அலெக்சாந்திரின் கீழ் வியன்னைவை நோக்கி முன்னேறியபோது நெப்போலியனது படைகள் அவற்றை ஆஸ்டலிற்ஸ் என்னுமிடத்தில் சந்தித்தன. அங்கு டிசம்பர் 2ல் இடம் பெற்ற போரில் நெப்போலியன் மகத்தான வெற்றி பெற்றான். அப்போர் முடிவில் செய்யப்பட்ட பிறெஸ்பேக் உடன்படிக்கையின் படி ஆஸ்திரியா தனது இத்தாலிய ப்பிரதேசங்களை இத்தாலிக்குக் கையளித்தது. ரைரோல் பவேரியாவுக்குக் கொடுக்கப்பட்டது. இவ்

வாறு 30 இலட்சம் மக்களைக்கொண்ட நிலப்பரப்பு கைமாறியதன் விளைவாக ஜேர்மனியிலும் இத்தாலியிலும் ஆஸ்திரியாவின் செல்வாக்கு அற்றது எனலாம்.

நெப்போலியன் ஜேர்மானிய அரசாங்கத்தைப் புனரமைத்து அதன் பல்வேறு இராச்சியங்களையும் இணைத்து 'ரைன்' கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கினான், அத்துடன் பிரான்சிய இராஜ்ஜியத்தில் ஜேர்மனியரைச் சேர்த்துக்கொள்ளும் உரிமையையும் பெற்றான். இதன் பின்னர் ஐரோப்பாவில் பிறசியா ரசியா என்னும் இரண்டுமே அவனது பகைவர்களாயிருந்தன. இவற்றில் பிறசியாவுடனை போர் முதலில் ஏற்பட்டது. ஆஸ்திரிய வெற்றிப் பெருமிதத்தில் திளைத்திருந்த நெப்போலியன் ஜேர்மானிய மாகாணமாகிய ஹனோவரைப் பிறசியாவுக்குக் கொடுப்பதாகத் தெரிவித்தபோது இங்கிலாந்து அதை எதிர்த்தது அதே சமயம் ஹனோவரை இங்கிலாந்துக்குக் கையளிக்க நெப்போலியன் முயல்கிறான் எனப் பிறசியா சந்தேகித்தது, மேலும் ஜேர்மனி முழுவதும் பிரான்சின் ஆளைக்குள் வந்ததையும் பிறசியா விரும்பவில்லை. எனவே பிறசியா 1805 ஒக்ரோபரில் பிரான்சின் மேல் போர் தொடுத்தது. ஆனால் பிறசியாவின் வீழ்ச்சி ஆஸ்திரியாவின் வீழ்ச்சியிலும் விரைவாக ஏற்பட்டது ஒக்ரோபர் 14இல் பிறசிய படைகளில் ஒரு பகுதியை நெப்போலியன் லீனு என்னுமிடத்தில் தோற்கடித்தான். எஞ்சிய படைகளை அவனது தளபதி டேவொற் 'ஒஸ்ராட்' என்னுமிடத்தில் தோல்வியடையச் செய்தான். நவம்பர் முடிவில் பிறசியாவின் கோட்டைகளெல்லாம் கைப்பற்றப்பட்டுவிட்டவுடன் பிறசியா அடிபணிந்தது.

பிறசிய வெற்றியினால் பூரிப்படைந்த நெப்போலியன் அதன் தலைநகரான பேளினிலிருந்து பிரசித்தி பெற்ற 'கட்டளைகளை' விடுத்தான். 'பேளின் கட்டளைகள்' எனப்படும் இவ்விதிகள் ஐரோப்பிய துறைகள் ஆங்கிலேயருடன்வர்த்தகத்தில் ஈடுபடுவதைத் தடுத்தன. இவ்வாறு 'கடைக்காரர்கள் நாடாகிய' இங்கி

லாந்தை ஐரோப்பிய கண்டநிலபரப்புடன் வர்த்தகத்தில் ஈடுபடாது தடுத்துவைத்தபடியால் இத்திட்டம் கண்டத் திட்டம், எனப்படுகிறது.

பிறசிய வெற்றிக்குப் பின்னர் இரசியா மட்டுமே எஞ்சியிருந்தது: அது கிழக்குப் பிறசியாவில் தனது படைகளை வைத்திருப்பதை அறிந்த நெப்போலியன் தன் படைகளுடன் அங்கு விரைந்தான். அங்கு பிறைட்லாந்து என்னுமிடத்தில் (1807 யூனில்) நிகழ்ந்த போரில் இரசியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பின் நெப்போலியனும் சார்மன்னனும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டனர் அதுவே 'ரில்சிற்' உடன்படிக்கையாகும். அதன் கீழ் பிறசியாவின்மேற்குப்பகுதி வெஸ்ற்பேலிய இராச்சியத்துடன் இணைக்கப்பட்டு நெப்போலியனது சகோதரனுகிய ஜெரோம் என்பவனின் கீழ்விடப்பட்டது. பிறசியாவின் கிழக்குப்பகுதிபிலுள்ள போலந்துப் பிரதேசம்சாக்சனி மன்னனுக்குக் கொடுக்கப்பட்டது சார்மன்னன் நெப்போலியனுக்கும் இங்கிலாந்துக்குமிடையில்சமரசம் ஏற்படுத்துவதற்கு உதவி செய்வதாகவும், அதுஏற்படாத பட்சத்தில் இங்கிலாந்துக்கு எதிராகப் போரிடுவதாகவும் வாக்குறுதியளித்தான். அத்தசமயம் துருக்கியின் விடயங்களில் தான் ஈடுபடுவதில்லையென நெப்போலியன் வாக்குறுதியளித்தான். ரில்சிற் உடன்படிக்கை நெப்போலியனது எழுச்சியின் மணி மகுடமாய்த்திகழ்ந்தது எனலாம். ஆனால் நெப்போலியனதுஆதிக்கம்நீடிக்கவில்லை. இங்கிலாந்து இன்னும் வெற்றிகொள்ளப்படவில்லை. அது தன் கடல் வலிமை பிரான்சுக்கு ஒரு சவாலாக அமைந்தது. அதே சமயம் நெப்போலியனால் நசுக்கப்பட்ட பிறசியாவில் 'தேசியஉணர்ச்சி' உருவாகியது. அது படிப்படியாக ஸ்பெயின் ஆஸ்திரியா முதலிய நாடுகளுக்குப் பரவி இறுதியில் ஐரோப்பிய நாடுகள் முழுவதையும், நெப்போலியனது ஆதிக்கத்துக்கெதிராகத் திரட்டியது அன்றியும் இங்கிலாந்துக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட கண்டத் திட்டமும் அத்தகைய ஒரு தேசிய எதிர்ப்பைப் பலப்படுத்தியது. இவ்வாறு ஒன்று திரண்டசக்திகளுக்குமுன் நெப்போலியனது சாம்ராச்சியம்சரிந்து விழுந்தது.

'ரில்சிற்' உடன்படிக்கையின் பின்னர் நெப்போலியன் தனது 'கண்டத்திட்டத்தை' த் தீவிரமாகச் செயல்படுத்தத் தொடங்கினான். பேளின் கட்டளைகளும், (1806) மிலான் கட்டளைகளும் (1807) பிரித்தானிய பொருட்கள் பிரான்சிலும் அதன் நட்புநாடுகளினதும் துறைகளில் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுத்தன. அத்தடையை மீறும் கப்பல்களின் பொருட்கள் பறிமுதலாக்கப்படும் என நெப்போலியன் கட்டளையிட்டான் அதற்கு எதிராக இங்கிலாந்து 'கழகக்கட்டளைகள்' விடுத்துத் தனது வர்த்தகத்தை அனுமதி காத துறைகளுடன் வர்த்தகத்தில் ஈடுபடாதவாறு நடுநிலை நாடுகளுக்குத் தடைவிதித்தது. கண்டத்திட்டம் இங்கிலாந்துக்கு மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளுக்கும் பெரும் தொல்லைகளை ஏற்படுத்தியது. இங்கிலாந்து, ஐரோப்பியகோதுமையைப் பெறமுடியாது சிரமப்பட்டது. அதே சமயம் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களையும் குடியேற்றநாட்டுப்பொருட்களாகிய தேயிலைகோப்பி புகையிலை, சீனி, முதலியவற்றையும் ஐரோப்பிய நாடுகள் பெறமுடியாது போயிற்று. ஆயினும் போத்துக்கல், இரசியா ஆகியநாடுகள் வழியாகக் கள்ளக்கடத்தல்பெருமளவில் இடம்பெற்றது.

இது இவ்வாறிருக்க பிறசியாவில் தேசிய உணர்ச்சி ஒன்று வேகமாகவளர்ந்தது ஸ்ரெயின், ஸ்ரேன்கோஸ் ஹம்போல்ட்என்னும் திறமைமிக்க மூன்று மந்திரிகளின் முயற்சியினால் பிறசியா புதியமுறையில் கட்டியெழுப்பப்பட்டது, ஸ்ரேன்கோஸ் பிறசியப்படையைப் புனரமைத்து அதன் போர் வலிமையை அதிகரிக்கச் செய்திருந்தான். ஹம்போல்ட் புதிய கல்வித் திட்டமொன்றை வகுத்ததோடு பேளின் பல்கலைக் கழகத்தையும் நிறுவினான். அது ஜேர்மனியின் தேசிய கலாச்சார நிலையமாகியது. இவ்வாறு 1813ம் ஆண்டளவில் பிறசியா படைபூண்ட, போர் மனப்பான்மையுள்ள புதிய ஒரு நாடாகத்திகழ்ந்தது.

தீபகற்பப் போர் :- பிறசியாவின் நிலை இவ்வாறிருக்க, ஸ்பெயின் அரசியலில் சில எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டன அங்கு ஆட்சிக்கு எதிராக ஒரு கலவரம் ஏற்பட்டபோது அச்சமுற்ற அரசன் தனது உரிமையை மகனுக்கு அளித்துவிட்டுப் பின்னர் அதை திரும்பப் பெற்றுக்கொண்டான். அந்நிலையில் தந்தையும் தனயனும் நெப்போலியனுக்கு முறையிட்டபோது அவன் அவர்கள் இருவரையும் அச்சுறுத்திவிட்டு ஸ்பெயினைக் கைப்பற்றுமாறு ஒரு படையை அனுப்பினன். அப்படை அந்நாட்டைக் கைப்பற்றிய போதிலும் நாட்டில் ஆங்காங்கு ஏற்பட்ட தேசிய எழுச்சிகளை அடக்கமுடியாதுபோயிற்று. 1808 யூலையில் பேலன் என்னுமிடத்தில் 20000 பேரைக்கொண்ட ஒரு பிரெஞ்சுப் படை ஸ்பானியரால் தோற்கடிக்கப்பட்டது. இத்தோல்வி நெப்போலிய சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிக்கு முன்னறிவிப்பாகியது.

இதற்கிடையில் தனது 'கண்டஞ்துட்டத்தை' ஆதரிக்காத காரணத்தால் போத்துக்கலுக்கு நெப்போலியனுல் யூநோட் என்பவன் தலைமையில் அனுப்பப்பட்ட படைகள் போத்துக்கலைக் கைப்பற்றியிருந்த வேளையில் யூநோவுக்குஎதிராகப்போத்துக்கீசர் கிளர்ச்சி செய்து இங்கிலாந்தின் உதவியைக்கோரினர். உடன் ஆதர் வெல்லஸ்லி தலைமையில் ஒரு படைபோத்துக்கலில் இறங்கி 'விமீரோ' என்னுமிடத்தில் பிரான்சியப் படைகளைத் தோற்கடித்து அவற்றை நாட்டை விட்டு வெளியேற்றினை. இவற்றின் விளைவாக, நெப்போலியன் தானே சூடா நாட்டுப் போரில் தலையிட்டான். அவன் ஸ்பானியக் கிளர்ச்சிக்காரர்களைத் தோற்கடித்து விட்டுத் தனது தம்பியாகிய யோசேப்பை மீண்டும் அரச பதவியில் இருத்தினன். ஆயினும் ஆஸ்திரிய அபாயத்தினுல் சூடாநாட்டுப் போரை முடிக்காமலே யே அவன் நாட்டுக்குத் திரும்பினன். இதனுல் அப்போர் தொடர்ந்து நடந்தது. பின்னர் 1809 இல் வெல்ஸ்லி ஸ்பெயின் மீது படையெடுத்துப் பிரெஞ்சுப் படைகளைத் 'தலவரா' என்னுமிடத்தில் தோற்கடித்

தான். 1810இல் பிரஞ்சுத் தளபதி மசீனே ஆங்கி லேயரைப் போத்துக்கலிலிருந்து அகற்ற எடுத்த இறுதி முயற்சியும் தோல்வியடைந்தது. அடுத்த ஆண்டு பிரித் தானியதளபதிவெல்லிங்டன் பிரான்சியப் படைகளைப் போத்துக்கல்லிலிருந்து துரத்திவிட்டு 1811ல் ஸ்பெயின் தலைநகரான மட்றிடடைக் கைப்பற்றினான். இதன் பின்னர் 1812இல் விற்ரோறியாவிலும் 1813இல் ரௌ லோசிலும் அவன் பிரான்சியருக் கெதிராகப் பெற்ற வெற்றிகள் குடாநாட்டுப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தன. ஸ்பானியப் 'பிளவை' தான் என்னை அழித்ததுஎனநெப்போலியன் பின்னொரு சந்தர்ப்பத் தில் குறிப்பிட்டான் ஏனெனில் இப் போருக்காக அவன் தனது போர்வீரரில் 2 இலட்சம்பேரை ஸ்பெயி னில் வைத்திருக்கவேண்டியிருந்தது. அத்துடன் போர் நீண்டகாலம்நடைபெற்றதனால் அவன்வேறு போர்களு க்கு அப்படையைப் பயன்படுத்த முடியாதுபோயிற்று.

குடா நாட்டுப்போரை இடைநடுவில் விட்டுச்செ ன்ற நெப்போலியன் பவேறியாவிற் படையெடுத்தஆஸ் திரிய ஆச்டியூக் சார்ளசை எதிர்க்கச் சென்றிருந்தான். அங்குதொடக்கத்தில் சில பின்னிடைவுகள் ஏற்பட்ட போதிலும் 1809இல் 'வாகினும்' என்னுமிடத்தில் ஆஸ்திரியாவை வெற்றிகொண்டான். ஆஸ்திரியாநெப் போலியனுடன் சமாதானம் செய்துகொண்ட தோடு தல்மேசியா, குரோசியா, மாகாணங்களைப் பிரான்சுக் கும், கலிசியாவின் பெரும் பகுதியை வார்சோடச்சிக் கும்கொடுக்க இசைந்ததோடுபோர் நட்டஈடுகொடுக்க வும் சம்மதித்தது.

இரசியப்போர் :- இவ்வாறு நெப்போலியன் ஆஸ்தி ரிய அபாயத்தை நீக்கியிருந்த காலத்தில் இரசியாவுக் கும் நெப்போலியனுக்குமிடைநிலவிவந்த நேச உறவு முறிந்தது. நெப்போலியன்வார்சோடச்சியை நிறுவிய தும் அதைப் பலப்படுத்தியதும் இரசிய மன்னனுக்குப் பிடிக்கவில்லை. அதேசமயம் தனது கண்டத்திட்டத்

துக்குஒத்துழைப்புத்தர மறுத்ததினால் நெப்போலியன் சார் மன்னன் மீது சீற்றம் கொண்டிருந்தான். அத்துடன் 1810இல்சார் பிரெஞ்சுப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கத்தொடங்கியதுடன் 1811 இல் தனது நாட்டுத் துறைகளைப்பிரித்தானிய கப்பல்களுக்கும் திறந்து விட்டிருந்தபடியால் நெப்போலியனது ஆத்திரத்திற்கோ அளவில்லை. இக்காரணங்களினால் இரசியாவைத் தண்டிக்க எண்ணிய நெப்போலியன் 1812 யூனில் 400,000 போர் வீரரைக்கொண்ட ஒரு பிரமாண்டமான படையைத் திரட்டிக்கொண்டு இரசியா மேற் படையெடுத்தான்.

இரசியர் தமது போர்த் தந்திரத்தின் ஒரு பகுதியாகப்படைகளுடன் பின்வாங்கிச் சென்றனர். அவ்வாறுசெல்லும்போது தாம் சென்ற பாதையை அழித்தும் சென்றனர். நெப்போலியனும் தொடர்ந்து சென்றான் ஸ்மொன்ஸ்க்கிலும் அவன் எதிர்பார்த்தபடி வெற்றிகிடைக்கவில்லை. இதனால் மாஸ்கோ வரை செல்லத் தீர்மானித்தநெப்போலியன்தொடர்ந்து முன்னேறிச் செப்ரம்பரில் மாஸ்கோவையடைந்த பொழுது அந்நகரம்வெறுமையாயிருந்ததைக் கண்டான். அத்துடன் இரசியப் படைகளினால் மூட்டப்பட்ட நெருப்பும் நகரில் பெரும் பகுதியைச் சாம்பலாக்கி விட்டது. அந்நிலையிலும் சார் சமாதானம் செய்வதாயில்லை. அதே சமயம் குளிர்காலமும் நெருங்கிக்கொண்டிருந்தது படைகளின் உணவு நிலையும் படிப்படியாக மோசமடைந்தது. இத்தகையஇக்கட்டான நிலையில் பின்வாங்குவதே புத்தியானதுஎன எண்ணிய நெப்போலியன் தான்முன்னேறிவந்தபாதையைவிட்டு வேறொருபாதையைப் பின்பற்ற முனைந்தான். ஆனால் இரசியப் படைகள் அவனைத் தடுத்துப் பழைய பாதையையே பின்பற்றச் செய்தன. நெப்போலியனும் படைகளும் அப்பாதையைப் பின்பற்றிச் செல்லும்போது நவம்பர் 6 அளவில் மழைப்பனியும் விழத் தொடங்கியது அதன் பின் அவனது படைகள் அனுபவித்த வேதனையும்அவற்றுக்கு ஏற்பட்ட அழிவும் சொல்லிலடங்கா.

நெப்போலியன் நாடு திரும்பியபோது 20,000 பேர் மட்டும் உயிருடன்வந்தனர். எஞ்சியயோரை (3,80,000 பேர்) இரகியப் போரும் மழைப்பணியும் பலி கொண்டன.

நாடு திரும்பிய நெப்போலியன் நிம்மதியாக இருக்க முடியவில்லை. விரைவில் பிறசியப்படைசளும் சுவிடிஷ் படைகளும் ஒன்று சேர்ந்து கூட்டாக ஒரு தாக்குதலே மேற்கொண்டபோது நெப்போலியன் கூட்டுப் படைகளை வெல்ல முடியா நிலையில் தற்காலிக போர் நிறுத்தம்செய்து கொண்டான். ஆயின் அவ்விடை வேளையில் ஆஸ்திரியாவும், நெப்போலிய எதிர்ப்பு அணியுடன் சேர்ந்ததைத் தொடர்ந்து ஆஸ்திரிய, பிரசிய,சுவீடிஷ் படைகள் மூன்றையும் நெப்போலியன் சமாளிக்க வேண்டியாயிற்று அவன் முதலில் ஆஸ்திரியப் படைகளை ட்றெஸ்டன் என்னுமிடத்தில் தோற்கடித்தான் ஆயினும் அம் மூன்று படைகளும் கூட்டாக தாக்கிய போது லீப்சிக்கில் மூன்று நாட்கள் இடம்பெற்ற'நாடுகளின் போரில்' நெப்போலியன்படுதோல்வியடைந்தான் எனினும் அவன் தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை. பின்னர் பிருங்போட் உடன்படிக்கையில் கூட்டு நாடுகள் நெப்போலியனிடம் தாராள மனப்பான்மையுடன் நடந்தன பிரான்ஸ் கிழக்கே றைன் நதியையும், தெற்கே பிரனீசையும் எல்லைகளாகக்கொள்ள அவர்கள் அநுமதித்தனர். ஆனல் நெப்போலியன் அதை ஏற்க மறுத்ததன் விளைவாக, கூட்டு நாடுகளின் படைகள் பிரான்சின் மேல்படையெடுத்தன. அவற்றின் தாக்குதலைத் தொடக்கத்தில் சமாளித்தபோதிலும், இறுதியில்ஆங்கிலேயரும் படையுதவி செய்தபோது நான்கு நாட்டுப் படைகளின் தாக்குதலுக்கு எதிர்நிற்க முடியாத நிலையில் நெப்போலியன் தனதுவாழ்க்கையில் முதல் முறையாகத் தோல்வியை ஒப்புக்கொண்டான்; இதன் மேல் நெப்போலியன் எல்பாத்தீவுக்குநாடுகடத்தப்பட்டான்.

நெப்போலியன் நாட்டை விட்டு நீங்கிய பின் XVIம் லூயின் சகோதரன் XVIIம் லூயி என்றபட்டப்பெயருடன் பிரான்சியமன்னனாக்கப்பட்டான். அவன் காலத்துக்கேற்றபடி, தாராண்மைக் கொள்கையைக் கடைப்பிடிக்க முயன்றான். ஆயினும் அவன் ஆட்சிமக்களைத் திருப்தியளிக்கவில்லை புரட்சிக்காலத்தில் வெளியேறிய பிரப்புக்கள் நாடு திரும்பித்தமது நிலத்துக்கு உரிமை கோரலாம் என அக்காலத்தில் குடியானவர்கள் பீதியுற்றிருந்தனர். அதே சமயம் பல படைத் தளபதிகள் நெப்போலியனது உன்னத நாட்களை எண்ணியபடியே காலம் கழித்தனர் மேலும் இக்காலத்தில் வியன்னாவிற் கூடிய நேசநாடுகள் போரிற் பயனைப் பங்குபோடுவதில் சச்சரவிட்டுக்கொண்டும் இருந்தன. இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட நெப்போலியன் 1815-1-3 இல் எல்பாவிலிருந்து 1000 போர்வீரருடன் தப்பிவந்து பிரான்சில் இறங்கினான்.

நூறு நாள் ஆட்சியும் இறுதி வீழ்ச்சியும்:- நெப்போலியனது வருகையை குடியானவர்கள் வரவேற்றனர். அதேசமயம் அவனைப் பிடிக்கச் சென்ற படைகளும் அவன் பக்கம் சேர்ந்தன. இப்பொழுது நெப்போலியன், புரட்சியின் பாதுகாவலனாகவும் அமைதி, சுதந்திரம் என்பவற்றின் ஆதரவாளனாகவும் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றினான். ஆனால் அது நீடிக்கவில்லை. விரைவில் ஆங்கிலேய, பிறசிய படைகள் பிரான்சின் மேல் படையெடுத்தன. நெப்போலியன் பிறசியப்படைகளைப் பின்வாங்கச் செய்த போதிலும் அவை இறுதியில் ஆங்கிலேயரின் படைகளுடன் வாட்டர்லூவில் இணைந்தன. அங்குஒல்லாந்த, பெல்சியப்படைகளும் நெப்போலியனுக்கெதிராகத் திரண்டிருந்தன. அந்நிலையில்நெப்போலியன் தோல்வியடைவது தவிர்க்க முடியாது போகவே அவன் பாரிசுக்குத் தப்பியோடினான். அங்கு அவன் இரண்டாம்முறையும்தன்பதவியை துறந்துவிட்டுஆங்கிலேயரிடம் சரண் புகுந்தான். நெப்போலியனது ஆட்சி இவ்வாறு முடிவடைய ஐரோப்பிய வரலாற்றில் அடுத்த அத்தியாயம் ஆரம்பமாகியது.

அத்தியாயம் 17

தொழிற் புரட்சியும் மனிதாபிமான இயக்கங்களும்

பிரெஞ்சுப்புரட்சி, அமெரிக்கப் புரட்சி ஆகியன ஆட்சிமுறையில் ஏற்படுத்திய மாற்றங்களை முன்னர் படித்தோம். இனி, பொருளாதாரத் துறையில் மாற்றங்களை ஏற்படுத்திய புரட்சியையும் அதனோடு தொடர்புள்ள இயக்கங்களையும் நோக்குவோம். தொழிற் புரட்சி, முன் குறிப்பிட்டபுரட்சிகளைப் போலச் சடுதியாக ஏற்படவில்லை, ஆயினும் குறிப்பிட்ட ஒரு கால எல்லையில் (1760–1830) அது உற்பத்தி, போக்குவரத்து ஆகிய துறைகளில் விரைவாகவும் அதிகமாகவும் மாற்றங்களைப்புகுத்திய படியால் அதையும் புரட்சி எனக் கூறுவது தவறன்று.

தொழிற்புரட்சிக்கு அச்சாணிஎந்திரபாவனையாகும் மனிதவலுவுகுப்பதிலாக அதனிலும் பன்மடங்குசக்தி வாய்ந்த வையான எந்திரங்கள் பலதுறைகளிலும்பயன் படுத்தப்பட்டதே இம்புரட்சியின் பிரதான அமிசமாகும் இத்தகைய தொழிற்புரட்சியின் தொட்டிலாக அமைந்தது இங்கிலாந்தாகும். அங்கு பதினெட்டாம் நூற்றாண்டில் நிலவிய நிலைமைகள் தொழிற்புரட்சிக்கு வாய்ப்பானவையாயிருந்தன. இங்கிலாந்து உலகெங்கிலும் விரிந்துபரந்த ஒரு சாம்ராச்சியத்தை யுடையதாயிருந்தது. இத்தகைய கடல் கடந்த வர்த்தகத்தினால் நாட்டில் பெருந்தொகையான முதல் குவிந்தது இதுதொழில் துறைகளின் விருத்திக்கு உதவியது. அதேசமயம் இங்கிலாந்து இரும்பு நிலக்கரி, முதலிய பல அடிப்படைமூலப் பொருட்களைத் தனது காலடியில் கொண்டிருந்தது இத்தகைய வாய்ப்பான சூழலில் தான் புதிய எண்ணங்களும் ஆராய்ச்சிகளும் முளைவிட்டன. அவைஉலகின் பொருளாதாரத்துறையில் புரட்சியை ஏற்படுத்தின.

தொழிற்புரட்சி தொழில்கள் போக்குவரத்து முதலிய துறைகளிலும் பயிர்ச்செய்கையிலுமே மகத்தான மாற்றங்களை ஏற்படுத்தி அவற்றின் முன்னேற்றத்துக்கு உதவியது. எந்திரபாவனையெ தொழிற்புரட்சியின்மூலாதாரம் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது.எந்திரங்களைச் செய்வதற்கு இரும்பு முதலிய உலோகப்பொருட்கள் தேவை. அதேசமயம் எந்திரங்களை இயக்குவதற்கு ஒரு வலு தேவை. அது நீராவி நீர்மின் அணு எனப்பலவாகும். அவற்றில் முதலிற்பயன்பட்டது நீராவியாகும்

எந்திரபாவனை முதல்முதல் புகுத்தப்பட்டது நெசவுத் தொழிலிலாகும். அத்தொழில் நீண்டகாலமாக இங்கிலாந்தில் குடிசைத்தொழிலாக நடைபெற்றுவந்தது. இந்தியா,எகிப்து ஐக்கிய அமெரிக்கா முதலியநாடுகளிலிருந்துஇறக்குமதிசெய்யப்பட்டபஞ்சின் அடிப்படையில் இங்கிலாந்து தன் பருத்திநெசவுத்தொழிலைக் கட்டியெழுப்பியிருந்தது. பருத்தி நெசவுத்தொழில் 18 ஆம் நூற்றாண்டுவரை பழமையான முறையில் கைராட்டை மூலம் நடைபெற்றுவந்தது அம்முறையில் மிக மெதுவாகவே உற்பத்திசெய்யலாம், எனவே அந்நிலையையை மாற்றப் பலர் முயற்சித்தனர். இத்துறையில் முதலாவது முக்கியமான கண்டுபிடிப்பு பறக்கும் நூல்நாழியாகும். இதை 1734 இல் ஜோன் கே என்பவர் கண்டுபிடித்தார் இது தறியை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து நெசவுசெய்ய உதவியது, இதற்குப் பின்னர் 1764 ல் ஜேம்ஸ் ஹார்கிறீவ்ஸ் என்பவர் நூல்நூற்கும் ஜென்னி என்னும் புதிய ஒரு கருவியைக்கண்டுபிடித்தார் இது ஒரே நேரத்தில் 8 தறிகளை இயக்கியது. 1788 இல் இங்கிலாந்தில் மட்டும் 20,000 ஜென்னிகள் காணப்பட்டன இது அக்கருவியின் இறப்பை உணர்த்தும். ஹார்கிறீவ்சைத்தொடர்ந்து 1769 இல் றிச்சாட் ஆக்றைற் என்பவர் நீர்மின்வலுவைப் பயன்படுத்தி நூல் நூற்கும் தறிகளை இயக்கும் முறையைக் கண்டுபிடித்தார்பின் சாமுவேல்குறொம்ரன்என்பவர்ஜென்னிமுறை

யையும் ஹார்கிறீவஸ் முறையையும் கலந்து மியூல்என் னும் ஒரு புதிய எந்திரத்தைக் கண்டுபிடித்தார். இது மென்மையானதும் கடினமானதுமான நூலை நூற்கஉத வியது. இதன் பின்னர் காட்டைறைற் என்னும் போதகர் நீர் வலுவின் மூலம் இயக்கக்கூடிய விசைத்தறியைக் கண்டுபிடித்தார் மேற்கூறப்பட்ட புதியகருவிகள் இது வரை குடிசைத்தொழிலாகஇருந்த நெசவுத் தொழிலை ஆலைத்தொழிலாக மாற்றின.

நெசவுத் தொழிலை மேலும்விருத்தியடையச்செய் தது. நீராவியின் உபயோகமாகும். நீராவியின் மூலம் இயக்கப்படும் பம்பிகள் 1705இல் நியூகொமென் என்ப வரால் கண்டுபிடிக்கப்பட்டன. அவை கரிசுரங்களிலி ருந்து நீரைவெளியேற்றப்பயன் பட்டன நியூகொமன் கையாண்ட முறையைச் சீரமைத்ததுதான் ஜேம்ஸ் வாட் நீராவி எந்திரத்தைகண்டுபிடித்தார் நீராவிஎந்தி ரம் முதல் முறையாக 1785இல்நொட்டிங்காமில்உள்ள ஒரு தொழிற்சாலையில் பயன்படுத்தப்பட்டது

'வலு' உற்பத்திமுறையில் மாற்றங்கள் ஏற்பட்ட அதேசமயம்' எந்திரங்களை' உற்பத்திசெய்யும்முறைகளி லும் மாற்றங்களும் ஏற்பட்டன இரும்புஉருக்கு என்ப வற்றின் உற்பத்தியும் உபயோகமும்தான் தொழில்களை எந்திரமயமாக்கின இங்கிலாந்துஇரும்பு, நிலக்கரி என் னும் இரண்டையும் பெருமளவில் கொண்டிருந்தபடி யால் எந்திரஉற்பத்தி எளிதாகியது. இரும்பு தனித்து அதிக உறுதியற்றது எனவே அதை உருக்கிச்சுத்திகரி த்து வேறுகனிப்பொருள்களையும்கலந்துஉருக்குஎன்னும் உறுதியான உலோகப்பொருளை ஆக்கும் துறையில் சீமென்ஸ் என்னும்ஜேர்மனியாரும்பெசமர் என்னும் ஆங்கிலேயரும்ஆராட்சிசெய்து புதியமுறைகளைக்கண்டு பிடித்தனர் மேலும் இரும்பைஉருக்காக மாற்றுவதற்கு பயன்படும் 'கோக்' எனப்படும்கடினமான சுட்டநிலக் கரியைஉற்பத்திசெய்யும்முறை ஏபிரகாம் டார்ப்பிஎன் பவரால் 1709ல்அறிமுகப்படுத்தப்பட்டன. இவருக்குப் பின்னர் 1784இல் ஹென்றிகோட் என்பவர் இரும்பை உருக்குவதில் ஒரு புதிய முறையைக்கண்டு பிடித்தார். இவற்றின் விளைவாகஉருக்கின் பாவனை பன்மடங்கு அதிகரித்தது.

போக்குவரத்துத் துறையில் புரட்சி-எந்திரங்களின் பாவனையும் பிற கண்டுபிடிப்புகளும் போக்குவரத்து முறைகளிலும் பல புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. வீதிகளை அமைப்பதில் புதிய முறைகள் பின்பற்றப்பட்டதே இத்துறையில் ஏற்பட்ட முதலாவது மாற்றமாகும். முன்னர் உறுதியற்ற மேற்பரப்பைக் கொண்ட கற்பதிக்கப்படாத வீதிகளே பாவனையிலிருந்தன. அவைபாரமான வண்டிகளின் பாவனைக்கு ஏற்றவையல்ல. எனவே கடினமான மேற்பரப்பையுடைய புதிய வீதிகளை அமைப்பதில் புதிய முறைகள் பயன்படுத்தப்பட்டன. மெற்காவ் என்பவர் தான் இத்துறையில் முன்னோடி. அவர் 1765-1810காலத்தில் 250 மைல்நீளமான சிறந்த வீதிகளை அமைப்பித்தார். அவருக்குப்பின்னர் தோமஸ் ரெல்போட் வீதியமைப்பு வேலைகளில் மேலும் சிறந்த முறைகளைப் பின்பற்றியதோடு பாலங்களையும் அமைத்தார். இவர்களைவிட அதிக புகழ்பெற்றவர் ஜோன் மக்கடம் என்பவராவர். அவர் கற்களை அடியிற் பதித்து அவற்றின்மேல் சிறு சல்லிகளைப்பரப்பி இறுக்கி கடினமான நீர்உட்புகாத வீதிகளை அமைப்பதில்வெற்றி பெற்றார். 1830அளவில் 22,000மைல் நீளமானவீதிகள் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டன.

வீதிகளின் சீரமைப்பைவிட விசேடமான சாதனை அவற்றைப் பயன்படுத்தும் பலவகையான சாதனங்களின் கண்டுபிடிப்பாகும். 1885இல் டெயிம்ர்ல பெற்றேலியத்தின் மூலம் இயங்கும் மோட்டார் எந்திரத்தைக் கண்டுபிடித்ததைத்தொடர்ந்து லொரி, பஸ்'கார் முதலியன பெருந்தொகையாக வீதிகளைப் பயன்படுத்தின. இதற்கு முன்னரே ஜோர்ஜ் ஸ்ரீவன்சனால் கண்டுபிடிக்கப்பட்ட நீராவிப் புகையிரதம் 1828 இல் ஸ்ரொக்ரன் டார்லிங்ரன் பாதையில்பாவனைக்கு வந்திருந்தது. 1868 அளவில் இங்கிலாந்தின் பிரதான புகையிரதப் பாதைகளின் அமைப்புவேலை பூர்த்தியடைத்திருந்தது.

1867இல் கொழும்பு-கண்டி புகையிரத வீதியும் பூர்த்தி யாகியிருந்தது கவனிக்கத்தக்கது இவ்வாறு நீராவிஎந் திரங்கள் புகையிரதங்களை இழுக்கப் பயன்பட்ட முறை யைக் கடற்கப்பல்களை இயக்குவதற்கும் பயன்படுத்த லாம் என்பதை புல்ரன் எடுத்துக் காட்டினர். நீராவி எந்திரப்படகுகளை கிளாட்ஆற்றில் பெல், வில்லியம்ஆகி யோர் செலுத்திக் காட்டினர். 1819இல் 'சவன்னா' என் னும் கப்பல் அத்திலாந்திக்கை முதல் முதற் கடந்து சென்றுஒருசாதனையை நிலைநாட்டியது. போக்குவரத் துத்துறையில் உன்னதசாதனை 20ம் நூற்றாண்டில் ஏற் பட்டது. 1903இல் றைட் சகோதரர்களாற் கண்டு பிடிக்கப்பட்ட ஆகாய விமானமே அது வாகும்.

போக்குவரத்துத் துறையைத் தவிர இன்னொரு துறையிலும் புரட்சி ஏற்பட்டது. அது செய்திகளை அனுப்பும் முறையாகும் முற்காலத்தில் 'கொண்டோ டிகள்' அல்லதுகுதிரையிற்செல்லும் சேவகர்கள் தாம் செய்திகளை எடுத்துச் சென்றனர், பின்னர் புகை யிரதங்கள் ஓடத்தொடங்கியபோது தபாற் சேவை ஓரளவதுரிதமாக நடைபெற்றது எனலாம். ஆயினும் புகையிரதவசதியில்லாதஇடங்களில் பழைய முறை களே பின்பற்றப்பட்டன. இக்குறைபாடுகளை வீட்லி என்பவரும், பெல் என்பவரும் போக்கினர். வீட்லி என்பவர், கம்பிகள் மூலம் கடல் வழியாகவும், தரை வழியாகவும்செய்திகளை அனுப்பும் 'தந்தி' முறையைக் கண்டுபிடித்தார். (1843-49) அதே சமயம பெல்என் பவர் 'தொலைபேசி' யைக்கண்டுபிடித்தார். ஆஸ்ல் மாக்கோனி என்னும் இத்தாலியராற் கண்டுபிடிக்கப் பட்டகம்பியில்லாத்தந்தி முறைதான் இத்துறையின் மணி மகுடமெனலாம். இதன் விளைவாகக்கம்பிஎதனை யும் துணையின்றி உலகின் எப்பகுதியிலுள்ளோருட னும் தொடர்புகொள்ளமுடிந்தது.

மேற் கூறப்பட்டதரை, கடல், போக்குவரத்து வசதிகளுடன் கால்வாய்ப் போக்குவரத்தின் முன்னேற் றத்தையும் குறிப்பிடலாம். இத்துறையில் பிரிண்ட்லி

யின் பணி குறிப்பிடத்தக்கது. அவரது உழைப்பின் பயனாக 1800 அளவில் 3000 மைல் நீளமான கால்வாய் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டிருந்தன. லிவர்ப்பூல், மான்செஸ்டர் கால்வாய் இவற்றில் முக்கியமானது.

பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் :-

தொழிற்புரட்சி, பயிர்ச்செய்கைத் துறையிலும் அதனோடு தொடர்புள்ள விலங்கு வேளாண்மைத் துறையிலும் பல மாற்றங்களைப் புகுத்தியது. பயிர்ச் செய்கைமுறையில் இங்கிலாந்து பழமையைத் தழுவி வந்தது இதன்படி நிலத்தில் தொடர்ச்சியாக ஒரு பயிரே செய்கை பண்ணப்பட்டது. அவ்வாறு நிலத் தைப் பயன்படுத்துவதால் அது இழக்கும் செழிப்பை மீண்டும் பெறுவதற்காக ஒருதுண்டு நிலம் ஒன்றுவிட் டொரு வருடம் பயிரிடப்பட்டது இம்முறைக்குப் பதிலாக, மாற்றுப் பயிர்ச்செய்கைமுறை ரவுன்சென்ட் என்பவரால் புகுத்தப்பட்டது. அம்முறை நிலத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்த உதவியது. மேலும் இக்காலத்தில் பல புதிய பயிர்ச்செய்கைக் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன ஜெத்ரோரல் 1701 இல் விதை ப்பு எந்திரத்தைக் கண்டுபிடித்தார் அதைத்தொடர் ந்து உழுதல், கதிரறுத்தல் பஞ்சிலிருந்து விதைகளை நீக்குதல்முதலிய வேலைகளைச் செய்யும் எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. அத் துடன் பயிர்காப்பு முறை அதிவிளைச்சலைப் பெறும் முறை ஆகியவற்றிலும் புதிய வழிகள் பின்பற்றப்பட லாயின. இவை அறிவியல் வளர்ச்சியின் விளைவாகும். இவ்வாறு பயிர்த தொழிலில் ஏற்பட்டவற்றைப் போன்ற மாற்றங்கள் காலநடையில் கால்நடைப்பண் ணைத் துறையிலும் புகுந்தன. அதன் விளைவாக, கால் நடைகளின் விருத்தி, நோய்தடுப்பு முதலிய விடயங் களில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. கொலிங், டெருபேட், பேக்வெல் ஆகியோர் இத்துறையில் வழி காட்டிகளாயிருந்தனர். இவ்வாறு புதிய பயிர்ச்செய் முறைகளும், பல புதிய பயிர்களும் அறிமுகப்படுத்தப்

பட்ட அதேசமயம் குடித்தொகை அதிகரிப்புக் கேற்ப அதிக உணவை உற்பத்தி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது இங்கிலாந்தில் இன்னமும் வழக்கிலி ருந்த 'திறந்தவயல் வேளாண்மை' முறை அதற்குத் தடையாக இருந்தது எனவே சொந்தக்காரர்களான நிலச்சொந்தக்காரர்கள் பாராளுமன்ற அநுமதியுடன் வயல்களை அடைத்து, பெரிய பெரியநிலத்துண்டுகளாக அவற்றை மாற்றும் முயற்சியில் ஈடுபடுவராயினர். 16ம் நூற்றாண்டிலிருந்தே வயல்களை அடைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் 1750க்குப் பின் அம் முயற்சி பெருமளவில் கைக்கொள்ளப்பட் டது. இதன் விளைவாக நிலத்துக்கு உரிமையை நிரூ பிக்க முடியாத பல சிறு நிலச் சொந்தக்காரர்கள் பயிர்தொழிலைக் கைவிட வேண்டியதாயிற்று. இவ் வகையினர், பட்டணங்களுக்குச் சென்று வேலை கோரிய போது, வேதன வீழ்ச்சியும், வேலையின்மையும் ஏற் பட்டன.

தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் :-

தொழிற் புரட்சி, உற்பத்தித் துறையில் ஏற்படுத் திய மாற்றங்களில் ஆலைமுறை உற்பத்தி பெருவாரி யான உற்பதி என்னும் இரண்டும் மிக முக்கியமான வை. ஆலை முறை பழைய குடிசைக் கைத் தொழில் முறையை மாற்றியது. ஆலைகளில் பொருந்தொகை யான தொழிலாளர்கள் ஒன்று கூடி வேலையைப் பகிர் ந்து செய்யும் புதுமுறை 18ம் நூற்றாண்டில் பிற்பகுதி யில் ஆரம்பமாகியது. இம்முறையின் கீழ் ஒவ்வொரு தொழிலாளியும் தனது சேவைக்கு ஊதியம் பெற் றான். இதனால் அவன் இன்னொருவனை நம்பி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது இதுதான் முதலாளி தொழிலாளிவர்க்க வேறுபாடடின் தொடக்க நிலையா கும் இம் முறையின் கீழ்பணம்படைத்த ஒரு சிலர் தொழிறசாலைகளை நிர்மாணித்து உற்பத்தியில் ஈடுபட் டபோது, பொருந்தொகையான வறிய மக்கள் அம்முத லாளிகளின் கீழ் வேலைசெய்து பெறும் வேதனத்தைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டவேண்டிய நிர்க்கதிக்

குள்ளாளர்கள் மேலும் முதலாளிகள் தொழிலாளி களைக் கசக்கிப் பிளிந்து அவரிகளிடம் ஆகக்கூடிய அளவு வேலைவாங்கவும் அதே சமயம் குறைந்த வேதனத்தைக் கொடுக்கவும் முற்பட 'ஆலைமுறை' இடமளித்தது. இதன் விளைவாக -முதலாளி-தொழிலாளி தகராறுகள் முளைத்தன. இவை பிற்காலத்தில் 'கதவடைப்பு' வேலை நிறுத்தம் என்னும் இயக்கங்களாகப் பரிணமித்தன. இரண்டாவதாக ஆலை முறைஉற்பத்தி தொடங்கப்பட்டதையடுத்து மக்கள் கிராமப் புறங்களிலிருந்து பெருந் தொகையாகஇடம்பெயர்ந்து வந்து ஆலைகளுக்கு அண்மையில்குடியேறியமையால்அப்பிரதேசங்கள் நாளடைவில் தொழிற்சாலைப் பட்டினங்களாக உருவெடுத்தன பர்மிங்காம், நொட்டிங்காம், நியூகாசில் மான்செஸ்டர் முதலிய பழம் நகரங்கள் இம்முறையிற் றோன்றியவையாம். இவ்வாறு மக்கள் தொழிற்சாலைப் பட்டினங்களை நோக்கிப் படையெடுத்தமையால் புதிதாக உருவாகிய அப்பட்டினங்களில் குடிபிருப்புப் பிரச்சினை சுகாதார வசதிப் பிரச்சினை முதலியனஎழுந்தன இவை உடனுக்குடன் தீர்க்கப்படாதபோது பல சமூகப் பிரச்சினைகள் (உம். சேரிகள், தொற்றுநோய்கள்) எழுந்தன இவற்றைச் சமாளித்தல்பெரும் பிரச்சினையாகியது. மூன்றுவதாக, ஆலைமுறை உற்பத்திபொருட்களைபெருந் தொகையாகவும், விரைவாகவும், எளிதாகவும் செய்ய உதவியதால்மனிதன்உடல்வலுவைப் பயன்படுத்த வேண்டிய அவசியம்நின்றுவிட்டது அதேசமயம் அதிகரித்து வரும் மக்களின் தேவைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படவும், பொருட்களின் விலை குறையவும் அம்முறை உதவியுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டவைஉற்பத்தி முறையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாம். இம்மாற்றங்களைப் போலவே போக்குவரத்துத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களும் மக்களின் வாழ்க்கையில் பல முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. போக்குவரத்துத் துறையிலும், தொடர்பு சேவைகளிலும் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களினால் இன்று உலகம்

'சுருங்கி' யிருப்பதைக்காண்கின்றோம். இதனால் பல நூற்றாண்டு காலமாக வெளியுலகத் தொடர்பு எதுவு மின்றிக் கிணற்றுத் தவளைகள் போல வாழ்ந்த உலக மக்கள் இன்று ஒருவரை ஒருவர் அறியவும், ஒருவரின் எண்ணங்களை மற்றவர் புரிந்துகொள்ளவும் முடிகிறது. மேலும்இன்றுஎந்த நாடாயினும் சரி முற்றிலும்தன்னை யே நம்பியிராது பிற நாடுகளிலும் தங்கியிருக்கும் வர்த்தகப் பொருளாதார முறையையே கைக்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறு வர்த்தக வளர்ச்சிக்குஉதவி யதன் மூலம் தொழிற்புரட்சி ஐரோப்பியரின் நாகரீகம் மொழி பண்பாடு முதலியன வெளியிடங்களிற்பரவவும் துணை செய்துள்ளது என்பதை உணரவேண்டும் மே லும் முதலாளி, தொழிலாளி வர்க்க வேறுபாடுகளும், ஆலை முறையும் புதிய வாழ்க்கைச் சித்தாந்தங்களின் பிறப்புக்கும்உதவியுள்ளன. 'சமஉடமை' 'பொதுஉட மை' என்பன அவற்றிற்குறிப்பிடத்தக்கவை அன்றியும் ஆலைமுறைத். தொழில் இங்கிலாந்தில் தொழிலாளர் கள் சீர்திருத்தங்களுக்காகப்போராடவும், பாராளுமன் றத்தில் பிரதிநிதித்துவம் பெறமுயலவும் வழிவகுத்தன இவ்வாறுபோராடத் தொடங்கிய தொழிலாளர்கள் 1824இல் 'இணையும் சட்டங்கள்' நீக்கப்பட்ட பின்னர் தொழிற்சங்க இயக்கங்களைத்தொடங்கக்கூடியதாயிருந்த தது. இவ்வியக்கத்தின் முன்னோடி ஒருபேட் ஒவென் ஆகும். அவரால் ஆரம்பிக்கப்பட்ட 'தேசியஇணைப்புத் தொழிற் சங்கம்' 10 இலட்சம் உறுப்பினரையுடையதா யிருந்தது. தொழிற்புரட்சியின் விளைவாகஏற்பட்டஇன் னொரு விளைவு வேலையின்மையும், வேதன வீழ்ச்சியுமா கும். இவை பயிர்த்தொழில் நிலங்களை அடைக்கும் இயக்கத்தின் விளைவாக ஏற்பட்டது பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டது. இவ்வாறு தொழிற்புரட்சி புதிய முறைகள், புதிய எந்திரங்கள், ஆகியவற்றின் மூலம்மக் களின் வாழ்க்கைமுறையை முற்றுக மாற்றியமைத்துள் ளதைக் கண்கூடாகக் காணலாம்.

மனிதாபிமான இயக்கங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சீர்திருத்தக்காலம் என இங்கிலாந்து வரலாற்றுசிரியர் குறிப்பிடுவர் இக்காலத்தில்பல சமூகசேமநல நடவடிக்கைகளும் சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. இவற்றிற் பெரும்பாலானவை தொழிலாளர்களின் சேமநலன் பேணுபவையாக அமைந்தன 'ஆலை முறை' உற்பத்தியின் கீழ் தொழிலாளர்கள் பெரும் அவதிப் பட்டனர். அவர்கள் அதிக வேலைக்கும் குறை வான வேதனத்தைப் பெற்றனர் மேலும் குறைந்த வேதனத்துடன் காலம் கழிக்கமுடியாத நிலையில் பெண்களும் சிறு பிள்ளைகளும் ஆலைகளில் வேலை செய்ய வேண்டியிருந்தது. ஆயினும் முதலாளிகள் அவர்கள் மேல் எதுவித தயவு தாட்சணியம் காட்டாமல் அவர்களை வருத்தியும். அச்சுறுத்தியும் அடிமைகள் போல்வேலைவாங்கி வந்தனர் இவ்வாறு இடர்ப்பட்ட தொழிலாளர்களின் நிலையைச் சீர்திருத்தும்முதல்முயற்சி 1795இல் பேக்சயர்மஜிஸ்திறேற்றுகளினால் மேற்கொள்ளப்பட்டது அவர்கள் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் வேதனத்துக்கு ஒரு கீழெல்லையைவகுத்து அதற்குக்கீழ் வேதனம் பெறுபவர்களுக்கு ஒருவறியோர் நிவாரண நிதியிலிருந்து உதவி செய்தனர் இதற்குப் பின்னர் ரொபேட் ஓவன் என்பவர் தொழிலாளர்சேவையில் முன்மாதிரிகாட்டினர். அவர் 1800இல் நியூலனாக் தொழிற்சாலையைக் கையேற்றுவேலைசெய்யும்நேரத்தைக்குறைத்துவேதனத்தைக் கூட்டினர். அத்துடன்தொழிலாளர்களுக்குகுடியிருப்புவசதிகளையும் ஏற்படுத்தி அவர்களதுவேலைத்தல நிலைமைகளை இதமானதாக ஆக்கினர்.

தொழிலாளர் சேமநலனுக்காகச் சேவை செய்த பெரியார் சாப்ஸ்பரிபிரபுவாகும். அவர் தமது வாழ்க்கையையும் செல்வத்தில்ஒருபங்கையும்வறிய குழந்தைகளுக்காகச்செலவிட்டார். அவரது முயற்சியினால 1833இல் ஆலைச் சட்டமும் 1842இல்சுரங்கச் சட்டமும்

நிறைவேற்றப்பட்டன. ஆலைச்சட்டம் 9 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கமர்த்துவதை தடுத்ததோடு 9 முதல் 12 வயதுக்குட்பட்டசிறுவர்களின் வேலை நேரத்தைவாரத்துக்கு 48 மணி நேரமாகவும், 13–18 வயதுக்குட்பட்டோரின்வேலைநேரத்தை ஒரு நாளுக்குஆகக்கூடியது 12 மணித்தியாலமாகவும் கட்டுப்படுத்தியது 1842ம ஆண்டுச் சுரங்கச் சட்டம் பெண்களை வேலைக்கமர்த்துவதையும், சிறுவர்களைத் தரைக்கீழ்ச் சுரங்கங்களில் வேலைக்கு அமர்த்துவதையும் தடைசெய்தது. இதன் பின்னர் 1884 இல் பிரதமர் பீல் 1833 ஆலைச் சட்டத்தை மேலும்விரிவுபடுத்திப் பெண்களின் வேலை நேரத்தைஒரு நாளைக்கு ஆகக் கூடியது 12 மணி நேரமாகக் கட்டுப்படுத்தினர். இறுதியாக 1847 இல் நிறைவேற்றப்பட்ட பில்டென் ஆலைச்சட்டம் வேலை நேரத்தை 10மணித்தியாலமாகக் குறைத்தது.

மேற்குறிப்பிட்டவற்றைத் தவிர, சமுதாய சேமநலன்கருதிமேற்கொள்ளப்பட்டவேறொரு செயல் அடிமை முறைஒழிப்பாகும். அது 1833 இல்பிரித்தானிய சாம்ராச்சியமெங்கும் ஒழிக்கப்பட்டது. பின்னர் 1834 இல் நிறைவேற்றப்பட்ட வறியோர் சட்டத் திருத்தமுறி வேலைத் தலங்களில்வேலையாட்கள் நிவாரணம் பெற வழிவகுத்ததோடுவேலைத்தளங்கள் சிறந்த முறையில் நிறுவப்படவும் உதவியது.

வினாக்கள்

(1) தொழிற் புரட்சியினால் இங்கிலாந்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொகுத்தெழுதுக ?

(2) தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை ?

(3) தொழிற் புரட்சியினால் இலங்கையில் ஏற்பட்ட விளைவுகளை குறிப்பிடுக ?

அத்தியாயம் 18

ஐரோப்பாவில் தேசியக் குமுறலும் ஒற்றுமை இயக்கங்களும்

(1) வியன்னா மாநாடும் 1830, 1848 புரட்சிகளும்

நெப்போலியனது போர்கள் ஐரோப்பாவில்தேசிய உணர்ச்சியைக் கிளறிவிட்டமை பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம் இத்தேசிய உணர்ச்சியுடன்சேர்ந்து இயங்கியஇன்னொருசக்தி தாராண்மைவாதமாகும். தேசியமென்பதுஒருவகையானகூட்டுஉணர்ச்சி, இனம், மொழி பண்பாடு என்பவற்றால் ஒன்றுபட்டஒரு சாகியத்தினர் பிறரின் தலையீடின்றித் தாமே தமது கருமங்களைகவனிப்பதற்கு விரும்பும் ஒரு உணர்ச்சியே அது என்க, அதே சமயம் தாராண்மைவாதம் தனிப்பட்ட வர்களுக்குச் சகல விடயங்களிலும் சுதந்திரம் இருக்க வேண்டும் எனக்கூறும் இவ்விரு சக்திகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாற்றில் பெரும் பங்கு வகித்தன.

வியன்னா மகாநாடு :- ஆனால் நெப்போலியனதுவீழ்ச்சிக்குப்பின் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை வகுக்கவும்அங்கு அமைதி நிலைப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யவும்கூடி வியன்னா மாநாடு முற்கூறப்பட்ட இருசக்திகளையும் முற்றாக உதாசீனம் செய்துவிட்டுத் தன் மனம்போனபோக்கில் மாற்றங்களைப் புகுத்தியது. வியன்னா மாநாட்டில்ஆஸ்திரியாவின் சார்பில் மற்றேணிச் என்பவரும்பிரான்சின் சார்பில் ரலிறண்ட் என்பவரும் பிரித்தானியாவின் சார்பில்காசில்ரீ என்பவரும் பங்குபற்றினர். அவர்களில் மற்றேணிச் முதன்மையுடையவராயிருந்தார். அவர் பிற்போக்கு வாதத்தின் பெருங்காவலனாகவும் எதேச்சாதிகாரத்தின்தோழனாக

வும் தாராண்மைவாதத்தின் எதிரியாகவும் விளங்கினர். அவரது செல்வாக்கின் கீழ் ஐரோப்பிய நாடுகளில் மீண்டும் எதேச்சாதிகார ஆட்சி முறையே ஏற்படுத்தப் பட்டது.

வியன்னா மாநாடு 1814 இல் முதல் முதல் கூடிய பிரான்சுடன் பாரிஸ் உடன்படிக்கையைச்செய்து கொண்டது. அதன்படி பிரான்ஸ் 1789 இன் எல்லைகளைப் பெற்றது. பெல்சியம் ஒல்லாந்துடன் இணைக்கப்பட்டது. சுவிற்சர்லாந்தின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன் ஜெர்மனியில் இணைப்பாட்சியும், இதாலியில் புரட்சிக்கு முன்பிருந்த நிலைமையும் அமுலாக்கப்பட்டது. வியன்னா மாநாட்டின் ஏனைய ஒழுங்குகளின்படி பிறசியாபோசென், வடக்குசாக்சனி, றைன் மாகாணம் ஆகிய இடங்களைப்பெற்றது. சுவீடனுடன்நோர்வே இணைக்கப்பட்டது. ஆஸ்திரியா, ரைரோல், லொம்பாடி, வெனிசியா ஆகியவற்றைப்பெற்றன போலந்து மூன்றுகப் பிரிக்கப்பட்டது. ஆயினும்அதன் ஆட்சிப்பொறுப்பு இரசியாவிடம் விடப்பட்டது. இவ்வாறு ஐரோப்பாவின் தேசப்படத்தைப் புனரமைத்தவியன்னா மாநாட்டு அரசுகள் ஐரோப்பாவில் அமைதியை நிலைநாட்டுவதற்காக அவ்வப்போது மாநாடுகளைக்கூட்டின. இவ்வகை மாநாடுகள் 1818 இல் ஏலாசப் பேலிலும், 1820 இல் துரொப்போவிலும் 1822 இல் இறுதியாக லெறுனுவிலும் நடைபெற்றன. ஆனால் இம் மாநாடுகள் ஐரோப்பாவில் தேசிய எழுச்சிகளை நசுக்குவதையே நோக்கமாகக் கொண்டிருந்தபடியால் இங்கிலாந்து இம்மாநாடுகளில் சிரத்தை காட்டாமல் ஸ்பெயின் பீட்மந்து, நேப்பிள்ஸ் முதலிய இடங்களில் கிளர்ச்சிகள் ஏற்பட்டசமயம் அவற்றை ஏனைய அரசுகள் அடக்க முற்பட்டபோது அவற்றின் தலையீட்டைக் கண்டித்தது. இதன் விளைவாக வல்லரசுகளின் மாநாட்டு முறை தோல்வியடைந்தது. அதேசமயம், அம்மாநாடுகளும், வியன்னா உடன்படிக்கையும் நசுக்கமுயன்ற தேசிய தாராண்மைவாதச் சத்திகள் மீண்டும் தலையெடுத்தலுக்

கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டன. அத்தகையகிளர்ச்சிகள் 1830 இலும்,1848இலும் அதிகஅளவில்இடம்பெற்றன.

1830ஆம் ஆண்டுப் புரட்சி:- ஐரோப்பிய நாடுகள்பலவற்றிலும் ஆட்சிக் கெதிராகக்காணப்பட்ட அதிருப்தி 1830 இல் புரட்சியாக உருவெடுத்தது இதனுல் இதைப் புரட்சிஆண்டுஎனவும் குறிப்பிடுவதுண்டு இப்புரட்சி முதலில் பிரான்சில் தொடங்கியது அங்கு சார்ல்ஸ்X மன்னனின் எதேச்சாதிகார ஆட்சிக்கு எதிராகப்பாரிஸ் மக்கள் கிளர்ச்சிக் கொடியைஉயர்த்தினர். இதன் விளைவாக மன்னன் நாட்டைவிட்டு ஓடிப்போக, லூயிபிலிப் அரசனுக்கப்பட்டான் அவன் மக்களின் விருப்பத்தின் பேரிலேயே மன்னனுக்கப்பட்டது கவனிக்கத்தக்கது. 1830இல் பெல்சியத்திலும் புரட்சி ஏற்பட்டது. அங்கு தேசிய உணர்ச்சியின் உந்துதலினுல் கத்தோலிக்கராகிய பெல்சிய மக்கள் புரட்டஸ்தாந்தராகிய ஒல்லாந்தரின் ஆட்சிக்கெதிராக புரட்சிசெய்தனர். அவர்களது புரட்சிக்குப்பிரித்தானியாவும் பிரான்சும் ஆதரவுநல்கியதால் அவர்கள் சுதந்திரம் பெற்றுப் பாராளுமன்றத்தோடுகூடிய ஒரு முடியாட்சியை நிறுவினர். இவ்விதமாக 1830இல்போலந்திலும், இத்தாலியிலும் புரட்சிகள் ஏற்பட்ட போதிலும் அவற்றைமுறையே இரசியாவும்,ஆஸ்திரியாவும் அடக்கிவிட்டன. ஆயினும் மீண்டும் 1848இலும் புரட்சிகள்ஏற்பட்டன.

1848ஆம் ஆண்டுப் புரட்சி:— 1848ம் ஆண்டு, தேசியம் சனநாயகம், தாராண்மைவாதம் என்னும் சக்திகள் மீண்டும் தலைதூக்கின பொதுவாக மத்திய வகுப்பினரே இச்சக்திகளினுல் தூண்டப்பட்டுப் புரட்சி செய்தனர். 1848ஆம் ஆண்டுப் புரட்சியும் பிரான்சிலேயே முதலில் தொடங்கியது. அங்கு லூயி பிலிப்பின் அடக்குமுறைக்கெதிராகக் கிளர்ச்சிகள் ஏற்பட்டபோது அவன் நாட்டைவிட்டு ஓடபிரான்ஸ் ஒரு குடியரசாகப் பிரகடனம்செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 10 மாதங்கள் வரை நாட்டில் கலவரங்கள் ஏற்பட்டன. இறுதி

யில் 1848 டிசம்பரில் அமுலாக்கப்பட்ட புதிய அரசியற்றிட்டத்தின் கீழ் லூயி நெப்போலியன் குடியரசின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டான். இவ்வாறு பிரான்சில் தொடங்கிய புரட்சி ஆஸ்திரியா, ஹங்கேரி, ஜேர்மனி, இத்தாலி ஆகியநாடுகளுக்கும் பரவியது. அவற்றில்ஹங்கேரியப் புரட்சி முதலில் தொடங்கியது. அங்கு லூயிகொஸ்சத் என்னும் ஒரு தேசாபிமானியின் உணர்ச்சிமிக்கபேச்சினல் உந்தப்பட்ட மக்கள் ஆஸ்திரிய ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்து பதியானி என்பவரின் தலைமையில் ஒருதேசிய அரசியற்றிட்டத்தை அமுல் செய்தனர். இதன் மேல் புரட்சி ஆஸ்திரியத் தலைநகரான வியன்னாவுக்கு பரவியபோது பிறபோக்குவாதியான மற்றேனிச் நாட்டைவிட்டுக் கரந்தோடினான். பின்னர் மன்னன் புதிய ஒரு அரசியற்றிட்டத்தை வழங்கிய போதும் கிளர்ச்சிகள் நீடித்தன. இதேபோல் ஆஸ்திரியருக்கு எதிராக 'செக்' மக்களும் கிளர்ச்சிகள் செய்தனர். ஆயினும் இக் கிளர்ச்சிகளெல்லாம் இறுதியில் நசுக்கப்பட்டுக் கிளர்ச்சியாளர்களின் தலைவர்களும் கொல்லப்பட்டனர். இவ்வாறு தேசிய ஜனநாயக இயக்கங்கள் சில நாடுகளில் சின்னாபின்னப்பட்ட போதிலும் ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளைப் பொறுத்தமட்டில் அவற்றின் தேசிய இயக்கங்களைப்பலப்படுத்தி அவற்றை முன்னேற்றப் பாதையில் மேலும் ஒருபடி முன்னுக்கு இட்டுச் சென்றன. அவற்றை மேல்வரும் பக்கங்களிற் காண்போம்.

2 இத்தாலி ஒன்றுபட்டவரலாறு

பழம்பெருமைமிக்க நாடாகிய இத்தாலி பல நூற்றாண்டுகால மாகப் பிளவுண்டிருந்தது அது இத்தாலி எனப்பெயரளவிலே ஒரு நாடாயிருந்ததேயன்றி பொருளளவில் அவ்வாறிருக்கவில்லை. இதனால்தான் மற்றேனிச் 'இத்தாலி வெறும் புவியியல்விவரணமேயன்று வேறன்று' எனக் குறிப்பிட்டான் இத்தாலியமக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை பல அரசுகளின்

ஆளுகைக்கு உட்பட்டிருந்தனர். வடக்கிலுள்ள லொம்பார்டியும் வெனிசும் ஆஸ்திரியாவின் ஆட்சியின் கீழும் பீட்மந்து, சாடினியா அரசின் கீழும் பாமா, மொடேனு தஸ்கனி ஆகியன ஆஸ்திரிய மன்னனின் உறவினரின் ஆட்சியின் கீழும் இருந்தன. அதேசமயம் பாப்பரசர் தமக்கென ஒரு இராச்சியத்தை யுடையவராயிருந்தார் இவ்வாறு பிளவுண்டிருந்த இத்தாலியின் பல பகுதிகளும் நெப்போலியனது காலத்தில் ஒன்றுக்கப்பட்டு உறுதியான ஆட்சியைப் பெற்றன. ஆனால் வியன்னா மாநாடு இத்தாலியை மீண்டும் பிளவுபடச் செய்து பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பிருந்த நிலைக்குகொண்டுவந்திருந்தது. ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்தாலியில் ஒரு தேசியவிழிப்பு உண்டானது. அதன் விளைவாக மக்கள் தமது வரலாற்றுக் காலச் சீரையும் சிறப்பையும் சிந்தித்து அந்நிலைமை மீண்டும் வராதோ என அங்கலாய்த்தனர். அந்தியரின் ஆட்சியை அகற்றும் வரை தாம் ஒரு தேசிய இனமாகத் திகழமுடியாது என்பதை அவர்கள் உணர்வராயினர்.

இவ்வாறு விடுதலை வேட்கையுற்ற இத்தாலியர் பலர் 'கரியெரிப்போர்சங்கம்' முதலான பல இரகசிய இயக்கங்களை நிறுவிஎதேச்சாதிகாரமான ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்தனர். இதன் விளைவாக 1820ல் நேப்பிள்சிலும் 1830ல் பாமா மொடேனு தஸ்கனி ஆகியவற்றிலும் கலவரங்கள் ஏற்பட்டபோதிலும் ஆஸ்திரிய உதவியுடன் அவை அடக்கப்பட்டன. ஆயினும் இத்தாலியரின் விடுதலைவேட்கை எள்ளளவும் குறையவில்லை. இந்நிலையில் மசினி என்னும் ஒரு இளம் சட்டவாதி 'இளையஇத்தாலி' என்னும் ஒரு இயக்கத்தை உருவாக்கினன். இத்தாலியை ஒன்றுபடுத்துவதும் அன்னியராட்சியை அகற்றுவதும் இதன் குறிக்கோளாயிருந்தன. குடியரசுவாதியான மசினி பண்டைக்கால உரோம இராச்சியத்தின் உன்னத நிலையையும், மறுமலர்ச்சிக்கால இத்தாலியின் மகிமையையும் அன்றைய இத்தாலியின் அவல நிலையையும் எண்ணிப்பார்க்குமாறு

இவ்ஞரைத் தூண்டினன். அதே சமயம் ஜியோபே ட்டி என்னும்ஓர் எழுத்தாழன் பாப்பரசரின் கீழ்தான் இத்தாலியை ஒன்றுபடுத்த வேண்டும் எனக் கூறினன். இந்நிலையில் தாராண்மைவாதியான 9ஆம் பக்தி நாதர் 1846 இல் பாப்பரசராகியபோது ஜியோபேட்டியின் கனவு நனவாகக் கூடுமோ எனப்பலர் எண்ணினர். ஏனெனில் பாப்பரசர் தமது ஆட்சிக்குட்பட்ட இராச்சியத்தில் மேற்கொண்டபலதாராள நடவடிக்கைகள் அவரை இத்தாலியின் தேசியத் தலைவர் எனப் பலர் மதிக்கச் செய்தன. இதனல் மக்களின் விடுதலைவேட்கை மேலும் தூண்டப்பட்டது.

1848ஆம் ஆண்டுப் புரட்சியும் விளைவுகளும் :-

இது இவ்வாறுக 1848 இல் பிரான்சில் புரட்சி உண்டாகியபோது லொம்பாடி, வெனிஸ், சிசிலி ஆகிய இடங்களிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இவற்றின் போது பீட்மந்துமன்னனுகிய சார்ல்ஸ் அல்பேட் இத்தாலியின் சுதந்திர இயக்கத்துக்கு ஆதரவு நல்கி அதற்கு முன்மாதிரியாகத் தனது நாட்டில் சுதந்திர ஆட்சி முறையை அமைத்தான் அதே சமயம் சிசிலி மன்னனும் தனது நாட்டில் புதிய ஒரு அரசியல் திட்டத்தை அமுலாக்கினன். இதன் பின்னர் சாடிய மன்னனுகிய சார்ல்ஸ் அல்பேட் லொம்பாடியிலும் வெனிசிலும் ஏற்பட்ட கிளர்ச்சிகளுக்கு ஆரவளிக்கும் வகையில் ஆஸ்திரியாவுடன்போர்தொடுத்தான். ஆனல் வெறும் உற்சாகத்தினுலோ மன உறுதியினுலோ போரை வெல்ல முடியாதல்லவா? இதனல் பலமிக்க ஆஸ்திரியப்படைகள் கஸ்ரோசா, நொவாரப்போர்களில் சார்ல்ஸ் அல்பேட்டை தோற்கடித்தான். இதன் விளைவாக அல்பேட் தனது மகனுகிய விக்ரர் இமானுவேலைப் பதவியில் அமர்த்திவிட்டுத் தான் விலகினன். விக்ரர் இமானுவேல் உடன் ஆஸ்திரியாவோடு சமாதானம் செய்து கொண்டான். இது இவ்வாறுக பாப்பரசர் இத்தாலியில் ஏற்பட்ட புரட்சிஇயக்கங்களாற் பீதியுற்று ஆஸ்திரியருக்கெதிரான போருக்கு ஆதரவளிக்க மறுத்தார் அந்நிலையில் ரோமாபுரியில் மசினி கரிபால்டி என்னும்

ஒரு போர்வீரனின் துணையுடன் கிளர்ச்சி செய்து ஒரு குடியரசை நிறுவினான். அதன் விளைவாகப் பாப்பரசர் ரோமைவிட்டு நேப்பிள்சுக்கு ஓடினார் இதனைக் கேள்விப்பட்ட பிரான்சின் மன்னனாகிய லூயி நெப்போலியன் பாப்பரசருக்குஉதவி செய்ய ஒரு பெரும் படையை ரோமுக்கு அனுப்பியபோது கரிபால்டி வீரத்துடன் போரிட்டு அப் படையை விரட்ட முயன்றான் ஆயினும் அதில் அவன் வெற்றிபெறவில்லை அந்நிலையில்மனைவியும்கரிபால்டியும் ரோமை விட்டுத் தப்பியோட வேண்டியதாயிற்று கரிபால்டி தங்கமான இருதயத்தையும் இரும்புமூளையையும் உடையவன் என ஒருவர் விவரித்திருந்தார். அவன் மனைவியின் இளைய இத்தாலி இயக்கத்தில் சேர்ந்துஉழைத்தவன். சாடினியாவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபடியால் அவன்கொலைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தான் ஆனால் அவன் எவ்வாறோ நாட்டை விட்டுத்தப்பியோடித் தென் அமெரிக்காவில் சில காலம் வாழ்ந்து பின்னர் மீண்டும் இத்தாலிக்கு வந்து சுதந்திர இயக்கங்களிற் பங்குகொண்டான். கரிபால்டி ரோமாபுரியிலிருந்து தப்பியோடி மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் இதுதான் நான் உங்களுக்கு வேதனமோ, ஓதுக்கிடமோ, உணவோ, கொடுப்பதாகக் கூறவில்லை பசி தாகம் போர் மரணம்ஆகியவற்றையே தருவேன். எனவேவெறுஞ்சொல்லளவில நில்லாமல் முழுமனதாகத்தனதுநாட்டை நேசிப்பவன்மட்டும் என் முனனேவரட்டும்! இத்தகையவீர மொழிகளைக்கூறி கரிபால்டியின் துணிவும் மனைவியின் முயற்சிகளும்மக்களின் மனதில் ஆழ்ந்தன அவர்களின் முயறசியில் தோல்வியடைந்த போதிலும்இலட்சியங்கள் மாளவில்லை. அவர்களின் கனவைநனவாகும்பொறுப்புகவூர்மேற்சார்ந்தது.

கவூர்சாடினிய மன்னனை அல்பேட்டின் மந்திரியாக இருந்தான். அவனது ஆலோசனைபின் படியே மன்னன் சாடினிய மக்களுக்குச் சுதந்திரம் வழங்கினான் இதன் பின்னர் 1848 இல் ஏற்பட்ட கிளர்ச்சிகளையும் அவை தோல்வி அடைந்ததையும் கவூர் நன்கு அறிந்தி

தித்தான். எனவே 1852இல் சாடினிய அரசின் பிரதம மந்திரி பதவியை ஏற்றதும் அவன் இத்தாலியை ஒன்று படுத்துவதே தனது இலட்சியமாகக் கொண்டு அதற்கு உழைப்பானுயினன். கவூர் ஒரு சிறந்த மதியூகியும் தீர்க்கதரிசியுமாவான். அவன் இத்தாலியின் ஒற்றுமை சாடினிய மன்னனின் கீழ்தான் சாத்தியம் என்பதையும் ஒரு வெளிநாட்டு அரசின் துணையுடன் ஆஸ்திரியரை வெல்வதன் மூலமே அதைச் சாதிக்கலாமென்பதையும் நன்கு உணர்ந்து கொண்டான். எனவே முதலில் தனது நாட்டைப் பலப்படுத்தும் முயற்சியில் அவன் முழுமூச்சுடன் ஈடுபட்டான். 1852-56 காலத்தில் கவூர் நாட்டின் கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் விருத்தி செய்தான். போக்குவரத்து வசதியை அதிகரித்தான் மதபீடத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தினன். படைகளைப் புனரமைத்தான் இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் சாடினிய இராச்சியத்துக்கு இத்தாலிய விடுதலை இயக்கத்தை முன்னின்று நடத்தும் தகுதியைப் பெற்றுக்கொடுத்தான். இதன்மூல் ஆஸ்திரியாவைத் துரத்துவதற்கு ஒரு ஐரோப்பிய நண்பனைப் பெறுவதே அவனது முயற்சியாயிருந்தது. அதில் அவன் வெற்றி பெறுவதற்குபல வாய்ப்புக்கள் வந்தன. கவூர் தனது நாடு ஆஸ்திரியாவுக்கெதிராகப் போரிடும் போது உதவிசெய்யக் கூடியவை இங்கிலாந்தும் பிரான்சுமே என்பதையும், அவற்றில் பிரான்சு மட்டுமே படையுதவி செய்யக்கூடிய தென்பதையும் உணர்ந்து கொண்டான். எனவே அவ்விரு நாடுகளும் 1854 இல் இரசியாவுக்கெதிராகப் போரில் (கிறைமியன் போர்) ஈடுபட்டபோது கவூர் ஒரு சாடினியப் படையை அந்நாடுகளுக்கு உதவியாக அனுப்பி அவற்றின் நன்றிக்கு உரித்தானன். அத்துடன் போருக்குப்பின் இடம் பெற்ற சமாதான மாநாட்டில் கவூரும் பங்கு பற்றி இத்தாலியின் இழிநிலையை வல்லரசுகளுக்கு விளக்கி அதை ஒன்றுபடுத்தும் அவசியத்தையும்வற்புறுத்தினன். இதற்குப் பின்னர், கவூர், லூயி நெப்போலியனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி ஆஸ்திரியா, சாடினியாவைத் தாக்கினால் நேப்போலியன் இத்தாலிக்கு உதவுவதென்றும் அதற்கு ஈடாமாறுக இத்தாலி, சவோய்

நீஸ், மாகாணங்களை பிரான்சுக்குக் கையளிக்க வேண்டுமெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆஸ்திரியப் போர் :- இதன் மேல் ஆஸ்திரியாவை வலுக்கட்டாயமாகச் சாடீனியா மீது போர் தொடுக்கச் செய்வதில் கவூர் ஈடுபட்டான் அவனதுவலையில் ஆஸ்திரியா எளிதாக வீழ்ந்தது. விக்ரர் இமானுவேல், பாராளுமன்றத்தில் நிகழ்த்திய ஒரு பேச்சினால் ஆத்திரமூட்டப்பட்ட ஆஸ்திரியா, பீட்மந்து உடன் படைகளைக் குறைக்கவேண்டும் என ஒரு கோரிக்கையை விடுத்தது அதற்குக் கவூர் மறுத்தவுடன் ஆஸ்திரியா பீடபந்தின் மேல் படையெடுத்தது. அவ்வேளை லூயி நெப்போலியன் முன்வாக்களித்தபடி பீட்மந்தின் உதவிக்குத் தனது படைகளை அனுப்பினன் அப்படைகள் சாரிபால்டியின் படைகளுடன், இணைந்து யூன் 4இல் இடம்பெற்ற மஜெந்ராப் போரில் ஆஸ்திரியரைத் தோற்கடித்தன. இதன்பேல் ஆஸ்திரியப்படைகளை நேரில் வந்து போரை நடத்தினன் ஆயினும் சொல்பரினோ போரில் ஆஸ்திரியப்படைகள் மீண்டும் தோற்கடிக்கப்பட்டன இந்நிலையில் முற்றிலும் எதிர்பாராத விதமாக லூயி நெப்போலியன் தன் மனம் மாறிப்போரை நிறுத்திவிட்டு ஆஸ்திரியருடன் சமாதானம் செய்து கொண்டான் இது இத்தாலியருக்கு சிறப்பாகவூருக்கு ஏமாற்றத்தையும், வேதனையையும் கொடுத்தன அந்நிலையில் நெப்போலியன் தான்செய்த உதவிக்குக் கைமாறாகச் சவோய், நீஸ், என்னும் இரண்டையும் தனக்குத் தரும்படியும் கேட்டபோது அக்கோரிக்கைகள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் இருந்தன. ஆயினும் கவூர் அவற்றுக்கு இணங்கவேண்டியதாயிற்று. இதன் பின் கவூர் சாடீனியாவே தனித்துப் போரை நடத்த வேண்டும் என விருப்பினன் ஆனால் விக்ரர் இமானுவேல் அதற்கு மறுத்தபோது கவூர் பிரதமர்பதவியைத் துறந்தான்.

பிரதமர் பதவியைத் துறந்த கவூர்சிலகாலம் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தான் பின்னர் இத்தாலிய நிலைமைகள் நாட்டைஒன்றுபடுத்தற்கு இன்னமும் ஏற்றவையாயிருப்பதைக்கண்டகவூர் 1860 இல் மீண்டும்

பீட்மந்தின் பிரதமராகினான். அப்பொழுது வடஇத்தாலியின் ஐக்கியம் பெருமளவில் பூர்த்தியாகியிருந்தது. பாமா, மொடேனா, தஸ்கனி, ஆகியநாடுகள்தாம் பீட்மந்துடன் இணைவதாக ஒரு பொதுவாக்கெடுப்பு மூலம் முடிவு செய்தன லொம்பாடியும்இத்தாலியின் வசமாயிருந்தது. வடக்கில் வெனிஸ் ஒன்று மட்டுமே இன்னமும் ஆஸ்திரியரின் பிடியிலிருந்தது இதன் பின்னர், வெனிசை விடுவிப்பதும் தென் இத்தாலிய இராச்சியமான நேப்பிள்சைக்கைப்பற்றுவதுமே வூரின் திட்டங்களாயிருந்தன. கவூர் உடன் செயலில் இறங்கினான் நேப்பிள்ஸ் மன்னனை பிரான்சிஸ் IIக்குஎதிராக 1860 இல்சிசிலியில் ஒரு கிளர்ச்சிஏற்பட்டபோது கிளர்ச்சிக்காரர் கரிபால்டியின் உதவியைக் கோரியிருந்தனர் இக்கோரிக்கையைக்கவூர் நேரடியாக அறியவில்லை. ஆயினும் அவன் கரிபால்டிக்கு வேண்டிய உதவிகளை மறைமுகமாகச் செய்தான். எனவே 1000 பேரைக் கொண்டஒரு செஞ்சட்டைப்படையொன்றைத் திரட்டியபின் கரிபால்டி மே 11இல் சிசிலியில் இறங்கி மின்னல் வேகத்தில் தாக்குதலை மேற்கொண்டு தன்னை எதிர்த்த முதலாவது படையை இரு நாட்களில் தோல்வியுறச்செய்து. இருமாதங்களுக்குள் 20,000 பேரைக்கொண்டஎஞ்சிய சிசிலிப்படையையும் தோற்கடித்து நாட்டைக் கைப்பற்றினான். சிசிலியைக் கைப்பற்றிய கரிபால்டி மெசினு நீரிணையைக் கடந்துநேப்பிள்ஸ் இராச்சியத்தின் எஞ்சிய பகுதியைக் கைப்பற்ற முயன்றான் செப்டம்பர் 7இல் அவன் நேப்பிள்ஸ் நகருக்குள்ளும் புகுந்திருந்தான் அவ்வேளை கவூர் கரிபால்டியின் உள்நோக்கங்களையிட்டு ஐயங்கொண்டிருந்தபடியால், விக்ரர் இமானுவேலைப் பாப்பரசரின் பிரதேசங்கள் மீது படையெடுக்கச் செய்தான். விக்ரர் இமானுவேல் பாப்பரசரின் பிரதேசங்களைக் கைப்பற்றியபின எல்லையைக் கடந்து நேப்பிள்சிலுள்ள கெயிற்றாக் கோட்டையில்கரிபால்டியையும் அவனதுசெஞ்சட்டைப் படைகளையும் சந்தித்தான். அப்பொழுது கரிபால்டிதான் ஒரு குடியரசுவாதியாயிருந்த போதிலும், சார்டினிய மன்னனின் கீழ்தான் இத்தாலிய ஒற்றுமை சாத்தியமாகும் என்பதை உணர்ந்தபடியால்தன்னல் வெற்றிகொள்ளப்

பட்டபிரதேசங்களை விக்ரர் இமானுவேலுக்குக கையளித்தான். இதற்குப்பதிலாக அவன் விருதுகளையோ வெகுமதிகளையோ பெற மறுத்துவிட்டுஒரு சாக்குச் சோள விதைகளுடன் தனது சொந்த இடமாகிய கப்றேருவுக்குத் திரும்பினன்.

கரிபால்டியினால்கைப்பற்றப்பட்டநேப்பிள்ஸ் இராச்சியமக்கள் பீட்மந்துடன் இணைவதை ஒரு வாக்களிப்பின் மூலம் உறுதிசெய்த பின்னர் இத்தாலியின்முதலாவது பாராளுமன்றம் 1861ம் ஆண்டு பெப்ருவரியில் தியூறின் நகரில் கூடியது அங்கு விக்ரர் இமானுவேல் இதுவரை ஐக்கியப்பட்ட இத்தாலியப் பிரதேசங்களின் அரசனாக முடிசூட்டப்பட்டான். இத்தாலியின் ஐக்கியத்தைப் பூர்த்தி செய்வதற்கு இன்னும் வெனிஸ், ரோம் என்னும் இரு இராச்சியங்களையும் கைப்பற்ற வேண்டியிருந்தது இதற்கிடையில் கவூர் 1861 மேமாதத்தில் இறந்தான். அவனது பதவியை ஏற்றவர்கள் கவூரைப்போல்திறமைசாலிகளாயில்லாத போதும் அவன் காட்டிய பாதையையே பின்பற்றினர் இப்பொழுது பிரான்சிலிருந்து உதவியைப்பெற முடியாது எனஎண்ணிய இத்தாலியர் இன்னொரு ஐரோப்பிய வல்லரசாகிய பிறசியாவுடன் நட்புறவை வளர்த்து அதன் உதவியை நாடினர். 1866 இல் பிறசியா ஆஸ்திரியாவுடன் போரிட்டு செடானில் அதனைத் தோற்கடித்தது. அப்போர் முடிவில் பிறசியா வெனிசை இத்தாலிக்குக் கையளித்தது இதன் மேல்ரோம் மட்டும் எஞ்சியிருந்தது. 1871ஆம் ஆண்டுப்பிறசிய-பிரான்ஸ் போரில் பிரான்ஸ் தோற்கடிக்கப் பட்டபோது ரோமும் இத்தாலியர் வசமாக அதையே நாட்டின் தலைநகராக்கினர். ஆனால் அச்செயல் பாப்பரசரைவிரோதித்தது. அவருடன் ஏற்பட்டஉடன்படிக்கை 1929 இல் தான் தீர்க்கப்பட்டது. அதன்மேல் ரோமாபுரியில் வத்திக்கான் என்னும் சிறு இராச்சியம் பாப்பரசரின் பிரத்தியேகஆட்சிப்பிரதேசமாக ஆக்கப்பட்டது. வத்திக்கான் இன்னும் பாப்பரசரின்வதிவிடமாய்இருந்து வருகிறது.

3. ஜேர்மனி ஒன்றுபட்ட வரலாறு

இத்தாலியைப் போலப் பிளவுபட்டிருந்த ஜேர்மனி நெப்போலியப் போர்களுக்குமுன்பலநாடுகளைக் கொண்ட ஒரு வகையான 'கூட்டரசு' ஆக விளங்கியது நெப்போலியன் அவற்றைத் தனது சகோதரனை ஜெரோம் என்பவனின் தலைமையில்ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். ஆயினும் வியன்னை மாநாடு ஜேர்மனியை மீண்டும் கூறுபோட்டுக் 'கூட்டரசாக' ஆக்கியது அதை (பண்ட்) எனக் குறிப்பிடுவர். இவ்வொழுங்கின் படிமுன்னர் 300க்கு அதிகமாயிருந்த ஜேர்மன் இராச்சியங்கள் 39ஆகக் குறைக்கப்பட்டிருந்தன இது அவற்றிடை நெருங்கிய தொடர்புகள் ஏற்பட உதவின இந்நிலையில் ஜேர்மனியில் நெப்போலியப் போரின் 'முதுசு' மாகிய தேசிய உணர்ச்சியின் உந்துதலினால் ஒருவகை ஒருமைப்பாட்டு உணர்ச்சி ஏற்பட்டபோது மக்கள் அனைவரும் ஒன்றுபட விரும்பினர். ஆயினும் அத்தகைய ஒற்றுமை எம்முறையில் ஏற்படவேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருந்தன இருந்தபோதிலும் 1815 ல் இருந்து ஜேர்மன் நாடுகள் பிறசியாவுடனேயே நெருக்கமான உறவை வளர்த்துக்கொண்டு வந்தன. பிறசியா முற்றிலும் ஜேர்மனியரையே கொண்ட ஒரு நாடாக இருந்தமை இதற்கு முக்கியமான காரணம் எனலாம். அதேசமயம் பிறசியத் தலைவர்களும் ஆஸ்திரியாவை நீக்கி ஏனைய நாடுகளைக் கொண்ட ஒரு ஜேர்மன் அரசுக்குப் பிறசியா தலைமை பூணவேண்டும் என ஆசைப்பட்டனர். எனவே பிறசியா ஜேர்மன் நாடுகளுடன்தனது உறவைமேலும்பலப்படுத்துவதற்காக 1833இல் சொல்வறைன்' என்னும் சுங்கவரி ஐக்கிய, இணக்கம் ஒன்றை ஏற்படுத்தியது இதன்கீழ் ஜேர்மன் நாடுகளிடையே உள்நாட்டுச் சுங்கவரிவிதிக்கும் முறை நிறுத்தப்பட்டது.

1848ம் ஆண்டுப்புரட்சியும் விளைவுகளும்:-

இவ்வாறு பொருளாதார ரீதியில் பிறசியாவுடன் ஜேர்மன் நாடுகள் இணைந்திருந்த வேளையில் 1848 இல் பிரான்சில் புரட்சி ஏற்பட்டபோது ஜேர்மனியிலுள்ள

தாராண்மைவாதிகளும்சனநாயக ஆட்சிவேண்டுமென கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சிகளுக்கு அஞ்சிய அரசர்கள் அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றினர். பிறசிய மன்னனும் அவ்விதமே செய்தான் இதன்பின்னர் ஜேர்மனிய நாடுகளை ஒரே ஆட்சியின் கீழ் இணைக்கும் நோக்கத்துடன் அந்நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு பாராளுமன்றம் பிராங்போட்டில் கூட்டப்பட்டது. அது ஆஸ்திரியா நீங்கலாக ஏனைய நாடுகளைக்கொண்டஒரு இணைப்பு அரசுக்கான அரசியல் திட்டத்தை வகுத்து அக்கூட்டாட்சியின் சக்கரவர்த்தியாகு இருக்குமாறு பிறசிய மன்னனை பிற டெறிக்கை அழைத்தபோது அவன்ஆஸ்திரியாமீது கொண்ட அச்சத் தினாலும் கேவலம்தாராண்மைவாதிகளிடமிருந்துதான் முடியைப்பெறுவதா என்ற வாட்டுக் கௌரவத்தாலும் அதை ஏற்கமறுத்தான் இதன்விளைவாக பிராங்போர்ட் பாராளுமன்றம் தோல்விஅடைந்தது அந்நிலையில்ஜேர் மனியை ஒன்றுபடுத்தும்பணி பிஸ்மார்க்கின் இலட்சிய மாகியது.

பிஸ்மார்க் 'ஜங்கர்' என்னும்பலம்மிக்க நிலச்சுவாந் தர்குடும்பைச் சேர்ந்தவன். அவன் அதிசிறந்த ஓர் அரசியல் மேதை அவன் சூழியலிலும், மனவலிமையி லும் ஒப்பற்றவன் அவன் 1857-59 காலத்தில் ஜேர் பன் கூட்டரசின் கழகத்தில் ஓர்உறுப்பினனாகவும் 1859 இல் இரசியாவிலும், 1862இல் பிரான்சிலும், பிறசிய தூதுவராகவும் பணியாற்றி அரசியலிலு, சூழியலிலும் அனுபவத்தையும், திறமையையும் பெற்றான். பிஸ்மார்க் பிறசியாவின் தலைமையிலேயே ஜேர்மனி ஒற்றுமை வேண்டுமெனக் கருதினான் தாராண்மைக்கொள் கைகளிலும் அவன் நம்பிக்கை வைக்கவில்லை. 'கத்தி கொண்டு இரத்தம் சிந்தியே' கருமங்களைச் சாதிக்க வேண்டும் என்பது அவனது கருத்து. இன்றைய பிரச்சினைகள் பேச்சுக்களினாலும், பெரும்பான்மை வாக்குகளினாலும் தீர்மானிக்கப்படவில்லை மற்று இரும்பு இரத்தம் என்பவற்றினாலேயே அவை தீர்க்கப்படும். எனவே இரத்தினைச் சுருக்கமாக தனது கொள்

கையைத் தெளிவுபடுத்தியுள்ளான். இத்தகைய பிஸ்மாக் 1861இல் பிறசியாவின் அரசனாக முடி சூடிய வில்லியத்தின் முதல் மந்திரியாக நியமனம்பெற்றான். வில்லியமும் பிஸ்மாக்கின் கொள்கைகளை ஆதரித்தபடியால் இருவரும் பிறசியாவின் தலைமையில்ஜேர்மனியை ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஒரு மனதாக ஈடுபட்டனர்.

பிறசியாவின் தலைமையில் ஜேர்மன் நாடுகளை ஒன்றாக்கும் நோக்கத்துடன்பிஸ்மாக்முதலில் தன்நாட்டைப் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டான். அவன் பிறசியாவின் படைகளைப் புனரமைப்பதற்கும் பெருந் தொகைப் பணத்தைச் செலவிட்டான். அப்பணத்தைப் பாராளுமன்றம் மறுத்த போதிலும் அவன் அதன் முடிவுகளுக்குகெதிராகவே காரியமாற்றினான் மேலும் நாட்டின கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றை ஊக்குவித்தோடு கட்டாயஇராணுவ சேவையையும் அமுல் நடத்தினான். அவனதுகாலத்தில் வொன்றான் வொன்மோல்ற் என்னும் இருவரும் படைகளின் புனரமைப்பைக் கவனித்தனர். அவர்களின் திறமையினால் விரைவில் பிறசியப் படையின் பலம் பன்மடங்கு அதிகரித்தது. இவ்வாறு நாட்டைப் பலப்படுத்தி பின் ஜேர்மனிய ஒற்றுமையின் எதிரியாகிய ஆஸ்திரியாவின் வலியை அடக்கும் வேலையில் பிஸ்மாக் அந்தரங்கமாக ஈடுபட்டு மிகச்சாதுரியமாக அதைச்சாதித்தான்.

இரசிய மன்னனின் ஆட்சியின் கீழிருந்த போலந்தில் 1863ல் ஒரு புரட்சி ஏற்பட்டபோது பிஸ்மாக் அம்மன்னனை ஆதரித்து அவனதுநட்பைப் பெற்றான். அடுத்து டென்மார்க்ஆட்சியின் கீழிருந்த செல்ஸ்விக், கொல்ஸ்ரீன் என்னும் இரு மாகாணங்களையும் விடுவிப்பதற்குப் பிஸ்மாக் திட்டமிட்டு அதற்கு ஆஸ்திரியாவின் உதவியையும் பெற்றான். இதன்மேல் ஆஸ்திரியாவும் பிறசியாவும் கூட்டாக டென்மார்க்குடன் போரிட்டு அதைத் தோற்கடித்து மூன் குறிப்பிட்ட மாகாணங்களை மீட்டன. அதில் செல்ஸ்விக் பிறசியாவுடனும் கொல்ஸ்ரீன் ஆஸ்திரியாவுடனும்சேர்க்கப்பட்டன இதன் பின்னர் பிஸ்மாக் பிரான்சிய மன்னனுடைய

லூயி நெப்போலியனைச் சந்தித்து தனது நாடு ஆஸ்திரியாவுடன் போரிடும்போது, பிரான்ஸ் நடுநிலைமை வகிக்க வேண்டுமெனவும் அதற்குக் கைமாறாகத் தான் சில பிரதேசங்களைப் பிரான்சுக்குக் கையளிப்பதாகவும் ஆசை வார்த்தை கூறி நெப்போலியனை நடுநிலையாக்கினான். இதன்மேல் இத்தாலிய முதல் மந்திரியாகிய கவுடன் செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கையில் பிறசிய-ஆஸ்திரிய போர் மூண்டபோது இத்தாலி வெனிசைத் தாக்கினால் பிறசியா ஆஸ்திரியரை வென்றபின் வெனிசை இத்தாலிக்குக் கையளிக்கும் எனத் தெரிவித்தான். இவ்வாறு தனது சூழியலினால் ஆஸ்திரியரைத் தனிப்படுத்தியபின் அவர்களுடன் போரிடுவதற்கு ஒரு 'சாட்டை' எதிர்பார்த்திருந்தான். அது செல்ஸ்விக், கொல்ஸ்ரீன மாகாணங்களின் பங்கீடு ஜேர்மன் கூட்டரசின் புனரமைப்பு ஆகிய விடயங்களில் இருநாடுகளுக்குமிடையில் தகராறு ஏற்பட்டபோது உண்டாகியது. எனவே 1866 யூனில் இரு நாடுகளிடையே போர் ஏற்பட்டது. ஏழு வாரங்களுக்குள் பிறசியா ஆஸ்திரியாவைத் தோற்கடித்தது. இதன் பின் பிஸ்மாக் தெற்கு ஜேர்மன் இராச்சியங்களான பவேரியா, பேடன், வூட்டம்பேர்க் ஆகியவற்றைப் பிறசியாவுடன் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டான். இந்நாடுகள் கத்தோலிக்க நாடுகளானமையால் ஆஸ்திரியாவிடமே இவை அனுதாபம் கொண்டிருந்தன. இப்பொழுது ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் அவை பிரான்சின் அனுதாபத்தை பெறக்கூடும்என எண்ணியபிஸ்மாக் பிரான்சை அந்நாடுகளின் எதிரியாகக் காட்டுவதற்கு எத்தனித்தான். ஆஸ்திரியப் போர் அதற்கான வாய்ப்பையும் அளித்தது. அப்போர்முடிவில் நெப்போலியன் பிறசியாவிடம் விடுத்தஒரு கோரிக்கையில் ரைன் நகருக்கு மேற்கிலுள்ளமாகாணங்களைத் தனக்கு பிறசியா கொடுத்தால் மட்டுமே பிறசியா ஆஸ்திரியாவிடமிருந்துகைப்பற்றியவற்றைவட ஜேர்மன் கூட்டரசின் கீழ் கொண்டுவருவதை பிரான்ஸ் ஏற்கும்எனத்தெரிவித்தான். பிஸ்மாக்இக் கோரிக்கையை எழுதில் பெற்று ஜேர்மன் இராச்சியங்களுக்குக் காட்டியபோது

அவைபிரான்சின்பச்சோந்தித்தன்மையினுல்பீதியுற்றன எனவே அதன் மேல் அவை பிற்சியாவையேதம் பாதுகாவலர்போல மதிக்கத் தொடங்கின. இப் பொழுது பிரான்சைப்போருக்கு இழுப்பதுதான் பாகியிருந்தது- அதைப் பிஸ்மாக் மிகச் சாதுரியமாகச்செய்து முடித்தற்கு வசதியாக ஸ்பானிய முடிப்பிரச்சினை முளைத்தது

ஸ்பெயினின் அரசியாகிய இசபெல்லா ஒரு இராணுவப்புரட்சியின் வீசாசப் பதவியிலிருந்து நீக்கப்பட்டபோது அரசஉரிமையைப் பிறசியபன்னன் லியோபத்தின்தூர உறவின ஞன லெப்போல்ட் என்பவனுக்கு கொடுக்கத்தற்காலீச அரசாங்கம் முனைந்தபோது பிரான்ஸ் அதை எதிர்த்தது ஏனெனில் அச்செயல் பிறசியாவின் பலத்தை அதிகரித்துவிடும் என அது அஞ்சியது என்க எனவே லூயி நெப்போலியன் தனது தூதுவர் மூலம் பிறசிய மன்னனுக்கு ஆட்சேபனையைத்தெரிவித்துவிட்டு இனி ஒருபோதும் ஸ்பெயின் முடிக்கு உரிமை கோருவதில்லை என ஒரு உறுதி மொழியையும் வாங்கு மாறுகேட்டிருந்தான். ஆனல்பிறசிய மன்னன் அவ்வித உறுதிமொழியைக் கொடுக்கமறுத்தான். அத்துடன் தான் பிரான்சியத் தூதுவருடன் பேசியவிடயங்களைப் பற்றிய விரத்தை ஒரு தந்தி மூலம் பிஸ்மாக்கிற்கு தெரிவித்தான் பிஸ்மாக் அத்தந்திச் செய்தியை வேறுவிதமாகத் திரித்துப் பிரான்சிய தூதுவர் அவமதிக்கப்பட்டார் எனப் பிரான்சிலும், பிரான்சியத் தூதுவர் பிறசிய மன்னனை அவமதித்தார் எனப் பிறசியாவிலும் வெளிப்படுத்தினன். இதன் விளைவாக இருநாடுகளிலும் ஒன்றுக்கொன்றெதிரான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. பத்திரிகைகளும் பகைமையை வளர்த்தன. அந்நிலையில் லூயி மன்னன் பிறசியா மீது போர்தொடுத்தான் இப் போர் சடுதியாகத் தோன்றி வரைவாகவே முடிவடைந்தது. பயிற்சிமிக்க ஜேர்மனியப்படைகள் பிரான்சியப் படைகளைச் 'செடான்' போரில் படுதோல்வியடையச் செய்தன. அத்துடன் லூயியும் கைப்பற்றப்பட்டான். அந்நிலையில் பாரிஸ்

மக்கள் துரோகி, கம்பெற்ரு முதலியோரின் தலைமையில் தரண்டு பிறசியப்படைகளை நகருட் புகாதவாறு தடுத்தபோதிலும் பிறசியப் படைகள் அவர்களது எதிர்ப்பை முறியடித்துவிட்டு நகரைக் கைப்பற்றின. பிறசியா பிரான்ஸ்மேல் போர் நட்டஈடுவிதித்ததோடு அல்சேஸ் லொறேன்மாகாணங்களையும் தனதாக்கிக்கொண்டது. பின் 1871 சனவரி 18இல் வேர்செயிலிலுள்ள கண்ணுடி மண்டபத்தில் பிஸ்மார்க்கின் கண்களும் ஜேர்மானியரின் மனமும் குளிர, வில்லியம் ஜேர்மனியப் பேரரசின் சக்கரவர்த்தியாக முடி சூட்டப்பட்டான. பிஸ்மார்க் அவனது முதன் மந்திரியாகத் தொடர்ந்து சிலகாலம் பணியாற்றினன். இதற்கு முன்னர் தென்ஜேர்மன் இராச்சியங்களும் மனமொத்துப் பிறசியாவுடன் இணைந்திருந்தமையால் பிஸ்மார்க் தான் கண்டகனவு நனவானதை எண்ணிக் களிப்படைந்தான். இவ்வாறு ஒன்றுபட்ட ஜேர்மனி எவ்வாறு உலக அமைதியைக் கெடுத்து இருஉலகப்போர்களை விளைவித்தது என்பதை மேல்வரும் அத்தியாயங்களிற் காண்போம்.

வினுக்கள்

(1) நெப்போலியனது போர்களும், பிரான்சியப் புரட்சியும் பிந்தகால ஐரோப்பிய வரலாற்றை எவ்வாறு பாதித்தன?

(2) கவூர்: கரிபால்டி ஆகியோர் இத்தாலி ஒன்றுபடுதற்கு எவ்வாறு உதவினர்?

(3) ஜேர்மனியை ஒன்றுபடுத்த பிஸ்மார்க் மேற்கொண்ட தடவடிக்கைகளை விபரிக்குக.

(4) இத்தாலி ஒன்றுபட்ட வரலாற்றை ஒழுங்குமுறையில் தொகுத்தெழுதுக.

(5) ஜேர்மனிஒன்றுபட்ட வரலாற்றைத் தொகுத்தெழுதுக.

(6) ரைலாற்றுச்குறிப்பெழுதுக :— 1. கவூர் 2. லூயி நெப்போலியன் 3. பிஸ்மார்க் 4. 1830ம் ஆண்டுப்புரட்சி 5. வியன்னா மாநாடு 6. 1848ம் ஆண்டுப் புரட்சி.

அத்தியாயம் 19

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் சனநாயக ஆட்சி பலப்படுதல்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க குடியேற்றங்கள் தமது விடுதலைக்காகப் போராடி அதில்வெற்றிபெற்ற வரலாற்றை முன்னர் அத்தியாயத்திற் படித்தோம் இவ்வாறு விடுதலைபெற்ற 13குடியேற்ற நாடுகள் ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்னும் பெயருடன் அதிவேகமாக வளர்ச்சியும் விரிவு மடைந்து பலத்திலும், செல்வாக்கிலும் ஏனைய உலகவல்லரசுகளுக்குப் பின் நிற்காத ஒரு நிலையைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அடைந்திருந்தன. 1803இல் லூசியானாவும், 1846இல் ஒறிகன்பிரதேசமும்1845இல் ரெக்சாசும், 1848இல் மெச்சிக்கோவின் கீழிருந்த பிரதேசமும், 1852இல கட்சன் பிரதேசமும் ஐக்கிய அமெரிக்க அரசின் ஆட்சியின் கீழ்கொண்டுவரப்பட்டதுடன் ஐக்கிய அமெரிக்காவின் விரிவுமுற்றுப பெற்றது. இவ்வாறு நாடுவிரிவடைந்ததைத்தொடர்ந்து மக்கள் மேற்கு நோக்கிப் பெருமளவில் இடம் பெயர்வாராயினர். இவ்வாறு புதியநிலப்பரப்பில் குடியேறிய மக்கள் ஒரு குறிக்கப்பட்ட தொகையளவுக்கு அதிகரித்த பின்னர் அப்பிரதேசத்தை ஐக்கிய அமெரிக்க இணைப்பில் ஓர் புதிய உறுப்பினராக அநுமதிப்பதென ஒழுங்கு செய்யப்பட்டது. இத்தகைய மேற்கு நோக்கிய குடிப்பெயர்ச்சியும் வடக்கு குடியேற்றங்களுக்கும், தெற்கு குடியேற்றங்களுக்குமிடையிற் காணப்பட்ட பொருளாதாரவேறுபாடுகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதில்ஓர்பெரும் உள்நாட்டுப் பூசலை உண்டாக்கிவிட்டன. அதுவே அமெரிக்க உள்நாட்டுப்போராகும். அப்போர் அமெரிக்காவில்சனநாயக ஆட்சிபலப்படுவதற்குஎவ்வாறு உதவியதுஎன்பதை அடுத்து காண்போம்.

அமெரிக்க உள்நாட்டுப்போருக்குக்காரணங்கள்:-

ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பத்திலிருந்த 13 ஆங்கிலக் குடியேற்றங்களிடை காணப்பட்ட சில வேறுபா

டுகள், எல்லைப்பிணக்குகள் பற்றி முன்னரே குறிப்பிட்டோம். காலப்போக்கில் அவ்வேறுபாடுகள் வடக்குக் குடியேற்றங்களையும் தெற்குக் குடியேற்றங்களையும் பாமவைரிகளாக்கிவிட்டன. வடக்குக் குடியேற்றங்களான நியூ இங்கிலாந்து நாடுகள் நியூஜோர்சி, பென்சில்வேனியா முதலியன தொழில்துறையில் பெருமளவுக்கு ஈடுபட்டன. இருப்பு உருக்குத்தொழில், எந்திர உற்பத்தி பொறியியற்றொழில் ஆகியன அந்நாடுகளில் வேகமாகவளர்ச்சியடைந்தன அதே சமயம் தெற்குக் குடியேற்றங்களான அலபாமா, வோர்ஜீனியா, கரோலினா முதலியன தொடக்கத்திலிருந்து பயிர்ச்செய்கையிலேயே ஈடுபட்டுவந்தன. கரும்பு, புகையிலை, பருத்தி ஆகியன அங்கு பெருமளவில் பயிரிடப்பட்டன. இவற்றில் பருத்திச் செய்கைக்குப் பெருந் தொகையாகத் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். ஆனால் தென் பிரதேசங்களில் குடித்தொகை குறைவாயிருந்தது. அத்துடன் அங்கு நிலவிய வெப்பமான காலநிலையில் உடல் வேலைசெய்வதற்குக் குடியேற்றவாசிகள் விரும்பவில்லை. இதனால் பருத்திப்பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்கென ஆபிரிக்க நீக்ரோக்களை விலைக்குவாங்கி அடிமைகளாக வைத்திருக்கும் வழக்கம் அங்கு ஏற்பட்டது. இவ்விதமாக 1619இல் நான் முதன் முதல் நீக்ரோ அடிமைகள் ஐக்கிய அமெரிக்காவுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். பின்னர் தொழிற் புரட்சியின் விளைவாக இங்கிலாந்தில் பருத்தி நெசவுத் தொழிலில் புதிய முறைகள் புகுத்தப்பட்ட தன் விளைவாக அதிக பஞ்சு தேவைப்பட்டதினாலும், 1783 இல் பஞ்சிலிருந்து விதைகளை நீக்கும் ஒரு எந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதன்விளைவாகவும் பருத்திச் செய்கையில் பலர் அதிக ஆர்வத்துடன் ஈடுபடுவராயினர். இதன் விளைவாக அடிமைகளும் பெருந்தொகையாகத் தருவிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்விதமாக 1850இல் ஏறத்தாழ 5 இலட்சம் அடிமைகள் தெற்கு நாடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறு தெற்கில் அடிமைகளின் தொகை அதிகரிக்க அதேவேளையில் வடக்கு நாடுகளில் அடிமைகளின் தேவை

படிப்படியாகக் குறைந்து இறுதியில் முற்றுக நின்றுவிட்டது. எனவே 'அடிமைமுறை'தெற்குக் குடியேற்றங்களில்மட்டும்காணப்பட்ட ஒரு விசேடதாபனமாகியது. இதை வடக்கு நாடுகள் வன்மையாகக் கண்டிக்கத் தொடங்கின. ஆனால்அடிமை முறை எவ்வளவு அருவருப்பானதாயிருந்தபோதிலும் தெற்கு நாடுகள்அதை ஒழிக்க ஆயத்தமாயில்லை ஏனெனில் அவற்றின் பொருளாதாரம் அடிமை முறையைமுதுகெலும்பாகக் கொண்டிருந்தது எனவே அடிமை முறைவடக்கு -தெற்கு நாடுகளின்பகைமைக்குமுதற்காரணமாகியது மேலும் அடிமை முறையின் கொடுமைகளைத் தத்ரூபமாகக் காட்டி ஹரியற பீச்சர் ஸ்ரோவ் என்பவரால்வெளியிடப்பட்ட 'தொம்மாமாவின்குடிசை' என்னும்நூல் மனிதாபிமானிகளதும், பரோபகாரிகளதும் மனதைக்கிளறி, அக்கொடிய முறையைஒழிப்பதன் அவசியத்தைவறபுறுத்தியது.

இரண்டாவதாக, வடக்கு நாடுகள் தொழில்களிலும், தெற்கு நாடுகள்பயிர்ச்செயகையிலும் *ஒப்பட்-படியால் இரு பிரிவினருக்குமிடையில் வெளிநாட்டு வர்த்தகம்சம்பந்தமாகத்தகராறு ஏற்பட்டது வடக்கு நாடுகள் தமது உற்பத்திப்பொருட்களை வெளிநாட்டுப் பொருட்களின் போட்டியிலிருந்து காப்பதற்காக இறக்குமதிப் பொருட்களுக்கு அதிக வரி விதித்தன இதனால் தெற்கு நாடுகள் தமக்கு வேண்டிய பொருட்களைக் குறைந்த விலையில் வெளிநாடுகளிலிருந்து வாங்க முடியாதுபோயிற்று இதனால் தெற்கு நாடுகளின் பயிர்த்தொழிலுற்பத்திப் பொருட்களை விற்பதும் கடினமாகியது. இது வடக்கு-தெற்கு மனக்கசப்பை மேலும் அதிகரித்தது. மூன்றாவதாக, மக்களின் மேற்கு நோக்கியபரம்பலும்பிரதேச விரிவும், அடிமை முறை பற்றிய தகராறுகளை எப்பொழுதும் உயிருடன் வைத்திருந்தன. ஏனெனில் மேற்குப்பகுதியில் உருவாகும் ஒவ்வொரு புதிய நாடும் ஐக்கிய அமெரிக்க இணைப்பிறசேரும் போது ஒன்றில் 'அடிமை முறைநாடாக' அல்லது 'சுதந்திரநாடாக'வே சேரவேண்டியிருந்தது இவ்வாறு ஒரு நாடு 'அடிமை முறை' நாடாக அனுமதிக்கப்பட்

டால் இன்னொன்று சுதந்திர நாடாக அனுமதிக்கப்பட வேண்டும் என 1821ல் வடக்கு-தெற்கு நாடுகள் ஒரு இணக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இது மிசூரி இணக்கம் எனப்படும். தென பிரதேசர் 1854 இல் கான்சாஸ் நெப்ராஸ்கா என்னும் இரண்டு ஐக்கிய அரசில் சேர விண்ணப்பித்தபோது அவற்றை எப்படி அனுமதிப்பது என்பதில் இரு கருத்தியினரும் சச்சரவிட்டுக் கொண்டனர். இதை அரசாங்கமே தீர்த்துவைக்க முடியாது போயிற்று.

இந்நிலையில் 1856இல் குடியரசுக் கட்சி என்னும் பெயருடன் ஒரு புதிய கட்சி உருவாகியது. அது அடிமை முறையைக் கட்டுப்படுத்துவதற்கு சாதகமாயிருந்தது. ஆயினும் 1857 இல் அமெரிக்க உயர் நீதிமன்று மேற்குநாடுகளில் அடிமைமுறை பரவுவதைத் தடுப்பதற்குத் தனக்கு அதிகாரம் இல்லை எனக் கூறிவிட்டது. வடக்கு நாடுகளின் மனக்கொதிப்பு அதிகரித்தது. அடுத்த ஆண்டு அடிமை முறையின் எதிரியான ஜோன் என்பவன் ஹப்பர்ஸ்பெரி என்னுமிடத்திலிருந்து சில படைக்கலங்களைக் கவர முயன்றபோது கைப்பற்றப் பட்டுத் தூக்கிலிடப்பட்டான். அவன் வடக்கு நாடுகளில் ஒரு தியாகியாகவும், தெற்கு நாடுகளால் ஒரு துரோகியாகவும் மதிக்கப்பட்டான்.

இது இவ்வாறிருக்க 1860இல் நடக்கவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக, ஆபிரகாம் லிங்கன் என்பவர் குடியரசுவாதிகளால் நிறுத்தப்பட்டார். ஆபிரகாம் லிங்கன் ஒரு சட்டவாதி. அவர் அடிமை முறையின் எதிரியாயிருந்தபோதும் ஐக்கிய அமெரிக்காவின் இணைப்பை எவ்வழியிலாயினும் பாதுகாக்க வேண்டுமென்னும் வேணவாவையுடையவராயிருந்தார். அவர் இது பற்றிக் குறிப்பிடும்போது 'இவ்வரசு ஒரு பாதி அடிமை முறைக்கு ஆதரவாகவும், மறு பாதி அதற்குஎதிராகவும் நிற்கும் நிலை நீடிக்க முடியாது' என ஒரு சொற்பொழிவில் தெரிவித்திருந்தார். லிங்கனை தேர்தலுக்கு முன் நிகழ்ந்த பல பேச்சுக்களில் அடிமை முறையின் கொடுமையை அழுத்தம் திருத்த

மாகக்கண்டித்து அதை ஒழிக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். எனவே அவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அடிமைமுறை ஒழிக்கப்பட்டு விடும் என அஞ்சியதெற்கு நாடுகள் தமது தனித்துவத்தையும் அடிமைமுறையையும் பேணுவதற்காக ஐக்கிய அமெரிக்க இணைப்பிலிருந்து விலகித் தனியரசு ஒன்றை நிறுவத் தயார் செய்து கொண்டன. இந்நிலையில் எல்லோரும் எதிர்பார்த்தபடி லிங்கன் குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடன் தெற்கு கரோலினாவும் அதைத் தொடர்ந்து ஏனைய தெற்கு நாடுகளும் ஐக்கியஅமெரிக்க இணைப்பிலிருந்து விலகிக் 'கூட்டரசு' என்னும் பெயருடன் ஒரு அரசை நிறுவின. மேலும் ஐக்கிய அமெரிக்காவின் அரசியற்றிட்டப, அவ்வாறு ஒரு நாடு விலகுவதற்கு இடமளிக்கிறது எனவும் தெற்கு நாடுகள் வாதித்தன. ஆனால் லிங்கனும், வடக்கு நாடுகளும் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. அன்றியும், வடக்கு நாடுகள் தெற்கு நாடுகளை விடச் செல்வ நிலையிற் சிறந்திருந்ததும் அவற்றின் தொழிலுற்பத்திப் பொருட்களில் தெற்கு நாடுகள் தங்கியிருந்ததும் அவற்றிடை பகைமையைத் தூண்டின. இவ்வாறு வடக்கு-தெற்கு உறவு பாதிக்கப்பட்டிருந்த நிலையில் சார்ல்ஸ்டன் என்னுமிடத்திலிருந்த மத்திய அரசுக் கோட்டையைக் கைப்பற்றக் கரோலினாப் படை வீரர் சிலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை அடுத்து உள்நாட்டுப்போர் ஆரம்பமாகியது.

இவ்வாறு தொடங்கியபோர் 1861 முதல் 1865 வரை நீடித்தது. இப்போரில் வடக்குநாடுகளின் நிலைமை படைபலத்தைப் பொறுத்தவரை அநுகூலமாயிருந்தது. ஏனெனில் அங்குதான் இருப்பு உருக்கும் பொருட்களும் எந்திர உபகரணங்களும் பிறவும் உற்பத்திசெய்யப்பட்டன. அதேசமயம் தெற்கு நாடுகள் ரெயில்வே, யார்ச்சல் முதலியவை சிறந்த படைத்தலைமைப் பெற்றிருந்தது. ஆயினும், வடக்கு நாடுகளின் குடித்தொகையும் போக்குவரத்துவசதியும் அதிகமாயிருந்தடியாலும், ஐக்கிய அமெரிக்காவின் கப்பற்படை வடக்கு நாடுகளுக்கு ஆதரவாயிருந்து தெற்கு

நாடுகளின் துறைகளை வர்த்தகத்தில்ஈடுபடாத வாறும் வைத்திய இராணுவவசதிகளைப்பெறுதவாறும் தடுத் தாலும் போரின் இறுதி வெற்றிவடக்கு நாடுகளுக்கே கிடைத்தது. இப்போரின் பிரதான இறுதிக்களம் கெற்றிஸ்பேக்என்னுமிடமாகும். அங்கு இருதரப்பின ரதும் பிரதான படைகளுக்கிடையில் 3 நாட்கள் இடம் பெற்ற போரின் முடிவில் தெற்குநாடுகள் தரப்பில் 15,000பேர் இறந்துபோக வடக்கு நாடுகள் வெற்றி வாகைசூடின. அதுதெற்கு நாடுகளின் தோல்வியை நிர்ணயித்தது. கெற்றிஸ்பேக் போர் முடிவில் ஆபிர காம் லிங்கன் போர்க்களத்தைப் பார்வையிட்டார். இங்கு இறந்து கிடப்பவர்கள் வீணாக இறக்கவில்லை. ஆனால் கடவுள் கிருபையினால், மக்களினால் மக்களுக் காக, நடத்தப்படும் மக்கள் (சனநாயக) அரசாங்கம் இம் மண்ணிலிருந்துமாய்ந்துபோகாமலிருப்பதற்காக' என்னும்மணிமொழிகளை அடக்கிய உருக்கமானசொற் பொழிவொன்றை நிகழ்த்தினார்.

இதன்மேல் 1863 சனவரியில் அடிமைகள் எல் லோரும் விடுதலை செய்யப்பட்டனர் எனக் கூறும் சட் டம் ஒன்று நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து லிங்கன் இலட்சக்கணக்கான அடிமைகளின் அன்புக் குப்பாத்திரரானார். இவ்வாறு உள்நாட்டுப் போர் நாட்டின் ஒற்றுமையைக் கட்டிக் காத்ததோடு 'எல்லா மனிதர்களும் சட்டத்தின் முன் சமமானவர்' என்றும சனநாயக உண்மையையும், சமூகச்சமத்துவத்தையும். உலகறிய எடுத்தியமபின. அமெரிக்க அரசியற்றிட் டத்தின் 14ஆம் திருத்த விதி எந்த நாடாயினும் சட்ட முறையிலானலன்றி வேறு வழிகளில் ஒரு மனிதனின் உயிர், சுதந்திரம், சொத்து ஆகியவற்றைப் பறிக்க முடியாது எனக் கூறி அவர்களின உரிமைகளுக்கு உத் தரவாதம் அளித்தது.

இவ்வாறு, அடிமைகளின் விடுதலைக்காகப் போரா டிய மாவீரனாகிய லிங்கன் வடக்கு - தெற்கு நாடுக ளின் குரோதத்தைத் தணித்து அவற்றைச் சாந்தப்

படுத்த விரும்பியபொழுதிலும் விதி அதற்குக் குறுக்கே நின்றது. லிங்சன் விடுதலைப் போர் முடிந்து ஐந்து நாள் ஒரு நாடகமன்றில் பூத் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டான். ஆயினும் அனைது நாமம், அமெரிக்க வரலாற்றில் அழியா இடம் பெற்று விட்டது என்பதில் ஐயமில்லை.

(2) இங்கிலாந்தில் பாராளுமன்ற ஆட்சி பலப்படுதல் :—

தொழிற் புரட்சியின் தொட்டிலாகிய இங்கிலாந்தில் 1730–1850 காலத்தில் தொழில் துறைகளிலும் போக்குவரத்து பயிர்ச்செய்கை ஆகியவற்றிலும் ஏற்பட்டமாற்றங்களையும் தொழிலாளர் வகுப்பு என ஒன்று உருவாகியதையும் முன்னரே அத்தியாயத்திற் படித்தோம். இப்பொழுது தொழிலாளர்கள் சனநாயக உரிமைகள் பெற்ற வரலாற்றையும் பாராளுமன்ற சனநாயக ஆட்சி முறை இங்கிலாந்தில் பலமடைந்த வரலாற்றையும் கவனிப்போம்.

தொழிற் புரட்சியின் விளைவாக, உருவாகிய தொழிலாளர் வகுப்பினர் தொடக்கத்தில் பல தொல்லைகளுக்குள்ளாயிருந்தனர். வேதனம், வேலை நேரம் முதலிய விடயங்களில் அவர்கள் தமது கோரிக்கைகளைப் பாராளுமன்றத்தில் எழுப்பக் கூடியதாக அதில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கவில்லை. 1832இல் நிறைவேற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டம் தொழில் துறைகளில் ஈடுபட்டநடுத்தர வகுப்பினருக்குமட்டும் வாக்குரிமையை வழங்கியதுடன் நிறுத்திவிட்டது. இதன் பின்னர் 1834இல் ரொபேட் ஓவனால் உருவாக்கப்பட்ட 'தேசிய இணைப்புத் தொழிற் சங்கம்' தொழிலாளரின் உரிமைகளுக்காக வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள முயன்றபோதுபீதியுற்ற அரசாங்கம் பிழையான வழிகளை பின்பற்றி தொழிலாளர் இயக்கத்தை நசுக்கிவிட்டது. ஆயினும் அதிருப்தி தொடர்ந்து நிலவியது. இதன்விளைவாகத் தொழிலாளர்கள் பாராளுமன்ற ஆட்சியில் தாமும் பங்கு பெறுவதற்காக மேற்கொண்ட இயக்கமும் பலமடைந்தது. பின்னர் 1888இல் வில்லியம் லோவற் என்பவர்

'மக்கள் பட்டயம்' என்னும் ஒர் உரிமைப் பட்டியலை வரைந்து அதில் 6 கோரிக்கைகளை முன்வைத்தார். 24 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாக்குரிமை, இரகசிய வாக்களிப்பு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வேதனம் முதலியன அப்பட்டயத்தின் முக்கியமான கோரிக்கைகளாம். இவ்வாறு தொடங்கப்பட்ட 'பட்டயப்' போராட்டம்பத்து ஆண்டுகள் வரை நீடித்தது. ஆயினும் 1848இல் அவ்வியக்கத்தினரால் அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்ட ஒரு மனுவில் ஆயிரக்கணக்கான கள்ளக் கையெழுத்துக்கள் (அவற்றில் விக்ரோறியா. இராணியாரதும் ஒன்று) காணப்பட்டதைத் தொடர்ந்து பட்டயப்போராட்டம்பிசுபிசுத்தது. ஆனல் 1860 க்கு மேல் பிரித்தானியாவில் தொழில்களும் வர்த்தகமும் மிக வளர்ச்சியுற்றிருந்த காலத்தில் நாட்டு மக்கள் அனைவரும் அச்செல்வச் செழிப்பில் பங்குபெற்றனர். அந்நிலையில் பொருளாதாரத் துறையில்ஏற்பட்ட அளவுக்கு, அரசியல், சமுதாயத் துறைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதை அனைவரும் உணர்வராயினர். குறிப்பாக பட்டினங்களில் வசித்த தொழிலாளர்கள் தமக்கும்ஆட்சியில் பங்கு வேண்டுமெனக் கோரிக்கைகள் விடுத்தனர்.

இவ்வாறு ஆட்சித் துறையிலும், சமூகத்துறையிலும் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்பதை அக்காலத்திய அரசியற் கட்சிகளும், அரசியற்தலைவர்களும் உணர்ந்திருந்தமையால் மாற்றங்கள் எளிதில் புகுத்தப்பட்டன. விக்ரோறியா மகாராணியாரின் ஆட்சிக்காலத்தில் (1837—1910) முதன்மைபெற்றிருந்த பெஞ்சமின் டிஸ்றலி, கிளாட்ஸ்ரன்என்னும இரு தலைவர்களும், பாராளுமன்ற ஆட்சி முறை பலப்படுதற்கு அரும் பணியாற்றினர்கள். டிஸ்றலி பிறப்பில் யூதராயிருந்து கிறிஸ்தவராக மாறியவர். அவர் 1837 இல் முதன் முதல் பாராளுமன்றத்துக்குத்தெரிவு செய்யப்பட்டார்.'கொன்சவேற்றிவ்' என்னும் பழமை பேணும் கட்சியைச் சேர்ந்த டிஸ்றலி 1852, 1858-9

1867 ஆகிய ஆண்டுகளில் சான்சலராகப் பணியாற்றினார். 1867இல் நிறைவேற்றப்பட்ட இரண்டாவது சீர்திருத்தச் சட்டம்டிஸ்றலியினால் கொண்டுவரப்பட்டது இச்சட்டம் 1866இல்கிளாட்ஸ்ரனால் கொண்டுவரப்பட்டுத் தோற்கடிக்கப்பட்ட சீர்திருத்த முறியைப் பெருமளவு தழுவியிருந்தது டிஸ்றலியாற் கொண்டுவரப்பட்ட இரண்டாம் சீர்திருத்தச் சட்டம் பல திருத்தங்களுடனேயே நிறைவேற்றப்பட்டது. அதன்விளைவாக ஏறத்தாழ 10 இலட்சம் பேர் வாக்குரிமைபெற்றனர். 19ஆம் நூற்றாண்டில் நிறைவேற்றப்பட்டமிக முக்கியமான முறிஇது வெனலாம். இதன் கீழ் பட்டினங்களில் வாழும் எல்லா ஆண் குடியிருப்பாளர்களும் 'பொறேஸ்' பகுதிகளில் 10 பவுண் வாடகை கொடுப்பவர்களும் வாக்குரிமை பெற்றனர் இச்சட்டத்தின் விளைவாகப் பெருந்தொகையான தொழிலாளர்கள் வாக்குரிமையைப்பெற்றதனால், இதற்குப் பின்னர் தொழிலாளர்களின் நலனைப் புறக்கணிக்கும் எந்த அரசாங்கமும் பதவிக்கு வர முடியாது என்ற நிலைஏற்பட்டது.

இரண்டாம் சீர்திருத்தச் சட்டத்தின் பின்னர் 1870இல்பொஸ்ரர் என்பவர் கல்விச் சட்டம் ஒன்றைப் பிரதமர் கிளாட்ஸ்ரனின் ஆதரவுடன் நிறைவேற்றினர். இச்சட்டம் எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி கிடைப்பதற்குவசதி செய்தது. அதற்கு முன்னர் பட்டினங்களிலும் அதையொட்டியுள்ளஇடங்களிலும் மட்டும் கல்வி வசதி காணப்பட்டது. எனவே 1870 ஆம் ஆண்டுக் கல்விச் சட்டம் 'எல்லோருக்கும் கல்வியில் சமசந்தர்ப்பம், என்னும் இன்னொரு சனநாயகக் கொள்கையை நிலைநாட்டியது. கிளாட்ஸ்ரன் தாம் பிரதமர் பதவி வகித்த நான்கு காலக்கூறுகளிலும் (1868–74 1880-85, 1886, 1892-4) மேற்கொண்ட வேறுசிலநடவடிக்கைகளும் சனநாயக ஆட்சியைப் பொருளுள்ளதாகஆக்கின எனலாம். 1870இல்கிளாட்ஸ்ரன் சிவில் சேவையில்எல்லோருக்கும் சந்தர்ப்பம்அளிக்கும் நோக்

கத்துடன் போட்டிப் பரீட்சை முறையை ஏற்படுத்தினர் பின்னர் 1872இல் வாக்குச் சீட்டுச் சட்டம் ஒன்றை நிறைவேற்றி இரகசியவாக்களிப்பு முறையை அமுலாக்கினர். எனவே இதற்குப் பின்தான்உண்மையான சனநாயக ஆட்சிமுறை இங்கிலாந்தில் நிலவியது எனலாம். கிளாட்ஸ்ரன் மேற்கொண்டஇன்னொரு நடவடிக்கை 1884இல் மூன்றாவது சீர் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதாகும். இச்சட்டத்தின் விளைவாக கவுன்றிகளில் வாழ்ந்தவர்களும் பட்டின வாசிகளைப் போல வாக்குரிமையைப் பெற்றதினால் அனேகமாக எல்லா ஆண் குடியிருப்பாளர்களும் வாக்குரிமையைப் பெற்றனர். இவ்வாறு மொத்தம் 20 இலட்சம் பேர் மேலதிகமாக வாக்குரிமையைப் பெற்றனர். இவர்களில் பயிர்த்தொழில் தொழிலாளர்கள், சுரங்கங்களில்வேலை செய்வோர் பெரிய பட்டினங்களுக்கு வெளியில் வசிக்கும்தொழிலாளர்ஆகியோரும்அடங்கியிருந்தனர்.இதன் பின்னர் 1885இல் மீளப்பரப்பும் சட்டம் ஒன்றைக் கிளாட்ஸ்ரன் நிறைவேற்றினர். இது 'கவுன்றி' 'பொரோ' என்னும்வேறுபட்டபிரிவுகளை நீக்கிவிட்டுப் பல கலைக்கழகங்கள், பெரிய பட்டினங்கள் ஆகியவற்றைத் தவிர்த்த ஏனையஇடங்களில் ஒற்றைஅங்கத்தவர் தொகுதிகளை அமைத்தது. மேற்குறிப்பிட்ட இருசட்டங்களும்பிரித்தானியதேர்தல்முறையில் மேற் கொள்ளப்பட்டபெரிய அளவிலான மாற்றங்கள் என மதிக்கப்படுகின்றன கிளாட்ஸ்ரனால் மேற்கொள்ளப்பட்டவேறொரு முற்போக்குநடவடிக்கை 1894 ல் பெண்களுக்கு நகரசங்கத்தேர்தலில் வாக்குரிமையையும்- மாவட்டக் கழகங்களில்உறுப்பினராகப்பணியாற்றும் உரிமையையும் வழங்கியதாகும். இவற்றின் விளைவாக அரசியலில் ஆண் பெண் சமத்துவம் நிலைநாட்டப்பட்டது. இவ்வாறு இங்கிலாந்தில் சனநாயக ஆட்சி பலப்படுதற்கு வேண்டிய பல நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு ஐறிஷ் மக்களின் சுதந்திர இயக்கத்துக்கு ஆதரவுநல்கி முதலாம், இரண்டாம்ஐறிஷ் ஆட்சிச் சட்டங்களின் மூலம் அவர்களுக்குப்பாராளுமன்ற ஆட்சியை வழங்க

முயன்றார். ஆயினும் தூரதிட்டவசமாக அவை நிறை வேற்றப்படவில்லை. எனினும்கிளாட்ஸ்ரன் தனது சொந்த நாட்டில் அரசியற்றுறையிலும் சமூகத் துறையிலும் ஆற்றிய சேவைபிரித்தானிய தலைவர்களின் வரிசையில் அவருக்கு ஒரு சிறப்பான இடத்தை அளித்துள்ளது எனின் அது மிகையன்று.

வினாக்கள்

(1) அமெரிக்க உள்நாட்டுப் போருக்கான காரணங்கள் யாவை?

(2) ஆபிரகாம் லிங்கன் நாட்டுக்கு ஆற்றிய சேவையை மதிப்பிடுக.

(3) டிஸ்றலி, கிளாட்ஸ்ரன் ஆகியோரின் கீழ் இங்கிலாந்தில் பாராளுமன்ற ஆட்சி முறை பலப்பட்ட வரலாற்றை விபரி.

(4) வரலாற்றுக் குறிப்பெழுதுக :- 1. லிங்கன். 2. டிஸ்றலி, 3. கிளாட்ஸ்ரன், 4. அமெரிக்க உள்நாட்டுப்போர்.

அத்தியாயம் 20

இந்தியாவில் பிரித்தானியரின் ஆட்சி

பரவிய வரலாறு

இந்தியத் துணைக்கண்டம், அசோகன், சந்திரகுப்தன், ஆகியோரின் ஆட்சிக் காலங்களுக்குப் பின்னர் என்றுவது ஒரு குடைக்கீழ் ஆளப்பட்டது கிடையாது. பதினெட்டாம் நூற்றுண்டுத் தொடக்கத்தில், மொகலாயப் பேரரசு மட்டும் வட இந்தியாவில் ஓரளவு பரந்த பிரதேசத்தில் ஆட்சிசெலுத்தி வந்தது. தெற்கில் கர்நாடகப் பகுதியில் ஆர்க்காட்டு நவாப்பும். வட மேல்பகுதியில் மராட்டியரும்; சீக்கியரும் ஆதிக்கம் பெற்றிருந்த அவ்வேளைமைசூர், ஹைதராபாத், முதலியன இந்தியக் குடாநாட்டின் மத்தியப்பகுதியில் தனியரசுகளாகத் திகழ்ந்தன. இவற்றைத் தவிர எண்ணிறந்தசிறுஇராச்சியங்களும் (சமஸ்தானங்கள்) இந்தியாவில் காணப்பட்டன. இவ்வாறு சிறியதும் பெரியதுமான பல இராச்சியங்களைக் கொண்டிருந்த இந்தியாவில் அரசியல் நிலைபதினெட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் மொகலாயப்பேரரசின்வீழ்ச்சியுடன் மேலும் மோசமடைய அது பிறநாட்டின் வர்த்தகப் போட்டிகளும், அரசியலாதிக்கமும்இந்தியாவில் அதிக அளவில் ஏற்படஅடிகோலியது.

17 ம் நூற்றுண்டில் பிரித்தானிய - பிரான்சிய படர்ச்சி

பதினைறும் நூற்றுண்டில் போத்துக்கீசர் காட்டிய வழியைப்பின்பற்றி 17ம்நூற்றுண்டில் பிரித்தானியரும் அவர்களைத் தொடர்ந்து பிரான்சியரும் கீழைத்தேச வர்த்தகத்தைக் கைப்பற்று முகமாக வந்து இந்தியாவின்கரையோரப்பகுதிகளில் பல குடியேற்றங்களையும் கோட்டைகளையும் நிறுவலாயினர். அவர்கள் கிழக்கிந்திய வர்த்தக சங்கம் என்ற பெயருடன் தனித்தனி ஒவ்வொரு சங்கத்தை நிறுவி வர்த்தக விடயங்களைக் கவனித்தனர். இவ்விதமாக 1600இல் நிறுவப்பட்ட

பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் 1613 இல் சூரத் என்னுமிடத்தில் ஜெகாங்கீர் மன்னனின் அனுமதியுடன் ஒரு பண்டக சாலையை நிறுவியது. இதன் பின்னர் 1679இல் விஜயநகர அரசிடமிருந்து சென்னையைப்பெற்றது பின்பிரித்தானிய மன்னனாகியசார்ல்ஸ் போர்த்துக்கீச இளவரசியைமணம் முடித்ததன் மூலம் பம்பாயைச் சீதனமாகப்பெற அதையும் கிழக்கிந்திய வர்த்தக சங்கம்தனதுடைமையாக்கிற்று. இறுதியாக 1690இல்ஆங்கிலேயர் அவுரங்கசீப்பின் அனுமதியுடன் ஹூக்ளியில் ஓர் பண்டக சாலையை நிறுவினர். இது பிற்காலத்தில் கல்கத்தாவாக வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வாறுபிரித்தானியர் பம்பாய், கல்கத்தா, சென்னை என்னும் மூன்று கேந்திர நிலையங்களிலும் பண்டக சாலைகளை நிறுவிய அதே சமயம் பிரான்சியரும் XIV ஆம் லூயி மன்னனின் மந்திரியாகிய கொபேட்டின் தூண்டுதலின்கீழ் கீழைத்தேச வர்த்தகத்தை வளர்க்கு முகமாக வந்து 1669இல் மசூலிபட்டினத்திலும்அதைத் தொடர்ந்து சந்திரநாகூர், பாண்டிச்சேரி ஆகிய இடங்களிலும்பண்டகசாலைகளை நிறுவி இந்திய வர்த்தகத்தில் தாமும் ஈடுபடத் தொடங்கினர். இவ்வாறு 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் காலூன்றியிருந்தபிரித்தானியரும் பிரான்சியரும் 18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவுரங்கசீப் என்னும் மன்னன் இறந்ததையடுத்து ஏற்பட்ட மொகலாயப்பேரரசின் சீரழிவின் விளைவாக உண்டாகியவாய்ப்பான அரசியல் நிலைமைகளைப்பயன்படுத்தி, உள்நாட்டு அரசுகளுடன் இணக்கங்கள், உடன்படிக்கைகள் ஆகியவற்றை மேற்கொண்டு தமது வர்த்தக நலன்களை வளர்க்கமுனைந்தனர். இத்தகைய வர்த்தகப் போட்டி, இறுதியில் அரசியல் ஆதிக்கப்போட்டியாக மாறிப்போர்களில் முடிவடைந்தது.

பிரித்தானியரின் எழுச்சியும் பிரான்சியரின் வீழ்ச்சியும்

பிரித்தானியருக்கும் பிரான்சுக்கு மிடையிலுண்டான பிணக்குகள் 1740—1763 காலத்தில் உச்சநிலையிலிருந்தன. 1741இல் பிரான்சியக் குடியேற்றங்களின்

ஆள்பதியாக வந்த டூப்லே ஹைதராபாத், கர்நாடகம் என்னும் இரு இராச்சியங்களிலும் ஏற்பட்ட வாரிசு உரிமைப்பிணக்குகளில் தலையிட்டுப் பிரித்தானியருடனும் திண்டாடினான். இதன் விளைவாக ஏற்பட்ட இரண்டு கர்நாடகப் போர்களின் இறுதியில் பிரான்சியரின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்தது. ஆயினும் 1756 இல் ஏழாண்டுப்போர் தொடங்கியபோது பிரான்சியர் மீண்டும் பிரித்தானியருடன் போரிட்டனர். இக்காலத்தில் (1756 – 63) பிரான்சிய தளபதியாகிய லலி, சேர் அயர்கூட் என்னும் பிரித்தானிய தளபதியினால் 1760 ல் வந்தவாசி என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டான். அத்துடன் பாண்டிச்சேரியும், சந்திரநாகூரும் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டன. இவற்றில் பாண்டிச்சேரி போர் முடிவில் பிரான்சியரிடம் கையளிக்கப்பட்டது. அதேசமயம் சந்திரநாகூரில் பிரான்சியர் தமது படைகளை வைத்திருக்கும் உரிமையை இழந்தனர். இவ்வாறு ஏழு ஆண்டுப் போர் முடிவில் பிரான்சியரின் செல்வாகு அற்றுப் போகப் பிரித்தானியரின்கை ஓங்கியது. பிரித்தானியர் கர்நாடகப் போரின் பின்னர் இப்பிரதேசத்தின் ஆட்சிக்கு மறைமுகமாகப் பொறுப்பேற்றனர். ஆர்க்காட்டு நவாப்பான முகமத் அலி பிரித்தானியரின் கைப்பொம்மையாகவே இருந்தான். அதேசமயம் வங்காள நவாப்பான சிராஜ் உட்தவுலா என்பவனுக்கெதிராக ரூபேட் இளவ் மேற்கொண்ட பிரசித்திபெற்ற பிளாசிப் போரும் (1757) 1764இல் வங்காள நவாப், அயோத்தி நவாப், மொகலாய அரசன் ஆகியோரின் கூட்டணிக்கு எதிராக மண்ரே மேற்கொண்டபக்சர்போரும் வடஇந்தியாவில் பிரித்தானியரின் ஆட்சி விரிவடைதற்கு வழிவகுத்தன. இதன் பின்னர் 1765இல் வங்காள நவாப் (மூர்சீத் அலிகான்) தனது இராச்சியத்தின் குடியியல் நீதிபாலன அதிகாரங்களைப் பிரித்தானியரிடம் கையளித்தான் அதே சமயம், மொகலாயமன்னன், வங்காளம் பீகார், ஒரிசா, ஆகிய பிரதேசங்களின் 'திவானியை' (இறைவரி உரிமை) பிரித்தானியருக்குக் கையளித்தான். இவற்றுக்குப் பதிலாக, பிரித்தானிய அரசு

முன் குறிப்பிட்டோருக்கு உபகார வேதனம் வழங்கியது. இவ்வாறு 1766 அளவில் பிரித்தானியர் வங்காளப் பகுதியிலும், கர்நாடகத்திலும் நன்கு காலூன்றியிருந்த நிலையிலும் வர்த்தகசங்கமே இந்தியவிடயங்களுக்கு முழுப் பொறுப்பு வகித்து வந்தது. ஆனால் இலங்கையில் நிலவியதைப்போல், அங்கும் நிர்வாக ஊழல்கள் நிலவியதனால் வர்த்தக சங்கம் 1770இல் பிரித்தானியாவிடம் கடன் கேட்டபோது அச்சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி நோத் ஒழுங்கு படுத்தும் சட்டமொன்றை நிறைவேற்றி வர்த்தக சங்கத்தின் நிர்வாக ஊழல்களைக்களைந்தார். இதன் பின்னர் 1784ல் பிரதமர் பிற் இந்தியச் சட்டம் என ஒன்றை நிறை வேற்றி அதன் மூலம் ஒரு இயக்குநர் குழுவை நிறுவி வர்த்தக சங்கத்தின் எல்லாவிதமான உத்தியோக பூர்வமான அலுவல்களையும் கட்டுப்படுத்தினர். ஆயினும் வர்த்தக விடயங்கள் அதன் பொறுப்பிலேயே விடப்பட்டன. இவ்விதமான ஒருவகை இரட்டை ஆட்சி நிறுவப்பட்டு 1858 வரை நீடித்தது.

பிரித்தானியரின் ஆட்சி விரிவடைதல் :- மேற்கூறப்பட்டவாறு இந்தியாவின் பாலன விடயங்களில் பிரித்தானிய அரசு நேரடியான கண்காணிப்பை மேற்கொள்ளத் தொடங்கிய பின்னர் இந்தியாவில் அவர்களின் ஆதிக்கம் படிப்படியாக அதிகரித்தது. 1786 முதல் 1848 வரையுள்ள காலத்தில் தான் பிரித்தானியரின் ஆட்சி இந்தியாவின் பல பகுதிகளுக்கும் பரவியது. 1786இல் இந்தியாவின் ஆள்பதியாகவந்த கோண்வாலிஸ். மைசூர் மன்னனாகியதிப்பு சுல்தானுடன் போரிட்டு அவனை வென்று அவனது இராச்சியத்தில் அரைப் பங்கைத் தமதாக்கினர். பிரித்தானியர் 1765க்குப் பின் தமதாக்கிய முதற் பிரதேசம் இதுவேயாகும் கோண்வாலிசுக்குப் பின்னர் வெல்லஸ்லியின் காலத்தில் தான் பிரித்தானிய அரசு அதிகமாக விரிவடைந்தது. வெல்லஸ்லி காலத்திலேயே நெப்போலியன் எகிப்திய படையெடுப்பை மேற்கொண்டிருந்தான். எனவே அவன் இந்தியாவிலும் படையெடுக்கக் கூடும் என

அக்காலத்தில் ஓரு பீதி நிலவியது. ஆனால் நெப்போலியன் எகிப்தியப்போரை இடையில் விட்டு விட்டு நாடு திரும்பியமையால் அப்பீதி அற்றது. பின்னர் வெல்லஸ்லி பிரித்தானிய ஆட்சியின் படர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காக ஓரு உத்தியைக் கையாண்டார். அதுவே படைத்துணை உடன்படிக்கையாகும்.

படைத்துணை உடன்படிக்கையை மேற்கொள்ளும் அரசுகளின் பாதுகாப்பும், வெளிநாட்டுத் தொடர்பும் பிரித்தானியர் வசம் விடப்பட்டன. அதேசமயம் பிரித்தானிய பதிவாளனொருவனோடு பிரித்தானிய படையொன்றும் ஒவ்வொரு பிரிவிலும் தங்கியிருந்தன. அப்படைகளின் பராமரிப்புக்கானசெலவு, உள்நாட்டு அரசுகளின்பொறுப்பாயிருக்கும். இவ்விதமான உடன்படிக்கை முதன் முதல் 1798இல் நிசாமுடன் மேற்கொள்ளப்பட்டது. இதைத்தொடர்ந்து வெல்லஸ்லி தாம் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருந்த ஏழு ஆண்டு காலத்தில் தஞ்சாவூர், பரூகபாத், கர்நாடகம், சூரத் முதலிய இடங்களைப் பிரித்தானிய ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்ததோடு மைசூர் மன்னனாகிய திப்பு சுல்தானையும், மராட்டியரையும் வென்றும், ஹைதராபாத் அயோத்தி ஆகிய இடங்களில் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டை அதிகரித்தும் பலவாறு பிரித்தானிய ஆட்சியைவிரிவுபடுத்தினர் இவரது முயற்சிகளின் விளைவாக, 'இந்தியாவில் இருந்த பிரித்தானியப் பேரரசு பிரித்தானிய - இந்தியபேரரசு' என மாறியது வெல்லஸ்லியின்ஆட்சி யிறுதியில் பஞ்சாப், காஸ்மீர், சிந்து, அசாம் ஆகிய இடங்களைத் தவிர எஞ்சிய பிரதேசங்களில் பிரித்தானியரின்ஆட்சி பரவியிருந்தது. வெல்லஸ்லிக்குமுன்னர் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் (1813 1823) கூர்க்கருடன் மேற்கொண்ட போரின் விளைவாகரெனை, எனப்படும் மலைஅடிவாரப்பகுதியையும், காக்வால்-குமோன் பகுதிகளும் பிரித்தானியர் வசமாயின ஹேஸ்டிங்ஸ், பின்டாரி எனப்படும்குழுவினரைத்தோற்கடித்ததோடு 3ஆம் மராத்தியப்போரில் வெற்றிபெற்றதன் மூலம் மராத்தியப் பிரதேசத்தில் ஓருபகுதியையும் பிரித்தானியர் வசமாக்கினர். ஹேஸ்டிங்ஸ்

காலத்தில் இந்தியாவிலிருந்த எல்லா நாடுகளினதும் வெளிநாட்டுத் தொடர்புகள் பிரித்தானியரின் கட்டுப் பாட்டின்கீழ் இருந்தது. இதனால் நாட்டில் அமைதிநில வியது. இதற்குப்பின்னர் அம்ஹேர்ஸ் முதலாம் பர்மிய போரில் ஈடுபட்டு இந்தியாவின் கிழக்கு எல்லைக்குள் பர்மியரின் வடபிரதேசத்தை உள்ளடக்கினர். அவருக் குப் பின்னர் ஆளுநராகிய பென்ரிங் (1828-35) தலை யிடாக் கொள்கையைப் பின்பற்றியபோதிலும் கூர்க்கி லும் மைசூரிலும் ஆட்சி ஒழுங்கீனமா யிருந்தபடியால் அவற்றின் ஆட்சியைத் தமதாக்கிக் கொண்டார். அவர் பல சமூக பொருளாதார சீர்திருத்தங்களையும் மேற் கொண்டார். உடன்கட்டையேறல் என்னும்பழக்கமும் பலதார மணமும் இவர் காலத்திலேயே ஒழிக்கப்பட் டன. மேலும் பென்ரிங் தமது ஆய்வுரைக் கழகத்திலி ருந்த மக்காலே என்பவரின் கருத்துக்கிணங்க ஆங்கில கல்வியைப் பரப்புவதற்கும் அரும்பாடுபட்டார். இலங் கைக்கு வந்த கோல்புறூக் குழுவினர் மக்காலேயின் கருத்தை ஆதரித்தமையால் தான் தமது சிபார்சுகளில் ஆங்கிலக்கல்வி வளர்ச்சிக்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு இந்தம் கூறியது கவனிக்கத் தக்கது.

பென்ரிங்குக்குப்பின்னர் முறையே மெற்காவ், ஆக் லண்ட், எலன்பரோ ஆகியோர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர். எலன்பரோவின் ஆட்சிக்காலத்தில் சிந்து மாகாணத்து அதிபதிகளாகிய அமீர்களுடன் வேண்டு மென்றே ஒருபோர் தூண்டப்பட்டு அம்மாகாணங்கள் பிரித்தானியரின் ஆட்சிக்குள் கீழ் கொண்டுவரப்பட்டது அவருக்குப் பின் 1848;50 காலத்தில் ஆளுநராயிருந்த டல்ஹவுசி இந்தியப்பேரரசை மேலும்விரிவுபடுத்தினர் அவர் சீக்கியருடன் மேற்கொண்ட இரண்டாம்போரில் வெற்றிபெற்றுப் பஞ்சாப் இராச்சியத்தை இந்திய அர சுடன் இணைத்தார், டல்ஹவுசி இரண்டாம் பர்மியப் போரில் ஈடுபட்டுப் பர்மாவின் கரைப்பிரதேசம் முழுவ தையும் தமதாக்கினர். மேலும் அவர்பிரித்தானியரின்

படைத்துணையைப் பெற்ற அரசுகளில்வாரிசு இல்லாத போது அவற்றைப் பிரித்தானிய அரசின் கீழ்க் கொண்டுவருவதற்காக 'டொக்றைன்ஒவ்லப்ஸ்' என்னும் ஒரு கொள்கையை வகுத்தார். அதன்கீழ் 1848இல் சதாரமும் 1853இல் ஜான்சியும் பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன. டல்ஹவுசி அயோத்தியில் நிலவிய சீர்கேடான நிலைமைகளைப் பயன்படுத்திப் பலரது எதிர்ப்புக்கிடையில் அதையும் தமதாக்கினர். இவ்வாறு 1857 அளவில் வடக்கே இமயம்முதல் தெற்கேகுமரிவரையும், கிழக்கே றங்கூன் முதல் மேற்கே கராச்சிவரையும்விரிந்துபரந்த ஒருபேரரசு பிரித்தானியரின் நேரடியான அல்லது மறைமுக ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டிந்த வேளையில் ஆட்சியாளருக்கு எதிரான எதிர்ப்பு ஒன்று உண்டாகியது. அதுவே சிப்பாயப் (படை)க்கலகமாகும்

இந்திய சிப்பாய்க் கலகம் :- (1857-59) கானிங் ஆள்பதியாயிருந்த காலத்தில் ஏற்பட்ட இக்கலகத்துக்கு அரசியல், பொருளாதார, சமூகக் காரணங்கள் உள. டல்ஹவுசியின் அரசுகளை இணைக்கும் கொள்கையினால்நாட்டில் அதிருப்தி ஏற் பட்டிருந்தது. மேலும் மக்களுக்கும் அரசாங்கத்துக்கு மிடையில்நெருக்கமான தொடர்புகளிருக்கவில்லை. இதனால் மக்களின் குறைபாடுகளையும் கருத்துக்களையும் ஆட்சியாளர் அறியமுடியாமற் போயிற்று. அன்றியும் படைவீரர்வெளிநாட்டுக்குச் சென்றும் போர்புரியத்தயாராயிருக்க வேண்டுமென கானிங் 1856இல் ஒரு சட்டத்தை கொண்டுவந்திருந்தார். இதன் விளைவாக வங்காளப் படையில் பெரும் பகுதியினராயிருந்த உயர் சாதிப்போர் வீரர் கடல்கடந்து செல்வது தமதுசாதிக்கு இழுக்கு என்பதினால் ஆட்சியாளர் மேல் வெறுப்புற்றனர் மேலும் அயோத்தி இராச்சியம்ஆங்கில அரசுடன் இணைக்கப்பட்டதையடுத்து அங்கிருந்த படை வீரரிடை அமைதியின்மையும் ஒழுங்கீனமும் காணப்பட்டது அன்றியும் இந்தியப் போர்வீரர் ஐரோப்பியரைவிடத் தொகையில் 6 பங்கு அதிகமாக இருந்து தம் கலவரத்துக்குப் பெருமளவு

துணை செய்தது. இவையே அரசியல் இராணுவக் காரணங்களாகும் சமூகக் காரணங்களைப் பொறுத்தவரையில், அரசாங்கத்தின் கல்விக்கொள்கை, போக்குவரத்து வசதிகளினால் சாதி முறை பாதிக்கப்பட்டமை, மிஷனரிகளின் பிரசாரம், விதவை மறுமண அங்கீகாரம் உடன் கட்டை ஏறல் ஒழிப்பு பற்றிய சட்டங்கள், கிறித்தவராக மாறுவோருக்கு இந்துக்களின் கூட்டுக் குடும்ப முறையில் சொத்துக்களைச் சேர்ப்பிக்கும் சட்டம் ஆகியன முக்கியமானவை. பொருளாதாரக் காரணங்களில், நிலவரியின் அதிகரிப்பு பழையகைத் தொழில்களின் வீழ்ச்சி, அயோத்திப் பிரிவுத்தாலுக்தார்கள் தமது நில உரிமைகளை இழந்ததினால் ஏற்பட்ட அதிருப்தி ஆகியன முக்கியமானவை. அத்துடன் பிளாசிப்போரின் பின் (1757) நூறு ஆண்டுகளின் இறுதியில் பிரித்தானியரின் ஆட்சி முடிவடையும் என மக்கள் கொண்டிருந்த ஒரு குருட்டு நம்பிக்கையும் குழப்பத்துக்குத் தூண்டுகோலாயிருந்தது. இவ்வாறு ஆட்சிக்கு எதிராக பல துறைகளிலும் அதிருப்தி நிலவிய போதிலும் மக்களிடை ஒற்றுமையில்லாதபடியால், ஒழுங்கு முறையாகப் பயிற்சி பெற்றவர்களான படைவீரரே கிளர்ச்சியில் முன்நின்றனர். சிப்பாய்களின் கலகத்தின் உடன் காரணம் புதிய என்பீல்ட் துப்பாக்கித் தோட்டாக்களில் பசு, பன்றி ஆகியவற்றின் கொழுப்பு பூசப்பட்டிருக்கின்றது எனப் பரவியதந்தியாம்பசு இந்துக்களுக்குப் புனிதமான அளவுக்குப் பன்றி முஸ்லிம்களுக்கு அருவருப்பான ஒருமிருகமாகும். எனவே இவ்வதந்தியினால் இந்து, முஸ்லிம் படைவீரரிடை அமைதியின்மை ஏற்பட்டது. இந்நிலையில் மீரத் என்னுமிடத்திலிருந்த படைவீரர் புதிய தோட்டாக்களைப்பயன்படுத்த மறுத்ததையடுத்து அங்கு கலவரம் தொடங்கியது. இவ்வாறு தொடங்கிய கலவரம் டெல்கி, கான்பூர், லக்ஷ்னோ, ரோகில்கண்ட், ஆகியஇடங்களில்பரவியது மத்தியஇந்தியாவில் ஜான்சிராணி, ஆங்கிலேயரின்எதிர்ப்புக்குத் தலைமைதாங்கினார், ஆயினும் பம்பாய், சென்னை, பஞ்சாப் சிந்துமுதலிய பகுதிகளைச் சேர்ந்தபடைகள்இக்கல

வரத்தில் பங்குபற்றவில்லை. எனவே இருதரப்பிலும் பல அட்டூழியங்களும், அழிவுச் செயல்களும் இடம்பெற்ற பின்னர் 1859 அளவில்கலவரம் ஓய்ந்தது-

சிப்பாய்க் காலத்தின் விளைவாக, அதுவரை நிலவிய இரட்டை ஆட்சி முடிவடைந்தது 1858 இல் நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டம் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைத்து இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை முடிக்கு மாற்றியது இதன் பின் ஆள்பதிக்குப் பதிலாக அரசப் பிரதிநிதி ஒருவர் இந்தியாவில் ஆட்சியை நடத்தினர்- அதே சமயம் இங்கிலாந்தில் நாட்டுச் செயலாளர் ஒருவர் இந்தியாவின்பாலனத்துக்குப்பொறுப்பாளராக்கப்பட்டார் இந்தியா, முடியின் கீழ்க்கொண்டுவரப்பட்டதன் பின்னர், நிர்வாக பாலனத் துறைகளில் பல சீர்திருத்தங்கள் காலத்துக்குக் காலம் மேற் கொள்ளப்பட்டன. அத்துடன் கல்வி, போக்குவரத்து, அஞ்சல், தொடர்பு முதலியசேவைகள் ஆகியவற்றிலும் நாடு படிப்படியாக முன்னேற்றமடைந்தது. இவ்வாறு நாடு முன்னேற்றமடைந்த போதிலும் ஆங்கிலக் கல்வியின் பரவலினால் நடுத்தர வகுப்பினர் அரசியல் விழிப்புற்று நாட்டை அன்னியரின் ஆட்சியிலிருந்து விடுவிக்கவேண்டும் என அவாவுற்றனர். மசினி, கவூர், முதலியோரின் விடுதலைப் போராட்டங்கள் புதிதாக உருவாகிய நடுத்தர வகுப்பினருக்கு வழிகாட்டியாயமைந்தன. அதே சமயம் ஆங்கில மொழியிலும்; சுதேச மொழியிலும் வெளிவந்த பெருந்தொகையான பத்திரிகைகளும் இத்துறையில் அளப்பரிய சேவையாற்றின. இதன் விளைவாக நாட்டில் ஏற்படும் எல்லாவித தீமைகளுக்கும் பிரித்தானிய ஆட்சியே பொறுப்பு என்னும் உணர்ச்சி மக்களிடையே பரவத்தொடங்கியது. இவ்விதமான உணர்ச்சிக்கு ஆரிய சமாசம், பிரம்ம சமாசம் முதலாய சமய இயக்கங்களும் உறுதுணையாயிருந்தன.

இது இவ்வாறுக 1880—84 காலத்தில் அரசப் பிரதிநிதியாயிருந்த றிப்பன் உள்ளூராட்சித் துறையில் இந்தியர் போதிய பயிற்சியைப் பெறத் தக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவர் நீதித்துறையில் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் சமத்துவத்தை நிலைநாட்ட முயன்று இந்திய நீதிபதிகள் ஐரோப்பியரின் வழக்குகளை விசாரிக்கும் உரிமையைப் பெறுவதற்காக. 'இல்பேட்முறி' யை நிறைவேற்றமுயன்றும்அது கைகூடவில்லை. இதனால் இன வெறுப்பு அதிகரித்ததோடு இந்தியர் போராட்டத்தில் முதற் பயிற்சி பெறவும் வாய்ப்பு ஏற்பட்டது. றிப்பனின் ஆட்சிக்கால இறுதியில்தான் (1855இல்) இந்திய தேசிய காங்கிரஸ் எனும் தாபனம் நிறுவப்பட்டது. அத்தாபனம் தொடக்கத்தில் சட்டவாதிகள், ஆசிரியர்கள், பத்திரிகை எழுத்தாளர் ஆகியோரை உறுப்பினராகக் கொண்டிருந்தது இந்திய தேசிய காங்கிரஸ் சீர்திருத்தங்களுக்காகவும், குறைபாடுகளின் நிவர்த்திக்காகவும் பல மனுக்களை ஆட்சியாளருக்கு அனுப்பிவைத்ததோடு சமூக, பொருளாதார அபிவிருத்திக்காகவும் பாடுபட்டது. இவ்வியக்கம் ஆண்டுதோறும் கூட்டங்களை நடத்திவந்தது. இதைத்தொடர்ந்து திலகர், லாலா லஜபதிராய் முதலியோர் அன்னியரின் ஆட்சியை ஒழிப்பதற்காக மக்களின் மனதைப் போராட்டப் பாதையில் திருப்புவராயினர். திலகர் நாட்டின் நலனுக்காகப் பலாத்காரத்தில் ஈடுபடுதலும் தவறுகாது எனக்கருதினர். இதனால் அவரது போதனைகளில் ஈடுபாடு கொண்ட சில இளைஞர்கள் ஐரோப்பியர்களின் சொத்தைப் பறித்தும் பலரைக் கொன்றும் புரட்சிகரமான செயல்களில் ஈடுபட்டனர். இது இவ்வாறுக 1892இல் இந்திய சட்டக் கழகத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் ஒரு முறி நிறைவேற்றப்பட்டது. அதன் விளைவாக உறுப்பினரைத் தெரிவுசெய்வதில் தேர்தல் முறை கொள்கையள

வில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும் நடுத்தர வகுப்பினரின் அபிலாட்சைகளை அது பூர்த்தி செய்யவில்லை.

பின்னர் 1888—1905 காலத்தில் கேர்சான் பிரபுவின் ஆட்சியில் சீர்திருத்தக் கோரிக்கைகள் வலுவடைந்தன. கோகலே, தாதாபாய் நௌரோஜி மேதா முதலியோர் இந்தியரின் குறைபாடுகளை ஆட்சியாளருக்கு எடுத்துக்கூறினர். இவ்வாறு பிரித்தானியருக்கு எதிரான ஒரு இயக்கம் படிப்படியாகப் பலமடைந்துவரும் வேளையில் கேர்சான் 1905இல் வங்காளத்தை இரு மாகாணங்களாகப் பிரித்த போது வங்காளத் தேசியவாதிகள் அது தமது இயக்கத்தை நசுக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையெனக் கருதினர். இதன் விளைவாக பிரித்தானியரின் பொருட்களை ஒன்றியொதுக்கம் (பகிஷ்கரிக்கும்) இயக்கம் உருவாகியது இது சுதேசி இயக்கம் எனப்படும். இவ்வியக்கம் வெள்ளையருக்கு எதிரான வெறுப்புணர்ச்சிகளுக்குத் தூபமிட்டது. அதேசமயம் 1906இல் இந்திய தேசிய காங்கிரஸ் தனது ஆண்டு மாநாட்டில் இந்தியாவுக்குச் சுபராச்சியம்' பெறுவதையே தனது குறிக்கோளாகஏற்றுக்கொண்டதை யடுத்த இந்திய விடுதலை இயக்கம் விறுவிறுப்படைந்தது.

இது இவ்வாறுக கோர்சானுக்குப் பின்னர் அரசப் பிரதிநிதியாகிய மின்ரோ II காலத்தில் இங்கிலாந்தில் லிபறல் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்திருந்தது. அது இந்தியாவில் சுதந்திர தாபனங்களின் வளர்ச்சியை விரும்பியது. எனவே அவ்வரசில் இந்திய நாட்டின் செயலாளராகப் பணியாற்றிய மோர்லி இந்தியாவில் பிரித்தானியரின் ஆட்சிக்கெதிராக உருவாகும் அதிருப்தியைச் சீர்திருத்தங்கள் மூலம் நீக்க முனைந்தார். இதன் விளைவாக 1909இல் இந்திய அரசுச் சட்டமொன்று பாராளுமன்றத்தில் நிறை

வேற்றப்பட்டது. இதன் பயனாக ஏற்பட்ட மாற்றங்களே மோர்லி - மின்ரோ சீர்திருத்தங்கள் எனப்படுகின்றன. 1909 ஆண்டுச் சட்டத்தின் விளைவாக தேர்தல் முறை ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு சட்டக் கழகங்களின் உறுப்பினர் தொகையும் அதிகரிக்கப்பட்டது. மேலும் சட்டக் கழகங்களின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுப் பொது விடயங்களை விவாதிக்கும் உரிமையும் அளிக்கப்பட்டது. அத்துடன் சட்டநிர்வாகக் கழகங்களில் இந்தியர்களும் நியமனம் பெற்றனர். இவ்வாறுஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் தேசிய காங்கிரசின் மிதவாதிகளான கோகலே, பனேர்ஜி, ஆகியோரை மட்டும் திருப்திப் படுத்தினவேயன்றித் திலகரைப்போன்றவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. வாக்குரிமைக்கட்டுப்பாடுகளும், சட்டக்கழகங்களில் நியமனப் பிரதிநிதிகளும், உத்தியோக உறுப்பினர்களும் பெரும் பான்மையினராயிருந்ததும். விவாதங்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதும் பலரதும் கண்டனத்துக்குள்ளாயின. இவ்வாறுஆட்சிக்கெதிராக மக்களின் அதிருப்தி அதிகரித்து வந்துகொண்டிருந்தவேளை 1914இல்முதலாம் உலகப்போர்ஆரம்பமாகியது. அது தேசியவிடுதலை இயக்கத்தை வலுப்படுத்தியதோடு சுயநிர்ணய உரிமைக் கொள்கையை முன்னணியிற் கொண்டுவந்தது. இவற்றின் விளைவுகளைப் பின்னொரு அத்தியாயத்திற் படிப்போம்.

வினாக்கள்

(1) 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இந்தியாவில் பிரித்தானியரின் ஆட்சிபரவிய வரலாற்றைவிபரி.

(2) இந்தியப் படைக் கலகத்திற்கான காரணங்களையும்அதன் விளைவுகளையும் கூறுக.

(3) வரலாற்றுக் குறிப்பெழுதுக:- (1) இந்திய தேசியக் காங்கிரஸ், (2) மோர்லி மின்ரோ சீர்திருத்தங்கள் (3) படைக் கலகம்.

அத்தியாயம் 21

பிரித்தானியப் பேரரசின் படர்ச்சியும் குடியேற்றப் போட்டியும்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரித்தானியா தனது முதலாவது பேரரசாகிய அமெரிக்கக் குடியேற்றங்களை இழந்ததும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் அது இந்தியாவில் தனது ஆட்சியை விரிவுபடுத்தியது முன்னர் விபரிக்கப் பட்டன. இனி பிரித்தானியாவின் இரண்டாம் பேரரசு உருவாகி வளர்ந்த வரலாற்றை நோக்குவோம்.

பிரித்தானியா 1785இல் வடஅமெரிக்க குடியேற்றங்களுக்கு சுதந்திரமளித்த பின்னர் கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னபிரிக்கா முதலிய பல நாடுகளில் தனது ஆதிக்கத்தை நீண்டநாட்டுதலும் குடியேற்றங்களை நிறுவுவதிலும் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டதன் விளைவாக அது 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், பெரிய ஒரு சாம்ராச்சியத்தை மீண்டும் தனது ஆட்சியின் கீழ் கொண்டிருந்தது. அவ்விடங்களில் பிரித்தானியரின் ஆட்சி பரவிய வரலாற்றை இனி ஆராய்வோம்.

கனடா; கனடா தொடக்கத்தில் பிரான்சியரின் குடியேற்றமாயிருந்தது 1763ல் ஏழாண்டுப்போர் முடிவில் பிரித்தானியரின் கைக்கு மாறியது. அப்பொழுது அங்கு பிரான்சியரே பெரும்பான்மையினராயிருந்தனர். அவர்கள் கத்தோலிக்க மதத்தினர். எனவே 1774இல் பிரித்தானிய பிரதமர் நோத் குவிபெக் சட்டத்தை நிறைவேற்றி அதன் மூலம் பிரான்சியர் தமது வழமையான சட்டங்கள், மற்றும் சம்பிரதாயங்கள், மதம் ஆகியவற்றைப் பின்பற்ற அனுமதித்தார். பின்னர் அமெரிக்க விடுதலைப் போரின் முடிவில் பிரித்தானிய அரசுக்கு விசுவாசமுள்ளோர் 60000 பேர் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இடம் பெயர்ந்து கனடாவில் ஒன்ராறியோ மாகாணப் பகுதியில் குடியேறினர். இவர்கள் மதத்தால் பிரான்சியரிலும் வேறுபட்டவர்கள். எனவே 1791இல் பிரதமர் பிற் கனடா சட்டம் ஒன்றை நிறைவேற்றிக் குவிபெக்கிலிருந்த பிரான்சியருக்கும் ஒன்ராறியோவிலிருந்த பிரித்தானியருக்கும் தனித்தனி சட்டக் கழகம் சட்ட நிர்வாகக் கழகம் என்பவற்றோடு கூடிய பிரதிநிதித்துவ ஆட்சியை வழங்கினார். இதன் பின்னர் 1815ல்

நெப்போலியனது போர்கள் முடிவடைந்ததையடுத்துப் பிரித்தானியரின் கடல்வலி நிலைநாட்டப்பட்டது. அத்துடன் அந்நாட்டில் போர்களின் விளைவாக ஏற்பட்ட நட்டங்கள் மக்களை இடம் பெயரத்தூண்டின. இவற்றின் விளைவாகப் பிரித்தானிய மக்கள் ஐக்கியஅமெரிக்கா, கனடா முதலியநாடுகளுக்கு மீண்டும் இடம்பெயரத்தொடங்கினர். அவ்விதமாக 1815 முதல்ஆண்டு தோறும் கனடாவில் மட்டும் 20000 பிரித்தானியர் குடியேறுவாராயினர். எனவே காலகதியில் கனடாவில் வசித்த மக்களில் பெரும்பான்மையானோர். ஆங்கிலேயராகினர். அந்நிலைமையைப் பிரான்சியர் விரும்பவில்லை. அதேசமயம் கனடாவில் நிலவிய ஆட்சிமுறை பிரித்தானியருக்குப் பிடிக்கவில்லை. இதனால் 1837இல் பிரித்தானியரும் பிரான்சியரும் தனித்தனிக் கிளர்ச்சி செய்தபோது அரசாங்கம் அவற்றை அடக்கிவிட்டது. ஆயினும் கனடாவின் உள்நாட்டு நிலைமைகளை அறிந்தற்காக டேர்ஹாம் என்பவரின் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவினர் கனடாவுக்கு அனுப்பப்பட்டனர்.

டேர்ஹாம் பிரபு கனடிய நிலைமைகளை ஆராய்ந்து சமர்ப்பித்த அறிக்கையிற் குறிப்பிடப்பட்டசீர்திருத்தங்கள் குடியேற்ற நாடுகளின் 'மகாசாசனம்' என மதிக்கப்படுகின்றன. டேர்ஹாம்பிரபு மேல் கனடாவும்(ஒன்ராறியோ)கீழ் கனடாவும் (குவீபெக்) ஒன்றுக இணைக்கப்பட்டு ஒரே ஆள்புலத்தின் ஆட்சியின் கீழ்க்கொண்டு வரப்படவேண்டுமென்றும் ஆங்கிலேயரின் பெரும்பான்மை நிலைக்க வேண்டுமெனவும் கனடியருக்குப் பொறுப்பாட்சி முறை வழங்கப்பட வேண்டுமெனவும், மந்திரிகள் கனடாவின் சட்டக் கழகத்திற்குப் பொறுப்பானவர்களாயிருக்க வேண்டுமெனவும், அக்கழகம் விரும்பினால் மந்திரிகளைப் பதவியிலிருந்து விலக்கக்கூடியதாயிருக்க வேண்டும் எனவும் சிபார்சு செய்திருந்தார். டேர்ஹாம் அறிக்கையின் சாரம் என்னவெனில் பிரித்தானிய பேரரசின் வெளியோரங்களிலுள்ள நாடுகளில் அமைதியும் செழிப்பும் நிலவுவதாயின் அங்குள்ளார் தாய் நாட்டின் தலையீடின்றி தமது உள்நாட்டு விடயங்களைத் தாமே கவனிப்பதற்கு அநுமதிக்கப்படவேண்டும் என்பதாம். இவ்வாறு டேர்ஹாம் பிரபு தமது அறிக்கையிற் கூறியபடி 1840ம் ஆண்டு ஒன்ராறியோவும் குவீபெக்கும் ஒன்றுக இணைக்கப்பட்டன ஆனால் இதற்குப் பின்னரும் இங்கிலாந்திலிருந்து மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து கனடாவிற் குடியேறியபடியாலும், கனடாவின் மேற்குப் பிரதேசத்தை ஐக்கிய அமெரிக்கா அபகரித்துவிடுமோ எனப் பலர் அஞ்சியபடியாலும், குடியேற்ற வாசிகளிடையே ஒருவகையான கூட்டுறவு மனப்பான்மையும்

ஒற்றுமையும் உண்டாகியது. இதன் விளைவாக கனடாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலிருப்பதையொத்த ஒரு 'இணைப்பரசு' ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட வேண்டுமென்னுங்கருத்துப் பல மடைந்து வந்தது. இந்நிலையில் 1867ம் ஆண்டு பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம்' இங்கிலாந்தில் நிறைவேற்றப்பட்டு கனடாவுக்கு ஆணைப்பத்திரம் அளிக்கப்பட்டது. அப்பொழுது குவிபெக்; ஒன்ராரியோ எல்பவற்றுடன் நொவோஸ்கோஷியா, நியூபிறண்ஸ்விக் என்னும் மாகாணங்களும் இணைந்து கனடிய இணைப்பரசின் கீழ்வந்தன இவ்வாறு இணைந்த ஒவ்வொரு மாகாணமும் தனது உள்நாட்டு விடயங்களைத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரைக் கொண்ட ஒரு பாராளுமன்றத்தின் மூலம் கவனித்தது. அதேசமயம் எல்லா மாகாணங்களுக்கும் பொதுவான மத்திய பாராளுமன்றம் ஒன்றும், மேல்சபை, கீழ்சபை என்னும் இரு உறுப்புக்களுடன் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், வர்த்தகம், முதலிய விடயங்களைக் கவனித்து வந்தது. இவ்வொழுங்கு இன்றும் வழக்கிலுள்ளது. 1867க்குப் பின்னர் கனடா வேகமாக விருத்தியடைந்தது. கனடிய பசிபிக், தேசியபசிபிக் என்னும் இரு புகையிரதப் பாதைகள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்குப்பிரதேசம் விருத்தியடைந்தபோது அங்கு அல்பேட்டா மனிற்றோபா. சஸ்கச்வான், பிரித்தானிய கொலம்பியா முதலிய புதிய மாகாணங்கள் உருவாகின. அவையும் இணைப்பரசின் கீழ் வந்ததால் இன்று கனடா பிரித்தானிய பொதுநலவாய நாடுகளில் மிகப்பெரிதும் பலமிக்கதுமான ஒரு நாடாகத் திகழ்கிறது.

தென்னபிரிக்கா:- தென்னபிரிக்காவின் வரலாறு தொடக்கத்திலிருந்தே பல சிக்கல்களும் பூசல்களும் நிறைந்த ஒன்றாகவே இருந்தது, அங்கு முதன் முதல் குடியேறியவர்கள் ஒல்லாந்தராகும் அவர்கள் நன்நம்பிக்கை முனைப்பகுதியில் 1678இல் சிறு குடியேற்றத்தை நிறுவி நாளடைவில் உள்நோக்கி விரிவடைந்தனர். ஆனால் பிரான்சில் புரட்சி ஏற்பட்ட காலத்தில் ஒல்லாந்தும் அதனால் பாதிக்கப்பட்டதனால் பிரித்தானியர் நன்நம்பிக்கைமுனையையும், இலங்கையையும் ஒல்லாந்து மன்னரிடமிருந்து சாதுரியமாகப் பெற்றனர். இது முன்னர் கூறப்பட்டது (அத்.1) இதன் விளைவாக,பிரித்தானியருக்கும் ஒல்லாந்தகுடியேற்றவாசிகளுக்கு மிடையில் பிணக்குகள் ஏற்பட்டன. இத்தகைய நிலைமையில் நெப்போலியப்போரின் இறுதியில் நன்நம்பிக்கை முனைக்குடியேற்றம் பிரித்தானியரிடம் நிரந்தரமாகக் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒல்லாந்தக் குடிகளாகிய போயர்களுக்கும் ஆங்கி

லேயருக்குமிடையில் பிணக்கு ஏற்பட்டது. பிரித்தானியர் தமது மொழியையும் தமது ஆட்சி முறையையும் புகுத்தியதாலும் 1883இல் அவர்கள் அடிமை முறையை ஒழித்ததினாலும் பெருமளவில் ஆங்கிலேயரும், மதபோதகர்களும் நன்நம்பிக்கை முனை பகுதியில் குடியேறியதாலும் வெறுப்புற்ற போயர்கள், ஆங்கில ஆட்சியினின்று தம்மை விடுவிப்பதற்காகத் தமது உடைமைகளுடன், முன்பின் அறியாத உள்நாட்டை நோக்கி நெடும் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். இது Trek என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும். இவ்வாறு 1836இல் ஏறத்தாழ 10 000பேர் வடக்கு நோக்கிப் பயணம் செய்தபோது பலர் 'ஆலு' இனத்தவரினால் தாக்கப்பட்டு மடிந்தனர். எனினும் ஏனையோர், நேற்றால் பிரதேசத்தையடைந்து அங்கு குடியேறினர். ஆனால் பிரித்தானிய அரசு, பாந்து இனத்தவர்களின் தொல்லைகளைத் தவிர்ப்பதற்காக 1842இல் நேற்றால் பகுதியையும் தனதாக்கிக் கொண்டபோது அங்கிருந்த போயர்கள் மீண்டும் வெளியேறிச் சென்று, ஒறேஞ் சுதந்திர நாடு, திரான்ஸ்வால் ஆகியவற்றில் குடியேறினர்.

இதன் பின்னர் 1853ல் நன்நம்பிக்கை முனை பிரதிநிதித்துவ ஆட்சி முறையையும் 1872ல் பூரண சுதந்திர ஆட்சியையும் பெற்றது. இதன்மேல் போயர் குடியேறிய பகுதிகளுக்குத் தெற்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த பகூற்றே 'கிரிக்கா' என்னும் இரு சுதேசிவகுப்பினரும் தமது நாடுகளை பிரித்தானியரிடம் கையளித்தனர். (1869-1871) இதற்கிடையில் திரான்ஸ்வால் போயர்களுக்கும், சூலுவகுப்பினருக்குமிடையில் சச்சரவுகள் அதிகரித்தபடியால் பிரித்தானியர் 1877இல் திரான்ஸ்வாலையும் தமதாக்கிக் கொண்டனர். ஆயின் இச்செயல் போயர்களின் பகைமையை ஏற்படுத்தியது: இதன் விளைவாகப் போயர்கள் பிரித்தானியருடன் பகைமை கொண்ட போதிலும், சூலுக்களுடன் நடந்தபோர் 1887இல் முடிவடைந்து சூலுலாந்து தாபிக்கபடும்வரை அவர்கள் அடங்கியிருந்தனர், அதன்மேல் அவர்கள் தமது சுதந்திரத்துக்காகப் போராடியபோது பிரித்தானியா அவர்களுக்கு உள்நாட்டு விடயங்களில் பூரண சுதந்திரமளித்து விட்டுத் திரான்ஸ்வாலின் வெளிநாட்டு விடயங்களை மட்டும் தன் பொறுப்பில் வைத்திருந்தது.

இது இவ்வாறுக- 1870-1880 காலத்தில் கிறிக்கர்களின் பிரதேசத்தில் வைரமும் 1880-90 காலத்தில் திரான்ஸ்வாலில் தங்கமும் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெருந்தொகையான ஐரோப்பியர் அவ்விடங்களிற் குடியேற அது போயர்

களின் வெறுப்பை வளர்த்தது அதேசமயம் பேரரசு வேட்கை யுள்ளவராகிய சிசில் ரோட்ஸ் என்பவர் மத்திய ஆபிரிக்காவை விருத்தி செய்வதற்காகப் பிரித்தானிய தென்னபிரிக்க சங்கம் ஒன்றை நிறுவித் திரான்ஸ்வாலுக்கு வடக்கிலுள்ள பகுதியில் ஆங்கிலர் குடியேற வழிவகுத்தார். இப்பிரதேசமே 'ரொடீசியா' எனப் பெயர்பெற்றது. இவ்வாறு ரொடீசியப் பிரதேசம் உரு வாகி விரிவடைந்தமையினால் திரான்ஸ்வால் உள்நாட்டில் மூன்று திசைகளில் மூடப்பட்டபோது அது போயர்களுக்கும் பெருந் தொல்லைகளைக் கொடுத்தது இந்நிலையில், திரான்ஸ்வாலில் சுரங்க மறுத்தற்காகக் குடியேறிய ஆங்கிலேயர் ஜொகானஸ்பேர்க் என்னும் ஒரு நகரை நிறுவி விருத்தி செய்தபோது அது போயர் களின் பொறுமையை மேலும் சோதித்தது எனவே போயர் கள் அங்கு ஆங்கிலேயருக்கு எவ்வித உரிமையையும் அளிக்க மறுத்ததன் விளைவாக ரொடீசியப் பிரதேசத்திலிருந்து சில ஆங்கிலேயர் ஆயுதபாணிகளாகத் திரான்ஸ்வாலுக்குள் புகுந்து கலவரத்தை ஏற்படுத்தியபோது அவர்கள் அடைக்கப்பட்டனர். ஆயினும் ஆங்கிலேயர்மேல் அளவற்ற வெறுப்புக்கொண்ட போயர்கள் அவர்களைத் தமது நாட்டை விட்டுத் துரத்துவதற் காக போல்குறூகர் என்னும் தமது தலைவனின் கீழ் போரொன் றைத் தொடங்கினர். (2ம் போயர் போர்) 1899ல் ஆரம்பித்த போரில் ஒரேஞ் சுதந்திர நாடும் திரான்ஸ்வாலுக்கு ஆதரவ ளித்தது. இதனால் இரண்டு ஆண்டுவரை போயர்கள் திறமை யுடன் போரிட்டு ஆங்கிலேயரின் எதிர்ப்பைச் சமாளிக்க முடிந் தது. ஆயினும் இறுதியில் 1902இல் அவர்கள் தோல்வியடைந் தனர். இதன் பின் ஏற்படுத்தப்பட்ட இணக்கத்தின்படி திரான்ஸ் வால் ஒரேஞ் சுதந்திரநாடு என்னும் இரண்டுக்கும் 1907 முதல் மீண்டும் பூரண பொறுப்பாட்சி வழங்கப்பட்டது அதேசமயம் போயர் தலைவர்களான போதா, ஸ்மட்ஸ், ஆகியோர் பிரித் தானிய அரசுடன் ஒத்துழைக்கத் துணிந்தபடியால் 1909இல் நன்நம்பிக்கை முனை, நேற்றால், ஒரேஞ் சுதந்திர நாடு, திரான்ஸ் வால் என்னும் நான்கும் இணைந்து தென்னபிரிக்க ஐக்கிய அரசை நிறுவின. அதன் முதலாவது பிரதம மந்திரியாக போதா என்னும் போயர் தலைவனே தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியாவும் நியூசிலந்தும்:- அவுஸ்திரேலியா எனப் படும் தென் கண்டத்தின் கரைப்பகுதியில் தேட்டம் மேற் கொண்ட முதல் ஐரோப்பியன் குக் என்னும் கடலோடியாகும். அவன் 1770-79 காலத்தில் நான்கு முறை அக்கண்டத்தின் கரையோரப் பிரதேசங்களைப் பற்றி நன்கு அறிந்து தான்

அறிந்தவற்றை ஆங்கிலேயருக்கு அறிவித்தான். இ கன் பின்னர் 1787 இல் பிரித்தானிய அரசாங்கம் சதா காலச் சிறைத் தண்டனை பெற்றவர்களின் குழுவொன்றை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பியது. அவர்கள் பொட்டனிகுடா என்னுமிடத்தில் இறங்கி அங்கு ஒரு குடியேற்றத்தை நிறுவினர். அதுவே பிற்காலத்தில் சிட்னி நகரமாக உருவாகியது. இதற்குப் பின்னர் ஆண்டு தோறும் குற்றவாளிகள் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டு வந்தனர். ஆயினும் 1800 க்குப் பின்னர் பிரித்தானிய மக்களும் தம்மிட்டமாக அவுஸ்திரேலியாவிற் குடியேறத் தொடங்கினர். இவ்வாறு குடியேறியோரின் கோரிக்கைக்கிணங்கக் குற்றவாளிகளை அனுப்பும் வழக்கம் 1840 முதல் நிறுத்தப்பட்டது. முன் கூறியபடி தம்மிட்டமாகக் குடியேறிய மக்களினால் உருவாக்கப் பட்ட முதலாவது மாகாணம் நியூசவுத் வேல்ஸ் எனப்படும். இதற்குப்பின்னர் 1828 இல் மேற்கு அவுஸ்திரேலியாவும் 1836 இல் தெற்கு அவுஸ்திரேலியாவும் நிறுவப்பட்டன. பின் 1850 இல் விக்ரோறியா மாகாணமும் 1859 இல் தாவீன்ஸ்லந்து மாகாணமும் உருவாக்கப்பட்டன.

இவ்வாறு ஆறு மாகாணங்களாகப்பிரிந்த அவுஸ்திரேலியாவின் ஆரம்பகால வளர்ச்சி மெதுவாகவே ஏற்பட்டது. அக்காலத்தில் செம்மறியாடு வளர்த்தலே முக்கியமான தொழிலாயிருந்தது. பின் இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ஏற்பட்டதன் விளைவாக உரோமத்துக்கு அதிக தேவையேற்பட்டது அத்துடன் 1851 இல் விக்ரோறியாவிலுள்ள பலறற் என்னுமிடத்தில் தங்கம் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்துப் பெருந்தொகையான மக்கள் அவுஸ்திரேலியாவிற் குடியேறுவாராயினர். இதன் விளைவாக விக்ரோறியாவின் குடித்தொகை ஐந்து ஆண்டுக் காலத்தில் ஏறத்தாழ ஐந்து பங்கு அதிகரித்தது (76 000—3,30,000) இவ்வாறு வளர்ச்சியடைந்த குடியேற்றங்களில் நியூசவுத்வேல்ஸ், விக்ரோறியா, தென் அவுஸ்திரேலியா, தஸ்மானியாவென்னும் நான்கும் 1856 இலும், ஏனையவை 1872 அளவிலும் பொறுப்பாட்சியைப் பெற்றன. இவ்விதமாகப் பொறுப்பாட்சி பெற்ற மாகாணங்கள் தொடக்கத்தில் ஒன்றுபடவில்லை; ஆயினும் 1880-89 காலத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் தென் பசிபிக் பகுதியில் தமது ஆட்சியைப் பரப்ப முயற்சித்ததைக் கண்ணுற்ற அவுஸ்திரேலிய மாகாணங்கள் தாம் ஒன்றுபட்டு இணையவேண்டிய அவசியத்தை உணர்ந்து ஒரு வாக்கெடுப்பின் மூலம் ஒரு இணைப்பரசின் உறுப்பினராகச் சம்மதித்தன. இவ்வாறு புதிய ஒரு அரசியற்றிட்டத்துடன் 1900 இல் உருவாகியதே அவுஸ்திரேலிய பொது நலவாய நாடாகும்.

நியூசிலந்து :—நியூசிலந்து 1769 இல் குக் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. ஆயினும் ஒல்லாந்து மாலுமிகள் தான் 'சீலந்து' என்னும் தமது நாட்டிலுள்ள ஒரு மாகாணத்தின் பெயரை இதற்கு இட்டனர். நியூசிலாந்தில் 1839ம் ஆண்டுக்குப் பின்னரேயே மக்கள் குடியேறத் தொடங்கினர். டேர்ஹாம் பிரபுவுடன் கனடாவுக்குச் சென்ற கிபன் வேக்பீல்ட் என்பவர் 'குடியேற்றக்கலை' என்னும் பெயருடன் வெளியிட்ட ஒருநூல் பிரித்தானியரிடையே குடியேற்றத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தியது. அதற்கு முன்னர் 1839இல் நிறுவப்பட்ட 'நியூசிலாந்துச் சங்கம்' தான் நியூசிலாந்துக் குடியேற்றத்தைத் தொடக்கி வைத்தது எனவே இவற்றுக்குப் பின்னர் நியூசிலாந்தில் குடியேறுவோர் தொகை அதிகரித்தது. தொடக்கத்தில் நியூசிலாந்தின் பூர்வீகக் குடிகளான மவோறிகளுடன் நிலவுரிமை பற்றிய தகராறுகள் மூண்டு இருபோர்களும் இடம்பெற்றன. ஆயினும் 1870 அளவில் பூசல்கள் முடிவடைந்ததையடுத்து மவோறிகளும் பிரித்தானியரைப்போல உரிமைகளைப்பெற்றனர். நியூசிலந்து 1856 இல் பொறுப்பாட்சியைப் பெற்றது. அங்கு தொடக்கத்தில் இணைப்பாட்சி முறையே இருந்தபோதிலும் இறுதியில் ஒற்றையாட்சி முறையே அமுலாக்கப்பட்டது. இதன் பின்னர் 1907 இல் நியூசிலந்து ஆணிலப்பத அந்தஸ்தைப்பெற்றது. செம்மறியாட்டுப் பண்ணைத் தொழிலுக்குப் பெயர் பெற்றதான நியூசிலந்து பிரித்தானியர் குடியேறிநாடுகளில் செம்மையான ஆட்சி நடக்கும் ஒரு நாடாகமதிக்கப்பட்டுவருகிறது.

குடியேற்றப் போட்டி

பதினைறும் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலம் வரை ஐரோப்பிய நாடுகள்—சிறப்பாக—கடல் வல்லரசுகளான பிரித்தானிய, ஒல்லாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் போர்த்துக்கல் ஆகியன புதிய நாடுகளில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி அவற்றில் தமது செல்வாக்கை அதிகரிக்கவும் கடல் கடந்த வர்த்தகத்தை வளர்க்கவும் பெரும் பூசலிட்டு வந்தன. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பிரித்தானியா ஒன்று மட்டுமே முதன்மை பெற ஏனைய நாடுகளின் கடல் கடந்த பேரரசுகள் பெருமளவுக்கு வீழ்ச்சியுற்று விட்டன அந்நாடுகளின் ஆதிக்கத்துக்குட்பட்ட பல பிரதேசங்கள் கைமாறியதே அகதகுக் காரணமாகும். இவ்வாறு நெப்போலியப் போரின் இறுதியில் நன்நம்பிக்கை முனையும், இலங்கையும் ஒல்லாந்தரிடமிருந்து

ஆங்கிலேயருக்குக் கைமாறின. அதேபோல் பிரான்ஸ் ஏழாண்டுப் போர் முடிவில் கனடாவையும். இந்தியாவில் ஒரு பகுதியையும் ஆங்கிலேயரிடம் விட்டுவிட்டது. இவ்வாறே ஸ்பெயின் வடஅமெரிக்காவில் தனது ஆட்சியின் கீழிருந்த லூசியானு புளோரிடா பிரதேசங்களை இழந்திருந்தது. இவை ஐக்கிய அமெரிக்காவின் பகுதிகளாக (விலைக்கு வாங்கப்பட்டு) இணைக்கப்பட்டன. போத்துக்கலின் நிலைமையும் இவ்வாறே கீழ்நிலையில் காணப்பட்டது. (வெற்றுடனுப்பிடும் பொழுது பிரித்தானியா, தனது அமெரிக்கக் குடியேற்றங்களை மட்டுமே இழந்திருந்தது குறிப்பிடத்தக்கது. மேற்குறிப்பிட்டவாறு பிரித்தானியா 1815-ம் ஆண்டின்பின் மிகப் பரந்த ஒரு பேரரசையுடையதாயிருந்த வேளையில் ஆபிரிக்காவில் குடியேற்றப்போட்டி ஆரம்பமாகியது எனலாம்.

ஆபிரிக்காவில் குடியேற்றப் போட்டி:— ஆபிரிக்கா, ஐரோப்பாவின் அயலில் இருந்த போதிலும் 19ம் நூற்றாண்டுவரை 'இருட் கண்டம்' எனவே கருதப்பட்டது. ஏனெனில் அதன் கரையோரத்தைத் தவிர ஏனைய பகுதிகளில் அந்நியரெவரும் காலடிவைக்கவோ, தேட்டம் மேற்கொள்ளவோ அதன் புவியியற்சூழல் அநுமதிக்கவில்லை. வடக்கே சகாரா என்னும் பரந்த பாலைநிலமும். மத்தியில் அடர்த்தியான வெப்பவலயக் காடுகளும், மேற்கில் குத்தான சரிவுகளையுடைய மேட்டு நிலமும் கிழக்கில் உயர் மலைகளும் காணப்பட்டமையாலும் ஆபிரிக்க நதிகள் போக்குவரத்துக்கு ஏற்றதாயிருக்காதபடியாலும் அது நீண்ட காலமாக வெளியாரால் அறியப்படவில்லை. ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆபிரிக்காவின் நிலப்பரப்பு முழுவதும் ஐரோப்பிய நாடுகளிடையே பங்கிடப்பட்டு விட்டது.

17—ம் நூற்றாண்டிலிருந்தே ஆபிரிக்காவின் கரையோரப் பகுதிகளில் சில வெளிநாட்டுக் குடியேற்றங்கள் காணப்பட்டன (உ-ம் ஒல்லாந்தரின் நன்நம்பிக்கை முனை போத்துக்கீசரின் அங்கோலா, மொசாபிக்) ஆயின் இவை அதிகம் விருத்தியடையாமல் சிறப்பாக கிழைத்தேச வர்த்தகப் பாதையில் தரிப்பு நிலையங்களாகவே காணப்பட்டன. இந்நிலையில் பிரான்சுதான் ஆபிரிக்க நிலப்பரப்பில் ஒரு பகுதியை முதன் முதல் தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தது. பிரான்ஸ் 1820-27 காலத்தில் அல்ஜீரியாவின் உள்நாட்டு விடயத்தில் தலையிட்டு 1830-ல் அல்ஜீரியாவைக் கைப்பற்றியது, பின் 1848ல் அல்ஜீரியாபோரில்

தோற்கடிக்கப்பட்டதன் மேல் 1858 முதல் அல்ஜீரியா பிரான்சின் பகுதியாக்கப்பட்டது. இவ்வாறு நிறுவப்பட்ட குடியேற்றத்தில் 1870க்கு மேல் பிரான்சிய மக்கள் குடியேறத் தொடங்கினர். 1871இல் பிரான்ஸ் பிறசியாவினால் தோற்கடிக்கப்பட்டமை பிரான்சின் குடியேற்ற வேட்கையை மேலும் அதிகரித்திருந்தது, எனவே அல்ஜீரியாவைத் தளமாகக் கொண்டு பிரான்சிய வர்த்தகர்களும், மதகுருமாரும் உள்நாட்டுப் பகுதியில் பிரயாணம் மேற்கொண்டு பல குறுநில அரசுகளுடன் தொடர்பு கொண்டு அவற்றையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவர முயற்சித்தனர். இவ்விதமாக 1881இல் ரியூனிஸ் பிரதேசத்தைப் பிரான்சியர் தமது ஆட்சிக்கு உட்படுத்தினர். இது இத்தாலியரின் வெறுப்புக்கு இலக்காகியது ஆயினும் பிரான்சியர், அடுத்து 1896இல் மடகாஸ்கர் தீவையும் அதைத் தொடர்ந்து, முதலாம் உலகப் போரின் தொடக்க காலமளவில், மொரொக்கோ சஹாரா உட்பட மேற்கு ஆபிரிக்காவிலும் மத்திய ஆபிரிக்காவிலும் பரந்த ஒரு நிலப்பரப்பைத் தமதாக்கிக் கொண்டனர்.


இது இவ்வாறாக, இருட்கண்டமாகிய ஆபிரிக்காவில் ஆராய்ச்சி மேற்கொண்ட ரேமுபேட் ஸ்டான்லி, டேவிட்லிவிங்ஸ்ரன், பேக்கர் ஆகியோர் நைல், கொங்கோ ஆகிய நதிகளின் உற்பத்திப் பிரதேசம், ஏரிகளைக் கொண்ட பிரதேசம் ஆகியவற்றில் தேட்டத்தில் ஈடுபட்டு, பல ஆபத்துக்களுக்கிடையே முன் பின் அறியாத பல புதிய நிலப் பரப்புகளைக் கண்டு பிடித்தனர். இவர்களின் தேட்டம் ஆபிரிக்க குடியேற்றப்போட்டிக்குப் புத்துயிரளித்தது. அத்தகைமயம், பிரான்சிய ஆராய்ச்சியாளர்களால் அறியப்பட்ட பல புதிய விடயங்களும், ஆபிரிக்காவின் காலநிலை, அங்கு உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் பற்றிய தகவல்களும் ஐரோப்பியருக்குத் தெரியவந்தபோது ஆபிரிக்காவில் குடியேறி அதன் வளங்களை அகப்படுத்த வேண்டும் என்னும் ஆர்வம் மேலும் ஒருபடி அதிகரித்தது. இவற்றின் விளைவாக பெல்சியம், ஜேர்மனி பிரித்தானியா, இத்தாலி ஆகிய நாடுகளும் குடியேற்றப் போட்டியிற் குதித்தன.

1870க்குப் பிற்பட்ட காலத்தில் குடியேற்றப் போட்டி புதிய ஒரு கட்டத்தை அடைந்தது. இதற்குப் பின்னர் போட்டி மிக உக்கிரமாகியது. இதற்கு அரசியல் பொருளாதார காரணங்கள் உள்ளன. 1878 அளவில் ஐரோப்பிய நாடுகளின் தேசிய விடுதலை இயக்கங்களும், ஒற்றுமை இயக்கங்களும் பூர்த்தியடைந்து பல தேசிய அரசுகள் உருவாகியிருந்தன. அவை தேசியப் பெருமை, புகழ் செல்வாக்கு ஆகியவற்றைப் பெறுவ

தற்குக் குடியேற்றங்களைத்தாபிப்பது அவசியமாயிற்று. ஏனெனில் கடல் கடந்த நாடுகளின் மேற்செலுத்தும் ஆதிக்கத்தின் மூலமே ஒரு நாட்டின் மதிப்பும், கீர்த்தியும் எடை போடப்பட்டன. எனவே பிரித்தானியா, இரசியா என்பவற்றைத் தவிர்த்து ஏனைய ஐரோப்பிய அரசுகள் ஒருவகைத் தாழ்மை உணர்ச்சியினால் உந்தப்பட்டு நாடு பிடிக்கும் முயற்சியில் முழு மூச்சுடன் ஈடுபட்டனாயின. இரண்டாவதாக, 1870க்குப் பிற்பட்ட காலத்தில் ஐரோப்பாவில் தொழில்களின் வளர்ச்சி அதிகரித்தபடியால் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தைகளைத் தேடும் பிரச்சனை எழுந்தது. இதன் விளைவாக வெளிநாடுகளில் சந்தை தேடும் முயற்சியும் குடியேற்றப் போட்டியும் அதிகரித்தன. அத்துடன் பெருமளவிலான எந்திர உற்பத்தி முறை மூலப்பொருட்களின் தேவையைப் பன்மடங்கு அதிகரித்ததும், பல பயிர்கள், வெப்பமண்டலப் பகுதியில் மட்டும் காணப்பட்டதும் புதிய நாடுகள் முதலீட்டுக்கு வாய்ப்பளித்ததும் குடியேற்றப் போட்டிக்குத் துணைக்காரணங்களாயின. அன்றியும் உள்நாட்டில் குடித்தொகை அதிகரிப்பைச் சமாளிப்பதற்கும் குடியேற்றங்களை நிறுவும் முயற்சியில் போட்டி போட்டி ஏற்படுவது தவிர்க்கமுடியாததாயிற்று.

பெல்சிய மன்னரான லியோபோல்ட் தான் முதலில் செயலில் இறங்கினார். அவர் 1876இல் சர்வதேச ஆபிரிக்கசங்கம் ஒன்றை நிறுவினர். அதன் ஆதரவிலேயே ஸ்ரான்லி கொங்கோவில் ஆராய்ச்சிமேற்கொண்டார். பின்னர் 1885இல் கூடிய சர்வதேச மாநாடு 'கொங்கோவை' லியோபோல்டின் கட்டுப்பாட்டின் கீழ் எல்லா நாடுகளுக்கும் வர்த்தக உரிமையளிக்கும் சுதந்திர நாடாக ஆக்கியது ஆயினும் அங்கு பெல்ஜியரின் செல்வாக்கு அதிகரித்து 1909இல் அது பெல்சியத்தின் உடமையாகியது. பெல்ஜியத்தைப் போலவே ஜெர்மனியும் குடியேற்றப் போட்டியில் ஆர்வம் காட்டியபோதும், பிஸ்மார்க் அதில் ஆர்வம் காட்டாதபடியால் 1884 வரை அது அடங்கியிருந்தது. ஆனால் 1885 சர்வதேச மாநாட்டின் பின்னர் ஜேர்மனி தான் இழந்த காலத்தை ஈடுசெய்வதில் முன்னின்று தென்மேற்கு ஆபிரிக்கா, கமறூன் ரோகோ, தென்கிழக்கு ஆபிரிக்கா ஆகிய பகுதிகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. இவ்வாறு ஜேர்மனியர் குடியேற்றங்களை நிறுவுவதைக் கண்ணுற்ற பிரித்தானியர் தாமும் அதில் ஈடுபடவேண்டும் என அரசாங்கத்தைத் தூண்டினர். இதன் விளைவாக, பிரித்தானிய அரசு கிழக்காபிரிக்காவிலுள் கெனியா, உகண்டா, ஆகியவற்றையும் நைஜீரியா சோமாலிலாந்தில் ஒரு பகுதி. சூடான் பிரதேசம்

ஆகியவற்றையும் தனதாக்கிக் கொண்டது. இவ்வாறு ஜேர்மனி, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியவை ஆபிரிக்காவில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய அதே காலத்தில் இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளும் ஆபிரிக்க பங்கீட்டில் பங்குபெற்றன, இத்தாலி சோமாலிலாந்தில் ஒரு பகுதியையும் எரித்திரியாப்பிரதேசத்தையும் தனதாக்கியதோடு அபிசீனியாவுடன் போரிட்டு அந்நாட்டையும் கைப்பற்றமுயற்சித்தபோது அது தோல்வியில் முடிந்தது. ஆயினும் 1911-12 காலத்தில் இத்தாலி துருக்கியுடன் போரிட்டுத் திரிப்போலியை அகப்படுத்தியது. ஆபிரிக்கப் பங்கீட்டில் ஸ்பெயின் வடமேற்குக் கரையோரமாக உள்ள றையோத ஒரே பகுதியையும் கினியில் ஒரு சிறு பகுதியையும் மட்டும் பெற்றது. அதே சமயம் போர்த்



படம் 10. ஆபிரிக்காவின் பங்கீடு

துக்கல், அங்கோலாவையும் கிழக்காபிரிக்காவில், மொசாம் பிக்கை யடுத்துள்ள பிரதேசத்தையும் பெற்றது.

இவ்வாறு ஆபிரிக்காவின் சில பகுதிகள் பல நாடுகளிடையிற் பங்கு போடப்பட்ட வேளை வடகீழ் பகுதியிலுள்ள எகிப்தில் பிரித்தானியாவும் பிரான்சும் மட்டும் தலையிட்டன. எகிப்து சில நூற்றாண்டு காலமாகத் துருக்கியரின் ஆட்சியின் கீழ் இருந்துவந்தது அதன் அதிபதியாகிய 'கேடிவ்' இஸ்மாயில் திறமையற்றவனாயிருந்தபடியால் ஆட்சி சீர் குலைந்தது. அதே சமயம் இஸ்மாயில் பெரும் கடனாளியாகவும் இருந்தான். அந்நிலையில் 1869இல் பிரான்சியர் பேடினந்து தலைசெப்ஸ் என்பவரின் மேற்பார்வையில் சுயஸ்கால்வாயை வெட்டினர் அதை யடுத்து அப்பிரதேசம் சர்வதேச முக்கியத்துவம் பெற்றது. சுயஸ்பாதை தூரக்கிழக்கிற்கு கிட்டிய பாதையானமையால் பிரித்தானியர் அதில் அதிக அக்கறை காட்டினர். எனவே சுயஸ் கால்வாயை நிர்வாகித்த கம்பெனியில் பங்குகளை வைத்திருந்த இஸ்மாயில் பணமுடையால் அவதிப்பட்டபோது 1875ல் பிரித்தானியா அவனது பங்குகளைத் தான் விலைக்கு வாங்கிக் கொண்டது. ஆனால் இஸ்மாயில் பங்குப் பணத்தைவிட மேலும் அதிக பணத்தைப் பிரித்தானியரிடமிருந்தும், பிரான்சியரிடமிருந்தும், கடனைப் பெற்றிருந்தபடியால் அந்நாடுகள் தமது நலன்களைப் பேணுதற்காக இரு ஆணையாளர்களை எகிப்துக்கு அனுப்பினதோடு, அதன் உள்நாட்டு விடயங்களிலும் தலையிடத் தொடங்கின. இது இவ்வாறாக 1879இல் துருக்கி இஸ்மாயிலைப் பதவியின்று நீக்கித் 'தியூபிக்' என்னும் அவனது மகனை ஆட்சி பீடத்தில் அமர்த்தியது. அதைத் தொடர்ந்து எகிப்திய அதிகாரிகளுக்கும் பிரான்சியர் பிரித்தானியர் ஆகியோருக்குமிடையில் சச்சரவுகள் அதிகரித்தன. அந்நிலையில் அராபிபாஷா என்பவற் தலைமையில் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டது. அப்போது ஐரோப்பியர் பலர் தமது உயிரையும், உடமைகளையும் இழக்க வேண்டியதாயிற்று. ஆயினும் இறுதியில் பிரித்தானியா தனித்து அராபிபாஷாவுடன் போரிட்டு அவனை வென்று எகிப்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. இதன்பின் சேர் எவலின் பாரிங் என்பவர் எகிப்தின் புதிய அதிபதிக்கு உதவியாக அனுப்பப்பட்டார். அவரது சேவையின் விளைவாக நாடு விரைவாக முன்னேறியது.

எகிப்தின் நிலை இவ்வாறுக. அதன் தென்பகுதியிலுள்ள சூடானிலும் ஓர் எதிர்ப்பு இயக்கம் உருவாகியது. அங்கு 1881இல் மாதி என்னும் இஸ்லாமிய மத வெறியன் ஒருவன் மதக்கிளர்ச்சியைத் தூண்டிவிட்டான் அவனை அடக்குவதற்குச் சென்ற 'கோர்டன்' என்னும் பிரித்தானிய படைத் தலைவர் போரில் இறக்க மாதி தனது ஆட்சியை நிறுவிப் பல அட்டூழியங்களைச் செய்தான். அதைத் தொடர்ந்து பிரித்தானியா 1898இல் கிச்சினர் பிரபுவின் கீழ் ஒரு படையை அனுப்பி அவனைக் கொன்று சூடானின் பாலனத்தைத் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. பின் அங்கு ஆங்கிலேயரும் எகிப்தியரும் கூட்டாட்சியை நிறுவினர்.

இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆபிரிக்கா ஐரோப்பிய நாடுகளுக்கிடையே அமைதியான முறையில் பங்குபோடப்பட்டபோதிலும் திபூனிஸ் விடயமாக இத்தாலிக்கும் பிரான்சுக்குமிடை ஏற்பட்ட பகைமை இத்தாலி முதலாம் உலகப் போருக்கு முன்னர் ஜேர்மனியுடன் இணையவும் பிரான்சை எதிர்க்கவும் காலாகியது என்பது நினைவில் வைக்கத் தக்கது.

கிழக்காசியாவில் ஐரோப்பியரின் ஆதிக்கப் பரவியமை:-

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிழக்காசியாவும், ஐரோப்பிய அரசுகளின் வர்த்தக குடியேற்றப் போட்டிகளுக்குக் களமாகியது தொடக்கத்தில் வாசனைச் சரக்குகளுக்காக மட்டும் கீழைத்தேசம் வந்த ஐரோப்பியர் பின்னர் தேயிலை, சோப்பி கொக்கோ முதலிய பானப் பொருட்களுக்காகவும், றப்பர், வெள்ளீயம், தாவர நெய், முதலிய பல தொழில் மூலப் பொருட்களுக்காவும் கிழக்காசியாவை நாடினர். கிழக்காசிய வர்த்தகத்தில் முதலாவதாக போர்த்துக்கீசரும், அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தர், பிரான்சியர், பிரித்தானியர் ஆகியோரும் ஈடுபட்டனர். அவர்கள் கிழக்கிந்திய தீவுகளான யாவா சுமாத்திரா, செலிபீஸ் நியூகினி முதலியவற்றை உள்ளடக்கிய தீவுத்தொகுதியைத் தமது பாலனத்தின் கீழ் வைத்திருந்தனர்' அவற்றில் நியூகினியின் மேற்குப் பகுதி நீங்கலாக ஏனையவை கூட்டாக இந்தோனேசியா என இப்பொழுது அழைக்கப்படுகின்றன. அவை சுதந்திரமடைந்த வரலாறு பின்னொரு அத்தியாயத்திற் கூறப்படும், இது நிற்க. பிரித்தானியர் கிழக்கு ஆசியாவிற்கு வந்து தொடக்கத்தில் இலங்கையையும் (1796) பின் சிங்கப்பூர், ஹோங்கொங் ஆகியவற்றையும்

தமது ஆணையின் கீழ் வைத்தனர். இவற்றில் சிங்கப்பூர், பிரித்தானியர் மாலாயா நாட்டிலும் அருகிலுள்ள போர்னியோத் தீவிலும் தமது செல்வாக்கைப் பரப்ப உதவியது. இதன் விளைவாகப் பிரித்தானியர் தென் கிழக்காசியாவில்ஒருகேந்திர நிலையத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடிந்தது. பின்னர் மலாய் நாட்டுச் சிற்றரசர்களின் வேண்டுகோளின்படி 1895இல் 'ஐக்கிய மலாய் நாடு' என்னும் ஓர் இணைப்பு அரசு உருவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மலாயாவில் றப்பர்த் தோட்டங்களும், சுரங்கத் தொழிலும் விருத்தி செய்யப்பட்டன, அப்பொழுது அத்தொழில்களில் ஈடுபட மலாயர் முன் நிற்காதபடியால், பெருந்தொகையான சீனரும் இந்தியரும் மலாய் நாட்டிற் குடியேற வாய்ப்பு ஏற்பட்டது. இவ்விதமாக விருத்தியடைந்த மலாயா 1953இல் தான் சுதந்திர நாடாகியது.

19ம் நூற்றாண்டில் பிரான்சியரும் தென் கிழக்காசியப் பிரதேசத்தில் கவனம் செலுத்தி இந்து சீனத் தீபகற்பத்தில் பெரும் பகுதியைத் தமதாக்கிகொண்டனர் அங்கு சீயம் ஒன்று மட்டும் பிறநாட்டாரின் ஆதிக்கத்தின் கீழ் வராமல் தப்பியது இவ்வாறு நிறுவப்பட்ட பிரெஞ்சு இந்தோசீனம் பிற்காலத்தில் வியற்னாம், கம்போடியா, லாவோஸ் எனப் பல அரசுகளாகப் பிரிந்தது. அவற்றில் வியற்னாம், 1954 முதல் வடக்கு வியற்னாம், தெற்கு வியற்னாம் என மேலும் இரு பிரிவுகளாகிவிட்டது, அவ்வாண்டு பிரான்சியர் இந்து சீனக் குடா நாட்டிலிருந்து வெளியேறினர்.

கிழக்காசிய நாடுகளில் சீனம், யப்பான், என்னும் இரு நாடுகளும் தாம் ஐரோப்பிய ஆதிக்கத்துக்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவித்ததோடு அதன் பிடிக்குள் அகப்படாமலும் தப்பித் தமது தனித்துவத்தைப் பேணின. இதனால் அவற்றின் 19ம் நூற்றாண்டு கால வரலாறு தனிச்சிறப்பைப் பெறுகின்றது:

சீனாவும் ஐரோப்பியரும் :— பண்டைக் காலந் தொட்டுச் சீருஞ் சிறப்பும் மலிந்த நாடாகிய சீனா 17ஆம் நூற்றாண்டு வரை தன் பழம் பெருமையைக் கட்டிக் காத்துப் பிறநாட்டினரெவரையும் உட்புக விடாது தனது தனித்துவத்தைப் பேணி வந்தது. ஆனால் 16ம் நூற்றாண்டில் பிரித்தானியர் கான்ரனிலும், போத்துக்சேர், மக்காவோவிலும் காலூன்றிச் சிறு வர்த்தக நிலையங்களை நிறுவுவதில் வெற்றிபெற்றனர் எனினும் சீனர் வெளிநாட்டினரை 'மிலேச்சர்' என வெறுத்தொதுக்கிய

படியால் சீனவுடன் ஒழுங்கான வர்த்தகம் ஏற்பட வாய்ப்பில் லாமற்போயிற்று. இந்நிலையிலும் மனந்தளராத ஆங்கிலேயர் சில சீன அதிகாரிகளின் உதவியுடன் அபின் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். இதை அறிந்த அரசாங்கம் கட்டுப்பாடுகளை இறுக்கியபோது கள்ள அபின் வர்த்தகம் ஆரம்பமாயிற்று.

1839இல் கள்ள வியாபாரத்தில் ஈடுபட்ட சில வர்த்தகர் களின் அபின் பறிமுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரித்தானியர் சீற்ற மிகுதியினால் சீன மீது போர் தொடுத் தனர். 'அபினிப்போர்' எனப்படும் இப்போர் 1839 முதல் 1844 வரை நீடித்தது. அதில் பிரித்தானியர் வெற்றிபெற்ற படியால் சீன ஹொங்கொங் உட்பட ஐந்து துறைகளைப் பிரித்தானியரின் வர்த்தகத்துக்குத் திறந்துவிடச் சம்மதித் தது. இவை உடன்படிக்கைத் துறைகள் எனப்படும்.

இதற்குப் பின்னர் 1856இல் சீனர் பிரித்தானிய கொடியை அவமதித்ததோடு ஒரு பிரான்சிய மதபோதகரைக் கொன்றனர் என்ற காரணங்களினால் பிரித்தானியாவும், பிரான்சும் சீனரு டன் மீண்டும் 1856-60 காலத்தில் போரிட்டு மேலும் சில துறைகளை வெளி நாட்டு வர்த்தகத்துக்குத் திறந்துவிடச் செய்தன. அத்துடன் மதபோதகர்களும் வெளிநாட்டுத் தூது வர்களும் சீனாவில் தங்கியிருக்கவும் உள்நாட்டில் சுற்றுப் பய ணம் மேற்கொள்ளவும் அநுமதிக்கப்பட்டனர். இதன் பின்னர் 'கொரியா' விடயமாக சீன தனது அயல் நாடாகிய ஜப்பா னுடன் ஒரு போரில் ஈடுபட்டது. கொரியா, சீனாவின் ஆளுகை எப்போதும் உட்பட்டிருந்தபோதிலும், ஜப்பானுடன் சீனாவும் செய்து கொண்ட ஒரு ஏற்பாட்டின்படி கொரியா ஒரு சுதந்திர நாடாக மதிக்கப்பட்டது. அந்நிலையில் அங்கு 1894இல் ஒரு குழப்பம் ஏற்பட்டபோது அதை அடக்க உதவுமாறு கொரிய மன்னன் சீனாவை வேண்டியதால் சீன ஒரு படையை அனுப் பியது. அதே சமயம் ஜப்பானும் ஒரு படையை அனுப்ப அவ் விரு நாடுகளுக்குமிடையே கசப்புணர்வு உண்டாகி அது ஒரு போராக மாறியது. 1894-95 காலத்தில் இடம்பெற்ற இப்போரில் எவரும் அதிசயிக்கத்தக்கவிதமாக, ஜப்பான் வெற்றி வாகை சூடியது. இதன் விளைவாக, போர் நட்டஈட்டைத் தவிர லியோதுங் குடாநாடு, போர்மோசா ஆகியவற்றைச் சீன ஜப்பானிடம் கையளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மேலும் கொரியாவின் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட்டதோடு ஜப்பானுக்குச் சில வர்த்தக உரிமைகளும் சீனாவில் வழங்கப் பட்டன. இவ்வாறு ஜப்பானால் சீன தோற்கடிக்கப்பட்டிருந்த

வேளை சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரசியா, பிரித்தானியா ஜேர்மனி ஆகியன முறையே போட் ஆதர் வேய்ஹாய்வே கியான்சோ ஆகிய இடங்களில் கடற்படைத் தளங்களை அமைத்தன. அதேசமயம் பிரான்சியர். அன்னம் தொங்கின் ஆகிய இடங்களில் தமது செல்வாக்கை வளர்க்க முற்பட்டனர். இவ்வாறு சீனா, பிற நாடுகளின் போட்டியில் தனது பிரதேசங்களைப் பறிகொடுத்து விடுமோ என எல்லோரும் அஞ்சிய அவ்வேளை ஐக்கிய அமெரிக்கா தலையிட்டுச் "சீனா சுதந்திரமாக இருக்கவும் அதனுடன் எல்லா நாடுகளும் சுதந்திரமாக வர்த்தகம் செய்யவும் அநுமதிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியது. அதை இங்கிலாந்தும் ஆதரித்தது இக் கொள்கையே 'திறந்த கதவுக் கொள்கை' எனப்படுகிறது இவ்வாறு சீனாவின் தனித்துவம் பேணப்பட்டபோதும் அங்கு அன்னியருக்கு விரோதமான ஒரு இயக்கம் உருவாகியது' அதுவே 'பொக்சர்' இயக்கமாகும். அவ்வியக்கத்தினர் அந்நியருக்கெதிராகக் கலகம் செய்து பல அட்டூழியங்களில் ஈடுபட்டனர். அவர்களின் தாக்குதலினால் பதபிரசாரர்கள் பலரும் 250 ஐரோப்பியரும் கொல்லப்பட்டதோடு உள்நாட்டுக் கிறிஸ்தவர்களும் 30,000 பேர் வரை உயிரிழந்தனர். இறுதியில் அவர்கள் பீக்கிங் நகரை முற்றுகையிட்டபோது 20,000 பேரைக் கொண்ட அந்நிய நாடுகளின் கூட்டுப்படையொன்று பொக்சர்களை அடக்கிவிட்டு நகரத்தைச் சூறையாடியது.

இவ்வாறு கலகம் அடக்கப்பட்ட பின்னரும் 'திறந்த கதவுக்கொள்' கைவிடப்படவில்லை. அதன் மேல் சீனா தனது நீண்ட கால உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து, தன்னை நவீன முறையில் பலப்படுத்தும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டது. அதன் தரைப் படையும். கடற்படையும் பலப்படுத்தப்பட்டன. சீன மாணவர் பலர் ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவுக்கும் சென்று நவீன தொழில் நுட்ப விஞ்ஞானத் துறையிற் பயிற்சி பெற்றனர். பின்னர் 1908 இல் சீனச் சக்கரவர்த்தினி இறந்ததைத் தொடர்ந்து நாடு 'அல்லோல கல்லோலப்பட்டது. அந்நியரில் மஞ்சு ஆட்சிக்கெதிராக நாட்டில் கிளர்ச்சிகளும் குழப்பங்களும் தலைதூக்கின. தென் சீனாவில் ஏற்பட்ட கிளர்ச்சிகளுக்கு சன்யாற் சென் என்பார் தலைமைதாங்கினார். அவர் 'குவோமிந்தாங் என்னும்' கட்சியின் தலைராயிருந்தார். அவர் சீனாவை ஒரு குடியரசாச்சுவதற்கு முனைந்தார். சீனாவில் பிறநாட்டினரின் ஆதிக்கம் வேரோடு அகழப்படவேண்

டும் மக்களின் நலனைப் பேணும் மக்கள் ஆசாங்கம் ஒன்று ஆட்சி பீடத்தில் அமரவேண்டும் எனச் சன்யாற் சென் அவா வுற்றார். எனவே அவரின் சிந்தனைகளினால் தூண்டப்பட் டோரே 1911ல் ஆட்சிக்கெதிராகப் புரட்சிக் கொடியை உயர்த்தினர்' இவ்வாறு தொடங்கிய கிளர்ச்சியின்போது சக்கரவர்த்தி பதவியிலிருந்து விலக்கப்பட்டு நாடு ஒரு குடியர சாகப் பிரகடனம் செய்யப்பட்டது. பின் சன்யாற் சென் முதலாவது சனாதிபதியாகப் பதவியில் அமர்த்தப்பட்டார். ஆயினும் அவர் ஓராண்டு சென்ற பின்னர் யுவான்சிகே என் பவனுக்காகத் தம் பதவியைத் துறந்தார். அவன் நிலை மையைப் பயன்படுத்தித் தன்னையே நாட்டின் சக்கரவர்த்தியாகப் பிரகடனம் செய்தபோது சன்யாற்சென் மிகச் சீற்றம் கொண் டார், அவ்வேளை குவோமிந்தரங் கட்சியினரும் குழப்பங்களை விளைவித்தபோது நாட்டில் மீண்டும் அரசாங்கம் தலைவிரித் தாடிற்று. இது இவ்வாறுக 1914இல் முதலாம் உலகப் போரும் ஆரம்பமாகியபோது நிலைமை மேலும் குழப்பமடைந் தது. இதன்பின் நிகழ்ந்தவற்றை இன்னொரு அத்தியாயத்திற் காண்போம்.

யப்பானும் ஐரோப்பியரும்:- யப்பான் ஒரு 'தீவு நாடு' அது கொக்கைடோ, கொன்சு சிக்கொக்கு, கைசு, என்னும் நான்கு பெரிய தீவுகளையும், பல சிறிய தீவுகளையும் கொண்டது. அதுவும் சீனாவைப்போலப் பண்டைக்காலத்திற் பெருமை பெற்றிருந்தது, அதன் அரசர்கள் 'மிக்காடோ' என அழைக் கப்படுவர். சீனாவைப் போலவே அதுவும் அந்நியரின் ஆட்சிக் குட்படாத பல நூற்றாண்டுகால வரலாற்றையுடையது. அத் தகைய யப்பானில் முதல் முதலாக 16ம் நூற்றாண்டில் ஐரோப்பிய வர்த்தகர்கள் சிலரும், பாதிரிகள் பலரும் அடி யெடுத்து வைத்தனர். 1549இல் பிரான்சிஸ் சேவியர் என் பார் யப்பானில் கத்தோலிக்க மத பிரசாரம் மேற்கொண் டார், அவரைத் தொடர்ந்து புரட்டஸ்தாந்தரும் பிற பிரிவி னரும் அங்கு சென்று பிரசாரம் தொடங்கியபோது குழப்பங் கள் ஏற்பட்டன. அதே சமயம் மானிய பிரபுக்களின் குழப் பங்களும் சமயப் பிரசாரக்குழப்பங்களுடன் பின்னிப் பிணைந்த போது நாட்டில் அமைதி குலைந்தது. அதைக்கண்ட யப்பானிய அரசு அன்னியரை யும், கிறிஸ்தவரையும் நாட்டுக்கு அனுப்பி விடுவதே எனத் தம் விதியும் அஞ்சி 1638இல் யப்பானின் கதவுகளை வெளியாருக்குப் பூட்டிவிட்டது. ஆயினும் நாகசாகியில் மட் டும் ஒல்லாந்த வியாபாரிகள் சிலர் தங்கியிருக்க அனுமதிக்கப் பட்டனர்.

அந்நிலையில் 1853இல் கொம்மடோர் பெரி என்னும் ஓர் அமெரிக்க கடற்படை வீரன் டோக்கியோக் குடாவில் போர்க் கப்பல்களுடன் இறங்கி 'சோகுன்' என அழைக்கப்படும் யப்பானிய பிரதம மந்திரியைச் சந்தித்துத் தனது படைப் பலத்தால் அவன் மனதில் பீதியுண்டுபண்ணிப் பிறநாட்டினர் யப்பானுடன் வர்த்தகம் செய்யும் உரிமைகளைப் பெற்றான். அதைத் தொடர்ந்து வெளிநாட்டுக் கப்பல்கள் யப்பானிய துறைகளுக்குச் செல்லத் தொடங்க அதன் வெளிநாட்டு வர்த்தகமும் வளர்ந்தது.

இது இவ்வாறாக, 'தைமியோ' எனப்படும் யப்பானிய பிரபுக்கள் அந்நியரின் பிடியிலிருந்து யப்பான் தன்னை விடுவிப் பதாயின் அது அவர்களிடமிருந்து பல புதிய விடயங்களைக் கற்றுத் தன்னைப் புனரமைத்துப் பலப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை உணரத் தொடங்கினர். எனவே அப் பிர புக்கள் ஒன்று கூடி 1868இல் பிரதம மந்திரியாகிய சோகுனைப் பதவியிலிருந்து விலக்கி விட்டு அவனது அதிகாரத்தை மன்ன னுக்கு வழங்கினர். அவ்வாண்டே மிற்சுகிற்ரோ என்ற பெயரைக் கொண்ட மிக்காடோவும் மன்னனுகினன் மிற்சுகிற்ரோவின் ஆட்சியில், யப்பானில் மகத்தான பல மாற்றங்கள் மேற்கொள் ளப்பட்டன. மானிய முறை ஒழிக்கப்பட்டது. ஜேர்மனிய பிரான்சிய சட்டங்களைத் தழுவி ஒரு புதிய நீதிக் கோவை உருவாக்கப்பட்டது. ஐரோப்பிய மொழிகளைக் கற்பதிலும் விஞ்ஞானக் கல்வியை விருத்தி செய்வதிலும் அதிக ஆர்வம் காட்டப்பட்டது. பல்லாயிரக் கணக்கானோர் வெளிநாடுகளுக் குச் சென்று கல்வி கற்கத் தொடங்கினர். அவர்கள் தாம் கற்ற புதிய விடயங்களைத் தமது நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவந்தனர். மேலும் பாராளுமன்ற முறையான ஆட்சி 1889இல் புகுத்தப்பட்டது. பல தொழில்கள் விருத்தி செய் யப்பட்டன. போக்குவரத்துப் பாதைகள் புதிய முறையில் அமைக்கப்பட்டன. படைகள் சீர்திருத்தப்பட்டு அவற்றின் பலம் அதிகரிக்கப்பட்டது. இவ்வாறு மேற்கு நாட்டுப் பாணி யில் தன்னைப் புனரமைத்த யப்பான் 1910 அளவில் புதிய பலமும், புத்துணர்ச்சியும், தேசிய விழிப்பும் பெற்று ஐரோப் பிய வல்லரசுகளுக்கு ஒப்பான ஒரு நாடாகத் தன்னை ஆக்கிக் கொண்டது.

இது இவ்வாறாக, 1894இல் கொரியாவில் ஒரு சூழ்ப்பம் உண்டாகிய போது யப்பானும்; சீனமும் அதில் தலையிட்டன.

அதன் விளைவாகச் சீனாவுடனும் யப்பான் போரிட்டது. அப் போரில் யப்பான் தனது புதிய பலத்தைப் பரீட்சித்துப் பார்க்க முடிந்தது. அதில் அது பிரமிக்கத்தக்க வெற்றி பெற்றது. அப்போர் மேற்கத்திய முறைகளைப் பின்பற்றிய யப்பானின் பலத்தையும், அவற்றை வெறுத்தொதுக்கிய சீனத்தின் பல வீனத்தையும் பறைசாற்றியது. அத்துடன் யப்பானின் புதிய பேரரசுவாதத்துக்கும் அது பெரும்துணை செய்தது. அதன்பின் யப்பான், சீனா, கொரியா, மஞ்சூரியா முதலிய நாடுகளில் தனது செல்வாக்கை வளர்ப்பதில் கவனம் செலுத்தியது இதன் விளைவாக 1904இல் யப்பான் பேரரசு வேட்கையுள்ள பிறி தொரு நாடான ரசியாவுடனும் பெரும் போரிட வேண்டிய நிலையேற்பட்டது. அதுவே—இரசியா யப்பானிய போராகும்.

இரசியா, பால்க்சன் பிரதேசத்தில் தனது செல்வாக்கை வளர்க்க முயன்று (1854இல்) கிறைமியப் போரில் ஈடுபட்டுத் தோல்வியடைந்தது. அதன் பின் அது கிழக்காசியாவில் தனது கவனத்தைச் செலுத்தியது. 1848இல் அது ஆமூர் மாகா ணத்தை அகப்படுத்தியது. 1898இல் சீனா வசமிருந்து போட் ஆதரைப் பெற்றது. பின் 1900த்தில் சீனாவில் 'பொக்சர்' கலவரங்கள் ஏற்பட்டபோது இரசியப் படைகள் மஞ்சூரியாவை யும் அகப்படுத்தியிருந்தன. அந்நிலையில் மஞ்சூரியாவிலிருந்து படைகளை அகற்றுமாறு 1904இல் யப்பான் விடுத்த ஒரு கோரிக்கைக்கு இரசியா மறுத்தபோது இரு நாடுகளுக்கு மிடையே போர் உண்டாயிற்று. இப்போரில் இரசியாவே வெற்றி பெறும் எனப் பலரும் எதிர்பார்த்த போதிலும் இறுதியில் யப்பானே வெற்றிவாகை சூடி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது. போரின் முடிவில் செய்து கொள்ளப்பட்ட 'போட்ஸ் மவுத்' உடன்படிக்கையின்படி போட் ஆதர் துறையும், சாகலின் தீவின் தென்பாகமும் இரசியாவிடமிருந்து யப்பானின் கைக்கு மாறின. அத்துடன் கொரியாவில் யப்பானின் செல்வாக்கை யும் இரசியா ஏற்றுக்கொண்டது.

இவ்வாறு ஒரு ஐரோப்பிய வல்லரசை வெற்றிகொண்ட முதலாவது ஆசிய அரசு என்ற பெருமையுடன் யப்பான் தனது எதிர்காலத் திட்டங்களை வகுக்கத் தொடங்கியது. அது மேற் கத்திய நாடுகளைப் பின்பற்றிக் குடியேற்றங்கள் தாபிப்பதை யும், பிறநாடுகளில் தனது செல்வாக்கை வளர்ப்பதையும் தனது கொள்கைகளாகக்கொண்டது. இவை பிற்காலத்தில் பல பூசல்களுக்கும், போர்களுக்கும் காலாயின. அவ்விபரங்களைப் பின்னர் படிப்போம்.

வினாக்கள்

1. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை பிரித்தானியப் பேரரசின் வளர்ச்சியை விபரி.
2. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆபிரிக்கா எவ்வாறு பங்கிடப்பட்டது? அதற்கு உதவிய காரணங்கள் யாவை?
3. யப்பானிலும், சீனாவிலும், ஐரோப்பியரின் செல்வாக்கு வளர்ந்த வரலாற்றை விபரி.
4. தென்னாபிரிக்காவில் போயர்களுக்கும் பிரித்தானியர்களுக்கு மிடை ஏற்பட்ட பிணக்குகள் யாவை? அவை எவ்வாறு தீர்த்துவைக்கப்பட்டன?
5. வரலாற்றுக் குறிப்பெழுதுக;- (1) டோர்ஹாம் (2) போயர் போர். (3) அபினிப்போர். (4) சன்யாற்சென். (5) இரசிய யப்பானியப் போர் (1904)

அத்தியாயம் 22

கீழ்த்திசைப் பிரச்சினை

தென் கீழ் ஐரோப்பாவில், விரிந்து பரந்த ஒரு பேரரசை யுடையதாயிருந்த துருக்கியின் பலம் படிப்படியாகக் குறைந்து அதன் பேரரசு குலைந்ததும் அதனால் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட பிரச்சினைகளுமே 'கீழ்த்திசைப் பிரச்சினை' எனப்படு கின்றன. இப்பிரச்சினை 15ம் நூற்றாண்டில் ஆரம்பித்த போதும் 19ம் நூற்றாண்டில்தான் அதிக முக்கியத்துவமடைந் தது. இப்பிரச்சினையின் பிரதான அமிசங்கள் மூன்று அவை (1) துருக்கியின் பேரரசு படிப்படியாகச் சீர்குலைந்தமை (1) துருக் கியின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பால்க்கன் மக்களிடை தேசிய உணர்ச்சியும் அரசியல் விழிப்பும் ஏற்பட்டமை (3) வல்லரசுகளின் அரசியல் பொருளாதார நலன்கள் ஒன் றுக்கொன்று முரண்பட்டிருந்தமை என்பனவாகும்.

துருக்கியின் பேரரசு 15ம் நூற்றாண்டிறுதியில் அராபியா மொசப்பொற்றேமியா' ஆபிரிக்காவின் வடகரையோரம் என் பவற்றுடன் பால்க்கன் பிரதேசத்தையும் உள்ளடக்கியிருந்தது இவ்வளவு பரந்த ஒரு பேரரசை அது நன்கு கட்டியாளவில்லை. இனத்தால், மதத்தால் வேறுபட்ட பல மக்கள் அதன் ஆட் சிக்குட்பட்டிருந்தனர். துருக்கியரின் ஆட்சி ஊழல் மலிந்த தாகவும் அக்கிரமம் மிகுந்ததாகவும் காணப்பட்டது அது தனது வாட் பலத்தினூற்றூன் தனது ஆட்சிலைய நிலைநாட்ட முடிந்ததேயன்றி நீதியான வழிகளினூலன்று மேலும், விஞ் ஞான விருத்தி, நிர்வாகச் சீர்திருத்தம், பொருளாதார விருத்தி முதலியவற்றில் அது ஐரோப்பிய நாடுகளுக்கு வெகு தூரம் பின் நின்றது. இவ்வாறு பிற்போக்காக விளங்கிய துருக்கி பெரும்பான்மையாக இஸ்லாமியரைக் கொண்ட ஒரு பேரரசாக விளங்கியது. இதனால் அதன் ஆட்சிக்குக் கீழிருந்த இனத்தாலும், மதத்தாலும் வேறுபட்ட பால்க்கன் மக்கள் அதன் ஆதிக்கத்தை உதறிவிட்டுத் தமக்கெனத் தனியான நாடுகளைத் தாபிப்பது தவிர்க்க முடியாததாயிற்று அன்றியும் பால்க்கன் பிரதேசத்திலிருந்த சிலாவிய மக்களுடன் இனத் தால் தொடர்புள்ளவரான இரசியர் அப்பிரதேசத்தில் தமது செல்வாக்கை வளர்க்க முற்பட்ட நாள் முதல் துருக்கி 'பால்க்கன்' பிரதேசத்தில் கொண்டிருந்தபிடி தளர்வதாயிற்று மேலும் துருக்கிய மன்னர்களின் ஆட்சி பலமற்றதாயிருந்தும்

அதன் அழிவுக்கு அடிகோலியது. துருக்கிப் பேரரசின் அழிவு 1699ல் தொடங்கியது அவ்வாண்டில் அது ஹங்கேரியை ஆஸ்திரியாவுக்குப் பறிகொடுத்தது. அதற்குப் பின் 18ம் நூற்றாண்டின் இறுதியில் கிறைமியன் குடாநாடு உட்பட கருங்கடலின் வடகரையோரமாக உள்ள பிரதேசத்தை இரசியா சில போர்களின் பின் தனதாக்கிக்கொண்டது இதைத் தொடர்ந்து கருங்கடலுக்குத் திறவுகோலாயிருந்த கொன்ஸ்தாந்திநோப்பிளையும் கைப்பற்றி மத்திய தரைக்கடலுக்கு ஒரு பாதையைத் திறப்பதைத் தனது திட்டமாகக் கொண்டு இரசியா துருக்கியின் பிரச்சினைகளில் தலையிட்டு வந்தது[i]

இவ்வாறு 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கீழ்த்திசைப் பிரச்சினை மீண்டும் முன்னணிக்கு வந்தது. அவ்வேளை இரசியா துருக்கியின் பலவீனத்தைப் பயன்படுத்தித் தனது ஆதிக்கத்தைக் கருங்கடலின் தென்பகுதியிலும் பரப்பிவிடுமோ என அஞ்சக்கூடிய ஒரு நிலை காணப்பட்டபோது பிற ஐரோப்பிய அரசுகளும் கீழ்த்திசைப் பிரச்சினையில் சுவனத்தைத் திருப்பின. குறிப்பாக இரசியா, கருங்கடற் பகுதியைக் கைப்பற்றி மத்தியதரைக் கடலுள் நுழையுமாயின் அது தனது இந்தியப் பேரரசுக்கு ஆபத்தாக முடியலாமெனப் பிரித்தானியா அஞ்சியது. இக்காரணத்தினால் பிரித்தானியா துருக்கிக்கு ஆதரவளித்து அதன் மூலம் இரசியாவின் படர்ச்சிக்கு அணைபோடத் துணிந்தது, மேலும் இரசியா கருங்கடற் பகுதியைக் கைப்பற்றினால் தான் மத்தியதரைக் கடற்பகுதிக்குச் செல்லும் வழி தடைப்பட்டு விடும் என ஆஸ்திரியாவும் அஞ்சியது, அன்றியும் ஆஸ்திரியாவின் ஆட்சியின் கீழிருந்த சிலாவிய மக்கள் இனத்தால் தம்முடன் ஒன்றுகவுள்ள இரசியாவின் தூண்டுதலினால் கிளர்ச்சி செய்து விடுவாரோ எனவும் ஆஸ்திரியா கவலைப்பட்டது இக்காரணங்களினால் அதுவும் கீழ்த்திசைப் பிரச்சினையிற் கரிசனைக்காட்டிற்று. இவ்வாறு துருக்கியின் பேரரசு விடயங்களில் ஐரோப்பிய நாடுகள் கரிசனை கொண்டிருக்கும்போது 1804இல் சேபியாவில் ஒரு தேசியக் கிளர்ச்சி ஏற்பட்டுப் போராக மாறி 1818 வரை நீடித்தது. போரின் முடிவில் சேபியர் தம்மை ஆள்வதற்குத் தம் இனத்தவருள் ஒருவனைத் தலைவனாகப் பெற்றனர்.

கிரேக்கரின் கிளர்ச்சி (1821-28) சேபியருக்குப் பின்னர் 1821 இல் கிரேக்கர்கள் துருக்கியின் ஆட்சிக்கு எதிராகக் கிளம்பினர். அவர்கள் தமது வரலாற்றுக்காலப் பெருமையை எண்ணி

இறும்பூதெய்தியவராய் துருக்கியின் ஆட்சியை அகற்றி விட்டுத் தமக்கென ஒரு அரசைத் தாபிக்க விரும்பிப் பல இரகசிய இயக்கங்களை நிறுவிக் கிளர்ச்சி செய்தனர் இது பின் பெரிய போராக உருவெடுத்து 6 ஆண்டுகள் வரை நீடித்தது. ஆயினும் 1827இல் துருக்கி எகிப்திய பாஷாவின் உதவியுடன் கிரேக்கரை அடக்கியபோது பிரித்தானியா உட்படப் பல ஐரோப்பிய நாடுகள் கிரேக்கரின் விடுதலைப்போருக்கு ஆதரவளிக்க விரும்பின. அவ்வேளையிற்றான் பிரசித்தி பெற்ற ஆங்கிலக் கவிஞரான பைறனும், கிரேக்கர்களின் விடுதலைப் போரில் ஈடுபட்டுத் தனது உயிரை அர்ப்பணித்தான் இவ்வாறு கிரேக்கர்களின் மேல் பிற நாட்டினரின் அநுதாபம் அதிகரித்திருந்த வேளை இரசியாவும் பிரித்தானியாவும். பிரான்சும் கூட்டாகச் சேர்ந்து கிரேக்கருக்குச் சுதந்திரம் வழங்குமாறு சுல்தானுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தபோது, அதற்கு அவன் செவிசாய்க்காததினால் அம்மூன்று நாடுகளினதும் கடற்படை துருக்கியின் கடற்படையை நவாரினோ என்னுமிடத்தில் அழித்துவிட்டன. ஆனால் 1828இல் இங்கிலாந்தின் புதிய வெளிநாட்டுச் செயலாளராகிய வெலிங்டன் துருக்கியை சிதைக்க விரும்பாமையால் இங்கிலாந்து போரிலிருந்து விலக இரசியா மட்டும் தனித்துப் போரிட்டு 1829இல் கிரீசுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்தது 1839ல் செய்யப்பட்ட உடன்படிக்கையின் மூலம் இரசியா துருக்கியிடமிருந்து சில வர்த்தக சலுகைகளையும் பெற்றது அத்துடன மொல்டேவியா, வாலாச்சியா. என்ற வேறு இரு மாகாணங்களும் சுதந்திரம் பெற்றன. இவ்வாறு கிரேக்கர்களின் சுதந்திரப் போரின் விளைவாக, இரசியாவின் செல்வாக்கு துருக்கியில் மேலும் ஒருபடி அதிகரித்தது எனலாம்.

இது இப்படியிருக்க, துருக்கிச் சுல்தானின் ஆணைக்குட்பட்ட எகிப்தின் பாஷாவான முசமது அலி, துருக்கியின் பலவீனத்தைப் பயன்படுத்தி அதன் ஆட்சியின் கீழிருந்த சிரியாவைத் தான் செய்த சேவைக்குக் கைமாறுசக் கொடுக்கும்படி கேட்டபோது சுல்தான் மறுத்ததன் விளைவாக எகிப்திய பாஷா சிரியா மீது படையெடுத்து அதைக் கைப்பற்றி அதற்கூடாகச் சின்னாசியா வரை சென்றபோது துருக்கி இரசியாவின் உதவியைக்கோர அது படையை அனுப்பியது அந்நிலையில் பிரித்தானியாவும் பிரான்சும் தலையிட்டுச்சிரியாவை எகிப்திய பாஷாவுக்குக் கொடுப்பதற்குச் சுல்தானை இணங்கச் செய்தன. இதன் பின் 1839இல் புதிய சுல்தான் சிரியாவை மீட்க முயன்று எகிப்திய பாஷாவுடன் போரிட்டபோது மீண்டும்

பஷாவினால் தோற்கடிக்கப்பட்டான். அந்நிலையில் பிரித்தானிய பிரதமரான பாமஸ்ரன் துருக்கிக்கு ஆதரவளிக்கத் துணிந்தார். உடன் இரசியா, ஆஸ்திரியா ஆகியவற்றுடன் ஒரு இணக்கம் ஏற்படுத்தப்பட்டது. பின் பிரான்சின் ஆட்சேபனையையும் புறக்கணித்து விட்டு அம் மூவல்லரசுகளின் படை பஷாவின் படையைச் சிரியாவிலிருந்து விரட்டி விட்டு சிரியாவைத் துருக்கிக்கு மீட்டுக் கொடுத்தன. இதன் பின்மேற் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி டாடனல் நீரிணைப் பகுதி எல்லா நாடுகளினதும் போர்க் கப்பல்களுக்கும் மூடப் பட்டது. இது பாமஸ்ரனின் சூழியலுக்கு ஒரு வெற்றியாகவும் இரசியாவின் செல்வாக்குக்குப் பலத்த அடியாகவும் இருந்தது.

இது இவ்வாறாக துருக்கி தன் பலத்தை இழந்து தனது பேரரசையும் இழக்கக்கூடிய நிலையிலிருப்பதை உணர்ந்த இரசிய மன்னன் துருக்கியை ஐரோப்பாவின் நோயாளி என வர்ணித்து அந்நோயாளி இறக்குமுன் அவனது உடைமைகளைப் பற்றிய ஒழுங்குகள் செய்வதன் அவசியத்தை வற்புறுத்தி அவற்றைத் தானும் இங்கிலாந்தும் பங்கிடுவதற்கான ஒரு திட்டத்தை இங்கிலாந்துக்குத் தெரிவித்தபோது அது அதனை நிராகரித்தது இச் செயல் சார் மன்னனுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியது. இவ்வாறு இங்கிலாந்துக்கும், இரசியாவுக்கு மிடையில் மனமுறிவு ஏற்பட்டிருந்த வேளை அவ்விரு நாடுகளையும் ஒரு போரில் ஈடுபடச் செய்வதற்குச் சந்தர்ப்பம் சதி செய்தது அதுவே கிறைமியன் போராகும்.

கிறைமியன் போர்(1854-56) இப்போர் மூன்று காரணிகளிலிருந்து முளைந்தது அவை (1) அண்மைக்கிழக்கில் இரசியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே நிலவிய பகைமை (2) பிரான்சிய மன்னனுகிய மூன்றும் நெப்போலியனின் ஆதிக்க ஆசை (3) துருக்கியில் தனது கட்டுப்பாட்டைத் தாபிக்க வேண்டுமென இரசிய மன்னன் கொண்ட உறுதி என்பவவாகும். இப்போரின் உடன் காரணம் பலஸ்தீனிலும், ஜெருசலேமிலும் வாழ்ந்த கிறிஸ்தவர்களின் பாதுகாப்புக்கு உரிமைக்காக இரசியாவும் பிரான்சும் பிணங்கிக்கொண்டதாகும். நீண்டகாலமாக முன் குறிப்பிட்டுள்ள இடங்களிலுள்ள பரிசுத்த தேவாலயங்களைப் பிரான்சே பாதுகாத்து வந்தது ஆயின் சில காலமாக இரசிய மதபீடத்தைச் சேர்ந்ததவர்களே தேவாலய பரிபாலன வேலையைச் செய்து வந்தனர். அந்நிலை

யில் பிரான்ஸ் தனது பழைய உரிமையை வழங்குமாறு 1853 இல் கோரியபோது துருக்கிய சுல்தான் அதற்கு உடன்பட்டான். ஆனால் அச்செயல் இரசியாவுக்கு பிடிக்கவில்லை. உடன் அது துருக்கியிலுள்ள கிறிஸ்தவர்களைப் பாதுகாக்கும் உரிமை தனக்கும் கொடுக்கப்பட வேண்டுமெனவும் பரிசுத்த தேவாலயங்கள் கிரேக்க மத பீடத்துக்குக் கையளிக்கப்பட வேண்டுமெனவும் 1853 மார்ச்சில் இரு கோரிக்கைகளை விடுத்த தோடு அவ்வாண்டு யூன் மாதத்தில் தனது படைகளை மொல்டோவியா, வாலாச்சியா மாகாணங்களுக்குள்ளும் நுழையச் செய்தான். அந்நிலையில் சுல்தான் இரசிய மன்னனது இரண்டாவது கோரிக்கைக்கு இசைய மறுத்தபோது போர் தவிர்க்கமுடியாததாயிற்று எனவே 1853 ஒக்ரோபரில் சுல்தான் இரசியா மீது போர் தொடுத்தான். உடன் பிரித்தானியாவும் பிரான்சும் அவனது உதவிக்கு வந்தன. அவை 1854 மார்ச்சில் இரசியா மீது போர் தொடுத்தன. இவ்வாறு 1854 இல் ஆரம்பித்த போர் இரண்டு ஆண்டுகள் நீடித்தது. இதில் சார்டினியாவும் நேச நாடுகளுக்கு உதவி செய்து அவற்றின் நன்றியைப் பெற்றதும் போர் முடிவில் கவூர் இத்தாலியின் பிரச்சினையில் பிரான்சினதும், பிரித்தானியாவினதும் கவனத்தைத் திருப்பினதும் முன்னர் குறிப்பிட்டன. இப்போரில் ஆஸ்திரியாவும். இரசியாவுக்கெதிராக ஈடுபட்டு மோல்டேவியா, வாலாச்சியா மகாணங்களைக் கைப்பற்றியது. பின் சார் நிக்கோலஸ் 1855ல் இறக்க. அவனது வாரிசான அலெக்சாண்டர் II சமாதானத்தை நாடினான். எனவே 1856ம் ஆண்டுப் பாரிஸ் உடன்படிக்கையின்படி 'ஒற்றோமன் பேரரசின், தனித்துவத்தைப் பேணுவதென வல்லரசுகள் உறுதி செய்து கொண்டன. அதே சமயம் மொல்டேவியா, வாலாச்சியா சேபியா ஆகியவை துருக்கியின் பாதுகாப்பின் கீழ் சுய ஆட்சியைப் பெற்றன. மேலும் டான்யூப் ஒரு சர்வதேச நதியாக ஒப்புக்கொள்ளப்பட்டுக் கருங்கடலில் இரசியா போர்க் கப்பல்களை அநுமதிக்கக் கூடாதென்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு கிறைமியன் போர் இரசியாவின் செல்வாக்குக்கு அடி போட்டதனால் அது சிறிது காலம் கீழ்த்திசைப் பிரச்சினையிற் கவனம் செலுத்தவில்லை.

ஆயின் 1870-80 காலத்தில் மீண்டும் கீழ்த்திசைப் பிரச்சினை தலையெடுத்தது. பாரிஸ் உடன்படிக்கையை முற்றுக முழுமனதாக, சார் மன்னன் கடைப்பிடிக்காததும் ஒற்றோமன் அரசின் ஆட்சியில் அநீதியும், அக்கிரமமும் தலைவிரித்தாடியதும் அதற்குக் காரணங்களாம் அந்நிலையில் 1875இல் பொஸ்

னியா ஹேர்சகோவினு என்னும் மாகாணங்களில் வாழ்ந்த சிலாவிய மக்கள் ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்தனர். 1876ல் கிளர்ச்சி பல்கேரியாவுக்குப் பரவியபோது துருக்கி மிகக் கொடூரமான முறையில் மக்களைப் பழிவாங்கியது. 12,090 பல்கேரிய கிறிஸ்தவர்கள்வரை மடிந்தனர். இதன் பின் சேபியா மொன்றிநீகிரோ ஆகியனவும் துருக்கி மீது போர் தொடுத்தன ஆயினும் அவை எளிதில் தோற்கடிக்கப் பட்டன. அந்நிலையில் சிலாவிய மக்களின் சார்பில் 1877ல் இரசியாவும் துருக்கிக்கு எதிராகப் போரில் குதித்தது இப் போரில் இரசியா வெற்றிபெற்றதனால் அது தான் விரும்பிய படி பால்க்கன் பிரதேசப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தது ஆனால் அத்தீர்ப்பை ஏனைய வல்லரசுகள் ஏற்றுக்கொள்ள வில்லை எனவே அவை அவை இரசியாவைப் பயமுறுத்தியபோது அது பேளினில் ஒரு சர்வதேச மாநாட்டைக்கூட்டிப் பால்க்கன் பிரச்சினையை தீர்க்க ஆலோசனை கூறியது. இதன்படி 1878ல் பேளின் மாநாடு கூடிற்று. அதற்கு பிஸ்மார்க் தலைமைவகித்து 'நேர்மையான தரகராகத்' தகராறுகளைத் தீர்க்க முயன்றார். இம் 'மாநாட்டு உடன்படிக்கையின்படி பல்கேரியா சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ரூமேனியா, சேபியா ஆகிய வற்றின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டது. பிரித்தானியா சைப்பிறஸ் தீவைப் பெற்றது. அதேசமயம் இரசியா பெஸ் ஸரேபியாவையும்' ஆஸ்திரியா பொஸ்னியா ஹேர்சகோவினு என்னும் மாகாணங்களின் ஆதிபத்திய உரிமையையும் பெற்றது. அத்துடன் தனது ஆதிக்கத்திற்குட்பட்ட பால்க்கன் பிரதேசத் தில் பல சீர்திருத்தங்களை மேற்கொள்வதாகச் சுல்தான் அப் துல் ஹமீத் ஒப்புக்கொண்டான்

இவ்வாறு பேளின் உடன்படிக்கையினால் மேற்கொள்ளப் பட்ட முடிவுகள் பால்க்கன் பிரச்சினைக்கு நிலையான பரிகார மாக அமையவில்லை. அறு பல புதிய பிரச்சினைகளை உருவாக் கியது புதிய நாடுகளின் எல்லைகள் சரியாக வகுக்கப்படாதது ஒரு பிரச்சினை, மேலும் பொஸ்னியா ஹேர்சகோவினு மாகா ணங்கள் ஆஸ்திரியாவிடம்' விடப்பட்டது ஆஸ்திரியாவுக்கும் சேபியாவுக்குமிடை பகைமையை ஏற்படுத்தி முதலாவது உலகப் போருக்கு வழிவகுத்தது. அதேசமயம் பல்கேரியா, கிரீஸ் இரசியா ஆகியனவும் அவ்வுடன்படிக்கையினால் நட்டம் அடைந்தன.

1878ம் ஆண்டு பேளின் உடன்படிக்கையின் பின்னர் 1885 இல் துருக்கிய சுல்தான் தனது ஆளுகைக்குட்பட்டதான

கிழக்கு ருமேனியாவில் ஒரு பிரச்சினையைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அங்கு மக்கள் சுல்தானுக்கு எதிராகப் புரட்சி செய்த பல்கேரிய மன்னனுள அலெக்சாந்தரைத் தமது அரசனாக இருக்குமாறு அழைத்தனர். அந்நிலையில் அவன் முதலில் தயங்கியபோதும் இறுதியில் பல்கேரியா ருமேனியா என்னும் இரண்டும் இணைந்த ஐக்கிய பல்கேரியாவின் அரசனாகச் சம்மதித்தான் அப்பொழுது துருக்கியும் அவனை அங்கீகரிக்க வேண்டியதாயிற்று. 1885க்குப் பிற்பட்ட காலத்தில் மத்தியஅரசுகளான ஆஸ்திரியா, ஜேர்மனி ஆகியவற்றின் செல்வாக்கு பால்க்கன் பிரதேசத்தில் படிப்படியாக அதிகரித்து வந்தது. குறிப்பாக ஜேர்மனியின் மன்னனாகிய வில்லியம் இரண்டாவது கொன்ஸ்தந்திநோப்பிளுக்குச் சென்று சுல்தானுடன் நட்புறவை வளர்க்கப் பெரு முயற்சி எடுத்தான். இதன் விளைவாக பேளினிலிருந்து பக்தாத்வரை புகையிரதப் பாதை ஒன்றை அமைப்பதற்கும் சுல்தானின் சலுகையைப் பெற்றான். அப்பாதை அமைப்பு வேலை 1904இல் ஆரம்பிக்கப் பட்டது. இதற்கிடையில் 1894–96 காலத்தில் துருக்கி ஆர்மீனியாவிலுள்ள கிறீஸ்தவர்களைப் படுகொலை செய்ததன் மூலம் பால்க்கன் பிரதேசத்தில் அமைதியைக் குழப்பியது. இதன் பின் 1893இல் கிரேக்கர்கள் கிரீட் தீவைக் கைப்பற்றுவதற்காகத் துருக்கியருடன் ஒரு போரைத் தொடங்கிய போதிலும் அம் முயற்சி பலனளிக்கவில்லை. ஆயினும் பால்க்கன் பிரதேசத்தில் நெருக்கடி நீடிக்க அது உதவியது. இத்தகைய நிலைமையில் 1908இல் துருக்கியில் ஒரு புரட்சி ஏற்பட்டபோது அது பால்க்கன் பிரதேசத்தில் புதிய திருப்பம் ஏற்பட உதவியது. துருக்கிச் சுல்தானின் ஆடம்பரமான வாழ்க்கை. படைகளை அவன் நன்கு பேணுமை, செம்மையான ஆட்சியை நிறுவாமை முதலிய காரணங்களினால் துருக்கி மக்களுக்கிடையிலேயே சுல்தானுக்கெதிரான ஒரு எதிர்ப்பு இயக்கம் உருவாகியிருந்தது அந்நிலையில் சலோனிக்காவில், 'ஒற்றுமை முன்னேற்ற குழு' என்னும் பெயரில் ஒரு இயக்கம் என்வர் பே என்பவன் தலைமையில் உருவாகியது. எனவே துருக்கிய இளைஞர்கள் அதன் ஆதரவில் புரட்சி செய்து கொன்ஸ்தந்திநோப்பிளைக் கைப்பற்ற முயற்சித்தனர், உடன் சுல்தான் பீதியுற்று ஒரு புதிய அரசியற்திட்டத்தைப் பிரகடனம் செய்துவிட்டு ஒரு பாராளுமன்றத்தைக் கூட்டினான். ஆயின் அவன் அடுத்த ஆண்டு தானே ஒரு எதிர்ப்புரட்சியை ஏற்படுத்தியபோது அது தோல்வியில் முடிந்தது. இதன் விளைவாக அவன் பதவியிலிருந்து விலக்கப்பட்டவுடன் அவனது சகோதரன் மொகமட் V

என்னும் பெயருடன் பதவியை ஏற்றான். இவன் தனது சோதரனிடத் திறமையாக ஆட்சி புரிந்தான்.

இது இப்படியிருக்க துருக்கியில் புரட்சி ஏற்பட்டபோது பல்கேரியா அரசன் பேடினந்து சுல்தானின் ஆணையை உதறி விட்டுத் தன்னை பல்கேரியாவின் 'ஸார்' எனப் பிரகடனம் செய்து கொண்டான். அதேசமயம் ஆஸ்திரியாவும் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி பொஸ்னியா, ஹேர்சகோவினு என்னும் இரு மாகாணங்களையும் அகப்படுத்தியது. இது ஒரு நெருக்கடி யான நிலைமையை உருவாக்கியது இதற்கு அடுத்தபடியாக இடம் பெற்ற நிகழ்ச்சி ஆபிரிக்காவில் எஞ்சியிருந்த துருக்கியின் பிரதேசமாகிய திரிப்போலியை இத்தாலி அகப்படுத்தியதாலும் இத்தாலி நீண்ட நாட்களாகத் திரிப்போலியை அகப்படுத்தும் ஆவலுடன் அதற்கான வாய்ப்பை எதிர்பார்த்திருந்தது. எனவே இளம் துருக்கியரின் புரட்சியின் போது ஆஸ்திரியா காட்டிய வழியைப் பின்பற்றி இத்தாலி சடுதியாக 1911இல் திரிப்போலியைப் பிடித்துக்கொண்டது இவ்வாறு ஐரோப்பிய நோயாளி யாகிய துருக்கி தனது பேரரசில் ஆபிரிக்காவில் எஞ்சியிருந்த இறுதித் துண்டையும் பறிகொடுத்துப் பரிதவித் திருந்த வேளையில் பால்க்கனிலும் ஒரு பேரிடி காத்திருந்தது அதுவே முதலாம் பால்க்கான் பொராகும். அதைப்பற்றி அடுத்த அத்தியாயத்திற் காண்போம்.

வினாக்கள்

1. 'கீழ்த்திசைப் பிரச்சினை' யில் ஐரோப்பிய அரசுகள் கரிசனை கொள்ள காரணங்கள் யாவை?
2. 1821–1860 காலத்தில் கீழ்த்திசைப் பிரச்சினை எந்நிலையி லிருந்தது?
3. கிறைமியன் போருக்குக் காரணங்கள் யாவை? அதன் விளைவுகள் எவை?
4. வரலாற்றுக் குறிப்பெழுதுக:—
   (1) கிரேக்க விடுதலைப்போர்
   (2) கிறைமியன் போர்.
   (3) இளம் துருக்கரின் புரட்சி

அத்தியாயம் 23

முதலாம் உலகப் போர்

உலக வரலாற்றில் முதலாவது சர்வதேசப் போர் 1914 இல் உண்டாகியது அதை உருவாக்கிய காரணிகள் பத்தொன் பதாம் நூற்றாண்டின் இறுதிக்கால ஐரோப்பிய வரலாற்றில் புதைந்துள்ளன உண்மையில் 1880—1914 கால ஐரோப்பிய வரலாறு ஒரு உலகப் போரையே நாடிச் சென்றது எனின் அது மிகையன்று. அக்காலத்தில் உலக அரங்கில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் போர் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாத ஒன்றாக ஆக்கிவிட்டன எனினும் வரலாற்றுச் சம்பவங்கள் காரண மின்றி ஏற்படுவதில்லையாதலின் தவிர்க்க முடியாது ஏற்பட்ட முதலாம் உலகப் போரைத் தூண்டிய சக்திகள் யாவை என்பதை அறிதல் அவசியமானதும் பயனுள்ளதுமாகும். முதலாம் உலகப் போரைத் தூண்டிய அடிப்படைக் காரணங் களை (1) ஆக்கிரமிக்கும் தேசிய இன எழுச்சி (2) பேரரசு வாதமும் குடியேற்றப் போட்டியும் (3) படைப்போட்டி (4) பகைமையை வளர்த்த உறவுகள், உடன்படிக்கைகள் என நான்காக வகுக்கலாம்.

ஆக்கிரமிக்கும் தேசிய இன எழுச்சி: 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தாலி ஜேர்மனி, ஆகியன ஒன்றுபட்டு ஒரு கொடியின் கீழ் வந்த வரலாற்றை முன்னொரு அத்தியாயத் திற் படித்தோம், இவ்வாறு ஒற்றுமைப் பட்ட நாடுகளில் இனம் மொழி பழக்கங்கள் முதலியவற்றினால் ஒன்றுபட்ட மக்கள் ஒருங்கிணைந்த போது அவர்களிடை உருவாகிய தேசிய உணர்ச்சி நாளடைவில் வரம்பு மீறி வளர்ந்தது. ஜேர்மனி யில் இது தெட்டத் தெளிவா. வெளிப்பட்டது அந்நாடு பிஸ்மார்க்கின் காலத்தில் அபரிமித வளர்ச்சியடைந்தது. நாடு பிடிக்கும் போட்டியில் ஈடுபடாமல் அது அக்காலத்தில் தனது உள்நாட்டு விடயங்களிலேயே கவனம் செலுத்தியது மேலும் பிஸ்மார்க் தன் அயல்நாடுகளான' ஆஸ்திரியா-ஹங்கேரி, இத் தாலி என்பவற்றுடன் நட்புறவைப் பலப்படுத்து முகமாக 'மூவர் நட்பு' ஒப்பந்தமொன்றையும் 1881ல் செய்திருந்தான். அத்துடன் இரசியாவுடனும் அவன் நட்புறவை ஏற்படுத்தி யிருந்தான். ஆனால் 1888இல் பதவிக்கு வந்த வில்லியம் அதிகார வெறியும், பேரரசு வேட்கையும், பேராசையும் மிக்கவன், அவன் பிஸ்மார்க்கைப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு

அவன் அதுவரை கடைப்பிடித்து வந்த கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டான். அதைத் தொடர்ந்து ஜேர்மனியின் வரலாற்றில் புதிய திருப்பம் ஏற்பட்டு அது ஆக்கிரமிப்புப் பாதையில் அடியெடுத்து வைத்தது' வில்லியம் ஜேர்மனியின் கைத்தொழில்களையும் வர்த்தகத்தையும் விருத்தி செய்தான். கடல் தரைப் படைகளைப் புனரமைத்து அவற்றின் பலத்தை அதிகரித்தான்.

இவ்வாறு நாட்டைப் பலப்படுத்திய பின் அவன் நாடு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டான். அவன் சாலத்தில் ஆபிரிக்காவிலும் பசிபிக் பிரதேசத்திலும், சில நாடுகளும், தீவுகளும் ஜேர்மனியின் ஆணைக்குட்பட்டன. ஆனால் அவ்வளவுடன் அவன் நிறுத்தவில்லை, ஜேர்மனியர் உலகை ஆளப் பிறந்தவர்களாதலின் அவர்கள் அகிலமெல்லாவற்றையும் கட்டியாளுவதற்குத் தம்மைத் தயார் செய்து கொள்ளவேண்டும். அதற்காக மக்கள் முழுமனதாகப் பாடுபட வேண்டும் என்னும் தொனியில் அவன் ஜேர்மனியரின் தேசிய இன உணர்ச்சியைத் தட்டியெழுப்பி அவர்களிடையே ஆக்கிரமிப்பு மனப்பான்மையைவரப்பு மீறி வளர்த்திருந்தான். இதனால் அவர்கள் போர் எப்போது வரும். எப்தொழுது தமது திறமை வலிமை ஆகிய வற்றையும் வீரப்பிரதாபங்களையும் காட்டலாம் என எதிர் பார்த்திருந்தனர். மேலும் இக்காலத்தில் ஜேர்மனிய நடுத்தர வகுப்பினரிடையேயும், ஐங்கர் வகுப்பினராயிருந்த பெரும் பான்மையான படை வீரரிடையேயும், ஐரோப்பாவில் ஜேர்மனியே முதன்மை பெறவேண்டும் என்னும் ஒரு ஆசை உண்டாயிருந்தது. இதன் பிரதிபலிப்பாக 1890இல் 'பான்ஜேமன் குழு ஒன்று நிறுவப்பட்டது, படை வகுப்பினர், தொழிலதிபர்கள், வங்கிக்காரர்கள், பேராசிரியர்கள். நிலச் சொந்தக்காரர்கள் ஆகியோரடங்கிய இக்குழு இரசியா, பிரான்ஸ் உட்பட ஐரோப்பாவின் பெரும் பகுதி ஜேர்மனியின் குடைக் கீழ் வர வேண்டுமெனவும், சேபியா நசுக்கப்பட்டு அதற்கூடாகக் கிழக்குப் பிரதேசத்திற்கு ஒரு பாதை அமைக்கப்பட வேண்டுமென வும் விரும்பம் தெரிவித்தனர். இது ஜேர்மனியரிடம் மிகுந்திருந்த தேசிய உணர்ச்சியையும் ஆக்கிரமிப்பு மனப்பான்மையும் படம் பிடித்துக் காட்டுகிறது. அதேசமயம் ஜேர்மனியைப் போலவே பிரான்சிலும் சேபியாவிலும் தேசிய இன உணர்ச்சி கொழுந்துவிட்டெரிந்தது. பிரான்ஸ் 1871 பிறசியப்போரில் தான் இழந்த அல்சேஸ், லொறேன் மாகாணங்களை எப்போது

மீட்கலாம், எப்போது தனது இழுக்கைப் போக்கலாம். எப் போது ஜேர்மனியை பழிவாங்கலாம் எனத் துடியாய் துடித்துக் கொண்டிருந்தது அவ்வேளை பால்க்கன் பிரதேசத்தில் பல முள்ள ஒரு அரசாக உருவாகியிருந்த சேபியா துருக்கியின் பிடியிலிருந்து தனது நாட்டு மக்களை விடுவித்த பின் ஆஸ் திரியா கங்கேரியின் ஆட்சியின் கீழிருந்த ஏனைய சிலாவிய மக்களையும் அதன் பிடியிலிருந்து விடுவித்து எல்லாச் சிலாவி யரையும் ஒரு கொடியின் கீழ் ஒன்று படுத்த வேண்டுமென னும் மனப்பான்மையுடையதாயிருந்தது எனவே ஆஸ்திரியாவிட மிருந்த சிலாவியப் பிரதேசத்தை எப்போது பறித்தெடுக்க லாம் என அது ஆவலோடு எதிர்பார்த்திருந்தது. இவ்வாறு நாடுகளிடை வளர்ந்திருந்த தேசிய இன உணர்ச்சியானது அவை ஏனைய நாடுகளில் நலன்களைத் துச்சமாக மதித்துத் தமது சொந்த நலன்களையே பெரிதெனப் பேணச் செய்தமை யால் சர்வதேச ஆக்கிரமிப்பு மனப்பான்மை உருவாகியது இது போருக்கு அடிகோலியது.

பேரரசு வேட்கையும், குடியேற்றப் போட்டியும்-- பத் தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொழிற் புரட்சியின் தாக்கத்தின் கீழ் ஐரோப்பிய அரசுகள் பல தமது உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தைகள் தேடுவதிலும், மூலப்பொருட்களை உடைய பிரதேசங்களை அகப்படுத்துவதிலும் அங்கு தமது செல் வாக்கையும், வர்த்தகத்தையும் வளர்ப்பதிலும். போட்டி யிட்டுக்கொண்டன. இப்போட்டி 16-ம் நூற்றாண்டின் தொடக் கத்தில் ஆரம்பமாகி 19ம் நூற்றாண்டின் இறுதியில் உச்சத்தை அடைந்தது. அப்போது ஐரோப்பிய நாடுகள் 'நான் முந்தி நீ முந்தி' என விழுந்தடித்துச் சென்று கடல் கடந்த நாடுகளைக் கைப்பற்றுவதில் முனைந்தன. இவ்வாறு 1900 ஆளவில் ஆபிரிக்கா ஐரோப்பிய அரசுகளுக்கிடைபங்கிடப்பட்டு விட்டது. அத்துடன் ஆசியாவிலும், பசிபிக் பிரதேசத்திலும் பல நாடுகள் ஐரோப் பியரின் செல்வாக்கின் கீழ் வந்திருந்தன. இத்தனைய பேரரசு வாதமும் குடியேற்றப் போட்டியும் நாடுகளிடையே பொறுமை ஏமாற்றம், மனக்கசப்பு ஆகியவற்றை வளர்த்தன. உதாரண மாக பிரான்ஸ் துனிசைப் பிடித்தமையால் இத்தாலிக்கு மனத் தாங்கல் ஏற்பட்டது, அதேசமயம் பிரான்சும், பிரித்தானியா வும் பெரிய ஒரு பேரரசைப் பெற்றிருக்க, தானும் அவ்வித மான ஒரு பேரரசை உருவாக்க வாய்ப்பில்லாமல் போய்விட்ட தையும். ஆபிரிக்க குடியேற்றப் போட்டியில் தான் பின்தங்கி விட்டதையும் எண்ணி எண்ணி மனம் புழுங்கிய ஜேர்மனி பிரித்தானியர் மீதும் பிரான்சுமீதும் அழுக்காறுகொண்டிருந்தது

இது இவ்வாறாக, ஆசியாவிலும், ஐரோப்பிய அரசுகள், வர்த்தக குடியேற்ற விடயங்களில் பூசலிட்டுக்கொண்டன. அங்கு இரசியாவின் கிழக்கு நோக்கிய படர்ச்சியை பிரித்தானியாவும், யப்பானும் விரும்பவில்லை. அதேசமயம் சீனாவைப் பங்கிடுவதற்கு ஜேர்மனியரும் பிறநாடுகளும் மேற்கொண்டமுயற்சிகள் யப்பான், இரசியாவை வெற்றிகொண்டு எழுச்சி பெற்றதனால் தடைப்பட்டன. இவ்வாறு உலகெங்கிலும் குடியேற்றப் போட்டியின் விளைவாக நாடுகள் முரண்பட்ட அதேசமயம் பிரித்தானியா வர்த்தக விடயமாக ஜேர்மனிமேல் அழுக்காறு கொண்டிருந்தது. அதற்கு ஜேர்மனியில் செய்யப்பட்ட பொருட்கள் பிரித்தானியரின் உற்பத்திப் பொருட்களைவிட அதிகமாகச் சர்வதேச சந்தையில் விலைப்பட்டதே காரணமாகும், எனவே குடியேற்ற விடயத்தில் ஜேர்மனி பிரித்தானியாவின் மேலும், வர்த்தக விடயத்தில் பிரித்தானியா ஜேர்மனி மேலும் அழுக்காறு கொண்டிருந்தன.

இவ்வாறு 1880-1910 காலத்தில் ஐரோப்பிய நாடுகளிடை ஏற்பட்ட வர்த்தக குடியேற்றப் போட்டியும், பேரரசு வேட்கையும் ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும் அவற்றிடையே பல பிணக்குகள் ஏற்படுத்தியதன் மூலம் பொருமையையும், மனக்கசப்பையும் வளர்த்து விட்டிருந்தன; அந்நிலையில் சுய நலமொன்றையே பெரிதாகக் கருதிய அந்நாடுகள் தமது நலன்களைப் பேணுவதற்காக மற்ற நாடுகளுடன் போரிடவும் தம்மை ஆயத்தம் செய்து கொள்ளத் தொடங்கின.

பகைமையை வளர்த்த உறவுகளும் உடன்படிக்கைகளும்

மேற்குறிப்பிட்டவாறு தமது நாட்டு நலனை மட்டுமே பெரிதெனக் கருதிய பல ஐரோப்பிய அரசுகள் தமக்கிடை மேற்கொண்ட பல உடன்படிக்கைகள் இறுதியில் ஐரோப்பாவில் ஒன்றுக்கொன்றெதிரான இரு அணிகளை உருவாக்கி அவற்றிடை பகைமையை அதிகரித்தன. இவ்வாறு பிறநாடுகளுடன் நட்புறவுகளைப் பலப்படுத்தும் முயற்சியில் பிஸ்மார்க்கே முதல் முதல் ஈடுபட்டான். 1871 பிறசிய போரில் அல்சேஸ் லொறேன் மாகாணங்களைப் - பிறசியாவுக்கு பறிகொடுத்திருந்த பிரான்ஸ் அம்மாகாணங்களைத் திருப்பிப் பெறவும் ஜேர்மனி மீது வஞ்சம் தீர்க்கவும் முயலும் என பிஸ்மார்க் அஞ்சினான். இதனால் தனது அயல் நாடான ஆஸ்திரியா–ஹங்கேரியுடன் ஒரு நட்பு உடன்படிக்கையை ஏற்படுத்தினான். அதேசமயம், இரசியாவின் விரிவினால் அச்சமுற்றிருந்த

ஆஸ்திரியா –ஹங்கேரி ஜேர்மனியுடன் தனது நட்புறவை பலப்படுத்துவதில் ஆர்வம் காட்டியபடியால் இரு நாடுகளும் 1879ல் ஒரு நட்பு உடன்படிக்கை செய்து கொண்டன 'இது இருவர் உடன்படிக்கை' எனப்படும் இதற்குப் பின்னர் ஆபிரிக்க குடியேற்றப் போட்டியில் பிரான்சின் எதிரியாக மாறிய இத்தாலியையும் பிஸ்மார்க் தன் பக்கம் சேர்த்து 1880இல் இருவர் உடன்படிக்கையை 'மூவர்' உடன்படிக்கையாக மாற்றினான்

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட 'மூவர்' உடன்படிக்கை ஒரு புறம் பிரான்சுக்கும், மறுபுறம் இரசியாவுக்கும் பீதியை ஏற்படுத்தியது. ஏனெனில் மூவர் உடன்படிக்கையில் உள்ளடங்கிய விடயங்கள் இறுதிவரை மூடு மந்திரமாகவே இருந்தன. இதனால் பிரான்சும் இரசியாவும் தமக்கிடை நேச உறவுகளை உண்டாக்கி, 1894ல் தமக்கிடை 'இருவர் நட்புறவை' ஏற்படுத்திக் கொண்டன. இது இவ்வாறாக இதுவரை ஐரோப்பிய விடயங்களில் தலையிடாது ஒதுங்கியிருந்த பிரித்தானியா ஐரோப்பாவில் உருவாகிய புதிய நிலைமைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தது. குறிப்பாக, ஜேர்மனியின் நடவடிக்கைகள் அதற்கு அச்சத்தையுண்டாக்கின. ஜேர்மனி தனது கடற்படையின் பலத்தை அதிகரித்தமை பிரித்தானியாவின் கடலாதிக்கத்துக்கு ஒரு சவாலாகியது. அதேசமயம் தென்னாபிரிக்காவில் பிரித்தானியா மேற்கொண்ட போயர் போர்களில் (1888 - 1902) ஜேர்மனி போயர்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்ததோடு மறைமுகமாகப் படையுதவியும் செய்தது. இது பிரித்தானியா ஜேர்மனிமேல் சந்தேகங் கொள்ள இடமளித்தது அதே சமயம் ஜேர்மனியின் மன்னனாகிய வில்லியம் யெருசலேமுக்கு மேற் கொண்ட ஒரு யாத்திரையின்போது 'முஸ்லிம் மக்கள்' ஜேர்மனியைத் தனது நண்பனாக மதிக்கலாம் எனக் கூறியது, பிரித்தானியரின் குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த முஸ்லிம்களைப் பிரித்தானியருக்கெதிராகத் தூண்டுவதைப் போலவும் அவர்களுக்கு ஆதரவளிப்பதுபோலவும் இருந்தது. இதனாலும் பிரித்தானியா ஜேர்மனியை அஞ்சியது. இக்காரணங்களினால் பிரித்தானியா தனது பழைய எதிரியாகிய பிரான்சுடன் நேச உறவுகளைப் பலப்படுத்த முயன்றது இவ்வாறு 1904 அளவில் பிரான்சும், பிரித்தானியாவும் தமது உறவைச் சீராக்கி 'நட்புறவை, ஏற்படுத்திக்கொண்டன. இது ஒரு படை உடன்படிக்கையன்று ஆயினும் இது பழைய மனப்புண்களை ஆற்றி இரு நாடுகளினதும் உறவைப் பலப்படுத்தியது. இது இப்படியிருக்க, ஆசிய அரங்கில்

புதிதாக உருவாகிய ,யப்பான்' 1904இல் இரசியாவைத் தோற்கடித்ததனால் பிரித்தானியா தனது பேரரசின் ஒரு பகை வலுவை இரசியாவின் ஆபத்திலிருந்து தப்பியது. இதன்மேல் பாரசீகம், ஆபுகானிஸ்தான், திபெத் ஆகிய இடங்களில் பிரித்தானியாவுக்கும இரசியாவுக்குமிடையே காணப்பட்ட பிணக்குகள் நீக்கப்பட்ட பின்னர் பிரான்சின் முயற்சியால் இரசியாவும், பிரித்தானியாவும் நட்பு நாடுகளாக்கப் டன. இந்நிலையில் பிரான்ஸ் பிரித்தானியா. இரசியா என்னும் மூன்றும் ,மூவர் நட்புறவு என்ற அமைப்பின் கீழ் அமைந்தன எனலாம். இப்பொழுது ஐரோப்பாவில் ஜேர்மனி ஆஸ்திரியா – ஹங்கேரி இத்தாலி என்பன ஒரு புறமாகவும் பிரான்ஸ் பிரித்தானியா இரசியா மறுபுறமாகவும் இரு 'பகை' அணிகளாகக் காணப்பட்டன இது இரு அணி நாடுகளுக்குமிடை நெருக்கடியையும் பீதியையும் அதிகரித்தது என்பதைக் கூறவேண்டியதில்லை.

படைப்போட்டி:- இவ்வாறு தமது பாதுகாப்புக்காக நட்பு றவுகளையும் உடன்படிக்கைகளையும் ஏற்படுத்திக்கொண்ட இரு அணி நாடுகளிடையேயும் பகைமையும் பீதியும் அதிகரிப்பது இயற்கையாதலின் அவை பயப் பிராந்தியினால், தமது படைகளை விரிவு படுத்தவும் அவற்றின் பலத்தை அதிகரிக்கவும் போட்டா போட்டியாகக் கருமாற்றின. ஜேர்மனியே இதில் முன்னின்றது. அது பல படைச் சட்டங்களை நிறைவேற்றித் தனது படையை விரிவுபடுத்தியதோடு போர்க்கருவி உற்பத்தியை அதிகரித்தது. மேலும் கட்டாய இராணுவ சேவையும் அமுல் நடத்தப்பட்டது. அவற்றின் விளைவாக 1900 இல் ஜேர்மனியிடம் ஐரோப்பாவிலேயே மிகப் பலம் வாய்ந்ததும் பெரியதுமான ஒரு தரைப்படை காணப்பட்டது அவ்வாண்டு ஜேர்மனி நிறைவேற்றிய சடற்படைச் சட்டம் அந்நாடு பலம் மிக்கதும் எந்த நாட்டுப் படைக்கும் பின் நிற்காததுமான கடற்படையை வைத்திருக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியது. இதன் பின் போர்க் கப்பல்களைக் கட்டும் வேலையில் ஜேர்மனி முழு மூச்சுடன் ஈடுபட்டது. இதனால் பிரித்தானியாவும் தனது கடற்படையைப் பலப்படுத்தியது அது டிறெட்நோட் எனப்படும் புதிய ஒரு போர்க் கப்பலைக் கட்டிய போதுஜேர்மனியும் அது போன்ற மூன்று கப்பல்களைக் கட்டியது. இதனால் பிரித்தானியா மேலும் அவ்வகையான ஆறு கப்பல்களைக் கட்டவேண்டியதாயிற்று. இவ்வாறு ஏற்பட்ட படைப்போட்டியில் பிரான்சும் ஏனைய பகை அரசுகளும் ஈடுபட்டன. 1913இல் பிரான்ஸ் கட்டாய இராணுவ

சேவைக் காலத்தை இரண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாக அதிகரித்தது, அதனால் பீதியுற்ற ஜேர்மனி தனது படையை அதிகரித்தபோது இரசியாவும் அவ்வாறே செய்து கட்டாய இராணுவ சேவைக் காலத்தை ஆறு மாதகாலம் நீட்டித்தது. அவ்வாறு ரசியாவும், பிரான்சும், பிரித்தானியாவும் தமது படைகளை அதிகரித்துத் தன்னைச் சுற்றி 'இரும்பு' வலையம் அமைப்பதாகப் பயந்த ஜேர்மனி தனது படைகளை மேலும் அதிகரிக்கவும், ஆயத்த நிலையில் வைக்கவும் முயற்சிகளை மேற் கொண்டது. இவ்வாறு நாடுகளிடை ஏற்பட்ட பலப்போட்டி போரைத் தவிர்க்க முடியாததாக்கி விட்டது. இரும்பு பிடித்தவன் கையும், இரும்பு பிடித்தவன் கையும் சும்மா இராதல்லவா?

போருக்கு அடிகோலிய சர்வதேசங்கள்: மேற் கூறப்பட்ட வாறு இரு அணிகளாகப் பிரிந்திருந்த நாடுகளிடை நெருக்கடியை ஏற்படுத்தி அவற்றைப் போரில் குதிக்கச் செய்தவை 1905-15 காலத்தில் இடம்பெற்ற சில சர்வதேச நெருக்கடிகளாகும். அவை மொரோக்கோவிலும், பால்க்கன் பிரதேசத்திலும் ஏற்பட்டன.

மொரோக்கோ நெருக்கடி: முதன் முதல் 1904-05 காலத்தில் ஏற்பட்டது. மொரோக்கோவில் பிரான்சின் செல்வாக்கு நிலைப்பதை ஜேர்மனி விரும்பவில்லை. எனவே மொரோக்கோவின் சுல்தானுக்கு ஜேர்மனி மறைமுகமாக ஊக்கமளித்து அவனைப் பிரான்சின் திட்டங்களை எதிர்க்குமாறு தூண்டியது. பின் 1905 மார்ச் 31இல் எவரும் எதிர்பார்த்திராத வகையில் ஜேர்மன் மன்னனுடைய விஜயம் மொரோக்கோவின் தலை நகரான ராஞ்சியரில் தோன்றி மொரோக்கோவின் சுதந்திரத்தைத் தான் ஆதரிப்பதாகத் தெரிவித்து விட்டு அந்நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு மாநாட்டைக் கூட்டு மாறும் கோரினான். அதன்படி 1906இல் அல்ஜிசிரஸ் என்னுமிடத்தில் கூட்டப்பட்ட மாநாடு மொரோக்கோ சுல்தானின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தியதாயினும் அங்கு பிரான்சுக்கு விசேட பொறுப்புகள் அளிக்கப்பட்டன. இதன் பின் 1911ல் மொரோக்கோ சுல்தான் வெளிநாட்டினரைப் பாதுகாக்க முடியாத நிலையிலுள்ளான் என்ற சாட்டின் பேரில் பிரான்ஸ் ஒரு படையை பெஸ் நகருக்கு அனுப்பியபோது அச்செயலை ஜேர்மனி பலமாக ஆட்சேபித்ததோடு 'பாந்தர்' என்னும் பெயருடைய ஒரு போர்க்கப்பலை (ஜேர்மன் மக்களைக் காப்பாற்றுவதற்காக) அகதிர் துறைக்கு அனுப்பினான். அதைத்

தொடர்ந்து பிரித்தானியா, பிரான்சுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்தபோது ஜேர்மனி பின்வாங்கியதால் போர் தவிர்க்கப்பட்டது. இவ்வாறு மொரோக்கோ நெருக்கடியில் போர் தவிர்க்கப்பட்டபோதிலும் பால்க்கன் பிரதேசத்தில் ஏற்பட்ட நெருக்கடியில் அது தவிர்க்க முடியாததாகி விட்டது.

பால்க்கன் நெருக்கடி:- இது முதலில் 1908ல்தொடங்கியது அங்கு 1908ல் இடம்பெற்ற துருக்கியப்புரட்சியைப் பயன்படுத்திய ஆஸ்திரியா. பொஸ்னியா, ஹேர்சகோவினு என்னும் இரு சிலாவியப் பிரதேசங்களைத் தனதாக்கிக் கொண்டது. இது பால்க்கன் பிரதேசத்தில் வாழ்ந்த சிலாவிய மக்கள் எல்லோரையும் ஒரு கொடிக் கீழ் கொண்டுவர வேண்டுமென நீண்ட நாளாக ஆசைப்பட்டுவந்த சேபியாவுக்கு வெறுப்பை உண்டாக்கியது. அதேசமயம் சிலாவியரின் நண்பனான இரசியாவும் பிரித்தானியா பிரான்ஸ் ஆகியனவும் அச்செயலுக்கு தமது ஆட்சேபனையைத் தெரிவித்தபோதிலும் ஜேர்மனி ஆஸ்திரியாவுக்குத் தனது முழு ஆதரவையும் தெரிவித்தபோது அந்நாடுகள் அப்பிரச்சினையை அவ்வளவில் விட்டுவிட்டன. இதன் பின் 1912இல் சேபியா, கிரீஸ், மொன்றி நீக்ரோ, பல்கேரியா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து, மசிடோனியாவில் சீர்திருத்தங்களை மறுத்த துருக்கிமேல் போர் தொடுத்தன இது முதலாம் பால்க்கன் போர் எனப்படும். இதில் துருக்கி மண்கவ்வியதன் விளைவாக பால்க்கன் படைகள் அதை ஐரோப்பிய மண்ணிலிருந்து அகற்றிவிட்டன. இப்போரில் பெரிய வல்லரசுகள் தலையிடவில்லை. ஆயினும் போரில் வெற்றி பெற்ற அரசுகள் புதுவதாகப் பெற்ற பிரதேசங்களைப் பங்கீடு செய்வதில் சச்சரவிட்டதனால் அவற்றிடையே போர் ஏற்பட்டது. இது இரண்டாவது பால்க்கன் போர் எனப்படும். இதில் பல்கேரியாவுக் கெதிராக சேபியா, கிரீஸ், ரூமேனியா ஆகியன போரிட்டன. இதில் பல்கேரியா தோற்கடிக்கப்பட்டதனால் பால்க்கன் பிரதேசத்தில் சேபியாவின் பலம் மேலும் அதிகரித்தது இது ஆஸ்திரியாவின் மனதில் பீதியை ஏற்படுத்தியதோடு பேளினிலிருந்து பக்தாத்வரை ஒரு புகையிரத வீதியை அமைத்துப் பால்க்கன் பிரதேசத்தையும் ஜேர்மனிய மயமாக்கலாமெனத் திட்டமிட்ட ஜேர்மனியின் ஆசையையும் நிராசையாக்கியது. அதே சமயம் 'பான்சிலாவிய இயக்கத்திற்கு தலைமை தாங்கிய சேபியா, ஆஸ்திரியாவின் பிடியில் எஞ்சியிருந்த சிலாவியப் பிரதேசங்களான பொஸ்னியா ஹேர்சகோவினு ஆகியவற்றை எப்பொழுது அகப்படுத்தலாம் என ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இவ்வாறு 'பான்

ஜேமன்' இயக்கமும் பான் சிலாவிய இயக்கமும் ஒன்றே டொன்று முட்டி மோதுவதற்குத் தயாராக இருந்தபோது ஆஸ்திரியாவில் நிகழ்ந்த ஒரு சம்பவம் போர்க் கதவுகளைத் திறந்து விட்டது.

போரின் உடன் காரணம்:— ஆஸ்திரியாவின் ஆட்சியின் கீழ் அகப்பட்ட பொஸ்னியாவில் வாழ்ந்த சேபிய ஆதரவாளர்கள் ஆஸ்திரியாவுக்கெதிரான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். அவ்வேளையில் 1914யூன் 28இல் ஆஸ்திரிய அரசின் வாரிசாகிய ஆர்ச்டியூக் பிரான்சிஸ் பேடினந்து என்பவன் பொஸ்னியாவில் ஒரு சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டபோது ஆஸ்திரியப் பிரசையாகிய ஒரு சேபியனால் சுட்டுக்கொல்லப்பட்டான், இது சேபியாவின் சதியாக இருக்கலாம் எனச் சந்தேகித்த ஆஸ்திரியா உடன் சேபியாவுடன் சில கோரிக்கைகளை விடுத்து அதற்கு 48 மணித்தியாலத்தில் பதில் கொடுக்குமாறு கேட்டது. சேபியா அவற்றுக்குப் பதில் அளித்ததாயினும் அவற்றினால் திருப்தியடையாத ஆஸ்திரியா சேபியாவை அடிபணியவைக்க எண்ணி அதனுடன் போர் தொடுத்தது இதன் பின் சம்பவங்கள் சங்கிலிக் கோர்வைபோல் இடம் பெற்றன. சேபியாவின் உதவிக்கோரிக்கைக்கு இணங்கி இரசியா படைகளைத்திரட்டியபோது ஜேர்மனி அவ்வாறு செய்யவேண்டாமெனக் கோரிய வேளை இரசியா மறுத்தது, உடன் ஜேர்மனி இரசியா மீது போர் தொடுத்தது. இதற்கு இரண்டு நாட்களுக்குப் பின் ஜேர்மனி பெல்சியத்தின் நடுவு நிலைமையையும் புறக்கணித்துவிட்டு அதற்கூடாகப் பிரான்ஸ்மீது படையெடுத்தபோது பிரித்தானியாவும் ஆகஸ்ட் 4இல் போரில் குதித்தது.

போரின் போக்கு.

உலக வரலாற்றிலேயே முதல் தடவையாக இடம்பெற்ற சர்வதேசப் போர் என்ற வகையிலும், பல ஆண்டுகள் நீடித்த போர் என்ற முறையிலும், முப்படைகளும் ஈடுபட்ட போர் என்ற வகையிலும் இப்போர் சிறப்படைகிறது' இதன் பிரதான நிகழ்ச்சிகளை இனிக் காண்போம்.

1914:—1914இல் போர் ஆரம்பித்தவுடன், மேற்கு முனையிலேயே பிரதான தாக்குதல்கள் இடம் பெற்றன. அங்கு பிரான்சைக் கைப்பற்றும் திட்டத்துடன் ஜேர்மனி தனது படைகளைப் பெல்சியத்துக்கூடாக இட்டுச் சென்றது. அது

இவ்வாறு பாரிஸ் நகருக்கு அண்மையில் வந்த போது, ஜேர்மன் தளபதி திசையை மாற்றித் தாக்குதலை மேற்கொண்டபடியினால் நேசநாடுகளின் படைகள் ஒன்று சேர்ந்து மாண் போர் முனையில் ஜேர்மன் படைகளைப் பின்னிடச் செய்தன. இதற்குப் பின். பிரான்சின் வடபகுதியிலுள்ள, கலே, போலோன் நகர்களைக் கைப்பற்றுவதற்காக வட திசை வழியே ஜேர்மனி தாக்குதலைத் திருப்பியபோதும் அந்நோக்கம் கைகூடவில்லை. ஈப்பர் என்னுமிடத்தில் பிரித்தானியர் பெற்ற வெற்றிகள் ஜேர்மனியின் திட்டத்தை முறியடித்தன. இதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் அகழிகளை அமைத்துத் தமது பாதுகாப்பை பலப்படுத்தினர். பெல்சியக் கரையிலிருந்து அல்ப்ஸ் மலைகள் வரை நீண்டு காணப்பட்ட இவ்வகழிகளில் நிலைகொண்ட இரு தரப்பினதும் படைகள் ஒருவரை ஒருவர் வெல்ல முடியாத நிலையில் நீண்ட காலம் போரிட்டன. இப் போரில் இலட்சக்கணக்கானோர் உயிர் துறந்தனர்.

இது இப்படியிருக்க, கிழக்கு முனையில் வடதிசை வழியாக இரசியர் சிறிது முன்னேறியபோதும் புதிய படைத் தலைவரான வொன் ஹிண்டன்பேர்க் தலைமையிலான ஜேர்மன் படைகள் ரஷ்ய படைகளைப் புறமுதுகிட்டோடச் செய்தன. ஆயினும் தெற்கில் இரசியா சில வெற்றிகளைப் பெற்றுக் கலிசியாவைக் கைப்பற்றியது. இவ்வாறு போர் இரு முனைகளிலும் முழு மூச்சாக நடைபெறும் வேளை 1914 நவம்பரில் துருக்கியும் ஜேர்மனியின் பக்கம் சேர்ந்து போரிடத் தொடங்கியது.

1915.- துருக்கி போரில் இறங்கியதைக் கண்ட பிரித்தானியா உடன் டாடனெல்ஸ் நீரிணைக்கு ஒரு கப்பற் படையை அனுப்பி அதை ஊடுருவ முயற்சித்தபோது அது தோல்வியில் முடிந்தது. அதேபோல் கலிப்பொலிக் குடா நாட்டிலும் நேச நாடுகளின் படைகள் துருக்கியரால் தடைப்படுத்தப்பட்டன. இதற்கிடையில் ஜேர்மனி கிழக்கு முனையில் இரசியரைப் பின்னிடச் செய்து கலிசியாவையும் போலந்தையும் கைப்பற்றியது. இதேசமயம் இத்தாலி நேசநாடுகளுடன் சேர்ந்து தென் ஆஸ்திரியா மேல் படையெடுத்த போது ஆஸ்திரியப் படைகளினால் தோற்கடிக்கப்பட்டது. இவ்வாறு 1915இல் மத்திய வல்லரசுகள் தாம் பல முனைகளிலும் முன்னேற்றம் கண்டிருந்தன.

1916:- ஆயினும் பிரான்சும், பிரித்தானியாவும் இன்னமும் தோற்கடிக்கப்படாததினால், ஜேர்மனி மீண்டும் மேற்கு முனைக்

குத் தன் கவனத்தைத் திருப்பியது. அங்கு ஏற்பட்டிருந்த தம்பித நிலை மேலும் சில காலம் நீடித்தது, ஆயினும் இவ் வாண்டு அகழிப்போர் மிக உக்கிரமாக மேற்கொள்ளப்பட்டதனால் இரு தரப்பிலும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது இந் நிலையில் பிரான்சின் கவனத்தை வேறொரு திசைக்கு திருப்பத் திட்டமிட்ட ஜேர்மனியர் 'வேடூன்' நகரைத் தாக்கினர். அங்கு நான்கு மாதங்கள் வரை பிரான்சியர் வீரத்துடன் போராடி. ஜேர்மனியரைக் கலைப்படையச் செய்து விட்டனர் ஆயினும் வடகேகே பிரித்தானியப் படைகளின் முன்னேற்றத்தை ஜேர்மனியர் தடுத்துவிட்டனர். இவ்வாறு 1916 இருதரப் பினருக்கும் ஏமாற்றமளித்த ஓராண்டாக அமைந்தது

1917: 1917இல் இடம் பெற்ற பிரதான நிகழ்ச்சிகள் இரண்டு. இவை ஐக்கிய அமெரிக்கா நேசநாடுகள் சார்பில் போரில் குதித்ததும் இரசியா ஓர் உள்நாட்டுப் புரட்சியின் விளைவாகப் போரிலிருந்து விலகியதுமாகும் 1917இல் ஜேர்மனி பிரித்தானியாவைப் பணியவைப்பதற்காகத் தீவிரமான கடல நடவடிக்கைகள் சிலவற்றை எடுத்தது. பிரித்தானியாவுக்கு உணவு பொருட்களைக் கொண்டு செல்லும் கப்பல்களும் நடு நிலை நாடுகளின் கப்பல்களும் ஜேர்மானியரின் படகுகளாலும் நீர் மூழ்கிகளாலும், நாசகாரிகளினாலும் தாக்கப்பட்டன இக காரணத்தினாற்றான் ஐக்கிய அமெரிக்கா போரில் குதித்தது. ஆனால் இவ்வாண்டில் ஐக்கிய அமெரிக்கப் படைகள் அதிகம சாதிக்க முடியவில்லை. மேற்கு முனையில், பிரித்தானியர் ஜேர் மானியரின் அரண்களைத் தகர்க்கும் முயற்சியில் 350 000 வீரரை இழந்தபோதும் 8000 யார் தூரம் மட்டுமே முன்னேற முடிந்தது. ஆயினும் ஜெனரல் அலென்பி என்னும் பிரித்தானிய தளபதி யெருசலேம் நகரைக் கைப்பற்றித் துருக்கியரைத் தோற்கடித்தது இவ்வாண்டின் பிரதான வெற்றிகளில் ஒன்றாகும்.

1918,- இவ்வாண்டில் இரசியா போரில் ஈடுபடாததினால் ஜேர்மானியப் படைகள் கிழக்கு முனையிலிருந்து விடுபட்டிருந்தன, எனவே அவை ஒன்று திரண்டு மேற்கு முனையில் பலத்த தாக்குதலை மேறகொண்டன ஆனால் அமெரிக்கப் படைகளும் நேசநாடுகளின் படைகளுடன் சேர்ந்துகொண்டதினால் அவற்றின் தாக்குதல் வெற்றியளிக்கவில்லை. மார்சல் பொச் என்னும் பிரஞ்சுப் படைத்தளபதியின் கீழ் நேச நாட்டுப் படைகள் ஜேர்மானியரைப் பின்னிடச் செய்தன. எனவே 1918 கோடை காலத்திலிருந்து ஜேர்மன் படைகள்

படிப்படியாகப் பின்வாங்கத் தோடங்கின, அதே வேளை ஜேர்மனியின் கூட்டாளிகளான ஆஸ்திரியா, பல்கேரியர் துருக்கி ஆகியவையும் செப்ரெம்பர் 29க்கும் நவம்பர் 3க்கு மிடையில் சரணுகதியடைந்திருந்தபடியால் ஜேர்மனி மட்டுமே தனித்துப் போராட வேண்டியிருந்தது. அந்நிலையில் போரில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. போரில் வெற்றி கிடைப்பது பகற் கனவு என்பதை உணர்ந்த நிலையில் அதுவரை பல தொல்லைகளை அனுபவித்த ஜேர்மன் மக்கள் தம் தலைவர்களுக்கெதிராகக் கிளர்ச்சிகள் புரியத் தொடங்கினர். இக் கிளர்ச்சி கடற் படையிலும் பரவியது. இதன் விளைவாக மன்னன் வில்லியம் நாட்டை விட்டுத் தப்பி ஒல்லாந்துக்கு ஓட ஒரு புதிய அரசாங்கம் பதவியேற்றது, அது உடன் போரை நிறுத்த முடிவுசெய்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் மேல் 1918 நவம்பர் 11இல் இரவு 11 மணிக்கு உலகப் போர் முடிந்தது.

சமாதான உடன்படிக்கைகளும் சர்வதேசசங்கமும்.

1914 முதல் 1918 வரை ஐரோப்பாவைப் பீடித்த பெரு நோயான உலகப் போர் முடிவடைந்த பின் சமாதான உடன் படிக்கைகளைச் செய்துகொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதில் வூட்ரோ வில்சன் (அமெரிக்கா), ஒர்லான்டோ (இத்தாலி) ஆகியோர் பெரும்பங்கு வகித்தனர். சமாதான உடன்படிக்கைகள் வில்சனின் 14 அம்சத்திட்டத்தை அடிப் படையாகக் கொண்டன. அப்பதினான்கு அம்சங்கள் மேல் வருமாறு (1) அரசுகளுக்கிடையில் இரகசிய சூழியல் இடம் பெறக் கூடாது. (2) எல்லாநாடுகளுக்கும் கடலில் சுதந்திரம் இருக்க வேண்டும். (3) எல்லாநாடுகளுக்குமிடையில் பொரு ளாதாரத் தடைகள் நீக்கப்படவேண்டும், (4) படைகள் குறைக்கப்படவேண்டும். (5) குடியேற்ற நாடுகள் பற்றிய கோரிக்கைகள் நியாயமான முறையில் தீர்க்கப்படவேண்டும்(6) இரசியாவிலிருந்து அந்நியரின் படைகள் அகலவேண்டும் (7)பெல் சியத்தின் 'நடுவுநிலை' மீண்டும் நாட்டப்படவேண்டும் (8) அல் சேஸ்லொறேன் மாகாணங்கள் பிரான்சுக்கு கையளிக்கப்பட வேண்டும் (9) இத்தாலியின் ஐக்கியம் பூர்த்தி செய்யப்படவேண் டும் (10, 11 ,12) துருக்கி ஆஸ்திரியா -கங்கேரி பால்க்கன் பிர தேசம் ஆகியவற்றில் உள்ள மக்களுக்குச் சுய நிர்ணய உரிமை

வழங்கப்பட வேண்டும் (13) போலந்தின் சுதந்திரம் உறுதிப் படுத்தப்படவேண்டும் (14) சர்வதேச சங்கம் ஒன்று தாபிக்கப் பட வேண்டும். இவ்வாறு 1919இல் மொத்தம் ஐந்து உடன் படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன. அவற்றில் ஜேர்மனி யுடன் செய்து கொண்ட வேர்சை உடன்படிக்கை முக்கியமானது அவ்வுடன்படிக்கையின் கீழ் அல்சேஸ், லொறேன் பிரதேசம் பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டது, சார் கரிவயலின் பாலனம் பதினைந்து ஆண்டு காலத்துக்குச் சர்வதேச சங்கத்தின் கீழ் விடப்பட்டது. சைலீசியாவின் ஒரு பகுதி மீண்டும் உருவாக்கப் பட்ட போலந்துடன் சேர்க்கப்பட்டது' டான்சிக் துறை சர்வ தேச சங்கத்தின் கீழ் எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஒரு துறையாக்கப்பட்டது, ஜேர்மனியின் கடற்படையில் நீர்மூழ்கி



(11 முதலாம் உலகப்போரின் முன் ஐரோப்பிய நிலை.

களும், வர்த்தகக் கப்பல்களில் 60,000 தொன்னுக்கு மேற்பட்ட வையும் வைத்திருத்தல் தடுக்கப்பட்டது. அத்துடன் ஜேர்மனியின் குடியேற்றங்கள் அதனிடமிருந்து பறிக்கப்பட்டு நேசநாடுகளின்கீழ் பொறுப்பாட்சிப் பிரதேசங்களாக்கப்பட்டன. இதன் படி, தங்கனிக்காவும், பலஸ்தீனும் பிரித்தானியாவின் கீழும் சிரியாவும் கமறூனும் பிரான்சின் கீழும், மேற்கு சமோவா நியூசிலாந்தின் கீழும் விடப்பட்டன. இவ்வாறு பொறுப்பேற்ற அரசுகள் தம்பொறுப்பிலுள்ள நாடுகளின் விருத்திக்கு மட்டுமன்றி அவை சுய ஆட்சிஐ பெறுவதற்கும் உதவ வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. குடியேற்ற நாடுகள் பற்றிய இக்கொள்கைக்கு வழிவகுத்தவர் போயர் தலைவர்களில் ஒருவரான ஸ்மட்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் இங்கிலாந்தின் சார்பில் சமாதான உடன்படிக்கைகளில் பெரும் பங்கு கொண்டார்.

வேர்சை உடன்படிக்கையைத் தொடர்ந்து ஆஸ்திரியாவுடன் சென்ஜேமேன் உடன்படிக்கை செய்யப்பட்டது அதன் படி அதன் பழைய பேரரசு துண்டாடப்பட்டுப் புதுவதாக செக்கோசிலாவாக்கியா யூகோசிலாவியா என்னும் இரு நாடுகள் உருவாக்கப்பட்டன மேலும் திரியனன் உடன்படிக்கையின்படி கங்கேரி, ஆஸ்திரியாவிலிருந்து பிரிக்கப்பட்டது நியுல்லி உடன்படிக்கை பல்கேரியாவின் பருமனைக் குறைத்தது, செவேர்சு உடன்படிக்கை துருக்கியிடமிருந்த சிமேனு, அட்றியன்போல் ஆகியவற்றைக் கிரீசுக்குக்கொடுத்தது, இறுதியாக இரசியாவிடமிருந்து ஜேர்மனியால் கைப்பற்றப்பட்ட பால்டிக் பிரதேசத்தில் லற்வியா, லித்வேனியா எஸ்தோனியா என்னும் மூன்று குடியரசுகள் தாபிக்கப்பட்டன.

இவ்வாறு போர் முடிவில் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் ஐரோப்பாவின் தேசப்படத்தைப் புனரமைத்தபோதிலும் அவற்றினுல் சில புதிய பிரச்சனைகளும் எழுந்தன. குறிப்பாக வேர்சை உடன்படிக்கை மிகக் கொடூரமானது எனவும் அது தமது பிரதிநிதி ஒருவர் பங்குகொள்ளாத மாநாட்டில் தப்மீது பலோத்காரமாகத் திணிக்கப்பட்டது எனவும் ஜேர்மானியர் குறை கூறத் தொடங்கினர். மேலும் ஜேர்மனி மீது சுமத்தப்பட்ட, போர் நட்ட ஈடு' அதற்கு ஒரு பெரும் பளுவாக இருந்தபடியால் அது அதனிடத்தில் மீண்டும் 'பழிவாங்கும்' எண்ணம் வேரோடச் செய்தது. சமாதான உடன்படிக்கைகளை ஐக்கிய அமெரிக்க செனற் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் உறுதிப்படுத்தாதபடியால் அமெரிக்காவும் அவ்வுடன்படிக்கைகளிற்

பங்கு பெறவில்லை, அன்றியும், ஜேர்மானியரின் அதிருப்தி பிரான்சியரிடத்தில் அமைதியின்மையை உருவாக்கியது,

சர்வதேச சங்கம்: இச்சங்கம் வூட்ரோ வில்சன் என்னும் அமெரிக்க சனாதிபதியினால் 1918இல் விடுக்கப்பட்ட 14 அம்ச சமாதானத் திட்டத்தின் இறுதி அம்சமாக இடம்பெற்றது இச் சங்கத்தின் நோக்கம் 'நாடுகள் போரில் சுடுபடுவதில்லை என்ற கோட்பாட்டை ஏற்பதன் மூலமும், தமக்கிடையுள்ள தொடர்புகளில் உடன்படிக்கைகளுக்கு மதிப்பளிப்பதன் மூலமும் சர்வதேச



(12) முதலாம் உலகப்போரின்பின் (1920இல்) ஐரோப்பாவின் நிலை.

சமாதானத்தையும். பாதுகாப்பையும் ஏற்படுட்துவது' எனத் தெரிவிக்கப்பட்டது. அன்றியும் எந்தவொரு நாடும் பிறநாட்டுடன் ஏற்படும் தகராறுகளைச் சர்வதேச சங்கத்திற்குச் சமர்ப்பிக்குமுன் போரில் ஈடுபடக்கூடாது எனவும், அவ்வாறு ஒரு நாடு ஈடுபடின் அதன் மேல் ஏனைய நாடுகள் பொருளாதாரத் தடைகளைப் பிரயோகிக்கும் உரிமைகளையுடையன எனவும் கூறப்பட்டது.

சர்வதேச சங்கம் ஒரு பொதுச்சபையையும் ஒரு கழகத்தையுமுடையதாயிருந்தது. அக்கழகத்தில் இத்தாலி. யப்பான், பிரான்ஸ், பிரித்தானியா என்னும் நான்கு நாடுகளும் நிரந்தர உறுப்பினராயிருந்தன அதேசமயம் நான்கு நாடுகள் நிரந்தர மற்ற உறுப்பினராகவும் இருந்தன. மேலும் சர்வதேச உறவுகளில் ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்கென ஒல்லாந்திலுள்ள 'ஹேக்' என்னுமிடத்தில் ஒரு நீதிமன்றமும், தொழிலாளர்களின் சேமநலன்களைப் பேணுவதற்காகச் சர்வதேச தொழிலாளர் சங்கமும், சங்கத்தின் அலுவல்களைக் கவனிப்பதற்காகச் சுவிற்சர்லாந்தில் ஒரு தலைமை அலுவலகமும் நிறுவப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட சர்வதேச சங்கம் உலகில் நிலையான அமைதி ஏற்படுவதற்கு உதவும் என அக்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது அந்நம்பிக்கையைச் சிதறடிக்காமல் தொடக்கத்தில் சிலகாலம் சர்வதேச சங்கம் சிறந்த பணியாற்றியது. போரிலுல் இடம் பெயர்ந்த அகதிகளைக் குடியேற்றும் விடயத்திலும் ஆஸ்திரியா தனது கடனைத் தீர்ப்பதற்கும் இச் சங்கம் உதவியது அத்துடன் சர்வதேச தொழிலாளர் சங்கம் தொழிலாளர்களின் வேலை நிலைமைகள் வேதனம் பற்றிய விடயங்களிலும் மகத்தான சேவை செய்தது, அன்றியும் 1920இல் சுவீடனுக்கும், பின்லாந்துக்குமிடையிலும். 1925இல் கிரீசுக்கும் பல்கேரியாவுக்குமிடையிலும். 1926ல் துருக்கிக்கும், கிரீசுக்குமிடையில் ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்த்துவைத்தபோதும். பெரிய வல்லரசுகள் பற்றிய பிணக்குகளைத் தீர்ப்பதில் அது தோல்வியடைந்தது. 1930 க்குப் பின் இடம்பெற்ற சில நிகழ்ச்சிகள் சங்கத்தின் பலவீனத்தை வெளிப்படுத்தி அதன் தோல்விக்கும் துணைசெய்தன உதாரணமாக 1929இல் ஏற்பட்ட சர்வதேச பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எல்லா நாடுகளினதும் ஒத்துழைப்பையும் கோரி இச்சங்கம் மேற்கொண்ட முயற்சிகள் யாது பயனையும் விளைவிக்கவில்லை இரண்டாவதாக, 1930இல் யப்பான் மஞ்சூரியாவைத் தாக்கியபோது அதைச் சர்வதேச சங்கத்தினுல் தடுக்கமுடியவில்லை. எனவே தனது முடிவுகளைச் செயல்படுத்துவதற்குச் சங்கத்

திடம் ஒரு படை இல்லாதமையே பெரும் குறைபாடாயிருந்தது. அத்தகைய ஒரு படையின் அவசியத்தை முன்னர் பிரான்ஸ் வற்புறுதியபோதிலும், ஏனைய வல்லரசுகள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் தார்மீக முறைகளில் யப்பானின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது அவை தோல்வியடைந்தன. அத்துடன் யப்பானும் சர்வதேச சங்கத்தை விட்டு விலகியது. மூன்றாவதாக, சர்வ தேச சங்கத்தில் தொடக்கத்திலிருந்தே ஐக்கிய அமெரிக்கா உறுப்பினராயிருக்காததும் ஒரு பெரிய குறைபாடாயிருந்தது. அன்றியும் சில வல்லரசுகள் யப்பானிய சம்பவத்தின் பின் சர்வதேச சங்கத்தின் பலவீனத்தை உணர்ந்து அதன் கொள் கைகளைக் காற்றில் பறக்கவிட்டு விட்டுப் பகிரங்க ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டன. அந்நாடுகள் தமது இறைமை யையும் தேசிய தேவைகளையுமே பெரிதாகக் கருதியபடியால் அவற்றை எள்ளளவும் விட்டுக்கொடுக்காமல் சர்வதேச சங்கத் தின் கட்டுப்பாடுகளைப் புறக்கணித்துக் கருமமாற்றின. இத்தாலி 1935இல் அபிசீனியாவுடன் போரிட்டதும், ஜேர்மனி, 1939 இல் செக்கோசிலோக்கியா ஆஸ்திரியா என்பவற்றை அகப் படுத்தியதும், இரசியா, பின்லாந்தின் ஒரு பகுதியை ஆக்கி ரமித்ததும், சர்வதேச சங்கத்தின் விதிகளுக்கு முரணான அடாத செயல்களாயிருந்த போதிலும் அவற்றைப் பொருளாதாரத் தடைகள் மூலமோ பிறதார்மீக வழிகளோ தடுப்பதில் சர்வதேச சங்கம் தோல்வியடைந்தது. எனவே யப்பான் காட்டிய வழியைப் பின்பற்றி 1933இல் ஜேர்மனியும், 1935 இல் இத்தாலியும் சர்வதேச சங்கத்திலிருந்து விலகியபோது அது மேலும் பலவீனமடைந்தது. இதன் பின் 1910–14 காலத்தில் இருந்ததைப் போன்று வெவ்வேறு நாடுகளும் தமக்கிடையே இராணுவப் பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்ய முற்பட்டபோது அமைதி குலைந்து அடுத்த போருக்கு அடிகோலப்பட்டது.

வினாக்கள்

1. முதலாம் உலகப்போரின் அடிப்படைக் காரணங்கள் யாவை?
2. முதலாம் உலகப்போருக்குத் தேசிய இன எழுச்சி எவ்வளவு தூரம் காரணமாகியது?
3. சர்வதேச சங்கத்தின் நோக்கங்களையும் தோல்வியையும் ஆராய்க.
4. குறிப்பெழுதுக:- (1) மூவர் உடன்படிக்கை
   (2) மூவர் நட்புறவு (3) சர்வதேச சங்கம்
   (4) வோர்சை உடன்படிக்கை (5) 14 அம்சத் திட்டம்.

அத்தியாயம் 24

ஈருலகப்போர்களின் இடைக்காலம்

முதலாம் உலகப்போரின் இறுதிக்காலத்துக்கும் இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்துக்கும் இடைப்பட்ட காலத்தின் பிரதான சம்பவங்கள் பல நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளாகும். அவற்றில் இரசியப் புரட்சியே முதலில் ஏற்பட்டதாதலின் அதைப்பற்றி முதலிற் படிப்போம்.

(1) இரசியப்புரட்சி

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இரசியாவின் நிலை

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இரசியாவின் உள்நாட்டுநிலைமை அராயும்போது அவை, இரசியாவில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வழிசாட்டியாயிருந்ததை அறியலாம். இரசியா 1854–56 காலத்தில் கிறைமியன் போரில் தோல்வியடைந்த காலத்திலிருந்து படிப்படியாக நாட்டுமக்களிடையே அதிருப்தியும் அமைதியின்மையும் அதிகரித்து வந்தன. அந்நிலையில் சார் அலெக்சாந்தர் (1855–81) ஊழிய முறையை ஒழித்துச் சாதாரண குடிமக்களுக்கு விடுதலையளித்ததோடு நிலத்திலும் ஒரு பங்கை அவர்களுக்குக் கொடுத்தார். மேலும் உள்ளூராட்சி முறையிலும் சட்டத்துறையிலும் சில சீர்திருத்தங்களைப் புகுத்தினர். எனினும் பக்கூனின் தலைமையில் உருவான ஆட்சியுறவாதிகளுக்கு அவை திருப்தியளிக்கவில்லை அவர்கள் முடியாட்சி ஒழிய வேண்டும் எனக் கூச்சலிட்டதோடு சதி முயற்சி மேற்கொண்டு 1881இல் அரசனைக் கொன்றனர். ஆதலின் பின் அரசனாகிய சார் அலெக்சாந்தர் III முடக்கு முறையைக் சட்டவிழ்த்து விட்டபடியால் மீண்டும் ஆட்சிக்கு எதிரான இயக்கம் பலமடைந்தது. இது இப்படியிருக்க 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொழிற் புரட்சியில் தாக்கத்திலுள் இரசியாவிலும் ஆலைத் தொழில்கள் விரிவுபடுத்தினவு. இதனால் புதுவதாகத் தொழிலாளர் வகுப்பினர் உருவாகியிருந்தனர். அவர்கள் சாள் மார்க்ஸ் என்னும் சமூக உடைமைவாதியின் சிந்தனைகளுக்குத் தூண்டப்படுவாயினர். ஜேர்மன் யூதனான மார்க்ஸ் Das Capital என்னும் தனது நூலில் முதலாளி-தொழிலாளி வகையான சமுதாய அமைப்பைப் பலாத்கார வழியில் புரட்சி செய்தாவது

யினும் அகற்ற வேண்டுமெனவும், தனிப்பட்டவர்களின் தொழில் களையும், சொத்துக்களையும் அரசாங்கம் தனது உடைமையாக்கி விட்டு வருவாயை மக்கள் அனைவரினதும் நலனுக்காகப் பயன் படுத்தவேண்டும் எனவும் தெரிவித்திருந்தான். இவ்வாறு மார்க்ஸ் தெரிவித்த கருத்துக்களில் புதிய ஒரு அரசியல் முறை பொதிந்திருப்பதைக் கண்ணுற்ற ஆலைத் தொழிலாளர்கள் அத்தகைய அரசை அமைப்பதில் ஆர்வம் காட்டினர். அதே சமயம் பிளெகானெவ் என்பவன் 1898இல் சமுக சனநாயக தொழிலாளர் கட்சி ஒன்றை நிறுவி மார்க்சின் கொள்கைகளைப் பரப்பினான். ஆயின் இக்கட்சியினிடையே பின் கருத்துமோதல் ஏற்பட்டது. இவர்களில் ஒரு பகுதியினர் இரசியாவில் நடை முறையிலிருந்த அரசியல், சமுதாய அமைப்புகளைப் பலாத் கார வழிகளில் மாற்ற வேண்டுமென்றனர். மறுபகுதியினர் அமைதியான வழிகளின் மூலமே அதைச் சாதிக்க வேண்டு மென்றனர். இறுதியில் பலாத்கார வழியை ஆதரித்தோர் தமது நியாயங்களினால் 'கொள்கைப் போரில்' வெற்றிபெற் றனர். அவர்கள் போல்செவிக்கர் (பெரும்பான்மையினர்) என வும் குறிப்பிடப்பட்டனர். இவ்விரு பிரிவினரும் முடியாட்சியை வெறுத்தனர். ஆயினும் அதை ஒழிக்கும் வழியைக் கண்டிலர். அந்நிலையில் எவரும் எதிர்பாராத வகையில் புரட்சி ஏற்பட்டது.

புரட்சியின் அடிப்படைக் காரணங்கள்:- இரசியப் புரட்சிக் கான அடிப்படைக் காரணங்களை நான்காக வகுக்கலாம். அவை (1) மன்னனின் வல்லாட்சி (2) சமுதாய வேறுபாடுகள் (3) பாட்டாளிகளின் நிலை (4) புரட்சிப் பிரசாரம் என்பனவாகும்.

'சார்' எனப்படும் இரசிய சக்கரவர்த்திகள் சர்வாதிகாரிகளைப் போல ஆட்சி புரிந்தனர், குறிப்பாக அலெக்சாண்டர் நிக்கொலஸ் ஆகியோரின் வல்லாட்சியும், அடக்கு முறையும் மக்களின் மனக்கசப்பை அதிகரித்திருந்தது. சார் மன்னன் ஒருவரை விசாரணையின்றிச் சிறை செய்யவும், நாடுகடத்தவும் அதிகாரமுடையவனாயிருந்தான். இரசிய கிரேக்க மதபீடத்துக் கும் அவனே தலைவனாயிருந்தபடியால் அவன் இட்டதே சட்ட மாக அமைந்தது. எனவே 'டூமா' எனப்பட்ட பாராளுமன்றம் மன்னனின் கைப்பொம்மை போலவே கருமமாற்றியது. அன்றி யும் மன்னன் 'ரஸ்புடீன்' என்னும் சந்நியாசியினதும், தனது மனைவியினதும் சொற்களைக்கேட்டு நடந்ததும் மக்களின் வெறுப் புக்கு இலக்காகியது. இரண்டாவதாக, இரசிய சமுதாயமும், பிரான்சிய சமுதாயத்தைப்போலலே பிளவுபட்டிருந்தது. அங்கு

சாதாரண குடிமக்கள் சலாக்கியம்பெற்ற பிரபுக்கள் என இரு வகுப்பினர் இருந்தனர். இவர்களிடை எவ்விதமான நேச உறவும் இருக்கவில்லை. இரசிய மதபீடமும், பிரபுத்துவத்தின் ஒரு பகுதியாயிருந்தது. அதுவும் அந்நியின் கருவியாகவே காணப்பட்டது மேலும் பொருளாதார ரீதியிலும் குடிமக்கள் கீழ்நிலையிலேயே இருந்தனர். அடிமைமுறை ஒழிக்கப்பட்டபின்பும் அவர்களது அவலநிலை மாறவில்லை. ஏனெனில் அவர்களுக்கு நிலம் வழங்கப்பட்ட முறை திருப்திகரமாயிருக்கவில்லை. மேலும், போர்களினாலும் வெளிநாட்டுக் கடன்களினாலும், வரிப்பணமும் அதிகரித்து வந்தது. இந்நிலையில் அவர்கள் அதிக நிலத்தைக் கோரியபோது, அது கிடைக்காததினால் ஆட்சி மீது அதிருப்தியுற்றிருந்தனர். மூன்றாவதாக தொழிற் புரட்சியின் விளைவாக, இரசிய நகரங்களில் ஆலைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து, அடிமை நிலையிலிருந்து விடுபட்ட குடிமக்கள் நகரங்களை நாடினர். அங்கு அவர்கள் அதிகநேரம் வேலை செய்த போதிலும் குறைவான ஊதியமே பெற முடிந்தது மேலும், தொழிற் சங்கம் அமைக்கவும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை இந்நிலையில் அவர்கள், சமூக உடைமை பற்றிய புதிய கருத்துக்களுக்குச் செவிசாய்க்கத் தொடங்கினர். இதனால் லியோ டால்ஸ்டாய், மார்க்சிம் கோர்க்கி, ரேர்கெனெவ், மார்க்ஸ் முதலிய சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும், புதிய கருத்துக்களையும், புதிய கோட்பாடுகளையும் பரப்பி மக்களின் மனதைக் கவர்ந்தனர். குறிப்பாக மார்க்சின் கருத்துக்களில் தொழிலாளர்கள் அதிக ஈடுபாடு கொண்டனர்.

புரட்சிக்கு முன்னேடியான நிகழ்ச்சிகள்.

இரசியா 1904-05இல் யப்பானுடன் ஒரு போரில் ஈடுபட்டு அதில் படுதோல்வியடைந்தது. இது நடுத்தர வகுப்பினரிடையிலும் சாதாரண குடிமக்களிடையிலும் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் போல் செவிக்கர் இதில் பங்கு கொள்ளவில்லை. மேலும், 1905 சனவரி 22இல் இடம்பெற்ற ஒரு படுகொலையும் மக்களை ஆட்சிக்கெதிராகத் தூண்டிற்று. அன்று அதிக உணவு தேவை என்ற கோரிக்கையுடன் சென் பீற்றஸ்பேக் நகரில் மக்கள் ஒன்று திரண்டபோது அதை ஒரு புரட்சியென அரசாங்கம் எண்ணியபடியால் இராணுவம் அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததின் விளைவாக ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து நகரங்களில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு நாட்டின் அமைதி குலைந்தது.

அதைக் கண்ட மன்னன் மக்களின் மனக்கசப்பைப் போக்குவதற்காக ஒரு காலமும் கூட்டப்படாதிருந்த 'டூமா' என்னும் இரசிய பாராளுமன்றத்தைக் கூட்டினான். ஆனால் அது சட்டம் இயற்றும் அதிகாரத்தையும், மந்திரிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் கோரியதனால் மன்னன் அதைக் கலைத்துவிட்டான். 1907இல் கூடிய இரண்டாவது டூமாவும் அவ்விதமே கலைக்கப்பட்டது. அதற்குப் பின் கூடிய மூன்றும் டூமா மன்னனுக்கு இசைவாக இருந்தபடியால் தொடர்ந்து கூடியது. ஆயினும் முழு அதிகாரமும் மன்னனிடம் இருந்தபடியால் அது வெறும் கைப்பொம்மையாகவே காட்சியளித்தது.

புரட்சியின் உடன் காரணங்களும் அதன் போக்கும்

இவ்வாறு தொழிலாளர்களினதும், சதாரண மக்களினதும் மனது புரட்சிக்குத் தயாராக இருக்கும்போது 1914இல் முதலாம் உலகப்போர் தொடங்கியது. உடன், மக்கள் தமது வேறுபாடுகளை மறந்து மன்னனுக்குத் தமது ஒருமுகமான ஆதரவை அளித்தனர். அதனால் போரின் தொடக்கத்தில் ஏற்பட்ட சில வெற்றிகளைத் தொடர்ந்து பல தோல்விகள் ஒன்றன் பின்னொன்று வந்தபோது மக்களிடை ஏமாற்றமும் மனக்கசப்பும் அதிகரித்தன ஏனெனில் இரசியப் படைகள் தொகையில் அதிகமாயிருந்தபோதும் அவற்றிடம் போதியளவு போர்க் கருவிகள் இருக்கவில்லை. அன்றியும், 1915 செப்ரெம்பரில் மன்னன் தானே படைத்தலைமையை ஏற்றபின், அரசியும் ருஸ்புடின் என்பவனும் அவர்களின் கூட்டாளிகளும் சீர்கேடான முறையில் ஆட்சியை நடத்தினர். இதனால் ஏருண்டெழுந்த பிரபுக்கள் 1916 இல் ருஸ்புடினைக் கட்டுக் கொன்றனர். ஆயினும் அதன் பின்னும் ஆட்சிமுறை திருந்த வில்லை. அதே சமயம் நாட்டின் பல பகுதிகளில் உணவுத்தட்டுப்பாடும் ஏற்பட்டது. அத்துடன் மன்னன் ஒருதலைப்பட்சமாகப் போரை நிறுத்திவிட்டு ஜேர்மனியுடன் சமாதானம் செய்ய எண்ணுகிறான் எனவும் ஒரு வதந்தி உலாவியது, அது மக்களின் மனக் கொதிப்பை மேலும் அதிகரித்தது. இத்தகைய நெருக்கடியான நிலைமைகளில் 1917 மார்ச்சில் சென் பீற்றஸ்பேக்கில் 90'000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து 'அடக்குமுறை ஒழிக' எனக் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். இதற்கு மூன்றும் நாள் 24 000 தொழிலாளர்கள் வீதிகளில் அணிவகுத்துச் சென்றபோது நிலைமை பேரழிர்த்தது. அந்நிலையில் ஊர்வலக்காரரைக் கலைக்கப் பணிக்கப்பட்ட படைவிரர் தாமும் தொழிலாளர்களுடன் சேர்ந்து கொண்டதை அறிந்த சார்

தானே சென்.பீற்றஸ்பேக்கிற்கு விரைந்தான். ஆயினும் அவன் பிரயாணம் செய்த புகைவண்டியின் பாதை மாற்றப்படியால் அது நகருக்கு வெளியே நிறுத்திவைக்கப்பட்டது. அந்நிலையில் மன்னன் தனது 'ஆட்டம்' முடிந்துவிட்டதென்பதை உணர்ந்து மார்ச் 15இல் பதவியைத் துறந்தான். இதன்மேல் புரட்சிக் காரர்கள் 1917 யூனில் மென்செவிக்கர்களில் ஒருவரான கரென்ஸ்கியின் தலைமையில் ஒரு அரசாங்கத்தைத் தாபித்தனர்: கரென்ஸ்கி போரைத் தொடர்ந்து நடத்தத் துணிந்தான். ஆயினும் படைகளும் பொதுமக்களும் போரிலும் அலுப்பும் சலிப்பும் அடைந்திருந்தபடியாலும், சில இலக்கிய இயக்கங்கள் இராணுவத்தின் கட்டுக்கோப்பைக் கலைத்தபடியாலும் அது சாத்தியப்படவில்லை. அந்நிலையில் கலங்கிய குட்டையில் மீன் பிடிபடுவது போல் கவிற்சர்லந்திலிருந்த லெனின் ஜேர்மனியர் இரசியாவுக்குச் செல்ல அனுமதித்தனர். அவன் மூலம் இரசிய புரட்சியைத் தாமதப்படுத்திப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர அவர்கள் திட்டமிட்டனர். லெனின் இரசியாவுக்கு வந்தபோது மக்கள் அவனை வரவேற்றனர். அவன் அங்கு நிறுவப்பட்ட மென்செவிக்கரின் முதலாளித்துவ ஆட்சியைக் கண்டித்து, அதனிடத்தில் தொழிலாளரின் அரசொன்றை நிறுவ வேண்டுமெனவும் சோவியத்துக்கு அதிகாரமும், குடியாளர்களுக்கு நிலமும், பட்டினியால் வாடுவோருக்குப் பாணும் எல்லோருக்கும் சமாதானமும் வழங்கப்பட வேண்டுமெனவும் புதிய புரட்சியொன்று ஏற்படவேண்டுமெனவும் பிரசாரப் செய்தான். இவ்வாறு தனது முயற்சியினாலும், பிரசாரத்தினாலும் தொழிலாளர்களின் ஆதரவைப் பெருக்கியபின் 1917 நவம்பர் 6ம், 7ம் நாட்களில் 'றெட்காட்' என்னும் படையின் உதவியுடன் நாட்டின் சேந்திர நீலையங்களைக் கைப்பற்றி, கரென்ஸ்கியின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டான்.

இதன் மேல் இரசியாவை ஒரு சோவியத் குடியரசாகப் பிரகனம் செய்து விட்டு, சோவியத்துக்களின் மாநாடு ஒன்றைக் கூட்டினான். அது லெனின் விடுத்த மூன்று சட்டங்களையும் அங்கீகரித்தது: அவை (1) ஜேர்மானியுடன் சமாதானம் செய்யப்படவேண்டும் (2) பிரபுக்களின் நிலம் பறிமுதலாக்கப்பட்டு அவை குடிமக்களிடையே பங்கிடப்படவேண்டும் (3) உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் சோவியத்துக்களிடம் இருக்கவேண்டும் என்பனவாகும்; இதைத்தொடர்ந்து ஜேர்மனியுடன் 1918 இல் 'பிறெஸ்ற்விற்ரோவ்ஸ்க்' உடன் படிக்கை செய்யப்பட்டது. அதன்கீழ் இரசியா தனது குடியில்

4(Iஐயு ப்.ஆலைகளில் 1)3 ஐயும், கரிவயல்களில் ¾ஐயும் ஜோர்மனிக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. இதன்பின் லெனின் தனது ஆட்சியை உறுதிப்படுத்த முனைந்தான். அச் சமயம், பிரபுக்களும், நில உரிமையாளர்களும், நடுத்தர வகுப் பினரும், பிரித்தானியர், பிரான்சியர் ஆகியோரின் ஆதரவுடன் கிளர்ச்சிகள் செய்தனர். டொன் நதிப் பிரதேசத்திலேயே இக் கிளர்ச்சி தொடங்கியது. இதன் விளைவாகக் கிளர்ச்சியாளர் களின், பெரும்பகுதியும் லெனினை ஆதரித்த 'செம்படை' யுடன் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் சில ஆண்டுகள்வரை நீடித்தது. இறுதியில் ட்ரொட்ஸ்கி என்பவன் செம்படையின் தலைமை ஏற்ற பின் வெண்படை அடிபணிய வைக்கப்பட்டது. பின்னர் பிரபுக்கள், நடுத்தரவகுப்பினர் ஆகியோருக்கெதிராகப் பயங்கர ஆட்சி ஒன்று கட்டவிழ்த்து விடப்பட்டது. இது பிரான் சின் பயங்கர ஆட்சியைப் போலிருந்தது. 'செக்கா' என்னும் இரகசிய பொலிஸ் தாபனம் இதற்குக் கருவியாயிருந்தது. இக் காலத்தில் பல்லாயிரக்கணக்கானோர் சிறையிலிடப்பட்டனர். அல்லது நாடு கடத்தப்பட்டனர்.

1920 அளவில் லெனின் தனது உள்நாட்டுப் பகைவர்களை ஒழித்துக் கட்டியவுடன் அவனது முதலாவது பிரச்சினை தீர்ந்து போனது. அதன்பின் நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்ப் படுத்த வேண்டிய பிரச்சினை ஏற்பட்டது. உள்நாட்டுப் போர்க் காலத்தில் குடியானவர்களின் உற்பத்திப் பொருட்கள் பறி முதல் செய்யப்பட்டுச் செம்படைகளுக்கு உணவளிக்கப்பட்டது. அத்துடன் அவர்கள் கட்டாய வரிப்பங்களிலும் ஈடுபடுத்தப் பட்டதனாலும், பயிர்களின் விளைச்சல் குறைந்ததனாலும் நாட் டில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடியது. அதே சமயம், வர்த் தகம், உற்பத்தி முதலியவற்றைத் தேசியமயமாக்கியும் தனிப் பட்டவர்களின் சொத்தைப் பறிமுதல் செய்தும் ஆலைகளின் நிர்வாகத்தைத் தொழிலாளர்களின் கைக்கு மாற்றியும் பல வாறு தூய பொதுவுடைமைக் கொள்கைகளைப் புகுத்த அவன் முயன்றதனால். நாட்டின் பொருளாதாரக் கட்டுக்கோப்புக் குலைந்து மக்களிடையே அதிருப்தி அதிகரித்தது; தொழிற் சாலைகளில் உற்பத்தி குறைந்தது; வர்த்தகம் வீழ்ச்சியடைந் தது. அரசாங்கத்தின் கடன் பளு அதிகரித்தது. தாள் நாணயத் தின் புழக்கம் அதிகரித்தது. இவ்வாறு நாடு சீரழிவதைக் கண்ட 'லெனின்' தூய பொதுவுடைமை அப்போதைய நிலை யில் சாத்தியமில்லை எனக் கண்டு புதிய பொருளாதார கொள்கை' ஒன்றை வெளியிட்டான். அது தனிப்பட்டவர்

களின் முயற்சிகளுக்கும் இடமளித்து. ஓரளவு முதலாளித்துவ முறைக்கு நாட்டைத் திருப்பியது. அதன் கீழ் உள்நாட்டு வர்த்தகம் தனிப்பட்டவர்களிடம் விடப்பட்டது; குடியானவர்கள் தானியத்துக்கு பதிலாக வரியொன்றைச் செலுத்துமாறு விதிக்கப்பட்டது. தனிப்பட்டோர் சிறிய அளவிலான தொழிலை விருத்தி செய்ய அனுமதிக்கப்பட்டனர். அதே சமயம் நிதிக் கட்டுப்பாடும் வெளிநாட்டு வர்த்தகமும் அரசாங்கத்திடம் விடப்பட்டன. இவ்வாறு ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியதன் மூலம் லெனின் நாட்டில் ஏற்பட்ட விருந்த பெரும் நெருக்கடியைத் தவிர்த்து மக்களிடை மீண்டும் திருப்தியை ஏற்படுத்தித் தனது அரசாங்கத்தையும் காப்பாற்றிக்கொண்டான். அடுத்து நாடு முழுவதிலும் புதிய ஆட்சி முறையைப் பரப்பும் நோக்கத்துடன் 1923இல் புதிய அரசியற்றிட்டமொன்றை லெனின் பிரகடனப்படுத்தினன். அது இரசியப் போராசை ஐக்கிய சோவியத்துச்சம உடைமைக் குடியரசாக மாற்றியது. அதன்கீழ் சோவியத்துக்கள் எனப்படும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரைக் கொண்ட சபைகள் உள்ளூராட்சிக்குப் பொறுப்பாக்கப்பட்டன. இவ்வகையான கிராம, பட்டின, சோவியத்துக்கள், மாவட்ட சோவியத்துக்கள், முதலியவற்றின் மேல் அமைந்தது. உயர் (உச்ச) சோவியத் எனப்படும் அதனால் தெரிவு செய்யப்பட்ட ஒருசபைத்தின் உறுப்பினரே அரசாங்கத்தை நடத்துகின்றனர். இவ்வாறு உருவாக்கப்பட்ட புதிய திட்டம் பூரணமாகச் செயற்படுவதைக் காணும் வாய்ப்பு லெனினுக்குக் கிடைக்கவில்லை. அவன் 1924ல் இறந்தான், அதன்பின் ட்ரொட்ஸ்கி, ஸ்ராலின் என்னும் இருவர் அவனது பதவிக்காகப் போட்டியிட்டனர். அதில் ஸ்ராலின் வெற்றி பெற்று 1928இல் இரசியாவின் புதிய தலைவனானன். அவன் உடன் ட்ரொட்ஸ்கியை நாட்டைவிட்டுத் துரத்தி விட்டான். பின் நாட்டின் அபிவிருத்திக்காக ஐந்து ஆண்டுத் திட்டங்களை வகுத்தான். தேசியமயமாக்குதல், உற்பத்தியை அதிகரித்தல், தொழில்மயமாக்குதல் ஆகிய அத்திட்டங்களின் அடிப்படை நோக்கங்கள். இவ்வாறு 1923-33 காலத்தில் தொடங்கி 1939-42 வரையுள்ள காலத்தில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றினன். அவற்றின் விளைவாக நாடு பல துறைகளிலும் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் கண்டது. ஆயின் மூன்றாவது திட்டம் முற்றுப் பெற முன்னரேயே இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்த பயாடில் அது நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டது:

(2) துருக்கியும் முஸ்தாபா கமாலும்

முதலாம் உலகப் போரில் மத்திய அரசுகளின் சார்பில் போரில் பங்குபற்றிய துருக்கி போரின் பின் செய்யப்பட்ட செவர் உடன்படிக்கையின் விளைவாகத் தனது ஆட்சியின் கீழிருந்த சிரியா, பலஸ்தீனம், அரேபியா முதலியவற்றைப் பறிகொடுத்தது. அவ்வேளை துருக்கியின் அதிபதியான சுல்தானும் எதுவுமே செய்யமுடியாமலிருந்தான். அந்நிலையில் முஸ்தாபா கமால் என்னும் தேசிய தலைவர் மட்டும் அவ்வுடன்படிக்கையை ஏற்கவேண்டாமென்று துணிச்சலுடன் கூறினார். கமால் 1881இல் அல்பேனியாவில் பிறந்து துருக்கியின் இராணுவத்தில் சேர்ந்து நீண்டகாலம் சேவை செய்தவன். 'கலிப் பொலி'யில் பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்ததும் இவனே. இவன் போரின்பின் கிழக்கு அனதோலியாவுக்குப் படைக்குறைப்பை மேற்பார்வை செய்யும் அதிகாரியாக அனுப்பப்பட்டிருந்தான். ஆனால் கமால் அங்கு சென்றவுடன் படைகளைக் குறைக்காமல் அவற்றை ஒன்றுபடுத்திப் பலப்படுத்தினான். பின் மக்கள் கட்சி என ஒன்றை உருவாக்கித் 'துருக்கி துருக்கியருக்கே' என்ற சுலோகத்தை எழுப்பினான். பின் அக்கட்சி 1919இல் இரு மாநாடுகளை நடத்திக் கமாலை அதன் தலைவராகத் தெரிவு செய்தது. இதைக் கேள்விப்பட்ட சுல்தான் கமாலை உடன் நகருக்குத் திரும்புமாறு கட்டளையிட்டபோது கமால் மறுத்தான். பின் 1920 ஏப்ரில் 23இல் 150 பிரதிநிதிகளடங்கிய ஒரு தேசிய சபை துருக்கிக்கு ஒரு புதிய அரசியல் திட்டத்தை வரைந்து தானே ஆட்சிக்குப் பொறுப்பு எனப் பிரகடனப்படுத்தியது.

இது இவ்வாறாக போரின்பின் துருக்கியின் பலவீனத்தைக் கண்ட கிரேக்கர் 1919ல் ஸ்மேனு நகரைக் கைப்பற்றிய பின் 1920ல் மேலும் பல இடங்களைப் பிடிப்பதற்காகப் படையெடுத்தனர். அப்படையெடுப்பு முஸ்தபா கமாலினால் முறியடிக்கப்பட்டுக் கிரேக்கர்கள் துருக்கியிலிருந்து துரத்தப்பட்டனர். இதற்குப் பின்னர் கொன்ஸ்தாந்திநோபிளையும் பிடிப்பதற்கு முஸ்தபா முயற்சித்தபோது பிரித்தானியாவின் கடற்படை தடையாயிருந்தது எனவே கமால் உடன் போர் நிறுத்தம் செய்து கொண்டான். இதற்கிடையில் 1922இல் கூடிய தேசிய சபை சுல்தானைப் பதவியிலிருந்து நீக்கியதனால் அவன் நாட்டை விட்டுத் தப்பியோடினான். இதன் பின்னர் 1923இல் பிரித்தானியாவும் புதிய துருக்கி அரசியல் தலைவர்களும் 'லோசான்' உடன்படிக்கை செய்து கொண்டனர் அதன்படி கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியிடம் கையளிக்கப்பட்டதோடு அந்த ஐரோப்

பியர்களுக்கிருந்த சலுகைகளெல்லாம் ஒழிக்கப்பட்டன. இதன் மேல் தேசிய சபை துருக்கியை ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்து கமாலை அதன தலைவராக்கியது. படைத்தளபதியாகவும் குடியரசின் தலைவராகவுமிருந்த கமால் சர்வாதிகாரியாகக் கரும மாற்றினான். அவன் துருக்கி மக்களின் சமூக வாழ்க்கையில் புரட்சியை ஏற்படுத்தினான். துருக்கியின் முன்னேற்றத்துக்குத் தடையாயிருந்த இஸ்லாமிய மதக் கட்டுக்கோப்பை' குலைத்து மக்களிடையே தேசிய உணர்ச்சி மிகுதற்கு அவன் வழிவகுத்தான். அவனது தூண்டுதலினால் 1924இல் 'காலிப்' என்னும் மதத் தலைவரின் பதவி ஒழிக்கப்பட்டது. இதற்குப் பின் 'சேரியத்' என்னும் பழைமையான சட்டத் தொகுப்பை நீங்கிவிட்டு ஐரோப்பிய நாடுகளின் சட்டமுறையைத் தழுவிப் புதிய சட்டத் தொகுப்பை உருவாக்கினான் மூன்றாவதாக பள்ளிவாசல்களுடன் இணைந்திருந்த பள்ளிக்கூடங்களுக்குப் பதிலாக மதச்சார்பற்ற கல்விக்கூடங்களை நிறுவினான் மேலும் நிர்வாக அதிகாரிகளையும், சட்டவாதிகளையும் பயிற்றுவிப்பதற்காக ஒரு உயர் கல்விக்கூடமும் நிறுவப்பட்டது. இவற்றைத் தவிர மக்களின் பழக்க வழக்கங்கள் சிலவற்றை மாற்றவும் கமால் நடவடிக்கையெடுத்தான். குல்லாய் அணிவது ஒரு குற்றமாக ஆக்கப்பட்டது. இஸ்லாமிய கலண்டருக்குப் பதில் புதிய கலண்டர் புகுத்தப்பட்டது. மீற்றர் முறை அளவு பாவனைபிற்கொண்டுவரப்பட்டது. பிள்ளைகள் குடும்பப் பெயர் களைச் சூட்டிக்கொள்ளவேண்டுமென விதிக்கப்பட்டது. மேற் கத்திய கலை, சங்கீதம் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் புதிய எழுத்து முறையொன்றும் புகுத்தப்பட்டு ஆரம்பக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. கமாலின் சமூக சேவைகளில் சிகரமாயிருப்பது பெண்களுக்குச் சமூக விடுதலை அளித்ததாகும். பெண்கள் புதிய உடைகளை அணியவும், கல்வி பெறவும், கமால் வழிவகுத்தான். மேற்குறிப்பிட்டவற்றைத் தவிரக் கமால் பயிர்ச்செய்கைத் துறையிலும் பல தீர்த்திருத்தங் களை மேற்கொண்டதோடு ஆலைத்தொழில்களின் விருத்திக்கும் உதவினான். அன்றியும் போக்குவரத்து தொடர்பு சேவைகள் வர்த்தகம் ஆகிவற்றையும் வளர்த்துத் துருக்கியைப் பலமிக்க ஒரு புது நாடாக மாற்றினான். இவ்வாறு பதினைந்து ஆண்டு களாகத் தனது நாட்டுக்கு அரும் பணியாற்றிய கமால் 1938ல் இறந்தான். புதிய துருக்கியின் தந்தை என்ற முறை யில் அவனது பெயர் துருக்கியரின் நினைவை விட்டு என்றும் அகலாது.

(3) இத்தாலியில் சர்வாதிகார ஆட்சி

துருக்கியில் கமால் சர்வாதிகார ஆட்சி நடத்திய அதே காலத்தில் இத்தாலியில் முசோலினியின் சர்வாதிகார ஆட்சி நிலைபெற்றுவிட்டது. இத்தாலியில் சர்வாதிகாரம் தோன்றிய தற்கு உலகப் போரின்பின் நிலவிய சமூக அமைதியின்மையும் பொருளாதாரச் சீர்குலைவுமே பிரதான காரணங்களாகும். இத்தாலி உலகப்போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட போதிலும், போரின்பின் செய்துகொண்ட உடன்படிக்கைகளால் அது எவ்வித பயனையும் அடையவில்லை. அதேசமயம் போர் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதித்தபடியால், போரின்பின் மக்கள் போதிய உணவைப் பெறுவது கடினமாயிருந்தது. அந்நிலையில் சில குடியானவர்கள் பெருந் தோட்டங்களைக் கைப்பற்றத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர். அதே சமயம் வேலையற்றோரும் குழப்பங்களை விளைவித்தனர். இவ்வாறு நாடு சீரழிவதைக் கண்டும் மன்னன் அதைச் சீர்படுத்த எம் முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அவ்வேளை சமூக உடைமைக் கட்சியினர் இரசியாவைப் பின்பற்றித் தொழிற் சாலைகளைக் கைப்பற்றி ஒரு புரட்சி செய்தனர். ஆயினும் தொழிற்சாலைகளை நிர்வகிக்க முடியாமையினால் அவர்களின் புரட்சி தோல்வியடைந்தது. அந்நிலையில் இத்தாலியரை வழி நடத்துவதற்கு ஒரு புதிய தலைவன் தோன்றினான். அவனே முசோலினி யாகும். முசோலினி ஒரு கொல்லனின் மகனாக 1881இல் பிறந்தான். இளமைக் காலத்தில் அவன் சிலகாலம் ஆசிரியத் தொழில் செய்த பின்னர் அதில் வெறுப்புற்று நாட்டிலிருந்து வெளியேறிச், சுவிற்சர்லாந்தில் லெனினுடன் தொடர்பு கொண்டு அவனது கருத்துக்களினால் கவரப்பட்டிருந் தான். பின் 1909இல் இத்தாலிக்குத் திரும்பி வந்து புரட்சி வாதியாக மாறி, தேசியம் பேரரசுவாதம் என்னாட்சி. முத லியவற்றைக் கண்டித்துப் பேசியும், எழுதியும் வந்தான். அவ் வேளை உலகப்போரும் தொடங்கியது. உடன் அவன் ஒரு படை வீரனாகப் போரில் பங்கு பற்றினான். போரின் பின்னர் 1916 மார்ச் 23இல் முசோலினி பாசிஸ்தக் கட்சியை நிறுவிச் சமூக உடைமைவாதிகளுக்கும், பொது உடைமைவாதிகளுக்கும் எதிராகப் பிரசாரம் செய்தான். முசொலினியின் பிரசாரத் தினால் கவரப்பட்ட பலர் அவன் கட்சியிற் சேர்ந்தனர். இவ் வாறு 1921 அளவில் 10,000 பேர் அவனது கட்சியில் சேர்ந் திருந்தனர். முசோலினியின் ஆதரவாளர்கள் கறுப்புச் சட்டையை அணிந்தபடியால் 'கருஞ்சட்டையினர்' எனப்பட்

டனர். அவர்களின் மூலம் அவன் நாட்டில் சமூக உடைமை வாதிகளுக்கும். பொதுஉடைமைவாதிகளுக்கும் எதிராகப் பயங்கர நடவடிக்கைகளை மேற்கொண்டான்.

இவ்வாறு வன் செயல்களினாலும், பயமுறுத்தல்களினாலும் மக்களின் மனதில் பீதியை ஏற்படுத்திய முசோலினியின் கட்சி 1922ல் 300,000 உறுப்பினரையுடையதாயிருந்தது. அச்சமயம் அவன் ஆட்சியைக் கைப்பற்ற முடிவு செய்து ஒக்ரோபர் 27ல் சருள்சட்டையினருடன் ரோமாபுரிக்கு அணிவகுத்துச் சென்ற வேளை அச்சமுற்ற பன்னன் உடன் முசோலினியைப் பிரதம மந்திரியாக்கினான். பிரதம மந்திரிப் பதவியைப் பெற்றபின் முசோலினி தனது பிடியைப் பலப்படுத்தவும். தலைக்குப் பகையாவரையும் ஒழிக்கவும் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டான். பின் 1924இல் இடம்பெற்ற தேர்தலில் தனது சட்சிக்காரரே பதவிக்கு வரத்தக்கவிதமாக பலமுறை வேலைகளில் ஈடுபட்டான். இதன் பின் முசோலினி இட்டதே சட்டமாக இருந்தது. அவன் பிரதம மந்திரி என்ற போர்வைக்குள்ளிருந்து சர்வாதிகாரம் செலுத்தி. மக்களின் சுதந்திரங்களைப் பறித்தான். நாட்டில் அவனது சட்டியைத் தவிர வேறெதையும் ஆமோதிக்கப்படவில்லை. முசோலினியின் பாசிசம் 'நம்பு, கீழ்ப்படி. போர்புரி' என்னும் மூட்டேரும் தத்துவங்களை உண்டாக்கியது பாசிஸ்தக் கட்சி பல கிளை நிறுவனங்களையுடையதாயிருந்தது. 'பலிலா' என்பது 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் இயக்கம், 14 முதல் 18 வயதுக்குட்பட்டோர் 'அவங்காடியா' என்னும் பிரிவைச் சேர்ந்திருந்தனர் இளைஞர் இளைஞிகள் 'பிக்கோல் இத்தாலியனே' என்னும் பிரிவைச் சேர்ந்தனர்.

இவ்வாறு இத்தாலியின் அரசியலில் புதிய ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய முசோலினி அந்நாட்டைப் பலமிக்கதாக உருவாக்குவதற்குப் பாடுபட்டான். பயிர்த்தொழிலில் பல புதிய முறைகளைப் பின்பற்றி உற்பத்தியை அதிகரிக்கச் செய்தான். நீர்மின்வலு நிலையங்களை நிறுவி, அவற்றின் அடிப்படையில் பல தொழில்களை விருத்தி செய்தான். போக்குவரத்து, போது வேலை ஆகியவற்றுக்கு அதிக பணம் செலவிட்டான். இவ்வாறு பல வழிகளில் நாட்டைப் பலப்படுத்திய பின் முசோலினி பாப்பாண்டவருடன் கலந்து பேசி லற்றரன் உடன்படிக்கை மூலம் வத்திக்கான் என்னும் 100 ஏக்கர் பரப்புள்ள நிலத்துண்டை அவரின் பிரத்தியேக பிரதேசமாகக் கையளித்தான். இதன் மூலம் 50 ஆண்டுகளுக்கு மேல் நீடித்த பாப்பரசரின்

பகைமையை முசோலினி ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தான். அத்துடன் ரோமன் கத்தோலிக்கம் இத்தாலியின் சமயமாக்கப் பட்டது. ஆயினும் கல்வி விடயமாக அவன் பாப்பரசருடன் பிணங்கினான். ஏனெனில் பாப்பரசர் மத அடிப்படையிலான கல்வியை வற்புறுத்தியபோது முசோலினி தனது பாசிஸ்தக் கொள்கையின் அடிப்படையிலமைந்த கல்வியையே வற்புறுத்தினான்.

இவ்வாறு முசோலினி தனது உள்நாட்டு விடயங்களைப் பொறுத்தமட்டில் நாட்டில் அமைதியையும், ஓளவு முன்னேற்றத்தையும் ஏற்படுத்திய பொழுதிலும் அவனது வெளிநாட்டுக் கொள்கை உலக அமைதிக்குப் பங்கம் விளைவித்தது. முசோலினி இத்தாலியின் வரலாற்றுக்காலப் பெருமையை மீண்டும் நிலை நாட்ட முயன்று அதற்கு 'ஆக்கிரமிப்பை' ஒரு கருவியாகப் பயன்படுத்தினான். 1934 அளவில் நாட்டில் வேலையின்மை அதிகரித்திருந்தவேளை அவன் அபிசீனியா மீது படையெடுத்தான் ஆபிரிக்காவிலிருந்த எறித்திரியா, சோமாலிலாந்து என்னும் இரு இத்தாலிய பிரதேசங்களையும் இணைக்க உதவும் என்ற காரணத்தாலும் 1896இல் தாம் அபிசீனியரிடம் அடைந்த அவமானத்தைப் போக்குவதற்குமாகவே படையெடுப்பு மேற் கொள்ளப்பட்டது. அதில் அவன் வெற்றி பெற்றதனால் அபிசீனியாவும், இத்தாலியப் 'பேரரசின்' பகுதியாகியது இவ்வாறு இத்தாலியால் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பைச் சர்வதேச சங்கத்தினால் தடுக்க முடியாமற் போயிற்று. அன்றியும் அது தொடர்பாக இத்தாலி மீது பிரயோகிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளும் பயனளிக்கவில்லை. இதனால் துணிச்சல் மேலிட்ட முசோலினி அடுத்த உலகப்போருக்கு வழிகுக்கும் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

(4) பிரித்தானியாவும் பொதுநலவாயமும்

பதினெட்டாம் நூற்றாண்டில் உலகின் பல பகுதிகளிலும் பரந்து காணப்பட்ட பிரித்தானியப் பேரரசின் பிடியிலிருந்து மூதன் முதலாக விலகிச் சுதந்திர அரசைத் தாபித்தவை அமெரிக்க குடியேற்றங்களாகும் அதற்குப் பின்னர் பிரித்தானிய அரசு தனது பேரரசு விடயமாகக் கடைப்பிடித்த கொள்கையில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்பட்டன. அம்மாற்றங்களுக்கு முன்னோடியாக அமைந்தது டோர்ஹாம் அறிக்கையாகும், டோர் ஹாம் கனடாவின் அரசியல் பிரச்சினைகளை ஆராய்ந்து சமர்ப்

பித்த அறிக்கையில். பிரித்தானியா தனது பேரரசின் கீழுள்ள குடியேற்றங்களுக்குச் சுயாட்சி அளிப்பதன் அவசியத்தை வற்புறுத்தினர். அதற்கிணங்க முதலில் கனடாவுக்கும், அடுத்து முறையே அவுஸ்திரேலியா (1901), நியூசிலாந்து (1907), தென்னாபிரிக்கா (1909), அயர்லாந்து (1921), ஆகியவற்றுக்கும் சுயஆட்சி அளிக்கப்பட்டது. இப்படியாகத் தொடக்கத்தில் பிரித்தானிய குடியேற்றவாசிகளைக் கொண்ட நாடுகளுக்கே 'ஆணிலப்பதம்' அளிக்கப்பட்டது இவ்வாறு 'ஆணிலப்பதம்' பெற்ற போதும் மேற்குறிப்பிட்ட நாடுகள் வெளிநாட்டு விடயங்களிலும், போர்க் காலங்களிலும் பிரித்தானியாவைப் பின்பற்ற வேண்டிய நிலையிலேயேயிருந்தன. ஏனெனில் கொள்கையளவில் அவை இன்னமும் ,முடி'யின் பொறுப்பிலிருந்து விடுபடவில்லை.

முதலாம் உலகப் போரின்போது பிரித்தானிய குடியேற்ற நாடுகள் பிரித்தானியாவின் சார்பில் போரில் பங்குபற்றி அதற்குப் பேருதவி செய்தன. அவை போர்க்காலத்தில் காட்டிய விசுவாசமும், ஆற்றிய சேவையும் அவற்றின் 'அந்தஸ்து' விடயமாக அதுவரை பிரித்தானியா பின்பற்றிய கொள்கையில் மாற்றங்கள் ஏற்படவேண்டிய அவசியத்தைச் சுட்டின. அதேசமயம் 'ஆணிலப்பத' நிலையை அடைந்த நாடுகளில் போருக்குப் பின்னர் உருவாகிய ஒரு வகையான தேசிய உணர்ச்சியின் விளைவாக அவை பேரரசு விடயங்களில் புதிய பங்கையும் 'அந்தஸ்தையும்' பெற விழைந்தன. சுருங்கக் கூறின் அவை வெளிநாட்டு விடயங்களில் தொடர்ந்தும், பிரித்தானியாவின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க விரும்பாமல், பிரித்தானிய பேரரசில் சமபங்காளிகளாக இருக்க விரும்பின எனலாம். 1917இல் கூடிய பேரரசுப் போர் மாநாடு. பேரரசு நாடுகளுக்கும் பிரித்தானியாவுக்கு மிடையிலுள்ள யாப்புத் தொடர்புகளை மாற்ற இது காலமன்று எனக் கூறியபோதும். 'ஆணிலப்பத' நிலையை அடைந்த நாடுகள் பிரித்தானிய பேரரசின் பொதுநலவாயத்தில் சுய ஆட்சியுள்ளவை என்ற அடிப்படையிலேயே எதிர்கால முடிவுகள் இருக்க வேண்டும் என வற்புறுத்தியது. இதன் விளைவாக, போரின் பின் இடம் பெற்ற சமாதான மாநாட்டிலும், சர்வதேச சங்கத்திலும். ஆணிலப்பத நிலையெய்திய நாடுகள் சுயேச்சையான நாடுகள் போலவே பங்குபற்றின. இதன் பின்னர் 1926ல் கூடிய பேரரசு மாநாடு பால்பர் என்பவர் தலைமையில் ஒரு குழுவை நியமித்து ஆணிலப்பத நாடுகளின் அரசியல் நிலையை விளக்குமாறு கோரியது. அக்குழு ஆணிலப்பத நாடுகள் பிரித்தானியப்

பேரரசுக்குள் பூரண சுய ஆட்சியுள்ள சமூகங்களென்றும் அவை உள்நாட்டு, வெளிநாட்டு விடயங்களில் ஒன்றுக்கொன்று அடங்கியவல்லவென்றும். முடிக்கு விசுவாசமாயிருப்பதில் மட்டும் ஒன்றுபட்டிருந்து இணைந்திருப்பதோடு, பிரித்தானிய பொது நலவாயத்தில் தம்மிட்டமாக உறுப்பினராக இணைந்துள்ளவை எனவும் விளக்கப் கூறியது- பிரித்தானியப் பேரரசு பொது நலவாயமாக மாறிய ரெனாற்றின் முக்கியமான திருப்பம் அதுவே. இதற்குப் பின்னர் 1931இல் பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வெஸ்ற்மினிஸ்ற்றர் சட்டம் ஆணைப்பதம் பெற்ற நாடுகள் எல்லா உள்நாட்டு, வெளிநாட்டு விடயங்களிலும் பூரண சுதந்திரமுடையவையென்று கூறிப் பிரித்தானிய பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிலிருந்து அவற்றுக்கு விடுதலையளித்தது. இதன் விளைவாக, ஒரு நாட்டின் சம்மதத்துடனன்றி அங்கு வேறு வகையில் பிரித்தானியா தனது நாட்டுச் சட்டத்தை அமுல் நடத்த முடியாத நிலை உருவாகியது. அது முதல் ஆணிலப்பதம் பெற்ற நாடுகளின் சட்டசபைகளும் பிரித்தானிய பாராளுமன்றத்தைப் போல உரிமை பெற்றன. அந்நிலையில் பிரித்தானியாவின் பழைய பேரரசு மறைந்து போக, அதனிடத்தில் ,முடிக்குச் சம்பிரதாயமான மதிட்பளிக்கும் புதிய பொதுநலவாயம் உருவாகியது. அப்பொதுநலவாயத்தில் உள்ள நாடுகள் வெளிநாட்டு விடயங்களில் தாம் விரும்பியபடியே செயலாற்றவும் விரும்பினால் பொதுநலவாயத்தை விட்டு விலகவும் உரிமையையுடையனவாயின.

இவ்வாறு தொடக்கத்தில் கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னபிரிக்கா அயர்லாந்து, நியூபவுண்லாந்து என்னும் ஆறும் பொதுநலவாயத்தில் உறுப்பினராயிருந்தன. இவற்றில் தென்னபிரிக்கா 1934இல் ஒரு சட்டத்தை நிறைவேற்றிப் பிரித்தானியா ஈடுபடும் ஒரு போரில் தான் நடுவு நிலை வகிக்கவும், பிரித்தானியாவின் பகை நாடுகளுக்குப் பொருட்சலு விற்கவும் தனது உரிமையை நிலைநாட்டியது. இது பொதுநலவாய நாடுகளுக்கும். பிரித்தானியாவுக்குமிடையுள்ள புதிய உறவு முறையை நன்கு புலப்படுத்துகிறது. மேலும் 1936இல் எட்டாவது எட்வேட் அரசரின் பதவி துறப்பு பற்றிய பிரச்சனையும், அடுத்த அரசர் பற்றிய பிரச்சனையும் எழுந்தபோது பிரித்தானியா எல்லா ஆணிலப்பத நாடுகளினதும் அங்கிகாரத்துடன் எட்வேட் பதவி துறப்பதையும் ஆரும் ஜோர்ஜ் புதிய அரசராவதையும் ஏற்றுக்கொண்டது.



படம் (13) பிரித்தானியப் பேரரசும் பொதுநலவாயமும்
பிரித்தானிய பொது நலவாயத்தில் உறுப்பினராயுள்ள நாடுகள்
(1) கனடா, (2) அவுஸ்திரேலியா, (3) நியூசீலந்து (4) மோல்ரா
(5) ஜிபிரேல்ரர், (6) சைப்பிறஸ் (7) இந்தியா, (8) இலங்கை,
(9) பாகிஸ்தான், (10) நைஜீரிய இணைப்பு, (11) கானா, (12)
கயானா (13) திரினிடாட், (14) யமேக்கா, (15)சியராலியோன்
(16) தன்சானியா (17) ரெஸ்சியா (18) காம்பியா (19)
உகண்டா (20) பெச்சுவனலந்து (21) கென்யா (22) மொறீசஸ்

(23) மலவி (24) பசுத்தோலாந்து (25) சாம்பியா (26) மலேசியா (27) நியுகினி (கிழக்கு) (28) வடபோர்னியோ (29) ஏடின் (30) பிரித்தானியா.

இதற்குப் பின்னர் 1937இல் சுதந்திர அயர்லாந்து தன்னை ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்து கொண்டு பொதுநல வாயத்தை விட்டு விலகியது, ஆயின் இந்தியா குடியரசாகிய பின்னும் தொடர்ந்து பொதுநலவாயத்திலிருக்க முடிவுசெய்தது. எனவே 1949இல் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் அம்முடிவு உறுதிசெய்யப்பட்ட பின்னர் இந்தியா தொடர்ந்து பொதுநலவாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து வருகிறது இதற்குப் பின்னர் 1961இல் தென்னாபிரிக்கா தனது இனபேதக் கொள்கை பற்றிய பிணக்கினால் பொதுநல வாயத்தைவிட்டு விலகியது. அதேசமயம் 1960-61 காலத்தில் 22 புதிய நாடுகள் சுதந்திரம் பெற்றுப் பொதுநலவாயத்தில் உறுப்பினராகச் சேர்ந்துள்ளன. எனவே இன்று பொதுநல வாயம் பலமிக்க ஒரு சர்வதேச அமைப்பாகவும், பொருளாதாரம், கல்வி, வர்த்தகம் முதலிய விடயங்களில் சர்வதேச கூட்டுறவுக்கும் ஒத்துழைப்புக்கும் பெரிய எடுத்துக்காட்டாகவும் உலக அமைதிக்கு ஓர் அரணாகவும் விளங்கிவருகிறது.

(5) ஜேர்மனியில் சர்வாதிகார ஆட்சி

1919 வேர்சை உடன்படிக்கையின் பின்னர் ஜேர்மனி ஒரு குடியரசாக்கப்பட்டது, வேமார் என்னுமிடத்தைத் தலைநகராகக் கொண்ட அந்தக் குடியரசுக்கு எபேட் என்பவர் தலைவராயிருந்தார். எபேட் தலைமையிலான வேமார் குடியரசு, போரில் சிதறடிக்கப்பட்டிருந்த ஜேர்மனியின் பொருளாதார அமைப்பைப் புனரமைக்கும் முயற்சியில் முதலிற் கவனம் செலுத்தியது. அதன் முதலாவது பிரச்சினை நேசநாடுகளுக்குச் செலுத்த வேண்டிய போர் நட்ட ஈடாகும். போர் நட்டஈடு ஜேர்மனிக்குப் பெரும் பளுவாயிருந்தது. அப்பளுவைத் தாங்க முடியாத நிலையில் 1921இல் அது தான் இறுக்க வேண்டி தொகையைச் செலுத்தாமல் விட்டுவிட்டது. பிரான்ஸ் அச்செயலை ஜேர்மனியின் ஏமாற்று என முடிவு செய்து தனது இராணுவத்தை அனுப்பி ரூர் தொழிற் பிரதேசத்தைக் கைப்பற்றியது. உடன் ஜேர்மனியர் வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டதன் விளைவாக நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடைந்தது. பொருட்களின் விலை

உச்சத்தைத் தொட்டது. இத்தகைய இக்கட்டான நிலையிலிருந்த ஜேர்மனியை நெருக்கடியிலிருந்து சாப்பாற்றிய பெருமை கஸ்ராவ் ஸ்ரெஸ்மான் என்னும் பண்டல நாயகரைச் சாரும். அவர் பிரான்சுடன் போர் நட்டாடு விடயமாக ஒரு இணக்கத்துக்கு வந்ததோடு 1925இல் நேசநாடுகளுடன் லொக்கார்னோ உடன்படிக்கையையும் செய்து கொண்டார். அவ்வுடன்படிக்கை நாட்டின் புதிய எல்லைகளை உறுதிப்படுத்தியது; அன்றியும் புதிய ஒரு நாணயத்தைப் புழக்கத்துக்குக் கொண்டுவந்து ஜேர்மனியின் நாணயப் பிரச்சினையையும் அவர் தீர்த்தார். இதன் பின் 1926இல் ஜேர்மனி சர்வதேச சங்கத்தில் ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு ஜேர்மனி தனது உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட பின்னர் நாட்டில் தொழில்களை விருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தியது. அப்போது தொழில்களில் முதலீடு செய்வதற்கு அமெரிக்க டாலரும் பெருந் தொகையாகக் கிடைத்ததனால் ஜேர்மனியின் தொழில்கள் அபரிமித வளர்ச்சியடைந்தன. இதன் விளைவாக அடுத்த ஆண்டுகளுக்கிடையில் ஜேர்மனி டொலர்நாணயத் துறையில் ஓர் அரும் பெரும் சாதனையை நிலைநாட்டியது. ஆயின் அந்நிலைமை நீடிக்கவில்லை. ஏனெனில் 1929இல் ஏற்பட்ட சர்வதேச டொலர்நாணய நெருக்கடி ஜேர்மனின் டொலர்நாணயச் சட்டுக்கோட்டைப் படாரெனத் தாக்கியதனால் தொழில்களின் வளர்ச்சி தடைப்பட்டது. பல ஆலைகள் மூடப்பட்டன. வேலையின்மை அதிகரித்தது. பசியின் வரிப்புலியைத் தாங்க முடியாது வாடினர் அந்நாட்டில் குடியரசு முறையான ஆட்சியில் நம்பிக்கையிழந்த மக்களில் சிலர் பொதுவுடைமை அரசை விரும்பினர். அதே சமயம் வேறு சிலர் சர்வாதிகார ஆட்சி முறையைத் தாபிக்க விரும்பினர். இவர்களே நாசிகள். இவர்களின் தலைவனே ஹிட்லர். ஹிட்லர் ஒரு கடுங்க அதிகாரியின் மகனாக 1889இல் ஆஸ்திரியாவில் பிறந்தான். அவன் இளமையில் கல்வி கற்கும் காலத்தில் ஜேர்மனிய இனத்தவர் அனைவரையும் உள்ளடக்கிய பரந்த ஜேர்மன் இராச்சியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்னும் எண்ணம் அவன் மனதில் குடிகொண்டது: ஹிட்லர், சில காலம் வியன்னாவிற் கழித்த பின்னர் முதலாம் உலகப் போரின்போது ஜேர்மனியின் இராணுவத்தில் சேர்ந்து 'கோப்பறல்' ஆகப் பதவி உயர்வு பெற்றான். பின் போர் முடிவில் அவன் இராணுவத்தை விட்டு விலகி 1919 இல் ஜேர்மன் தேசிய தொழிலாளர் கட்சியை நிறுவினான். அது 'நாசிக் கட்சி' எனச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டது. அக்கட்சி

யின் உதவியுடன் ஹிட்லர் 1923இல் ஜேர்மனியின் ஆட்சியைக் கவிழ்க்க முயன்றபோது அதில் தோல்வியடைந்தான். இதனால் அவன் சிறையிலிடப்பட்டான். இவ்வாறு சிறையிலிருந்த காலத்தில் அவன் 'எனது போராட்டம்' எனும் நூலை எழுதினான். அது நாசிகக் கொள்கைகளின் பைபிளாக அமைந்தது. இதன் பின் சிறையிலிருந்து மீண்ட காலம் முதல் ஹிட்லர் தனது கட்சியின் பலத்தைக்கட்டியெழுப்பி 1933இல் ஒரு கூட்டரசாங்கத்தில் மண்டல நாயகனாக நியமனம் பெற்று, மந்திரிசபையின் தலைவனானான். இவ்வாறு மந்திரிசபையில் இடம் பிடித்துக் கொண்ட ஹிட்லர் எப்படியாவது அரசாங்கத்தில் பெரும்பான்மையைப் பலம் பெற்று விடலாம் என்ற நம்பிக்கையில் புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்குக் குடியரசுத் தலைவரைத் தூண்டினான். இதன்படி 1932இல் இடம்பெற்ற தேர்தலில் ஹிட்லர் பெரும்பான்மையைப் பெறவில்லை. ஆயினும் அவனது கட்சியே அதிக பலமுள்ள கட்சியாயிருந்தபடியால் அவன் மீண்டும் மண்டலநாயகனாகித் தனது சாதுரியத்தினால், 'அதிகாரமளிக்கும் சட்டம்' ஒன்றை நிறைவேற்றி அதன் மூலம் தானே சட்டமியற்றக் கூடிய அதிகாரத்தைப் பெற்றான். இவ்வாறு ஹிட்லர் அரசாங்கத்தில் தனது பிடியைப் பலப்படுத்தி வரும் வேளை 1934இல் குடியரசுத் தலைவர் ஹின்டன்பேர்க் இறந்தார். உடன் ஹிட்லர் தன்னை குடியரசின் தலைவராகவும் ஆக்கிக்கொண்டு சர்வாதிகாரம் செலுத்தத் தொடங்கினான்.

ஹிட்லர் பின்பற்றிய 'நாசிசம்' முசோலியின் பாசிசத்துக்கு ஒப்பானது. ஜேர்மனியர் ஆரிய வம்சத்தவரென்றும் அவர்கள் ஆளப் பிறந்தவர்களென்றும், யூதர்கள், நிலாவியர் முதலியவர்களின் இரத்தக் கலப்பினால் ஜேர்மனியரின் 'தூய்மை' குன்றிவிட்டதென்றும், ஜேர்மனி தனது அயல் நாடுகளை அகப்படுத்தியும் இழக்க நேர்ந்த விளைநிலங்களை மீட்டும் தனது குடிக்குத் தேவையான 'வாழ்விடத்தை, பெறவேண்டுமென்றும் சனநாயகம் ஒரு கேலிக்கூத்து என்றும், போர் புனிதமானது எனவும் அவனது போதனைகள் கூறின. ஹிட்லர், டாக்டர் கொபெல் என்பவரின் துணையுடன் நாசிசக் கொள்கைகளைப் பரப்பினான். கவர்ச்சிகரமான மேடைப் பேச்சுக்கள், பத்திரிகைச் செய்திகள் மூலமும், சுவாஸ்திகாச் சின்னங்கள், அடையாளங்கள், ஆடம்பரமான அணிவகுப்பு முதலியவற்றின் மூலமும் அவள் மக்களின் மனதைத் திருப்பினான். முசோலினியைப் பின்பற்றி ஹிட்லர் தன்னை பியூறர் எனக் குறிப்பிட்டுக் கொண்டான். அன்றியும் இவனும்

களுக்கும், பெண்களுக்கும் எனத் தனியான இயக்கங்களையும் நிறுவினான். ஹிட்லர், நாட்டிலிருந்த தொழிற் சங்கங்களை நசுக்கிவிட்டு, நாசிக் கட்சியின் கீழ் தொழிலாளர் முன்னணி ஒன்றை அமைத்தான். நாசிசக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட கல்வி முறையைப் புகுத்தி, வேறு இனங்களின் வெறுப்பை வளர்த்தான். அதேசமயம் ஜெர்மனியின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதிலும், போர் ஒன்று ஏற்படும் காலத்தில் நாடு தன்னைப் பேணக்கூடிய வகையில், அதன் மூல வளங்களை விருத்தி செய்வதிலும் ஹிட்லர் அதிக கவனம் செலுத்தினான்.

இவ்வாறு நாட்டைப் பலப்படுத்துவதிலும், நாட்டை நாசிய மயமாக்கிய பின்; படைகளைப் புனரமைப்பதிலும் போர்க்கருவிகளின் உற்பத்தியைப் பெருக்குவதிலும் ஹிட்லர் கவனம் செலுத்தினான். இதன்மேல் அவன் ஆக்கிரமிப்புப் பாதையில் அடியெடுத்து வைத்தான். அது இரண்டாம் உலகப் போருக்கு அடிகோலியது. அவ்விபரங்களை அடுத்த அத்தியாயத்திற் காண்போம்.

வினாக்கள்

1. இரசியாவின் புரட்சிக்கு அடிகோலிய சம்பவங்களை விபரிக்குக.
2. இரசியாவில் லெனினை எதிர்நோக்கிய பிரச்சினைகள் யாவை? அவற்றை அவன் எவ்வாறு தீர்த்தான்?
3. இத்தாலியில் முசோலினி சர்வாதிகாரியாகிய வரலாற்றை எழுதுக.
4. முஸ்தாபா கமால் துருக்கிக்கு ஆற்றிய சேவைகளை மதிப்பிடுக.
5. பிரித்தானியா பேரரசு பொதுநலவாயமாக உருவாகிய வரலாற்றை எழுதுக.
6. ஜெர்மனியில் ஹிட்லர் எழுச்சி பெற உதவிய உள்நாட்டு நிலைமைகளை விளக்குக.
7. வரலாற்றுக் குறிப்பெழுதுக:-
(1) லெனின். (2) வெல்ற்மின்ஸ்டர் சட்டம், (3) முஸ்தாபா கமால், (4) முசோலினி. (5) நாசிசம் (6) பாசிசம், (7) கார்ல்மார்க்ஸ்

அத்தியாயம் 25

இரண்டாம் உலகப்போர்

முதலாம் உலகப்போர் முடிவில் சமாதான உடன்படிக்கைகள் செய்யப்பட்டபின்னர் சரியாக 20 ஆண்டுகள் கழிவதற்குள் இரண்டாம் உலகப்போராகிய இருள் உலகை மூடியது. அப்போர் அவ்வளவு விரைவில் ஆரம்பமாகியதிலிருந்து, 1919–20இல் செய்யப்பட்ட சமாதான உடன்படிக்கைகளில் ஏதோ குறைபாடு உண்டென்பதையும், உலக அமைதியைப் பேணுவதில் சர்வதேச சங்கம் தோல்வியடைந்தது என்பதையும் ஒருவர் உய்த்துணரலாம். மேற்கூறப்பட்ட இரு காரணிகளும் இரண்டாம் உலகப் போர் ஏற்படுதற்குக் கணிசமான அளவு உதவின என்பதை மறுக்க முடியாது. அதேசமயம், 1929ஆம் ஆண்டுப் பொருளாதார நெருக்கடி நாடுகளிடை தூண்டிவிட்ட தேசிய உணர்ச்சியும், அதன் பக்க விளைவாக உருவாகிய 'ஆக்கிரமிப்பு' மனப்பான்மையும் போரைத் தூண்டுவதற்குப் பெருமளவு உதவின என்பதையும் ஹிட்லரின் 'ஆக்கிரமிப்பு'ச் செயல்களே போரின் உடன் காரணமாயிற்று என்பதையும் நாம் மறுக்கலாகாது. இனி இவற்றைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

1919–20 சமாதான உடன்படிக்கைகளின் குறைபாடுகள்.

முதலாம் உலகப் போர் முடிவில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் பல குறைபாடுகள் காணப்பட்டன. முதலாவதாக ஜேர்மனியுடன் செய்துகொள்ளப்பட்ட வேர்சை உடன்படிக்கை உலகப்போரைத் தூண்டிய குற்றத்தை அதன் மீது சுமத்தியதோடு அதன் பேல் ஒட்டிய நீர்க்குப் ஒரு உடன் படிக்கைபோல் அமைந்தது. அதுஜேர்மனியால் தாங்கிக்கொள்ள முடியாத பெருந்தொகையைப் போர் நட்டஈடாக விதித்தது. இதன்படி ஏறத்தாழ 600 கோடிபவுண் வரை ஜேர்மனி நட்டஈடாகக் கொடுக்க வேண்டியிருந்தது. இரண்டாவதாக ஜேர்மனியின் குடியேற்ற நாடுகள் அதனிடமிருந்து பறிக்கப்பட்டதும் அதற்கு ஒரு பேரிடியாயிற்று. மூன்றாவதாக ஜேர்மனியின் நிலப்பரப்பில் பல துண்டுகள் போலந்து, செக்கோசிலோவாக்கியா, பிரான்ஸ் முதலிய நாடுகளிடை பங்கிடப்பட்டதும் அல்சேஸ் - லொறேன் மாகாணம் பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டதும் அதற்கு பலத்த சட்டை ஏற்படுத்தியது. மேற்கூறப்பட்ட

ஒழுங்குகளின் விளைவாக ஜேர்மனி 6 இலட்சம் மக்களை இழந்தது. அன்றியும் ஜேர்மனி சமாதான உடன்படிக்கை பற்றிய மாநாட்டில் பங்குபற்றாதபடியால் அச்சமாதான உடன்படிக்கை தன்மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டது எனவும் அது கருதியது. இக்காரணங்களின் விளைவாக, ஜேர்மனியின் மனத்தில் 'பழிவாங்கும்' எண்ணம் வேரோடியது. அன்றியும் சமாதான உடன்படிக்கைகள் சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினையைச் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சரியான முறையில் தீர்த்து வைக்கவில்லை. போரின் பின் உருவாக்கப்பட்ட புதிய நாடுகளின் எல்லைகள் வகுக்கும்போது அரசியல், பொருளாதார, இராணுவகாரிக்கைகளுக்கும் மதிப்பளிக்கப்பட்டபடியாலும் சில இடங்களில் சிறுபான்மையினரைப் பிரித்தெடுக்க முடியாதபடியாலும், சில நாடுகளில் சிறுபான்மை இனத்தவர் பிரச்சினை தலைதூக்கியது. குறிப்பாக, செக்கோசிலோவாக்கியாவிலிருந்த ஜேர்மனியரின் பிரச்சினை ஹிட்லரின் ஆகிரமிப்புக்கு ஒரு சாட்டாக மாறியது எனவே வேர்சை உடன்படிக்கையில் பிறகாலத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பின் ஜேர்மனியின் வரலாறு வேறுவிதமாயிருந்திருக்கும்.

1929ம் ஆண்டு பொருளாதார நெருக்கடி

1920-29 காலத்தில் சர்வதேசப் பொருளாதாரம் பலப்பட்டிருந்தது. அக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளினதும், ஐக்கிய அமெரிக்காவிலும் உற்பத்தி பன்மடங்கு அதிகரித்ததன் விளைவாகப் பல பிரச்சினைகள் உண்டாயின. அவை (1) நுகர்ச்சியின் அளவுக்கு அதிகமாகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டமை, (2) ஒவ்வொரு நாடும் தனது உற்பத்திப் பொருளைப் பிறநாட்டுப் பொருட்களின் போட்டியிலிருந்து காப்பதற்காக இறக்குமதி வரியை அதிகரித்தும் 'கோட்டா' முறையை ஏற்படுத்தியும், பலவாறு சர்வதேச வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தியமை. (3) நாடுகளின் நாணயங்களின் மதிப்பில் தளம்பல் ஏற்பட்டமை முதலியனவாகும். இந்நிலைமைகளின் கீழ், உலகின் பொருளாதாரக் கட்டுகோப்பு பாதிக்கப்பட்டிருந்த சமயம் அமெரிக்காவில் உண்டாகிய 'பங்குச் சந்தை நெருக்கடி' உலகில் ஒரு பெரும் பொருளாதார நெருக்கடியை உருவாக்கியது. 1921-28 காலத்தில் அமெரிக்காவில் தொழில்கள் அபரிமித வளர்ச்சியடைந்தன. இதனால் தொழில்களில் முதலீடு செய்தவர்கள் அதிக இலாபம் பெற்றனர். எனவே தொழில்களில் முதலீடு செய்வதற்குப் பங்குகளை வாங்குவதிலும் பலத்த போட்டியிருந்தது. அவ்வேளை பங்குகளை வாங்கிப் பிறருக்கு

இலாபத்துடன் விற்கும் தரகர்களும். பேரம் பேசுபவர்களும், பங்குகளின் விலையை உயர்த்திவிட்டனர். எனவே பங்குகளை அதிக விலை கொடுத்தும் வாங்குவதில் மக்கள் ஈடுபட்டிருந்த வேளை 1928இல் பங்குகளின் விலை வீழ்ச்சியடைந்தது. உடன் பீதியுற்ற பலர் தாம் வாங்கிய பங்குகளைக் குறைந்த விலைக்கும் விற்கத் தொடங்கினர். இதன் விளைவாகப் பெருந் தொகையானோர் நட்டமடைந்தனர். அவர்களிற் பலர் கடன் பணத்தில் பங்குகளை வாங்கியிருந்தபடியால் தமது கடனை இறுக்க வழி தெரியாது தவித்தனர். இதன் விளைவாக, நாடெங்கும் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டது. அதே சமயம் அமெரிக்க 'டாலர்' வெளிநாடுகளுக்குச் செல்வது நின்றுவிட்டபடியாலும் அமெரிக்க சந்தை வெளிநாட்டுப் பொருட்களுக்கு மூடப்பட்ட தனாலும், ஐரோப்பாவிலும், பிற இடங்களிலும் தொழில்கள் தடைப்பட்டன. பல ஆலைகள் மூடப்பட்டன. பெருந்தொகையானோர் வேலையிழந்தனர். அதேசமயம் காட்டு வரிகளின் மூலமும் வர்த்தகச் சட்டுப்பாடுகளின் மூலமும் ஒவ்வொரு நாடும் தனது உற்பத்திப்பொருட்களைப் பாதுகாக்க முனைந்தபடியால் சர்வதேச வர்த்தகம் வீழ்ச்சியடைந்ததோடு தொழில்களில் முதலீடு செய்யக் கடன் பெறுதலும் சடுதியாயிற்று. இப்பிரச்சினைகள் மூலப்பொருள்களைக் குறைந்த நாடுகளை மிகக் கடுமையாகப் பாதித்தன. ஜப்பான் அவற்றில் ஒன்று. அது பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாத நிலையில் தனது தொழிலுக்கு இன்றியமையாத கனிப்பொருட்களைப் பெறுவதற்கும் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தையைப் பெறுவதற்கும் மஞ்சூரியாவை அகப்படுத்துவதே சிறந்த வழி எனத் துணிந்து 1931ல் அதன் மீது படையெடுத்து அனைத்தையும் கைப்பற்றியது. அத்துடன் சீனாவின் தென்பகுதிகளிலும் தனது செல்வாக்கை நிலை நாட்டுவதற்காகப் பெரும் போரிட்டது. ஜப்பானைப் போலவே ஜேர்மனியும் 1929 நெருக்கடியினால் பாதிக்கப்பட்டது. ஆயின் அங்கு வேலையற்றவர்களில் பெருந்தொகையானோர் ஆயுத உற்பத்திச் சாலைகளிலும் இராணுவத்திலும் சேர்க்கப்பட்டனர். இவற்றின் விளைவாக ஆயுதஉற்பத்தி அதிகரித்ததோடு இராணுவமும் விரிவடைந்தது. இவை அடுத்த போரின் ஆரம்ப நடவடிக்கைகளாயின.

சர்வதேச சங்கத்தின் தோல்வி:- சர்வதேச சங்கத்தின் தோல்விபற்றி முன்னரே விளக்கப்பட்டது. ஈண்டு அதை மீண்டும் குறிப்பிடுதல் பொருத்தமானது. சர்வதேச சங்கம் தொடக்கத்தில் சிறிய நாடுகளிடை ஏற்பட்ட சில பிணக்குகளைத் தீர்த்து வைத்த போதிலும் பெரிய நாடுகள் தொடர்பான பிணக்கு

களைத் தீர்ப்பதில் படுதோல்வியடைந்தது. சர்வதேச சங்கத்தின் நிரந்தர உறுப்பினரில் ஒன்றான யப்பானே முதன் முதல் அதன் விதிகளை மீறி மஞ்சூரியாவை ஆக்கிரமித்தது. அப்போது இஞ்ஞ அதுபற்றிச் சர்வதேச சங்கத்துக்கு முறையிட்டபோது அது விற்றன் பிரபு தலைமையில் ஒரு குழுவை நியமித்து நீலிலைமையை ஆராயும்படி பணித்ததுடன் இதற்குள்யப்பான் மஞ்சூரியாவைத் தனதுநிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்து விட்டது. இதன்பின் யப்பான்காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி 1935 இல் இத்தாலி அபிசீனியாவைத் தாக்கி அகப்படுத்தியபோது சர்வதேச சங்கம் பொருளாதாரத் தடைகளை விதித்தபோதிலும், அவை அரை மனதில் மேற்கொள்ளப்பட்டதனால் எப்பயனும் விளைய வில்லை, மேலும் படைக்குறைப்பு விடயத்திலும் சர்வதேச சங்கம் தோல்வியடைந்தது; படைக்குறைப்பு தொடர்பாகப் பல மாநாடுகள் கூட்டப்பட்டபோதிலும் பிரான்ஸ் தனது படைகளைக் குறைக்க மறுத்ததனால் கிட்லர் தனது நாட்டுப் படைகளைக் குறைக்கச் சம்மதிக்கவில்லை. இதன் விளைவாகப் படைப் பெருக்கப்போட்டி மீண்டும் ஆரம்பித்தது. அது போருக்கு முன்னோடியாயிருந்தது என்பதைக் கூறத் தேவை யில்லை.

ஹிட்லரின் ஆக்கிரமிப்புச் செயல்கள்: கிட்லர் 1933ல் பதவிக்கு வந்த காலம் முதல் நாசிசக் கொள்கைகளை நாட்டிற் புகுத்தியதுடன் நில்லாது 'எனது போராட்டம்' என்னும் நூலில் தன்னால் வெளியிடப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் ஒரு புதிய ஜேர்மனியை உருவாக்க முயன்றான். ஜேர்மனியைப் பலம் மிக்க ஒரு நாடாக ஆக்குவதும், அது இழந்த பிரதேசங்களைக் கைப்பற்றுவதும் கிழக்கு நோக்கி அதை விரிவுபடுத்தச் செய்வதும் ஆயிரம் ஆண்டுகள் ஐரோப்பாவில் நிலைக்கக் கூடிய முதன்மையான ஒரு ஜேர்மன் பேரரசை நிறுவுவதும் அவனது நோக்கங்களாயிருந்தன. எனவே தனது நோக்கங்களை நிறைவேற்றுவதாயின் போர் தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட கிட்லர் அதற்குத் தனது நாட்டை ஆயத்தப்படுத்துவதில் முனைந்தான். 1932 இல் படைக்குறைப்பு மாநாட்டிலிருந்தும், 1933 இல் சர்வதேச சங்கத்திலிருந்தும் ஜேர்மனி வெளியேறியமை கிட்லரின் உள்நோக்கங்களை நன்கு தெளிவாக்குகிறது. ஆயினும் கிட்லர் தான் ஓர் சமாதானவாதி எனக் காட்டுவதற்காக, 1934இல் போலந்துடன் 10 ஆண்டு அணுக்கிரமிப்பு ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டான். இது

வெறும் கண்துடைப்பு என்பது 1939இல் வெளியிடப்பட்டது. இதன்மேல் ஹிட்லர், ஜெர்மனியைப் படைபூண்ட நாடாக ஆக்கும் முயற்சியில் வெளிப்படையாக ஈடுபடத் தொடங்கினான். 1935இல் கட்டாய இராணுவ சேவை அமுல் செய்யப்பட்டு முப்படைகளையும் பலப்படுத்தும் வேலை முழுமூச்சாக மேற் கொள்ளப்பட்டது.

இது இவ்வாறாக, ஸ்பெயினில் இடம்பெற்ற சம்பவங்கள் ஹிட்லரையும், முசோலினியையும் ஒரு அணியின் கீழ்க்கொண்டு வந்தன அங்கு 1923இல் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் பின்னர் குறிப்பான நிலை காணப்பட்டது. பின் 1931இல் ஒரு குடியரசு நாடாக்கப்பட்டது. ஆயினும் மொரொக்கோவிலிருந்த ஸ்பெயின் நாட்டுத் தளபதியாகிய பிரான்கோ 1936இல் தனது படைகளுடன் ஸ்பெயினில் இறங்கியவுடன் குடியரசு வாதிகளுக்கும் அவருக்குமிடையில் ஒரு உள்நாட்டுப் போர் தொடங்கியது, அப்போரில் பங்குகொள்ளாது பிரான்சும் பிரித்தானியாவும் நடுநிலைமை வகித்தன. அதேசமயம் இரசிய குடியரசுவாதிகளை ஆதரித்தது, ஆனால் ஹிட்லரும், முசோலினியும் பிரான்கோவை ஆதரித்துப் படையுதவியும் செய்தனர். எனவே ஸ்பெயின் விடயமாக இத்தாலிக்கும், ஜேர்மனிக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கம் 1936 ஒக்ரோபரில் ரோம்—பேளின் அச்சு உருவாதற்கு வழிவகுத்தது இதன் மேல் வெளிநாட்டு விடயங்களில் ஒன்றுபட்டுச் செயலாற்ற அவை ஒருப்பட்டன. இதன் பின் ஹிட்லர் 1936 மார்ச்சில், றைன் இராணுவ ஆன்யப் பிரதேசத்திற்குத் தனது படைகளை இட்டுச் சென்று அப்பிரதேசத்தின் மேற்கு எல்லைகளில் படைகளை நிறுத்தினான். அல்வேளை பிரித்தானியாவும் பிரான்சும் அச்செயல் ஜேர்மனியின் உள்நாட்டுவிடயம் என வாளா விருந்துவிட்டன இதனால் துணிச்சல் மேலிட்ட ஹிட்லர் அடுத்து ஆஸ்திரியாவைக் கைப்பற்றத் திட்டமிட்டான். ஆஸ்திரியாவில் ஜேர்மன் இனத்தவர் பெருந்தொகையாக வசித்தமையும்; அவர்கள் பல தொல்லைகளுக்குட்பட்டுவருவதும் ஆக்கிரமிப்புக்குச் சாட்டாகின. எனவே 1938 மார்ச்சில் ஹிட்லர் ஆஸ்திரியாவை அகப்படுத்தி ஜேர்மனியுடன் இணைத்துக்கொண்டான் ஜேர்மனியின் அடுத்த இரை செக்கோசிலோவாக்கியாவாதம். அதைப்பிடிக்குமுன் செக்கோசிலோவாக்கியாவின் மேற்குப் பிரதேசமாகிய சுடேற்றன் எல்லைப் புறத்தில் படைகளை நிறுத்தி அப்பிரதேசத்தைத் தனக்குக் கொடுக்குமாறு செக்கோசிலோவாக்கியாவைக் கோரினான் அப்போது உலகப்போர் மூளக்கூடிய ஆபத்தான நிலையிலிருந்தது. அதைக்கண்ட பிரித்தானிய பிரதமர் நெவில்சம்பர்லேன்

ஹிட்லரை நேரிற் சந்தித்து சுடேற்றன்லந்து விடயமாகப் பேச்சுவார்த்தை நடத்தினான். பின், பிரான்சுடன் கலந்தாலோசித்துவிட்டு ஐரோப்பாலில் அமைதியைப் பேணுவதற்காகச் சுடேற்றன்லாந்தை ஜேர்மனியிடம் விட்டுவிடுமாறு செக்கோசிலோவாக்கியாவுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதற்குச் செக்கோசிலோவாக்கியா இணங்கு வேண்டியதாயிற்று இதன்படி சுடேற்றன்வந்து ஐந்து நிலைகளில் ஜேர்மனியிடம் கைமாறவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. எனவே சுடேற்றன்லந்து கைபாறும் விடயத்தைக் கவனிப்பதற்காகச் சம்பர்லேன் மீண்டும் ஜேர்மனிக்கு வந்தார். அப்போது கிட்லர் தனது படைகளின் உதவியுடனேயே சுடேற்றன்லந்தைக் கைப்பற்றவிருட்டனதக் கண்டனுடன் அதையிட்டுத் தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார் அதற்குப் பதிலளித்த கிட்லர், செக்கோசிலோவாக்கியாவின் நிலைமை சகிக்கமுடியாததாகி விட்டதாகக் கூறினான். இதன் பின் நாடு திருப்பிய சம்பர்லேன் படைகளைத் திரட்ட உத்தரவு பிறப்பித்தார். உடன், பிரான்சும் அவ்விதமே செய்தது. அதையறிந்த கிட்லர் தனது ஆக்கிரமிப்புத் திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டுச் சுடேற்றன்லந்து விடயத்தைத் தீர்ப்பதற்கு மியூனிச்சில் ஒரு மாநாட்டைக் கூட்டும்படி முசோலினிக்குச் சம்மதித்தான். இவ்வாறுகூட்டப்பட்ட மாநாட்டில் கிட்லர், முசோலினி, சம்பர்லேன், தலாடியர் என்னும் நால்வரும் பங்குபற்றினர். அம்மாநாட்டில் சுடேற்றன்லந்தை இலகுவாக்கத்தில் ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கு கிட்லர் இசைந்தான். அதன் பின் 1938 ஒக்ரோபரில் கிட்லர் சுடேற்றன்லந்தை ஜேர்மனியுடன் இணைத்துவிட்டான் 1939 மார்ச் அளவில் செக்கோசிலோவாக்கியா முழுவதையுமே கைப்பற்றி விட்டான். இது அவனது ஆக்கிரமிப்பு மனப்பான்மையை அகில உலகுக்கும் வெளிப்படுத்தியது,

இதற்கு அடுத்த ஆக்கிரமிப்புச் செயல் இத்தாலியால் மேற் கொள்ளம்பட்டது. அது ஜேர்மனியின் அடிச்சுவடடைப் பின்பற்றி 1939இல் அல்பேனியாவை அசப்படுத்தியது. அச்செயல் சர்வதேச நெருக்கடியை அதிகரித்திருந்தது. அதே சமயம் கிட்லர் செக்கோசிலோவாக்கியாவைக் கைப்பற்றிய செயல் நேசநாடுகளிடத்தில் பீதியை ஏற்படுத்தியபடியால் அவை ஆக்கிரமிப்பை முறியடிக்கும் நோக்கத்துடன் இரசியாவையும் தம்பக்கமாகத் திருப்புவதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்தின. ஆயின் அதனால் உடனடியான பலன் கிடைக்கவில்லை. அவ்வேளை கிட்லர் போலந்தைக் கைப்பற்றத் திட்டமிட்டு அதன் பால்டிக் நுழை வழிக்கு ஊடாக ஒரு புகையிர

தப் பாதையை அமைப்பதற்கு அனுமதியளிக்குமாறு போலந் தைக் கேட்டான், பின்னர் டான்சிக் துறையைத் தனக்குத் திருப்பித்தருமாறு கோரினான். அத்துடன் பிரான்ஸ், பிரித் தானியா ஆகியன ஆக்கிரமிப்பு வேளையில் போலந்துக்கு உதவி யளிப்பதாக முன்னர் கொடுத்தவாக்குறுதியைச் சுட்டிக்காட் டித் தான் அதனுடன் 1934இல் செய்து கொண்ட அனாக்கிரமிப்பு ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து விட்டு முசோலினியுடன் 1939 மே மாதத்தில் ஒரு இராணுவ ஒப்பந்தத்தைச் செய்து கொண் டான். இதன் பின், இரசியாவுடன் மறைமுகமான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு, அகில உலகும் அதிசயிக்கத்தக்க வகையில் அதனுடன் ஓர் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்து கொண்டான். இதன்மேல் கிட்லரின் துணிவு அதிகரித்தது ஏனெனில் போர் ஏற்பட்டாலும் மேற்கு முனையில் மட்டுமே ஜேர்மனி போரிட வேண்டியிருக்குமென்பது இப்பொழுது திட மாகி விட்டது, எனவே தனது கோரிக்கைகள் பற்றிப் போலந் தின் தூதுவருடன் அரைமனதுடன் மாநாடு ஒன்றில் பங்கு பற்றிய பின் 1939 செப்ரம்பர் முதலாம் நாள் கிட்லர் போலந்தின் மீது படையெடுத்தான். உடன் போலந்தின் உதவிக்கு வரமுடிவுசெய்த பிரான்சும் பிரித்தானியாவும், போரை நிறுத்துமாறு கிட்லருக்கு ஒரு இறுதி எச்சரிக்கையை விடுத்தபோது எதுவித பயனும் விளையாததைக்கண்டு ஆகஸ்ட் 3இல் போரிற் குதித்தன. இவ்வாறு இரண்டாம் உலகப் போர் தொடங்கியது.

போரின் போக்கு

இரண்டாம் உலகப் போர் முதலாவது போரைவிட மிக உக்கிரமான முறையில் நடத்தப்பட்டது. இப்போரில் விமானப் படை அதிக முக்கியத்துவம் பெற்றது. மனித வரலாற்றிலேயே இத்தகைய கொடிய போர் என்றுவது இடம்பெறவில்லை இதில் இறந்தவர்கள். காயப்பட்டோர் ஆகியோரின் எண்ணிக்கை யைக் கோடிக்கணக்கிலேயே மதிப்பிடலாம். இனி, போரின் போக்கை நோக்குவோம். கிட்லர் போலந்தின் மீது முழு அளவிலான தாக்குதலை மேற்கொண்ட போது, இரசியாவும் மறு முனையிலிருந்து போலந்தைத் தாக்கி அதன் ஒரு பகுதி யைப் பிடித்துக்கொண்டதனால போலந்து ஜேர்மனிக்கும் இரசி யாவுக்குமிடையே பங்கிடப் பட்டது. இதைத் தொடர்ந்து இரசியா, பின்லாந்தைத் தாக்க, கிட்லர் நோர்வே, டென் மார்க் ஆகியவற்றைக் கைப்பற்றினான். இவ்வாறு போர் தொடக்க நிலையில் ஜேர்மனிக்குச் சாதகமாயிருந்தவேளை

இங்கிலாந்தில் சம்பர்லேன் பிரதமர் பதவியிலிருந்து விலக வின்ஸ்ரன் சேர்ச்சில் போரை நடத்தும் பொறுப்பை ஏற்றார். இது இவ்வாறாக 1940 முற்பகுதியில் ஜேர்மனியின் படைகள் ஒல்லாந்து, பெல்சியம், பிரான்ஸ், ஆகியவற்றைக் கைப்பற்றியிருந்தன. பிரான்ஸ் யூன் 22இல் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டது. இதற்கிடையில் ஆங்கிலக் கால்வாயை அண்மித்த ஜேர்மன் படைகள் 'டங்கேர்க்' என்னுமிடத்தில் பிரித்தானிய, பிரான்சுப்படைகளைச் சுற்றி வளைத்தபோது அவை அவசர அவசரமாகப் படகுகளில் இங்கிலாந்துக்கு வெளியேற்றப்பட்டன. அதன்மேல் பிரித்தானியா மீது படையெடுக்க ஜேர்மனி திட்டமிட்டு 'Luftwaffe' என்னும் தனது விமானப் படையையும், நெருக்கற் குண்டுகளையும் ஏவியது. ஆயின் பிரித்தானியாவின் விமானப்படையின் தீரத்தினால் ஜேர்மனியின் படையெடுப்பு கைவிடப்பட்டது.

இது இவ்வாறாக, 1940 இல் இத்தாலியும், ஜேர்மனியின் சார்பில் போரிலிறங்கி ஆபிரிக்காவிலிருந்த பிரித்தானிய குடியேற்றங்களைத் தாக்கியது. ஆனால் அது அப்பகுதியில் தோல்வியடைந்ததோடு ஆபிரிக்காவிலிருந்த தனது குடியேற்றங்களையும் இழந்தது. ஆயினும் மொன்ரி தலைமையில் ஒரு பிரித்தானியப்படை ஐரோப்பாவைத் தோற்கடித்தது. அதைத் தொடர்ந்து நேசநாடுகளின் படைகள் ஆபிரிக்காவிலிருந்து அச்சு வல்லரசுகளின் படைகளை அகற்றிவிட்டன. ஆபிரிக்க நிலை இவ்வாறிருக்க 1941 யூனில் ஜேர்மனி எதிர்பாராத விதமாக இரசியா மீது படையெடுத்து மாஸ்கோவைக் கைப்பற்றிவிட்டு ஸ்ராலின்கிராட்டை நோக்கி முன்னேறியிருந்தது. ஆயினும் அங்கு இடம் பெற்ற போரில் ஜேர்மனியின் படைகள் தோற்கடிக்கப்பட்டதனால் அவை பின்வாங்கத் தொடங்கின.

ஐரோப்பிய நிலைமை இவ்வாறிருக்க, யப்பான் 1941இல் பேர்ல் ஹாபரில் தங்கியிருந்த ஐக்கிய அமெரிக்காவின் கப்பற் படைமீது குண்டுத்தாக்குதலை மேற்கொண்டு போரில் குதித்தது. அதன்மேல் யப்பான் மின்னல் வேகத்தில் பிலிப்பைன் தீவுகள், இந்தோசீனம், சிலக்கிந்திய தீவுகள், பர்மா, மலாயா ஆகியவற்றைக் கைப்பற்றி இந்தியாவை நோக்கிமுன்னேறியது. அவ்வேளை ஐக்கிய அமெரிக்காவின் கடற்படை யப்பானியருடன்

கடும்போர் நடத்திற்று. அது நியூகினியைக் கைப்பற்றவிடாது யப்பானிய படையைத் தடுத்தது இவ்வாறு ஐக்கிய அமெரிக்கா நேசநாடுகள் சார்பில் போரில் குதித்த பின்னர் போரில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. 1943யூனில் ஆங்கிலேய - அமெரிக்கப் படைகள் சிசிலியைக் கைப்பற்றி இத்தாலியின் மீது தாக்கு தல் மேற்கொண்டன. அந்நிலையில் முசோலினி பதவியிலிருந்து நீக்கப்பட்டுப் பொடோலியோ என்பவன் பிரதம மத்திரியாக்கப் பட்டரன். அவன் நேச நாடுகளுடன் சமாதானம் செய்துகொண் டான் இதன் பின் 1944 யூனில் நேசநாடுகளின் படைகள் ஐசன்ஹோவர் தலைமையில் பிரான்சில் இறங்கி அதை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டன. ஆகஸ்டில் பாரிஸ் கைப்பற்றப்பட்டது அதைத் தொடர்ந்து 1945 மார்ச்சில் நேசநாடுகளின் படை கள் றைன் நதியைக் கடந்து ஜேர்மனிக்குட் பிரவேசித்தன, அதே வேளை இரசியப் படைகளும். போலந்து. பால்டிக் நாடு கள் ஆகியவற்றைக் கைப்பற்றிவிட்டு ஜேர்மனிக்குள் நுழைந் திருந்தன. எல்ம் நதிக் கரையில் இவ்விரு படைகளும் சந்தித் தன அதன் பின் பேளின் முற்றுகையிடப்பட்டது. அந்நிலை யில் கிட்லர் தற்கொலை செய்து கொண்டான். அ தற்கு முன்னர் ஜேர்மனியில் நேசநாடுகளின் படைகள் புகுந்திருந்த வேளை பாசிஸ்த எதிர்ப்பாளனொருவன் முசோலினியைச் சுட்டுக் கொன்றுவிட்டான். எனவே இப்பொழுது யப்பான் மட்டும் எஞ்சி நின்றது. அது போரைத் தொடர்ந்து நடத்தியது அதற்கு எதிராக நேசநாடுகள் கடலிலும், விமானத்திலும் கடும் போர் நடத்தின, அப்போது ஜெனரல் மக்சார்தர் தலைமையி லான படை பிலிப்பைன் தீவுகளை யப்பானிடமிருந்து மீட்டது அதேசமயம் பிரித்தானிய படைகள் 1945மேயில் றங்கூனைக் கைப்பற்றிப் பர்மியப் போரை முடிவுக்குக் கொண்டுவந்திருந் தன. இதன் பின் யப்பான் மீது பெருமளவிலான விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் அங்குள்ள மக்கள் பெரும் பீதியுற்றிருந்தனர். அந்நிலையிலும் யப்பான் சரணடையவில்லை. மறுத்தபடியால் 1945 ஆகஸ்ட், 6, 7 ஆம் திகதிகளில் ஹிரோஷிமா, நாகசாகி என்னும் இரு நகரங்களிலும் ஐக்கிய அமெரிக்கா இரு அணுக்குண்டுகளைப் போட்டது. அது யப்பானைச் சரணடையச் செய்தது. அத்துடன் இரண்டாம் உலகப்போர் முடிவுற்றது.

சமாதான உடன்படிக்கைகள்

இரண்டாம் உலகப்போரின் இறுதி நிலைகளில் ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, இரசியா என்னும் ஐந்து வல்லரசுகளின் பிரதிநிதிகள் கெய்ரோ, யால்ரா, பொட்ஸ்டாம் முதலிய பல இடங்களில் கூடிச் சமாதான உடன் படிக்கைகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது இரசியாவுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன, குறிப்பாக ஜேர்மனி பற்றியே அதிக கருத்து மோதல் ஏற்பட்டது. ஆயினும் 1947இல் இத்தாலி ரூமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, போலந்து நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன, அவ்வுடன்படிக்கைகள் படைக்குறைப்பு, பாசிசக் கொள்கையின ஒழிப்பு குடியியல் உரிமைகளின் உத்தரவாதம் ஆகியவற்றைக் கோரின, இதன்பின் 1951இல் யப்பானுடனும் 1955இல் ஆஸ்திரியாவுடனும் உடன்படிக்கைகள் செய்யப்பட்டன. ஆயினும் இன்று வரை ஜேர்மனியுடன் உடன்படிக்கை எதுவும் செய்யப்படவில்லை, வல்லரசுகளிடை ஏற்பட்ட கருத்து வேறுபாடே இதற்குக் காரணமாகும். இதன் விளைவாக முதலில் இரசியா அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ். என்னும் நான்கு நாடுகளிடையே ஜேர்மனி பங்கிடப்பட்டது பின்னர் 1949இல் பிரித்தானியா, பிரான்ஸ். அமெரிக்கா என்னும் மூன்று நாடுகளும் தமது ஆக்கிரமிப்புப் பிரதேசங்களை ஒன்றுக்கி ஜேர்மன் இணைப்புக் குடியரசு என்ற பெயருடன் ஒரு நாட்டை உருவாக்கினர். அதே சமயம் இரசியா தனது ஆக்கிரமிப்புப் பட்ட பிரதேசத்தை ஜேர்மன் சனநாயகக் குடியரசு என்னும் நாடாக ஆக்கியது. இவ்வாறு ஜேர்மனி இரு பிரிவாகிய வேளை ஜேர்மனியின் தலைநகராகிய பேளினும் இரு பிரிவுகளாக்கப் பட்டது. மேற்கு பேளின் ஜேர்மன் இணைப்பரசின் கீழும் கிழக்கு பேளின் ஜேர்மன் சனநாயகக் குடியரசின் கீழும் உள்ளன. இவ்வாறு பிளவுபட்ட ஜேர்மனி ஒன்றுகுதல் கிட்டிய எதிர்காலத்தில் சாத்தியமில்லையாதலின் ஒன்றுபட்ட ஜேர்மனியுடன் சமாதான உடன்படிக்கையெதுவும் செய்து கொள்ளக் கூடிய வாய்ப்பும் இல்லை யெனலாம்.

ஐக்கிய நாடுகள் தாபனம்

ஐக்கிய அமெரிக்க தலைவராகிய றூஸ்வெல்ற்றும், சேர்ச்சிலும் 1941இல் அத்திலாந்திக்கில் ஒரு கப்பலிற் சந்தித்தபோது தமது நாடுகளின் நோக்கங்களை வெளிப்படுத்தும் பட்டயம்

ஒன்றை வெளியிட்டனர். அது அத்திலாந்திக் பட்டயமெனப் படும். அது தனி மனிதனதும், நாடுகளினதும் சுதந்திரத்தைப் பெறுவதற்கும் பிறநாட்டின் ஆக்கிரமிப்பிலிருந்தும், ஆதிக்கத் திலிருந்தும் எல்லா மக்களும் விடுதலை பெறுவதற்கும் உதவு வதாக உறுதியளித்தது. இப்பட்டயம், அமெரிக்கா போரில் இறங்கிய பின்னர் நியூயோர்கிற் கூடிய 26 நேச நாடுகளின் பிரதிநிதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது இதுவே ஐ நா. வின் ஆரம்பமாகும்.

இதன் பின்னர் 1943 இல் சேர்ச்சில், ஸ்ராலின், றூஸ் வெல்ற், சியாங்கைசேக் என்னும் நால்வரும் மாஸ்கோவிற் கூடிச் சமாதான காலத்தில் உலகில் நிறுவப்படவேண்டிய ஒரு நிறுவனத்தைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர் அப்போது அமைதியை விரும்பும் எல்லா நாடுகளுக்கும் சமத்துவமளிக்கும் கொள்கையினடிப்படையில், சிறியதும் பெரியதுமான எல்லா நாடுகளுக்கும் அங்கத்துவமளித்துச், சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் பேணுவதற்காக ஒரு தாபனத்தை நிறுவ வல்லரசுகள் தீர்மானித்தன. இதன் பின் 1944 நவம்பரில் டம்பேட்டன் ஒக்ஸ் என்னுமிடத்தில் இடம்பெற்ற அடுத்த மாநாட்டில் ஐ. நா. வின் அமைப்பு முறை தயாராக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1945இல் யால்ற்றா மாநாட்டில் ஸ்ராலின், சேர்ச்சில், றூஸ்வெல்ற் ஆகியோர் ஐ. நா. வின் பட்டயத்தை உறுதிப்படுத்தினர். பின் ஜேர்மனி சரணடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் 51 நாடுகளின் பிரதிநிதிகள் சான் பிரான் சிஸ்கோவில் கூடி அத்திலாந்திக் பட்டயத்தை அங்கீகரித்தனர். எனவே 1945 ஒக்ரோபர் 24 முதல் அப்பட்டயம் அமுலுக்கு வந்தவுடன் ஐ. நா. வும் இயங்கத் தொடங்கியது. ஐ. நா. வின் நோக்கங்கள் 'உலக அமைதியைப் பாதுகாப்பதும் மனித குலத் தின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவுவதுமே, எனப் பட்டயம் கூறுகிறது. முதலாம் உலகப்போரின் பின் நிறுவப்பட்ட சர்வதேச சங்கமும் இதே நோக்கங்களுக்காகவே நிறுவப்பட்டது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

ஐ. நா. தாபனம் ஒரு செயலகத்துடன் பொதுச் சபை, பாதுகாப்புச் சபை எனும் இரு சபைகளையும் பிரதான உறுப் புக்களாகக் கொண்டுள்ளது. பொதுச் சபையில் எல்லா நாடு களும் உறுப்பினராகச் சேரலாம் அது புதிய அங்கத்தவர்களை யும், ஆண்டு வரவு செலவுத் திட்டத்தையும் அங்கீகரிப்பதோடு உலக விடயங்கள் பற்றிய கருத்துப் பரிமாறலுக்கும், விவாதத் துக்கும் இடமளிக்கும் ஒரு மன்றாக இயங்கி வருகிறது: பாது

காப்புச் சபையில் பிரித்தானியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா இரசியா, தேசிய சீனா ஆகியன நிரந்தர உறுப்பினர்களாயுள்ளன. பொதுச்சபையிலிருந்து ஈராண்டுகளுக்கு ஒரு முறை தெரிவு செய்யப்படும் ஆறு நாடுகள் அதன் ஏனைய உறுப்பினராகும் ஆனால் 1963இல் ஐ. நா பட்டயம் திருத்தியமைக்கப்பட்டு நிரந்தரமற்ற உறுப்பினர் தொகை ஆறிலிருந்துபத்தாக அதிகரிக்கப்பட்டது. அதன் படி 1965 முதல் பத்து உறுப்பினரில் ஐவர், ஆசிய ஆபிரிக்க நாடுகளிலிருந்தும், இருவர் லத்தின் அமெரிக்க நாடுகளிலிருந்தும், ஒருவர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் எஞ்சிய இருவரும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் ஏனைய நாடுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினருக்கு எத்தீர்மானத்தையும் ரத்துச் (விற்ரோ) செய்யும் அதிகாரமுண்டு.

ஐ. நா. வின் செயலகத்தின் பிரதான அலுவலகங்கள் நியூயோக்கிலுள்ளன. சுவிற்சர்லாந்திலும் சில அலுவலகங்கள் உள்ளன. ஐ. நா. வின் பொதுச்செயலாளராக முதன் முதல் நோர்வேயைச் சேர்ந்த லீ என்பவர் பணியாற்றினர். அவருக்குப் பின்னர் சுவீடனைச் சேர்ந்த டாக்டர் ஹமர்சீல்ட் என்பவர் 1954.61 காலத்தில் ஐ. நா. வின் பொதுச் செயலாளராகச் சேவை செய்தார், அவர் 1961இல் ஐ: நா. வின் சமாதானத் தூதுவராகக் கொங்கோ நாட்டிற்குச் சென்றிருந்த வேளை அவர் பிரயாணம் செய்த விமானம் ஒரு விபத்துக்குள்ளாகியதனால் இறந்தார். அவருக்குப் பின்னர் பர்மியரான ஊதாண்ட் செயலாளராகி சென்ற ஆண்டு பதவியைத்துறந்தார் ஐ. நா. வின் மூன்றாவது முக்கியமான உறுப்பு பொருளாதார சமூகக் கழகமாகும் இதன் கீழ் பல விசேட நிறுவனங்கள் இயங்குகின்றன' அவற்றில் உலக சுகாதார தாபனம் சர்வதேச தொழிலாளர் தாபனம் உணவு விவசாயத் தாபனம் ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான கலாச்சாரத் தாபனம் ஆகியன முக்கியமானவை ஐ, நா. வின் நான்காவது பிரதான உறுப்பு நம்பிக்கைப் பொறுப்புக் கழகமாகும். இது போரில் தோல்வியுற்ற அரசுகளின் குடியேற்ற நாடுகளை அவை சுதந்திர மடையும் வரை பாலனம் செய்யும் பொறுப்பையுடையது ஐ நா. வின் ஐந்தாவது பிரதான உறுப்பு சர்வதேச நீதிமன்றமும். இது முதலாம் உலகப் போரின் பின் நிறுவப்பட்டுத் தொடர்ந்து இயங்கி வருகிறது.

ஐ. நா. தாபனத்தின் பொதுச்சபையில் இன்று 116 நாடுகள் உறுப்பினராயுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் ஐ. நா. வின் சாதனைகளைச் சிந்தித்தல் பயனுள்ளது. ஐ. நா. நிறுவப்பட்ட பின்னர் எழுந்த பிரச்சினைகளில் முக்கியமானது. பலஸ்தீனப் பிரச்சினையாகும். பலஸ்தீனில் அராபியருக்கும் யூதர்களுக்குமிடையில் 1943 ல் இடம் பெற்ற போரின் பின் 'இஸ்றேல்' என்னும் புதிய நாடு ஒன்று உருவாகியது. அந்த நாள் முதல் அதன் எல்லைகளை ஐ. நா. பார்வையாளர்கள் கண்காணித்து வந்தனர் (1967 யூன் வரை) இதற்குப் பின்னர் 1950ல் கொரியாவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் போது ஐ. நா படைகள் தென் கொரியா சார்பில் போரிட்டன. அத்துடன் அங்கு போர் நிறுத்தம் ஏற்படுதற்கும் ஐ. நா. துணை செய்தது இதைத்தொடர்ந்து 1966ல் பிரித்தானியாவும், பிரான்சும் எகிப்தை ஆக்கிரமித்தபோது ஐ. நா. அதில் நிலையிட்டு அவ்வல்லரசுகளை பின்வாங்கச் செய்தது ஐ. நா. வின் அடுத்த முயற்சி கொங்கோவிலாகும். அங்கு 1960இல் ஓர் யகாடிய உள்நாட்டுப் போர் இடம் பெற்றது. அவ்வேளை ஐ. நா. வின் படையொன்றும் போரில் பங்கு பற்றியது ஆயினும் 1964இல் அப்படை நாட்டைவிட்டு நீங்கியது மேற் குறிப்பிட்ட வெற்றைத் தவிர காஷ்மீர் பற்றிய பிணக்குகளில் ஐ. நா. தலையிட்டதனால் 1947இலும் 1965இலும் போர் நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதேசமயம் இந்தோனேசியாவுக்கும் ஒல்லாந்துக்கு மிடை உண்டாகிய பிணக்கைத் தீர்ப்பதில் ஐ. நா, வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

வினாக்கள்

1. ஜேர்மனி இரண்டாம் உலகப்போரை உண்டாக்கிய காரணங்களை விளக்குக.
2. இரண்டாம் உலகப்போருக்கு அடிகோலிய சம்பவங்களைத் தொகுத்தெழுதுக.
3. வாலாற்றுக் குறிப்பெழுதுக:- (1) மியூனிச் மாநாடு, (2) நெவில் சப்பர்லேன் (3) 1939ம் ஆண்டுப் பொருளாதார நெருக்கடி (4) ஐ. நா. தாபனம் (5) பேள் ஹாபர் (6) அத்திலாந்திக் பட்டயம்.

அத்தியாயம் 26

அண்மைக்கால வரலாறு (1945-67)

(1) ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் தேசிய விடுதலை இயக்கங்கள்.

சீனா:- 1911ஆம் ஆண்டில் 'மஞ்சு' அரசு வமிசத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து 1912இல் சீனா ஒரு குடியரசாக்கப்பட்டதும், அதன் முதல் தலைவராக டாக்டர் சன்யாற்சென் பதவியேற்றதும், அவர் யுவான்சிகே என்பவனிடம் அப்பதவியை விட்டதும், அவன் சர்வாதிகாரியாக நாட்டை ஆளத் தொடங்கியதனால் குழப்பங்கள் ஏற்பட்டதும். 1916ல் அவன் இறந்ததைத் தொடர்ந்து குழப்பம் நீங்கி கூடியதும் முன்னொரு அத்தியாயத்திற் குறிப்பிடப்பட்டன. இவ்வாறான குழப்பநிலைக் காலத்தில் முதலாம் உலகப்போரும் ஆரம்பித்து விட்டது. அச்சமயம் சன்யாற் சென் தெற்குச் சீனாவில் காண்டனில் தமது அரசாங்கம் ஒன்றை நிறுவ முயற்சி செய்து 1918ல் அதில் வெற்றி பெற்றார். ஆயினும் வடக்கே பீக்கிங்கிலும் ஒரு போட்டி அரசாங்கம் இராணுவ ஆள்பதிகளின் கீழ் நிறுவப்பட்டிருந்தபடியால் உள்நாட்டுப் பூசல்கள் அதிகரித்தன. ஆயினும் முதலாம் உலகப்போரில் சீனாவின் இரு அரசாங்கங்களும் நேச நாடுகளை ஆதரித்தபடியால் 1919 சமாதான மாநாட்டில் இரு அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றினர். அங்கு அவர்கள், வெளிநாடுகள் சீனாவின் மீது கொண்டுள்ள நில உரிமைகளை ஒழிக்குமாறும், செல்வாக்குப் பிரதேசங்களை இல்லாமற் செய்துவிடுமாறும் எற்பறுத்திக் கேட்டபோதிலும் அவ்விடயங்களில் சமாதான மாநாடு நீர்க்கமான ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆயினும் 1921இல் வாசிங்டனில் இடம்பெற்ற படைக்குறைப்பு மாநாட்டில் சாந்துங் குடாநாட்டைச் சீனாவிடம் திருப்பிக் கொடுக்க யப்பான் சம்மதித்தது.

சீனாவில் பொது உடைமை ஆட்சி ஏற்பட்ட வரலாறு:

1918இல் சன்யாற்சென் காண்டனில் தமது அரசாங்கத்தை அமைத்தபோது மேற்கு நாடுகள் சீனாவில் சனநாயக ஆட்சியை திறுவுவதற்கு உதவும் என எதிர்பார்த்தபோதிலும் அவை அவ்விடயத்திற் கரிசனை கொள்ளவில்லை. அச்சமயம் சோவியத் இரசியா மட்டும் சீனாவில் தனக்கிருந்த பிரதேச உரிமைகளை விட்டுக் கொடுக்கவும், சீனாவுடன் நட்புறவை வளர்த்துக்

கொள்ளவும் விருப்பம் தெரிவித்தது. இதன் விளைவாக 1924 இல் இரு நாடுகளுக்கிடையிலும் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது இதன்படி இரசியா சீனாவில் தனது பிரதேச உரிமைகளை விட்டுக் கொடுக்கவும், அதனுடன் வர்த்தகத் தொடர்புகளை வளர்க்கவும் இசைந்தது. அதே சமயம் இரசியா வுடன் இராசதந்திர உறவுகளை ஏற்படுத்தச் சீனா சம்மதித்தது. இதன் பின் சீனாவில் ஒரு பெரிய படையைக் கட்டியெழுப்ப விரும்பிய சன்யாற்சென் 40 இரசிய இராணுவ அதிகாரிகளின் உதவியுடன் 'வாம்போ' வில் ஒரு இராணுவ பயிற்சிக் கழகத்தை நிறுவினர். அத்துடன் தமது குவோமிந்தாங் கட்சியையும் போர் நாட்டமுள்ள கட்சியாக மாற்ற முயன்றார். இவ்வேலை களுக்கு பரோடின் என்னும் இரசிய அதிகாரி பொறுப்பாள ராயிருந்தார். ஆனால் இவ்வேலைகள் பூர்த்தியடையுமுன் 1925 மார்ச்சில் சன்யாற்சென் இறந்துவிட்டார். ஆயினும் இரசிய ருடன் அவர் ஏற்படுத்திய தொடர்பு காலகதியில் சீனாவில் பொதுவுடைமைக் கொள்கைகள் பரவ வழிவகுத்துவிட்டது. இரசிய அதிகாரியாகிய பரோடின் இரசிய பொதுவுடைமைக் கட்சியின் அமைப்பைப் பின்பற்றிக் குவோமிந்தாங் கட்சியைப் புனரமைத்தார். இக்காலத்தில் சீனர் பலர் பொதுவுடைமைக் கொள்கையில் ஈடுபாடுகொண்டனர். இது குவோமித்தாங் கட்சியில் பிளவை ஏற்படுத்தியது'

இது இவ்வாறாக சன்யாற்சென் இறந்தவுடன் அவரது பிரதம சீடர்களில் ஒருவரான சியாங்கைசேக் ஆட்சி பொறுப்பை ஏற்றார். அவர் இராணுவத் தளபதியாகவும் பணியாற்றினார். அவரது படையில் 1,01 500 போர் வீரர் இருந்தனர். மேலும் இரசியர் போர்க் கருவிகளையும், வெடிமருந்தையும் பெருமள வில் வழங்கியபடியால் அவரது படையின் போர்த்திறன் பன்மடங்கு அதிகரித்திருந்தது. அவ்வேளை அவர் சீனா முழுவ தையும் தனது ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவரத் திட்டமிட்டு 1926இல் வடக்கு நோக்கித் தனது படைகளை வழிநடத்திச் சென்றார். விரைவில் சாங்கெள, நான்கிங் ஆகிய நகரங்களைக் கைப்பற்றி விட்டுப் பீகிங் நகரையும் பிடிக்க இருந்தார், ஆயினும் அதற்கிடையில் குவோமிந்தரங் கட்சியில் படிப்படி யாக ஏற்பட்டு வந்த பிளவு அதிகரித்ததன் விளைவாக அவரது திட்டம் நிறைவேறவில்லை. குவோமிந்தரங் கட்சியில் இருந்த வர்த்தகர்கள், வங்கிக்காரர்கள், மத்தியவகுப்பினர் முதலியோர் வலதுசாரிகளாகவும், பட்டினத் தொழிலாளர்களும் குடியான வர்களும் இடதுசாரிகளாகவும் மாறியிருந்த நிலையில் சியாங் கைசேக் வடக்கு நோக்கிய படையெடுப்புக்குப் பண உதவி

செய்த வலதுசாரிகளின் கோரிக்கைக்கு இணங்கி, குவோமிந்தாங் கட்சியிலிருந்து இடதுசாரிகளெல்லோரையும் கலைத்தார். பின் 1927இல் நான்கிங் நகரில் பழமை பேணும் ஒரு அரசாங்கத்தை நிறுவி விட்டுச் சீனப் பொது உடைமைக் கட்சியைச் சட்டவிரோதமாக்கினர். அடுத்து காங்கௌ நகரில் போட்டியரசை நிறுவிய பொது உடைமைவாதிகளை நசுக்கிவிட்டு வடக்கு நோக்கிய தனது படையெடுப்பைத் தொடர்ந்து மேற் கொண்டு 1927இல் பீக்கிங்கைக் கைப்பற்றினர். பின் நான்கிங் நகரைச் சீனாவின் தலைநகராக்கி விட்டுத் தன்னைச் சீனக் குடியரசின் தலைவராகப் பிரகடனம் செய்து கொண்டார்.

இவ்வாறு சீனாவில் தமது ஆட்சியை நிறுவிய சியாங்கை சேக் சன்யாற்சென் வகுத்த வழியைப் பின்பற்றி நாட்டைப் பல வழிகளிலும் விருத்தி செய்தார். ஆயினும் பெரிய மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர் சித்தியடையவில்லை. குடியானவர்களதும் தொழிலாளர்களதும் நிலைமையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. அந்நிலைமை பொது உடைமைக் கொள்கையின் வளர்ச்சிக்கு உதவியது. அதேசமயம் சியாங்கை சேக்கின் 'பிடி' பலமற்றிருந்த பல பகுதிகளில் பொது உடைமைக் கட்சியின் கலங்கள் இயங்கத் தொடங்கின. மேலும் பல சீன இளைஞர்கள் ரஷியாவுக்குச் சென்று பயிற்சி பெற்று வந்து சீனாவில் பல இடங்களில் 'சோவியத்துக்களை' நிறுவிக் குடியானவர்களின் ஆதரவைப் பெருக்கிக்கொண்டனர். இவ்வாறு 1931 அளவில் சீனாவின் மத்திய பகுதியில் பொது உடைமைவாதிகளின் பிடி பலப்பட்டு விட்டது. விட்டது. அவர்கள் தமக்கென ஒரு படையை நிறுவியதோடு புறம்பான நாணயத்தையும் புழக்கத்திற்கு கொண்டுவந்தனர். அன்றியும் பல பாடசாலைகளும், மருத்துவ நிலையங்களும் அவர்களால் நிறுவப்பட்டன. இதன் விளைவாக, குவோமிந்தாங் கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சியடைய; 1934இல் சீனாவில் 1/6 பங்கு பிரதேசம் பொது உடைமைவாதிகளின் ஆட்சியின் கீழ் போயிருந்தது.

இது இவ்வாறாக, ஜப்பான், 1931இல் மஞ்சூரியாவில் படையெடுப்பை மேற்கொண்டபோது சியாங்கைசேக்கின் நிலைமை மேலும் சிக்கலாகியது, அவர் ஜப்பானிய படையெடுப்பைத் தடுக்க எவ்வளவோ முயன்றும் அது கைகூடவில்லை. அந்நிலையில் சர்வதேச சங்கத்திற்கு அவர் விடுத்த விண்ணப்பமும் ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கு எதுவும் செய்யவில்லை. எனவே பேரரசு வேட்கை மிக்க ஜப்பான் சீனா முழுவதையும் அகப்

படுத்தும் நோக்கத்துடன் 1937இல் முழுஅளவிலான போரை ஆரம்பித்தது. போரில் விமானங்களும் பயன்படுத்தப்பட்டன. இதன் விளைவாகச் சீனாவின் கிழக்குக்கரைப் பிரதேசம் முழுவதும் யப்பானியரின் ஆட்சியின் கீழ் வந்தபோதிலும் சீனரின் தேசிய எதிர்ப்பு இயக்கம் வலுவிழக்கவில்லை, சியாங்கைசேக் தோற்கடிக்கப்படவுமில்லை. அவர் சீனாவின் உட்பகுதியிலுள்ள சுங்கிங் நகரைத் தலைநகராக்கி அங்கிருந்து போர் நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தார். சீனாவின் ஆட்பலமும் போரைத் தொடர்ந்து நடத்த அவருக்கு உதவியது. எனவே யப்பானியப் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த வேளை இரண்டாம் உலகப்போரும் ஆரம்பித்தது. அதில் யப்பான் நேசநாடுகளுக்கெதிராகப் போரிட்டுத் தென்கிழக்காசியாவில் பல நாடுகளைக் கைப்பற்றிய பின் பர்மாவிலிருந்து சீனாவுக்குச் செல்லும் வீதியை மூடிவிட்டது. இது சியாங்கைசேக்கின் நிலையைப் பலவீனப் படுத்தியது. ஒனெனில் இதுவரை சீனா மேற்கிலிருந்து உணவையும், போர் உபகரணங்களையும் பெற்ற ஒரே வழியும் இப்பொழுது தடைப்பட்டது. ஆனால் சீனாவின் வடபகுதியில் நிலைகொண்டிருந்த பொது உடைமைவாதிகள் இக்கட்டான இக்காலத்தில் கொரிலாப் போரில் ஈடுபட்டு யப்பானியருடன் போராடியதோடு நாட்டில் தமது செல்வாக்கையும் வளர்த்து வந்தனர். எனவே 1945இல் போர் முடிந்தவுடன் யப்பானியர் விட்டுச்சென்ற பிரதேசங்களைக் கைப்பற்றுவதில் 'குவோமித்தாங், குழுவினரும் பொது உடைமைவாதிகளும் போட்டியிட்டனர் இதன் பலனாகக் கரையோரப் பிரதேசம் மீண்டும் குவோமித்தாங் கட்சியின் கீழ் வந்தது. அதேசமயம் வடக்கில் யப்பானியர் இரசியப் படைகளிடம் சரணடைந்தபடியால் அப்பிரதேசம் பொது உடைமைவாதிகளின் பிடியில் சிக்கியது பின்னர் இவ்விரு தரப்பினருக்குமிடையில் இணக்கத்தை ஏற்படுத்த அமெரிக்க ஜெனரலான மார்சல் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. எனவே 1947ல் பொது உடைமைவாதிகளின் பிடியிலிருந்து மஞ்சூரியாவை மீட்பதற்காகச் சியாங் அதன் மீது படையெடுத்தனர். ஆயினும் அவரது முயற்சி தோல்வியடைந்தது. குவோமிந்தாங் படைகள் போரில் ஊக்கம் காட்டாததாலும் அப்புடைகளினால் கைவிடப்படும் போர்க்கருவிகளுக்குப் பணம் கொடுக்கப்படும் எனப் பொது உடைமைவாதிகள் அறிவித்ததும் சியாங்கை சேக்கின் தோல்விக்குக் காலாயின. எனவே 1949 அளவில் பொது உடைமைவாதிகள் சீனாவின் வட பகுதி முழுவதையும் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்த பின்னர் தென் சீனா மீது படையெடுத்தனர்

அவ்வேளை அவர்களை எதிர்க்க முடியாத நிலையில் சியாங்கை சேக் போர்மோசாவுக்குப் பின்வாங்கிச் சென்று ஒரு போட்டி யரசை நிறுவினர் அது தேசிய சீனா எனப்படும், அதேவேளை பொது உடைமைவாதிகள் மாசேதுங் தலைமையில் பீக்கிங்கைத் தலைநகராகக்கொண்டு சீனக்குடியரசை நிறுவினர். இவ்வாறு 1911இல் சன்யாற்சென் காலத்தில் தொடங்கிய சீனப்புரட்சி 1949இல் பொது உடைமைவாதிகளின் வெற்றியுடன் முற்றுப் பெற்றது.

இந்தியா— முதலாம் உலகப்போர் காலத்தில் இந்தியா வில் தேசிய விடுதலை இயக்கம் பலப்படுத்தப்பட்டது பற்றி முன்னொரு அத்தியாயத்திற் படித்தோம்' இனி, இந்தியா. அந்நியரின் ஆட்சியிலிருந்து விடுதலைபெற்ற வரலாற்றை நோக்கு வோம். முதலாம் உலகப்போர்க் காலத்தில், அயர்லாந்தில் பிரித்தானியருக் கெதிராக ஏற்பட்ட புரட்சி, இந்தியரின் மன திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது, அவ்வாண்டு இந்திய தேசிய காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் தற்காலிகமாக ஒன்று பட்டு இந்தியாவுக்குச் சுயாட்சி அளிக்குமாறு கோரிக்கை விடுத்தன. அவ்வேளை தேசிய விடுதலை இயக்கத்திற்கு நாலாபுறமும் ஆதரவு அதிகரித்திருந்தபடியால் இந்திய அரசுச் செயலாளரான 'மொன் ரேக்' 'பாலனத்தின் ஒவ்வொரு பகுதியிலும் இந்தியரைச் சேர்த்துக்கொள்வதும், பிரித்தானியப் பேரரசின் பல மிக்க ஒரு உறுப்பினரான இந்தியாவில் படிப்படியாகப் பொறுப்பாட்சியை ஏற்படுத்துவதற்காகச் சுய ஆட்சித் தாப னங்களை விருத்தி செய்வதுமே பிரித்தானியாவின் கொள்கை' எனத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து 1919இல் நிறை வேற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டம் மொன்ரேக், செம்ஸ் போட் 'சீர்திருத்தங்களை நடைமுறையிற் கொண்டு வந்தது. இதன் படி ஒருவகை இரட்டை ஆட்சி நிறுவப்பட்டது. இதன் கீழ் பயிர்ச் செய்கை, கல்வி சுகாதாரம், பொது வேலைகள் முதலிய விடயங்கள் மாகாணக் கழகங்களின் பொறுப்பில் விடப்பட்டன அதேசமயம் நிதி, பொலிஸ் சேவை ஆகியன மாகாண ஆள் பதியின் கீழ் விடப்பட்டன, மேலும், அச்சட்டம் ஒரு இந்திய சட்டக் கழகத்தையும் நிறுவியது அதில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் பெரும்பான்மையினராயிருந்தனர். ஆயினும் அவர்களிடம் சட்டத்தை ஆக்கும் அதிகாரமளிக்கப்பட வில்லை. எனவே, மாகாண விவகாரங்களில் பொறுப்பாட்சி முறையில் இந்தியருக்குப் போதிய பயிற்சி அளித்ததே இச்சீர்திருத்தச் சட்டத்தின் பிரதான பயனாகும். எனினும் இந்திய தேசிய காங்கிரஸ் இச்சீர்திருத்தங்களைக் கண்டித்துப் பூரண சுயாட்

சியைக் கோரியது. அதேசமயம் நாட்டின் பல பகுதிகளில் பிரித்தானியருக்கெதிராக கிளர்ச்சிகள் ஏற்பட்டபோது 'ரௌவளற்' என்பவர் தலைமையிலான ஒரு குழு புரட்சி இயக்கங்கள் பற்றி விசாரணை செய்த பின் தெரிவித்த சிபார்சுகளின் படி 'ரௌவனற்' சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது சந்தேகிக்கப்படுவோரை சிறையிலிடும் அதிகாரத்தைப் பொலிசாருக்கு வழங்கியது. இதன்மேல் பெருந்தொகையான தேசாபிமானிகள் சிறையிலிடப்பட்டனர், உடன் தேசிய காங்கிரஸ் அதை ஆட்சேபித்து ஒரு நாள் 'ஹர்த்தால்' மேற்கொண்டது. அத்தகைய ஹர்த்தால் நடந்தவேளை அமிர்தசரசில் கூடிய ஒரு கூட்டத்தின் மீது பிரித்தானிய தளபதி டையர் தலைமையிலான படையுள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது 400 பேர் இறந்தனர். 1200 பேர் காயமடைந்தனர் 'அமிர்தசரஸ் படுகொலை' எனப்படும் இந்நிகழ்ச்சி பிரித்தானியரின் ஆட்சியின் மீது அதிருப்தியை அதிகரித்தது. அது மகாத்மா காந்தியையும் விடுதலைப் போரின் முன்னணிக்குக் கொண்டு வந்தது. காந்தி 1893 முதல் 1914 வரை தென்னபிரிக்கா விற்றங்கியிருந்து விட்டு 1914ல் இந்தியா திரும்பியிருந்தார். அவர் அமிர்தசரஸ் நிகழ்ச்சியை அறிந்தவுடன், இந்தியரின் இழி நிலையைப் போக்கி நாட்டுக்கு விடுதலையைப் பெறும் நோக்கத்துடன் விடுதலைப் போரிற் பங்கு பற்றினார். அப்போரில் அவர் பயன்படுத்திய கருவி வன்முறையான் போரன்று.

காந்தி அகிம்சை வழியைப் பின்பற்றி ஒத்துழையாமை இயக்கத்தின் மூலமும், சத்தியாக்கிரகத்தின் மூலமும் அமைதியான முறையில் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அவரது ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாகப் பிரித்தானிய உற்பத்திப் பொருட்கள் ஒன்றியொதுக்கப்பட்டன. இவ்வாறு காந்தியின் அகிம்சா இயக்கம் இந்தியா முழுவதும் பரவி மக்களிடையே விடுதலை வேட்கையைத் தூண்டியபோது ஆங்காங்கு மக்கள் ஆட்சிக்கெதிராக வன் செயல்களிலும் ஈடுபட்டனர். இவை காந்திக்கு மிக மன வேதனையை அளித்தன. அதே சமயம் காந்தியே குழப்பங்களுக்குக்காலென எண்ணிய அரசாங்கம் 1922இல் அவரைச் சிறையிலிட்டது ஆயினும் உடல் நலக் குறைவின் காரணமாகக் காந்தி 1924இல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். பின்னர் அவர் தமது ஒத்துழையாமை இயக்கத்தையும், ஒன்றியொதுக்கும் இயக்கத்தையும் தொடர்ந்து நடத்தினார். இது இவ்வாறிருக்க பிரித்தானிய அரசாங்கம் இந்தியாவின் அரசியற் பிரச்சினையை ஆராய 1927ல் சைமன் என்பவர் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை

நியமித்தது. ஆயின் இந்தியரெவரும் இடம் பெறுத அக்குழுவை யும், அதன் அறிக்கையையும், இந்திய தேசிய காங்கிரஸ் ஒன்றி யொதுக்கியது. இதன் விளைவாக அரசாங்கம் சைமன் அறிக் கையை 1930இல் வெளியிட்ட பின் அவ்வாண்டு லண்டனில் ஒரு வட்டமேசை மாநாட்டைக் கூட்டியது. ஆயின் அதையும் தேசிய காங்கிரஸ் ஒன்றியொதுக்கியது எனவே அம்மாநாடு முடிவு எதுவுமின்றிப் பின்போடப்பட்டது பின் 1931 பெப்ரு வரியில் காந்தி சிறையிலிருந்து திரும்பி அரசப் பிரதிநிதியாகிய ஏர்வினுடன் ஒரு இணக்கத்துக்கு வந்தபின் இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொள்ளச் சம்மதித்தார். இதன் பின் 1931 ஆகஸ்டில் இரண்டாம் வட்டமேசை மாநாடு இடம் பெற்றதாயினும் அதுவும் எம் முடிவுக்கும் வராது கலைந்தது இதன் பின் காந்தி இந்தியா திரும்பினார். இதற்குப் பின்னர் 1932இல் மூன்றாவது மாநாடு ஒன்றும் கூட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து அம்மாநாடுகளின் முடிவுகளின் அடிப்படையில் அரசாங்கம் ஒரு வெள்ளையறிக்கையை வெளியிட்ட பின் 1935 இல் இந்தியச் சட்டம் ஒன்று பாராளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்டது. அதன்படி மாகாணங்களையும், சுதேச இராச்சியங் களையும் உள்ளடக்கிய ஒரு இணைப்பு அரசு முறை பிரகடனப் படுத்தப்பட்டது அதன் கீழ் பாதுகாப்பு, வெளி நாட்டு விடயம் என்பவற்றைத் தவிர்த்து ஏனைய விடயங்களில் மத்திய அரசாங்கம், மத்திய சட்ட சபைக்குப் பொறுப்புள்ளதாக்கப் பட்டது. அதே சமயம் மாகாணங்கள் சுயாட்சி பெற்றன. மேலும் இச்சட்டம் பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்ததோடு வாக்காளர் தொகையையும் 3½ கோடியாக அதிகரித்தது. ஆனால் இச் சட்டம் அரசப் பிரதிநிதியிடம் சில அவசர கால அதிகாரங்களை அளித்தது.

1935ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்கள் மக்களின் வரவேற்பைப் பெறவில்லை. அவற்றினடிப்படையில் இணைப்பரசொன்றை நிறுவ முயற்சி எடுக்கப்பட்டபோதும் சுதேச இராச்சியங்கள் அதற்கு இணங்கவில்லை. எனவே மத்திய அரசாங்கம் 1919இல் இருந்த படி இயங்க, மகாணங்கள் மட்டும் சுயாடசி பெற்றன. இந்நிலை மையில் 1939இல் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாகியதனால் அரசியற்றிட்டப் பிரச்சினை பின் போடப்பட்டது. அன்றியும் M. A. ஜின்னாவைத் தலைவராகக் கொண்ட முஸ்லிம் லீக் இந்திய தேசிய காங்கிரசுடன் ஒத்துழைக்க மறுத்து முஸ்லிம் களுக்கென ஒரு தனி நாடு இருக்கவேண்டுமெனக் கோரியதன் விளைவாக விடுதலைப் போராட்டத்தில் தடங்கல் ஏற்பட்டது.

உலகப்போரின் ஆரம்ப காலங்களில் முன் சொல்லப்பட்ட முட்டுக்கட்டை நிலைமை நீடித்தது அவ்வேளை போரின் முடிவில் இரகியாவுக்கு விடுதலை வழங்கப்படும் எனப் பிரித்தானிய அரசு ஸ்ராபோட் கிறிப்ஸ் என்பவர் மூலம் தெரிவித்த கருத்தை முஸ்லீம் லீக்கும் காங்கிரசும் நிராகரித்தன.

இது இவ்வாறிருக்க, வங்கத்துச் சிங்கமாகிய நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ், உலகப்போர் தொடங்கியவுடன் அதுவே பிரித்தானியரை நாட்டிலிருந்து துரத்துவதற்கு ஏற்றதருணமென எண்ணி, 1941இல் நாட்டைவிட்டு வெளியேறி ஜேர்மனியருடனும், யப்பானியருடனும் தொடர்பு கொண்டார். அவர் பலாத்கார வழியைப் பின்பற்றியேனும் நாட்டுக்கு விடுதலையைப் பெறவேண்டுமென விரும்பினர். எனவே நேதாஜி சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கம் என ஒன்றைச் சிங்கப்பூரில் நிறுவி இந்திய தேசிய படை ஒன்றையும் திரட்டினர். யப்பானால் கைப்பற்றப்பட்ட தென்கிழக்காசிய நாடுகளில் வாழ்ந்த இந்தியர்களும், போர்க்கைதிகளும் அவரது படையில் இருந்தனர். இவ்வாறு ஒரு படையைத் திரட்டிய பின் அவர் யப்பானியரோடு சேர்ந்து பர்மா முனையில் பிரித்தானியருக்கெதிராகப் போரிட்டு அவர்களைத் தோற்கடித்தபின் இந்திய எல்லைப்புறத்தை நெருங்கியிருந்தார். ஆயினும் அதற்கிடையில் யப்பான் தோல்வியடைந்தபடியால் அவரது திட்டம் நிறைவேறவில்லை.

இவ்வாறு நேதாஜி யப்பானியருடன் சேர்ந்து பிரித்தானியருக்கெதிராகப் போராடிய அதே வேளை இந்திய தேசிய காங்கிரஸ் 1942இல் 'பிரித்தானியரே வெளியேறுக' எனக்கோரும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இதைத் தொடர்ந்து பெரிய அளவிலான சட்டமறுப்பு இயக்கம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது அதன் விளைவாக நாடெங்கிலும் குழப்பங்கள் ஏற்பட்டபோது அரசாங்கம் காந்தி நேரு உட்படப் பல காங்கிரஸ் தலைவர்களைச் சிறையிலிட்டது ஆயினும் நாட்டில் அமைதியின்மை தொடர்ந்து நிலவியது பின் 1945இல் உலகப்போர் முடிவடைந்த நிலையில் அரசாங்கம் காந்தி, ஜின்னு ஆகியோருடன் சிம்லாவில் ஒரு மாநாடு கூட்டி இந்தியாவின் சுதந்திர விடயமாகக் கலந்துரையாடியபோதும், முஸ்லிம்களுக்குத் தனி நாடு வேண்டும் என ஜின்னு பிடிவாதமாய் நின்றபடியால் அம்மாநாட்டால் ஒரு பயனும் ஏற்படவில்லை. இது இவ்வாறாக 1925இல் இங்கிலாந்தில் பதவிக்குவந்த அட்லிபிரபு தலைமையிலானதொழிற்கட்சிஅரசாங்கம் இந்தியாவின் கோரிக்கைகளை அனுதாபத்துடன்

கவனித்து சேர் ஸ்ராபோர்ட் கிறிப்ஸ், பெத்திக் லோறன்ஸ் அலெக்சாண்டர் என்னும் மூவரைக்கொண்ட ஒரு குழுவை அவ்விடயமாக விசாரணை செய்ய அனுப்பியது ஆயினும் அக் குழுவினரின் முயற்சியும் இந்து-முஸ்லிம் பிணக்கினால் தோல்வியடைந்தது. அந்நிலையில் அட்லி முஸ்லிம் லீக்கும், காங்கிரசும் தமது தகராறுகளைத் தீர்த்தாலும் சரி தீர்க்காவிட்டாலும் சரி பிரித்தானியா 1948யூனில் இந்தியாவை விட்டு வெளியேறும் என 1947ல் அறிவித்தார் அத்துடன் 1947ல் இந்தியாவின் புதிய அரசப் பிரதிநிதியாக மவுன்பேட்டன் பிரபு நியமிக்கப் பட்டார். மவுண்பேட்டன்பிரபு இந்தியத் தலைவர்களுடனும் மக்களுடனும் நெருங்கிப் பழகியதோடு தமது சாதுரியத்தாலும், திறமையாலும் முஸ்லிம் லீக்-காங்கிரஸ் பிணக்கைத் தீர்ப்பதில் வெற்றி பெற்றார். அன்றியும் காந்தி விரும்பாத பொழுதிலும் இராஜகோபாலாச்சாரியும் பிறரும் இந்தியாவைப் பிரித்து முஸ்லிம்களுக்குத் தனி நாடு அமைப்பதே அன்றைய நிலையில் சிறந்த வழி என வதாடி இறுதியில் ஏனைய காங்கிரஸ்காரர்களையும் அதற்கு இணங்கவைத்தனர். எனவே இந்தியத் துணைக்கண்டத்தை இந்தியா, பாகிஸ்தான் எனும் இரு நாடுகளாகப் பிரிவினை செய்து அவற்றுக்கு 1947 ஆகஸ்ட் 15 முதல் சுதந்திரம் அளிக்கப்பட்டது இவ்வாறு சுதந்திரமடைந்த இந்திய அரசின் முதலாவது ஆள்பதிநாயகமாக மவுண் பேட்டன் பிரபு பதவியேற்றார். நேரு முதலாவது பிரதமமந்திரியானார். அதே வேளை ஜின்னா பாகிஸ்தானின் ஆள்பதிநாயகமாகப் பதவியேற்றார். இவ்வாறு சுதந்திரமடைந்த இரு நாடுகளும் உடனடியாக இனக் கலவரங்களைச் சமாளிக்கவேண்டியிருந்தது. ஏனெனில் நாடு பிரிவினை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் எல்லைப்புறப் பிரதேசங்களில் இனக்கலவரங்கள் ஏற்பட்டன இதன் விளைவாகப் பெருந்தொகையானோர் இறந்ததோடு இலட்சக்கணக்கில் அகதிகளும் இடம் பெயர்ந்தனர். இக்கலவரங்கள் மகாத்மாவுக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுத்தன. ஆயினும் அவரது வேதனை நீடிக்கவில்லை, ஏனெனில் 1848ல்ஓர் இந்து மத வெறியன் அவரைச் சுட்டுக் கொன்றான். இவ்வாறு இந்தியாவின் விடுதலைக்காகத் தம் வாழ் நாளை அர்ப்பணித்த மகாத்மா அமரராகியபோதிலும் அவரது நாமம் உலக வரலாற்றில் அழியா இடம் பெற்றுள்ளது.

மகாத்மாவின் மறைவுக்குப் பின்னர், நாட்டை நேரு வழி நடத்தி வந்தார். பின் 1950இல் இந்தியா ஒரு குடியரசாக்கப் பட்டது. அதேபோல் 1955இல் பாகிஸ்தானும் ஒரு குடியரசாக்கப்பட்டது. இன்று நேருவும் இல்லை. ஜின்னாவும் இல்லை.

ஆயினும் அவர்களின் நினைவு மக்களின் மனதை விட்டு என்றும் அகலாது.

இந்தோனேசியா:— 'இந்தோனேசியா' எனப்படும் நாடு முன் கிழக்கிந்திய தீவுகள் எனப்பொதுவாகக் குறிப்பிடப்பட்டது இது சுமத்திரா, யாவா, தெற்கு போர்னியோ, செலிபீஸ் முதலியவற்றையும் பல சிறு தீவுகளையும் உள்ளடக்கியது. இப்பிரதேசத்தில் 17ம் நூற்றாண்டு முதல் ஒல்லாந்தரின் செல்வாக்கும் கட்டுப்பாடும் நிலவின. ஒல்லாந்தக் கிழக்கிந்திய சங்கம் பற்றேவியாவை மையமாகக்கொண்டு அங்கு ஆட்சியை நடத்தி வந்தது ஆயினும் ஒல்லாந்தர் தமது வர்த்தக நலன்களையே பேணியதன்றி உள்நாட்டு அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தவில்லை இந்நிலையில் 1870க்குப் பின்னர் தேயிலை கோப்பி, றப்பர் முதலி பெருந்தோட்டப் பயிர்கள் இந்தோனேசியாவில் விருத்திசெய்யப்பட்ட போதும். அவற்றின் வர்த்தகம் ஒல்லாந்தரின் ஏகபோக உரிமையாயிருந்ததனால் மக்கள் அதிக பயனடையவில்லை. மேலும் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சில, சமூக அரசியற் சீர்திருத்தங்களைப் புகுத்திய போதிலும் மக்களுக்கு அவை அதிக பலனளிக்கவில்லை. அந்நிலையில் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்க முதல் நாட்டில் தேசிய உணர்ச்சி உருவாகத் தொடங்கியபோது அது எதிர்கால விடுதலைப் போராட்டத்துக்கு அறிகுறியாகியது.

ஒல்லாந்தர் தொடக்கத்தில் உள்நாட்டில் பண்டுதொட்டு நிலவிய பாலன முறையைப் பயன்படுத்தித் தமது ஆட்சியை நடத்திவந்தனர். அப்போது சுதேச அதிகாரிகள் ஒல்லாந்தரின் ஆணையை நிறைவேற்றுவோராயிருந்தனரேயன்றி, மக்களின் பிரதிநிதிகளாயிருக்கவில்லை, பின்னர் 1918இல் ஒல்லாந்தர் 'வோல்க்ஸ்ரூட்' எனப்படும் ஒரு தேசிய சபையை நிறுவினர். அதில் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களுடன் நியமனம் செய்யப்பட்டவர்களும் உறுப்பினராயிருந்தனர். 1920 அளவில் அதைப்போன்ற சபைகள் பட்டினங்களிலும் மாகாணங்களிலும் நிறுவப்பட்டன. ஆயினும் அவை ஒல்லாந்த அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறுபவையாகவே அமைந்தன. பின் 1925 இல் இந்தோனேசியப் பிரதிநிதிகளைப் பெரும்பான்மையாகக் கொண்டதாகத் தேசிய சபை அமைக்கப்பட்ட போதிலும் அச் சபை, ஆள்பதிக்கு அடங்கியதாகவிருந்தபடியால். ஆட்சியின் பொறுப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. மேலும் 1928 சர்வதேச பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது அதேசமயம் நாட்டின் குடித்தொகை

1860 - 1940 காலத்தில் பருமட்டாக நான்கு மடங்கு அதிகரித்ததனால் அது பொருளாதார நெருக்கடியை மேலும் கூட்டியது அதேசமயம் ஒல்லாந்தர் மக்களின் கல்வி, வைத்திய வசதி பற்றிய பிரச்சினைகளையும் திருப்திகரமாகத் தீர்க்கப்படவில்லை மேலும், அரசாங்கத்தின் உயர் பதவிகள் ஒல்லாந்தருக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தபடியால் உயர் கல்வி கற்ற சுதேசிகளுக்கு வேலைவாய்ப்பும் இருக்கவில்லை. இத்தகைய நிலைமைகளில் ஒல்லாந்தரின் ஆட்சிக்கு உள்ளூரில் எதிர்ப்பு உருவாகியது. குடிமக்கள் சுரண்டப்பட்டதும், வாழ்க்கைத்தரம் குறைந்ததும் கிராமப்புறங்களில் தனிமை நீங்கியதும், தொழிலாளர் ஒருப்பு ஒன்று உருவாகியதும், உயர் கல்வி பெற்ற மத்தியவகுப்பினரின் வளர்ச்சியும், தேசிய எதிர்ப்பு இயக்கத்துக்குத் தூண்டுகோலாயின. அதே சமயம் சீனாவிலும், இந்தியாவிலும் உருவாகிய விடுதலை இயக்கங்களும், ரசிய-யப்பானியப் போரில் யப்பான் வெற்றி பெற்றதும் இந்தோனேசியாவின் விடுதலை இயக்கத்திற்கு வலுவூட்டின இந்நிலையில் ரசியாவில் 1917ல் இடம்பெற்ற புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து 1919இல் இந்தோனேசியாவிலும் ஒரு பொது உடைமைக் கட்சி நிறுவப்பட்டது. 1925இல் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களினால் திருப்தியடையாத ஆர்ப்பாட்டங்களையும் வேலைநிறுத்தங்களையும் மேற்கொண்டபோது அரசாங்கம் அக்கட்சியையும் ஏனைய தேசிய இயக்கங்களையும் சட்ட விரோதமாக்கிவிட்டு ஆயிரக்கணக்கானோரைச் சிறையிலிட்டும், கொன்றும், சடும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் விளைவாக 1920–40 காலத்தில் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிகள் எதுவும் இடம்பெறவில்லை.

இது இவ்வாறுக யப்பான் 1941இல் பேர்ல் ஹாபரைத் தாக்கிய பின்னர் இந்தோனேசியாவிலும் படைகளை இறக்கியதுடன் ஒல்லாந்தப்படைகள் சரணடைந்தன. அதைத் தொடர்ந்து $3\frac{1}{2}$ ஆண்டுகள்வரை யப்பானியர் நாட்டின் பாலனத்தை நடத்தினர். அக்காலத்தில் பல இந்தோனேசியர் உயர்பதவிகளைப் பெற்றுப் பாலன விடயத்தில் அனுபவம் பெற்றனர். அதே சமயம் பெருந்தொகையானோர் புதிய போர் முறைகளிற் பயிற்சி பெற்றனர். எனினும் யப்பானியரின் ஆட்சி அக்கிரமமிக்கதாயிருந்தபடியால் மக்கள் அதை ஒல்லாந்தரின் ஆட்சியைவிட அதிகமாக வெறுத்தனர். எனவே 1944இன் தொடக்கத்தில் யப்பானியர் போரில் தோல்வியடைந்து வந்த நிலையில், அவர்கள் நாட்டை விட்டுப் போனவுடன் சுதந்திர இந்தோனேசிய

அரசைத் தாபிக்க உள்ளூர்த் தலைவர்கள் ஆயத்தம் செய்தனர். பின்யப்பானியப் படைகள், நாட்டிலிருந்து விரட்டப்பட்டவுடன் 1945 ஆகஸ்ட் 17 இல் இந்தோனேசியா ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அதன் தலைவராக சுகர்னோ பதவி பெற்றார். யாவாவில் ஒரு ஆசிரியரின் மகனாகப் பிறந்த சுகர்னோ ஒரு பொறியியலாளராகக் கல்வி கற்றுத் தேறியபோதும் 1925 முதல் அரசியலிலேயே தம் காலத்தைக் கழித்தார் அவர் இந்தோனேசியாவின் சுதந்திர இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய படியால் 1929–42 காலத்தில் 10 ஆண்டுகள் சிறையிற் கழிக்கவேண்டியிருந்தது. இதன் விளைவாக அவர் ஓர் தேசிய வீரராகக் கருதப்பட்டார்.

இது இவ்வாறுக, யப்பானியர் நாட்டைவிட்டு நீங்கியவுடன் ஒல்லாந்தர் மீண்டும் இந்தோனேசியாவைத் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர முயற்சித்தபோது இந்தோனேசியப் படைகளின் எதிர்ப்பின் விளைவாக அது சாத்தியப்படவில்லை. எனவே இந்தோனேசியாவை ஒல்லாந்துடன் இணைக்கப்பட்ட சுயாட்சி உரிமையுள்ள அரசாக அங்கீகரிப்பதாக ஒப்புக்கொண்டு ஒல்லாந்து தனது படைகளை விலக்கியது. ஆயினும் அது தனது வாக்கைக் காப்பாற்றாமல் 1957 ல் இந்தோனேசியாமீது கடற்படையுடன் கூடிய தாக்குதலை மேற்கொண்டபோது ஐ. நா. தாபனம் அத்தகராறில் தலையிட்டுச் சர்ச்சைக்குட்பட்ட விடயங்களில் முடிவு ஒரு பொதுவாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கப்படும் என ஒரு இணக்கத்தை ஏற்படுத்தியது. இதன் பின் சிறிது காலம் அமைதி நிலவியது. பின் இந்தோனேசியாவின் அரசாங்கத்தைக் கவிழ்க்க எடுக்கப்பட்ட ஒரு முயற்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டபோது அதைச் சாட்டாகக்கொண்டு ஒல்லாந்தப் படைகள் மீண்டும் இந்தோனேசியா மீது தாக்குதல் மேற்கொண்டு அதன் தலைநகரான யொக்யாகர்த்தர் உட்படப் பல நகரங்களைக் கைப்பற்றியது. ஆயினும் கிராமப்புறங்களில் மக்கள் கொரில்லாப்போரில் ஈடுபட்டு ஒல்லாந்தரை முறியடித்து வந்தனர்.

இவ்வாறு 1949 நடுப்பகுதிவரை இந்தோனேசியாவில் குழப்ப நிலைமை காணப்பட்டது. அச்சமயம், ஒல்லாந்தின் ஆட்சிக்கு உலகிலும், ஒல்லாந்திலும் எதிர்ப்புத் தெரிவிக்கப்

பட்டது. அச்சமயம் இந்தியா முதலிய நடுநிலை நாடுகளின தும், அமெரிக்க ஐக்கிய நாட்டினதும் தூண்டுதலின் பேரில் ஒல்லாந்து 1940 டிசம்பரில் இந்தோனேசியாவை இந்தோனேசி யரிடம் விட்டுவிட இசைந்தது. எனவே 1945இல் பிரகடனம் செய்யப்பட்ட இந்தோனேசியாகுடியரசு 1950 முதல் சுதந்திர குடியரசாகியது. அதன் தலைவராகச் சுகர்னோவே தொடர்ந்து பதவிவகித்தார். அவர் மத்திய தேசிய குழு ஒன்றின் உதவி யுடன் 1950-55 காலத்தில் ஆட்சியை நடத்தினர் பின் 1955 முதல் 'வழிப்படுத்தப்படும் சனநாயக அரசாக இந்தோனேசி யாவை ஆக்கினர். அதன்படி ஒரு தேசிய சபையுடனும், மந்திரி சபையுடனும் அவரே ஆட்சிப் பொறுப்பை வகித்தார். அவரது ஆட்சிக்கு இராணுவமும் பக்கபலமாயிருந்தது. பின் 1965இல் பொதுஉடைமைவாதிகள் ஆட்சியைக் கவிழ்க்க மேற் கொண்ட சதி அம்பலமாகியதைத் தொடர்ந்து அவர் பதவியி லிருந்து நீக்கிவைக்கப்பட்டார். அவர் 1970இல் இறந்தார். தற்பொழுது ஜெனரல் சிகாட்டோ என்னும் படைத்தளபதியே ஆட்சிக்குப் பொறுப்பாயுள்ளார்.

எகிப்து: பிரித்தானியரின் ஆட்சியின் கீழிருந்த எகிப்தில் ஆட்சியாளருக்கெதிரான முதலாவது எதிர்ப்பு இயக்கம் 1882 இல் அரபி பாஷாவினால் மேற்கொள்ளப்பட்டது. அது பற்றி முன்னொரு அத்தியாயத்திற் கூறப்பட்டது. அரபிபாஷாவின் எதிர்ப்பு இயக்கம் எகிப்து மக்களிடையே தேசிய உணர்ச்சி யைத் தூண்டிவிட்டது. பின் 1919இல் வாப்ட் எனப்படும் இன்னொரு தேசிய இயக்கம் நாட்டுக்கு விடுதலை கோரிக் கிளர்ச்சி செய்தபோதிலும் பிரித்தானிய படைகள் அவ்வியக்கத்தை நசுக்கிவிட்டன. ஆயினும் 1922இல் எகிப்துக்குச் சில கட்டுப்பாடு களுடன் கூடிய சுதந்திரம் அளிக்கப்பட்டது அதன்படி உள் நாட்டு விடயங்களில் எகிப்து பூரண சுதந்திரத்தைப் பெற்ற போதிலும், பாதுகாப்பு, சுயஸ்கால்வாய், வெளிநாட்டாரின் நலன் முதலிய விடயங்களும் சூடானின் பாலனமும் பிரித் தானியாவின் பொறுப்பில் விடப்பட்டன இதன் பின் 1923 முதல் பாராளுமன்றத்துடன் கூடிய முடியாட்சி எகிப்தில் நிறு வப்பட்டது ஆயின் 'வாப்ட்' என்னும் தேசிய இயக்கத்துக் கும், மன்னன் புவட் டுக்குமிடையே ஏற்பட்ட பிணக்குகளின் விளைவாக மன்னன் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டுத்

தானே ஆட்சியை நடத்தி வருவானுயினுன். அந்நீலை 1936 வரை நீடித்தது.

இது இவ்வாறுக முஸ்லிம் சகோதரத்துவம்' என்னும் இயக்கம் ஒன்றும் எகிப்தில் 1928 முதல் இயங்கியது. அது மேற்கு நாகரிகத்தை வெறுத்து இஸ்லாமிய மதம், பண்பாடு ஆகியவற்றைப் பேண முயன்றதனுல் பழமை பேணும் மக்களிடையே இதற்கு ஆதரவு அதிகரித்தது. ஆயினும் எகிப்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தவோ, நாட்டை வழிநடத்திச் செல்லவோ ஏற்றதலைவர்களை இவ்வியக்கங்கள் உருவாக்கவில்லை. இந்நிலையில் 1935இல் முசோலினி அபிசீனியாவைத் தாக்கியதும் ஐரோப்பாவில் நெருக்கடி அதிகரித்ததும் பிரித்தானியா எகிப்துடனுன பிணக்கைத் தீர்க்கவேண்டிய அவசியத்தை உணர்த்தின. இதனுல் 1936இல் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது. அதன்படி சுயஸ்கால்வாய் பிரதேசத்தைத் தவிரஏனைய பகுதி களிலிருந்து தனது படைகளை வெளியேற்றவும் போர்க்காலத் தில் எகிப்தைப் பாதுகாக்கவும், பிரித்தானியா ஒப்புக்கொண் டது. இதைத் தொடர்ந்து 1937இல் எகிப்தில் வெளி நாட்டாருக்கு அளிக்கப்பட்ட சலுகைகளும், பாதுகாப்புக்களும் நீக்கப்பட்டன இவ்வாறு எகிப்து பூரண சுதந்திரத்தை அன் மித்து இருக்கும் வேளை இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. அப்போரில் எகிப்தை ஒரு தளமாகப் பிரித்தானியா பயன் படுத்தியது. ஆயினும் எகிப்து அரசாங்கம் மறைமுகமாகஅச்சு வல்லரசுகளிடம் அனுதாபம் காட்டிப் பிரித்தானியரின் போர் முயற்சிகளுக்குத் தடங்கல் செய்து வந்தது. இதனுல் ஆத்திர முற்ற பிரித்தானிய தனது படைப்பலத்தால் மன்னனைப் பய முறுத்தித் தம்முடன் ஒத்துழைக்கக் கூடிய ஒரு பிரதமமந்திரியை நியமிக்கச்செய்தது. இச்செயல் எகிப்தின் 'சுதந்திர அலுவலர் கள்' இயக்கத்தினருக்குப் பெரும் அவமானமாயிருந்தது, அவ் வியக்கத்தினரின் தலைவராக கமால் அப்துல் நாசர் இருந்தார், அவர் எகிப்திலுள்ள இராணுவத்தில் சிறந்த பயிற்சி பெற்றவர். அவர் பேரரசவாதம், முடியாட்சி, மானிய முறை என்னும் மூன்றும் எகிப்திலிருந்து அகற்றப்படவேண்டுமெனத் துணிந் தார்' பின் 1948இல் அராபியர்களுக்கு, யூதர்களுக்குமிடை யில் நடந்த போரில் அராபியர்கள் படுதோல்வியடைந்ததன் விளைவாக முடியாட்சி மீது இராணுவத்தினரின் வெறுப்பு அதி கரித்தது. அதேசமயம் பிரித்தானிய படைகளுக்கும்'எகிப்தி


யருக்குமிடையிலும் பகைமை அதிகரித்தது. இதன் விளைவாக 1952இல் கெய்ரோவில் கலகங்கள் ஏற்பட்டபோது வெளி நாட்டார் பலர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து மன்னர் பாரூக், பதவியைத் துறக்க ஜெனரல் நாஜீப் தலைமையில் 1953யூன் முதல் எகிப்து ஒரு குடியரசாக்கப்பட்டது. இதன் பின் நாஜீப்புக்கும், நாசருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து மோதலின் விளைவாக நாஜீப் பதவியிலிருந்து நீக்கப்பட்டவுடன் 1954 நவம்பர் முதல் நாசர் எகிப்தின் தலைவராகிச் சர்வாதி காரிபோல நாட்டை ஆளத் தொடங்கினர். இதற்குப் பின்னர் 1956இல் அவர் சுயஸ் கால்வாயைத் தேசியமயமாக்கிய போது பிரித்தானியாவும், பிரான்சும் கூட்டாக எகிப்தின் மீது தாக்குதல் மேற்கொண்டன. ஆயினும் ஐ. நா. வின் தலையீட்டினால் அவை பின்வாங்கின. இச்சம்பவம் நாசரின் செல்வாக்கை ஒருபடி உயர்த்திற்று. அடுத்த ஆண்டு (1957) எகிப்தும் சிரியாவும் இணைந்து ஐக்கிய அரபுக் குடியரசு என்னும் பெயரைப் பூண்டன. நாசரே அதன் தலைவராக இருந்தார். ஆயினும் எகிப்தும், சிரியாவும் 1963இல் பழையபடி தனி நாடுகளாயின. இதன்மேல் ஐக்கிய அரபுக் குடியரசு என்ற பெயர் எகிப்தை மட்டும் குறித்து வருகிறது. மத்திய கிழக்கிலுள்ள நாடுகளில் ஐக்கிய அரபுக் குடியரசு மிகப் பெரியது. அதன் தலைவராயிருந்த நாசர் மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்களில் அதிக செல்வாக்கையும், அதிகாரத்தையுமுடையவராயிருந்தார். அரபுத் தேசத்திலிருந்து யூதர்களை அகற்றுவதும், இஸ்ரேலைத் தோற்கடிப்பதும் அவரின் குறிக்கோள்கள். 1967 யூலை இடம்பெற்ற இஸ்ரேல் அரபியப் போரில் அராபியர்கள் இரண்டாவது தடவையும் தோல்வியடைந்ததோடு கணிசமான நிலப்பரப்பையும் இழந்து விட்டனர். பின் 1970இல் நாசரும் இறந்தார். அதன்மேல் சடாற் என்பவர் எகிப்தின் தலைவராகியுள்ளார். இதனால் மத்திய கிழக்கில் இன்னொரு போர் மூளக்கூடிய நிலை தொடர்ந்து நிலவுகிறது.

காணா: இது முன்னர் 'கோல்ட்கோஸ்ற்' என்னும் பெயரையுடையதாயிருந்தது. இப்பிரதேசம் 1874 முதல் பிரித்தானியரின் குடியேற்ற நாடாக இருந்து வந்தது. இங்கு 1870 க்குப் பின்னர் கொக்கோ பிரதான பயிராகியது. அத்துடன் தங்கம் கணிசமான அளவு காணப்பட்டதும் இதன் பொருளாதாரத்திற்குப் பெருந்துணையாயிருந்தது. இதனால் 1919 அளவில் கல்வி போக்குவரத்துவசதி ஆகியனவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. ஆயினும் அரசியல் விருத்தியைப் பொறுத்தவரை நாடு ஆரம்ப நிலையிலேயே இருந்தது ஏனெனில் ஆள்பதியே நாட்டுக்கு நேரடியான பொறுப்பை

வகித்தார். அவரின் கீழ் பல பிரதானிகள் உள்ளூராட்சியைக் கவனித்தனர் இந்நிலைமை கானாவின் உட்பகுதிகளில் ஓரளவு எதிர்ப்பின்றி நிலைத்ததாயினும், கரையோரப் பிரதேசத்தில் அதிக கல்வி வசதியைப் பெற்ற மக்கள் பழைய ஆட்சியை மாற்றிப்பாராளுமன்ற ஆட்சிமுறையைத்தாபிக்க விரும்பினர் எனவே 1920 ஆளவில் நாட்டின் சட்டசபையில் அதிக பிரதி. நித்துவம் தருமாறு கோரும் முயற்சிகள் பலவடைந்தன இதன் விளைவாக 1925ல் ஒரு புதிய அரசியற்றிட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அது பல மாகாணக் கழகங்களை நிறு வியது. அவை ஆட்சித்துறையில் மக்களுக்குப் போதிய அனுப வம் அளித்ததோடு சட்டசபைக்கென ஆறு பிரதிநிதிகளையும் தெரிந்தனுப்பியது. மேலும் அவ்வாண்டு முதல் கரையோரப் பட்டினங்களும் மூன்று பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து சட்ட சபைக்கு அனுப்பின.

இது இவ்வாறுக, இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் கானாவின் போர் வீரர் பிரித்தானியாவுக்காகப் பல இடங்களில் போரிட்டுத் தொழில் நுட்பத்திலும், பிறவற்றிலும் பயிற்சி பெற்று நாடு திரும்பியிருந்தனர். அதே சமயம் உள்நாட்டிலும் பல சுதேசத் தலைவர் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்து அனுபவம் பெற்றனர். அன்றியும் போர்க்காலத்தில் மேற்காபி ரிக்கா நேசநாடுகளின் ஆயிரக்கப் போர்களுக்குத் தளமாகஇருந் தபடியால் கானாவின் துறையாகிய தக்கோரடியும், தலைநகரா கிய அக்ரவும் விருத்தியடைந்தன. இந்நிலையில் தான் ஐக்கிய பொற்கரைச்சமவாயம்' என்னும் ஆட்சி எதிர்ப்பு இயக்கம் ஒன்று நாட்டில் உருவாகியிருந்தது அவ்வேளைதான் என்குருமா என்பவர் தமது வெளிநாட்டுப் பயணங்களை முடித்துக்கொண்டு 1957இல் நாடு திரும்பியிருந்தார். அவர் உடன் வன் குழிப் பிட்ட இயக்கத்திற்குத் தலைமை தாங்கினர் பின் 1949இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது ஆங் காங்கு கலவரங்கள் ஏற்பட்ட சமயம் என்குருமாவும் வேறு ஐந்து தலைவர்களும் காவலில் வைக்கப்பட்டனர். ஆயினும் அவர்கள் சில காலத்தின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.பின் என்குருமா சமவாய மக்கள் கட்சி 'Convention People s' Party எனும் பெயரில் ஒரு புதிய கட்சியை நிறுவினர். அது நாட்டுக்கு விடுதலை பெறவும், அதற்காக அவசியமாயின் வேலை நிறுத்தம் ஒன்றியொதுக்கல், ஒத்துழையாமை முதலியவற்றை மேற்

கொள்ளவும் உறுதிபூண்டது. இதன்பின்னர் மீண்டும் நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டதனால் என்குருமா மீண்டும் சிறையிருக்க வேண்டியதாயிற்று. இதற்கிடையில் நாட்டின் ஆட்சி முறையில் மாற்றம் வேண்டுமென்ற கோரிக்கைக்குச் செவிசாய்த்த பிரித்தானிய அரசாங்கம் 1949இல் முற்றிலும் ஆபிரிக்கர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்துச் சுயாட்சிப் பிரச்சினையை ஆராயுமாறு பணித்தது. பின் அக்குழுவின் சிபார்சுக்கிணங்க, 1951இல் ஒரு புது அரசியற்றிட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது அது 74 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரைக் கொண்ட ஒரு பாராளுமன்றத்தையும், ஒரு நிர்வாகக் கழகத்தையும் நிறுவியது இதன் பின் இடம்பெற்ற தேர்தலில் என்குருமாவின் சட்சி பெரும் வெற்றியீட்டியபடியால் ஆளுநர் அப்பொழுது சிறையிலிருந்து என்குருமாவை விடுவித்துப் பிரதமராகப் பதவியேற்குமாறு கேட்டார். இதற்குப் பின்னர் 1954இல் இடம்பெற்ற தேர்தலிலும் என்குருமாவின் கட்சியே பெரும்பான்மையைப் பெற்றபடியால் அவர் மீண்டும் பிரதமராகி, முற்றிலும் ஆபிரிக்கர்களைக்கொண்டதும், பாராளுமன்றத்துக்கு முழுப்பொறுப்புள்ளதுமான ஒரு மந்திரி சபையுடன் ஆட்சியை நடத்தினார். இவ்வாறு கானா சுயாட்சியைப் பெற்றபோதும் பூரண சுதந்திர மடையவில்லை, அந்நிலையில் பிரித்தானியா கானாவின் அடுத்த தேர்தலில் மக்களிற் பெரும்பான்மையினர் சாதகமாக வாக்களித்தால் கானாவுக்குச் சுதந்திரம் அளிக்கப்படும் என 1956ல் உறுதி கூறியது. அதைத் தொடர்ந்து நிகழ்ந்த தேர்தலிலும் என்குருமாவின் சட்சியே பெரும்பான்மையைப் பெற்றபடியால் 6-4-1957 முதல் கானா ஒரு ஆணிலப்பத அரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அது 1960இல் ஒரு குடியரசாகியது. ஆயினும் அந்நாட்டின் விடுதலைக்காக உழைத்த என்குருமா 1967ல் சீனாவுக்குச் சென்றிருந்தபோது கானாவில் ஏற்பட்ட ஒரு புரட்சியினால் தம் பதவியை இழந்தார் அவர் இவ்வாண்டு 1972 இறந்தார். அஃதெவ்வாறாயினும் ஆங்கிலேயரின் ஆபிரிக்க குடியேற்றநாடுகளில் முதலாவதாகச் சுதந்திரமடைந்த நாடு என்ற வகையில் கானா அக்கண்டத்தில் வாழும் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்து வேறு பல நாடுகளின் எழுச்சிக்கும் தூண்டு கோலாயிருந்திருக்கிறது.



படம் 13. சுதந்திரமடைந்த ஆபிரிக்க நாடுகள் ஆபிரிக்கப் பங்கீடு என்னும் படத்துடன் ஒப்பிடுக.

ஆபிரிக்காவில் எஞ்சியுள்ள பிரித்தானிய குடியேற்றம் சுவாசிலாந்தாகும். ஆயினும் றொடீசியா 1965இல் தன்னைத்தானே சுதந்திர அரசாகப் பிரகடனம் செய்த போதிலும் பிரித்தானியா அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஆண்டுகள் சுதந்திரமடைந்த ஆண்டுகளைக் குறிக்கும்.

(2) இரு வல்லரசுகள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் பிரித்தானியர், பிரான்ஸ் என்னும் இரண்டும் வகித்த வல்லரசுப் பதவியை இன்று ஐக்கிய அமெரிக்காவும், இரசியாவும் வகிக்கின்றன எனலாம். ஐக்கிய அமெரிக்காவும் இரசியாவும் இன்று உயர் வல்லரசுகள் என மதிக்கப்படுகின்றன. இவை இரண்டாம் உலகப் போரின் பின்னரேயே இத்தகைய மேம்பட்ட நிலைமை அடைந்துள்ளன. ஆயினும் ஐக்கிய அமெரிக்கா முதலாம் உலகப்போர்க்காலத்திலிருந்தே வலிமை வாய்ந்த ஒரு நாடாயிருந்து வந்திருக்கிறது. அங்கு முதலாம் உலகப்போர்க் காலத்திலும் அதையடுத்த பத்து ஆண்டுகளிலும் தொழில்கள் பெருமளவு விருத்தியடைந்தன. இதன் விளைவாக உற்பத்தி உள்நாட்டுத் தேவைக்கு மிதமிஞ்சி ஏற்பட்டதனால் வெளிநாட்டு வர்த்தகமும் முன் என்றுமில்லாத அளவுக்கு விருத்தியடைந்தது. இதனால் நாட்டில் 'முதல்' பெருந்தொகையைக் குவிந்தது. அம் முதல் தொழில்களின் விருத்திக்கு மேலும் உதவியதோடு வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்கும் பயன்பட்டது.

இவ்வாறு முதலீடு செய்யப்பட்ட பணமும் பிறநாட்டுப் பொருளாதார நெருக்கடிகளின் காலங்களில் கடனாகப் பெற்ற பணமும் நாட்டுக்கு அதிகவருவாயை அளித்தன, எனவே 1928-33 காலத்தில் நிலவிய பொருளாதார நெருக்கடி நீங்கிய பின் ஐக்கிய அமெரிக்காவில் மீண்டும் தொழில்கள் வளர்ச்சியடைந்தன.

ஐக்கிய அமெரிக்காவின் தொழில் வளர்ச்சிக்கு அந்நாட்டின் வேறுபட்ட வருவாய்கள் அடிப்படையாயுள்ளன எனலாம். இரும்பு, உயர்தர நிலக்கரி, மங்கனீசு முதலிய தூண மூலப் பொருட்கள் அமெரிக்காவின் இரும்பு உருக்குத் தொழில்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாயுள்ளன. அந்நாட்டில் வேறுபட்ட காலநிலைகள் காணப்படுதல் பலவகையான பயிர்களின் செய்கைக்கு உதவியுள்ளது. மேலும் அங்கு ஏற்பட்ட விஞ்ஞான தொழில் நுட்பக் கல்வியின் விருத்தி, தொழில் துறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி, வெளியுலக ஆராய்ச்சிக்கும் வித்திட்டது. அன்றியும் ஐக்கிய அமெரிக்காவின் குடித்தொகை அண்மைக்காலத்தில் கணிசமான அளவு அதிகரித்ததும் கவனிக்கத்தக்கது. குடித்தொகை அதிகரிப்பு பெருமளவு வெளி நாட்டுக் குடிவரவினால் ஏற்பட்டது. இதன் விளைவாக 1940-50 காலத்தில் 14.5 வீதமும், 1950-60 காலத்தில் 18.5 வீதமும் ஐக்கிய அமெரிக்காவின் குடித்தொகை அதிகரித்துள்ளது. இதனால் ஐக்கிய அமெரிக்கா குடித்தொகையில் இன்று உலகில் நான்காவது பெரிய நாடாயுள்ளது. (சீனா, இந்தியா, இரசியா ஆகியன முதல் மூன்று நாடுகளாகும்.)

ஐக்கிய அமெரிக்கா 19ம் நூற்றாண்டில் உள்நோக்கமில்லாத வரசாயிருந்தது, அது அக்காலத்தில் வெளிநாட்டு விடயங்களில் அதிக கரிசனை காட்டாது ஒதுங்கியிருந்தது. முதலாம் உலகப்போரில் ஜேர்மனியின் அடாதசெயல்களும், இரண்டாம் உலகப்போரில் யப்பானின் அடாதசெயல்களும் ஐக்கிய அமெரிக்காவை உலகப் போர்களில் ஈடுபடச் செய்தன அப்போர்களில் அது நேச நாடுகளுக்கு மகத்தான உதவி செய்து போர்களின் முடிவைத் தீர்மானித்தது. இவ்வாறு ஐக்கிய அமெரிக்கா எப்போரிலாவது தோற்கடிக்கப்படாத ஒரு வல்லரசாகவும் பகைவரசுகளின் படைகள் கால்வைக்காத கரையையுடைய ஒரு வல்லரசாகவும் திகழ்கிறது. இப்பெருமை பிரித்தானியாவுக்கு முண்டெனினும் அது இரு உலகப்போர்களினாலும் வலுவிழந்து இன்று இரண்டாம்தர வல்லரசாகிவிட்டது. ஆனால் ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் போர்களினால் மேலும் பலமடைந்து விட்டது எனலாம். போரின் தூண்டுதலினால் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பும் அறிவியல் ஆராய்ச்சிகளும், ஐக்கிய அமெரிக்காவின் வளர்ச்சிக்கு மேலும் துணை செய்தன. பின் அணுக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவின் உயர் வல்லரசு நிலை உறுதிப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அணுவினால் இயங்

கும் நீர்மூழ்கிகளும், விண்வெளிக்கப்பல்கள், ஏவுகணைகள் முகலி னவும் கண்டுபிடிக்கப்பட்டதனால் ஐக்கிய அமெரிக்காவின் இரா ணுவ பலம் இரண்டாம் உலகப் போரின் போது இருந்ததை விட இன்று பன்மடங்கு அதிகரித்துள்ளது. இன்று உலகில் சன நாயக ஆட்சியின் பாதுகாவலனாகவும், சனநாயக நாடுகளின் தலைவனாகவும் திகழும் ஐக்கிய அமெரிக்கா உலகின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஒரு வல்லரசாயுள்ளது உலகறிந்த உண்மையாகும்.

இரண்டாம் உல்கப்போரின் பின் இரசியாவும் ஓர் உயர் வல்லரசாகியுள்ளது. ஆனால் இரசியா ஐக்கிய அமெரிக்காவை விடச் சற்று விரைவாகவே வல்லரசு நிலையை அடைந்துள்ளது எனலாம். இரசியாவின் வளர்ச்சி ஏறத்தாழ 30 ஆண்டுகளில் (1930-60) ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. முதலாம் உலகப் போரின் பிற்பகுதியில் ஏற்பட்ட போல்செவிக் புரட்சியின் போது நிறுவப்பட்ட பொது உடைமை முறையான அரசாங் கம் நாட்டின் உற்பத்தி, நிர்வாகம், கல்வி, சமூகவாழ்க்கை முதலிய பலவற்றையும் தன் பிடியில் வைத்துச்சர்வாதிகார ஆட்சி நடத்தியது. அத்தகையசர்வாதிகார ஆட்சியை 25 ஆண்டு கள் வரை ஸ்ராலின் செலுத்தி வந்தான் (1928–53). அவன் பல ஐந்து ஆண்டுத்திட்டங்களைச் செயல்படுத்தி. இரசியாவின் இன்றைய தொழில் விருத்திக்கு அத்திவாரமிட்டான். அவனது ஆட்சிக் காலத்தில்தான் இரசியா, பழைய நிலை மாறி நவீன வல்லரசாக உதயமாகியது எனலாம் இரசியாவை ஒரு வல்லர சாக்குவதில் ஸ்ராலின் பங்கைமறுக்க முடியாது. பின் இரண் டாம் உலகப் போர்க் காலத்தில் இரசியா ஜேர்மனியினால் எதிர்பாராத விதமாகத் தாக்கப்பட்டதனால் நாட்டில் பலத்த அழிவு ஏற்பட்டது. ஆயினும் போரின் பின் ஸ்ராலின் மீண்டும் இரு ஐந்து ஆண்டுத்திட்டங்களை அமல் நடத்திப் போர் அழிவை ஈடு செய்ததோடு நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பலப் படுத்தினான். உலகப்போரின் பயனாக இரசியா மேற்கு நோக்கி விரிவடையவும் போலந்து செக்கோசிலோவாக்கியா, கங்கேரி முதலிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தனது ஆதிக்கத்தையும் பொது உடைமை ஆட்சியையும் நிலை நாட்டவும் முடிந்தது இவற்றின் மூலம் இரசியாவின் செல்வாக்கும், பலமும் மேலும் அதிகரித்தன. அதேசமயம் இரசியாவில் மூலவளங்களை விருத்தி செய்வதிலும், தொழில்களை விரிவுபடுத்துவதிலும் ஸ்ராலின் காட்டிய வழியை அவனுக்குப் பின் வந்த தலைவர்களும் பின் பற்றி நாட்டைக் கட்டியெழுப்புவதில் முழு மூச்சாக ஈடுபட் டனர். அத்துடன் மேற்கு நாடுகளை முந்தவேண்டும்என்னும் நோக்குடன் அறிவியற் கல்வி வளர்ச்சியிலும் ஆராய்ச்சித்துறை

யிலும் இரசியா பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டது. அணு பற்றிய ஆராய்ச்சியும் அதிக கவனத்தைப் பெற்றது. இதன் பயனாக இரசியா 1949 இல் தனது முதலாவது அணுக் குண்டை வெடித்தது. பின் 1953 அளவில் நீரகக் குண்டும் பரீட்சிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த பல ஆண்டு களாக விண் வெளி ஆராய்ச்சித்துறையில் இரசியா பல சாதனை களை நிலை நாட்டி ஐக்கிய அமெரிக்காவுடன் போட்டியிட்டு வருகிறது. இத்துறையில் முதலாவது சாதனையாக 1957 ஒக் ரோபர் 4 இல் 'ஸ்புட்னிக், என்னும் விண் வெளிக் கப்பலை இரசியா அனுப்பியது. இதன் பின்னர் 1958 பெப்ருவரியில் அமெரிக்காவும் Explorer I என் னும் விண்வெளிக் கப்பலை அனுப்பியது. இதைத் தொடர்ந்து 1963 ஏப்ரிலில் இரசியா யூறி காகரின் என்பவரை விண் வெளியில் வலம் வரச்செய்து வேறொரு சாதனையை நிலைநாட்டியது. இதற்குப் போட்டியாக 1965 ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா அலென், செப்பாட் என்னும் இருவரை விண்வெளியில் வலம்வரச் செய்து ஒரு சாதனையை ஏற்படுத்தியது. பின் 1970 இல் அது சந்திரனில் மனிதனை இறக்கி ஒரு சாதனையை நிறைவேற்றியுள்ளது. இவ் வாறு விண் வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் இரு வல்லரசுகளும் தற்பொழுது 'கூடிவாழும்' சித்தாந்தத்தைக் கைக்கொண்டுவரு கின்றன. அவை அக்கொள்கையைக் கைவிட்டு இராணுவப் பூசலில் ஈடுபடுமாயின் அதுவே உலகின் அழிவுக்கு ஆரம்பமா கும். எனவே இரு உலகப் போர்களில் எற்கனவேபேரழிவுக்குள் ளாகிய உலகை இறுதியான இன்னெரு போரில் மூழ்கவைக் காது மனித குலத்தைப் காப்பது இவ்விருவல்லரசுகளின்பொ றுப்பு என்பது எவருமறிந்த உண்மை.

வினாக்கள்

1. இந்திய சுதந்திரப்போரில் மகாத்மாகாந்தி நேதாஜி ஆகி யோர் பின்பற்றிய வழிகளை ஒப்பிட்டு விவரிக்குக.
2. சீனாவில்பொது உடைமைஆட்சி நிறுவப்பட்ட வரலாற்றை வரன்முறையாக எழுதுக.
3. இந்தோனேசியா, ஒல்லாந்தரின் ஆட்சியினின்று விடு பட்ட வரலாற்றை எழுதுக.
4. கானா, விடுதலை பெற்ற வரலாற்றைக் கூறுக.
5. இரண்டாம் உலகப்போரின் பின் அமெரிக்கா, இரசியா ஆகியவை வல்லரசாகிய வரலாற்றை விபரிக்குக.
6. வரலாற்றுக் குறிப்பெழுதுக :—
   (1) நாசர், (2) சுகார்னோ, (3) என்குறுமா.

பிற்சேர்க்கை

வரலாற்றுக் குறிப்புகள்.

பாண்டுங் :- இது இந்தோனேசியாவில் உள்ள ஒரு நகராகும். இந்நகர் 1955ல்சர்வதேச முக்கியத்துவம்பெற்றது அவ்வாண்டு ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் மாநாடு ஒன்று அங்கு நடந்தது. அதில் அதிநகமாக ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள எல்லாச் சுதந்திர நாடுகளும் பங்குபற்றின. அம்மாநாட்டில் சீனவும் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது. இம்மாநாடு வல்லரசுகள் எதனுடனும் கூட்டுச்சேராக்கொள்கையை வலியுறுத்திய தோடு பிரசித்திபெற்ற பஞ்சசீலக் கொள்கையையும் பிரகடனப் படுத்தியது. கடவுள், தேசியம், பிரதிநிதித்துவ அரசாங்கம், சமூக நீதி, ஆகியவற்றில் நம்பிக்கைவைத்ததலே பஞ்சசீலமாகும். பாண்டுங் மாநாடு எல்லா நாடுகளும் பஞ்சசீலத்தைப் பின்பற்றுவதன் மூலம் தமக்கிடையேபிணக்குகள் ஏற்படாமல் தடுக்க முடியும் எனத் தெரிவித்தது. பாண்டுங் மாநாட்டை ஒழுங்கு செய்வதில் அப்போது இலங்கைப் பிரதமராயிருந்த சேர் ஜோன் கொத்தலாவலையும் பெரும்பங்கு வகித்தார். இம்மாநாடு1000 கோடி மக்களைக் கொண்ட நடுநிலை நாடுகளும் உலகில் ஒரு சக்தி என்பதை எல்லோருக்கும் உணர்த்தியது.

கிளாட்ஸ்ரன்:- இவர் விக்ரோறியா மகாஇராணியார் காலத்தில் இங்கிலாந்தில் ஒரு பிரதான தலைவராகத் திகழ்ந்தார். ஒரு லிவர்ப்பூல் வியாபாரியின்மகனை இவர் 1832 ல் முதன் முதல் பாராளுமன்ற உறுப்பினராஞர். பின் 1866 இல் லிபறல் கட்சியின் தலைவராகி 1868 இல் பிரதமர் பதவியையும் பெற்றார். இவரது முதலாவது மந்திரி சபை இராணுவம், கல்வி சட்டமுறை முதலியவற்றில் பல சீர்திருத்தங்களை மேற் கொண்டதோடு ஐரிஷ் நிலச்சட்டம், இரகசியவாக்களிப்புச் சட்டம், முதலியவற்றையும் நிறைவேற்றியது. கிளாட்ஸ்ரன் இரண்டாவது தடவை பிரதமரான காலத்தில் (1884 இல்) இரண்டாவது சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அவரது மூன்றுவது மந்திரிசபைமிகக் குறுகிய காலமே பதவியிலிருந்தது. ஆனால் நான்காவதுமந்திரி சபையில் இரண்டாவது ஐரிஷ் சுய ஆட்சி சட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்கப் பட்டபோதும் அது தோல்வியடைந்தது. கிளாட்ஸ்ரன் தமது அரசியல் எதிரியாகிய டிஸ்ரறியுடன்பாராளுமன்றத்தில் நிகழ்த்திய பல விவாதங்கள் பொதுமக்களுக்குச் சுவையான அறிவு விருந்தாயிருந்தது. கிளாட்ஸ்ரன் ஒரு சிறந்த பாராளுமன்ற வாதி

யாகவும், தாராண்மைவாதியாகவும் திகழ்ந்தார். ஐரிஷ்மக்களைத் சுதந்திரமளிக்க இவர் எடுத்த முயற்சிகள் அதை வலியுறுத்தும் ஆயினும், இவர் தான் எடுத்துக்கொண்ட ஒரு விடயத்திலேயே முழுக்கவனத்தையும் செலுத்தி ஏனைய பிரச்சினைகளில் போதிய கரிசனை காட்டாது விட்டதனால் அவ்வப்போது தமது சகபாடிகளுடன் முரண்படவேண்டியிருந்தது: க்ளாட்ஸ்ரன் 1898இல் இறந்தார்.

ஸ்மட்ஸ்:- இவர் தென்னபிரிக்க போயர்களின் தலைவர்களில்ஒருவராவர் இவர் ஒரு சட்டவாதியுமாவர். இவர் 1889இல் போல் குறூகர் என்னும்போயர் தலைவனுக்கும் பிரித்தானியருக்குமிடையே நல்லுறவைவளர்க்க முயற்சி எடுத்தார் பின் போயர்போர்க்காலத்தில் ஜெனரலாகப் பதவி உயர்ச்சி பெற்றுப்படைகளிஒரு பிரிவுக்குத் தலைமைதாங்கினர். அப்போர் முடிவில் இவர் போதா என்னும் இன்னொரு தலைவருடன் ஒத்துழைத்து 'வெறினிகிங்' அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்த உதவினர். மேலும் இவர் போதாவின் அரசாங்கத்தில் தடிபற்ற நாட்டுச்செயலாளராகப் பதவிவகித்து தென்னபிரிக்க - இந்தியா விடயமாக மகாத்மா காந்தியுடன் 1913 இல் ஒரு இணக்கத்திற்கு வந்தார். பின் முதலாம் உலகப் போரின்போது ஜேர்மன் திதன்மேற்கு ஆபிரிக்காவில், நேசநாடுகளின் படைகளுக்குத் தலைமை தாங்கிப் போரிட்டுப் பெரும் புகழ் பெற்றார். ஸ்மட்ஸ் உலகப் போர் முடிவில் பாரிசில் இடம்பெற்ற சமாதான மாநாடுகளிலும் பங்குபற்றிச் சர்வதேச சங்கத்தின் அமைப்புப் பற்றிய முயற்சிகளிலும் ஈடுபட்டார். இவரது ஆலோசனையின்படியே ஜேர்மனியினதும், துருக்கியினதும் முன்னைய குடியேற்ற நாடுகள் பொறுப்பாட்சிப் பிரதேசங்களாக்கப்பட்டன. இதன் பின் 1919 முதல் 1924 வரை தென்னபிரிக்காவின் பிரதமராகவும் ஸ்மட்ஸ் பதவி வகித்தார். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில், பொதுநலவாயத்தின் ஒரு பழம் பெரும் தலைவராக மதிக்கப்பட்ட ஸ்மட்ஸ் போரின் முடிவில் ஐ.நா. தாபனத்தை உருவாக்கும் முயற்சிகளிலும் முக்கிய பங்கு வகித்தது குறிப்பிடத்தக்கது. இவர் 1930ல் இறந்தார்.

பிரங்கிளின் றூஸ்வெல்ற் :- இவர் ஐக்கிய அமெரிக்க சனாதிபதிகளில் ஒருவர். இவர் 1928 இல் நியூயோர்க் மாகாணத்தின் ஆளுநராக தெரிவு செய்யப்பட்டார். பின் 1932ல் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டுக் கூவரைத் தோற்கடித்தார் இவர் 1928க்குப் பின்நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் தீவிரமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்; விவசா

யிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நிலைமைகளைச் சீர்ப்படுத்தினர். பல பொது வேலைத் திட்டங்களை அமுல் நடத்தினர். பின் 1936 இல் இரண்டாவது முறையாகவும் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட றூஸ்வெல்ற் சோவியத் இரசியாவுக்கு (1933 இல்) அரசியல் அங்கீகாரமளித்தார். அன்றியும் இரண்டாம் உலகப்போரின்போது வழமையான நடுநிலையைக் கைவிட்டுப் பிரித்தானியாவுக்குப் போர்க் கருவிகளையும் வெடிமருந்தையும், விமானங்களையும் உதவினர். அத்துடன் 1941 இல் 'கடன் குத்தகைச் சட்டம்' என ஒன்றை நிறைவேற்றி ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்புக்கு முக்கியமான ஒரு நாட்டுக்கு போர்க் கருவிகளை விலைக்குவிற்கவோ குத்தகைக்குக் கொடுக்கவோ வசதி செய்தார். இவ்வாறு 50, ¼ கோடி டாலர் பெறுமதியான பொருட்கள் நேசநாடுகளுக்கு வழங்கப்பட்டன. றூஸ்வெல்ற், வின்ஸ்ரன் சேர்ச்சிலுடன் சேர்ந்து 1941இல் அத்திலாந்திக் பட்டயத்தை விடுத்தார்: பின் ஐப்பானியர் பேள் ஹாபரில் தங்கியிருந்த அமெரிக்கப் படைகளைத் தாக்கியதைத் தொடர்ந்து நேசநாடுகளுடன் தோளோடு தோள் நின்று போர் புரியத் துணிந்து போரில் தமது நாட்டை ஈடுபடுத்தி நேச நாடுகளின் வெற்றிக்கு அடிகோலிய றூஸ்வெல்ற் ஐ.நா. தாபன்த்தின் ஆரம்ப முயற்சிகளிலும் பெரும் பங்கு வகித்தது குறிப்பிடத்தக்கது. அவர் 1945 ஏப்ரலில் இறந்தார்

மன்ரோக் கொள்கை :—ஐக்கிய அமெரிக்க சனாதிபதிகளில் ஒருவரான யேம்ஸ் மன்ரோ 1823 இல் காங்கிரசுக்கு விடுத்த ஆண்டுச் செய்தியில் இது அடங்கியிருந்தது. அக்காலத்தில் ஸ்பானியாவின் அமெரிக்க குடியேற்றங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை அடக்குவதற்கு ஐரோப்பிய அரசுகள் மேற்கொண்ட முயற்சியைக் கண்டித்தே மன்ரோ முன்குறிப்பிட்ட கொள்கையைப் பிரகடனம் செய்தார் இதன்படி (1) அமெரிக்க கண்டத்தில் ஐரோப்பியர் எதிர்காலத்தில் குடியேற்றங்களை நிறுவ முடியாதெனவும் (2) அமெரிக்காவில் காணப்படும் அரசியல் அமைப்பு ஐரோப்பிய அரசியலமைப்பிலும் வேறுபட்டதென்றும், (3) ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய குடியேற்ற நாடுகளில் தலையிடாதெனவும், ஐரோப்பிய போர்களில் ஈடுபடாதெனவும் அதே சமயம் ஐரோப்பியரின் தலையீட்டை ஐக்கிய அமெரிக்கா பார்த்துக்கொண்டிரா தெனவும் தெளிவுபடுத்தப்பட்டது.

இக்கொள்கை அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையின் அச்சாணியாக ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் அமைந்தது.

மன்ரோவின் கருத்தை 1815 இல் சனாதிபதி போல்க் சிறிது மாற்றி இக்கண்டத்து மக்கள் மட்டுமே' அவர்களின் தலை விதியை நிர்ணயிக்கும் உரிமையுடையவர்கள் எனத் தெரிவித் தார். பின் தியோடோர் ரூஸ்வெல்ற்றும் இக்கொள்கையை ஆகரித்து ஐக்கிய அமெரிக்கா ஒரு சர்வதேச பொலிஸ் அரசு எனத் தெரிவித்தார் ஆயினும் இரண்டாம் உலகப் போர்க் காலத்திலிருந்து ஐக்கிய அமெரிக்கா தனது தனித்தியங்கும் கொள்கையைக் கைவிட்டு விட்டுலகின் அரசியல் பொருளா தாரப் பிரச்சினைகளில் அதிக அக்கறை காட்டிவருகிறது.

அமிர்தசரஸ் :—

இது பஞ்சாப்பில் உள்ள ஒரு நகராகும். இங்குள்ள யாலியன்வாலாபாக் என்னுமிடத்தில்தான் பிரசித்திபெற்ற **'அமிர்தசரஸ் படுகொலை'** நிகழ்ந்தது. அங்கு 'ரௌலற் சட்டம் என்னும் ஓர் அக்கிரமமான சட்டத்திற்கு ஆட்சேபனை தெரி விப்பதற்காக ஒரு நாள் ஹர்த்தாலை மேற்கொண்டு மக்கள் கூடியிருந்தபோது ஜெனரல் டையர் என்பான் தனது படை வீரரைக் கொண்டு மக்கள் கூட்டத்தின்மீது துப்பாக்கிப் பிர யோகம் செய்தான் அதில் 400 பேர்வரை இறந்தனர். இப் படுகொலைச் சம்பவம் மகாத்மாகாந்தியை விடுதலைப் போரின் முன்னணிக்குக் கொண்டுவந்தது.

வாஷிங்டன் :—

அமெரிக்க குடியேற்ற நாடுகள் பிரித்தானியாவுக்கு எதி ராக மேற்கொண்ட விடுதலைப்போரில் குடியேற்ற நாடுகளின் படைத்தலைவராக நியமிக்கப்பட்ட ஜோர்ஜ் வாஷிங்டன் என் பாரின் நினைவில் இந்நகரம் பெயரிடப்பட்டுள்ளது. இது ஐக் கிய அமெரிக்காவின் தலைநகரமுமாகும். இங்கு 1921 இல் தூர கிழக்கு விடயங்களில் ஈடுபாடுள்ள நாடுகளின் மாநாடு ஒன்று கூடியது அம்மாநாட்டில் யப்பான் தனது கடற்படை யைக் குறைக்கவும் சீனாவில் ஆதிபத்திய உரிமை கோருவதைக் கைவிடவும் சாகலீனைச் சீனாவிடம் கொடுக்கவும் சம்மதித்தது.

டங்கேர்க் :—

இது பெல்சியத்திலுள்ள ஒரு துறைமுகமாகும். 1940 மே யில் ஜேர்மன் படைகள் பெல்சிய, பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்துவிட்டு டோவரில் நிலைகொண்டு பிரித்தானியப் படைகளை நோக்கி முன்னேறின. அப்போது தாக்குதலைச் சமா ளிக்க முடியாத நிலையில் பிரித்தானிய கடற்படை சுமார் 900 படகுகளையும், கப்பல்களையும், பயன்படுத்திப் பிரித்தா னிய படைகளில் 10/9 ஐ (3,55000) வெளியேற்றியது.

பற்றிஸ்லுமும்பா :—

1960 இல் கொங்கோநாடு சுதந்திரமடைந்தபோது இவர் அதன் முதற் பிரதமராஞர். ஆனல் சுதந்திரம் அடைந்த ஒரு வாரத்திற்குள்ளேயே நாட்டில் இராணுவக்கிளர்ச்சியும் கொந்தளிப்பும் உள்நாட்டுப்போரும் ஏற்பட்டது அப்போது லுமும்பாவுக்குப் பகைபதியாகிய சகவபு என்பாருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது அன்றியும் கசாய் கட்டாங்கா என்னும் பிரதேசங்கள் கொங்கோவிலிருந்து பிரிவதாகப் பயமுறுத்தின. பின் சோம்பே தலைமையில் கட்டாங்கா தனிநாடாகியது அவ்வேளை கொங்கோ இராணுவம் லுமும்பாவைச் சிறைபிடித்துக் கட்டாங்கா அரசிடம்கையளித்தது. பின்னர் கட்டாங்கா காவற்படையினர் அவரைக் கொன்றனர். அந்நிலையில் கொங்கோவில் அமைதியை நிலைநாட்ட ஐ நா. தாபனம் தலையிட்டது.

ஹொங்கொங் :—

இது சீனவின் தென்கரையோரமாக உள்ள ஒரு தீவாகும் இது 1838 - 42 காலத்தில் பிரித்தானியா சீனவுடன் மேற்கொண்ட அபினிப் போரின்போது பிரித்தானியர் வசமாகியது. இக்காலத்தில் வேறு 4 துறைகளும் பிறநாட்டு வர்த்தகத்துக்குத் திறந்து விடப்பட்டன இவை உடன்படிக்கைத்துறைகள் எனப்படும் பின்னர் 1897 முதல் நூறுஆண்டுகளுக்கு ஹொங் கொங் தீவையும் அதன் வடக்கிலுள்ள கௌலூன் பகுதியையும் பிரித்தானியா சீனவிடமிருந்து குத்தகைக்குப் பெற்ற இன்று ஹொங்கொங் தென்கிழக்காசியாவிலுள்ள முக்கியமான துறைகளில் ஒன்ருயுள்ளது.

கியூபா :—

கரிபியன் கடலிலுள்ள இத்தீவில் 1959இல் ஒரு புரட்சி ஏற்பட்டபோது 'பற்றிஸ்ரா' என்னும் சர்வாதிகாரி பதவியிலிருந்து நீக்கப்பட்டு 'பிடெல் காஸ்ற்ரோ' என்பார். சகல அதிகாரங்களையும் பெற்ருர். அவர் பொது உடைமையை ஆதரிப்பவர் கியூபா 1962 இல் சர்வதேச முக்கியத்துவம்பெற்றது அவ்வாண்டில் கியூபாவில் இரசியா ஏவுகணைத்தளங்களை அமைப்பதாகக் குற்றஞ்சாட்டிய அமெரிக்கா அதைத்தடுப்பதற்குத் தனது படைப்பலத்தைப் பயன்படுத்தவும் துணிந்தது. அப்போது ஜோன் கென்னடி அமெரிக்க சனதிபதியாயிருந்தார். அப்பொழுது இரசியப் பிரதமர் குருசேவ் நெருக்கடியையும் உலகப்போரொன்றையும் தவிர்ப்பதற்காகக் கியூபாவிலிருந்து ஏவுகணைத்தளங்களை அகற்றச் சம்மதித்தார். ஆயினும் பல்லாயிரம் இரசியப்படை வீரர்கள் அதன் பின்னரும் கியூபாவில் தங்கியிருந்தனர்.

பேளின் :—

இது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு ஜேர்மன் நகர மாகும். நெப்போலியன் இங்கிருந்து விடுத்த கட்டளை கள் (1806)இல் அவனது கண்டத்திட்டத்தை வெளிப் படுத்தின 1877-78இல் இரசிய-துருக்கிப் போரின்பின் பால்கன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு மாநாடு இங்கு கூடியது அதற்குப் பிஸ்மார்க் தலைமை வகித் தார். மேலும் 1888இல் ஆபிரிக்காவின் பங்கீடு பற் றிய பிரச்சினைகளை விவாதித்து முடிவு செய்வதற்கு ஒரு சர்வதேசமாநாடு இங்குதான் கூடியது இரண்டாம் உலகப் போரின் பின்னர் பேளின் இரு கூறுக்கப்பட்டது அதன் கிழக்குப் பகுதிகிழக்கு ஜேர்மன் சனநாயக குடி யரசின் ஆட்சியின் கீழுள்ளது. மேற்கு பேளின் ஜேர் மன் இணைப்பரசின் கீழுள்ளது. மேற்கு பேளினுக் குச் செல்லும் பாதைகளை இரசியா 1949இல் தடுத்த போது பிரித்தானியாவும் அமெரிக்காவும் விமானங் கள் மூலம் 11 மாதங்கள் மேற்குபேளின் மக்களுக்கு உதவியளித்தன பின் இரசியா அப்பாதைகளை திறந்து விட்டது.

ஸ்ராலின்கிராட் :-

இது கஸ்பியன் கடலுக்கு அண்மையில்வொல்கா நதியிலுள்ள ஒரு நகராகும். இது ஸ்ராலின் என்னும் இரசிய சர்வாதிகாரியின் பெயரில் நிறுவப்பட்டுள்ளது. 1942 மேயில்ஹிட்லரின் படைகள் தெற்கு இரசியாவில் பெரும்தாக்குதலை மேற்கொண்டு இந்நகரைக்கைப்பற்ற முயற்சித்தன. ஆயினும் இரசியப்படைகள் வீராவேச த்துடன் போராடி ஜேர்மன் படைகளை முறியடித்தன. இதன் விளைவாகக் ஹிட்லர் தனது இரசியப்படையெடு ப்பைக் கைவிட்டார். இப்போரில் 3,00,000 ஜேர்மா யர் சிறைக்கைதிகளாயினர்.

காஷ்மீர் :—

வடஇந்தியாவிலுள்ள இந்நாடு பிரித்தானியர் கா லத்தில் சுதேச இந்து மன்னர்களால் ஆளப்பட்டது. 1947ம் ஆண்டில் இந்தியாவும் பாகிஸ்தானும் விடுதலை பெற்ற பின்னரும் இது தனிநாடாகவே இருந்தது.

இங்குள்ள மக்களில் ¾ பங்கினர் முஸ்லிம்களாவர். எனவே 1948 இல் வடமேற்கு எல்லைப்புறப் பதானியர் காஷ்மீரைத் தாக்கியபோது காஷ்மீர் மன்னர் இந்தியாவின் உதவியைக் கேட்க அது உடன் படைகளை அனுப்பியது. அவ்வேளை பாகிஸ்தானும் தனதுபடைகளை அங்கு அனுப்பியதால் இரு நாடுகளின் படைகளும் மோதின பின் 1049 ஜனவரியில் ஐ நா. வின் தீர்ப்போர் நிறுத்தம் செய்யப்பட்டது. பின் 1959இல் இந்தியா தனது ஆணையின் கீழிருந்த காஷ்மீர் தேசத்தைத்தனது நாட்டின் ஒரு பகுதியாகச் சேர்த்துக்கொண்டது. இதைப் பாகிஸ்தான் ஆட்சேபித்தது இதன் பின் சில ஆண்டுகள் நெருக்கடி நீடித்து 1965இல் இருநாடுகளும் மீண்டும் போரிட்டன. இறுதியில் ஐ. நா. வின் தலையீட்டினால் அப்போரும் முடிவுற்றது ஆயினும் காஷ்மீர் பிணக்கு இன்னும் முற்றுகத் தீரவில்லை.

வாட்டர்லூ :-

இது பெல்சியத்திலுள்ள ஒரு நாடாகும். நெப்போலியனின் வீழ்ச்சியைக் குறிக்கும் வாட்டர்லூப் போர் 1815யூன் 18 இல் இடம்பெற்றது. இங்கு ஒல்லாந்த. பெல்சிய, ஜேர்மன் படைகள் ஒரு புறமாகவும், பிரான்சியப் படைகள் மறுபுறமாகவும் மோதின. இப்போரில் பிரித்தானிய தளபதியாகிய வெல்லிங்ரன் கடமையாற்றினார். இப்போரில் தோல்வியுற்ற நெப்போலியன் பாரிசுக்குத் தப்பியோடித் தனது பதவியைத் துறந்துபிரித்தானியரிடம் சரண்புகுந்தான். இதன் மேல் அவன் சென்ஹெலனாவுக்கு நாடுகடத்தப்பட்டான்.

அல்சேஸ் லொறேன் :-

ஜேர்மனிக்கும் பிரான்சுக்குமிடையே நீண்ட காலம் நிலவிய பகைமைக்கு 'அல்சேஸ்லொறேன்' பிரதேசத்தின் உரிமையும் ஒரு காரணமாகும். ரைன் நதியின் இடது கரையையொட்டியுள்ள இப் பிரதேசங்கள் தொடக்கத்தில் பிரான்சின் ஆட்சியின் கீழிருந்தன. இரும்பும் நிலக்கரியும் அதிகமாயிருப்பது இப்பிரதேசங்

களின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது. இதனால் 1871 இல்பிறசிய-பிரான்ஸ் போரில் பிறசியா வைக் கைப்பற்றிக் தனது நாட்டுடன் சேர்த்துக்கொண்டது பின் முதலாம் உலகப் போர் முடிவில் வேர்சை உடன் படிக்கையின்படி இது மீண்டும் பிரான்சிடம் கைய ளிக்கப்பட்டது ஆயினும் மீண்டும் இரண்டாம் உலகப் போரின்போது ஜேர்மனிஇப்பிரதேசங்களைக் கைப்பற் றியது. பின் போர் முடிவில் பிரான்ஸ் இவற்றை மறுபடி பெறறுக்கொண்டது.

கலிப்பொலி :- இது டாடனெல் நீரிணைப்பகுதியிலுள்ள ஒரு துறையாகும். முதலாம் உலகப் போரின்போது நேசநாடுகளின் படைகள் டாடனெல் நீரிணையைக் கைப்பற்றித் துருக்கியை அடிபணியவைக்க முயற்சித் துக் கலிப்பொலிக்குடாநாட்டை அகப்படுத்த முனைந் தன. ஆயினும் அம்முயற்சியில் கடற்படை மட்டும் தனித்து ஈடுபட்டமையாலும், கடற் கண்ணி களின் அபாயம் காணப்பட்டதனாலும் அம்முயற்சி கைகூடவி ல்லை. பின்னர் படையுதவியுடன் இரண்டாவது தாக் குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் அதுவும் தோ ல்வியில் முடிவடைந்தது. கலிப்பொலிப் போரில்தான் முஸ்தபாகமால்என்னும் துருக்கிய வீரர்புகழ்பெற்றார் இப்போரில் நேசநாடுகள் 12,000 பேரை இழந்தன.

பலகிளாவா :-- கருங்கடலின் வடபகுதியிலுள்ள கிறை மியன்குடா நாட்டில் உள்ள ஒரு நகர் இது வாகும். 1854-56 கிறைமியன் போரின்போது தொடக்கநிலையில் செபஸ்ரபூலில் நிலைகொண்டிருந்த இரசியக் கடற்படை யைத் தாக்குவதற்காகப் பிரித்தானிய, பிரான்சிய படைகள் பலகிளாவாவில் தமது தளம்ஒன்றைநிறுவமு யற்சித்தன அவ்வேளை இரசியாவும் தனது படைகளைப பலப்படுத்தியிருந்தமையால் செபஸ்ரபூல் தாக்குதல் தோல்வியில் முடிந்தது. ஆயினும் பிரித்தானிய, பிரான் சிய படைகளைத் தூரத்துவதற்காக இரசியா மேற்கொ ண்டமுயற்சி பலகிளாவாவில் (1855ஒக்ரோபரில்) முறி யடிக்கப்பட்டது.

பிராங்போர்ட் :- இது ஜேர்மனியிலுள்ள ஒரு நகராகும். 1848 இல் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் புரட்சி ஏற்பட்டது. அவ்வேளை ஜேர்மனிய நாடுகளை ஒன்றுபடுத்தும்முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதற்காக பிராங்போர்ட் நகரில் ஒரு பாராளுமன்றம் கூட்டப்பட்டது. அப்பாராளுமன்றம் ஆஸ்திரியா நீங்கலாக ஏனைய ஜேர்மன் நாடுகளை உள்ளடக்கிய ஜேர்மனிக்கு ஒரு அரசியற் றிட்டத்தை வரைந்தது. ஆயினும் அப்பாராளுமன்றம் ஐக்கிய ஜேர்மனியின் முடியை பிறசிய மன்னனுக்கு வழங்கியபோது அவன் மறுத்ததினால் பிராங்போர்ட் பாராளுமன்றத்தோல்வியிலமுடிவடைந்தது.

அபிசீனியா :- இது ஆபிரிக்காவிலுள்ள ஒரு சுதந்திர அரசாகும் இன்று எத்தியோப்பியா என இது வழங்கப்படுகிறது. இந்நாட்டைக்கைப்பற்ற 1896 இல் இத்தாலி முயற்சித்த போதும் அது கைகூடவில்லை. ஆயினும் மீண்டும் 1934 இல் முசோலினி இத்தாலியின் சர்வாதிகாரியாயிருந்த போது அபிசீனியா மீது முழு அளவிலான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அந்நிலையில் அபிசீனியா அடிபணிந்தது. இச்செயலை ஆட்சேபித்து அபிசீனியா சர்வதேசசங்கத்துக்கு முறையிட்டபோதும் அதனால் எப்பயனும் விளையவில்லை.

குவீபெக் :- இது கனடாவிலுள்ள ஒரு மாகாணமாகும். இப்பிரதேசத்தில் தொடக்கத்தில் பிரான்சியர் பெருந் தொகையாகக் குடியேறியிருந்தனர். 1774 இல் பிரித்தானிய பிரதமர் நோத் குவீபெக்சட்டத்தை இயற்றி இம் மாகாணத்தை உருவாக்கியதோடு அங்கு வசித்த பிரான்சியர் தமது சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் பின்பற்ற அனுமதித்தார். இச்செயல் அற்கிலிருந்த ஐக்கிய அமெரிக்க குடியேற்ற வாசிகளுக்கு ஆத்திரமூட்டியது. பின் டோர்ஹாம் சிபார்சின்படி 1840 இல் குவீபெக்கும் ஒன்ராறியோவும் ஒன்றாக இணைக்கப்பட்டன.

கெற்றிஸ்பேர்க்:- ஐக்கிய அமெரிக்காவில் வாஷிங்டன் நகருக்கு அண்மையில் அமைந்துள்ள இந்நகரம். அமெரிக்கர்களுக்கிடையே நடைபெற்ற உள்நாட்டுப் போரின்பிற் பகுதியில் பிரதான களமாயிருந்தது. கெற்றிஸ்பேர்க் போரில் தெற்கு நாகெள் படுதோல்வியடைந்தன. ஆயினும் வடக்கு நாடுகள் பக்கத்திலும் ஏராளமானோர் உயிர் துறந்தனர். இப்போரின் நினைவுத்தினக் கூட்டமொன்று கெற்றிஸ்பேர்க்கில் இடம்பெற்ற சமயம்தான் ஜனாதிபதி லிங்கன் 1862இல் மக்களுக்காக சமக்கள்'' நடத்தும் அரசாங்கம் இம் மண்ணைவிட்டு நீங்காமலிருப்பதற்கு, என்னும் மணிமொழிகளை அடக்கி சொற்பொழிவை நிகழ்த்தினர். அம் மணி மொழிகள் சனநாயகத்தின் வரைவிலக்கணமாக இன்றும் எடுத்தாளப்படுகின்றன.

கொரியா :- சீனாவுக்கும் யப்பானுக்குமிடையில் 19 ஆம் நூற்றாண்டில் சச்சரவு ஏற்படுதற்கு இந்நாடு பற்றி உரிமை காரணமாயிருந்தது. இது நீண்ட காலமாகச் சுதந்திர நாடாயிருந்தபோதிலும் சீனாவுடன் நெருங்கிய தொடர்புடையதாயிருந்து வந்தது. ஆனால் 1894இல் இங்கு ஓர் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டபோது சீனாவும் யப்பானும் தலையிட்டதனால் இவ்விரு நாடுகளும் போரிடவேண்டிய தாயிற்று. அப்போரில் சீனா தோற்கடிக்கப் பட்டதனால் கொரியாவில் யப்பானின் செல்வாக்கு நிலைபெற்றது. ஆயினும் 1904 இரசிய யப்பானியபோரைத் தொடர்ந்து கொரியாவில் யப்பானின் செல்வாக்கு அதிகரித்தது. இவ்வாறு இரண்டாம் உலகப் போரின் முற்பகுதிவரை கொரியாவில் யப்பானின் ஆதிக்கம் காணப்பட்ட போதிலும் அப்போரின் இறுதியில் கொரியாவின் வடபகுதியை இரசியப் படைகளும் பிடித்துக் கொண்டமையால் 1945 முதல் நாடு இரண்டுபட்டது. இதன்மேல் 1949 யூன் 27 இல் வட கொரியப்படைகள், தென்கொரியா எல்லையை மீறியதாகத் தென்கொரியப் புகார் செய்ததைத் தொடர்ந்து அவ்விருநாடுகளிடையேயு உள்நாட்டுப் போர் ஒன்று

தொடங்கியது அப்போரில் ஐ. நா. சார்பில் அமெரிக்க சேனைத்தானிய படைகளும் தென்கொரியாவுடன்சேர்ந்து போரிட்டன. அதைத்தொடர்ந்து சீனாவும் தனதுபடைகளை வடகொரியாவுக்கு உதவிசெய்ய அனுப்பிதனால் போர் 1953 வரை நீடித்தது ஆயினும் 38°, அகலக் கோட்டு எல்லையில் பான்முன்ஜாம் என்னுமிடத்தில் இரு தரப்பினருக்குமிடையில் இடம் பெற்ற பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து போருக்குமுன்பிருந்தநிலை மைமீண்டும் நிலைநாட்டப்பட்டது.

லீப்சிக் :— இந்நகரம் மேற்கு ஜேர்மனியிலுள்ளது இது ஜேர்மனி ஒன்றுபடுவதற்கு முன்னர் பிரசியாவில் இருந்தது இங்கு தான் நெப்போலியனுக்கும் பிறசிய, ஆஸ்திரிய, சுவீடின்படைகளுக்குமிடையில் பிரசித்தி பெற்ற ''நாடுகளின் போர்'' இடம் பெற்றது மூன்று நாட்கள் இடம்பெற்ற அப்போரில் நெப்போலியன் தோல்வியடைந்தான். இப்போர்முடிவில் பிராங்போர்ட் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது ஆயினும் அதை நெப்போலியன் ஏற்காதமையினால் மீண்டும் அவனுடன் போர் ஏற்பட்டபோது நெப்போலியன் மீண்டும் தோற்கடிக்கப்பட்டு எல்பாவுக்கு நாடுகடத்தப்பட்டான்.

பேர்மோசா :—சீனாவுக்குக் கிழக்கில் அதன் அயலில் அமைந்துள்ள இத்தீவுக்கு ''தைவான்'' எனவும் எனவும் வேறு பெயருண்டு. இத்தீவு நீண்டகாலமாகச் சீனாவின் ஆட்சியின் கீழிருந்தது ஆயினும் 1894-95சீன யப்பானியப் போரில் தோல்வியடைந்தது சீனா அத்தீவை யப்பானுக்கு கையளித்தது பின் இரண்டாம் உலகப் போரின் முடிவில் சீனாவில் பொது உடைமை வாதிகளுக்கும் சியாங்கை சேக்கின் படைகளுக்குமிடையில் இடம் பெற்றஉள்நாட்டுப்போரில் தோல்வியுற்றசியாங்கைசேக்இத்தீவுக்குச்சென்று தேசிய சீனா என்ற பெயரால் ஒரு அரசாங்கத்தைத் தாபித்தார் இன்று ஐநா. வில் சீனாவும், மக்கள் சீனாவும் அங்கத்துவம் வகிப்பது குறிப்பிடத்தக்கது

ஹன்வெல்லை இது கொழும்புக்கு அண்மையில் அ
கிழக்கில் அமைந்துள்ள ஒரு சிறு நகராகும். இங்கு
1797 இல் கிழக்கிந்தியவர்த்தக சங்கத்தினரின் அந்
யாயமான வரிகளுக்கும் வரிவசூலிப்பு முறைகளுக்
கும் எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர் அக்கல
கத்தின் தொடக்கநிலையில் இங்கு வரி வசூலிப்பவன்
ஒருவன் கட்டி வைக்கப்பட்டதின் பிரித்தானிய படை
களின் தலையீட்டினால் தப்பிப்போனான். பின் அண்ட
ரூஸ் என்ற இறைவரிப் பொறுப்பாளன் தற்காலிக
மாக நீக்கப்பட்டிருந்ததென்ன வரியை மீண்டும்
அறவிடமுயற்சித்த போது மீண்டும் இந்த கலவரங்
கள் ஏற்பட்டன.

மெதமகாநுவர ;- இது கண்டிக்கு வடகிழக்கில் தெல்
தேனியாப் பகுதியில் உள்ள ஒரு சிறு கிராமம்.
1815 இல் ஆள்பதி பிறவுண்றிக் கண்டி மீது படை
யெடுப்பு நடத்தியபோது ஸ்ரீ விக்கிரமராசசிங்க
மெதமகாநுவரைக்குச் சென்று அங்கு உடுப்பிட்டி
ஆராச்சி என்பவனது வீட்டில் ஒளித்திருந்தான்.
ஆயினும் கண்டியைக் கைப்பற்றிய பின் எகெலப்
பொலியின் கையாட்களின் உதவியுடன் பிரித்தா
னியர் ஒற்றறிந்து மன்னன் இருக்குமிடத்துக்குச்
சென்று அவனைக் கைப்பற்றினர்.

மகரை :- இது கொழும்புக்கு அண்மையிலுள்ளசிறுநக
மாகும். ஆள்பதி பிறவுண்றிக் காலத்தில் மகரையி
லிருந்து பத்துவியாபாரிகள் கண்டிக்கு வியாபாரத்துக்
காகச் சென்றபொழுது அவர்கள் பிரித்தானியரின்
உளவாளிகள் எனச் சந்தேகத்தின் பேரில்கைது செய்
யப்பட்டனர் அதன் பின் மன்னனின் கட்டளைப்படி
அவர்களது கைகளும், செவிகளும் வெட்டப்பட்டன.
அதன் மேல் அவறறைக்கட்டி அவர்களின் உடலில்தொ
ங்கவிட்டுத் திரத்திவிட்டனர் இவ்வாறு அனுப்பிய பத்
துப்பேரில் ஏழுபேர் இடைவழியில் இறந்துபோக ஏனை
யோர் ஆள்பதிக்குநடந்ததை முறையிட்டனர். இதைத்
தொடர்ந்து பிறவுண்றிக் கண்டிப்படையெடுப்புக்கு வே
ண்டியஆயத்தங்களைச் செய்தார்.

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
4	21	அதைதவேஜர்	அதைமேஜர்
19	6	கண்டியரசின்	கண்டியரசன்
23	31	தெய்தியை	[illegible]னிய
31	23	வேலைவற்றவர்களும்	[illegible]ர்களும்
37	15	பிரதானிகளை	[illegible]னிகள்
46	14	வெலை	வெல்லச
47	1	தகவுனரபின்போரில்	தகவுனையின்போரில்
51	2	ஒட்டேட்	எட்டேட்
62	18	புரத்ததும்	புகுத்தும்
66	15	[illegible]ற்றநிலைக்கு	செயலற்றநிலைக்கு
69	3	அ[illegible]	அவற்றின்பரப்பு
74		[illegible]லத்தி	கலகத்தின்
91	17	உ[illegible]விய	உதவிப்
105	35	தொட்டத்தி	தொடக்கத்தில்
109	11	முதற்கால	முற்கால
109	24	பன்னிறைவு	தன்னிறைவு
110	4	பின்னர்	முன்னர்
122	17	சாகிகளின்	சாதிகளின்
126	16	1824	1924
131	27	பற்ரேரிடம்	பற்றற்ரேரிடம்
141	5	தொடாதது	கொடாதது
15[illegible]	12	தரைத்தேபற்ற	தரைத்தோற்ற
18[illegible]	15	1709	1789
[illegible]2	24	முடுயை	முடியை
202	25	மொனேஞ	மொடேஞ
207	24	பிறையை	முறையை
213	17	கன்டனத்	கண்டத்
219	20	இறப்பை	சிறப்பை
220	28	ஜிமென்ஸ்	சிமென்ஸ்
223	23	பமிர்காப்பு	பயிர்காப்பு
234	26	நொவாஞ	நொவாரிஞ
259	4	இணங்கிஞன்	பிணங்கிஞன்
260	16	வலங்களையும்	வல்களையும்
262	14	மென்ரிங்	பென்ரிங்
272	10	குலு	சூலு
273	16	அடைக்கப்	அடக்கப்
276	36	அம்ஜீரியா	அல்ஜீரியா
285	14	அரசாங்கம்	அராசகம்
287	22	இநதியா	இரசியா
292	26	முனைந்தது	முனைத்தது
294	29	அறுபலவுதிய	அதுபலபுதிய
297	14	போட்டியில்	போட்டியும்
299	15	உருகியது	உரு[illegible]யது
301	10	நீதிலய	[illegible]தியை
331	20	1954	1[illegible]34
340	16	ரோரிலிறங்கிய	[illegible]ரிலிறங்கி
345	16	1060	1960
352	19	உண்டாக்சிய	உள்[illegible]க்கிய
358	16	சிகாட்டா	[illegible]ாட்டோ

யாழ்ப்பாணம்/கொழும்பு விற்பனையாளர்

ஸ்ரீகந்தா புத்தகசாலை

235, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.